# கீதங்களும்
# கீர்த்தனைகளும்

தொகுப்பு:
S.K. இராசன்
டக்கரம்மாள்புரம்

# தென் இந்தியத் திருச்சபை

# திருநெல்வேலி திருமண்டலம்




# கீதங்களும், கீர்த்தனைகளும்

**நெல்லைத் திருச்சபையின் இருநூற்றாண்டு நிறைவு விழா நினைவாக வெளியிடப்பட்டது**

தென்னிந்திய திருச்சபை, திருநெல்வேலி திருமண்டலம்
**டக்கரம்மாள்புரம் சேகரம்**
**கிறித்தவ கீர்த்தனைகள்**

## அட்டவணை

### I. பாடல் பொருள்முறை


துதிப்பாடல்கள் ........................ 1-25

ஆராதனை ஆரம்பம் ........... 26-40, 621, 622

காலை ................................... 41-50, 601

மாலை ................................... 51-63, 623

வெள்ளிக்கிழமை...................... 64

கர்த்தரின் நாள் ...................... 65-69, 602


### II. கிறித்துவின் வாழ்க்கை


வருகை ............................... 70-89

பிறப்பு ................................... 90-117

தபசு காலம் ............................ 118-129

குருத்தோலை ஞாயிறு (திருப்பவனி) . 130-137, 624

பாடுகள் ................................. 138-161

சிலுவைத் திருவசனங்கள் .......... 162-168

உயிர்த்தெழுதல் ....................... 169-185

பரமேறுதல் ............................ 186-189

மாட்சிமை ............................... 190-208

## III. திருச்சபை


ஒருமைப்பாடு ...................... 209-221, 603

திருமறை ........................ 222-226, 604

திருமுழுக்கு ...................... 227-235

திடப்படுத்தல் ...................... 236-239, 605

திருவிருந்து ...................... 240-225, 606-608

குரு அருட்பொழிவு ............. 256-259

திருப்பணி .......................... 260-267

நற்செய்திப்பணி .................. 268-275, 609

திருமணம் .......................... 276-290

தேவாலய மங்கலப் படைப்பு .... 291-297, 625


## IV. திருநாட்கள்


பிரசன்னத் திருநாள் ................ 298-301

பரிசுத்த ஆவியின் திருநாள் ..... 302-319

திரித்துவத் திருநாள் ............. 320-322

திருத்தொண்டர் ................... 323-346

சகல பரிசுத்தவான்கள் ........... 347-357

## V. சிறப்பு தினங்கள்

ஸ்தோத்திரப் பண்டிகை ............. 358-372

புதுமனை புகுவிழா..................... 373

துன்ப காலம்............................... 374-375

பாலர் ஞாயிறு ........................... 376-383, 627

வாலிபர் பாக்கள் ........................ 384-388

வருடப் பிறப்பு ....................... 389-397, 610-612

இருநூறாம் ஆண்டு விழா ............. 398-402

## VI. பொதுவான பாடல்கள்

கிறித்தவ வாழ்க்கை .................... 403-416, 628

தெய்வ அழைப்பு .................. 417-442, 613, 632

பாவ அறிக்கை ......................... 443-470

கிறித்துவைப் பின்பற்றுதல் 471-513, 614-618, 630

விசுவாசம் ......................... 514-536, 619, 631

கிறித்தவ ஒழுக்கம்...................... 537-563, 629

சிகிச்சை ................................ 564-656, 626

வறட்சி ................................ 566

கிறித்தவ இல்லறம் ..................... 567-568

பிரிவு ........................................... 569

தேச வாழ்த்து ............................... 570-571

மரணம் .................................... 572-581

இறை வேண்டல் .................... 582-588, 620, 633

சிலுவை சரிதை ......................... 589-591

முடிவு கவிகள் ......................... 592-600, 690

கவிஞர் அகராதி

# ஆராதனை முறைமை

# பாடல்களின் அகர வரிசை அட்டவணை

அ, ஆ, இ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ

க, கா, கி, கீ, கு, கூ, கெ, கே, கொ, கோ

ச, சா, சி, சீ, சு, சூ, செ, சே, சொ

ஞா

த, தா, தி, தீ, து, தூ, தெ, தே, தொ, தோ

ந, நா, நி, நீ, நெ, நே

ப, பா, பி, பு, பூ, பெ, பே, பொ, போ

ம, மா, மி, மு, மூ, மெ, மே

யா, யு, யூ, யே, யோ

ர, ரா

லோ, லௌ

வ, வா, வி, வீ, வெ, வே, வை

ஜீ, ஜெ, ஜோ

ஸ், T

ஆராதனை முறைமை

# பாடல்களின் அகர வரிசை
# அட்டவணை

## அ


அகோர கஸ்தி பட்டோராய் 138

அகோர காற்றடித்ததே 537

அஞ்சாதிரு என் நெஞ்சமே 514

அஞ்சாதே இயேசு இரட்சகர் 532

அடியார் வேண்டல் கேளும் இயேசுவே 568

அடியேன் மனது வாக்கும் 503

அடைக்கலம் அடைக்கலமே யேசுநாதா உன் 647

அதிகாலையிலும்மைத் தேடுவேன் 47

அதிமங்கல காரணனே 77

அதோ ஓர் ஜீவ வாசலே 266

அநாதியான கர்த்தரே 26

அப்பா தயாளகுணாநந்த 145

அபிசேகம் பெற்ற சீசர் 256

அமலா தயாபரா அருள்கூர் 19

அர்ப்பணித்தேன் என்னை 685

அரசனைக் காணாமல் இருப்போமோ 301

| | |
|---|---|
| அருணோதயம் எழுந்திடுவோம் | 50 |
| அரூபியே அரூப சொரூபியே | 305 |
| அருமை ரட்சகா கூடிவந்தோம் | 255 |
| அருவிகள் ஆயிரமாய் | 166 |
| அருள் ஏராளமாய்ப் பெய்யும் | 235 |
| அருள் நாதா நம்பி வந்தேன் | 515 |
| அருள் நிறைந்தவர் | 547 |
| அருள் மாரி எங்குமாக | 471 |
| அருளின் ஒளியைக் கண்டார் | 90 |
| அருளே பொருளே ஆரணமே | 53 |
| அல்லேலூயா அல்லேலூயா | 170 |
| அல்லேலூயா, அல்லுலூயா, அல்லேலூயா | 169 |
| அல்லேலூயா தேவனுக்குத் துதிமகிமை | 401 |
| அல்லேலூயா தேவனை அவருடைய | 36 |
| அலங்கார வாசலாலே | 27 |
| அற்ப வாழ்வை வாஞ்சியாமல் | 472 |
| அற்புதர் அற்புதர் அற்புதர் அற்புதர் | 686 |
| அன்பரின் நேசம் ஆர் சொல்லலாகும் | 253 |




அட்டவணை

அன்புருவாம் எம் ஆண்டவா 612
அன்பே! அன்பே! அன்பே! 680
அன்பே பிரதானம் 558
அன்பே விடாமல் சேர்த்துக்கொண்டீர் 541
அன்போடு எம்மைப் போஷிக்கும் 482
அன்னமே சீயோன் கண்ணே 161
அழகாய் நிற்கும் யார் இவர்கள் 662
அனுக்ரக வார்த்தையோடே 35

## ஆ

ஆ அம்பர உம்பரமும் 108
ஆ அற்புத ஏசு எனது கர்த்தர் 676
ஆ இயேசுவே உம்மாலே 240
ஆ இயேசுவே பாரில் உந்தன் 398
ஆ இன்ப காலமல்லோ 585
ஆ என்னில் நூறு வாயும் நாவும் 361
ஆகமங்கள் புகழ் வேதா நமமோ 648
ஆ கர்த்தாவே தாழ்மையாக 28
ஆ களிகூர்ந்து பூரித்து 405

ஆ மேசியாவே வாரும் 637
ஆச்சரியமான காட்சியைப் பார்க்கலாம் வா 157
ஆ சகோதரர் ஒன்றாய் 209
ஆசித்த பக்தர்க்கு 346
ஆசீர்வதியும் கர்த்தரே 286
ஆசையாகினேன் கோவே 494
ஆண்டவரின் நாமமதை ஈண்டு போற்றுவேன் 559
ஆண்டவா உந்தன் சேவைக்கடியேன் 513
ஆண்டவா உமக்கே ஸ்தோத்திரம் 389
ஆண்டவர் பங்காகவே தசமபாகம் 365
ஆண்டவா பிரசன்னமாகி 548
ஆண்டவா மேலோகில் உம் 291
ஆண்டவா மோட்சகதி நாயனே 440
ஆத்தும ஆதாயம் செய்குவோமே 269
ஆத்துமமே என் முழு உள்ளமே 191
ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே 116
ஆத்துமாக்கள் மேய்ப்பரே 331
ஆத்துமாவே உன்னை ஜோடி 241

| | |
|---|---|
| ஆத்மமே உன் ஆண்டவரின் | 1 |
| ஆதம் புரிந்த பாவத்தாலே | 144 |
| ஆதாரம் நீ தான் ஐயா | 649 |
| ஆதி பராபரனின் சுதனே | 451 |
| ஆதிப் பிதாக்குமாரன் ஆவி திரியேகர்க்கு | 17 |
| ஆதித் திருவார்த்தை திவ்விய | 76 |
| ஆதியாம் மகாராசனே | 502 |
| ஆதியில் இருளை | 222 |
| ஆதியில் ஏதேனில் | 666 |
| ஆ நல்ல சோபனம் | 667 |
| ஆ நீதியுள்ள கர்த்தரே | 566 |
| ஆ பாக்கிய தெய்வ பக்தரே | 347 |
| ஆமென் அல்லேலூயா | 177 |
| ஆயிரக்கணக்கான வருடங்களாய் | 137 |
| ஆயிரம் ஆயிரம் பாடல்களை | 25 |
| ஆர் இவர் ஆரோ | 78 |
| ஆர் இவர் ஆராரோ | 107 |
| ஆரணத் திரித்துவமே | 322 |




அட்டவணை

ஆராய்ந்துபாரும் கர்த்தரே 473

ஆரிடத்தினில் ஏகுவோம் 616

ஆரும் துணையில்லையே 454

ஆலயம் போய்த் தொழ வாருமென்ற தொனி 214

ஆவியை அருளுமே சுவாமி 310

ஆவியை மழைபோலே யூற்றும் 309

ஆறுதல் அடைமனமே 580

ஆறுதலின் மகனாம் 334

ஆனந்தமே ஜெயா ஜெயா 393

## இ

இகத்தின் துன்பம் துக்கம் 577

இங்கே நொந்து கொள்கிறோம் 383

இத்தரை மீதினில் வித்தகனாய் 115

இதோ உன் நாதர் செல்கின்றார் 341

இந்த அருள் காலத்தில் 118

இந்த மங்களம் செழிக்கவே 282

இந்த வேளையினில் வந்தருளும் 307

இந்த மங்களம் செழிக்கவே 683

| | |
|---|---|
| இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் | 230 |
| இந்நாள் வரைக்கும் கர்த்தரே | 56 |
| இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார் | 179 |
| இந்நாளே கிறிஸ்து வெற்றியை | 171 |
| இப்போ நாம் பெத்லகேம் சென்று | 91 |
| இப்போது நேசநாதா தலை சாய்த்து | 168 |
| இம்மட்டும் தெய்வ கிருபை | 396 |
| இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை | 395 |
| இம்மட்டும் ஜீவன் தந்த (பா) | 610 |
| இம்மணர்க்கும் மருள் ஈயும் பரவாசா | 283 |
| இம்மானுவேலின் இரத்தத்தால் | 516 |
| இம்மானுவேலே வாரும் வாருமே | 70 |
| இமயமும் குமரியும் எல்லைக்கடலுடை | 571 |
| இயேசு உயிர்த்தெழுந்ததால் | 172 |
| இயேசு எங்கள் மேய்ப்பர் | 376 |
| இயேசு எந்தன் நேசரே | 377 |
| இயேசு கற்பித்தார் | 378 |
| இயேசு கிறிஸ்துவே | 638 |

| | |
|---|---|
| இயேசு ஸ்வாமி அருள் நாதா! | 675 |
| இயேசு சுவாமி சீமோன் யூதா | 345 |
| இயேசு நாதா காக்கிறீர் | 630 |
| இயேசு நான் நிற்கும் கன்மலையே | 618 |
| இயேசுவின் கைகள் காக்க | 619 |
| இயேசுவின் நாமமே திருநாமம் | 201 |
| இயேசுவே உம்மைத் தியானித்தால் | 407 |
| இயேசுவே உம்மையல்லாமல் | 443 |
| இயேசுவே கல்வாரியில் | 517 |
| இயேசுவே நீர் என்னை விட்டால் | 631 |
| இயேசுவே நீர் தான் என் வாஞ்சை | 677 |
| இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன் | 668 |
| இரக்கமுள்ள மீட்பரே | 92 |
| இரங்கும் இரங்கும் கருணைவாரி | 456 |
| இரங்கும் தெய்வ ஆவியே | 314 |
| இரண்டு நூறு ஆண்டுகள் | 400 |
| இரத்தம் காயம் குத்தும் | 139 |
| இராப்பகலும் ஆள்வோராம் | 639 |

இவரே பெருமான் 664

இவ்வந்தி நேரத்தில் எங்கே 54

இவ்வுயர் மலை மீதினில் 339

இளமை முதுமையிலும் 338

இளைஞர் நேசா அன்பரே 605

இறைவனைப் போற்றிப் புகழ்வோம் 402

இன்று கிறிஸ்து எழுந்தார் 173

இன்றைத் தினம் உன்னருள் ஈகுவாய் 43

இன்னமும் நாம் இயேசு 611

இன்னோர் ஆண்டு முற்றுமாய் 390

இஸ்திரியின் வித்தவர்க்கு 133


## உ


உங்களைப் படைத்தவர் 417

உச்சித மோட்ச பட்டணம் போக 212

உந்தன் ஆவியே சுவாமி 306

உந்தன் சொந்தம் ஆக்கினீர் 614

உம் அருள் பெற இயேசுவே 242

உம் அவதாரம் பாரினில் 324

| | |
|---|---|
| உம் சார்பினில் நடத்தும் | 483 |
| உம்மண்டை கர்த்தரே | 518 |
| உம்மாலேதான் என் இயேசுவே | 243 |
| உம்மைத்துதிக்கிறோம் யாவுக்கும் | 2 |
| உம் ராஜியம் வருங்காலை | 163 |
| உயிர்த்தெழும் காலைதன்னில் | 573 |
| உருகாயோ நெஞ்சமே | 125 |
| உலகில் பாவ பாரத்தால் சோரும் | 430 |
| உலகின் வாஞ்சையான | 640 |
| உன் வாசல் திற சீயோனே | 330 |
| உன்றன் சுயமதியே | 431 |
| உன்றன் திருப்பணியை | 271 |
| உன்னத சாலேமே | 574 |
| உன்னத பரமண்டலங்களில் வசிக்கும் | 582 |
| உன்னதம் ஆழம் எங்கேயும் | 3 |
| உன்னதமான கர்த்தரே | 65 |
| உன்னதமான மாராஜாவான | 603 |
| உன்னதமான ஸ்தலத்தில் | 641 |

உன்னையன்றி வேறே கெதி 674

உனக்கு நிகரானவர் யார்? 198

உனக்கொத்தாசை வரும் 529


## ஊ


ஊதும் தெய்வாவியை 315


## எ


எக்காலும் இயேசுவே சகாயராயிரும் 679

எங்கள் ஊக்க வேண்டல் கேளுமே 57

எங்கும் நிறைந்த தெய்வமே 29

எங்கும் புகழ் இயேசு ராஜனுக்கே 388

எங்கே ஓடுவேன் பாதகன் ஆனேன் 464

எங்கே சுமந்து போகிறீர் 152

எத்தனை திரள் என் பாவம் 452

எத்தனை நாவால் துதிப்பேன் 207

எத்தனை நாவால் பாடுவேன் 362

எந்தன் ஆத்ம நேசரே 550

எந்தன் இன்ப இயேசுவே நீர் 596

எந்நாளும் துதித்திடுவீர் 218

எந்நாளும் துதிப்பாய் 394
எப்படியும் பாவிகளை ஒப்புரவாக்கி 428
எப்போதும் இயேசு நாதா 236
எருசலேம் என் ஆலயம் 575
எருசலேமே எருசலேமே 153
எல்லாம் இயேசுவே 528
எல்லாருக்கும் மா உன்னதர் 40
எவ்வண்ணமாக கர்த்தரே 30
எழுந்தார் இறைவன் 178
என் அருள்நாதா இயேசுவே 121
என் ஆண்டவன் என் பாகமே 635
என் ஆண்டவா என் பாகமே 519
என் ஆவி ஆன்மா தேகமும் 474
என் இரட்சகா நீர் என்னில் 549
என் உயிரான இயேசு 672
என் உள்ளங்கவரும் 496
என் ஜயா தினம் உமை நம்பி நான் 650
என் கர்த்தாவே உம்மில்தான் 542

என் களிப்புக்குக் காரணம் 538

என் சிலுவை எடுத்து 508

என் நெஞ்சம் நொந்து காயத்தால் 119

என் நெஞ்சமே நீ மோட்சத்தை 4

என் நெஞ்சை சுவாமி 475

என் பாவம் தீர்ந்த நாளையே 467

என் மீட்பர் இயேசுகிறிஸ்துவே 244

என் மீட்பர் உயிரோடிருக்கையிலே 501

என் மீட்பர் ரத்தம் சிந்தினார் 520

என் முன்னே மேய்ப்பர் போகிறார் 484

என் மேய்ப்பர் இயேசு கிறிஸ்துதான் 408

என் மேய்ப்பராய் இயேசு 671

என் ஜீவன் கிறிஸ்துதாமே 572

என் ஜீவன் ஆனந்தம் 190

என்ன பாக்கியம் எவர்க்குண்டு 111

என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன் 507

என்தன் ஜீவன் இயேசுவே 476

என்றும் கர்த்தாவுடன் 576

என்றென்றும் ஜீவிப்போர் அதரிசனர் 403

என்றைக்குக் காண்பேனோ 85

என்னோடிருக்கும் மாநேச கர்த்தரே 58

எனது கர்த்தரின் ராஜரீக நாள் 86

## ஏ

ஏங்குதே என்னகந்தான் 148

ஏசு கிறிஸ்துநாதர் 208

ஏசுநாமமல்லாமல் உலகினில் 441

ஏசு நாயகனையே துதிசெய் 197

ஏசுவையே துதி செய் 192

ஏசையா பிளந்த ஆதிமலையே 160

ஏதேனில் ஆதி மணம் 276

ஏற்றுக் கொண்டருளுமே தேவா 584

ஏன் இந்த பாடுதான் 143

## ஜ

ஜயரே நீர் தங்கும் என்னிடம் 51

ஜயனே உமது திருவடிகளுக்கே 44

ஜயா உமது சித்தம் 499



அட்டவணை

ஐயா நீரன்று அன்னா காய்பாவின் 150

ஐயையா நான் ஒரு மாபாவி 313

ஐயையா நான் பாவி 455

ஐயையா நான் வந்தேன் 491

ஐயோ நான் ஒரு பாவ ஜென்மி ஆயினேனே 466

ஒ

ஒப்பில்லா திரு இரா 93

ஒப்பில்லாத திவ்விய அன்பே 543

ஒருபோதும் மறவாத உண்மை 602

ஒரு மருந்தரும் குரு மருந்து 613

ஓ

ஓ பெத்லகேமே சிற்றூரே 94

ஓகோ பாவத்தினை விட்டோடாயோ 435

ஓசன்னா பாடுவோம் ஏசுவின் 135

ஓசன்னா பாலர் பாடும் 130

ஓய்வு நாள் இது மனமே 68

ஓய்வு நாளதை ஸ்தாபித்தருளிய 663

ஓய்வு நாள் விண்ணில் கொண்டாடு 67

ஓர் முறை விட்டு மும்முறை 336

## க


கண்களை ஏறெடுப்பேன் 22

கண்டீர்களோ சிலுவையில் 140

கண்டேனென் கண்குளிர 110

கதிரவன் எழுகின்ற காலையில் 45

கர்த்தர் என் பக்கமாகில் 521

கர்த்தர் சமீபமாம் என்றே 335

கர்த்தர் சிருஷ்டித்த சகல 371

கர்த்தர் தந்த ஈவுக்காக 593

கர்த்தர் தம் கிரியை செய்கிறார் 260

கர்த்தரின் பந்தியில் வா 251

கர்த்தரின் மாம்சம் வந்துட்கொள்ளுங்கள் 245

கர்த்தருக்குக் காணிக்கையிதோ 368

கர்த்தருக்குக் காணிக்கை பக்தியாய் 369

கர்த்தருக்கு ஸ்தோத்திரம் 71

கர்த்தரே தற்காரும் 599

கர்த்தரை என்றுமே 553

கர்த்தரைப் போற்றியே வாழ்த்துது 117

கர்த்தா உம்மாட்சி கரத்தால் 564

கர்த்தா நீர் வசிக்கும் 292

கர்த்தாவின் அற்புதச் செய்கை 539

கர்த்தாவின் தாசரே 261

கர்த்தாவே இந்தராவினில் 597

கர்த்தாவே இப்போ உம்மைத் தொழுதோம் 38

கர்த்தாவே இருளின் 598

கர்த்தாவே பரஞ்சோதியால் 259

கர்த்தாவே மாந்தர் தந்தையே 621

கர்த்தாவே யுகயுகமாய் 397

கருணாகர தேவா இரங்கி இந்த 651

கரை ஏறி உமதண்டை 267

கலங்காதே உன்னோடு நானிருப்பேன் 681

கல்யாணமாம் கல்யாணம் 290

கல்லும் அல்லவே காயம் 578

கள்ளமுறும் கடையேனும் 127

களிகூறு சீயோனே 72

களிகூறுவோம் கர்த்தர் நம் பட்சமே 9

களிப்புடன் கூடுவோம் 404

கனம் கனம் பராபரன் 156

**கா**

காணிக்கை தருவாயே 370

காரிருள் பாவம் இன்றியே 333

காரிருளில் என்நேச தீபமே 485

காலத்தின் அருமையை 424

காலந்தோறும் தயவாக 358

காலமே தேவனைத் தேடு 42

காற்றுதிசை நான்கிலும் 316

**கி**

கிஞ்சிதமும் நெஞ்சே அஞ்சிடாதே 531

கிருபை புரிந்தெனை 463

கிறிஸ்தவ இல்லறமே 567

கிறிஸ்து எம் இராயரே 262

கிறிஸ்துவின் சுவிசேஷகர் 332

கிறிஸ்துவின் வீரர் நாம் 385

கிறிஸ்துவின் வீரரே 384

கிறிஸ்தெழுந்தார் கிறிஸ்தெழுந்தார் 174

## கீ

கீழ்வான கோடியின் 41

## கு

குணப்படு பாவி 434

குணம் இங்கித வடிவாய் உயர் 281

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன் 665

குருசினில் தொங்கியே 155

## கூ

கூர் அணி தேகம் பாய 162

## கெ

கெம்பீரமாகவே சங்கீதம் பாடுங்கள் 595

கெம்பீரமாகவே சங்கீதம் பாடுவோம் 652

## கே

கேள் ஜென்மித்த ராயர்க்கே 96

## கொ

கொந்தளிக்கும் லோக வாழ்வில் 327

கொல்கதா மலை மேல் 159

## கோ

கோடானுகோடி சிறியோர் 325

## ச


சகோதரர்களொருமித்து 561

சங்கம் கூடி ஏழைக்கின்று 372

சத்தாய் நிஷ்களமாய் ஒரு சாமிய 10

சத்திய வேதத்தைத் தினம் தியானி 225

சபை எக்காலும் நிற்குமே 625

சபையாரே கூடிப்பாடி 175

சபையின் அஸ்திபாரம் 210

சபையே இன்று வானத்தை 112

சமயமிது நல்லசமயம் உமதாவி 308

சமாதானம் ஓதும் 81

சர்வத்தையும் அன்பாய் 360

சரணம் சரணம் அனந்தா 147

சரணம் சரணம் சரணம் எனக்குன் 220

சரணம் நம்பினேன் இயேசு நாதா 216

சருவலோகாதிபா நமஸ்காரம் 13

சருவ வலிமை கிருபைகள் மிகுந்த 20

சருவேசுரா ஏழைப்பாவி 468

## சா


சாந்த இயேசு சுவாமி 246

சாலேமின் இராஜா சங்கையின் இராஜா 84


## சி


சிந்தை செய்யும் எனில் நிரப்புவீர் 239

சிலுவைக் கொடி முன் செல்ல 624

சிலுவை சுமந்தோனாக 510

சிலுவைதாங்கு மீட்பர் பின் 480

சிலுவை மரத்திலே 418

சிலுவையைப் பற்றி நின்று 164

சின்ன பரதேசி மோட்சம் 379


## சீ


சீர் அடை தருணம் இதறி மனமே 653

சீர் இயேசு நாதனுக்கு 194

சீர் திரியேகவஸ்தே நமோ 12

சீர் மிகு வான்புவி தேவா தோத்திரம் 14


## சு


சுத்த ஆவி என்னில் தங்கும் 317

சுந்தர பரமதேவ மைந்தன் 203

சுய அதிகாரா சுந்தரகுமாரா 21

## சூ

சூரியன் அஸ்தமித்திருண்டிடும் வேளையில் 565

சூரியன் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது 52

## செ

செய்ய வேண்டியதைச் சீக்கிரம் 654

## சே

சேதம் அறயாவும் வர 522

சேர் ஐயா எளியேன் செய் 457

சேனைகளின் கர்த்தரே நின் 219

சேனையின் கர்த்தர் 31

## சொ

சொல்லரும் மெய்ஞ்ஞானரே 200

சொற்பகாலம் பிரிந்தாலும் 569

## ஞா

ஞானநாதா வானம் பூமி 623

ஞானஸ்நான மாஞான திரவியமே 231

## த

தந்தானைத் துதிப்போமோ 213

தந்தேன் என்னை இயேசுவே 506

தந்தை சருவேஸ்பரனே 459

தந்தை சுதன் ஆவியே 589

தந்தை சுதன் ஆவியே 590

தந்தை தன் சிறு பாலனை 523

தந்தையின் பிரகாசமாகி 342

தம் இரத்தத்தில் தோய்ந்த 591

தம்மண்டை வந்த பாலகரை 227

தயாள இயேசு தேவரீர் 131

தயை கூர் ஐயா என் ஸ்வாமி 655

தருணம் இதில் அருள் செய் 458

தருணம் இதில் ஏசுபரனே 258

தருணம் ஈதுன்காட்சி சால அருள் 24

தருணமே பரம சரீரி 469

தற்பரா தயாபரா 606


## தா


தாகம் மிகுந்தவரே 442

தாசரே இத்தரணியை அன்பாய் 268

தாரகமே பசிதாகத்துடன் 252

## தி

திரி முதல் கிருபாசனனே சரணம் 11

திருச்சபை காத்திருக்க 609

திருப்பாதம் சேராமல் இருப்பேனோ 447

திருமாமறையே அருள் பதியே 221

திருமுகத் தொளிவற்று 453

திவ்விய பாலன் பிறந்தீரே 97

## தீ

தீய மனதை மாற்ற வாரும் 312

தீயன் ஆயினேன் ஐயா 448

தீயோர் சொல்வதைக் கேளாமல் 477

தீராத தாகத்தால் 247

## து

துக்க பாரத்தால் இளைத்து 419

துக்கம் கொண்டாட வாருமே 141

துக்கம் திகில் இருள் சூழ 555

துங்கனில் ஒதுங்குவோன் 530

துதி தங்கிய பரமண்டல 193

துதிக்கிறோம் உம்மை வல்ல பிதாவே 15

துயருற்ற வேந்தரே 165

துன்பங்கள் என்னை நெருங்கி 670

## தூ

தூதாக்கள் விண்ணில் பாடிய 363

தூய்மை பெற நாடு 478

தூய தூய தூயா சருவ வல்ல 32

தூய பந்தி சேர்ந்த கைகள் 248

தூயர் ராஜா எண்ணிறந்த 340

## தெ

தெய்வ ஆசீர்வாதத்தோடே 592

தெய்வ ஆவியே 302

தெய்வ ஆட்டுக்குட்டியே 524

தெய்வ கிருபையைத் தேட 615

தெய்வ சமாதான 632

தெய்வன்பின் வெள்ளமே 16

தெய்வன்புக்காக உன்னத 642

தெய்வன்புதான் மா இனிமை 544

தெய்வாசன முன் நிற்பரே 343

தெய்வாட்டுக் குட்டிக்கு 186

தெய்வாவி மனவாசராய் 303

## தே

தேசத்தார்கள் யாரும் வந்து 263

தேவதே ஓர் ஏகவஸ்து 199

தேவ பிதா எந்தன் மேய்ப்பனல்லோ 504

தேவரீர் உம் சமாதானம் 600

தேவலோகமதில் 354

தேவனே உம்மையாம் துத்தியம் 217

தேவனே ஏசுநாதனே 293

தேவனே நான் உமதண்டையில் 55

தேவா இரக்கம் இல்லையோ 460

தேவா இவ்வீட்டில் இன்றே 373

தேவா உன் அன்பின் சத்தத்தைக் கேட்டு 669

தேவா எனை மறக்காதே 375

தேவாசனப்பதியும் சேனைத் தூதரை 136

தேவா திருக்கடைக் கண் பார் ஐயா 656

தேவாதி தேவன் தனக்கு 34

தேன் இனிமையிலும் இயேசுவின் நாமம் 422

# தொ


தொழுவோம் பரனைத் தூய சிறப்புடன் 622


# தோ


தோத்திரப் பாத்திரனே 49

தோத்திரப் பண்டிகை ஆசரிப்போமே 367

தோத்திரம் கிருபை கூர் ஐயா 46

தோத்திரம் செய்வேனே 196


# ந


நடுக்குளிர் காலம் 98

நம்பி வந்தேன் மேசையா 495

நம்பினேன் உமதடிமை நான் ஐயா 511

நரர்க்காய் மாண்ட இயேசுவே 64

நல் மீட்பர் இயேசு நாமமே 410

நல் மீட்பர் 386

நல் மீட்பரே இந்நேரத்தில் 37

நல் மீட்பரே உம் மேலே 629

நல்ல செய்தி இயேசுவை 273

நல்ல தேவனே ஞான ஜீவனே 48

நல்லாயன் இயேசு சுவாமி 533

நள்ளிரவில் மா தெளிவாய் 99

நற்செய்தி மேசியா இதோ 73

நன்றி செலுத்துவாயே 80

### நா

நாங்கள் பாவப் பாரத்தால் 445

நாதன் வேதம் என்றும் 223

நாதா ஜீவன் சுகம் தந்தீர் 626

நாம் நித்திரை செய்து விழித்தோம் 601

நாற்பது நாள் ராப்பகல் 120

நான் உம்மை முழுமனதால் 545

நான் உம்மைப் பற்றி இரட்சகா 128

நான் தூதனாக வேண்டும் 627

நான் பலவீன தோஷியாம் 525

நான் பாவிதான் 446

நான் ப்ரமித்து நின்று பேரன்பின் 634

நான் மூவரான ஏகரை 257

### நி

நித்தம் அருள் செய் தயாளனே 657

நிச்சயம் செய்குவோம் வாரீர் 279

நித்தம் நித்தம் பரிசுத்தர் துத்தியம் செய்யும் 296

நித்தம் முயல் மனமே 563

நிரப்பும் என்னைத் துதியால் 633

நிர்ப்பந்தமான பாவியாய் 465

நின் பாதம் துணையல்லால் 617

நினையேன் மனம் நினையேன் 500

## நீ

நீ குருசில் மாண்ட கிறிஸ்துவை 228

நீ யுனக்குச் சொந்த மல்லவே 438

நீதியாமோ நீர் சொல்லும் 366

நீர் தந்த நன்மை யாவையும் 392

நீர் தந்த நாளும் ஓய்ந்ததே 59

நீர் தந்தீர் எனக்காய் 158

நீர் திவ்விய வழி இயேசுவே 411

நீர் வாரும் கர்த்தாவே 74

நீர் ஜீவ அப்பம் பஞ்சத்தில் 643

நீரோடையை மான் வாஞ்சித்து 587

## நெ


நெஞ்சே நீ கலங்காதே சீயோன் மலையில் 658

நெஞ்சமே கெத்சேமனேக்கு 154

நெஞ்சமே தள்ளாடி நொந்து 535


## நே


நேச ராஜராம் பொன்னேசு நாதா 288

நேர்த்தியானதனைத்தும் 380


## ப


பக்தியாய் செபம் பண்ணவே 512

பக்தருடன் பாடுவேன் 355

பக்தரே வாரும் 95

பகலோன் கதிர் போலுமே 264

பண்டிகை நாள் மகிழ் கொண்டாடுவோம் 182

பணிந்து நடந்து கொண்டாரே 109

பயத்தோடும் பக்தியோடும் 607

பயந்து கர்த்தரின் பக்தி வழியில் 278

பரத்தின் ஜோதியே 479

பரத்துக்கேறு முன்னமே 304

பரமண்டலங்களில் வீற்றிருக்கும் 586

பரமண்டலத்திலுள்ள 594

பரனே திருக்கடைக்கண் பாராயோ 461

பரனே பரப் பொருளே 149

பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா 234

பரிசுத்தாவி நீர் வாரும் 237

பவனி செல்கின்றார் ராசா 134

## பா

பாடித்துதி மனமே 23

பாதகன் என் வினை தீர் ஐயா 439

பாதம் ஒன்றே வேண்டும் 497

பாதம் வந்தனமே 195

பாதை காட்டும் மா யெகோவா 486

பாதைக்கு தீபமாமே 224

பார் முன்னணை ஒன்றில் 104

பார்க்க முனம் வருவேன் 204

பாலர் ஞாயிறிது பாசமாய் வாரும் 382

பாலர் நேசனே 232

பாலரே ஓர் நேசருண்டு 381
பாவங்கள் போக்கவே 673
பாவதோஷம் நீக்கிட 608
பாவ நாசர் பட்டகாயம் 122
பாவச் சஞ்சத்தை நீக்க 552
பாவம் போக்கும் ஜீவ நதியை 429
பாவி இன்றே திரும்பாயோ 437
பாவி உன் மீட்பர் கரிசனையாய் 233
பாவி ஏசுனைத்தானே தேடி 129
பாவிகேள் உன் ஆண்டவர் 420
பாவி நான் என்ன செய்வேன் 151
பாவி வா பாவி வா பரனண்டை 126
பாவிக்காய் மரித்த இயேசு 75
பாவிக்கு நேசராரே 205
பாவியாகவே வாரேன் 490
பாவியாம் எனை மேவிப்பார் ஐயா 450

## பி

பிதா சுதன் ஆவியே 211
பிதாவே எங்களைக் கல்வாரியில் 249

பிதாவே மாதயாபரா 320

பிதாவே பலம் ஈந்திடும் 644

பிளவுண்ட மலையே 527

பிறந்தார் ஓர் பாலகன் 100

பின் செல்வேன் என் மீட்பரே 238

## பு

புத்திக்கெட்டாத அன்பின் 277

புத்தியாய் நடந்து வாருங்கள் 560

## பூ

பூமி மீது ஊர்கள் தம்மில் 298

பூரண பிரமாணத்தை 326

பூர்வ வாழ்க்கையே 167

பூலோகத்தாரே யாவரும் 5

பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும் 678

## பெ

பெத்லெகேம் ஊரோரம் 105

பெத்தலையில் பிறந்தவரை 106

பெந்தேகொஸ்தின் ஆவியே 546

## பே


பேயின் கோஷ்டம் ஊரின் 337


## பொ


பொக்கிஷம் சேர்த்திடுங்கள் 562

பொற்பு மிகும் வானுலகும் 146

பொன்னகர் இன்பத்தைப் 69

பொன்னகர் பயணம் போகும் 579

பொன்னாய் இலங்கும் காலையும் 581


## போ


போசனந்தானுமுண்டோ 254

போற்றிடு ஆன்மமே என் 6

போற்றும் போற்றும் 412


## ம


மகனே உன் நெஞ்செனக்கு 436

மகிழ் கர்த்தாவின் மந்தையே 187

மகிழ் மகிழ் மந்தையே 189

மகிழ்ச்சி ஓய்வு நாளே 66

மகிழ்ச்சிப் பண்டிகை கண்டோம் 113

மங்களம் சதா – ஜெய – மங்களம் வேதா! 690

மங்களம் செழிக்க கிருபை 287

மங்களம் ஜெய மங்களம் 285

மணவாழ்வு புவி வாழ்வினில் 284

மயங்கும் தாசனை 487

மரிக்கும் மீட்பர் ஆவியும் 123

மரித்தாரே என் ஆண்டவர் 142

மரித்தாரே கிறிஸ்தேசு 426

மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார் :184

மறவாதே மனமே 114

மனுசுதா எம் வீரா வல்ல அன்பா 628

மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுத்த 89


## மா


மாட்சி போரைப் போரின் ஓய்வை 132

மா தூய ஆவி இறங்கும் 318

மா மனோகரா இவ்வாலயம் 295

மா மாட்சி கர்த்தர் 33

மாவாதைப்பட்ட இயேசுவே 124

மாற்றீர் என் கவலை 557

## மி


மின்னும் வெள்ளங்கி பூண்டு 352


## மு


முடிந்ததே இந்நாளும் 60

முதல் இரத்த சாட்சியாய் 323

முள் கிரீடம் பூண்ட நாதனார் 414

முன்னே சரீர வைத்தியனாம் 344

முன்னோரின் தெய்வமாம் 7


## மூ


மூலைக்கல் கிறிஸ்துவே 294


## மெ


மெய் சமாதானமா துர் உலகில் 540

மெய் ஜோதியாம் நல் மீட்பரே 61

மெய் பக்தரே நீர் விழித்தெழும்பும் 101


## மே


மேசியா ஏசு நாயனார் 82

மேய்ப்பரை வெட்ட 329

மேலோக ராஜன் வருங்காலமாகுது 88

மேலோக வெற்றி சபையும் 265

மேலோகத்தாரே புகழ்ந்து போற்றி 181

மேலோகத்தில் என் பங்கு நீர் 526


### யா


யாரிலும் மேலான அன்பர் 387

யாரை நான் புகழுவேன் 415


### யு


யுத்தம் செய்வோம் வாரும் 413


### யூ


யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார் 180

யூதேயாவின் ஞான சாஸ்திரி 8


### யே


யேசு நசரையின் அதிபதியே 202

யேசு நாதனே இரங்கும் 449

யேசு நாமம் ஒன்றை நம்புவீர் 425

யேசு நாயகா வந்தாளும் 280

யேசு நேசிக்கிறார் 505

யேசு ராஜா எனை ஆளும் நேசா 492

யேசுவின் ரத்தத்தில் நானும் 682

யேசுவுக்கு நமது தேசத்தை 274

யேசுவே உம் அன்பின் ஆழம் 684

யேசுவே கிருபாசனப் பதியே 470

## யோ

யோர்தான் விட்டேறி 229

## ர

ரட்சா பெருமானே பாரும் 488

## ரா

ராக்காலம் பெத்லேம் 102

ராச ராச பிதா மைந்த 206

ராசாதி ராசன் யேசு யேசுமகா ராசன் 659

ராஜன் தாவீதூரிலுள்ள 103

## வ

வந்தருள் இவ் 297

வந்தனம் வந்தனமே 18

வந்து நல்வரம் தந்தனுப்பையா 39

வயல் உழுது தூவி 359

வரவேணும் எனதரசே 83

வரவேணும் பரன் ஆவியே 311

வருவார் விழித்திருங்கள் இயேசு நாதர் 660

வருஷப் பிறப்பாம் இன்று 391
வல்ல இயேசு கிறிஸ்து நாதா 509
வளர்ந்தே பெருகுக என்றே 399

## வா

வாஞ்சைப்பட்ட இயேசுவே 188
வா பாவி இளைப்பாறவா 421
வா பாவி மலைத்து நில்லாதே 433
வாதையுற்ற மீட்பரே 646
வாரா வினை வந்தாலும் 534
வாரும் எமது வறுமை நீக்க 374
வாரும் ஐயா போதகரே 498
வாரும் தெய்வ ஆவி வாரும் 319
வாரும் நாம் எல்லாரும் 215
வாரும் பெத்லகேம் வாரும் 661
வாழ்நாளில் யாது நேரிட்டும் 489
வாழ்க எம் தேசமே 570
வாழ்க சிலுவையே வாழ்க 481
வாழ்க பாக்ய காலை என்றும் 176

வாழ்க வாழ்க கிறிஸ்து ராயரே 185

வாகனம் வாழ்ந்திடும் எங்கள் தந்தாய் 687

வான நகரத்தின் மேன்மை என 357

வான ஜோதியாய் இலங்கி 348

வானம் பூமியோ பராபரன் 79

வானமும் பூமியும் 321

வானும் புவியும் வையகமும் 688


## வி


விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் 536

விசுவாசியின் காதில் பட 423

விஸ்வாசத்தோடு சாட்சி பகர்ந்தே 349

விடியற்காலத்து வெள்ளியே தோன்றி 299

விந்தை கிறிஸ்தேசு ராசா 493

விண் கிரீடம் பெறப் போருக்கு 556

விண் போகும் பாதை தூரமாம் 328

விண்மண்ணை ஆளும் கர்த்தரே 364

விண் வாசஸ்தலமாம் 353

விண்மின் நோக்கி களிப்பாய் 300

விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா 406

விண் வாழ்வில் ஆசைவைத்தல்ல 416

வியாதியஸ்தர் மாலையில் 62

விருத்தைச் சேருமேன் 250

விலைமதியா இரத்தத்தாலே 427

வினை சூழாதிந்த இரவினில் 63


## வீ


வீராதி வீரர் இயேசு சேனை 272


## வெ


வெள்ளங்கி பூண்டு மாட்சியாய் 350

வெள்ளை அங்கிகள் தரித்த 356

வெள்ளை அங்கி தரித்து 351


## வே


வேத புத்தகமே வேத புத்தகமே 226

வேத வசன விதைகளை 604

வேறு ஜென்மம் வேணும் 432


## வை


வைகறை இருக்கையில் 183

வையகந்தன்னை நடுத்தீர்க்க 87

## ஜீ

ஜீவ வசனங் கூறுவோம் 270

ஜீவனேசு கிருபாசனா 462

ஜீவாதிபதி ஜோதியே 409

## ஜெ

ஜெப சிந்தை எனில்தாரும் 583

ஜெபம் மறவாதே நேசனே 620

ஜெபத்தின் ஆவலை 551

ஜெபத்தை கேட்கும் எங்கள் தேவா 588

ஜெயம் ஜெயம் அல்லேலூயா 275

ஜெயித்த ஏசு நாதர் தாம் 554

## ஜோ

ஜோதி தோன்றும் ஒரு தேசம் உண்டு 689

## ஸ்

ஸ்வாமியே நான் எத்தனை 444

## லோ

லோகநாதா, மண்ணோர் மீள 636

## லௌ

லௌகீக இன்பம் மேன்மையும் 645

## T

The Lord bless thee and keep thee 289

## தென் இந்தியத் திருச்சபை – திருநெல்வேலி திருமண்டிலம்
## கீதங்களும், கீர்த்தனைகளும்

# I. பாடல் பொருள் முறை

## 1. துதிப்பாடல்கள்

Praise my soul the King of Heaven

**1** *Praise my soul* **பா.1**

A.M.298 II 8,7,8,7,8,7

1. **ஆத்மமே, உன் ஆண்டவரின்**
திருப்பாதம் பணிந்து,
மீட்பு, சுகம், ஜீவன், அருள்
பெற்றதாலே துதித்து
அல்லேலூயா, என்றென்றைக்கும்
நித்திய நாதரைப் போற்று.

2. நம் பிதாக்கள் தாழ்வில் பெற்ற
தயை நன்மைக்காய்த் துதி;
கோபங் கொண்டும் அருள் ஈயும்
என்றும் மாறாதோர் துதி;
அல்லேலூயா, அவர் உண்மை
மா மகிமையாம், துதி.

3. தந்தைபோல் மா தயை உள்ளோர்
நீச மண்ணோர் நம்மையே
அன்பின் கரம்கொண்டு தாங்கி
மாற்றார் வீழ்த்திக் காப்பாரே;
அல்லேலூயா, இன்னும் அவர்
அருள் விரிவானதே.

அட்டவணை

4. என்றும் நின்றவர் சமூகம்
போற்றும் தூதர் கூட்டமே;
நாற்றிசையும் நின்றெழுந்து
பணிவீர் நீர் பக்தரே;
அல்லேலூயா, அனைவோரும்
அன்பின் தெய்வம் போற்றுமே.

Laudamuste, Praxis Pietatis

**2** **பா.2**

A.M.657 14,14,4,7,8

**1. உம்மைத் துதிக்கிறோம், யாவுக்கும்**
**வல்ல பிதாவே;**
உம்மைப் பணிகிறோம், ஸ்வாமீ,
ராஜாதி ராஜாவே;
உமது மா
மகிமைக்காக, கர்த்தா,
ஸ்தோத்திரம் சொல்லுகிறோமே.

2. கிறிஸ்துவே, இரங்கும்; சுதனே,
கடன் செலுத்தி,
லோகத்தின் பாவத்தை நீக்கிடும்
தெய்வாட்டுக்குட்டி,
எங்கள் மனு
கேளும்; பிதாவினது
ஆசனத் தோழா, இரங்கும்.

3. நித்திய பிதாவின் மகிமையில்
இயேசுவே நீரே,
பரிசுத்தாவியோடேகமாய் ஆளுகிறீரே.
ஏகமாய் நீர்,
அர்ச்சிக்கப்படுகிறீர்.
உன்னத கர்த்தரே. ஆமேன்.

அட்டவணை

Praise to the Holiest in the height

**3** *Richmond* **பா.3**

A.M.172 C.M.

**1. உன்னதம், ஆழம், எங்கேயும்**
தூயர்க்கு ஸ்தோத்திரம்;
அவரின் வார்த்தை, செய்கைகள்
மிகுந்த அற்புதம்.

2. பாவம் நிறைந்த பூமிக்கு
இரண்டாம் ஆதாமே
போரில் சகாயராய் வந்தார்
ஆ, நேச ஞானமே!

3. முதல் ஆதாமின் பாவத்தால்
விழுந்த மாந்தர்தாம்
ஜெயிக்கத் துணையாயினார்
ஆ ஞான அன்பிதாம்!

4. மானிடர் சுபாவம் மாறவே,
அருளைப் பார்க்கிலும்
சிறந்த ஏது தாம் என்றே
ஈந்தாரே தம்மையும்.

5. மானிடனாய் மானிடர்க்காய்
சாத்தானை வென்றாரே;
மானிடனாய் எக்கஸ்தியும்
பட்டார் பேரன்பிதே!

6. கெத்செமெனேயில், குருசிலும்
வேதனை சகித்தார்;
நாம் அவர்போன்றே சகித்து
மரிக்கக் கற்பித்தார்

அட்டவணை

7. உன்னதம், ஆழம், எங்கேயும்
தூயர்க்கு ஸ்தோத்திரம்;
அவரின் வார்த்தை, செய்கைகள்
மிகுந்த அற்புதம்.

**4** *Innsbruck* **பா.6**

A.M.86 8,8,6 D

1. **என் நெஞ்சமே, நீ மோட்சத்தை**
விரும்பித் தேடி, கர்த்தரை
வணக்கத்துடனே
துதித்துப் பாடி, என்றைக்கும்
புகழ்ந்து போற்று நித்தமும்
மகிழ்ச்சியாகவே.

2. நட்சத்திரங்கள், சந்திரன்,
வெம் காந்தி வீசும் சூரியன்,
ஆகாச சேனைகள்,
மின், மேகம், காற்று மாரியே,
வானங்களின் வானங்களே,
ஒன்றாகப் பாடுங்கள்.

3. விஸ்தாரமான பூமியே,
நீயும் எழுந்து வாழ்த்தல் செய்,
யெகோவா நல்லவர்;
சராசரங்கள் அனைத்தும்
அவர் சொற்படி நடக்கும்;
அவரே ஆண்டவர்.

4. பரத்திலுள்ள சேனையே,
புவியிலுள்ள மாந்தரே,
வணங்க வாருங்கள்.
யெகோவாதாம் தயாபரர்,
எல்லாவற்றிற்கும் காரணர்;
அவரைப் போற்றுங்கள்.

அட்டவணை

All people that on earth do dwell

**5** *Old Hundredth* **பா.9**

A.M.166 L.M.

**1. பூலோகத்தாரே யாவரும்**
கர்த்தாவில் களிகூருங்கள்;
ஆனந்தத்தோடே ஸ்தோத்திரம்
செலுத்தி, பாட வாருங்கள்.

2. பராபரன் மெய்த் தெய்வமே;
நாம் அல்ல, அவர் சிருஷ்டித்தார்;
நாம் ஜனம், அவர் ராஜனே;
நாம் மந்தை, அவர் மேய்ப்பனானார்

3. கெம்பீரித்தவர் வாசலை
கடந்து உள்ளே செல்லுங்கள்;
சிறந்த அவர் நாமத்தை
கொண்டாடி, துதி செய்யுங்கள்

4. கர்த்தர் தயாளர், இரக்கம்
அவர்க்கு என்றும் உள்ளதே
அவர் அநாதி சத்தியம்
மாறாமல் என்றும் நிற்குமே

5. விண் மண்ணில் ஆட்சி செய்கிற
திரியேக தெய்வமாகிய
பிதா, குமாரன், ஆவிக்கும்
சதா ஸ்துதி உண்டாகவும்.

அட்டவணை

Praise to the Lord the Almighty

**6** *Praxis Pietatis* **பா.10**

A.M.657 14,14,4,7,8

1. **போற்றிடு ஆன்மமே சிஷ்டி**
கர்த்தாவாம் வல்லோரை;
ஏற்றிடு உனக்கு ரட்சிப்பு சுகமானோரை;
கூடிடுவோம்
பாடிடுவோம் பரனை;
மாண்பாய் சபையாரெல்லோரும்.

2. போற்றிடு யாவையும் ஞானமாய்
ஆளும் பிரானை;
ஆற்றலாய்க் காப்பரே தம் செட்டை மறைவில் நம்மை;
ஈந்திடுவார்
ஈண்டு நாம் வேண்டும் எல்லாம்;
யாவும் அவர் அருள் ஈவாம்.

3. போற்றிடு காத்துனை ஆசீர்வதிக்கும் பிரானை;
தேற்றியே தயவால் நிரப்புவார்
உன் வாணாளை;
பேரன்பராம்
பராபரன் தயவை
சிந்திப்பாய் இப்போதெப்போதும்.

4. போற்றிடு ஆன்மமே, என் முழு
உள்ளமே நீயும்;
ஏற்றிடும் கர்த்தரை ஜீவ இராசிகள் யாவும்;
சபையாரே,
சேர்ந்தென்றும் சொல்லுவீரே
வணங்கி மகிழ்வாய் ஆமேன்.

அட்டவணை

The God of Abraham Praise

**7** *Covenant, Leoni* **பா.12**

A.M.601 I 6,6,8,4 D

1. **முன்னோரின் தெய்வமாம்**
உன்னத ராஜராம்;
அநாதியானோர் அன்பராம்
மா யெகோவா.
சர்வ சிருஷ்டியும்
உம் பேர் நாமம் சாற்றும்;
பணிந்து போற்றுவோம் என்றும்
உம் நாமமே

2. உன்னத பரனை
தூய தூதர் சேனை
நீர் தூயர் தூயர் தூயரே
என்றிசைப்பார்;
நேற்றும் இன்றும் என்றும்
இருக்கும் கர்த்தரும்
மா யெகோவா நம் பிதாவும்
துதி ஏற்பார்.

3. மீட்புற்ற, கூட்டமே,
மா நாதர் போற்றுமே
பிதா சுதன் சுத்தாவிக்கே
துதி என்றும்
முன்னோர்க்கும் நமக்கும்
தெய்வம் ஆனோர்க்கென்றும்
வல்லமை மகத்துவமும்
உண்டாகவும்.

அட்டவணை

Bright the vision that delighted

**8** *Laus Deo* **பா.13**

A.M.601 8,7,8,7

1. **யூதேயாவின் ஞான சாஸ்திரி**
விந்தைக் காட்சியைக் கண்டான்;
கோடாகோடி தூதர் கூடி
பாடும் கீதத்தைக் கேட்டான்;

2. உந்தன் மாட்சி சேனைக் கர்த்தா,
வானம் பூமி நிரப்பும்;
தூய தூய தூய கர்த்தா
உந்தன் துதி பெருகும்"

3. என்றே ஆசனத்தைச் சூழ்ந்து
கேரூப் சேராபீன்களும்;
ஆலயம் நிரம்ப நின்று
மாறி மாறிப் பாடவும்.

4. "தூயர் தூயர் தூயரான
சேனைக் கர்த்தர்" எனவும்,
தூதர் பாட்டு விண்ணில் ஓங்க
மண்ணில் இன்றும் ஒலிக்கும்

5. "உந்தன் மாட்சி சேனைக் கர்த்தா,
வானம் பூமி நிரப்பும்;
தூய, தூய, தூய கர்த்தா
உந்தன் துதி பெருகும்;"

6. என்றே, வான சேனையோடு
பூதலத்தின் சபையும்
கர்த்தாவை நமஸ்கரித்து
துதி கீதம் பாடிடும்.

அட்டவணை

Rejoice in the Lord O Let his mercies

**9** **பா.356**

A.M.508 11,8,11,8

1. **களிகூருவோம், கர்த்தர் நம் பட்சமே,**
தம் ரத்தத்தால் நம்மை மீட்டார்;
அவர் நமக்கு யாவிலும் எல்லாமே,
எப்பாவம் பயம் நீக்குவார்.

கர்த்தர் நம் பட்சம்
கர்த்தர் நம்மோடு
கர்த்தர் சகாயர்
யார் எதிர்க்க வல்லோர்?
யார் யார் யார்?
யார் எதிர்க்க வல்லோர்?
யார் வல்லோர்?

2. திடனடைவோம், தீமை மேற்கொள்ளுவோம்
கர்த்தாவின் வல்ல கரத்தால்;
உண்மை பக்தியாய் நாடோறும் ஜீவிப்போம்,
அவரே திடன் ஆகையால்.

3. வாக்கை நம்புவோம், உறுதி மொழியாய்
கிறிஸ்துவில் ஆம் ஆமேன் என்றே;
பூமி ஒழிந்தும் என்றும் உறுதியாய்
நிலைக்கும், இது மெய் மெய்யே.

4. நிலைத்திருப்போம், கர்த்தரின் கட்டினில்,
அதால் நித்திய ஜீவன் உண்டாம்;
பற்றும் ஏழையைத் தம் வல்ல கரத்தில்
வைத்தென்றும் பாதுகாப்பாராம்.

அட்டவணை

**10** **கி.கீ.1**

*சங்கராபரணம்* *ரூபகதாளம்*

**1. சத்தாய் நிஷ்களமாய் ஒருசாமிய மும்இலதாய்**
சித்தாய் ஆனந்தமாய்த் திகழ்கின்ற திரித்துவமே,
எத்தால் நாயடியேன் கடைத்தேறுவன் என்பவந்தீர்ந்து;
அத்தா உன்னையல்லா எனக்கார்துணை யாருறவே?

2. எம்மா விக்குருகி உயிரீ ந்து புரந்ததற்கோர்
கைம்மா றுண்டுகொலோ? கடைகாறுங் கையடையாய்
சும்மா ரக்ஷணைசெய், சொல் சுதந்தரம் யாதுமிலேன்
அம்மான், உன்னையல்லா எனக்கார் துணை, யாருறவே?

3. திரைசேர் வெம்பவமாம் கடல் மூழ்கிய தீயரெமைக்
கரை சேர்த்துய்க்கவென்றே புணையாயினை கண்ணிலியான்,
பரசேன் பற்றுகிலேன்; என்னைப் பற்றிய பற்றுவிடாய்,
அரசே, உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

4. தாயே, தந்தைதமர், குருசம்பத்து நட்பெவையும்
நீயே எம்பெருமான், கதிவேறிலை நிண்ணயங்காண்;
ஏயே என்றிகழு உலகோடெனக் கென்னுரிமை?
ஆயே, உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

5. பித்தே றிச்சுழலும் ஜெகப் பேய்பிடித் துப்பவத்தே
செத்தேன், உன்னருளால் பிழைத்தேன்மறு ஜென்மமதாய்;
எத்தோஷங்களையும் பொறுத்தென்றும் இரங்குகவென்–று
அத்தா, உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

6. துப்பார் சிந்தையிலேன் மறைந்தீட்டிய தொல்வினையும்
தப்பா தேவெளியா நடுநாளெனைத் தாங்கிக்கொள்ள,
இப்பா ருய்யவென்றே மனுக்கோலமெ டுத்த எங்கள்
அப்பா உன்னையல்லால் எனக்கார் துணை, யாருறவே?

*–கென்றி ஆல்பர்ட் கிருட்டிணன்*

அட்டவணை

**11** **கி.கீ.2**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1. **திரி முதல் கிருபாசனனே, சரணம்!**
ஜெக தல ரட்சக தேவா, சரணம்!
தினம் அனுதினம் சரணம்; – கடாட்சி!
தினம் அனுதினம் சரணம், – சருவேசா!

2. நலம் வளர் ஏக திரித்துவா, சரணம்!
நமஸ்கரி உம்பர்கள் நாதா, சரணம்
நம்பினேன் இது தருணம் – தருணம்;
நம்பினேன், தினம் சரணம் – சருவேசா!

3. அருவுருவே, அருளரசே, சரணம்!
அன்று மின்று மென்றும் உள்ளாய் சரணம்!
அதிகுணனே, தருணம் – கிரணமொளிர்
அருள் வடிவே, சரணம். – சருவேசா!

4. உலகிட மேவிய உனதா, சரணம்!
ஓர் கிருபாசன ஒளியே, சரணம்!
ஒளி அருள்வாய், தருணம் – மனுவோர்க்கு
உத்தமனே, சரணம்; – சருவேசா!

5. நித்திய தோத்திர நிமலா, சரணம்!
நிதி இஸ்ரவேலரின் அதிபதி, சரணம்!
நாதா, இது தருணம் – கிருபைக்கொரு
ஆதாரா, சரணம்; – சருவேசா!

*– த. சத்தியநாதன்*

**12** **கி.கீ.4**

*பூரி கல்யாணி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சீர்திரியேக வஸ்தே, நமோ, நமோ, நின்**
திருவடிக்கு நமஸ்தே நமோ, நமோ!

அட்டவணை

### *அனுபல்லவி*

பார்படைத்தாளும் நாதா,
பரம சற்பிரசாதா,
நாருறுந் தூயவேதா, நமோ, நமோ, நமோ! – சீர்

### *சரணங்கள்*

1. தந்தைப் பராபரனே நமோ நமோ, எமைத்
தாங்கி ஆதரிப்போனே – நமோ, நமோ!
சொந்தக் குமாரன் தந்தாய்,
சொல்லரும் நலமீந்தாய்,
எந்தவிர் போக்குமெந்தாய், நமோ, நமோ, நமோ. – சீர்

2. எங்கள் பவத்தினாசா நமோ நமோ, புது
எருசலேம் நகர்ராசா நமோ நமோ!
எங்கும் நின் அரசேற,
எவரும் நின் புகழ்கூற,
துங்க மந்தையிற் சேர, நமோ, நமோ, நமோ. – சீர்

3. பரிசுத்த ஆவிதேவா நமோ, நமோ, திட
பலமளித் தெமைக்காவா, நமோ, நமோ!
கரிசித்துத்தா நற்புத்தி,
கபடற்ற மனசுத்தி,
திருமொழி பற்றும்பக்தி, நமோ, நமோ, நமோ – சீர்

*– ஞா. சாமுவேல்*

**13** **கி.கீ.5**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1. **சருவ லோகாதிபா, நமஸ்காரம்!**
சருவ சிருஷ்டிகனே, நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
தயாபர பிதாவே, நமஸ்காரம்.

அட்டவணை

2. திரு அவதாரா, நமஸ்காரம்!
ஜெகத் திரட்சகனே, நமஸ்காரம்!
தரணியின் மனுடர் உயிர் அடைந்தோங்கத்
தருவினில் மாண்டோய், நமஸ்காரம்.

3. பரிசுத்த ஆவி, நமஸ்காரம்!
பரம சற்குருவே, நமஸ்காரம்!
அரூபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே சதா நமஸ்காரம்.

4. முத்தொழிலோனே, நமஸ்காரம்!
மூன்றிலொன்றோனே நமஸ்காரம்!
கர்த்தாதி கர்த்தா, கருணசமுத்திரா,
நித்ய திரியேகா, நமஸ்காரம்.

*–ம. வேதமாணிக்கம்*

**14** **கி.கீ.6**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1. **சீர்மிகு வான் புவி தேவா, தோத்ரம்,**
சிருஷ்டிப்பு யாவையும் படைத்தாய், தோத்ரம்,
ஏர்குணனே தோத்ரம், அடியர்க்–கு
இரங்கிடுவாய், தோத்ரம், மா நேசா.

2. நேர் மிகு அருள்திரு அன்பா, தோத்ரம்,
நித்தமு முமக் கடியார்களின் தோத்ரம்,
ஆர் மணனே, தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா

3. ஜீவன், சுகம், பெலன், யாவுக்கும் தோத்ரம்,
தினம் தினம் அருள் நன்மைக்காகவும் தோத்ரம்,
ஆவலுடன் தோத்ரம், உனது
அன்பினுக்கே தோத்ரம், மா நேசா

அட்டவணை

4. ஆத்தும நன்மைகட்காகவும் தோத்ரம்,
அதிசய நடத்துதற்காகவும் தோத்ரம்,
சாற்றுகிறோம் தோத்ரம், உனது
தகுமன்புக்கே தோத்ரம், மா நேசா

5. மாறாப் பூரண நேசா, தோத்ரம்,
மகிழொடு ஜெபமொழி மாலையின் தோத்ரம்,
தாராய் துணை, தோத்ரம், இந்தத்
தருணமே கொடு, தோத்ரம், மா நேசா

*– வே. மாசிலாமணி*

**15** **கி.கீ.7**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1. **துதிக்கிறோம் உம்மை – வல்ல பிதாவே**
துத்தியம் செய்வோம் – உமை மா அரசே
தோத்ரம் உம் மாட்சிமைக்கே – பரனே
துந்துமி மாட்சிமைக்கே – பிதாவே.

2. சுதனே யிரங்கும் – புவியோர் கடனைச்
சுமந்ததைத் தீர்த்த – தூயசெம்மறியே,
சுத்தா ஜெபங்கேளும் – பரன்வலத்
தோழா ஜெபங்கேளும் – கிறிஸ்தே.

3. நித்திய பிதாவின் – மகிமையில் நீரே,
நிமலாவியினோ – டாளுகிறீரே,
நிதமேகார்ச்சனையே – உன்னத
நேயருக் கர்ச்சனையே – ஆமேன்.

*– ஞா. சாமுவேல்*

**16** **கி.கீ.8**

*குந்தளவராளி* *ஆதிதாளம்*

1. **தெய்வன்பின் வெள்ளமே, திருவருள் தோற்றமே,**
மெய் மனதானந்தமே!
செய்ய நின் செம்பாதம் சேவிக்க இவ் வேளை
ஐயா, நின் அடி பணிந்தேன்

அட்டவணை

2. சொந்தம் உனதல்லால் சோர வழி செல்ல
எந்தாய் துணிவேனோ யான்?
புந்திக்கமலமாம் பூமாலை கோர்த்து நின்
பொற்பதம் பிடித்துக் கொள்வேன்.

3. பாவச் சேற்றில் பலவேளை பலமின்றித்
பாதையைத் தவறிடினும்,
கூவி விளித்துந் தன் மார்போடணைத்தன்பாய்
கோது பொறுத்த நாதா!

4. மூர்க்ககுணம் கோபம் லோகம் சிற்றின்பமும்
மோக ஏக்கமானதைத்
தாக்கியான் தடுமாறித் தயங்கிடும் வேளையில்
தற்பரா! தற்காத்தருள்வாய்

5. ஆசை பாசம் பற்று ஆவலாய் நின்திருப்
பூசைப்பீடம் படைப்பேன்
மோச வழிதனை முற்றும் அகற்றி என்
நேசனே நினைத் தொழுவேன்

6. மரணமோ, ஜீவனோ, மறுமையோ, பூமியோ,
மகிமையோ – வருங்காலமோ,
பிற சிருஷ்டியோ, உயர்ந்ததோ, தாழ்ந்ததோ,
பிரித்திடுமோ தெய்வன்பை?

*– ஏசுதாசன் சவரிராயன்*

**17** **கி.கீ.10**

*பூரி கல்யாணி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஆதிபிதாக் குமாரன் – ஆவி திரியேகர்க்–கு**
அனவரதமும் தோத்திரம் – திரியேகர்க்–கு
அனவரதமும் தோத்திரம்

அட்டவணை

***அனுபல்லவி***

நீதமுதற் பொருளாய் நின்றருள் சருவேசன்
நிதமும் பணிந்தவர்கள் இருதயமலர் வாசன்
நிறைந்த சத்திய ஞான மனோகர
உறைந்த நித்திய வேத குணாகர
நீடு வாரி திரை சூழு மேதினியை
மூடு பாவ இருள் ஓடவே அருள்செய் – ஆதி

***சரணங்கள்***

1. எங்கணும் நிறைந்த நாதர் – பரிசுத்தர்கள்
என்றென்றைக்கும் பணிபாதர்
துங்கமாமறைப்பிர போதர், கடைசி நடு
சோதனை செய் அதி நீதர்,
பங்கில்லான், தாபம் இல்லான் பகர் அடி முடிவில்லான்,
பன் ஞானம், சம்பூரணம், பரிசுத்தம், நீதி, என்னும்
பண்பதாய் சுயம்பு விவேகன்
அன் பிரக்க தயாளப்பிரவாகன்
பார்தலத்தில் சிருஷ்டிப்பு, மீட்பு, பரி
பாலனத்தையும் பண்பாய் நடத்தி அருள் – ஆதி

2. நீதியின் செங்கோல் கைக்கொண்டு – நடத்தினால் நாம்
நீணிலத்தில்லாமல் அழிந்து
தீதறு நரகில் தள்ளுண்டு மடிவோமென்று
தேவ திருவுளம் உணர்ந்து
பாதகர்க்குயிர் தந்த பாலன்யேசுவைக் கொண்டு
பரன் எங்கள் மிசை தயை வைத்தனர்; இது நன்று
பகர்ந்த தன்னடி யார்க்குறு சங்சலம்
இடைஞ்சல் வந்த போதே தயவாகையில்
பாரில் நேரிடும் அஞ்ஞான சேதமுதற்
சூரியன் முன் இருள் போலவே சிதறும் – ஆதி

*– காபிரியேல் உபதேசியார்*

அட்டவணை

**18** **கி.கீ.11**

*சங்கராபரணம்* *சாபுதாளம்*

### *பல்லவி*

**வந்தனம், வந்தனமே! தேவ துந்துமி கொண்டிதமே! – இது**
வரையில் எமையே வளமாய்க் காத்த எம்துரையே, மிகத்தந்தனம்.

### *சரணங்கள்*

1. சந்ததஞ் சந்ததமே, எங்கள் தகு நன்றிக் கடையாளமே, – நாங்கள்
   தாழ்ந்து வீழ்ந்து சரணஞ் செய்கையில் தயைகூர் சுரர்பதியே.
2. சருவ வியாபகமும் எமைச் சார்ந்து தற்காத்ததுவே; – எங்கள்
   சாமி பணிவாய் நேமி துதி, புகழ் தந்தனமே நிதமே!
3. சருவ வல்லபமதும் எமைத் தாங்கினதும் பெரிதே, – சத்ய
   சருவேசுரனே, கிருபாகரனே, உன் சருவத்துக்குந் துதியே.
4. உந்தன் சருவ ஞானமும் எங்களுள்ளிந்திரியம் யாவையும் – பார்த்தால்
   ஒப்பே தருங்காவலே உன்னருளுக்கோ தரும் புகழ் துதி துதியே
5. மாறாப் பூரணனே, எல்லா வருடங்களிலும் எத்தனை – உன்றன்
   வாக்குத் தவறாதருளிப் பொழிந்திட்ட வல்லாவிக்குந் துதியே.

*– வே. மாசிலாமணி*

**19** **கி.கீ.12**

*ரீதிகௌள* *ஆதிதாளம்*

### *பல்லவி*

அமலா, தயாபரா, அருள்கூர், ஐயா, – குருபரா

### *சரணங்கள்*

1. சமயம் ஈராறோர் ஆறு சாஸ்திரங்கள் வேத நான்கும்
   அமையும் தத்துவம் தொண்ணூற்றாறும் ஆறுங்கடந்த – அம
2. அந்தம் அடி நடு இல்லாத தற்பரன் ஆதி,
   சுந்தரம் மிகும் அதீத சோதிப்பிரகாச நீதி. – அம

அட்டவணை

3. ஞானத் ரவிய வேத நன்மைப் பரம போத
வானத் தேவப் ரசாத மகிமைக் களவில்லாத. – அம

4. காணப்படா அரூப, கருணைச் சுய சொரூப,
தோணப்படா வியாப, சுகிர்தத் திருத் தயாப. – அம

5. சத்ய வசன நேயா, சமஸ்த புண்ய சகாயா,
கர்த்த தத்துவ உபாயா, கருணை பொழியும் வாயா, – அம

6. எல்லை இல்லா மெய்ஞ் ஞான ஏக பர வஸ்தான
சொல் அரிதாம் நிதான, துல்லிபத் தொன்றாம் மேலான – அம

7. கருணாகரா, உப காரா, நிராகரா,
பரமேசுரா, கிரு பாகரா, சர்வேசுரா – அம

*–வேதநாயகம் சாஸ்திரியார்*

**20** **கி.கீ.14**

*சாமா* *ஆதிதாளம்*

1. **சருவ வலிமை கிருபைகள் மிகுந்த சருவேசா!**
தரிசனம் பெறஉன் சன்னிதி புகுந்தேன் – திருவாசா

2. தூய சிந்தை உண்மையில் உனையே, தொழுதேத்த!
தூய ஆவி கொண்டெனை நிரப்பும் – ஜகதீசா!

3. இருதயத்தைச் சிதற விடாமல் ஒருநேராய்
இசைத்தமைத்துப் பரவசமாக்கும் – நசரேயா!

4. அருளின் வாக்கைக் கருத்துடன் கேட்டு அகத்தேற்று
அறுபது நூறு முப்பதாய்ப் பெருக – அருளீசா!

*– ஜி.சே. வேதநாயகம்*

**21** **கி.கீ.16**

*கமாஸ்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சுய அதிகாரா, சுந்தரக் குமாரா**
சொந்த உலகந்தனை துறந்த மரி மைந்தனான – சுய

அட்டவணை

***சரணங்கள்***

1. அகிலத்தை ஒரு சொல்லில் அமைத்தனையே,
அதை ஒரு பம்பரம் போலிசைத்தனையே
துகில் போல் காயமதை லகுவாய் சமைத்ததிலே
ஜோதி பல மாதிரியாய்த் தூக்கி அங்கிலங்க வைத்த – சுய

2. கரை மத கற்ற குளம் புவியிலுண்டோ?
கடலுக்கவன் சொல்லயன்றிக் கரைகளுண்டோ?
திரை திரையாகச்ஜலம் மலைபோல் குவிழ்ந்தெழுந்தும்
சேதமின்றிப் பூதலத்தை மாதயவாய் பாதுகாக்கும் – சுய

3. நரர் பலர் கூடியொரு மனைமுடிக்க
நாளெல்லாம் உழைத்திட்டாலும் நாள் பிடிக்குமே;
மரமுயிர் தாது இன்னும் வான்புவி அனைத்தையும் ஓர்
வார்த்தையால் ஷணப்பொழுதில் நேர்த்தியாய் உண்டாக்கி
வைத்த–சுய

4. பாவமனுவோர் முகத்தைப் பார்த்தாயே,
பாவச் சுமைதோள் சுமந்து தீர்த்தாயே;
சுவாமியுனைப் பற்றும் தேவ தாசருக்கிரங்க வேண்டும்,
தஞ்சம் தஞ்சம் ஓடி வந்தோம், கெஞ்சமனு கேட்டருள்வாய் – சுய

*–யோ. பால்மர்*

**22** **கி.கீ.17**
*பியாகு* *சாபுதாளம்*

***பல்லவி***

**கண்களை ஏறெடுப்பேன் – மாமேருநேராய் என்**
கண்களை ஏறெடுப்பேன்.

***அனுபல்லவி***

விண்மண் உண்டாக்கிய வித்தகனிடமிருந்–து
தெண்ணில்லா வொத்தாசை என்றனுக்கே வரும் – கண்களை

அட்டவணை

***சரணங்கள்***

1. காலைத் தள்ளாட வொட்டார் – உறங்காது காப்பவர்
காலைத்தள்ளாட வொட்டார்,
வேலையில் நின் றிஸ்ர வேலரைக் காத்தவர்
காலையும் மாலையும் கண்ணுறங்காரவர் – கண்களை

2. பக்க நிழல் அவரே – எனை ஆதரித்திடும்
பக்க நிழல் அவரே
எக்கால நிலைமையும் எனைச் சேதப்படுத்தா–து
முக்காலம் நின்றென்னை நற்காவல் புரியவே – கண்களை

3. எல்லாத் தீமைகட்கும் – என்னை விலக்கியே
எல்லாத் தீமைகட்கும்
பொல்லா உலகினில் போக்குவரத்தையும்
நல்லாத்துமாவையும் நாடோறும் காப்பவர் – கண்களை

*– த. ஐயாத்துரை பாகவதர் –த.ஐ.*

**23** **கி.கீ.18**
*காம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**பாடித் துதி மனமே;**
பரனைக் கொண்டாடித் துதி தினமே.

***அனுபல்லவி***

நீடித்த காலமதாகப் பரன் எமை
நேசித்த பட்சத்தை வாசித்து வாசித்துப் – பாடி

***சரணங்கள்***

1. தீர்க்கதரிசிகளைக் கொண்டு முன்னுறச்
செப்பின் தேவபரன் இந்தக் காலத்தில்
மார்க்கமதாகக் குமாரனைக் கொண்டு
விளக்கின அன்பை விழைந்து தியானித்துப் –பாடி

அட்டவணை

2. சொந்த ஜனமான யூதரைத் தள்ளித்
தொலையில் கிடந்த புறசாதியாம் எமை
மந்தையில் சேர்த்துப் பராபரன் தம்முடை
மைந்தர்களாக்கின சந்தோசத்துக்காகப் –பாடி

3. எத்தனை தீர்க்கர், அநேக அப்போஸ்தலர்,
எத்தனை போதகர்கள், இரத்தச் சாட்சிகள்
எத்தனை வேண்டுமோ, அத்தனையும் தந்திங்–கு
இத்தனையாய்க் கிருபை வைத்த நம் கர்த்தனை – பாடி

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**24** **கி.கீ.294**

*மணிரங்கு* *திஸ்ர ஏகதாளம்*

***பல்லவி***

**தருணம் ஈதுன் காட்சி சால**
அருள் அனாதியே, திவ்ய சருவ நீதியே

***சரணங்கள்***

1. கருணை ஆசன ப்ரதாப
சமுக சன்னிதா மெய்ப் – பரம உன்னதா! – தருணம்

2. பரர் சுரநரர் பணிந்து போற்றும்
பரம நாயகா – நின் – பக்தர் தாயகா! – தருணம்

3. உன்னதத்திருந் தென்னை ஆளும்
ஒரு பரம்பரா – நற் கருணை அம்பரா! – தருணம்

4. அரிய வல்வினை தீப்பதற்குற
வான தட்சகா – ஓர் – அனாதி ரட்சகா! – தருணம்

5. அலகை நரகை அகற்றி, முழுதும்
அடிமை கொண்டவா – என் – தருமைகண்டவா! – தருணம்

6. தினந்தினம் நரர்க் கிரங்கும், இரங்கும்,
தேவ பாலனே – இம் – மானுவேலனே. – தருணம்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

அட்டவணை

**25** **கன்.273**

**1. ஆயிரம் ஆயிரம் பாடல்களை**
ஆவியில் மகிழ்ந்தே பாடுங்களேன்!
யாவரும் தேமொழிப் பாடல்களால்
இயேசுவைப் பாடிட வாருங்களேன்

அல்லேலூயா! அல்லேலூயா!
என்றெல்லாரும் பாடிடுவோம்
அல்லலில்லை! அல்லலில்லை!
ஆனந்தமாய்ப் பாடிடுவோம்

2. புதிய புதிய பாடல்களைப்
புனைந்தே பண்களும் சேருங்களேன்
துதிகள் நிறையும் கானங்களால்
தொழுதே இறைவனைக் காணுங்களேன் – அல்

3. நெஞ்சின் நாவின் நாதங்களே
நன்றி கூறும் கீதங்களால்
மிஞ்சும் ஓசைத் தாளங்கலால்
மேலும் பரவசம் கூடுங்களேன். – அல்லேலூயா

4. எந்த நாளும் காலங்களும்
இறைவனைப் போற்றும் நேரங்களே
சிந்தை குளிர்ந்தே ஆண்டுகளாய்
சீயோனின் கீதம் பாடுங்களே. – அல்லேலூயா

*– தி. தயானந்தன் பிரான்சிசு*

## 2. ஆராதனை ஆரம்பம்

**26** **பா.14**

A.M.35 *Church Triumphant* L.M.

1. **அநாதியான கர்த்தரே,**
தெய்வீக ஆசனத்திலே
வானங்களுக்கு மேலாய் நீர்
மகிமையோடிருக்கிறீர்.

அட்டவணை

2. பிரதான தூதர் உம்முன்னே
தம் முகம் பாதம் மூடியே
சாஷ்டாங்கமாகப் பணிவார்
"நீர் தூய தூயர்" என்னுவார்.

3. அப்படியானால், தூசியும்
சாம்பலுமான நாங்களும்
எவ்வாறு உம்மை அண்டுவோம்?
எவ்விதமாய் ஆராதிப்போம்?

4. நீரோ உயர்ந்த வானத்தில்,
நாங்களோ தாழ்ந்த பூமியில்,
இருப்பதால்இ வணங்குவோம்,
மா பயத்தோடு சேருவோம்.

**27** Thut mir auf die schone Pforte **பா.15**

A.M.302,A.M.427 *Anser Herrschers, All saints* 8,7,8,7,7,7

1. **அலங்கார வாசலாலே**
கோவிலுக்குள் போகிறேன்;
தெய்வ வீட்டின் நன்மையாலே
ஆத்துமத்தில் பூரிப்பேன்;
இங்கே தெய்வ சமூகம்,
மெய் வெளிச்சம், பாக்கியம்.

2. கர்த்தரே, உம்மண்டை வந்த
என்னண்டைக்கு வாருமேன்
நீர் இறங்கும் போதனந்த
இன்பத்தால் மகிழுவேன்.
என்னுட இதயமும்
தெய்வ ஸ்தலமாகவும்.

3. பயத்தில் உம்மண்டை சேர,
என் ஜெபம் புகழ்ச்சியும்
நல்ல பலியாக ஏற
உமதாவியைக் கொடும்.
தேகம், ஆவி, யாவையும்
சுத்தமாக்கியருளும்.

அட்டவணை

4. நல்ல நிலத்தில் விழுந்த
விதை பயிராகுமே;
நானும் அவ்வாறே மிகுந்த
கனிகளைத் தரவே
வசனத்தைக் காக்க நீர்
ஈவளிக்கக் கடவீர்.

5. விசுவாசத்தை விடாமல்
அதில் பலப்படவும்,
ஒருக்காலும் தவறாமல்
உம்மை நான் பின்செல்லவும்,
மெய் வெளிச்சத்தை நீரே
என்னில் வீசும் கர்த்தரே.

6. சொல்லும், கர்த்தரே, நான் கேட்பேன்
நீர் இப்பாழ் நிலத்திலே
பெய்யப்பண்ணும் மன்னா சேர்ப்பேன்
நல்தியானத்துடனே;
தாரும் ஜீவ பானத்தை;
தீரும் பசிதாகத்தை.

Ermuntre dich mein schwacher Geist

**28** *Alleluia Dulce Carmen, Regent Square* **பா.16**

A.M.82, 232 8,7,8,7,4,7

1. **ஆ கர்த்தாவே, தாழ்மையாக**
திருப்பாதத்தண்டையே
தெண்டனிட ஆவலாக
வந்தேன், நல்ல இயேசுவே;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

2. வல்ல கர்த்தாவினுடைய
தூய ஆட்டுக்குட்டியே,
நீரே என்றும் என்னுடைய
ஞான மணவாளனே;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

3. என் பிரார்த்தனையைக் கேளும்,
அத்தியந்த பணிவாய்;
கெஞ்சும் என்னை ஏற்றுக் கொள்ளும்
உம்முடைய பிள்ளையாய்;
உம்மைத் தேடி
தரிசிக்கவே வந்தேன்.

**29** **பா.18**

A.M. 164 I *Rivaulx* L.M.

1. **எங்கும் நிறைந்த தெய்வமே**
ஏழை அடியார் பணிவாய்
துங்கவன் உந்தன் பாதமே
ஸ்தோத்திரிக்கின்றோம் ஏகமாய்.

2. உலக எண்ணம் நீங்கியே
உந்தனில் திட மனதாய்
நலமாய் உள்ளம் பொங்கியே
நாடித் துதிக்கச் செய் அன்பாய்.

3. கேட்டிடும் தெய்வ வாக்கியம்
கிருபையாய் மனதிலே
நாட்டிட நின் சிலாக்கியம்
நாங்கள் நிறையச் செய்காலே.

4. தூதர்கள் கூடிப் பாடிடும்
தூயர் உம்மை மா பாவிகள்
பாதம் பணிந்து வேண்டினோம்
பாலிப்பீர் நாங்கள் ஏழைகள்.

அட்டவணை

Wherewith O God shall I draw near

**30** *Martyrdom, Wiltshire* **பா.19**

A.M.238, A.M.633 I C.M.

1. **எவ்வண்ணமாக, கர்த்தரே**
உம்மை வணங்குவேன்?
தெய்வீக ஈவைப் பெறவே
ஈடென்ன தருவேன்?

2. அநேக காணிக்கைகளால்
உம் கோபம் மாறுமோ?
நான் புண்ணிய கிரியை செய்வதால்
கடாட்சம் வைப்பீரோ?

3. பலியின் ரத்தம் வெள்ளமாய்
பாய்ந்தாலும், பாவத்தை
நிவிர்த்தி செய்து சுத்தமாய்
ரட்சிக்கமாட்டாதே.

4. நான் குற்றவாளி, ஆகையால்
என் பேரில் கோபமே
நிலைத்திருந்து சாபத்தால்
அழிதல் நியாயமே.

5. ஆனால் என் பாவம் சுமந்து
ரட்சகர் மரித்தார்;
சாபத்தால் தலை குனிந்து
தம் ஆவியை விட்டார்.

6. இப்போதும் பரலோகத்தில்
வேண்டுதல் செய்கிறார்;
உம் திவ்விய சந்நிதானத்தில்
என்னை நினைக்கிறார்.

7. இவ்வண்ணமாக, கர்த்தரே,
உம்மை வணங்குவேன்,
என் நீதி இயேசு கிறிஸ்துவே,
அவரைப் பற்றினேன்.

அட்டவணை

**31** **பா.21**

S.P.S. 23 *Psalm 84* 5,6,7,5,5,8

1. **சேனையின் கர்த்தா!**
சீர்நிறை யெகோவா!
உம் வாசஸ்தலங்களே
எத்தனை இன்பம்!
கர்த்தனே என்றும்
அவற்றை வாஞ்சித்திருப்பேன்.

2. ராஜாதி ராஜா
சேனைகளின் கர்த்தா!
உம் பீடம் என் வாஞ்சையே
உம் வீடடைந்தே
உம்மைத் துதித்தே
உறைவோர் பாக்கியவான்களே.

3. சேனையின் கர்த்தா!
சீர் பெருகும் நாதா!
எம் கேடயமானோரே!
விண்ணப்பம் கேளும்
கண்ணோக்கிப் பாரும்,
எண்ணெய் வார்த்த உம் தாசனை.

4. மன்னா நீர் சூரியன்
என் நற்கேடயமும்;
மகிமை கிருபை ஈவீர்;
உம் பக்தர் பேறு
நன்மை அநந்தம்
உம்மை நம்புவோன் பாக்கியவான்.

5. திரியேக தேவே!
மகிமை உமக்கே
வளமாய் உண்டாகவே!
நித்தியம் ஆளும்,
சதா காலமும்
உளதாம்படியே ஆமென்.

அட்டவணை

**32** Holy, Holy, Holy, Lord God Almighty **பா.22**

A.M.160 Nicaea 11,12,12,10

1. **தூய, தூய, தூயா! சர்வ வல்ல நாதா!**
தேவரீர்க் கெந்நாளும் சங்கீதம் ஏறுமே
தூய, தூய, தூயா! மூவரான ஏகா!
காருணியரே, தூய திரியேகரே!

2. தூய, தூய, தூயா! அன்பர் சூழ நின்று
தெய்வ ஆசன முன்னர் தம் கிரீடம் வைப்பரே,
கேருபீம் சேராபீம் தாழ்ந்து போற்றப் பெற்று,
இன்றென்றும் வீற்றாள்வீர், அநாதியே!

3. தூய, தூய, தூயா! ஜோதி பிரகாசா,
பாவக்கண்ணால் உந்தன் மாண்பைக் காண யார் வல்லோர்?
நீரே தூய, தூயர், மனோ வாக்குக் கெட்டா
மாட்சிமை, தூய்மை, அன்பும் நிறைந்தோர்,

4. தூய, தூய, தூயா! சர்வ வல்ல நாதா!
வானம், பூமி, ஆழி உம்மை ஸ்தோத்திரிக்குமே;
தூய, தூய, தூயா! மூவரான ஏகா!
காருணியரே, தூய திரியேகரே!

O Worship the King all glorious above

**33** *Hanover* **பா.24**

A.M. 431 10.10.11,11

1. **மா மாட்சி கர்த்தர் சாஷ்டாங்கம் செய்வோம்,**
வல்லவர் அன்பர் பாடிப் போற்றுவோம்;
நம் கேடகம் காவல் அனாதியானோர்,
மகிமையில் வீற்றுத் துதி அணிந்தோர்.

அட்டவணை

2. சர்வ வல்லமை தயை போற்றுவோம்,
ஒளி தரித்தோர், வானம் சூழ்ந்தோராம்;
குமுறும் மின் மேகம் கோபரதமே,
கொடும் கொண்டல் காற்றிருள் சூழ் பாதையே

3. மா நீச மண்ணோர் நாணல் போன்றோர் நாம்;
என்றும் கைவிடீர் உம்மை நம்புவோம்;
ஆ! உருக்க தயை! முற்றும் நிற்குமே,
மீட்பர், நண்பர், காவலர், சிருஷ்டிகரே.

4. ஆ! சர்வ சக்தி! சொல்லொண்ணா அன்பே!
மகிழ்வாய் விண்ணில் தூதர் போற்றவே,
போற்றிடுவோம் தாழ்ந்தோர் நாம் அற்பர் என்றும்
மெய் வணக்கமாய் துதி பாடலோடும்.

## ஆராதனை முடிவு

**34** **கி.கீ.378**

*சௌராஷ்டிரம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தேவாதி தேவன் தனக்குச்**
சீர்த்தி மேவு மங்களம்

***அனுபல்லவி***

ஜீவாதிபதி நித்யனுக்குத்
திவ்ய லோக ரக்ஷகனுக்குத் – தேவாதி

***சரணங்கள்***

1. ஞான வேத நாயகனுக்கு,
நரரை மீட்ட மகிபனுக்குத் –தேவாதி

2. பக்தர் மறவா பாதகனுக்குப்
பரம கருணா நீதனுக்குத் –தேவாதி

3. ஜெக சரணிய நாதனுக்குச்
சீஷர் புகழும் போதகனுக்குத் –தேவாதி

*– ல.ஈ. ஸ்தேவான்*

அட்டவணை

**35** **கி.கீ.377**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1. **அனுக்ரக வார்த்தையோடே - இப்போ-து**
அடியாரை அனுப்புமையா!
மனமதில் தயவுறும் மகத்துவபரனே!
வந்தனம் உமக்காமென்.

2. நின்திரு நாமமதில் - கேட்ட
நிர்மலமாம் மொழிகள்
சந்ததம் எமதகம் மிக பலனளித்திடச்
சாமி நின்னருள் புரிவாய்.

3. தோத்திரம், புகழ், மகிமை, - கீர்த்தி,
துதி, கனம், தினமுமக்கே
பாத்திரமே; அதிசோபித பரனே!
பாதசரண் ஆமென்!

*-ச.ஜெ. சிங்க்*

**36** **சங்கீதம் 150**

1. **அல்லேலூயா தேவனை அவருடைய**
பரிசுத்த ஆலயத்தில் அவரைத் துதியுங்கள்
என்றும் அவரைத் துதியுங்கள் (2 முறை)
வல்லமை விளங்கும் வானத்தைப் பார்த்து
வல்லமை நிறைந்த கிரியைக்காக
அல்லேலூயா (4 முறை)

2. மாட்சிமை பொருந்திய மகத்துவத்திற்காய்
எக்காளத் தொனியோடே அவரைத் துதியுங்கள்
என்றும் அவரைத் துதியுங்கள் (2 முறை)
வீணை சுரமண்டலம் தம்புரு நடனத்தோடும்
யாழோடும், குழலோடும், தாளங்களோடும்
அல்லேலூயா (4 முறை)

அட்டவணை

3. பேரோசையுள்ள கைத்தாளங்களோடும்
இங்கித சங்கீதத்தோடும் அவரைத் துதியுங்கள்
என்றும் அவரைத் துதியுங்கள் (2 முறை)
சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதியுங்கள்
சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதியுங்கள்
அல்லேலூயா (4 முறை)

Sweet Saviour bless us are we go

**37** *St. Mathias* **பா.19**

A.M. 28, 11 8,8,8,8,8,8

1. நல் மீட்பரே இந்நேரத்தில்
வந்தாசீர்வாதம் கூறுமேன்
உம் வார்த்தை கேட்டோர் மனதில்
பேரன்பின் அனல் மூட்டுமேன்,
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ இயேசுவே, பிரகாசியும்.

2. இன்றெங்கள் செய்கை யாவையும்
தயாபரா, நீர் நோக்கினீர்;
எல்லாரின் பாவம் தவறும்,
மா அற்பச் சீரும் அறிந்தீர்.
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ இயேசுவே, பிரகாசியும்.

3. எப்பாவத் தீங்கிலிருந்தும்
விமோசனத்தைத் தாருமேன்;
உள்ளான சமாதானமும்
சுத்தாங்கமும் உண்டாக்குமேன்.
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ இயேசுவே, பிரகாசியும்.

அட்டவணை

4. சந்தோஷம் பயபக்தியும்
நீர் நிறைவாக ஈயுமேன்;
உமக்கொப்பாக ஆசிக்கும்
தூய்மையாம், உள்ளம் தாருமேன்.
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ இயேசுவே, பிரகாசியும்

5. தரித்திரம் துன்பம் பாவத்தால்
இக்கட்டடைந்த யாரையும்
கண்ணோக்கும் மா கிருபையால்;
நீர் மீட்பர், நீர் சமஸ்தமும்
வாழ்நாளிலும், சாங்காலத்தும்,
ஆ இயேசுவே, பிரகாசியும்.

**38** Saviour again to Thy dear name **பா.25**

S.S. 291. A.M.31 II Ellers 10,10,10,10

1. **கர்த்தாவே, இப்போ உம்மைத் தொழுதோம்**
ஓர்மித்தெழுந்து கீதம் பாடுவோம்;
வீடேகுமுன் உம் பாதம் பணிந்தே
உம் ஆசீர்வாதம் பெற்றுச் செல்வோமே.

2. உம் சமாதானம் தந்து அனுப்பும்
உம் நாளை முடிப்போமே உம்மோடும்;
பாதம் பணிந்த எம்மைக் காத்திடும்
எப்பாவம் வெட்கம் அணுகாமலும்.

3. உம் சமாதானம் இந்த ராவிலும்;
இருளை நீக்கி ஒளி தந்திடும்;
பகலோ ராவோ உமக்கொன்றாமே
எச்சேதமின்றி எம்மைக் காருமே.

4. உம் சமாதானம் ஜீவ நாள் எல்லாம்;
நீர் தொல்லை துன்பில் புகல் இன்பமாம்;
பூலோகத் தொல்லை ஓய அழைப்பீர்,
பேரின்ப வாழ்வை அன்பாய் ஈகுவீர்.

அட்டவணை

**39** **கி.கீ.299**

*ஆனந்தபைரவி* *ரூபகதாளம்*

**1. வந்து நல்வரம் தந்தனுப்பையா, ஆதிநாதா, ஜோதி**
வல்ல ஆவியை நல்கியாளையா.

2. பண்ணின ஜெபம் எண்ணிக்கேள், இன்னும் – ஆதி நாதா, ஜோதி
பண்பாய் உள்ளினில் பதிந்தே ஆளென்றும்.

3. காதில் கேட்ட உன் வேத வாக்கியம்–ஆதிநாதா ஜோதி
கருத்தில் இருத் தப்போதே பாக்கியம்.

4. புறத்தே சென்று அறத்தைச் செய்யவே –ஆதிநாதா ஜோதி
புத்தி தா நான் புதிதாய் உய்யவே.

5. இந்தப் பலியின் இனிய கந்தமே – ஆதிநாதா ஜோதி
என்னில் கமழ ஈவாய் அந்தமே. *– ச. அருமைநாயகம்*

**40** All hail the power of Jesus' Name **பா.261**

A.M.300, S.S. 203 C.M.

**1. எல்லாருக்கும் மா உன்னதர்,**
கர்த்தாதி கர்த்தரே,
மெய்யான தெய்வமனிதர்,
நீர் வாழ்க, இயேசுவே.

2. விண்ணில் பிரதானியான நீர்
பகைஞர்க்காகவே
மண்ணில் இறங்கி மரித்தீர்;
நீர் வாழ்க, இயேசுவே.

3. பிசாசு, பாவம், உலகை
உம் சாவால் மிதித்தே
ஜெயித்தடைந்தீர் வெற்றியை;
நீர் வாழ்க, இயேசுவே.

4. நீர் வென்றபடி நாங்களும்
வென்றேறிப் போகவே;
பரத்தில் செங்கோல் செலுத்தும்
நீர் வாழ்க, இயேசுவே.

அட்டவணை

5. விண்ணோர்களோடு மண்ணுள்ளோர்
என்றைக்கும் வாழவே
பரம வாசல் திறந்தோர்
நீர் வாழ்க, இயேசுவே.

## 3. காலை

**41** *Moscow* **பா.31**

A.M. 360 II 6,6,4,6,6,6,4

1. **கீழ் வான கோடியின்**
செம் காந்தி சூரியன்
எழும்பிடும்;
அடியார் ஆன்மத்தின்
நீதியின் சூரியன்
ஆரோக்கியம் சீருடன்
எழும்பிடும்.

2. ராவிருள் நீங்கிற்றே
காந்தியும் தோன்றிற்றே
பூமி தன்னில்;
பாவாந்தகாரமும்
எவ்வறிவீனமும்
நீங்கிடத் தோன்றிடும்
எம் நெஞ்சத்தில்.

3. வடிவம் வர்ணமும்
வான் புவி வண்ணமும்
காணுவோமே;
உம் சிஷ்டி நோக்கத்தை
உம் ஞான ஜோதியை
உந்தன் நற்பாதையைக்
காட்டுவீரே.

அட்டவணை

4. ஜீவ இராசிகள்
நீர் நில வாசிகள்
எழும்பவே;
மகிழ்ந்து மாந்தரும்
வணங்கிப் போற்றியும்
செல்வோம் எம் வேலைக்கும்
எழும்பியே.

5. மன்னாவால் போஷியும்
செல் பாதை காட்டிடும்
இந்நாள் எல்லாம்;
அன்றன்றும் தருவீர்
ஆடை ஆகாரம் நீர்;
மோட்சம் நடத்துவீர்
ஆயுள் எல்லாம்.

**42** **கி.கீ.329**

*மோகனம்* *சாபுதாளம்*

***பல்லவி***

**காலமே தேவனைத் தேடு – ஜீவ**
காருண்யர் பாதம் பணிந்து மன்றாடு

***அனுபல்லவி***

சீலமுடன் பதம் பாடிக் கொண்டாடுஇ
சீரான நித்திய ஜீவனை நாடு – காலமே

***சரணங்கள்***

1. மன்னுயிர்க்காய் மரித்தாரே – மனு
மைந்தனென நாமம் வைத்திருந்தாரே;
உன் சிருட்டிகரை நீ உதயத்திலெண்ணு
உள்ளங்கனிந்து தனி ஜெபம் பண்ணு – காலமே

அட்டவணை

2. பாவச் சோதனைகளை வெல்லு – கெட்ட
பாருடல் பேயுடன் போருக்கு நில்லு
ஜீவ கிரீடஞ் சிரத்திலணியச்
சிந்தனை செய்; மனுவேலனைப் பணிய – காலமே

3. சிறுவர்கள் என்னிடஞ் சேரத் –தடை
செய்யா திருங்களென்றார் மனதார;
பரலோக செல்வ மவர்க்குப் பலிக்கும்;
பாக்கியமெல்லாம் பரந்து ஜொலிக்கும். – காலமே

4. வேலையுனக்குக் கைகூட – சத்ய
வேதன் கிருபை வரத்தை மன்றாட
காலை தேடுவோர் எனைக் கண்டடைவாரே
கண்விழித்து ஜெபஞ் செய்யுமென்றாரே – காலமே

*–ச.பே. ஞானமணி*

**43** **கி.கீ.331**

*சுருட்டி* *சாபுதாளம்*

### *பல்லவி*

இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய், இயேசுநாதையா;
இன்றைத்தினம் உன் அருள் ஈகுவாய்.

### *அனுபல்லவி*

அன்றுன் உதிரம் நரர்க்கென்று சிந்திமீட்டெனை
வென்றியுடன் ரட்சித்த நன்றி போலே எனக்கு – இன்

### *சரணங்கள்*

1. போன ராவில் என்னைக் கண் பார்த்தாய்,–பலவிதமாம்
பொல்லா மோசங்களில் தற்காத்தாய்;
ஈன சாத்தான் எனையே இடர்க்குள் அகப்படுத்தி,
ஊனம் எனக்குச் செய்யா துருக்கமுடன் புரந்தாய் –இன்

அட்டவணை

2. கையிட்டுக் கொள்ளும் என்றன் வேலை யாவிலுமுன்றன்
கடைக்கண் ணோக்கி அவற்றின் மேலே,
ஐயா நின் ஆசீர்வாதம் அருளி என் மனோவாக்கு
மெய்யால் நின் மகிமையே விளங்கும்படி ஒழுக –இன்

3. எத்தனையோ விபத்தோர் நாளே – தஞ்சம் நீ என
எளியேன் அடைந்தேன் உன்றன் தாளே;
பத்தர் பாலனா எனைப் பண்பாய் ஒப்புவித்தேன் உன்
சித்தம் எனது பாக்கியம் தேவ திருக்குமாரா. – இன்

4. பாவ சோதனைகளை வென்று பேயுலகுடல்
பண்ணும் போர்களுக் கெதிர் நின்று
ஜீவ பாதையில் இன்றும் திடனாய் முன்னிட்டுச் செல்ல
தேவ சர்வாயுதத்தைச் சிறக்க எனக் களித்து – இன்

*– பாளையங்கோட்டைப் பாடல்*

**44** **கி.கீ.330**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1. **ஐயனே! உமதுதிருவடி களுக்கே**
**ஆயிரந்தரந் தோத்திரம்!**
**மெய்யனே! உமது தயைகளை அடியேன்**
**விவரிக்க எம்மாத்திரம்?**

2. **சென்றதாம் இரவில் தேவரீனென்னைச்**
**சேர்த்தரவணைத்தீரே;**
**அந்தடைவாயிப் பகலிலுங் கிருபை**
**யாகவா தரிப்பீரே**

3. **இருதயந் தனை நீர் புதியதே யாக்கும்**
**ஏழையைக் குணமாக்கும்**
**கருணையாய் என்னை உமதகமாக்கிக்**
**கன்மமெல்லாம் போக்கும்**

4. **நாவிழி செவியை, நாதனே, இந்த**
**நாளெல்லாம் நீர் காரும்,**
**தீவினை விலகிநான் திருமுகம் நோக்க,**
**தெய்வமே, அருள் கூரும்.**

அட்டவணை

5. கைகாலால் நான் பவம்புரியாமல்
சுத்தனே துணை நில்லும்
துய்யனே, உம்மால் தான் எனதிதயம்
தூய்வழியே செல்லும்

6. ஊழியந் தனைநான் உண்மையாச் செய்ய
உதவி நீர் செய்வீரே
ஏழை நான் உமக்கே இசையநல் ஆவி
இன்பமாய்ப் பெய்வீரே

7. அத்தனே! உமது மகிமையை நோக்க
அயலான் நலம்பார்க்கச்
சித்தமாய் அருளும், மெய்விசுவாசம்,
தேவனே உமக்கேற்க.

8. இன்றும் என் மீட்பைப் பயம் நடுக்கத்தோ
டேயடியேன் நடத்தப்
பொன்றிடா பலமே தாரும், என் நாளைப்
பூவுலகில் கடத்த

9. இந்த நாளிலுமே திருச்சபை வளர
ஏகா தயைகூரும்,
தந்தையே நானதற் குதவியாயிருக்கத்
தற்பரா வரந்தாரும்

*–ஞா. சாமுவேல்*

**45** **கி.கீ.332**

*பூபாளம்* *சாபுதாளம்*

1. **கதிரவன் எழுகின்ற காலையில் இறைவனைத்**
துதி செய்ய மனமே – எழுந்திராய்.

2. வறண்டு தண்ணீர் அற்ற வனம் இந்தப் புவிதனில்
திரண்ட தயை தேவை– நாடுவேன்.

3. கடவுளின் வல்லமை, கன மகிமை காணும்
இடமதில் செல்வதே – என் இஷ்டம்.

அட்டவணை

4. ஜீவனைப் பார்க்கிலும் தேவனின் காதலை
ஆவலாய் நாடி நான் – போற்றுவேன்.

5. ஆயுள் பரியந்தம் ஆண்டவர் நாமத்தை
நேயமாய் பாடி நான் – உயர்த்துவேன்.

6. மெத்தையில் ராச்சாமம் நித்திரை கொள்கையில்
கர்த்தரின் செயல்களை – சிந்திப்பேன்.

7. அல்லும் பகலும் நான் அவர் செட்டைகளின் கீழ்த்
தொல்லைக்கு நீங்கியே – ஒதுங்குவேன்.

8. ஆத்துமம் தேவனை அண்டிக் கொள்ள அவர்
நேத்திரம்போல் என்னைக் – காக்கிறார்.

*–த. யோசேப்பு*

**46** **கி.கீ.333**

*கல்யாணி* *ஆதிதாளம்*

**தோத்திரம்! கிருபை கூர், ஐயா!**
விழி பார் ஐயா, விழி பார், ஐயா!

1. பாத்திரம் இலா எனை நேத்திரம் என உச்சிதமாய்க்
காத்து வந்திடும், எனது கர்த்தாதி கர்த்தனே–தோத்தி

2. இந்த நாள் அளவிலும் வந்த துன்பம் யாவுமே
என்றனை விட்டகலவே இரங்கிய தேவனே!–தோத்தி

3. மனதிலும் வாக்கிலும் மட்டில்லாத பாவி நான்;
எனது தகற்றி ஆளும், ஏகாம்பர நாதனே! – தோத்தி

4. போதனே, நீதனே, புனித சத்ய வேதனே,
கீதனே, தாசர் துதி கேளும், யேசு நாதனே! – தோத்தி

*–யே. அண்ணாவியார்*

அட்டவணை

**47** **கி.கீ.334**

*நவரோஜ்* *ஏகதாளம்*

***பல்லவி***

**அதிகாலையிலுமைத் தேடுவேன் முழு மனதாலே**
தேவாசீர் வாதம் பெற நாடுவேன் ஜெப தபத்தாலே

***அனுபல்லவி***

இதுகாறும் காத்த தந்தை நீரே;
இனிமேலும் காத்தருள் செய்வீரே,
பதிவாக உம்மிலே நான் நிலைக்கவே,
பத்திரமாய் எனை உத்தமனாக்கிடும் தேவே!- அதி

***சரணங்கள்***

1. போனரா முழுவதும் பாதுகாத்தருளின போதா! எப்
போதும் எங்களுடனிருப்பதாய் உரைத்த நல் நாதா!
ஈனப்பாவிக் கேதுதுணை லோகிலுண்டு பொற்பாதா?
எனக்கான ஈசனே! வான ராசனே!
இந்த நாளிலும் ஒரு பந்தமில்லாமல் காரும் நீதா!-அதி

2. பலசோதனைகளால் சூழ்ந்துநான் கலங்கிடும்போது-தப்
பாது நின்கிருபை தாங்கிட வேணும் அப்போது
விலகாது என்சமூகம் என்ற வாக்கில் தவறேது?
விசுவாசங் கொண்டு மெய்ப் பாசமூண்டிட
விக்கினம் யாவிலும் வெற்றி காணுவேன் மலைவேது?-அதி

3. நரர் யாவர்க்குமுற்ற நண்பனாய் நடந்திட-வையே!- தீ
நாவின் பாவமற நன்மைகள் மொழிந்திடச் செய்யே!
பரலோக ஆவியைநல் மாரி போலெனிலே பெய்யே!
புகழான நாதனே! வேத போதனே!
பூரணமாய் உனைப் போற்றுவேன், தினந் தினம்மெய்யே-அதி

*-சா. பரமானந்தம்*

அட்டவணை

**48** **கி.கீ.335**

*மோகனம்* *திஸ்ர ஏகதாளம்*

### *கண்ணிகள்*

1. நல்ல தேவனே, ஞான ஜீவனே;
வல்ல உமது கருணை தன்னை
வாழ்த்திப் போற்றுவேன்.

2. போன ராவிலே பொல்லாங்கின்றியே
ஆன நல்ல அருளினாலே
அன்பாய்க் காத்தீரே.

3. காலையைக் கண்டேன், கர்த்தா உம்மையே
சாலவும் துதித்துப் போற்றிச்
சார்ந்து கொள்ளுவேன்.

4. சென்ற ராவதின் இருளைப் போலவே
என்றன் பாவ இருளைப் போக்கி,
இலங்கப் பண்ணுமே!

5. இன்று நானுமே இன்பமாகவே
உன்றன் வழியில் நடக்கக் கருணை
உதவவேணுமே!

6. ஒளியின் பிள்ளையாய் ஊக்கமாகவே
எளியன் இன்றும் நடக்க ஆவி
ஈந்தருளுமே!

7. கையைக் காவுமே, கண்ணைக் காவுமே!
மெய்யைக் காத்து என்றன் மனதை
மிகவும் காவுமே!

*–ச. அருமைநாயகம்*

அட்டவணை

**49** **கி.கீ.336**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தோத்திர பாத்திரனே, தேவா,**
தோத்திரந் துதியுமக்கே!
நேத்திரம் போல் முழு ராத்ரியுங் காத்தோய்;
நித்தியம் துதியுமக்கே!

***சரணங்கள்***

1. சத்துருபயங்களின்றி – நல்ல
நித்திரை செய்ய எமை
பத்திரமாய்ச்சீ ராட்டி உறக்கியே
சுற்றிலுங் கோட்டையானாய் – தோத்திர

2. விடிந்திருள் ஏகும்வரை – கண்ணின்
விழிகளை மூடாமல்
துடி கொள் தாய்போல் படிமிசை எமது
துணை எனக் காத்தவனே – தோத்திர

3. காரிருள் அகன்றிடவே, – நல்ல
கதிரொளி திகழ்ந்திடவே,
பாரிதைப் புரட்டி உருளச் செய் தேகன
பாங்கு சீராக்கி வைத்தாய். – தோத்திர

4. இன்றைத் தினமிதிலும் – தொழில்
எந்தெந்த வகைகளிலும்
உன் திரு மறைப்படி ஒழுகிட எமக்கருள்
ஊன்றியே காத்துக்கொள்வாய் – தோத்திர

*–ப.ஈ. யோவான்*

அட்டவணை

**50** **கன்.கீ.23**

1. **அருணோதயம் எழுந்திடுவோம்**
பரனேசுவைத் துதிப்போம்
அருணோதயம் பரமானந்தம்
பரனோடுறவாடவும்.

2. இதைப் போன்றொரு அருணோதயம்
எம்மைச் சந்திக்கும் மனமே
ஆ! என்னானந்தம்! ஜோதி சூரியனாம்
எந்தன் நேச ரெழும்பும் நாள்.

3. நன்றியா லுள்ளம் பூரித்திடுதே
அன்னையாம் மேசு காருண்யம்
ஒவ்வொன்றா யிதைத் தியானம் செய்யவும்
எவ்வாறு மேற்ற சந்தர்ப்பம்

4. போன ராவினில் ஜீவித்தோர் பலர்
லோகம் விட்டுமே போய் விட்டார்
ஆயினும் நமக்கிந்தத் தினமும்
தந்த நேசரைத் துதிப்போம்

5. நானிர்வாணியாய் வந்தவண்ணமே நிர்
வாணியா யங்கு போகின்றேன்
கூடச் செல்லவும் – பூவிலொன்றுண்டோ?
நாடி போமந்த நாட்டிற்கே

6. ஆயென் நேசரின் அன்பை யெண்ணவும்
ஆனந்தம் பரமானந்தம்!
ஆயென் நேசரோர் நவ வான் புவி
தானஞ் செய்ததே ஆனந்தம்

7. பார்! தன் நேசரின் மார்பில் சாய்ந்தேகும்
யாவரிள் இவ்வனாந்திரம்?
எந்தன் நேசரின் கூடச் செல்கிறேன்
சொந்த ராஜ்யத்தில் சேரவும்

அட்டவணை

8. கொண்டல் மோதும் வறண்ட நாடிதில்
நண்பரே கைவிடாதேயும்!
ஆசையோடு நான் வாரே னென் துக்கம்
பாசமா யங்கு தீர்த்திடும்!

## 4. மாலை

**51** **கி.கீ.337**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1. **ஐயரே, நீர் தங்கும் என்னிடம்**
ஐயரே, நீர் தங்கும்! – இப்போ–து
அந்திநேரம் பொழுதஸ்தமித்தாச்சே
ஐயா, நீர் இரங்கும்.
2. பகல் முழுதுங் காத்தீர், சென்ற
பகல் முழுதுங் காத்தீர்; – தோத்திரம்!
பரமனே, இந்த இரவிலும் வாரும்,
பாவியை நீர் காரும்!
3. தங்கா தொருபொருளும் என்னிடம்,
தங்கா தொருபொருளும் – யேசு
தற்பரனே, நீர் ஒருவரேயென்னில்
தங்கித் தயை புரியும்.
4. உயிரே துமையன்றிப் பாவிக்
குயிரே துமையன்றி? – என்றன்
உடல் உயிர் உம்மால் உய்கிறதையா,
உத்தமனே, தங்கும்.
5. நீர் தங்கிடும் வீட்டில், யேசுவே
நீர் தங்கிடும் வீட்டில்; – எல்லாமத்
நிறைவே குறைவுண்டாமோ, கர்த்தா?
நின்னை விடமாட்டேன்.
6. என் பாவம் மன்னியும், இறையே
என் பாவம் மன்னியும் – அப்போது
எளியேன் உம்மோ டயர்வேன், இரவில்
எனக்கோர் திகிலேது?

அட்டவணை

7. எனக்கு நீர் காவல், என்றும்
எனக்கு நீர் காவல் – என்றன்
இனத்தார் ஜனத்தார் எளியோர், வலியோர்
எல்லாவர்க்குங் காவல்.

8. உம்மோடே படுப்பேன் ஐயா,
உம்மோடே படுப்பேன் – இரவில்
உம்மோ டயர்வேன், சேதமில்லாமல்
உம்மோ டெழுந்திருப்பேன்.

*– ஞா. சாமுவேல்*

**52** **கி.கீ.385**

*நாமநாமக்கிரியை* *ஆதிதாளம்*

1. **சூரியன் மறைந்து அந்தகாரம் சூழ்ந்தது,**
சோர்ந்த என் தேகம் அயர்ந்துமே இளைப்பாறப்போகுது
தூயா கிருபை கூர்ந்து காருமையா!

2. பகல் முழுவதும் பட்சமாய் என்னைப் பாதுகாத்தீரே,
சகல தீமையுமகல வைத்தருள் நலமுந்தந்தீரே,
சுவாமி உந்தன் பாதம் பணிகிறேன்.

3. பாதகம் மிகப் புரிந்தேன் பரம நாயகா,
பாவி நானிந்த நாளிலும் பல தீவினை செய்தேனையா
கோபமின்றி என் பாவம் பொறுத்திடுவாய்.

4. ராவில் வரும் மோசமொன்றும் என்னைச் சேராமல்,
பேயின் சர்ப்பனை தீய சொப்பனம் மனதில் நேராமல்
நேயா நின் நல் தூதர் காவல்தா.

5. ஆத்துமம் சரீரம் எனக்கான யாவையும்
அப்பனுன் கையிலொப்புவித்து நான் அமர்ந்து தூங்குவேன்
ஐயனே உன் பொன்னடி சரணம்

*–ஐ. சாமுவேல்*

அட்டவணை

**53** **கி.கீ.394**

*குரஞ்சி* *ஆதிதாளம்*

**1. அருளே! பொருளே! ஆரணமே! அல்லும் பகலுந் துணை நீயே;**
இருள் சேர்ந்திடுமிவ் வேளையிலே இன்னலொன்றுந் தொடராமல்
மருண்டு மனது பிறழாமல், வஞ்சத் தொழிலிற் செல்லாமல்
கருணாகரனே! எனைக்காக்கக் கழறுந் துதியுனக் கொருகோடி.
–ஸ்வாமி ஒரு கோடி

2. சென்ற நாட்களனைத்திலும் சிறியேன் தனக்குச் செய்து வந்த
நன்றாம் நன்மைகளனைத்திற்கும் நவிலற்கரிய தயைகளுக்கும்
என்றுமழியா வரங்களுக்கும் ஏழையடியேன் மிகத் தாழ்ந்து
கன்று நினைந்து கதறுதல் போல் கழறுந்துதியுனக் கொருகோடி.
– ஸ்வாமி ஒரு கோடி

3. பற்றொன்றில்லாப் பரம்பொருளே, பரமானந்த சற்குருவே!
வற்றாஞான சமுத்திரமே! வடுவொன்றில்லா வான் பொருளே!
பெற்றோர், உற்றோருலகனைத்தும் பிரியமுடனே சுகித்திருக்கக்
கற்றில்லாத மிகச்சிறியேன் கழறுந்தியுனக் கொருகோடி.
– ஸ்வாமி ஒரு கோடி

4. பத்தியதனாலுனைப் பாடிப் பணிந்தேயென்றும் வாழ்ந்திருக்க,
நத்தும் இரவு முழுதனைத்தும் நாதா என்னைக் காத்தருளி,
முத்தியென்னும் மோட்சநிலை முடிவிலடியேன் தன்னைச் சேர்க்கக்
கத்தி யலறிப் பரவசமாய்க் கழறுந்துதியுனக் கொருகோடி.
– ஸ்வாமி ஒரு கோடி

*–ஐ.த. எலியேசர்*

அட்டவணை

Wo Willst do him weila abend ist

**54** *Montgomery* **பா.34**

A.M. 719 L.M.

1. **இவ்வந்தி நேரத்தில் எங்கே**
போய்த் தங்குவீர் என் இயேசுவே
என் நெஞ்சில் நீர் பிரவேசிக்கும்
மா பாக்கியத்தை அருளும்.

2. ஆ, நேசரே நீர் அடியேன்
விண்ணப்பத்துக்கிணங்குமேன்;
என் நெஞ்சின் வாஞ்சை தேவரீர்
ஒருவரே என்றறிவீர்.

3. பொழுது சாய்ந்துபோயிற்று
இரா நெருங்கி வந்தது;
மெய்ப்பொழுதே, இராவிலும்
இவ்வேழையை விடாதேயும்.

4. ஆ, என்னைப் பாவ ராத்திரி
பிடித்துக் கெடுக்காதினி;
நீர் ஒளி வீசியருளும்
ரட்சிப்பின் பாதை காண்பியும்.

5. நீர் என் கடை இக்கட்டிலும்
என்னோடிருந்து ரட்சியும்;
உம்மைப் பிடித்துப் பற்றினேன்
நீர் போய்விடீர் என்றறிவேன்.

**55** **கி.கீ.198**

*ஆனந்த பைரவி* *ஏகதாளம்*

***பல்லவி***

**தேவனே, நான் உமதண்டையில் – இன்னும் நெருங்கிச்**
சேர்வதே என் ஆவல் பூமியில்.

அட்டவணை

### *அனுபல்லவி*

மாவலிய கோரமாக வன்சிலுவை மீதினில் நான்
கோவே, தொங்க நேரிடினும் ஆவலாய் உம்மண்டை சேர்வேன்.–தேவ

### *சரணங்கள்*

1. யாக்கோபைப்போல், போகும் பாதையில் பொழுதுபட்டு
இராவில் இருள் வந்து மூடிட,
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மைக் கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்ல நாதா! –தேவ

2. பரத்துக்கேறும் படிகள் போலவே – என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா, என்றன் தேவனே
கிருபையாக நீர் எனக்குத் தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னையழைத்து அன்பின் தூதனாகச் செய்யும் –தேவ

3. நித்திரையினின்று விழித்துக் – காலை எழுந்து
கர்த்தாவே, நான் உம்மைப் போற்றுவேன்;
இத்தரையில் உந்தன் வீடாய் என் துயர்க் கல் நாட்டுவேனே
என்றன் துன்பத்தின் வழியாய் இன்னும் உம்மைக் கிட்டிச் சேர்வேன்.–தேவ

4. ஆனந்தமாம் செட்டை விரித்துப் பரவசமாய்
ஆகாயத்தில் ஏறிப்போயினும்
வான மண்டலங் கடந்து பறந்து மேலே சென்றிடினும்
மகிழ்வுறு காலத்திலும் நான் மருவியும்மைக் கிட்டிச் சேர்வேன் –தேவ

*–வேதநாயகம் சாஸ்திரியார்*

அட்டவணை

**56** Glory to Thee my God this night **பா.33**

A.M. 23 Canon L.M.

1. **இந்நாள் வரைக்கும் கர்த்தரே,**
என்னைத் தற்காத்து வந்தீரே,
உமக்குத் துதி ஸ்தோத்திரம்
செய்கின்றதே என் ஆத்துமம்.

2. ராஜாக்களுக்கு ராஜாவே,
உமது செட்டைகளிலே
என்னை அணைத்துச் சேர்த்திடும்
இரக்கமாகக் காத்திடும்.

3. கர்த்தாவே, இயேசு மூலமாய்
உம்மோடு சமாதானமாய்
அமர்ந்து தூங்கும்படிக்கும்,
நான் செய்த பாவம் மன்னியும்.

4. நான் புதுப் பலத்துடனே
எழுந்து உம்மைப் போற்றவே
அயர்ந்த துயில் அருளும்
என் ஆவியை நீர் தேற்றிடும்.

5. நான் தூக்கமற்றிருக்கையில்,
அசுத்த எண்ணம் மனதில்
அகற்றி, திவ்விய சிந்தையே
எழுப்பிவிடும், கர்த்தரே.

6. பிதாவே, என்றும் எனது
அடைக்கலம் நீர் உமது
முகத்தைக் காணும் காட்சியே
நித்தியானந்த முத்தியே.

7. அருளின் ஊற்றாம் ஸ்வாமியை
பிதா குமாரன் ஆவியை
துதியும், வான சேனையே
துதியும், மாந்தர் கூட்டமே.

அட்டவணை

**57** Holy Father in They mercy **பா.35**

A.M. 595 *Cairnbrook* 8,5,8,3

1. **எங்கள் ஊக்க வேண்டல் கேளும்**
தூய தந்தையே;
தூரம் தங்கும் எங்கள் நேசர்
காருமே.

2. மீட்பரே, உம் பிரசன்னத்தால்
பாதை காட்டுவீர்;
தாங்கும் பக்கல் தங்கி தாங்கும்
சோர்வில் நீர்.

3. துன்பம் தோன்றித் துணையின்றி
மோசம் நேர்கையில்
அன்பாய் நோக்கி ஆற்றல் செய்வீர்
சோகத்தில்.

4. மீட்பின் மா மகிழ்ச்சி அவர்
பலம் திடனாய்
அன்போடும்மைப் போற்றச் செய்வீர்
நாளுமாய்.

5. தூய ஆவி போதனையால்
தூய்மையாக்குவீர்;
போரில் வெற்றி பெற அருள்
ஈகுவீர்.

6. பிதா மைந்தன் தூய ஆவி
விலகாதேயும்;
அருள் அன்பு மீட்பு காவல்
ஈந்திடும்.

அட்டவணை

Abide with me fast falls the eventide

**58** *Evendite* **பா.36**

A.M. 271 10,10,10,10

**1. என்னோடிரும், மா நேச கர்த்தரே,**
வெளிச்சம் மங்கி இருட்டாயிற்றே;
மற்றோர் சகாயம் அற்றபோதிலும்,
நீங்கா ஒத்தாசை நீர், என்னோடிரும்.

2. நீர்மேல் குமிழிபோல் என் ஆயுசும்,
இம்மையின் இன்ப வாழ்வும் நீங்கிடும்;
கண் கண்ட யாவும் மாறி வாடிடும்
மாறாத கர்த்தர் நீர், என்னோடிரும்.

3. நியாயம் தீர்ப்போராக என்னண்டை
வராமல், சாந்தம் தயை கிருபை
நிறைந்த மீட்பராக சேர்ந்திடும்;
நீர் பாவி நேசரே, என்னோடிரும்.

4. நீர் கூடநின்று அருள் புரியும்;
பிசாசின் கண்ணிக்கு நான் தப்பவும்
என் துணை நீர், என் தஞ்சமாயிரும்;
இக்கட்டில் எல்லாம் நீர் என்னோடிரும்.

5. நீர் ஆசீர்வதித்தால் கண்ணீர் விடேன்;
நீரே என்னோடிருந்தால் அஞ்சிடேன்;
சாவே, எங்கே உன் கூரும் ஜெயமும்?
நான் உம்மால் வெல்ல நீர் என்னோடிரும்.

6. நான் சாகும் அந்தகார நேரத்தில்
உம் சிலுவையைக் காட்டும் சாகையில்
விண் ஜோதி வீசி இருள் நீக்கிடும்;
வாழ்நாள் சாங்காலிலும் என்னோடிரும்.

அட்டவணை

| | | |
|---|---|---|
| **59** | The day thou gavest Lord is ended | **பா.38** |
| A.M. 477 | *St. Clement* | L.M |

1. **நீர் தந்த நாளும் ஓய்ந்ததே**
கர்த்தாவே ராவும் வந்ததே;
பகலில் உம்மைப் போற்றினோம்
துதித்து இளைப்பாறுவோம்.

2. பகலோன் ஜோதி தோன்றவே,
உம் சபை ஓய்வில்லாமலே
பூவெங்கும் பகல் ராவிலும்
தூங்காமல் உம்மைப்போற்றிடும்.

3. நாற்றிசையும் பூகோளத்தில்
ஓர் நாளின் அதிகாலையில்
துடங்கும் ஜெபம் ஸ்தோத்திரமே
ஓர் நேரம் ஓய்வில்லாததே.

4. கீழ்கோளத்தோர் இளைப்பாற
மேல்கோளத்தோர் எழும்பிட
உம் துதி சதா நேரமும்
பல்கோடி நாவால் எழும்பும்.

5. ஆம், என்றும் ஆண்டவரே நீர்,
மாறாமல் ஆட்சி செய்குவீர்
உம் ராஜ்யம் என்றும் ஓங்கிடும்
சமஸ்த சிருஷ்டி சேர்ந்திடும்.

| | | |
|---|---|---|
| **60** | The day is past and over | **பா.39** |
| A.M. 21 II | *St. Anatolius* | 7,6,7,6,8,8 |

1. **முடிந்ததே இந்நாளும்;**
உம்மையே துதிப்போம்
எத்தோஷமின்றி ராவும்,
சென்றிடக் கெஞ்சுவோம்
நாதா உம்மோடு வைத்திடும்
நீர் ராவில் எம்மைக் காத்திடும்.

அட்டவணை

2. முடிந்ததே உற்சாகம்;
உள்ளம் உயர்த்துவோம்,
எப்பாவம் இன்றி ராவும்
சென்றிடக் கெஞ்சுவோம்!
ராவை ஒளியாய் மாற்றிடும்;
நீர் ராவில் உம்மைக் காத்திடும்

3. முடிந்ததே எம் வேலை
களிப்பாய்ப் பாடுவோம்
எச்சேதமின்றி ராவும்
சென்றிடக் கெஞ்சுவோம்;
நாதா உம்மோடு வைத்திடும்;
நீர் ராவில் எம்மைக் காத்திடும்.

4. காப்பீர் எம் ஆத்துமாவை
எம் பாதை நேரிடும்
எம் மோசம் சேதம் யாவும்
உமக்குத் தோன்றிடும்;
மாந்தரின் நேசா, கேட்டிடும்
எத்தீங்குமின்றிக் காத்திடும்.

**61** Sun of my soul Thou Saviour dear **பா.40**

A.M. 24 III *Hursley* L.M.

1. **மெய் ஜோதியாம் நல் மீட்பரே,**
நீர் தங்கினால் ராவில்லையே;
என் நெஞ்சுக்கும்மை மறைக்கும்
மேகம் வராமல் காத்திடும்.

2. என்றைக்கும் மீட்பர் மார்பிலே
நான் சாய்வது பேரின்பமே
என்றாவலாய் நான் ராவிலும்
சிந்தித்துத் தூங்க அருளும்.

அட்டவணை

3. என்னோடு தங்கும் பகலில்
சுகியேன் நீர் இராவிடில்
என்னோடே தங்கும் ராவிலும்
உம்மாலே அஞ்சேன் சாவிலும்.

4. இன்றைக்குத் திவ்விய அழைப்பை
அசட்டை செய்த பாவியை
தள்ளாமல், வல்ல மீட்பரே
உம்மண்டைச் சேர்த்துக் கொள்ளுமே

5. வியாதியஸ்தர், வறியோர்,
ஆதரவற்ற சிறியோர்
புலம்புவோர் அல்லாரையும்
அன்பாய் விசாரித்தருளும்.

6. பேரன்பின் சாகரத்திலும்
நான் மூழ்கி வாழுமளவும்,
என் ஆயுள்காலம் முழுதும்
உம் அருள் தந்து காத்திடும்.

At even ere the sun was set

**62** *Angelus* **பா.41**

A.M. 20 L.M.

1. **வியாதியஸ்தர் மாலையில்**
அவஸ்தையோடு வந்தனர்;
தயாபரா, உம்மண்டையில்
சர்வாங்க சுகம் பெற்றனர்.

2. பற்பல துன்பம் உள்ளோராய்
இப்போதும் பாதம் அண்டினோம்
பிரசன்னமாகித் தயவாய்
கண்ணோக்குவீரென்றறிவோம்

அட்டவணை

3. விசாரம் சஞ்சலத்தினால்
அநேகர் கிலேசப்பட்டனர்;
மெய் பக்தி அன்பின் குறைவால்
அநேகர் சோர்வடைந்தனர்.

4. பிரபஞ்சம் வீண் என்றறிந்தும்
பற்றாசை பலர் கொண்டாரே;
உற்றாரால் பலர் நொந்தாலும்,
மெய் நேசர் உம்மைத் தேடாரே.

5. மாசற்ற தூய தன்மையை
பூரணமாய்ப் பெறாமையால்,
எல்லோரும் சால துக்கத்தை
அடைந்தோம் பாவப் பாசத்தால்.

6. ஆ, கிறிஸ்துவே, மன்னுருவாய்
மா துன்பம் நீரும் அடைந்தீர்;
எப்பாடும் பாவமும் அன்பாய்
ஆராய்ந்து பார்த்து அறிவீர்.

7. உம் வார்த்தை இன்றும் பலிக்கும்;
நீர் தொட்டால் சொஸ்தம் ஆவோமே;
ஆரோக்கியம் எல்லாருக்கும்
இம்மாலை தாரும், இயேசுவே.

**63** **கி.கீ.339**

*தன்யாசி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**வினை சூழா திந்த இரவினில் காத்தாள்**
விமலா, கிறிஸ்து நாதா.

***அனுபல்லவி***

கனகாபி ஷேகனே, அவனியர்க் கொளிர், பிர
காசனே, பவ நாசனே, ஸ்வாமி! – வினை

அட்டவணை

***சரணங்கள்***

1. சென்ற பகல் முழுதும் என்னைக் கண் பார்த்தாய்;
செய் கருமங்களில் கருணைகள் பூத்தாய்;
பொன்றா தாத்ம சரீரம் பிழைக்க ஊண் பார்த்தாய்;
பொல்லாப் பேயின் மோசம் நின்றெனைக்காத்தாய். – வினை

2. சூரியன்அஸ்தமித் தோடிச் சென்றானே;
ஜோதி நட்சத்திரம் எழுந்தன வானே,
சேரும் விலங்கு பட்சி உறைபதி தானே
சென்றன; அடியேனும் பள்ளி கொள்வேனே. – வினை

3. ஜீவன் தந்தெனை மீட்டோய் சிறியேன் உன் சொந்தம்;
ஜெகத் தின்பங்கள் விழைந்து சேர்தல் நிர்ப்பந்தம்
பாவியேன் தொழுதேன் நின் பாதார விந்தம்;
பட்சம் வைத்தாள்வையேல், அதுவே ஆனந்தம். – வினை

4. இன்றைப் பொழுதில் நான் செய் பாவங்கள் தீராய்;
இடர்கள் துன்பங்கள் நீங்க என்னைக் கை சேராய்;
உன்றன் அடிமைக் கென்றும் உவந்தருள் கூராய்;
உயிரை எடுப்பையேல், உன் முத்தி தாராய். – வினை

*– பாளையங்கோட்டைப் பாடல்*

## 5. வெள்ளிக்கிழமை

**64** O Jesus crucified for man **பா.41**

A.M. 363 Intercession L.M.

1. **நரர்க்காய் மாண்ட இயேசுவே,**
மகத்துவ வேந்தாய் ஆளுவீர்;
உம் அன்பின் எட்டா ஆழத்தை
நாங்கள் ஆராயக் கற்பிப்பீர்.

2. உம் நேச நாமம் நிமித்தம்
எந்நோவு நேர்ந்தபோதிலும்
சிலுவை சுமந்தே நித்தம்
உம்மைப் பின்செல்ல அருளும்.

அட்டவணை

3. பிரயாணமாம் இவ்வாயுளில்
எப்பாதை நாங்கள் செல்லினும்
போர், ஓய்வு, வெய்யில், நிழலில்
நீர் வழித்துணையாயிரும்.

4. வெம் பாவக் குணத்தை வென்றே
ஆசாபாசம் அடக்கலும்,
உம் அச்சடையாளம் என்றே
நாங்கள் நினைக்கச் செய்திடும்.

5. உம் குருசை இன்று தியானித்தே
எவ்வேலையும் தூயதென்றும்,
லௌகீக நஷ்டம் லாபமே
என்றெண்ணவும் துணை செய்யும்.

6. உம் பாதம் சேரும் அளவும்
எம் சிலுவையைச் சுமந்தே
உம் சிலுவையால் மன்னிப்பும்
பொற்கிரீடமும் பெறுவோமே.

## 6. கர்த்தரின் நாள்

| | | |
|---|---|---|
| **65** | Heut ist des Herren Ruhetag | **பா.44** |
| A.M. 63 | *Wareham* | L.M. |

1. **உன்னதமான கர்த்தரே,**
இவ்வோய்வு நாளைத் தந்தீரே!
இதற்காய் உம்மைப் போற்றுவோம்
சந்தோஷமாய் ஆராதிப்போம்.

2. விஸ்தாரமான லோகத்தை
படைத்த கர்த்தா, எங்களை
இந்நாள் வரைக்கும் தேவரீர்
அன்பாய் விசாரித்து வந்தீர்

அட்டவணை

3. எல்லாரும் உமதாளுகை,
பேரன்பு, ஞானம், வல்லமை
மற்றெந்த மாட்சிமையையும்
அறிந்து உணரச் செய்யும்.

4. உயிர்த்தெழுந்த கிறிஸ்துவே
நீர் எங்கள் ஆத்துமாவிலே
தரித்து, எந்த நன்மைக்கும்
நீர் எங்களை உயிர்ப்பியும்.

5. தெய்வாவியே, நல் அறிவும்
மெய் நம்பிக்கையும் நேசமும்
சபையிலே மென்மேலுமே
வளர்ந்துவரச் செய்யுமே.

**66** O Day of rest and gladness **பா.45**

A.M.341 Ellacombe 7,6,7,6 D

**1. மகிழ்ச்சி ஓய்வுநாளே**
பூரிப்பு ஜோதியாம்
கவலை துக்கம் போக்கும்
மா பாக்கிய நல்நாளாம்
மாந்தர் குழாம் இந்நாளில்
சேர்ந்தே ஆராதிப்பார்
மா தூயர் தூயர் தூயர்
திரியேகர் பணிவார்.

2. முதலாம் சிஷ்டி ஜோதி
இந்நாளில் தோன்றிற்றே;
தம், சாவை வென்று மீட்பர்
இந்நாள் எழுந்தாரே;
தம் ஆவி வெற்றி வேந்தர்
இந்நாளில் ஈந்தாரே;
ஆ! மாட்சியாம் இந்நாளில்
மூவொளி வந்ததே.

அட்டவணை

3. இப்பாழ் வனாந்தரத்தில்
நீ திவ்விய ஊற்றேயாம்
உன்னின்று மோட்சம் நோக்கும்
பிஸ்கா சிகரமாம்;
ஆ! எம்மை முசிப்பாற்றும்
நல் அன்பாம் நாள் இது;
மண்ணின்று விண்ணில் ஏற்றும்
புத்துயிர் நாள் இது.

4. செல்வோம் புத்தருள் பெற்று
இவ்வோய்வு நாளிலே
மெய்பக்தர் மோட்ச லோக
மா பாக்கிய ஓய்வுக்கே
பிதா சுதன் சுத்தாவி
எம் ஸ்தோத்ரம் பெறுவீர்;
சபையின் நாவால் கீதம்
திரியேகரே ஏற்பீர்.

O what the joy and the glory must be

**67** O quanta qualia **பா.402**

A.M.235 10,10,10,10

1. **ஓய்வுநாள் விண்ணில் கொண்டாடுகின்றோர்**
பேரின்ப மேன்மை யார் கூற வல்லோர்?
வீரர்க்கு கிரீடம், தொய்ந்தோர் சுகிப்பார்;
ஸ்வாமியே யாவிலும் யாவும், ஆவார்.

2. ராஜ சிங்காசன மாட்சிமையும்
ஆங்குள்ளோர் வாழ்வும் சமாதானமும்
இவை எல்லாம் கண்டறிந்தோரில் யார்
அவ்வண்ணம் மாந்தர்க்கு நன்குரைப்பார்?

அட்டவணை

3. மெய் சமாதானத் தரிசனமாம்
அக்கரை எருசலேம் என்போம் நாம்
ஆசிக்கும் நன்மை கைகூடும் அங்கே
வேண்டுதல் ஓர்காலும் வீண் ஆகாதே.

4. சீயோனின் கீதத்தைப் பாடாதங்கும்
தடுக்க ஏலுமோ எத்தொல்லையும்?
பேரருள் ஈந்திடும் ஆண்டவா, நீர்
பக்தரின் ஸ்தோத்திரம் என்றும் ஏற்பீர்.

5. ஆங்குள்ளோர் ஓய்வுநாள் நித்தியமாம்,
விடிதல் முடிதல் இல்லாததாம்;
தூதரும் பக்தரும் ஓயாமலே
ஓர் ஜெய கீர்த்தனம் பாடுவாரே.

6. பாபிலோன் போன்ற இப்பாரின் சிறை
மீண்டு, நம் தேசம் போய்ச் சேரும்வரை,
எருசலேமை நாம் இப்பொழுதும்
வாஞ்சித்து ஏங்கித் தவித்திடுவோம்.

7. தந்தையினாலும், குமாரனிலும்
ஆவியின் மூலமும் யாவும் ஆகும்;
திரியேக தெய்வத்தை விண் மண்ணுள்ளார்
சாஷ்டாங்கமாய் வீழ்ந்து வாழ்த்திடுவார்.

**68** **கி.கீ.340**

*மோஹன கல்யாணி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஓய்வுநாள் இது, மனமே – தேவனின்**
உரையைத் தியானஞ் செய் கவனமே.

***அனுபல்லவி***

நேய தந்தையர் சேயர்க் குதவிய
நெறி இச் சுவிசேஷ வசனமே – ஓய்வு

அட்டவணை

1. ஜீவ சுக புத்ர செல்வம் தந்தவர்
சேவடி உனக் கபயமே
மேவி அவர் கிருபாசனத்தின் முன்
வேண்டிக்கொள், இது சமயமே. – ஓய்வு

2. ஆறு நாளுனக் களித்தவர், இளைப்
பாறி எழினில் களித்தவர்;
கூறும் பூரண ஆசீர்வாதத்தைக்
குறித்துணை இதற்கழைக்கிறார். – ஓய்வு

3. கர்த்தர் ஆசனம் குறுகிக்கேள் இன்று
காலை நண் பகல் மாலையும்;
சுத்தம் நாடுவோர் யாவரும் வந்து
துதி செய்யும் இத் தேவாலயம். – ஓய்வு

*–பாளையங்கோட்டை பாடல்*

**69** When all my labours and trials are o’er **பா.404**

S.S.949 10,10,10,10

1. **பொன்னகர் இன்பத்தைப் பெற்றிடுவோம்**
துன்பமும் துக்கமும் மாறியே போம்;
நன்மைச் சொரூபியை தரிசிப்போம்,
நீடுழி காலம் பேரின்பமுண்டாம்.

பேரின்பமாம், பூரிப்புண்டாம்,
பேரின்பமாம், பூரிப்புண்டாம்,
மேலுலகில் அவர் சந்நிதியில்
மேலான வாழ்வு பேரின்பமுண்டாம்.

2. மாட்சிமையான காருணியத்தால்
மோட்ச ஆனந்தத்தை அடையுங்கால்;
சாட்சாத் நல் மீட்பரை நோக்குவதால்,
நீடூழி காலம் பேரின்பமுண்டாம்.

அட்டவணை

3. அன்பராம் இஷ்டரைக் கண்டுகொள்வோம்,
இன்ப மா வாரியில் மூழ்கிடுவோம்,
என்றைக்கும் இயேசுவை ஸ்தோத்திரிப்போம்
நீடூழி காலம் பேரின்பமுண்டாம்.

## II. கிறிஸ்துவின் வாழ்க்கை

### 1. வருகை

**70** O Come O Come Emmanuel **பா.46**

A.M. 49 I *Veni Emmanuel* 10,10,10,10

1. **இம்மானுவேலே வாரும், வாருமே,**
மெய் இஸ்ரவேலச் சிறை மீளுமே;
மா தெய்வ மைந்தன் தோன்றும் வரைக்கும்
உன் ஜனம் பாரில் ஏங்கித்தவிக்கும்

மகிழ்! மகிழ்! சீயோனின் சபையே;
இம்மானுவேலின் நாள் சமீபமே.

2. ஈசாயின் வேர்த்துளிரே, வாருமே;
பிசாசின் வல்ல கோஷ்டம் நீக்குமே;
பாதாள ஆழம் நின்று ரட்சியும்,
வெம் சாவின்மேல் பேர் வெற்றி அளியும்.

3. அருணோதயமே, ஆ! வாருமே,
வந்தெங்கள் நெஞ்சை ஆற்றித் தேற்றுமே;
மந்தார ராவின் மேகம் நீக்கிடும்,
இருண்ட சாவின் நிழல் ஓட்டிடும்.

4. தாவீதின் திறவுகோலே, வாருமே,
விண் வாசலைத் திறந்து தாருமே!
ஒடுக்கமாம் நல் வழி காத்திடும்,
விசாலமாம் துர்ப்பாதை தூர்த்திடும்.

5. மா வல்ல ஆண்டவா, வந்தருளும்;
முற்காலம் சீனாய் மலைமீதிலும்
எக்காளம் மின்னலோடு தேவரீர்
பிரமாணம் இஸ்ரவேலுக்களித்தீர்.

Gotti sei Dank aller welt

**71** *Monkland, Innocent* **பா.48**

A.M. 33, 381 7,7,7,7

1. **கர்த்தருக்கு ஸ்தோத்திரம்!**
'மீட்போம்' என்ற வாசகம்
தப்பில்லாமல் நாதனார்
மீட்பரை அனுப்பினார்.

2. முற்பிதாக்கள் யாவரும்
தீர்க்கதரிசிகளும்
சொல்லி ஆசைப்பட்டது
வந்து நிறைவேறிற்று.

3. வாழ்க, என் வெளிச்சமே!
ஓசியன்னா, ஜீவனே!
என் இருதயத்திலும்
தயவாய் பிரவேசியும்.

4. உள்ளே வாரும், ராயரே
இது உம்முடையதே;
பாவமான யாவையும்
நீக்கி என்னை ரட்சியும்.

5. நீர் சாதுள்ள தயவாய்
வந்தீர்; அந்த வண்ணமாய்
இப்போதென்மேல் மெத்தவும்
நீண்ட சாந்தமாயிரும்.

அட்டவணை

6. சாத்தான் வெகு சர்ப்பனை
செய்துமே என் மனதை
நீர் எல்லா பயத்திலும்
ஆற்றித் தேற்றிக் கொண்டிரும்.

7. உம்மால் பலம் பெற்றிட
மீட்பினால் கெம்பீரிக்க
சர்ப்பத்தின் தலையை நீர்
வென்றுமே நசுக்குவீர்.

8. மீண்டும் நீர் வருகையில்
ஜீவாதிபதி, என்னில்
உந்தன் திவ்விய சாயலும்
காணக் கட்டளையிடும்.

**72** Tochter Zion freue dich **பா.49**
See the Conquering Hero 7,7,7,7,7,7

1. **களிகூரு சீயோனே,**
ஓ மகிழ், எருசலேம்!
சமாதான கர்த்தராம்
உன் ராஜா வருகிறார்;
களிகூரு சீயோனே,
ஓ மகிழ், எருசலேம்!

2. ஓசியன்னா! தாவீதின்
மைந்தனே நீர் வாழ்கவே!
உம்முடைய நித்திய
ராஜ்ஜியத்தை ஸ்தாபியும்;
ஓசியன்னா! தாவீதின்!
மைந்தனே நீர் வாழ்கவே!

அட்டவணை

3. ஓசியன்னா, ராஜாவே!
வாழ்க, தெய்வ மைந்தனே!
சாந்தமுள்ள உமது
செங்கோல் என்றும் ஆளவும்!
ஓசியன்னா, ராஜாவே!
வாழ்க தெய்வ மைந்தனே!

Hark the glad sound the Saviour comes

**73** *Bristol, Nativity* **பா.51**

A.M. 478 I, A.M. 299 II C.M.

1. **நற்செய்தி! மேசியா இதோ!**
ஆவலாய் நோக்குவோம்;
பற்றோடு ஏற்று ஆன்மாவில்
ஆனந்தம் பாடுவோம்.

2. வல்லோனால் சிறையானோரை
வல் சிறை நீக்குவார்;
நில்லாதே எவ்விரோதமும்
பொல்லாங்கை மேற்கொள்வார்.

3. நருங்குண்டோரை ஆற்றியே
நலிவை நீக்குவார்;
பரத்தின் பாக்கியசெல்வத்தால்
இரவோர் வாழ்விப்பார்.

4. ஓசன்னா! ஆர்க்கும் ஓசன்னா!
சாந்த இவ்வேந்தர்க்கும்;
இயேசுவின் இன்ப நாமமே
பாடுவார் விண்ணோரும்.

அட்டவணை

**74** Come Lord and tarry not **பா.52**

A.M. 261 *Franconia* S.M.

1. **நீர் வாரும், கர்த்தாவே;**
ராக்காலம் சென்றுபோம்;
மா அருணோதயம் காணவே
ஆனந்தம் ஆகுவோம்.

2. நீர் வாரும் பக்தர்கள்
களைத்துச் சோர்கின்றார்;
நல்லாவி மணவாட்டியும்
'நீர் வாரும்' என்கிறார்

3. நீர் வாரும் சிஷ்டியும்
தான் படும் துன்பத்தால்
ஏகோபித்தேங்கி ஆவலாய்
தவித்து நிற்பதால்

4. நீர் வாரும், ஆண்டவா!
மாற்றாரைச் சந்திப்பீர்
இருப்புக்கோலால் தண்டித்து
கீழாக்கிப் போடுவீர்.

5. நீர் வாரும் இயேசுவே
பயிர் முதிர்ந்ததே,
உம் அரிவாளை நீட்டுமேன்
மா நீதிபரரே.

6. நீர் வாரும் வையத்தில்
பேர் வாழ்வை நாட்டுவீர்;
பாழான பூமி முற்றிலும்
நீர் புதிதாக்குவீர்.

7. நீர் வாரும் ராஜாவே,
பூலோகம் ஆளுவீர்,
நீங்காத சமாதானத்தின்
செங்கோல் செலுத்துவீர்.

அட்டவணை

Lo! He Comes with clouds

**75** *Helmsley* **பா.53**

A.M. 51 II 8,7,8,7,4,7

1. **பாவிக்காய் மரித்த இயேசு**
மேகமீதிறங்குவார்;
கோடித் தூதர் அவரோடு
வந்து ஆரவாரிப்பார்;
அல்லேலூயா!
கர்த்தர் பூமி ஆளுவார்.

2. தூய வெண் சிங்காசனத்தில்
வீற்று வெளிப்படுவார்.
துன்புறுத்திச் சிலுவையில்
கொன்றோர் இயேசுவைக் காண்பார்;
திகிலோடு
மேசியா என்றறிவார்.

3. அவர் தேகம் காயத்தோடு
அன்று காணப்படுமே;
பக்தர்கள் மகிழ்ச்சியோடு
நோக்குவார்கள் அப்போதே;
அவர் காயம்
தரும் நித்திய ரட்சிப்பை.

4. உம்மை நித்திய ராஜனாக
மாந்தர் போற்றச் செய்திடும்;
ராஜரீகத்தை அன்பாக
தாங்கி செங்கோல் செலுத்தும்
அல்லேலூயா!
வல்ல வேந்தே; வந்திடும்.

**76** **கி.கீ.20**

*சங்கராபரணம்* *திஸ்ர ஏகதாளம்*

**பல்லவி**

**ஆதித் திருவார்த்தை திவ்விய அற்புதப் பாலகனாகப் பிறந்தார்;**
ஆதந் தன் பாவத்தின் சாபத்தை தீர்த்திட
ஆதிரையோரையீடேற்றிட

**அனுபல்லவி**

மாசற்ற ஜோதி திரித்துவத் தோர் வஸ்து
மரியாம் கன்னியிட முதித்து
மகிமையை மறந்து தமை வெறுத்து
மனுக்குமாரன் வேஷமாய்,
உன்ன தகஞ்சீர், முகஞ்சீர் வாசகி
மின்னுச்சீர் வாசகி, மேனி நிறம் எழும்
உன்னத காதலும் பொருந்தவே சர்வ
நன்மைச் சொரூபனார், ரஞ்சிதனார்
தாம், தாம் தன்னர வன்னர
தீம், தீம், தீமையகற்றிட
சங்கிர்த, சங்கிர்த, சங்கிர்த சந்தோ
ஷமென சோபனம் பாடவே,
இங்கிர்த, இங்கிர்த, இங்கிர்த நமது
இருதயத்திலும் எங்கும் நிறைந்திட -ஆதி

1. ஆதாம் சாதி ஏவினர்; ஆபிரகாம் விசுவாசவித்து,
யூதர் சிம்மாசனத்தாளுகை செங்கோல்
ஈசாய் வங்கிஷத்தானுதித்தார். - ஆதி

2. பூலோகப் பாவ விமோசனர், பூரண கிருபையின் வாசனர்
மேலோக இராஜாதி இராஜன் சிம்மாசனன்
மேன்மை மகிமைப் பிரதாபன் வந்தார் - ஆதி

3. அல்லேலூயா! சங்கீர்த்தனம் ஆனந்த கீதங்கள் பாடவே
அல்லைகள், தொல்லைகள் எல்லாம் நீங்கிட
அற்புதன் மெய்ப்பரன் தற்பரனார் - ஆதி

*-வேதநாயகம் சாஸ்திரிகள்*

அட்டவணை

**77** **கி.கீ.23**

*சங்கராபரணம்* *திஸ்ர ஏகதாளம்*

***பல்லவி***

**அதி – மங்கல காரணனே**
துதி – தங்கிய பூரணனே – நரர்
வாழ விண் துறந்தோர் ஏழையாய்ப் பிறந்த
வண்மையே தாரணனே! – அதி

***சரணங்கள்***

1. மதி – மங்கின எங்களுக்கும்
திதி – சிங்கினர் தங்களுக்கும் – உனின்
மாட்சியும், திவ்விய காட்சியும் தோன்றிட
வையாய் துங்கவனே! – அதி

2. முடி – மன்னர்கள் மேடையையும்,
மிகு – உன்னத வீடதையும் – எண்ணா
மாட்டிடையே பிறந் தாட்டிடையர் தொழ,
வந்தனையோ தரையில்? – அதி

3. தீய – பேய்த்திரள் ஓடுதற்கும்,
உம்பர் – வாய்திரள் பாடுதற்கும், – உனைப்
பின்பற்றுவோர் முற்றும் துன்பற்று வாழ்வதற்கும்
பெற்ற நல் கோலம் இதோ? – அதி

*– தேவவரம் முன்சி*

**78** **கி.கீ.24**

*செஞ்சுருட்டி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஆர் இவர் ஆரோ? ஆர் இவர் ஆரோ?**
ஆர் இவர்? பரன் வார்த்தை மாமிசம்
ஆயினர் இவரோ?

அட்டவணை

***சரணங்கள்***

1. ஈர் ஐந்து குணம் இல்லாதோர் போலே,
பாரினில் ஓர் எளிய கன்னிகையின்
பாலர் ஆனாரோ? -ஆர்

2. ஊரில் ஓர் இடமும் உகந்திட இல்லையோ?
சீர் அல்லாக் குடியிற் பிறந்தார் அதி
சயம் ஆனவரோ? -ஆர்

3. கர்த்தத்துவமோ காணாது தோள் மேல்
சுற்றிவைக்கப் பழந்துணியோ? இவர்
தூங்கப் புல் அணையோ? -ஆர்

4. சேனை தூதர் இதோ! சிறப்புடன் பாட
கானகக் கோனர் காண வர, இவர்
கர்த்தர் ஆவாரோ? -ஆர்

*-வேதநாயகம் சாசுதிரியார்*

**79** **கி.கீ.27**

*செஞ்சுருட்டி* *திஸ்ர ஏகதாளம்*

***பல்லவி***

**வானம் பூமியோ? பராபரன்**
மானிடன் ஆனாரோ? என்ன இது?

***அனுபல்லவி***

**ஞானவான்களே, நிதானவான்களே,-என்ன இது?-வானம்**

***சரணங்கள்***

1. பொன்னகரத் தாளும், உன்னதமே நீளும்
பொறுமைக் கிருபாசனத்துரை,
பூபதி வந்ததே அதிசயம் - ஆ! என்ன இது? - வானம்

2. சத்ய சருவேசன், துத்ய கிருபைவாசன்,
நித்ய பிதாவினோர்
கத்துவக் குமாரனோ இவர்? - ஆ! என்ன இது? -வானம்

அட்டவணை

3. மந்தைக் காட்டிலே மாட்டுக் கொட்டிலிலே
கந்தைத் துணியைப் பொதிந்த சூட்சி,
நிந்தைப் பாவிகள் சொந்தக் கண்காட்சி!
–ஆ! என்ன இது? – வானம்

4. வேறே பேரல்ல! சுரர் விண்ணவர் ஆருமல்ல;
மாறில்லாத ஈறில்லாத
வல்லமைத் தேவனே புல்லில் கிடக்கிறார்
– ஆ என்ன இது? – வானம்

5. சீயோனின் மாதே, இனி க்ஷணந்தரியாதே,
மாயமென்ன? உனக்குச் சொல்லவோ?
வந்தவர் மணவாளனல்லவோ?–ஆ! என்ன இது? – வானம்

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**80** **கி.கீ.28**

*தன்யாசி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**நன்றி செலுத்துவாயே என் மனமே நீ**
நன்றி செலுத்துவாயே.

***சரணங்கள்***

1. அன்றதம் செய்தபாவம் பொன்று நிமித்தமாக
இன்றவதாரம் செய்த இயேசுவுக்கே – நன்றி

2. தேவசேயனும் தன் சேணுலகத்தை விட்டு
ஜீவ மனிதனாகவே ஜெனித்ததாலே – நன்றி

3. அதிசயமானவர் ஆலோசனைக் கர்த்தர்
துதி பெறப் பாத்திரராம் சுதனவர்க்கே. – நன்றி

4. வல்லமையுள்ள தேவன் வானநித்திய பிதா
சொல்லரும் பரப்பொருளாம் சுதனவர்க்கே. – நன்றி

5. உன்னதத் தேவனார் தமக்கே மகிமையுடன்
இந்நிலம் சமாதானம் என்றுமுண்டாக. – நன்றி

6. ஆண்டவர் தாசரை அன்பின் பெருக்கத்தால்
ஆசீர்வதிப்பதாலே அருமையாக. – நன்றி

*–ஆ. தேவதாசன்*

அட்டவணை

**81** **கி.கீ.29**

*காபி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சமாதானம் ஓதும் ஏசு கிறிஸ்து**
இவர்தாம், இவர்தாம், இவர்தாம்

***சரணங்கள்***

1. நம தாதிப் பிதாவின் திருப்பாலர் இவர்
அனுகூலர் இவர், மனுவேலர் இவர். - சமா

2. நேய கிருபையின் ஒரு சேயர் இவர்,
பரம ராயர் இவர், நம தாயர் இவர். - சமா

3. ஆதி நரர் செய்த தீதறவே,
அருளானந்தமாய், அடியார் சொந்தமாய். - சமா

4. ஆரணம் பாடி, விண்ணோர் ஆடவே
அறிஞோர் தேடவே, இடையோர் கூடவே -சமா

5. மெய்யாகவே மேசையாவுமே
நம்மை நாடினாரே, கிருபை கூறினாரே. - சமா

6. அருளானந்த மோட்ச வழி காட்டினாரே
நிலை நாட்டினாரே, முடி சூட்டினாரே - சமா

*- வேதநாயகம் சாசுதிரியார்*

**82** **கி.கீ.31**

*கமாஸ்* *சாபுதாளம்*

***பல்லவி***

மேசியா ஏசு நாயனார் - எமை
மீட்கவே நரனாயினார்

***சரணங்கள்***

1. நேசமாய் இந்தக் காசினியோரின்
நிந்தை அனைத்தும் போக்கவே
மாசிலான் ஒரு நீசான் போலவே
வந்தார் எம் கதி நோக்கவே. - மேசியா

அட்டவணை

2. தந்தையின் சுதன் மைந்தர் பாதகம்
சகஸ்தமும் அற வேண்டியே
விந்தையால் குடில் மீது வந்தனர்
விண்ணுலகமும் தாண்டியே. – மேசியா

3. தொண்டர் வாழவும் அண்டரின் குழாம்
தோத்திரம் மிகப் பாடவும்
அண்டு பாவிகள் விண்ணடையவும்
ஆயர் தேடிக் கொண்டாடவும். – மேசியா

4. தேவனாம் நித்ய ஜீவனாம் ஒரே
திருச்சுதன் மனுவேலனார்
பாவிகள் எங்கள் பாவம் மாறவே
பார்த்திபன் தேவ பாலனாய். – மேசியா

*– ச. யோசேப்பு*

**83** **கி.கீ.71**

*கரஹப்பிரியா* *ஆதிதாளம்*

***பல்லவி***

வரவேணும், எனதரசே,
மனுவேல், இஸரேல் சிரசே.

***அனுபல்லவி***

அருணோதயம் ஒளிர் பிரகாசா,
அசரீரி ஒரே சருவேசா!

***சரணங்கள்***

1. வேதா, கருணா கரா, மெய்யான பரா பரா
ஆதார நிராதரா, அன்பான சகோதரா
தாதாவும் தாய் சகலமும் நீயே;
நாதா, உன் தாபரம் நல்குவாயே. – வர

அட்டவணை

2. படியோர் பவ மோசனா, பரலோக சிம்மாசனா,
முடியா தருள் போசனா, முதன் மா மறை வாசனா
இடையர் குடிலிடை மேவி எழுந்தாய்,
இமையவர் அடி தொழு மேன்மையின் எந்தாய். – வர

3. வானோர் தொழும் நாதனே, மறையாகம போதனே
கானாவின் அதீதனே, கலிலேய வினோதனே
ஞானா கரமே, நடு நிலை யோவா,
நண்பா, உனத நன்மையின் மகா தேவா! – வர

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**84** **கி.கீ.72**

*மோகனம்* *ஆதிதாளம்*

1. **சாலேமின் ராசா, சங்கையின் ராசா,**
ஸ்வாமி, வாருமேன் – இந்தத்
தாரணி மீதினில் ஆளுகை செய்திடச் சடுதி வாருமேன்
– சாலேமின்

2. சீக்கிரம் வருவோமென்றுரைத்துப்போன
செல்வக்குமாரனே, – இந்தச்
சீயோனின் மாதுகள் தேடித்திரிகின்ற செய்தி கேளீரோ?
– சாலேமின்

3. எட்டி எட்டி உம்மை அண்ணாந்து பார்த்துக்
கண்பூத்துப் போகுதே; – நீர்
சுட்டிக் காட்டிப்போன வாக்குத்தத்தம் நிறைவேறலாகுதே
– சாலேமின்

4. நங்கை எருசலேம் பட்டணம் உம்மை
நாடித் தேடுதே; – இந்த
நானிலத்திலுள்ள ஜீவப்பிராணிகள் தேடிவாடுதே
– சாலேமின்

5. சாட்சியாகச் சுபவிசேஷம் தாரணிமேவுதே; – உந்தஞ்
சாட்சிகளுடைய இரத்தங்களெல்லாம்
தாவிக்கூவுதே – சாலேமின்

*– அருளானந்தம் பிரசங்கியார்*

அட்டவணை

**85** **கி.கீ.73**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**என்றைக்கு காண்பேனோ, என் ஏசு தேவா?**

***அனுபல்லவி***

குன்றாத தேவ குமாரனைத் தானே நான் - என்

***சரணங்கள்***

1. பரகதி திறந்து, பாரினில் பிறந்து,
நரர் வடிவாய், வந்த ராஜ உல்லசானை. - என்

2. ஐந்தப்பம் கொண்டு அநேகருக்குப் பகிர்ந்து,
சிந்தையில் உவந்தவ சீகர சிநேகனை. - என்

3. மாசிலாத நாதன், மாமறை நூலன்,
ஏசுவின் திருமுக தரிசனம் நோக்கி நான். - என்

*-வேதநாயகம் சாசுதிரியார்*

**86** **கி.கீ.74**

*அசாவேரி* *திஸ்ர ஏகதாளம்*

***பல்லவி***

**எனது கர்த்தரின் ராஜரீக நாள்**
எப்போ வருகுமோ?
ஏங்கும் என் கலி நீங்க மகிழ்ச்சி
எப்போ பெருகுமோ?

***அனுபல்லவி***

மனிதசுதனின் அடையாளம் விண்ணில் காணும், என்றாரே,
வல்லமையோடு மகிமையாய்த்தோன்றி, வருவேன் என்றாரே
- எனது

அட்டவணை

*சரணங்கள்*

1. தேவ தூதரின் கடைசி எக்காளம் தொனி முழங்கவே;
ஜெகத்தில் ஏசுவைப் பற்றி மரித்தோர் உயிர்த்தெழும்பவே;
ஜீவனுள்ளோறும் அவருடன் மறு ரூபமாகவே;
ஜெகத்தில் பக்தர்கள் கர்த்தரிடத்துக் கெழுந்து போகவே
– எனது

2. தூதர் எக்காளத் தொனியில் என்னிடம் சேர்ப்பேன் என்றாரே;
சோதனை காலந்தனில் தப்பவுன்னைக் காப்பேன் என்றாரே;
பாதக மனுஜாதி வேதனை அடையும் என்றாரே;
பாவ மனுசன் தோன்றி நாசமாய்ப் போவான் என்றாரே
– எனது

3. ஜாதிகட்குக் கொடியாய் ஈசாயின் வேரன்றேறுவார்;
சகலரும் அவர் கொடியின் கீழ் வந்து பணிந்து சூழுவார்;
நீதியாய்த் தானே மேசியா எங்கும் ஆளுகை செய்வார்;
நித்தம் பிரபுக்களும் நியாயமாய்த் துரைத்தனம் செய்வார்.
– எனது

4. எருசலேமிலிருந்து ஜீவ நதிகள் ஓடுமே;
ஏழைகள் மன மகிழ்ந்து கர்த்தரை ஏத்திப் பாடுமே;
வருஷமாயிரம் அளவும் பூமியில் பலன்கள் நீடுமே;
வானராச்சிய சேனைகள் யாவும் வந்து கூடுமே. – எனது

5. சஞ்சலங்களும் தவிப்புகள் யாவும் ஓடிப் போகுமே;
சந்தோஷத்தோடு மகிழ்ச்சியும் வந்து சார்ந்து பிடிக்குமே;
நெஞ்ச மகிழ்ந்து நீதிமான்களின் வாய் துதிக்குமே;
நித்திய ஜீவனைப் பெற என்றன் மனம் துடிக்குமே.
– எனது

*–பாளையங்கோட்டை பாடல்*

**87** **கி.கீ.76**

*காபி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**வையகந்தனை நடுத் தீர்க்கவே இயேசு**
வல்லவர் வருகிறார் திருமறைக் கேற்க!

அட்டவணை

*அனுபல்லவி*

பொய்யுலகோர்களின் கண்களுளும் பார்க்க
பொற்பதி தனில் பரன் சேயரைச் சேர்க்க

*சரணங்கள்*

1. வானங்கள் மடமடப்போ டொழிந்திடவே;
மாகிதலம் அதிர்ச்சியாய்த் தானடுங்கிடவே;
பானுடன் மதி யுடு அனைத்தும் மங்கிடவே;
பஞ்சபூதியங்களுந் தானழிந்திடவே. – வையகந்

2. முக்கிய தூதனெக்காளமே தொனிக்க,
முதல் மரித்தோரெல்லாந் தாமெழுந்திருக்க,
ஆக்கணமுயிருள்ளோர் மறு உருத்தரிக்க,
ஆண்டவர் வருகிறார், பக்தர்கள் களிக்க. – வையகந்

3. யாவரின் சிந்தை செய்கையும் வெளிப்படற்–கு
இரண்டு புத்தகங்களுந் திறந்தவரவர்க்குப்,
பூவுலகினிலவர் நடந்து வந்ததற்குப்
புண்ணியனளவுடன் பலனளிப்பதற்கு. – வையகந்

4. அடைக்கலன் யேசுவை அறிந்தவர் நாமம்,
அழிந்திடாதவர்களின் வாழ்வது ஷேமம்;
படைத்திடுவாயிந்தக் கணமுனை, ஷாமம்
பற்றிடவா கூடுமே திடுக்கெனவே, நம். – வையகந்

*–ஞா. சாமுவேல்*

**88** **நூ.கீ.74**

1. **மேலோக ராஜன் வருங்காலமாகுது**
சாலோக மகிமை பெறலாம் பாவி ஓடிவா!
2. பாவம் நித்தமும் மனம் நோகச் செய்யுது
பரிசுத்தரித்தரையில் வந்தால் முற்றும் நீங்கிடும்.
3. இரவு போயிற்று பகல் சமீபமாயிற்று
இருளின் செய்கை தள்ளி ஒளியின் கவசம் தரிப்போம்.
4 குடிவெறி வேண்டாம் கோள் குண்டணி வேண்டாம்.
பகலின் பிள்ளைகள்போல் சீராய் நடக்கக்கடவோம்.

அட்டவணை

5 எருசலேம் நகர் மகா அரசர் மாளிகை
அதை ஏறிட்டுப் கண்ணாலே பார்த்தால் ஏக்கம் தீருமே
6 ஏழுடுகையில் மார்பருகே பொற்கச்சை
வெண்பஞ்சு நிறமாம் சிரசு ஏசுவுக்குண்டு.
7 தூதர் சேனைகள் துதிபாடும் ஓசையால்
இப்பூதலம் திடுக்கிட வானோர்கள் மகிழ.
8. ஆசனங்களில் ஏசு தாசரிருப்பார்
அதன் மத்தியிலோர் ஆசனம் இம்மானுவேலர்க்கு.
9. பார்க்கக் கூடாத பரிசுத்த ஜோதியாய்
பரலோக ராஜன் வீற்றிருப்பார் தூதர்கள் சூழ.
10. ஒப்பார்சின் தங்கக் கச்சை இடையிற் கட்டியே
உம்பர்கள் ஒழுங்காக நின்று கீதம் பாடுவார்.

**89** **கி.கீ.19**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

1. **மன்னுயிர்க்காகத் தன்னுயிர் விடுக்க**
வல்ல பராபரன் வந்தார், வந்தார். -பாவீ
2. இந்நிலம் புரக்க, உன்னதத் திருந்தே
ஏக பராபரன் வந்தார், வந்தார். -பாவீ
3. வானவர் பணியுஞ் சேனையின் கருத்தர்,
மகிமைப் பராபரன் வந்தார், வந்தார். -பாவீ
4. நித்திய பிதாவின் நேய குமாரன்
நேமி அனைத்தும் வாழ வந்தார், வந்தார். -பாவீ
5. மெய்யான தேவன், மெய்யான மனுடன்
மேசியா, ஏசையா வந்தார், வந்தார் -பாவீ
6. தீவினை நாசர், பாவிகள் நேசர்
தேவ கிறிஸ்தையா வந்தார், வந்தார். -பாவீ
7. ஜெய அனுகூலர், திவ்விய பாலர்
திரு மனுவேலனே வந்தார், வந்தார். -பாவீ

*-வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

# 2. பிறப்பு

The People that in darkness sat

**90** *Dundee* **பா.55**

A.M. 221 C.M.

1. **அருளின் ஒளியைக் கண்டார்**
இருளின் மாந்தரே;
மருள் மரண மாந்தரில்
திரு ஒளி வீச.

2. ஜாதிகளைத் திரளாக்கி
நீதி மகிழ்ச்சியால்
கோதில் அறுப்பில் மகிழ
ஜோதியாய்த் தோன்றினார்.

3. கர்த்தன், பிறந்த பாலகன்
கர்த்தத்துவமுள்ளோன்;
சுத்த அவரின் நாமமே
மெத்த அதிசயம்.

4. ஆலோசனையின் கர்த்தனே
சாலவே வல்லோனே
பூலோக சமாதானமே
மேலோகத் தந்தையே.

5. தாவீதின் சிங்காசனத்தை
மேவி நிலைகொள்ள
கூவி நியாயம் நீதியால்
ஏவி பலம் செய்வார்.

அட்டவணை

**91** Let us now go to Bethlehem **பா.57**

*Carol* 8,6,8,6,6,6,8,6

1. **இப்போ நாம் பெத்லெகேம் சென்று**
ஆச்சரிய காட்சியாம்
பாலனான நம் ராஜாவும்
பெற்றோரும் காணலாம்;
வான் ஜோதி மின்னிட
தீவிரித்துச் செல்வோம்.
தூதர் தீங்கானம் கீதமே
கேட்போம் இத்தினமாம்.

2. இப்போ நாம் பெத்லெகேம் சென்று
ஆச்சரிய காட்சியாம்
பாலனான நம் ராஜாவும்
பெற்றோரும் காணலாம்;
தூதரில் சிறியர்
தூய தெய்வ மைந்தன்;
உன்னத வானலோகமே
உண்டிங் கவருடன்.

3. இப்போ நாம் பெத்லெகேம் சென்று
ஆச்சரிய காட்சியாம்
பாலனான நம் ராஜாவும்
பெற்றோரும் காணலாம்;
நம்மை உயர்த்துமாம்
பிதாவின் மகிமை!
முந்தி நம்மில் அன்புகூர்ந்தார்;
போற்றுவோம் தெய்வன்பை.

அட்டவணை

4. அப்போ நாம் ஏகமாய்க் கூடி
விஸ்வாசத்தோடின்றே
சபையில் தங்கும் பாலனின்
சந்நிதி சேர்வோமே;
மகிழ்ந்து போற்றுவோம்
ஜோதியில் ஜோதியே!
கர்த்தா! நீர் பிறந்த தினம்
கொண்டாடத் தகுமே.

**92** A.M.63 *Wareham* L.M. **பா.58**

1. **இரக்கமுள்ள மீட்பரே,**
நீர் பிறந்த மா நாளிலே
ஏகமாய்க் கூடியே நாங்கள்
ஏற்றும் துதியை ஏற்பீரே.

2. பெத்தலை நகர்தனிலே
சுத்த மா கன்னிமரியின்
புத்திரனாய் வந்துதித்த
அத்தனேமெத்த ஸ்தோத்திரம்!

3. ஆதித் திருவார்த்தையான
கோதில்லா ஏசு கர்த்தனே,
மேதினியோரை ஈடேற்ற
பூதலம் வந்தீர் ஸ்தோத்திரம்!

4. பாவம் சாபம் யாவும் போக்க,
பாவிகளைப் பரம் சேர்க்க,
ஆவலுடன் மண்ணில் வந்த
அற்புத பாலா ஸ்தோத்திரம்!

5. உன்னதருக்கே மகிமை,
உலகினில் சமாதானம்;
இத்தரை மாந்தர்மேல் அன்பு
உண்டானதும்மால், ஸ்தோத்திரம்!

6. பொன் செல்வம், ஆஸ்தி மேன்மையும்
பூலோக பொக்கிஷங்களும்
எங்களுக்கு எல்லாம் நீரே
தங்கும் நெஞ்சத்தில் ஸ்தோத்திரம்!

அட்டவணை

**93** Silent Night Holy Night-Carol **பா.59**

1. **ஒப்பில்லா – திரு இரா!**
இதில் தான் மா பிதா
ஏக மைந்தனை லோகத்துக்கு
மீட்பராக அனுப்பினது
அன்பின் அதிசயமாம்!
அன்பின் அதிசயமாம்!

2. ஒப்பில்லா – திரு இரா!
யாவையும் ஆளும் மா
தெய்வ மைந்தனார் பாவிகளை
மீட்டு விண்ணுக்குயர்த்த தம்மை
எத்தனை தாழ்த்துகிறார்!
எத்தனை தாழ்த்துகிறார்!

3. ஒப்பில்லா – திரு இரா!
ஜென்மித்தார் மேசியா;
தெய்வ தூதரின் சேனைகளை
நாமும் சேர்ந்து, பராபரனை
பூரிப்பாய் ஸ்தோத்திரிப்போம்!
பூரிப்பாய் ஸ்தோத்திரிப்போம்!

**94** O Little town of Bethlehem **பா.60**

*Forest Green, Christmas Carol* D.C.M.

1. **ஓ பெத்லகேமே சிற்றூரே,**
என்னே உன் அமைதி!
அயர்ந்தே நித்திரை செய்கையில்
ஊர்ந்திடும் வான் வெள்ளி
விண் வாழ்வின் ஜோதி தோன்றிற்றே
உன் வீதியில் இன்றே;
நல்லோர் நாட்டம் பொல்லார் கோட்டம்
உன் பாலன் இயேசுவே.

அட்டவணை

2. கூறும், ஓ விடி வெள்ளிகாள்!
இம்மைந்தன் ஜன்மமே;
விண் வேந்தர்க்கு மகிமையே,
பாரில் அமைதியாம்
மா திவ்விய பாலன் தோன்றினார்
மண் மாந்தர் தூக்கத்தில்,
விழித்திருக்க தூதரும்
அன்போடு வானத்தில்.

3. அமைதியாய் அமைதியாய்
விண் ஈவு தோன்றினார்
மாந்தர்க்கு ஸ்வாமி ஆசியும்
அமைதியால் ஈவார்;
கேளாதே அவர் வருகை
இப்பாவ லோகத்தில்;
மெய் பக்தர் ஏற்பார் ஸ்வாமியை
தம் சாந்த ஆன்மாவில்.

4. வேண்ட நற் சிறு பாலரும்
இத்தூய பாலனை;
அழைக்க ஏழை மாந்தரும்
இக்கன்னி மைந்தனை.
விஸ்வாசமும் நம் பாசமும்
வரவைப் பார்க்கவே,
இராவை நீக்கித் தோன்றுவார்
இம்மாட்சி பாலனே.

5. பெத்லெகேம் தூய பாலனே
இறங்கி வருவீர்;
ஜனிப்பீர் எங்களில் இன்றும்
எம் பாவம் நீக்குவீர்;
நற்செய்தி இவ்விழாதன்னில்
இசைப்பார் தூதரே;
ஆ வாரும், வந்து தங்கிடும்
இம்மானுவேலரே.

அட்டவணை

O Come all ye faithful

**95** *Adeste fideles Irregular* **பா.61**

A.M.59

1. **பக்தரே வாரும்**
ஆசை ஆவலோடும்;
நீர் பாரும், நீர் பாரும் இப்பாலனை
வானோரின் ராஜன்
கிறிஸ்து பிறந்தாரே!

சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
சாஷ்டாங்கம் செய்ய வாரும்,
இயேசுவை.

2. தேவாதி தேவா,
ஜோதியில் ஜோதி,
மானிட தன்மை நீர் வெறுத்திலீர்.
தெய்வ குமாரன்,
ஒப்பில்லாத மைந்தன்!

3. மேலோகத்தாரே,
மா கெம்பீரத்தோடு,
ஜென்ம நற்செய்தி பாடிப் போற்றுமேன்;
விண்ணில் கர்த்தா நீர்
மா மகிமை ஏற்பீர்!

4. இயேசுவே, வாழ்க!
இன்று ஜென்மித்தீரே,
புகழும் ஸ்துதியும் உண்டாகவும்;
தந்தையின் வார்த்தை
மாம்சம் ஆனார் பாரும்.

அட்டவணை

Hark! the herald angels sing

**96** *Mendelssohn* **பா.62**

A.M.60 7,7,7,7,D

1. **கேள்! ஜென்மித்த ராயர்க்கே**
விண்ணில் துத்தியம் ஏறுதே;
அவர் பாவ நாசகர்,
சமாதான காரணர்;
மண்ணோர் யாரும் எழுந்து
விண்ணோர் போல் கெம்பீரித்து
பெத்லெகேமில் கூடுங்கள்,
ஜென்ம செய்தி கூறுங்கள்

கேள்! ஜென்மித்த ராயர்க்கே
விண்ணில் துத்தியம் ஏறுதே.

2. வானோர் போற்றும் கிறிஸ்துவே,
லோகம் ஆளும் நாதரே,
ஏற்ற காலம் தோன்றினீர்,
கன்னியிடம் பிறந்தீர்,
வாழ்க, நர தெய்வமே
அருள் அவதாரமே!
நீர் இம்மானுவேல், அன்பாய்
பாரில் வந்தீர் மாந்தனாய்.

3. வாழ்க, சாந்த பிரபுவே
வாழ்க, நீதி சூரியனே!
மீட்பராக வந்தவர்,
ஒளி ஜீவன் தந்தவர்;
மகிமையை வெறுத்து;
ஏழைக்கோலம் எடுத்து,
சாவை வெல்லப் பிறந்தீர்
மறு ஜென்மம் அளித்தீர்.

அட்டவணை

**97** *Clarion* **பா.64**
A.M.634 8,7,8,7

1. **திவ்விய பாலன் பிறந்தீரே**
கன்னி மாதா மைந்தன் நீர்
ஏழைக் கோலம் எடுத்தீரே;
சர்வ லோகக் கர்த்தன் நீர்.

2. பாவ மாந்தர் மீட்புக்காக
வான மேன்மை துறந்தீர்;
திவ்விய பாலா, தாழ்மையாக
மண்ணில் தோன்றி ஜெனித்தீர்.

3. லோக ராஜா வாழ்க; வாழ்க
செங்கோல் தாங்கும் அரசே!
பூமியெங்கும் ஆள்க, ஆள்க
சாந்த பிரபு, இயேசுவே!

4. தேவரீரின் ராஜ்யபாரம்
நித்திய காலமுள்ளது;
சர்வ லோக அதிகாரம்
என்றும் நீங்கமாட்டாது.

5. வல்ல கர்த்தா பணிவோடு
ஏக வாக்காய்ப் போற்றுவோம்,
நித்திய தாதா பக்தியோடு
நமஸ்காரம் பண்ணுவோம்.

6. ஸ்தோத்திரம், கர்த்தாதி கர்த்தா,
ஞானத்துகெட்டாதவர்;
ஸ்தோத்திரம், ராஜாதி ராஜா,
ஆதியந்தமற்றவர்.

அட்டவணை

**98** In the bleak mid-winter **பா.65**

S.P.75 *Cranharm* 6,5,6,5,6,5,6,3

1. **நடுக் குளிர் காலம்**
கடும் வாடையாம்;
பனிக்கட்டி போலும்
குளிரும் எல்லாம்.
மூடுபனி ராவில்
பெய்து மூடவே;
நடுக் குளிர் காலம்
முன்னாளே.

2. வான் புவியும் கொள்ளா
ஸ்வாமி ஆளவே,
அவர்முன் நில்லாது
அவை நீங்குமே;
நடுக் குளிர் காலம்
தெய்வப் பாலர்க்கே
மாடு தங்கும் கொட்டில்
போதுமே.

3. தூதர் பகல் ராவும்
தாழும் அவர்க்கே,
மாதா பால் புல் தாவும்
போதுமானது;
கேருபின் சேராபின்
தாழும் அவர்க்கே
தொழும் ஆடுமாடும்
போதுமே.

4. தூதர் தலைத்தூதர்
விண்ணோர் திரளும்,
தூய கேரூப் சேராப்
சூழத் தங்கினும்;
பாக்கிய கன்னித் தாயே
நேச சிசு தாள்
முக்தி பக்தியோடு
தொழுதாள்.

அட்டவணை

5. ஏழை அடியேனும்
யாது படைப்பேன்;
மந்தை மேய்ப்பனாயின்
மறி படைப்பேன்;
ஞானி ஆயின் ஞானம்
கொண்டு சேவிப்பேன்;
யானோ எந்தன் நெஞ்சம்
படைப்பேன்.

**99** It came upon the mid-nigh clear **பா.66**

S.P.76 *Noel* D.C.M.

1. **நள்ளிரவில் மா தெளிவாய்**
மாண் பூர்வ கீதமே
விண் தூதர் வந்தே பாடினார்
பொன் வீணை மீட்டியே;
"மாந்தர்க்குச் சாந்தம் நல் மனம்
ஸ்வாமி அருளாலே"
அமர்ந்தே பூமி கேட்டதாம்
விண் தூதர் கீதமே.

2. இன்றும் விண் விட்டுத் தூதர்கள்
தம் செட்டை விரித்தே,
துன்புற்ற லோகம் எங்குமே
இசைப்பார் கீதமே;
பூலோகக் கஷ்டம் தாழ்விலும்
பாடுவார் பறந்தே;
பாபேல் கோஷ்டத்தை அடக்கும்
விண் தூதர் கீதமே.

அட்டவணை

3. விண்ணோரின் கீதம் கேட்டுப் பின்
ஈராயிரம் ஆண்டும்,
மண்ணோரின் பாவம் பகை போர்
பூலோகத்தை இன்றும்
வருந்தும்; மாந்தர் கோஷ்டத்தில்
கேளார் அக்கானமே
போர் ஓய்ந்தமர்ந்து கேட்டிடும்
விண் தூதர் கீதமே.

4. பார் வாழ்க்கையின் மா பாரத்தால்
நைந்து தவிப்போரே,
சோர்ந்தே போய்ப்பாதை நகர்ந்து
தள்ளாடிடுவோரே,
நோக்கும், இதோ உதித்ததே
மா நற் பொற் காலமே!
நோவை மறந்து கேட்டிடும்
விண் தூதர் கீதமே.

5. தோன்றிடும் இதோ சீக்கிரம்
பேரின்ப காலமே!
சான்றோராம் தீர்க்கர் ஆண்டாண்டும்
உரைத்த காலமே!
போர் ஓய்ந்து பூமி செழிக்கும்
பூர்வ மாண்போடுமே
பாரெங்கும் பரந்தொலிக்கும்
விண் தூதர் கீதமே.

**100** Unto us a Boy is born **பா.68**

S.P.385 *Omega And Alpha* 7,6,7,7

1. பிறந்தார் ஓர் பாலகன்
படைப்பின் கர்த்தாவே;
வந்தார் பாழாம் பூமிக்கு
எத்தேசம் ஆளும் கோவே.

அட்டவணை

2. ஆடும் மாடும் அருகில்
அவரைக் கண்ணோக்கும்
ஆண்டவர் என்றறியும்
ஆவோடிருந்த பாலன்.

3. பயந்தான் ஏரோதுவும்
பாலன் ராஜன் என்றே;
பசும் பெத்லேம் பாலரை
பதைபதைக்கக் கொன்றே.

4. கன்னி பாலா வாழ்க நீர்!
நன்னலமாம் அன்பே!
பண்புடன் தந்தருள்வீர்
விண் வாழ்வில் நித்திய இன்பே.

5. ஆதி அந்தம் அவரே,
ஆர்ப்பரிப்போம் நாமே;
வான் கிழியப் பாடுவோம்
விண் வேந்தர் ஸ்தோத்ரம் இன்றே.

Christians awake! salute the happy Morn

**101** *Stock Port, Yorkshire* **பா.71**

S.P.73, A.M. 61 10,10,10,10,10,10

1. **'மெய் பக்தரே', நீர் விழித்தெழும்பும்,**
சந்தோஷமாய் இந்நாள் வாழ்த்திடும்;
இன்றைக்கு லோக மீட்பர் ஜென்மித்தார்
விண்ணோர் இவ்விந்தையைக் கொண்டாடினார்
கர்த்தாதி கர்த்தர் மானிடனானார்
ரட்சணிய கர்த்தாவகத் தோன்றினார்.

அட்டவணை

2. இதோ! நற்செய்தி கேளும்; இன்றைக்கே
இம்மானுவேல் தாவீதின் ஊரிலே
பூலோக மீட்பராகப் பிறந்தார்;
எல்லாருக்கும் சந்தோஷம் நல்குவார்
என்றே ஓர் தூதன் பெத்லேம் மேய்ப்பர்க்கே
இராவில் தோன்றி மொழிந்திட்டானே.

3. அந்நேரம் வானோர் கூட்டம் மகிழ்ந்து
ஆனந்தப் பாட்டைப் பாடி இசைந்து,
'விண்ணில் கர்த்தாவுக்கு மா துதியும்,
மண்ணில் நல்லோர்க்குச் சமாதானமும்'
என்றல்லேலூயா பாடி வாழ்த்தினார்,
தெய்வீக அன்பின் மாண்பைப் போற்றினார்.

4. இச்செய்தி கேட்ட மேய்ப்பர் ஊருக்கு
அற்புத காட்சி காண விரைந்து,
யோசேப்புடன் தாய் மரியாளையும்
முன்னணைமீது தெய்வ சேயையும்,
கண்டே தெய்வன்பை எண்ணிப் போற்றினார்
ஆனந்தமாய் தம் மந்தைக் கேகினார்.

5. கெட்டுப்போனோரை மீட்ட நேசமாம்
உன்னத அன்பைச் சிந்தை செய்வோம் நாம்;
தம் ஜென்மமுதல் சாவுமட்டுக்கும்
அப்பாலன் செய்த தெய்வ வாழ்க்கையும்
அன்போடு தியானம் செய்து வருவோம்,
நம் மீட்பர் பின்னே செல்ல நாடுவோம்.

6. அப்போது வான சேனைபோல் நாமும்
சங்கீதம் பாடலாம் எக்காலமும்;
இந்தக் கெம்பீர நாள் பிறந்தவர்
அந்நாள் நம்மேல் தம் ஜோதி வீசுவார்;
நம் ராயன் அன்பால் ரட்சிப்படைந்தோம்;
அவரின் நித்திய துதி பாடுவோம்.

அட்டவணை

While Shepherds Watched Their Flocks

**102** *Winchester Old, Northrop* **பா.72**

A.M. 62 C.M.

1. **ராக்காலம் பெத்லேம் மேய்ப்பர்கள்**
தம் மந்தை காத்தனர்;
கர்த்தாவின் தூதன் இறங்க;
விண் ஜோதி கண்டனர்.

2. அவர்கள் அச்சங் கொள்ளவும்
விண் தூதன், திகில் ஏன்?
எல்லாருக்கும் சந்தோஷமாம்
நற்செய்தி கூறுவேன் .

3. தாவீதின் வம்சம் ஊரிலும்,
மெய் கிறிஸ்து நாதனார்
பூலோகத்தார்க்கு ரட்சகர்
இன்றைக்குப் பிறந்தார்

4. இதுங்கள் அடையாளமாம்
முன்னணை மீது நீர்
கந்தை பொதிந்த கோலமாய்
அப்பாலனைக் காண்பீர்.

5. என்றுரைத்தான்; அக்ஷணமே
விண்ணோராம் கூட்டத்தார்
அத்தூதனோடு தோன்றியே
கர்த்தாவைப் போற்றினார்.

6. 'மா உன்னதத்தில் ஆண்டவா
நீர் மேன்மை அடைவீர்;
பூமியில் சமாதானமும்
நல்லோர்க்கு ஈகுவீர்'.

அட்டவணை

Once in Royal David's City

**103** *Irby* **பா.73**

A.M.329 8,7,8,7,7,7

1. **ராஜன் தாவீதூரிலுள்ள**
மாட்டுக் கொட்டில் ஒன்றிலே
கன்னி மாதா பாலன் தன்னை
முன்னணையில் வைத்தாரே,
மாதா, மரியம்மாள் தான்;
பாலன், இயேசு கிறிஸ்துதான்.

2. வானம் விட்டுப் பூமி வந்தார்
மா கர்த்தாதி கர்த்தரே;
அவர் வீடோ மாட்டுக் கொட்டில்,
தொட்டிலோ முன்னணையே,
ஏழையோடு ஏழையாய்
வாழ்ந்தார் பூவில் தாழ்மையாய்

3. ஏழையான மாதாவுக்கு
பாலனாய்க் கீழ்ப்படிந்தார்;
பாலிய பருவம் எல்லாம் அன்பாய்
பெற்றோர்க்கு அடங்கினார்,
அவர்போல் கீழ்ப்படிவோம்,
சாந்தத்தோடு நடப்போம்.

4. பாலர்க்கேற்ற பாதை காட்ட
பாலனாக வளர்ந்தார்;
பலவீன மாந்தன் போல
துன்பம் துக்கம் சகித்தார்
இன்ப துன்ப நாளிலும்
துணை செய்வார் நமக்கும்.

அட்டவணை

5. நம்மை மீட்ட நேசர் தம்மை
கண்ணால் கண்டு களிப்போம்;
அவர் தாமே மோக்ஷ லோக
நாதர் என்று அறிவோம்
பாலரை அன்பாகவே
தம்மிடத்தில் சேர்ப்பாரே.

6. மாட்டுத் தொழுவத்திலல்ல
தெய்வ ஆசனத்திலும்
ஏழைக் கோலமாக அல்ல
ராஜ கிரீடம் சூடியும்,
மீட்பர் வீற்றிருக்கின்றார்
பாலர் சூழ்ந்து போற்றுவர்.

Alway in a manger

**104** *Irby* **பா.244**

A.M.353 11,11,11,11

1. **பார், முன்னணை ஒன்றில் தொட்டில் இன்றியே**
பாலனாம் நம் இயேசு கிடந்தனரே;
வெளியில் புல்மீது தூங்கும் பாலன்தாம்
காண மின்னிட்டதே வான் வெள்ளிகள்தாம்.

2. மா, மா, எனும் சத்தம் கேட்டு விழிப்பார்,
ஆயின் பாலன் இயேசு அழவே மாட்டார்;
நான் நேசிக்கும் நாதர்; நீர் நோக்கிப் பார்ப்பீர்
தூக்கத்தில் நீர் தங்கி ராவெல்லாம் காப்பீர்.

3. என் நாதா, என்றும் நீர் என்னை நேசிப்பீர்,
என்னோடு தரித்தே அன்பாய் அணைப்பீர்
உம் பாலர் தம்மை நீர் ஆசீர்வதித்தே
சேர்த்திடும் விண் வீட்டில் தூயோராக்கியே.

**105** **கி.கீ.32**

*சங்கராபரணம்* *ஏகதாளம்*

1. **பெத்தலெகேம் ஊரோரம் சத்திரத்தை நாடிக்**
   கர்த்தன் இயேசு பாலனுக்கு துத்தியங்கள் பாடி
   பக்தியுடன் இத்தினம் வா ஓடி – பெத்தலெகேம்

2. காலம் நிறைவேறின போதிஸ்திரியின் வித்து
   சீலகன்னி கர்ப்பத்தில் ஆவியால் உற்பவித்துப்
   பாலனான யேசுநமின் சொத்து – பெத்தலெகேம்

3. எல்லையில்லா ஞானபரன் வெல்லை மலையோரம்
   புல்லனையிலே பிறந்தார் இல்லமெங்கும் ஈரம்
   தொல்லை மிகும் அவ்விருட்டு நேரம் – பெத்தலெகேம்

4. வான் புவி வாழ் ராஜனுக்கு மாட்டகந்தான் வீடோ
   வானவர்க்கு வாய்த்த மெத்தை வாடின புல்பூண்டோ
   ஆன பழங் கந்தை என்ன பாடோ? – பெத்தலெகேம்

5. அந்தரத்தில் பாடுகின்றார் தூதர் சேனை கூடி
   மந்தை ஆயர் ஓடுகின்றார் பாடல் கேட்கத் தேடி
   இன்றிரவில் என்ன இந்த மோடி – பெத்தலெகேம்

6. ஆட்டிடையர் அஞ்சுகிறார் அவர் மகிமை கண்டு
   அட்டியின்றி காபிரியேல் சொன்ன செய்தி கொண்டு
   நாட்டமுடன் ரட்சகரைக் கண்டு – பெத்தலெகேம்

7. இந்திரியுடு கண்டரசர் மூவர் நடந்தாரே
   சந்திரத் தூபம் போளம் வைத்துச் சுதனைப் பணிந்தாரே
   விந்தையது பார்க்கலாம் வா நேரே – பெத்தலெகேம்

**106** **கி.கீ.33**

*சரசாங்கி* *திஸ்ர ஏகதாளம்*

***பல்லவி***

**பெத்தலையில் பிறந்தவரைப்**
போற்றித் துதி மனமே – இன்னும்

அட்டவணை

***சரணங்கள்***

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவ வல்லவர் – இங்கு
   தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார். – பெத்தலையில்

2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார் – இங்கு
   பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார் – பெத்தலையில்

3. முன்பு அவர் சொன்னபடி முடிப்பதற்காக – இங்கு
   மோட்சம் விட்டுத் தாழ்ச்சியுள்ள முன்னணையிலே – பெத்தலையில்

4. ஆவிகளின் போற்றுதலால் ஆனந்தங்கொண்டோர் – இங்கு
   ஆக்களுட சத்தத்துக்குள் அழுது பிறந்தார் – பெத்தலையில்

5. இந்தடைவாய் அன்பு வைத்த எம்பெருமானை – நாம்
   எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே – பெத்தலையில்

*– யோ. பால்மர்*

**107** **கி.கீ.34**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஆர் இவர் ஆராரோ – இந்த – அவனியோர் மாதிடமே**
ஆனடை குடிலிடை மோனமாய் உதித்த இவ்வற்புதப் பாலகனார்?

***சரணங்கள்***

1. பாருருவாகுமுன்னே – இருந்த
   பரப்பொருள் தானிவரோ?
   சீருடன் புவி , வான் , அவை பொருள் யாவையுஞ்
   சிருட்டித்த மாவலரோ? – ஆர்

2. மேசியா இவர்தானோ? – நம்மை
   மேய்த்திடும் நரர்கோனோ?
   ஆசையாய் மனிதருக்காய் மரித்திடும் அதி
   அன்புள்ள மனசானோ? – ஆர்

அட்டவணை

3. தித்திக்குந் தீங்கனியோ? – நமது
தேவனின் கண்மணியோ?
மெத்தவே உலகிருள் நீக்கிடும் அதிசய
மேவிய விண்ணொளியோ? – ஆர்

4. பட்டத்துத் துரைமகனோ? – நம்மைப்
பண்புடன் ஆள்பவனோ?
கட்டளை மீறிடும் யாவர்க்கும் மன்னிப்புக்
காட்டிடுந் தாயகனோ? – ஆர்

5. ஜீவனின் அப்பமோதான்? – தாகம்
தீர்த்திடும் பானமோதான்?
ஆவலாய் ஏழைகள் அடைந்திடும் அடைக்கல
மானவர் இவர்தானோ? – ஆர்

**108** **கி.கீ.35**

*கரஹரப்ரியை* *ஆதிதாளம்*

***பல்லவி***

ஆ! அம்பர உம்பரும் புகழுந்திரு
ஆதிபன் பிறந்தார்

***அனுபல்லவி***

ஆதிபன் பிறந்தார் – அமலாதிபன் பிறந்தார் –ஆ!

***சரணங்கள்***

1. அன்பான பரனே! – அருள் மேவுங் காரணனே! – நவ
அச்சய சச்சித – ரட்சகனாகிய
உச்சிதவரனே! – ஆ!

2. ஆதம் பவமற, – நீதம் நிறைவேற, – அன்று
அல்லிராவினில் – வெல்லையிடையினில்
புல்லணையிற் பிறந்தார். – ஆ!

அட்டவணை

3. ஞானியர் தேட, வானவர் பாட, –மிக
நன்னய, உன்னத – பன்னரும் மேசையா
இந்நிலம் பிறந்தார். – ஆ!

4. கோனவர் நாட, தானவர் கொண்டாட – என்று
கோத்திரர் தோத்திரஞ் – சாற்றிடவே, யூத
கோத்திரன் பிறந்தார். – ஆ!

5. விண்ணுடு தோண, மன்னவர் பேண – ஏரோது
மைந்தனின் சிந்தையழுந்திக் கலங்கிட
விந்தையாய்ப் பிறந்தார். – ஆ!

**109** **கி.கீ.39**

*காம்போதி* *ஆதிதாளம்*

### *பல்லவி*

பணிந்து நடந்து கொண்டாரே – பரன் பாலனும்
கனிந்து தாய் தந்தையருக்கு

### *அனுபல்லவி*

அணிந்து தேவ தயவைப் பணிந்த மனதினோடு
அவர்க்கு தணிந்தி எதிர்முனைந்து சொல்லாதபடி –பணிந்து

### *சரணங்கள்*

1. தந்தை தாய் தனை மதித்து அவருடைய
தயவின் சித்தத்துக் கமைந்த
மைந்தர்கள் உலகினில் வாழ்ந்து இருப்பாரென்று
சிந்தை மகிழ்ந்து பரன் செப்பிய மொழிப்பாடி, –பணிந்து

2. தந்தைக் குகந்த வேலையில் அவருடனே
விந்தை யுடனே பயின்றார்;
நிந்தை யிதுவென்றெண்ணிச் சிந்தைக் கலங்கிடாமல்
எந்த விதமும் நரர் தன்னைப் பின்பற்றியேகப் –பணிந்து

3. பாவம் ஒன்று தவிர, நம்மைப்போலப்
பாடுள்ளவராய் நின்றாரே;
நாவின் வாக்கினாலே நவின்றாரே, புனிதமாய்;
பாவி அவரைக் கண்டு பயிலுவது நன்று; –பணிந்து

அட்டவணை

4. ஆவி பலமடைந்தார்; உலக தேவ
அறிவிலும் நிறைவு கொண்டார்;
தேவ கிருபையிலும் திருமறை முறையிலும்
பூவில் அவர்க்கு நிகர் புனித னில்லாதபடி, –பணிந்து

*–சா. சீமோன்*

**110** **கி.கீ.37**

*பியாகு (தேசிகம்)* *ஏகதாளம்*

***பல்லவி***

**கண்டேனென் கண்குளிர – கர்த்தனையின்று**

***அனுபல்லவி***

கொண்டாடும் விண்ணோர்கள் கோமானைக் கையிலேந்திக் –கண்

***சரணங்கள்***

1. பெத்தலேம் சத்திர முன்னணையில்
உற்றோருக் குயிர்தரும் உண்மையாம் என் ரட்சகனைக் – கண்

2. தேவாதி தேவனை, தேவசேனை
ஓயாது – தோத்தரிக்கும் ஒப்புநிகர் அற்றவனைக் – கண்

3. பாவேந்தர் தேடிவரும் பக்தர் பரனை,
ஆவேந்தர் – அடிதொழும் அன்பனை என் இன்பனை நான் – கண்

4. முத்தொழிற் கர்த்தாவாம் முன்னவனை,
இத்தரை – மீட்க எனை நத்தி வந்த மன்னவனைக் – கண்

5. மண்ணோர் – இருள் போக்கும் மாமணியை,
விண்ணோரும்–வேண்டிநிற்கும் விண்மணியைக், கண்மணியைக் – கண்

6. அண்டினோர்க் கன்புருவாம் ஆரணனை,
கண்டோர்கள் – கலிதீர்க்கும் காரணனை, பூரணனைக் – கண்

7. அன்னையாம் – கன்னியும் ஐயனுடன்
முன்னறி – யாப்பசுவின் புல்லணையில் உன்னழகைக் – கண்

*–மு. ஆபிரகாம் பண்டிதர்*

அட்டவணை

**111** **கி.கீ.38**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**என்ன பாக்கியம், எவர்க்குண்டு**
இந்தச் சிலாக்கியம்?

***அனுபல்லவி***

விண்ணவரும், புவிமேவும் முனிவர்களும்
மன்னவருங் காணா மகிபனை யான் கண்டேன்; – என்ன

***சரணங்கள்***

1. வானகந் தானோ அல்லதிது வையகந் தானோ?
ஆனகம் சென்று எழுந்த அரும்பொருள்
கானகந் தன்னில் என் கையில் அமர்ந்தது. – என்ன

2. போதும் இவ்வாழ்வு; பரகதி போவேன் இப்போது
ஏதேன் என்ற பரதீசும் வந்திட்டது
எண்ணில்லாத செல்வம் என்கையில் கிட்டுது. – என்ன

3. சாமியைக் கண்டேன் மகானந்தம் சாலவுங்கொண்டேன்
காமரு தேங்கனி வாய்கள் துடிப்பதும்,
கண்ணும் மனமும் களிக்க விழிப்பதும் – என்ன

4. அன்னமும் நீயே கிடைத்தற்கருஞ்சொன்னமும் நீயே
மின்னறு மேகத் திருக்கை துறந்தையோ?
மேதினி தன்னை ரட்சிக்கப் பிறந்தையோ? – என்ன

**112** *Nottingham* **பா.63**

A.M.301 C.M

1. **சபையே, இன்று வானத்தை**
திறந்து தமது
சுதனைத் தந்த கர்த்தரை
துதித்துக் கொண்டிரு.

அட்டவணை

2. பிதாவுக்கொத்த இவரே
குழந்தை ஆயினார்;
திக்கற்று முன்னணையிலே
ஏழையாய்க் கிடந்தார்.

3. தெய்வீக ஸ்பாவம் நம்மிலே
உண்டாக ஆண்டவர்
நரரின் சுபாவமாய் இங்கே
வந்து பிறந்தனர்.

4. சிறியோராக ஆண்டவர்
பலத்தை மாற்றினார்;
பண்செய்வன் ரூபைச் சிஷ்டிகர்
தாமே எடுக்கிறார்.

5. அவர் புவியில் பரம
இராஜ்ஜியத்தையே
உண்டாக்க வந்தோராகிய
தாவீதின் மைந்தனே.

6. தாழ்ந்தார் அவர், உயர்ந்தோம் நாம்;
இதென்ன அற்புதம்
இதுன்ன சிநேகம் ஆம்;
அன்பதின் பூரணம்.

7. திரும்பப் பரதீசுக்கு
வழி திறந்துபோம்
கேரூபின் காவல் நீங்கிற்று
மகிழ்ந்து பாடுவோம்.

**113** The Happy Christmas Comes Once More **பா.69**
A.M.50 L.M

1. **மகிழ்ச்சி பண்டிகை கண்டோம்.**
அகத்தில் பாலனைப் பெற்றோம்;
விண் செய்தி மேய்ப்பர் கேட்டனர்
விண் எட்டும் மகிழ் பெற்றனர்.

அட்டவணை

2. மா தாழ்வாய் மீட்பர் கிடந்தார்;
ஆ! வான மாட்சி துறந்தார்;
சிரசில் கிரீடம் காணோமே
அரசின் செல்வம் யாதுமே.

3. பார் மாந்தர் தங்கம் மாட்சியும்
ஆ! மைந்தா இல்லை உம்மிலும்
விண்ணோரின் வாழ்த்துப் பெற்ற நீர்
புல்லணைக் கந்தை போர்த்தினீர்.

4. ஆ! இயேசு பாலன் கொட்டிலின்
மா தேசு விண் மண் தேக்கவே,
நள்ளிருள் நடுப் பகலாம்
வள்ளல் முன் சூரியன் தோற்குமாம்.

5. ஆ! ஆதி பக்தர் தேட்டமே!
ஆ! ஜோதி வாழ்வின் விடிவே!
ஆ! ஈசன் திரு வார்த்தை நீர்!
தாவீதின் மைந்தன் கர்த்தன்நீர்

6. பண்டிகை இன்றே வருவீர்,
திண்ணமாய் நெஞ்சில் தங்குவீர்;
ஓய்ந்த எம் கானம் மீண்டிடும்
ஓய்வின்றிப் பூரித்தார்த்திடும்.

**114** **கி.கீ.320**

*காம்போதி* *சாபுதாளம்*

***பல்லவி***

**மறவாதே மனமே – தேவ சுதனை**
மறவாதே, மனமே, ஒரு – பொழுதும்

***சரணங்கள்***

1. திறமதாக உனைத் தேடிப் புவியில் வந்து
அறமதாகச் செய்த ஆதி சுதன் தயவை. –மறவாதே

அட்டவணை

2. விண்ணின் வாழ்வும் அதன் மேன்மை அனைத்தும் விட்டு
மண்ணில் ஏழையாக வந்த மானு வேலை. –மறவாதே

3. கெட்ட மாந்தர் பின்னும் கிருபை பெற்று வாழ
மட்டில்லாத பரன் மனுஷனான தயவை. –மறவாதே

4. நீண்ட தீமை யாவும் நீக்கிச் சுகம் அளித்திவ்
வாண்டு முழுதும் காத்த ஆண்டவனை எந்நாளும். –மறவாதே

5. நித்தம் நித்தம் செய்த நிந்தனை பாவங்கள்
அத்தனையும் பொறுத்த அருமை ரட்சகனை –மறவாதே

6. வருஷம், வருஷம் தோறும் மாறாத் தமதிரக்கம்
பெருகப்பெருகச் செய்யும் பிதாவின் அனுக்ரகத்தை –மறவாதே

*– வேதநாயகம் சாசுதிரியார்*

**115** **கி.கீ.97**

*சாவேரி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**இத்தரைமீதினில் வித்தகனா யெழுந்த**
உத்தமனே தோத்ரம்!

***அனுபல்லவி***

நித்தமென்னிருதயம் சுத்தமாக விளங்கச்
சித்தங் கொள்வாயென் மீது
தத்தஞ் செய்தேனிப்போது –இத்தரை

***சரணங்கள்***

1. கண்ணே மணியே உன்னைக் கண்டபின் விடுவேனோ?
காதலாய்ப் பவத்தில் வீண் காலம்பின்னிடுவேனோ?
விண்ணே உன்னைமறந்து வேறொன்றைத் தொடுவேனோ?
வேஷ மார்க்கம் நடந்து வேதனைப் படுவேனோ? –இத்தரை

அட்டவணை

2. அன்னையும் தந்தையும் ஆளும் பொருளும் நீயே;
ஆசாரியன் தீர்க்கன் ஆயனும் ஆடும் நீயே;
உன்னைப் பிரிந்தால் வேறு போக வழியிலையே;
உத்தம சத்திய முத்தே அதிபதியே! –இத்தரை

3. தேனே, கனியே என்றுந் திகட்டாத அமிர்தமே,
தீயனென் மனப்புண்கள் ஆற்றிடும் அவிழ்தமே,
வானே யிருந்துபுவி வந்தபெரும் பதமே,
மறவாது திருப்புகழ் வரைவேன் நிதம் நிதமே –இத்தரை

4. வானாசனத்திலிருந்து மனுக்குலத்தை நினைத்து
தானாமனமுவந்து தாரணியில் பிறந்து,
கோனாய் விளாங்கா நிற்கும் குருவேசுநாதனை நான்
ஏனோ மறந்து இங்கே வீணே தவிப்பது காண் –இத்தரை

5. செஞ்சோதிபோன்ற அவன் சீர்பாதத்தை எந்நாளும்
நெஞ்சாசனத்தில் வைத்து நீடூழிவாழ்தல் வேணும்,
பஞ்சாய் பறந்திடுமென் பஞ்சபாதகம் யாவும்,
அஞ்சேன் அஞ்சேனே, தேவ தஞ்சம் கண்டதே போதும் –இத்தரை

*– சா. பரமானந்தம்*

**116** **கி.கீ.319**

*உசேனி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஆத்துமா கர்த்தரைத் துதிக்கின்றதே – என்றன்**
ஆவியும் அவரில் களிக்கின்றதே – இதோ!

***அனுபல்லவி***

நேர்த்தியாய்ப் பாடுவேன் நிதங்கனிந்தே எந்தன்
பார்த்திப னுட பதந் தினம் பணிந்தே – இதோ! – ஆத்துமா

அட்டவணை

*சரணங்கள்*

1. அடிமையின் தாழ்மையைப் பார்த்தாரே – என்னை
அனைவரும் பாக்கிய மென்பாரே
முடிவில்லா மகிமை செய்தாரே – பல
முடியவர் பரிசுத்தர் என்பாரே – இதோ! –ஆத்துமா

2. பயப்படும் பத்தருக் கிரங்குகிறார் – நரர்
பார்த்திடப் பெருஞ்செயல் புரிகின்றார்
உயர்த்திடு நரர்களைச் சிதறடிப்பார் – தன்னை
உகந்தவர் தாழ்ந்திடில் உயர்த்துகின்றார் – இதோ! –ஆத்துமா

3. முற்பிதாக்களுக்கவர் சொன்னது போல் – அந்த
முனியாபி ராமுட ஜனமதன்பால்
நட்புடன் நினை வொடு நல்லிசரேல் – அவன்
நலம் பெற ஆதரித் தார்மறவேல் – இதோ! –ஆத்துமா

*–ச.த. ஞானமணி*

**117**

*சாபுதாளம்*

1. **கர்த்தரைப் போற்றியே வாழ்த்துது**
கனிந்துமே என் ஆத்துமா
களிக்குதே என் ஆவி கருணை
கூர்ந்தனர் பரமாத்துமா.

2. இன்று தன்னடிமையின் தாழ்மையை
இறையவர் கண்ணோக்கினார்
என்றென்றும் எல்லோரும் புகழ
என்னைத் தன்மய மாக்கினார்

3. பரிசுத்த நாமம் மகிமையாய்
பகுத்தாரனைத்தும் நல்லது
பயந்தவர்களுக் கவரிரக்கம்
பரம்பரைகளுக்குள்ளது.

அட்டவணை

4. ஆண்டவர் தம் புயத்தை உயர்த்தி
பராக்கிரமம் செய்திட்டார்
அகந்தையுள்ளோரைச் சிதறடித்தார்
அன்பர்க்கருள் மாரி பெய்தார்.

5. பசித்தோரை ஆதரித்தவர்களைப்
பரிந்து நன்மையால் நிரப்பினார்
பஞ்சையாய்த் தனவான்களை யவர்
பாரில் வெறுமையாய் அனுப்பினார்.

6. பிதாகுமாரன் சுத்த ஆவிக்கும்
மகிமை உண்டாவதாக
சதாகாலமும் என்றென்றைக்கும்
மகிமை உண்டாவதாக ஆமென்.

*– மு. ஆபிரகாம் பண்டிதர்*

## 3. தபசு காலம்

**118** Lord in this Thy mercy's day **பா.88**

A.M. 94 I *St. Philip* 7,7,7

1. **இந்த அருள் காலத்தில்,**
கர்த்தரே, உம் பாதத்தில்
பணிவோம் முழந்தாளில்.

2. தீர்ப்பு நாள் வருமுன்னே
எங்கள் பாவம் உணர்ந்தே
கண்ணீர் சிந்த ஏவுமே

3. மோட்ச வாசல் இயேசுவே,
பூட்டுமுன் எம் பேரிலே
தூய ஆவி ஊற்றுமே.

4. உந்தன் ரத்த வேர்வையால்,
செய்த மா மன்றாட்டினால்,
சாகச் சம்மதித்ததால்.

அட்டவணை

5. சீயோன் நகர்க்காயக் கண்ணீர்
விட்டதாலும் தேவரீர்,
எங்கள்மேல் இரங்குவீர்.

6. நாங்கள் உம்மைக் காணவே,
அருள் காலம் போமுன்னே
தஞ்சம் ஈயும் இயேசுவே.

**119** When wounded sore the stricken heart **பா.89**

A.M.112 *St. Bernard* C.M.

1. **என் நெஞ்சம் நொந்து, காயத்தால்**
அவஸ்தைப்படவே,
குத்துண்ட மீட்பர் கரத்தால்
அக்காயம் ஆறுமே.

2. தீராத துக்கம் மிஞ்சியே,
நான் கண்ணீர் விடினும்,
நோவுற்ற இயேசு நெஞ்சமே
மெய் ஆறுதல் தரும்.

3. என் மனஸ்தாபத் தபசால்
நீங்காத கறையும்,
வடிந்த இயேசு ரத்தத்தால்
நிவிர்த்தியாகிடும்.

4. என் மீட்பர் கரத்தால் சுகம்
செந்நீரால் தூய்மையாம்;
என் இன்ப துன்பம் அந்நெஞ்சம்
அன்பாய் உணருமாம்.

5. அக்கரம் நீட்டும்; இயேசுவே,
அவ்வூற்றைத் திறவும்
குத்துண்ட உந்தன் பக்கமே
என்றன் அடைக்கலம்.

அட்டவணை

**120** Forty Days and Forty Nights **பா.90**

A.M.92 *Heinlein* 7,7,7,7

1. **நாற்பது நாள் ராப் பகல்**
வனவாசம் பண்ணினீர்;
நாற்பது நாள் ராப்பகல்
சோதிக்கப்பட்டும் வென்றீர்.

2. ஏற்றீர் வெயில் குளிரை
காட்டு மிருகத் துணை
மஞ்சம் உமக்குத் தரை
கல் உமக்குப் பஞ்சணை.

3. உம்மைப்போல நாங்களும்
லோகத்தை வெறுக்கவும்,
உபவாசம் பண்ணவும்
ஜெபிக்கவும் கற்பியும்.

4. சாத்தான் சீறி எதிர்க்கும்
போதெம் தேகம் ஆவியை
சோர்ந்திடாமல் காத்திடும்
வென்றீரே நீர் அவனை.

5. அப்போதெங்கள் ஆவிக்கும்
மா சமாதானம் உண்டாம்;
தூதர் கூட்டம் சேவிக்கும்
பாக்கியவான்கள் ஆகுவோம்.

**121** When I survey The Wondrous Cross **பா.90**

A.M.108 *Rockingharm* L.M.

1. **என் அருள் நாதா, இயேசுவே!**
சிலுவைக் காட்சி பார்க்கையில்,
பூலோக மேன்மை நஷ்டமே
என்றுணர்ந்தேன் என் உள்ளத்தில்,

அட்டவணை

2. என் மீட்பர் சிலுவை அல்லால்
வேறெதை நான் பாராட்டுவேன்?
சிற்றின்பம் யாவும் அதினால்
தகாததென்று தள்ளுவேன்.

3. கை, தலை, காலிலும் இதோ!
பேரன்பும் துன்பும் கலந்தே
பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ?
முள் முடியும் ஒப்பற்றதே

4. சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்;
என் ஜீவன் சுகம் செல்வமும்
என் நேசருக்குப் பாத்தியம்

5. மாந்தர்க்கு மீட்பைக் கஸ்தியால்
சம்பாதித்தீந்த இயேசுவே,
உமக்கு என்றும் தாசரால்
மா ஸ்தோத்திரம் உண்டாகவே.

*–சத்தியவாசகம் பண்டிதர்*

**122** Sweet The Moments Rich in Blessing **பா.108**

A.M.109 *Batty* 8,7,8,7

**1. பாவ நாசர் பட்ட காயம்**
நோக்கித் தியானம் செய்வது
ஜீவன், சுகம், நற்சகாயம்,
ஆறுதலும் உள்ளது.

2. ரத்த வெள்ளம் பாய்ந்ததாலே
அன்பின் வெள்ளம் ஆயிற்று;
தெய்வ நேசம் அதினாலே
மானிடர்க்குத் தோன்றிற்று.

அட்டவணை

3. ஆணி பாய்ந்த மீட்பர் பாதம்
தஞ்சம் என்று பற்றினேன்;
அவர் திவ்ய நேச முகம்
அருள் வீசக் காண்கிறேன்.

4. பாசத்தால் என் நெஞ்சம் பொங்கி
துக்கத்தால் கலங்குவேன்
அவர் சாவால் துக்கம் மாறி
சாகா ஜீவன் அடைவேன்.

5. சிலுவையை நோக்கி நிற்க,
உமதருள் உணர்வேன்;
தீர்த்த ரத்தம் நெஞ்சில் பட,
சமாதானம் பெறுவேன்.

6. அவர் சிலுவை அடியில்
நிற்பதே மா பாக்கியம்;
சோர்ந்த திரு முகத்தினில்
காண்பேன் திவ்விய உருக்கம்.

7. உம்மை நான் கண்ணாரக்காண
விண்ணில் சேரும் அளவும்
உம்மை ஓயாத் தியானம் செய்ய
என்னை ஏவியருளும்.

**123** **பா.109**

L.M.

1. **மரிக்கும் மீட்பர் ஆவியும்,**
வதைக்கப்பட்ட தேகமும்,
என் ஆவி தேகம் உய்யவே
என்றைக்கும் காக்கத்தக்கதே.

அட்டவணை

2. அவர் விலாவில் சாலவும்
வடிந்த நீரும் ரத்தமும்
என் ஸ்நானமாகி, பாவத்தை
நிவிர்த்தி செய்யத்தக்கதே.

3. அவர் முகத்தின் வேர்வையும்
கண்ணீர் அவஸ்தை துக்கமும்
நியாயத் தீர்ப்பு நாளிலே
என் அடைக்கலம் ஆகுமே.

4. அன்புள்ள இயேசு கிறிஸ்துவே
ஒதுக்கை உம்மிடத்திலே
விரும்பித் தேடும் எனக்கும்
நீர் தஞ்சம் ஈந்து ரட்சியும்.

5. என் ஆவி போகும் நேரத்தில்
அதை நீர் பரதீசினில்
சேர்த்தென்றும் உம்மைப் போற்றவே
அழைத்துக்கொள்ளும், கர்த்தரே.

**124** *Horsley* **பா.111**

A.M.332 C.M.

1. **மா வாதைப்பட்ட இயேசுவே**
அன்பின் சொரூபம் நீர்,
நிறைந்த உந்தன் அன்பிலே
நான் மூழ்க அருள்வீர்.

2. தெய் வன்பின் ஆழம் அறிய
விரும்பும் அடியேன்
நீர் பட்ட கஸ்தி ஒழிய
வேறொன்றும் அறியேன்.

அட்டவணை

3. என் மீட்பர் ஜீவன் விட்டதால்
பூமி அசைந்ததே;
கன்மலை அதைக் கண்டதால்
பிளந்து விட்டதே.

4. அவ்வண்ணமாய் என் நெஞ்சத்தை
பிளந்து தேவரீர்,
உமது சாவின் பலத்தை
உணர்த்தக்கடவீர்.

5. துராசை நீங்கத் தக்கதாய்
தெய்வன்பை ஊற்றிடும்;
கற்போன்ற நெஞ்சை மெழுகாய்
உருகச் செய்திடும்.

**125** **கி.கீ.59**

*சலநாட்டை* *திரிபுடைதாளம்*

1. **உருகாயோ நெஞ்சமே**
குருசினில் அந்தோ பார்!
கரங்கால்கள் ஆணி யேறித்
திரு மேனி நையுதே!

2. மன்னுயிர்க்காய்த் தன்னுயிரை
மாய்க்க வந்த மன்னவனாம்
இந்நிலமெல் லாம் புரக்க
ஈன குரு சேறினார்.

3. தாக மிஞ்சி நாவறண்டு
தங்க மேனிமங்குதே
ஏக பரன் கண்ணயர்ந்து
எத்தனையாய் ஏங்குறார்.

4. மூவுலகைத் தாங்கும் தேவன்
மூன்றாணி தாங்கிடவோ?
சாவுவேளை வந்த போது
சிலுவையில் தொங்கினார்.

அட்டவணை

5. வல்ல பேயை வெல்ல வானம்
விட்டு வந்ததெய்வம் பாராய்
புல்லர் இதோ நன்றி கெட்டுப்
புறம் பாக்கினார் அன்றோ?

*–சத்தியவாசகம் பண்டிதர்*

**126** **கி.கீ.108**

1. **பாவி வா, பாவி வா, பரனண்டையே வா,**
பாவப்பாரம் சுமந் திளைத்தோனே, நீ வா.

2. பாவி வா, பாவி வா, திகையாதே நீ வா,
வரும் பாவியை ஓர் போதும் தள்ளேனே வா.

3. காணா தாட்டை மேய்ப்பன் தேடும் மாதிரிபோல்
நானே நல்ல மேய்ப்பன் உன்னைத் தேடி வந்தேன்.

4. தாகம் மிகுந்தோனே தண்ணீரண்டை நீ வா
தாகம் தீர்த்திடுவேன் ஜீவ தண்ணீரினால்.

5. உந்தன் பாவத்துக்காய் நானே பாடுபட்டேன்
எந்தனுக்கு உந்தன் நெஞ்சம் தந்திடவா.

6. உனக்காய் மரித்தேன் ஈனக் கோலமதாய்
எனக்கே உனையே படைப்பாய் நிதமே.

**127** **கி.கீ.191**

*ஆரபி* *ஆதிதாளம்*

1. **கள்ளமுறுங்கடையேனுங் கடைத்தேறப் பெருங் கருணை**
வெள்ளமுகந் தருள்பொழியும் விமலலோ சன நிதியை,
உள்ளமுவப் புறுதேனை, உயிர்க்குயிரை, உலவாத
தெள்ளமுகைத் தீங்கனியைச் சிலுவைமிசைக் கண்டேனே.

2. படிசாய்ந்த பெரும்பாவப் பரஞ்சுமந்து பரமர் திரு
மடிசாய்த்த திருமேனி வதைந்திழி செங் குருதியுக
முடிசாய்ந்த பெருமானை மூதலகை தலைநசுக்கிக்
கொடிசாய்த்த கொற்றவனைக் குருசின்மிசைக் கண்டேனே.

அட்டவணை

3. மூவினைக்கு மும் முதலாய், மும்முதலுமொரு முதலாந்
தேவினைக்கை தொழுதேத்துந் திரிகரண சுத்தருந்தம்
நாவினைக்கொண் டேத்தரிய நல்லறத்தின் தனித்தாயைத்
தீவினைக்கோர் அருமருந்தைச் சிலுவைமிசைக் கண்டேனே.

4. மூவாத முதல்வனை, முதுசுருதி மொழிப் பொருளை
ஓவாத பெருங்குணத்த உத்தமனை, உலகனைத்தும்
சாவாத படிகாக்கத் தனுவெடுத்துத் துஜங்கட்டுந்
தேவாதி தேவனையான் சிலுவைமிசைக் கண்டேனே.

5. மறம் வளர்க்குங் களருளத்தை வளமலிதண் பணையாக்கி
அறம் வளர்க்கும் அருண்முகிலின் அன்புமழை மாரிபெய்து
புறம் வளர்க்கும் இரட்சிப்பின் புகழமைந்த புண்ணியத்தின்
திறம் வளர்க்குஞ் செழுங்கிரியைச் சிலுவைமிசைக் கண்டேனே

6. காயொளியில் கதிர்பரப்புங் களங்கமில் நீதியின் சுடரைப்
பாயொளிகொள் பசும்பொன்னை, பணிக்கருஞ் சிந்தா மணியைத்
தூயொளிகொள் நித்திலத்தைத் தூண்டாத சுடர் விளக்கைச்
சேயொளிகொள் செம்மணியைச் சிலுவைமிசைக் கண்டேனே

*-கெ.ஆ. கிருட்டிணன்*

**128** At the Cross **கி.கீ.319**

S.S. 883

1. **நான் உம்மைப்பற்றி ரட்சகா**
வீண் வெட்கம் அடையேன்,
பேரன்பைக் குறித்தாண்டவா
நான் சாட்சி கூறுவேன்.

***பல்லவி***

சிலுவையண்டையில்
நம்பி வந்து நிற்கையில்
பாவப் பாரம் நீங்கி, வாழ்வடைந்தேன்
எந்த நேரமும் எனதுள்ளத்திலும்
பேரானந்தம் பொங்கிப் பாடுவேன்.

அட்டவணை

2. ஆ! உந்தன் வல்ல நாமத்தை
நான் நம்பிச் சார்வதால்,
நீர் கைவிடீர்! இவ்வேழையைக்
காப்பீர் தேவாவியால்.

3. மா வல்ல வாக்கின் உண்மையை
கண்டுணரச் செய்தீர்
நான் ஒப்புவித்த பொருளை
விடாமல் காக்கிறீர்

4. நீர் மாட்சியோடு வருவீர்
அப்போது களிப்பேன்,
ஓர் வாசஸ்தலம் கொடுப்பீர்
மெய்ப்பாக்கியம் அடைவேன்.

**129**

***பல்லவி***

**பாவி ஏசுனைத் தானே தேடித் துயர்மேவினார்**
இதைத் தியானியே.

***சரணங்கள்***

1. பரம சீயோன் மலைக்கரசர் நற்பாலன்
பரிசுத்த தூதர் பணி செய்யும் பொற்பாதன்
மானிடனாக அவதரித்த தெய்வீகன்
வல்ல பேயை ஜெயித்த மா மனுவேலன். - பாவி

2. தீய பாவிகள் பாவ நித்திரை செய்ய
தேவ கோபாக்கினி அவர் மீதில் பெய்ய
தோஷம் சுமந்து யேசு தேவாட்டுக் குட்டி
துன்பக் கடலில் அமிழ்ந் தாற்றுதல் செய்ய.- பாவி

3. இந்தப் பாத்திரம் என்னை விட்டகலாதோ?
இல்லையானால் உமது இஷ்டமதென்றே
சிந்தை துயரடையச் செப்பினார், அன்றோ
சுவாமி உனக்காய் பிணைப்பட்டதால், அந்தோ!-பாவி

அட்டவணை

4. கெத்சமனேயில் ஏசு பட்டதை நினையே;
கேவலமான உன்தன் பாவத்தை மறவே;
ஆத்தும நேசர் பதம் ஆவலாய் பணியே;
அன்பின் கரத்தாலுனை அணைப்பார், நிச்சயமே- பாவி

## 4. திருப்பவனி

All glory laud and honour

**130** *St. Theodulph* **பா.92**

A.M. 98 I 7,6,7,6

**ஓசன்னா பாலர் பாடும்**
ராஜாவாம் மீட்பர்க்கே
மகிமை, புகழ், கீர்த்தி
எல்லாம் உண்டாகவே

1. கர்த்தாவின் நாமத்தாலே
வருங் கோமானே, நீர்
தாவீதின் ராஜ மைந்தன்,
துதிக்கப்படுவீர்.

2. உன்னத தூதர் சேனை
விண்ணில் புகழுவார்;
மாந்தர், படைப்பு யாவும்
இசைந்து போற்றுவார்.

3. உம்முன்னே குருத்தோலை
கொண்டேகினார் போலும்,
மன்றாட்டு, கீதம், ஸ்தோத்திரம்
கொண்டும்மைச் சேவிப்போம்

4. நீர் பாடுபடுமுன்னே
பாடினார் யூதரும்;
உயர்த்தப்பட்ட உம்மைத்
துதிப்போம் நாங்களும்.

அட்டவணை

5. அப்பாட்டைக் கேட்டவண்ணம்
எம் வேண்டல் கேளுமே;
நீர் நன்மையால் நிறைந்த
காருணிய வேந்தரே.

Ride on ride on in majesty

**131** *St. Drostane* **பா.94**

A.M. 99 I L.M.

1. தயாள இயேசு, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்;
வெள்ளோலை தூவிக் கூட்டத்தார்
ஓசன்னா ஆர்ப்பரிக்கிறார்

2. தாழ்வாய் மரிக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்
மரணம் வெல்லும் வீரரே
உம் வெற்றி தோன்றுகின்றதே.

3. விண்ணோர்கள் நோக்க, தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்;
வியப்புற்றே அம்மோக்ஷத்தார்
அடுக்கும் பலி பார்க்கிறார்.

4. வெம் போர் முடிக்க தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்;
தம் ஆசனத்தில் ராயனார்
சுதனை எதிர்பார்க்கிறார்.

5. தாழ்வாய் மரிக்க தேவரீர்
மாண்பாய்ப் பவனி போகிறீர்!
நோ தாங்கத் தலை சாயுமே
பின் மேன்மை பெற்று ஆளுமே.

அட்டவணை

Sing my tongue the glorious battle

**132** *Pange Lingua* **பா.95**

A.M. 97 8,8,7,8,7

1. **மாட்சி போரரை போரின் ஓய்வை**
பாடு எந்தன் உள்ளமே;
மாட்சி வெற்றி சின்னம் போற்றி
பாடு வெற்றி கீதமே;
மாந்தர் மீட்பர் கிறிஸ்து நாதர்
மாண்டு பெற்றார் வெற்றியே.

2. காலம் நிறைவேற, வந்தார்
தந்தை வார்த்தை மைந்தனாய்;
ஞாலம் வந்தார், வானம் நீத்தே
கன்னித் தாயார் மைந்தனாய்,
வாழ்ந்தார் தெய்வ மாந்தனாக
இருள் நீக்கும் ஜோதியாய்.

3. மூன்று பத்து ஆண்டின் ஈற்றின்
விட்டார் வீடு சேவைக்காய்;
தந்தை சித்தம் நிறைவேற்றி
வாழ்ந்தார், தந்தை சித்தமாய்
சிலுவையில் தம்மை ஈந்தார்
தூய ஏக பலியாய்.

4. வெற்றிச் சின்னச் சிலுவையே,
இலை மலர் கனியில்
ஒப்புயர்வு அற்றாய் நீயே!
மேலாம் தரு பாரினில்!
மீட்பின் சின்னம் ஆனாய், மீட்பர்
தொங்கி மாண்டனர் உன்னில்,

அட்டவணை

5. பிதா சுதன் ஆவியான
தூயராம் திரியேகரே,
இன்றும் என்றும் சதா காலம்
மாட்சி ஸ்தோத்திரம் ஏற்பீரே,
மாட்சி ஸ்தோத்திரம் நித்திய காலம்
உன்னதத்தில் உமக்கே.

**133** *Mansfield* **பா.91**

A.M. 499 I 8,7,8,3

1. **இஸ்திரீயின் வித்தவர்க்கு**
ஓசன்னா ஆர்ப்பரிப்போம்;
கர்த்தராம் இம்மானுவேலே;
ஓசன்னா.

2. அதிசயமானவர்க்கு
ஓசன்னா முழக்குவோம்;
ஆலோசனைக் கர்த்தாவுக்கு
ஓசன்னா.

3. வல்ல ஆண்டவருக்கின்று
ஓசன்னா ஆர்ப்பரிப்போம்;
நித்திய பிதாவுக்கென்றும்
ஓசன்னா.

4. சாந்த பிரபு ஆண்டவர்க்கு
ஓசன்னா முழக்குவோம்,
சாலேம் ராஜா இயேசுவுக்கு
ஓசன்னா.

5. விடி வெள்ளி, ஈசாய் வேரே
ஓசன்னா ஆர்ப்பரிப்போம்;
கன்னிமரி மைந்தருக்கு
ஓசன்னா.

அட்டவணை

6. தாவீதின் குமாரனுக்கு
ஓசன்னா முழக்குவோம்
உன்னதம் முழங்குமெங்கள்
ஓசன்னா.

7. அல்பா ஒமேகாவுக்கின்று
ஓசன்னா ஆர்ப்பரிப்போம்;
ஆதியந்த மில்லாதோர்க்கு
ஓசன்னா.

8. தூதர், தூயர் மாசில்லாத
பாலர் யாரும் பாடிடும்
ஓசன்னாவோடெங்கள் நித்திய
ஓசன்னா.

**134** **கி.கீ.42**

*யமுனா கல்யாணி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**பவனி செல்கின்றார் ராசா – நாம்**
பாடிப் புகழ்வோம் நேசா.

***அனுபல்லவி***

அவனிதனிலே மறிமேல் ஏறி
ஆனந்தம் பரமானந்தம். – பவனி

***சரணங்கள்***

1. எருசலேமின் பதியே! – சுரர்
கரிசனையுள்ள நிதியே!
அருகில் நின்ற அனைவர் போற்றும்
அரசே, எங்கள் சிரசே! – பவனி

2. பன்னிரண்டு சீஷர் சென்று – நின்று
பாங்காய் வஸ்திரம் விரிக்க
நன்னயம்சேர் மனுவின் சேனை
நாதம் கீதம் ஓத. – பவனி

அட்டவணை

3. குருத்தோலைகள் பிடிக்க, – பாலர்
கும்புகும்பாகவே நடிக்க
பெருத்த தொனியாய் ஓசன்னாவென்று
போற்ற மனம் தேற்ற. – பவனி

*–ச.மு.*

**135** **கி.கீ.43**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

ஓசன்னா பாடுவோம், ஏசுவின் தாசரே,
உன்னதத்திலே தாவீது மைந்தனுக்கு ஓசன்னா!

***சரணங்கள்***

1. முன்னும் பின்னும் சாலேம் நகர் சின்னபாலர் பாடினார்,
அன்றுபோல இன்றும் நாமும்அன்பாய்த் துதி பாடுவோம்.

2. சின்ன மறி மீதில்ஏறி அன்பர் பவனி போனார்
இன்னும் என் அகத்தில் அவர் என்றும் அரசாளுவார்.

3. பாவமதைப் போக்கவும் இப்பாவியைக் கைதூக்கவும்
பாசமுள்ள ஏசையாப் பவனியாகப் போகிறார்.

4. பாலர்களின் கீதம் கேட்டுப் பாசமாக மகிழ்ந்தார்
ஜாலர் வீணையோடு பாடித் தாளைமுத்தி செய்குவோம்.

5. குருத்தோலை ஞாயிற்றில் நம் குருபாதம் பணிவோம்
கூடி அருள் பெற்றுநாமும் த்ரியேகரைப் போற்றுவோம்.

*–யோ. பால்மர்*

அட்டவணை

**136** **கி.கீ.110**

*காம்போதி* *ஆதிதாளம்*

1. **தேவாசனப்பதியும், சேனைத் தூதரைவிட்டுத்**
தேவர் குலமாய் வாரதாரையா? இவர்
தேவ னுரைப்படி,
பாவ வினைப்படி,
ஏவை மனப்படி,
ஆவல் மிகப்படி;
வணங்கும் ஜெகஜோதிப் பொருள் தானையா – இவர்

2. முன்னணி பின்னணியினிலோசன்னா! ஓசன்னாவென
ஓர் மறியின் மீதில் வாரதாரையா? இவர்
உத்தம நேசனாம்,
சத்திய போசனாம்,
பக்தரின் வாசனாம்;
நித்திய ஈசனாம்;
உன்னதத்தின் மேன்மைத் தெய்வந்தானையா – இவர்

3. பாலர் துதித்திடவும் ஞாலம் மதித்திடவும்
பாவலருடன் வாரதாரையா? இவர்
பசியற்றிருந்தவர்,
பொசிப்பற்றிருந்தவர்,
வசை பெற்றிருந்தவர்,
அசைவற்றிருந்தவர்,
பாவ விமோசன ராசன் தானையா – இவர்

4. சீயோன் குமாரியிடம் நேயமதாகத் தேடிச்
சிங்காரமாய் வாரதாரையா? இவர்
சீருற்றதிபனாம்,
பேர் பெற்றிறைவனாம்,
பாருற்றதிபனாம்,
வேருற்றெழுந்தனாம்,
சீவ வழி சொல்வரிவர்தானையா! – இவர்

அட்டவணை

5. எருசலேம் வீதிவழி பெரிய திரளுடனே
குருத்தோலை வீச வாரதாரையா? இவர்
அரிவை பவமற,
பெருமை நிதந்தர,
கிருபை துரந்தர,
அருமை நிரந்தர,
ஏசு கிறிஸ்திறைவர் தானையா - இவர்

6. வழியில் மரக்கிளைகள் வரிசையதாய்ப் பரப்ப
வஸ்திரமீதில் வாரதாரையா? இவர்
வல்லவராங் குரு,
சொல் தவறாக் குரு,
நல்லவராங் குரு,
துல்லிய சற்குரு,
வரமிகுந்த சற் குரு தானையா - இவர்

*- மு. தேவசகாயம்*

**137**

1. **ஆயிரக்கணக்கான வருடங்களாய் எம்**
ஆண்டவரே உம்மை எதிர்பார்த்தோம்
இஸ்ரவேல் ஜனங்களை ஆளவரும் - எம்
யேசு ரட்சகரே எழுந்தருளும்.

ஓசன்னா தாவீதின் புதல்வா
ஓசன்னா ஓசன்னா ஓசன்னா

2. மாமரி வயிற்றில் பிறந்தவரே - மா
யோசேப்பின் கரங்களில் வளர்ந்தவரே
மானிட குலத்தில் உதித்தவரே - எம்
மன்னவரே எழுந்தருள்வீரே. -ஓசன்னா

3. கானான் மணத்திற்கு அழைக்கப்பட்டீர் - அங்கு
கலங்கினவர் பேரில் இரக்கப்பட்டீர்
கொண்டுவரச் சொன்னீர் சுத்தத்தண்ணீர் அதை
நற்கந்த ரசமாக்கிப் பருகச் செய்தீர் -ஓசன்னா

அட்டவணை

4. குருடர் அநேகர் ஒளி பெற்றார் – முடம்
கூன், செவிடர் பலர் சுகம் பெற்றார்
குஷ்டர் அநேகர் நலம் பெற்றார் – எம் கடவுளே
எம்மோடு வருவீரே. – ஓசன்னா

5. யூதேயா நாட்டில் மகிழ் பெற்றீர் – எம்
யூத ராஜா என்று முடி பெற்றீர்
எருசலேம் நகர் தனில் களிப்புற்றீர் – எம்
யேசு ரட்சகரே அரசாள்வீர். – ஓசன்னா

6. பாவிகளைத் தேடிவந்தவரே – எம்
பாவங்களைப் போக்க வல்லவரே
பாடுகள் பட்டு உழைத்தவரே – எம்
பராபரனே உட்செல்வீரே. – ஓசன்னா

7. கோவேறு குட்டியே ஆசனமாய் – எம்
குழந்தையின் துணியே பஞ்சணையாய்
கிளைகளே உமது ஜெயக்கொடியாய் – எம்
கர்த்தனே சீக்கிரம் நடப்பீரே. – ஓசன்னா

8. உலகமே உமது அரிய வேலை – எம்
உயிருமே உமது மாபுதுமை
உலகத்தை ஆண்டு வருபவரே – எம்
உலகரசே உட்புகுவீரே. – ஓசன்னா

## 5. பாடுகள்

**138** *Attole Paulum* **பா.96**

A.M. 104 8,7,8,7,8,8,7

1. **அகோர கஸ்தி பட்டோராய்**
வதைந்து வாடி நொந்து,
குரூர ஆணி தைத்தோராய்
தலையைச் சாய்த்துக்கொண்டு
மரிக்கிறார் மா நிந்தையாய்!
துன்மார்க்கர் சாகும் வண்ணமாய்
மரித்த இவர் யாவர்?

அட்டவணை

2. சமஸ்தமும் மா வடிவாய்
சிஷ்டித்து ஆண்டு வந்த
எக்காலமும் விடாமையாய்
விண்ணோரால் துதி பெற்ற
மா தெய்வ மைந்தன் இவரோ?
இவ்வண்ணம் துன்பப்பட்டாரோ
பிதாவின் திவ்விய மைந்தன்?

3. அநாதி ஜோதி நரனாய்
பூலோகத்தில் ஜென்மித்து,
அரூபி ரூபி தயவாய்
என் கோலத்தை எடுத்து,
மெய்யான பலியாய் மாண்டார்
நிறைந்த மீட்புண்டாக்கினார்
என் ரட்சகர், என் நாதர்.

O Sacred Head sore wounded

**139** *Passion Chorale* **பா.102**

A.M. 111 7,6,7,6 D

1. **இரத்தம் காயம் குத்தும்**
நிறைந்து, நிந்தைக்கே
முள் கிரீடத்தாலே சுற்றும்
சூடுண்ட சிரசே,
முன் கன மேன்மைகொண்ட
நீ லச்சை காண்பானேன்?
ஐயோ வதைந்து நொந்த
உன் முன் பணிகிறேன்.

அட்டவணை

2. நீர் பட்ட வாதை யாவும்
என் பாவப் பாரமே;
இத்தீங்கும் நோவும் சாவும்
என் குற்றம் கர்த்தரே,
இதோ, நான் என்றுஞ் சாக
நேரஸ்தன் என்கிறேன்;
ஆனாலும் நீர் அன்பாக
என்னைக் கண்ணோக்குமேன்.

3. நீர் என்னை உமதாடாய்
அறியும் மேய்ப்பரே;
உம் ஜீவன் ஊறும் ஆறாய்
என் தாகம் தீர்த்தீரே;
நீர் என்னை போதிப்பிக்க
அமிர்தம் உண்டேனே;
நீர் தேற்றரவளிக்க
பேரின்பமாயிற்றே.

4. உம்மண்டை இங்கே நிற்பேன்
என்மேல் இரங்குமேன்;
விண்ணப்பத்தில் தரிப்பேன்
என் கர்த்தரை விடேன்;
இதோ, நான் உம்மைப் பற்றி,
கண்ணீர் விட்டண்டினேன்;
மரிக்கும் உம்மைக் கட்டி
அணைத்துக் கொள்ளுவேன்.

5. என் ஏழை மனதுக்கு
நீர் பாடுபட்டதே
மகா சந்தோஷத்துக்கு
பலிக்கும், மீட்பரே
என் ஜீவனே, நான் கூடி
இச்சிலுவையிலே
உம்மோடென் கண்ணை மூடி
மரித்தால் நன்மையே.

அட்டவணை

6. நான் உம்மைத் தாழ்மையாக
வணங்கி நித்தமே
நீர் பட்ட கஸ்திக்காக
துதிப்பேன், இயேசுவே;
நான் உம்மில் ஊன்றி நிற்க
சகாயராயிரும்;
நான் உம்மிலே மரிக்க
கடாட்சித்தருளும்.

7. என் மூச்சொடுங்கும் அந்த
கடை இக்கட்டிலும்
நீர் எனக்காய் இறந்த
ரூபாகக் காண்பியும்;
அப்போ நான் உம்மைப் பார்த்து
கண்ணோக்கி நெஞ்சிலே
அணைத்துக் கொண்டு சாய்ந்து,
தூங்குவேன், இயேசுவே.

**140** *Windsor, Burford* **பா.106**

A.M. 43, 253 C.M.

1. **கண்டீர்களோ சிலுவையில்**
மரிக்கும் இயேசுவை?
கண்டீர்களோ காயங்களில்
சொரியும் ரத்தத்தை?

2. 'மன்னியும்' என்ற வேண்டலை
கேட்டீர்களே, ஐயோ!
'ஏன் கைவிட்டீர்' என்றார், அதை
மறக்கக்கூடுமோ?

அட்டவணை

3. கண்மூடி தலைசாயவே
'முடிந்தது' என்றார்
இவ்வாறு லோக மீட்பையே
அன்பாய் உண்டாக்கினார்.

4. அவ்வேண்டல் ஓலம் காயத்தால்
ஈடேற்றம் வந்ததே;
ஆ பாவி இதை நோக்குங்கால்
உன் தோஷம் தீருமே.

5. சீர்கெட்டு மாண்டு போகையில்
பார்த்தேன் என் மீட்பரை;
கண்டேன், கண்டேன் சிலுவையில்
மரிக்கும் இயேசுவை!

O come and mourn with me

**141** *St. Cross* **பா.107**

A.M. 114 L.M.

1. **துக்கம் கொண்டாட வாருமே,**
பாரும்! நம் மீட்பர் மரித்தார்;
திகில் கலக்கம் கொள்ளுவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

2. போர் வீரர், யூதர் நிந்தித்தும்
மா பொறுமையாய்ச் சகித்தார்
நாமோ புலம்பி அழுவோம்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

3. கை காலை ஆணி பீறிற்றே
தவனத்தால் நா வறண்டார்;
கண் ரத்தத்தாலே மங்கிற்றே;
இயேசு சிலுவையில் மாண்டார்.

அட்டவணை

4. மும்மணி நேரம் மாந்தர்க்காய்
தம் மௌனத்தாலே கெஞ்சினார்
நல் வாக்கியம் ஏழும் மொழிந்தே;
இயேசு சிலுவையில் மாண்டார்.

5. சிலுவையண்டை வந்துசேர்
நேசர் ஐங்காயம் நோக்கிப்பார்
ஒப்பற்ற அன்பைச் சிந்தியேன்;
இயேசு சிலுவையில் மாண்டார்.

6. உருகும் நெஞ்சும் கண்ணீரும்
உள்ளன்பும் தாரும், இயேசுவே;
மாந்தர் மீதன்பு கூர்ந்ததால்
நீர் சிலுவையில் மாண்டீரே!

**142** *Horsley* **பா.110**

A.M. 332 C.M.

1. **மரித்தாரே என் ஆண்டவர்,**
சிலுவையில் தானே;
மரித்தாரே என் ரட்சகர்,
ஆ, எனக்காகவே.

2. சிலுவைமீது ஜீவனை
என் மீட்பர் விட்டாரே;
எனக்குத்தான் இப்பலியைச்
செலுத்தி மாண்டாரே.

3. நான்எண்ணி எண்ணி வருகில்,
என் நேசம் ஊக்கமாய்
கொழுந்து விட்டெடன் நெஞ்சத்தில்
எரியும் பக்தியாய்.

அட்டவணை

4. என் மீட்பர் இயேசு கிறிஸ்து தாம்
இவ்வருள் செய்தாரே;
நான் என்ன பதில் செய்யலாம்?
ஈடொன்றுமில்லையே.

5. என் தேகம், செல்வம், சுகமும்,
என் ஜீவன் யாவுமே
சுகந்த பலியாகவும்
படைப்பேன் இயேசுவே!

**143** **கி.கீ.44**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஏன் இந்தப் பாடுதான்! சுவாமி**
என்ன தருவேன் இதற்கீடுநான்?

***அனுபல்லவி***

ஆனந்த நேமியே – எனை ஆளவந்த குரு சுவாமியே – ஏன்

1. கெத்செமனே யிடம் ஏகவும் – அதின்
கெழு மலர்க் காவிடை போகவும்
அச்சயனே, மனம் நோகவும் – சொல்
அளவில்லாத் துயரமாகவும் – ஏன்

2. முழுந்தாள் படியிட்டுத் தாழவும் – மும்
முறை முகம் தரைபட விழவும்
மழுங்கத் துயர் உமைச் சூழவும் – கொடு
மரண வாதையினில் மூழ்கவும் – ஏன்

3. அப்பா, பிதாவே என்றழைக்கவும் – துயர்
அகலச் செய்யும் என்றுரைக்கவும்
செப்பும் உன் சித்தம் என்று சாற்றவும் – ஒரு
தேவதூதன் வந்து தேற்றவும் – ஏன்

4. ஆத்துமத் துயர் மிக நீடவும், குழம்
பாக உதிர வேர்வை ஓடவும்
சாத்திர மொழிகள் ஒத்தாடவும் – உந்தன்
தாசரும் பதந்தனை நாடவும் – ஏன்

*– யே. அண்ணாவியார்*

**144** **கி.கீ.46**

*சகானா* *ஆதிதாளம்*

***கண்ணிகள்***

1. **ஆதம் புரிந்த பாவத்தாலே மனுடனாகி**
வேதம் புரிந்த சிறை விடுத்தீரோ பரனே?

2. ஏவை பறித்த கனியாலே விளைந்த எல்லாப்
பாவத்துக்காகப் பழியானீரோ பரனே?

3. வேத கற்பனையனைத்தும் மீறி நரர் புரிந்த
பாதகந் தீரப்பாடுபட்டீரோ பரனே?

4. தந்தைப் பிதாவுக் கும்மைத் தகனப்பலியளித்து
மைந்தரை மீட்க மனம் வைத்தீரோ பரனே?

5. சிலுவைச் சுமை பெறாமல் தியங்கித் தரையில் விழ
கொலைஞர் அடர்ந்து கோட்டிகொண்டாரோ பரனே?

6. வலிய பவத்தை நீக்கி மனுடரை ஈடேற்றிச்
சிலுவை சுமந்திறங்கித் திகைத்தீரோ பரனே?

7. சென்னியில் தைத்தமுடிச் சிலுவையின் பாரத்தினால்
உன்னியமுந்தத் துயர் உற்றீரோ பரனே?

8. வடியும் உதிரமோட மருகித் தவித்துவாடிக்
கொடிய குருசில் கொலையுண்டீரோ பரனே?

அட்டவணை

9. வானம் புவிபடைத்த வல்லமைப் பிதாவின் மைந்தர்
ஈனக்கொலைஞர் கையாலிறந்தீரோ பரனே?

10. சங்கை இயேசு ராஜாவே, சத்ய அனாதி தேவே
பங்கமுற்று வாதைகள் பட்டீரோ பரனே?

**145** **கி.கீ.47**

*நாதநாமக்கிரியை* *சாபுதாளம்*

1. **அப்பா, தயாள குணாநந்த மோனந்த, வேதா, பொல்லா**
இப்பாரில் காய்பாமுன் ஏகினிரோ, ஏசுநாதா?

2. குற்றம் சுமத்தப் பொய்ச் சாட்சிகளைத் தேடினாரோ?– அந்தச்
செற்றலர் எல்லாம் திரண்டேகமாய்க் கூடினாரோ?

3. கன்னம் அதைத்ததோ? கண்கள் சிவந்ததோ? சுவாமி – பொறி
மின்னிக் கலங்கி, விசனம் உற்றீரோ, நன் னேமி?

4. மெய்யான சாட்சி இடையனே, சொன்ன உம் மீதே – தீயர்
பொய்யான சாட்சி இட்டையோ, சுமத்தினார் தீதே

5. என் கட்டை நீக்கி ஈடேற்ற வாதைக்குள்ளானீரோ? – உம்மைப்
பின் கட்டாய்க் கட்டி, பிலாத்திடங் கொண்டு போனாரோ?

6. இத்தனை பாடுகள் நீர் பட்ட தென்கொடும் பாவமே – என்றன்
கர்த்தனே, உன் மீதில் வந்ததையோ, தேவ கோபமே?

7. நீர் பட்ட பாட்டைப்போல், ஆர் பட்டுத்தாங்குவார் தேவே? – பல
கார்பட்ட நெஞ்சமும் சீர்பட்டுப் போகுமே, கோவே.

*–யே. அண்ணாவியார்*

**146** **கி.கீ.48**

*நீலாம்புரி* *தரு* *ரூபகதாளம்*

**சீயோன் 1** **பொற்பு மிகும் வானுலகும்**
பூவுலகும் படைத்த பரப்பொருளே – இங்கே
பொந்திப்பிலாத் தரண்மனையில்
வந்து நிற்கும் காரணமேன், கோவே?

கிறிஸ்து கற்பனை மீறிய பாவத்தால்
கடின நரகாக்கினைப் படாமல் – உன்னைக்
காப்பதற் கிங்கே ஞாய
தீர்ப்பில் உற்றோம், சீயோனின் மாதே

சீயோன் 2 துய்ய திரு மேனி எல்லாம்
நொய்ய உழுத நிலம்போல ஆகி – உன்
சோரி சிந்த வாரதினால்
நீர் அடிக்கப்பட்டதென்ன, கோவே?

கிறிஸ்து வையகத்தின் பாதகத்தால்
பெய்யும் நடுதீர்வையெல்லாம் ஆற்ற– இந்த
வாதை எல்லாம் பட்டிறக்க
போத மனம் சம்மதித்தோம், மாதே

சீயோன் 3 செய்ய கண்கள் உறச் சிவந்து
திருக் கன்னங்கள் தடித்து, மிக வீங்கி–முழுச்
சென்னியின் ரோமங்கள் எல்லாம்
வின்னமுற்றிங் கிருப்பதென்ன; கோவே?

கிறிஸ்து மையிருளில் குருக்களுடை
மாளிகையில் படுத்தின பாடெல்லாம்–இங்கே
வன் கொலைஞரால் அடிக்க
பங்கமுற்ற கோலம் இது, மாதே

*–வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

**147** **கி.கீ.49**

*நீலாம்புரி* **பாடல்-1** *திஸ்ர ஏகதாளம்*

***பல்லவி***

**சரணம், சரணம், அனந்தா, சச்சிதானந்தா**
தாவீதின் மைந்தா, ஓசன்னா! சரணபதந்தா

***சரணங்கள்***

1. தேவசுதன் பொந்தியுப் பிலாத்தினிடமே
சென்று பல பாடுபடவும் தயவானார் - சரணம்

2. தந்து செய்து பொந்தியுப் பிலாத்து துரைதான்
தற்பரனை விட்டுவிடத் தன்னுள் எண்ணினான். - சரணம்

3. பரபாசோ டதிபதியைப் பணிய நிறுத்தி,
பாதகனை யோ? இறையை யோ? விட என்றான்.- சரணம்

4. ஜீவனுட அதிபதியைச் சிலுவையில் கொன்று,
திருடனையே விட்டுவிடத் தீயவர் கேட்டார். - சரணம்

5. தண்ணீர் தனை எடுத்துக் கை கழுவியே
தற்பரனைக் கொல்வதற்கங் கொப்புக் கொடுத்தான். - சரணம்

6. கள்ளனையே விட்டு விட்டு யூதர்கட்காக,
காவலனைக் குருசறைப் பாவியும் தீர்த்தான். - சரணம்

**147** **கி.கீ.50**

*நீலாம்புரி* **பாடல்-2** *திஸ்ர ஏகதாளம்*

***பல்லவி***

**சரணம் சரணம் அனந்தா சச்சிதானந்தா**
தாவீதின் மைந்தா ஓசன்னா! சரணபதந்தா

அட்டவணை

***சரணங்கள்***

1. பித்தன் என்று வெள்ளை அரைச் சட்டை அணிந்து
பேதக ஏரோதேபரி காசம்பண்ணினான் - சரணம்

2. கற்றூணில் சேர்த்திறுகக்கட்டி, வலுவாய்க்
காவலன் தன் சேர்வை எல்லாம் கூடி அளித்தார்.- சரணம்

3. முள்ளின் முடி செய்தழுத்தி, வள்ளல் எனவே,
மூர்க்க முடனேதடி கொண் டார்க்க அடித்தார்.- சரணம்

4. கையினில் செங்கோலதென்று மூங்கில் ஒன்றிட்டு
காவலன் நீ யூதருக்கென் றோவியஞ் சொன்னார்.- சரணம்

5. துப்பினார் முகத்தினில் அதிக்கிரமமாய்
துன்னிய கைக்கோலை வாங்கி சென்னியில் போட்டார்.
- சரணம்

6. முழங்காலிலே இருந்து தெண்டன் பண்ணியே
முன்னவனைத்தான் இறைஞ்சிக் கன்னத்தறைந்தார்.
- சரணம்

*- வேதநாயகம் சாசுதிரியார்*

**148** **கி.கீ.52**

*நாதநாமக்கிரியை* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஏங்குதே என்னகந்தான், துயர்**
தாங்குதில்லை முகந்தான்

***அனுபல்லவி***

பூங்காவிலே கனிந்தேங்கி நீர் மன்றாட
ஓங்கியே உதிரங்கள்
நீங்கியே துயர்கண்டு - ஏங்குதே

அட்டவணை

***சரணங்கள்***

1. மேசியாவென்றுரைத்து, யூத
ராஜனென்றே நகைத்து
தூஷணித்தே அடித்து, நினைக்குட்டி
மாசுகளே, சுமத்தி
ஆசாரமின்றியே ஆசாரியனிடம்
நீசர்கள் செய் கொடும் தோஷமது கண்டு – ஏங்குதே

2. யூதாஸ் காட்டிக்கொடுக்க, சீமோன்
பேதுரு மறுதலிக்க
சூதா யெரோதே மெய்க்க, வெகு
தீதாயுடை தரிக்க
நாதானே, இவ்விதம் நீதமொன்றில்லாமல்
சோதனையாய்ச் செய்யும் வேதனையைக் கண்டு–ஏங்குதே

3. நீண்ட குரு செடுத்து, எருசலேம்
தாண்ட மலையெடுத்து
ஈண்டல் பின்னே தொடுத்து, அவரின்மேல்
வேண்டும் வசை கொடுத்து
ஆண்டவர் கை காலில் பூண்டிடும் ஆணியால்
மாண்டதினால் நரர் மீண்ட தென்றாலுமே — ஏங்குதே

*–தேவசகாயம் ரைட்டர்*

**149** **கி.கீ.53**

*உசேனி* *சாபுதாளம்*

**1. பரனே, பரப்பொருளே –நித்திய – பாக்கியானே சதயவாக்கியனே,**
நரரான பாவிகட்காய் – இந்த – நானிலத்தில் வந்த வானவனே!

2. காவில் அதம் ஏவை – தேவ – கற்பனை மறீனதால் உலகில்
மேவிய பாவம் அற – பொல்லா – வெஞ்சினக் கூரியின் வஞ்சமற

அட்டவணை

3. வேறோர் மலர்க்காவில் – சென்று – வேதனைப் போற்றி,
மனம் நொறுங்கி
ஆறாக் கொடுந் துயரம் – உந்தன் – ஆத்துமத்தில் வரலானதுவோ?

4. ஈராறு சீடர்களில் – பண இச்சை – மிகுந்த ஒரு சீடன்
பேர் யூதாஸ்காரி யோத்தாம்–அவன்–பேசினதின்படி காசு பெற்று

5. ஓசன்னாரின் கும்புகளை – அழைத் – தோடிவந்தே,
உம்மை நாடி வந்தே
கன்னத்தில் முத்தமிட்டே – உம்மைக் காட்டிக் கொடுக்கத்
துணிந்தானோ?

6. காட்டிக் கொடுத்திடவும் – அந்த – காதகராகிய பாதகர் கை
போட்டே பிடித்திடவும் – பின்னும் – பொற்கரங் கட்டி
இழுத்திடவும்

7. செம்புருவையைப் போலே – கூடச் – சென்றிடக்
காய்பாமுன் நின்றிடவும்
அம்பரனே, உந்தனுக்கு – இந்த – ஆபத்து வந்த
தென்பாவம் அல்லோ?

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**150** **கி.கீ.54**

*நீலாம்புரி* *ஆதிதாளம்*

1. **ஐயா நீரன்று அன்னா காய்பாவின் வீட்டில்**
நையவே பட்ட பாடு ஏசையாவே!
கைகள் கட்டப்பட்டதோ? கால்கள் தள்ளாடினவோ?
கயவர்கள் தூஷித்தாரோ, ஏசையாவே!

2. திரு முகம் அருள் மங்க, செங்குருதிகள் பொங்க,
இருளர் கஸ்தி கொடுக்க, ஏசையாவே!
பொறுமை, அன்பு, தயாளம் புனிதமாக விளங்க
அருமைப் பொருளதான ஏசையாவே!

அட்டவணை

3. முள்ளின் முடியணிந்து வள்ளலே, என் றிகழ
எள்ளளவும் பேசாத ஏசையாவே!
கள்ளன் போலே பிடித்துக் கசையால் அடித்து மிகக்
கன்மிகள் செய்த பாவம் ஏசையாவே!

4. கற்றூணில் சேர்த்திறுக்கிச் செற்றலர்தாம் முறுக்கிக்
கர்வங்கொண்டே தூஷிக்க, ஏசையாவே!
சற்றுமிரக்கமில்லாச் சண்டாளன் ஓடி வந்த
சாடிக் கன்னத்தறைய ஏசையாவே!

5. பொன்னான மேனியதில் புழுதி மிகப் படிய
புண்ணியன் நீர் கலங்க, ஏசையாவே!
அண்ணலே, அன்பருய்ய அவஸ்தைகளைச் சகித்தீர்
அடியேனைக் காத்தருளும், ஏசையாவே!

*– அ. சவரிமுத்துப் போதகர்*

**151** **கி.கீ.57**

*நாதநாமக்கிரியை* *சாபுதாளம்*

***பல்லவி***

பாவி நான் என்ன செய்வேன், கோவே
ஜீவன் நீர் விட்டதற்காய்?

***அனுபல்லவி***

தேவ கோபத்தினால் மேவிச் சிலுவையில்
தாவி உயிர் விட்டு ஜீவித்த தென்கொலோ? – பாவி

***சரணங்கள்***

1. நாடி எனைத் தயவாய் – மணஞ் செய்ய – தேடி வந்தீர், அரசே,
ஆடுகளுக்காக நீடி உயிர் தர
பாடு பட்டுக் குரு குடிறந்தீர் அன்றோ? – பாவி

2. பொன்னுல காதிபனே தேவரீர் என்ன செய்தீர் ஐயனே?
சின்னப் படுத்தவும் கன்னடித்தடிக்கவும்
சென்னியில் முள்முடி தன்னை அழுத்தவும் – பாவி

3. வாரால் அடிக்கப்பட்டு – குட்டுண்டு – வாதைப்பட்டெண்ணம் அற்றீர்
சீரா மனுடவ தாரா, சருவாததி
காரா, பரம குமாரா, ஓலோலமே! – பாவி

4. வாதை உமக்கெதினால் – உண்டாயிற்று? – பாதகி பாவத்தினால்
வேதம் நிறைவுற, ஆதி பவம் அற
நீதி தரும் யேசு நாத சுவாமியே – பாவி

5. குற்றமற்ற மீட்பர், – பவக்கடன் – முற்றும் அறத்தீர்ப்பர்
கொற்றவர்க்கும், கல்வி கற்றவர்க்கும், சுரர்
மற்றவர்க்கும் அளவற்ற கிருபையே – பாவி

*– வேதநாயகம் சாசுதிரியார்*

**152** **கி.கீ.60**
*புன்னாகவராளி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**எங்கே சுமந்து போகிறீர்? சிலுவையை நீர்**
எங்கே சுமந்து போகிறீர்?

***சரணங்கள்***

1. எங்கே சுமந்து போறீர்? இந்தக் கானலில் உமது
அங்கம் முழுதும் நோக, ஐயா, என் ஏசு நாதா – எங்கே

2. தோளில் பாரம் அழுத்த, தூக்கப் பெலம் இல்லாமல்
தாளுந் தத்தளிக்கவே, தாப சோபம் உற, நீர் – எங்கே

3. வாதையினால் உடலும் வாடித் தவிப்புண்டாக,
பேதம் இல்லாச் சீமோனும் பின்னாகத் தாங்கிவர – எங்கே

4. தாயார் அழுதுவர சார்ந்தவர் பின் தொடர,
மாயம் இல்லாத ஞான மாதர் புலம்பி வர – எங்கே

அட்டவணை

5. வல்ல பேயைக் கொல்லவும், மரணந்தனை வெல்லவும்
எல்லை இல்லாப் பாவங்கள் எல்லாம் நாசமாகவும் – எங்கே

6. மாசணுகாத சத்திய வாசகனே, உமது
தாசர்களைக் காக்கவும் தாங்காச் சுமையை எடுத்து – எங்கே

**153** **கி.கீ.61**

*இந்துஸ்தானி* *அடதாளம்*

1. **எருசலேமே! எருசலேமே! எருசலேமே! எருசலேமே!**
என் பிரிய சாலமே!
விரும்பி வந்தேன் பார்!
இதோ பார், இதோ பார்! – எருசலேமே!

2. கனியைக் காணேன், கனியைக் காணேன்,
கனியைக் காணேன், கனியைக் காணேன்,
கசிந்துருகியே
தனியே யான் வந்து
தவிக்கிறேன், தவிக்கிறேன்

3. இந்த நாளாயினும், இந்த நாளாயினும்
இந்த நாளாயினும், இந்த நாளாயினும்
இணங்க மனமோ
எந்தனிடம் பெறச்
சமாதானம், சமாதானம்.

4. கண்கள் இல்லையோ? கண்கள் இல்லையோ?
கண்கள் இல்லையோ? கண்கள் இல்லையோ?
கர்த்தன் உன் ராஜாவைக்
கண்டானந்தித்துமே
களிகூர, களிகூர

*– வேதநாயகம் பாகவதர்*

அட்டவணை

**154** **கி.கீ.63**

1. **நெஞ்சமே, கெத்சமேனக்கு நீ நடந்து வந்திடாயோ?**
சஞ்சலத்தால் நெஞ்சுருகித் தயங்குகின்றார் ஆண்டவனார்.

2. ஆத்துமத்தில் வாதை மிஞ்சி, அங்கலாய்த்து வாடுகின்றார்
தேற்றுவார் இங்காருமின்றித் தியங்குகின்றார் ஆண்டவனார்.

3. தேவகோபத் தீச்சூளையில் சிந்தை நொந்து வெந்துருகி
ஆவலாய்த் தரையில் வீழ்ந்து அழுது ஜெபம் செய்கின்றாரே.

4. அப்பா பிதாவே இப்பாத்ரம் அகலச் செய்யும் சித்தமானால்
எப்படியும் நின் சித்தம்போல் எனக்காகட்டும் என்கின்றாரே.

5. ரத்த வேர்வையாலே தேகம் மெத்த நனைந்திருக்குதே
குற்றம் ஒன்றும் செய்திடாத கொற்றவர்க்கிவ் வாதை ஏனோ?

6. வானத்திலிருந்தோர் தூதன் வந்தவரைப் பலப்படுத்தத்
தான் சஞ்சலத்தோடு முழந்தாள் நின்று வேண்டுகின்றார்.

7. தாங்கொணா நித்திரை கொண்டு தன் சீஷர்கள் உறங்கி விழ
ஆங்கவர் தனித்திருந்து அங்கலாய்த்து வாடுகின்றார்.

*– ஐ.ஏ. சாமுவேல்*

**155** **கி.கீ.64**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**குருசினில் தொங்கியே, குருதியும் வடிய,**
கொல்கதா மலைதனிலே – நம்
குருவேசு சுவாமி கொடுந் துயர், பாவி
கொள்ளாய் கண் கொண்டு

அட்டவணை

***சரணங்கள்***

1. சிரசினில் முள்முடி உறுத்திட, அறைந்தே
சிலுவையில் சேர்த்தையோ! – தீயர்
திருக்கரங் கால்களில் ஆணிகளடித்தார்,
சேனைத்திரள் சூழ – குருசினில்

2. பாதகர் நடுவில் பாவியினேசன்
பாதகன் போல் தொங்க – யூத
பாதகர் பரிகாசங்கள் பண்ணிப்
படுத்திய கொடுமைதனை – குருசினில்

3. சந்திர சூரிய சசல வான் சேனைகள்
சகியாமல், நாணுதையோ! – தேவ
சுந்தர மைந்த னுயிர் விடுகாட்சியால்
துடிக்கா நெஞ்சுண்டோ? – குருசினில்

4. ஈட்டியால் சேவகன் எட்டியே குத்த
இறைவன் விலாவதிலே – அவர்
தீட்டிய திட்சைக் குருதியும் ஜலமும்
திறந்தூறோடுது பார்; – குருசினில்

5. எருசலேம் மாதே, மறுகி நீயழுது
ஏங்கிப் புலம்பலையோ? – நின்
எருசலையதிபன் இள மணவாளன்
எடுத்த கோல மிதோ? – குருசினில்

*– சு.ச. ஏசடியான்*

**156** **ப.கீ.93**

*இராகம் : இங்கிலீஷ்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**கனம், கனம் பராபரன் கருணையின் குமாரனே**
தினம்! தினம் கீர்த்தனம்; ஜெயம்! ஜெயம்! ஸ்தோத்திரம்

அட்டவணை

### *சரணங்கள்*

1. வனந்தனிலே மானிடர் வருந்தின பாதகம் அற,
கனிந்து நமதாண்டவர் கடுந்துயரம் பூண்டனர். – கனம்

2. அன்னாவும் காய்பாவுமாய் அடர்ந்த சங்கம் யாவரும்
இன்னா ஞாயங் கூறியே எதிர்த்து, தீர்ப்பதிட்டனர். – கனம்

3. ஞாய சங்க மீதிலே நாதனைச் சினந்தொரு
தீய பாவிதான் அவர் திரு முகந்தறைந்தனன். – கனம்

4. ஆகடியமாக முக் காட திட்டிராவெல்லாம்
ஏகனைப் பரிகாசமாய் ஈனர் குட்டவும் செய்தார். – கனம்

5. கைச்சரசம் பண்ணினார்; காவல் மீதிருத்தினார்
அச்சமற்ற கந்தையாய் அநேக தூஷணஞ் சொன்னார். – கனம்

6. சங்க மீதிரண்டு பொய்ச்சாட்சிகள் எழுந்துமே,
பங்கமான தோதினும், பரிந்து கேட்டிருந்தனர். – கனம்

7. பெத்தரிக்கமாகவே பேதுரு அப்போஸ்தலன்
சத்தியங்கள் பண்ணியே தான் மறுதலித்தனன் – கனம்

8. கஸ்தியதுறச் சொல்லி, கனன் றெழுந்து ஆரியன்
வஸ்திரம் கிழித்துமே, மரணத் தீர்ப்பியற்றினன் – கனம்

## 157

*இராகம் : வராளி* *ஏகதாளம்*

### *பல்லவி*

**ஆச்சரியமான காட்சியைப் பார்க்கலாம், வா – ஆ! கல்**
வாரிச் சிலுவையில் வானவன் தொங்குகின்ற
ஆச்சரியமான காட்சியைப் பார்க்கலாம், வா

அட்டவணை

### *அனுபல்லவி*

சூட்சமுறு தேவ காட்சியாங் கற்பனை
துய்யத்தை நரர்மீறி – மகா
துர்குணப் பேயின் தந்திரத்தினால்
தூய்மை விட்டனர், வாய்மை கெட்டனர்
சுத்தகிறிஸ்தரசன் – தேவனுட
சித்தன், அமைச்சிரசன், மாந்தர்களின்
துன்பத்தைப் போக்கவும், இன்பத்தைச் சேர்க்கவும்
தோஷஞ் செய்பாதகன் வேஷமாய்த் தொங்குகின்ற – ஆச்சரிய

### *சரணங்கள்*

1. எருசலைநகர் மருவுங் கல்வாரி
என்னப்பட்ட ஒரு மேடு; – அதில்
ஏசுக்கிறிஸ்தெனும் நேசமகத்துவன்
எங்களுக்காய்ப்படும் பாடு – மரக்
குருசில் ஏறியே சிரசில் முள்முடி
கொண்டதும் நொந்ததும் நீடு – அப்போ
கொற்றவன் தன் முகம் சற்றேனுங் காட்டாத
குறையதும் ஒருபீடு;
குருதி வடியவே, சுருதிமுடியவே
பருதி மறையவே, திரையுங் கிழியவே,
கொலைஞர் அவமதிக்க, – துஷ்டனாம்
அலகை மனங்கொதிக்க, கசப்புடன்
கோனே, என்னை நீர் ஏனோ கைவிட்டீர்?
கொடுக்கிறேன் ஜீவனை, எடுத்திடு மென்றமும் – ஆச்சரிய

2. பூலோகத்தாரே, இம்மேலான காட்சியின்
புண்ணியத்தை வந்து பாரும், – தேவ
புத்திரன் ரத்தமும் நீரும் நம்மை
மேலோகஞ் சேர்க்கின்ற சாலக்கிருபையின்
விஸ்தார ஊற்றென்று சேரும்; – அதில்
விழுந்து ஆத்மம் முழுகிப் பாவந் தீ
வினை அகன்றிட வாரும்,
சீலமற்ற மாந்தர் கோல முற்ற வேந்தர்
ஜீவனதிபதி சாவினாலே நம்மைத்
தெய்வ லோகஞ் சேர்க்க – நித்தியமாய்
உய்யும் சுத்தோராக்க, சுத்த பிதா
செல்வக் கிறிஸ்தந்தக் கல்வாரி மேட்டினில்
ஜீவன் துடிக்கதத்தம் ஆவி விடுகின்ற – ஆச்சரிய

The Life was given for me

**158** *Baca* **பா.349**

S.S.621 6,6,6,6,6,6

1. **நீர் தந்தீர் எனக்காய்**
உம் உயிர் ரத்தமும்
நான் மீட்கப்பட்டோனாய்
சாகாமல் வாழவும்
நீர் தந்தீர் எனக்காய்;
நான் யாது தந்திட்டேன்.

2. பின்னிட்டீர் ஆண்டுகள்
வேதனை துக்கமும்;
நான் நித்திய நித்தியமாய்
பேரின்பம் பெறவும்
பின்னிட்டீர் எனக்காய்
நான் யாது பின்னிட்டேன்?

அட்டவணை

3. பிதாவின் விண் வீடும்
ஆசனமும் விட்டீர்;
பார் இருள் காட்டிலும்
தனித்தே அலைந்தீர்
நீர் விட்டீர் எனக்காய்;
நான் யாதெது விட்டேன்?

4. சொல்லொண்ணா வேதனை
அகோர கஸ்தியும்
சகித்தீர் எனக்காய்;
நரகம் தப்பவும்
சகித்தீர் எனக்காய்
நான் யாது சகித்தேன்?

5. கொணர்ந்தீர் எனக்காய்
விண் வீட்டினின்று
மீட்பு சமூலமாய்
மன்னிப்பு மா அன்பு
கொணர்ந்தீர் எனக்காய்;
நான் யாது கொணர்ந்தேன்?

6. என் ஜீவன் தருவேன்
பற்றாசை ஒழித்து
உமக்காய் ஜீவிப்பேன்
யாவுமே சகித்து
நீர் தந்தீர் உம்மையே
நான் தந்தேன் என்னையே.

**159** The Old Rugged Cross

1. **கொல்கொதா மலைமேல் தோன்றுதோர் சிலுவை**
அல்லல் பழிப்பின் சின்னமதாம்,
நீசப் பாவிகட்காய் நேசர் மாண்டாரதில்
நேசிப்பேன் அத்தொல் சிலுவையை

அட்டவணை

***பல்லவி***

அந்தச் சிலுவையை நேசிப்பேன்
பெலன் ஓய்ந்து நான் சாகும் வரை
தொல் சிலுவையை நான் பற்றுவேன்
பின் அதால் க்ரீடத்தை அணிவேன்

2. தேவாட்டுக் குட்டிதம் மாட்சிமை வெறுத்து
உலகோர் பழித்த குருசை,
கல்வாரி மலைக்கே சுமந்தார் எனக்காய்
கவர்ந்த தென்னுள்ளத் தையது

3. என் பாவம் மன்னிக்க, என்னைச் சுத்தமாக்க
நேசர் மாண்ட சிலுவையதோ
தூய ரத்தம் தோய்ந்த அந்தச் சிலுவையின்
அழகெத்தனை மாட்சிமை பார்!

4. குருசின் இழிவை மகிழ்வாய் சுமந்தே
மேன்மை பாராட்டுவேன் நிந்தையில்,
பின்னால் மோட்சலோகில் நேசர் கூட்டிச் சென்று
பங்களிப்பார் தம் மகிமையில்.

**160**

*இராகம் : இந்துஸ்தானி*

***பல்லவி***

**ஏசையா, பிளந்த ஆதி மலையே,**
மோச நாளில் உன்னில் ஒளிப்பேனே

***சரணங்கள்***

1. மோசமுள்ள பாவ நோய் முழுவதும் என்னில் நீர், ஐயா
தோஷம் நீக்கும் இரு மருந்தாமே – சொரிந்த உதிரம் தீருமே – ஏசையா

அட்டவணை

2. இகத்தில் என்னென்ன செய்தாலும் ஏற்காதே உன் நீதிக்கு,
மிகவாய் நொந்தழுதும் திராதே – மீளாப்பாவ ரோகமே – ஏசையா

3. பேரறம் அருந்தவம் பெரு மிதமாய்ச் செய்திடினும்
நேரஸ்தரின் பாவம் நீங்குமோ? நீங்காதே உன்னாலல்லால். – ஏசையா

4. வெறுங்கையோடோடி வந்து, வினை நாசன் பேரருள் கெஞ்சி
திருச்சிலுவை தஞ்சம் புகுந்து தியங்கி அணைத்தே நிற்பேன் – ஏசையா

5. அருளிலிருகோன் ஆனாலும், அபயமுன் தன் நீதிக்கே!
கருணை ஊற்றிக் கழுவமாட்டாயோ? – கழுவாயாகிற் சாவேனே.– ஏசையா

6. ஜீவனோடே தங்கினாலும், தெளிகண் சாவில் மங்கிலும்
தேவாசனமும் அஞ்சி நிற்க, தேவலோக மேறிலும். – ஏசையா

*–இராபர்ட் கால்டுவெல்*

**161**

1. **அன்னமே சீயோன் கண்ணே அன்பரதோ போனாரடி**
மன்னவர் நமக்காகத் தம்மைப் பலியிடப் போனார்.

2. இன்னும் என்ன செய்யப் போனார் கன்னியரே சோரி சிந்த
என்னருமை ஏசுபரன் சின்னப்படப் போனாராடி.

3. பன்னிரு சீடர்களில் பண ஆசை கொண்ட யூதாஸ்
மன்னர் புகழ் தேசிகரைக் காட்டிக் கொடுக்கத் துணிந்தான்.

4. ஆகடிய யூதர் கூடி அண்ணல் திருக்கரத்தைக் கட்டி
தேகம் நொந்து துடிக்க ஓங்கி ஓங்கி அடித்தார்.

5. பித்தனென்று வெள்ளை அரைச்சட்டை ஒன்று தானுடத்தி
பேதக ஏரோதே அவன் பேசிப் பரிகாசம் செய்தான்.

அட்டவணை

6. குப்புற விழுந்தே துயர் அற்புதனடைந்தாரடி
எப்பொருளான திரியேக வஸ்து நமக்காக

7. கொல்கதா மலைதனிலே குருசதிலே தான் மரிக்க
கோதிலா நீதி பரன் போறார் அதோ பார் சகியே

8. பாரச்சிலுவை சுமந்து பாதகரோடே நடந்து
போற துயரறியப் பொங்கி மிக மனம் நொறுங்கி

9. வாசகன் ஏசு திருபாடுகளைத் தானுணர்ந்து
நேசமதாய்த் தாசர்களும் சாற்றுத் துதிப்பாடிடவே

## 6. சிலுவைத் திருவசனங்கள்

Forgive them O my Father

**162** *St. Margaret* **பா.115**

A.M.115 I 7,6,7,6

**1.** **கூர் ஆணி தேகம் பாய**
மா வேதனைப் பட்டார்;
'பிதாவே, இவர்கட்கு
மன்னிப்பீயும்' என்றார்.

2. தம் ரத்தம் சிந்தினோரை
நல் மீட்பர் நிந்தியார்;
மா தெய்வ நேசத்தோடு
இவ்வாறு ஜெபித்தார்.

3. எனக்கே அவ்வுருக்கம்
எனக்கே அச்செபம்
அவ்வித மன்னிப்பையே
எனக்கும் அருளும்.

4. நீர் சிலுவையில் சாகச்
செய்ததென் அகந்தை;
கடாவினேன், இயேசுவே
நானுங் கூர் ஆணியை.

அட்டவணை

5. உம் சாந்தக் கண்டிதத்தை
நான் நித்தம் இகழ்ந்தேன்;
எனக்கும் மன்னிப்பீயும்
எண்ணாமல் நான் செய்தேன்.

6. ஆ, இன்ப நேச ஆழி!
ஆ, திவ்விய உருக்கம்!
நிந்திப்போர் அறியாமல்
செய் பாவம் மன்னியும்.

Lord when The Kingdom comes remember me

**163** *Cry of Faith, Ellers* **பா.116**

A.M. 31 I 10,10,10,10

1. **'உம் ராஜ்யம் வருங்காலை, கர்த்தரே,**
அடியேனை நினையும்' என்பதாய்
சாகும் கள்ளன் விஸ்வாச நோக்காலே
விண் மாட்சி கண்டு சொன்னான் தெளிவாய்.

2. அவர் ஓர் ராஜா என்று சொல்லுவார்
எவ்வடையாளமும் கண்டிலாரே;
தம் பெலனற்ற கையை நீட்டினார்;
முட் கிரீடம் நெற்றி சூழ்ந்து பீறிற்றே.

3. ஆனாலும், மாளும் மீட்பர் மா அன்பாய்
அருளும் வாக்கு, ‘இன்று என்னுடன்
மெய்யாய் நீ பரதீஸிலிருப்பாய்’
என்பதுவாம் விஸ்வாசத்தின் பலன்

4. கர்த்தாவே, நானும் சாகும் நேரத்தில்
‘என்னை நினையும்’ என்று ஜெபித்தே
உம் சிலுவையை, தியானம் செய்கையில்
உம் ராஜியத்தைக் கண்ணோக்கச் செய்யுமே.

அட்டவணை

5. ஆனால், என் பாவம் நினையாதேயும்
உம் ரத்தத்தால் அதைக் கழுவினீர்;
உம் திரு சாவால் பாவ மன்னிப்பும்
ரட்சிப்பும் எனக்காய்ச் சம்பாதித்தீர்.

6. 'என்னை நினையும்', ஆனால், உமக்கும்
என்னால் உண்டான துன்பம் கொஞ்சமோ?
சிலுவை, நோவு, ரத்த வேர்வையும்,
சகித்த நீர், இவை மறப்பீரோ?

7. 'என்னை நினையும்' நான் மரிக்கும் நாள்
'நீயும் என்னோடு தங்குவாய் இன்றே'
நற் பரதீஸில்' என்னும் உம் வாக்கால்
என் ஆவி தேர்ந்து மீளச் செய்யுமே.

At the Cross Her station keeping

**164** *Stabat Mater* **பா.117**

A.M. 117 III 8,8,7,D

1. **சிலுவையைப் பற்றி நின்று**
துஞ்சும் மகனைக் கண்ணுற்று,
விம்மிப் பொங்கினார் ஈன்றாள்;
தெய்வ மாதா மயங்கினார்;
சஞ்சலத்தால் கலங்கினார்;
பாய்ந்ததாத்துமாவில் வாள்.

2. பாக்கியவதி மாதா உற்றார்
சிலுவையை நோக்கிப் பார்த்தார்;
அந்தோ என்ன வேதனை!
ஏக புத்திரனிழந்து,
துக்க சாகரத்தில் ஆழ்ந்து,
சோகமுற்றனர் அன்னை.

அட்டவணை

3. இண ையிலா இடருற்ற
அன்னை அருந்துயருற
யாவரும் உருகாரோ?
தெய்வ மைந்தன் தாயார் இந்த
துக்க பாத்திரம் அருந்த,
மாதாவோடழார் யாரோ.

4. தம் குமாரன் காயப்பட,
முள்ளால் கிரீடம் சூட்டப்பட,
இந்த நிந்தை நோக்கினார்;
நீதியற்ற தீர்ப்புப் பெற
அன்பர், சீஷர் கைவிட்டோட
அவர் சாகவும் கண்டார்.

5. அன்பின் ஊற்றாம், இயேசு ஸ்வாமி,
உம தன்னைக்குள்ள பக்தி
எந்தன் நெஞ்சில் ஊற்றிடும்
அன்பினால் என் உள்ளம் பொங்க
அனல் கொண்டகம் உருக
அருளைக் கடாட்சியும்.

Throned upon the awful Tree

**165** *Gethsemane* **பா.118**

A.M. 118 7,7,7,7,7,7

1. **துயருற்ற வேந்தரே,**
சிலுவை ஆசனரே,
நோவால் வாடும் முகத்தை
இருள் திரை மூடிற்றே;
எண்ணிறந்த துன்பம் நீர்
மௌனமாகச் சகித்தீர்.

அட்டவணை

2. பலியாக மரிக்கும்
வேளை வரும் அளவும்
மூன்று மணி நேரமாய்
துணையின்றி மௌனமாய்
காரிருளில் தேவரீர்
பேயோடே போராடினீர்.

3. தெய்வ ஏக மைந்தனார்
அபிஷேக நாதனார்,
தேவனே, என் தேவனே
என்தனை ஏன் கைவிட்டீர்?'
என்றுரைக்கும் வாசகம்
கேள், இருண்ட ரகசியம்!

4. துயர் திகில் இருண்டே,
சூழும்போது, தாசரை
கைவிடாதபடி நீர்
கைவிடப்பட்டிருந்தீர்;
இக்கட்டில் சமீபம் நீர்
என்றிதாலே கற்பிப்பீர்

His Are The Thousand Sparkling Rills

**166** *Assisi* **பா.119**

A.M. 119 8,8,8,6

1. **அருவிகள் ஆயிரமாய்**
பாய்ந்து இலங்கிடச் செய்வார்,
அனைத்தும் ஆள்வோர், 'தாகமாய்
இருக்கிறேன்' என்றார்.

2. வெம் போரில் சாவோர் வேதனை,
வியாதியஸ்தர் காய்ச்சலும்,
குருசில் கூறும் இவ்வொரே
ஓலத்தில் அடங்கும்.

3. அகோரமான நோவிலும்,
மானிடர் ஆத்துமாக்களை
வாஞ்சிக்கும் தாகம் முக்கியம்;
என் ஆன்மாவும் ஒன்றே.

4. அந்நா வறட்சி, தாகமும்
என்னால் உற்றீர், பேர் அன்பரே;
என் ஆன்மா உம்மை முற்றிலும்
வாஞ்சிக்கச் செய்யுமே.

**167** O perfect Life of Love **பா.120**

A.M. 120 I S.M.

**1. பூரண வாழ்க்கையே,**
தெய்வாசனம் விட்டு
தாம் வந்த நோக்கம் யாவுமே
இதோ முடிந்தது.

2. பிதாவின் சித்தத்தை
கோதற முடித்தார்
தொல் வேத உரைப்படியே
கஸ்தியைச் சகித்தார்.

3. அவர் படாத் துக்கம்
நரர்க்கு இல்லையே;
உருகும் அவர் நெஞ்சிலும்
நம் துன்பம் பாய்ந்ததே.

4. முள் தைத்த சிரசில்
நம் பாவம் சுமந்தார்;
நாம் தூயோராகத் தம் நெஞ்சில்
நம் ஆக்கினை ஏற்றார்.

அட்டவணை

5. எங்களை நேசித்தே
எங்களுக்காய் மாண்டீர்;
ஆ, சர்வ பாவப் பலியே,
எங்கள் சகாயர் நீர்.

6. எத்துன்ப நாளுமே,
மா நியாயத்தீர்ப்பிலும்,
உம் புண்ணியம், தூய மீட்பரே
எங்கள் அடைக்கலம்.

7. இன்னும் உம் கிரியை
எங்களில் செய்திடும்
நீர் அன்பாய் ஈந்த கிருபைக்கே
என் அன்பு ஈடாகும்.

And Now Beloved Lord Thy Soul Resigning

**168** *Commendatio* **பா.121**

A.M. 121 11,10,11,10

1. **இப்போது, நேச நாதா, தலை சாய்த்து**
தெளிந்த அறிவோடு ஆவியை
ஒப்புவித்தீர் பிதாவின் கரமீது;
பொங்கு நெஞ்சம் மூச்சற் றொடுங்கிற்றே.

2. சாமட்டும் சாந்தமாய் என் துக்கப் பாரம்
நீர் தாங்கி, மனதார மரித்தீர்;
உம் சாவில் பெலன் உற்றே, ஆவியையும்
அமைதலாய்த் தந்தைக் கொப்புவித்தீர்.

3. நல் மீட்பரே, சாவிருள் என்னைச் சூழ்ந்து,
மரண அவஸ்தை உண்டாகையில்,
தொய்யும் ஆவியில் சமாதானம் ஈந்து
ஒளி உண்டாக்கும் அச்சராவினில்.

அட்டவணை

4. நான் மாளும்ப போதும் சிலுவையைக் காட்டும்;
என் தலையை உம் மார்பில் அணைத்தே
என் கடை மூச்சை அன்பாய் ஏற்றுக்கொள்ளும்
அப்பால் உம் நித்திய ஓய்வு என்னதே

## 7. உயிர்த்தெழுதல்

**169** Alleluya O sons and daughters **பா.122**

A.M. 135 8,8,8

1. **அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா! ஆ**
ஆ மாந்தரே, நாம் பாடுவோம்
இந்நாளில் சாவை வென்றோராம்
விண் மாட்சி வேந்தர் போற்றுவோம்
அல்லேலூயா!

2. அஞ்ஞாயிறு அதிகாலை
நல் மாதர் மூவர் கல்லறை
சென்றாரே காண தேகத்தை

3. அம்மூவர் பார்த்தார் தூதன்தான்;
வெண் ஆடை தூதன் சொல்லுவான்;
'நாதர் கலிலேயா செல்வார்'!

4. பயந்த சீஷர் ராவிலே
கண்டார் கேட்டார் தம் நாதரே!
'என் சமாதானம், தாசரே!'

5. 'உயிர்த்த நாதர் கண்டோமே'
என்றோரைத் தோமா கேட்டானே
நம்பான், சந்தேகங் கொண்டானே;

6. 'வா, தோமா, என் விலாவைப் பார்
இதோ, என் கைகள் கால்கள் பார்,
நம்பு, சந்தேகம் தீர்' என்பார்.

அட்டவணை

7. தோமா சந்தேகம் தீர்ந்தனன்,
விலா, கை, கால்கள் நோக்கினன்,
என் நாதா! ஸ்வாமி! என்றனன்.

8. காணாமல் நம்பின பாக்கியர்;
மாறா விஸ்வாசம் வைப்பவர்,
மா நித்திய ஜீவன் பெறுவர்.

9. மா தூயதாம் இந்நாளில் நாம்
நம் பாடல் ஸ்தோத்ரம் படைப்போம்;
பரனைப் போற்றி மகிழ்வோம்
அல்லேலூயா!

Alleluya! the strife is O'er

**170** *Victory* **பா.123**

A.M. 135 8,8,8

**1. அல்லேலூயா! அல்லேலூயா! அல்லேலூயா!**
இப்போது போர் முடிந்ததே;
சிறந்த வெற்றி ஆயிற்றே;
கெம்பீர ஸ்துதி செய்வோமே
அல்லேலூயா!

2. கொடூர சாவை மேற்கொண்டார்;
பாதாள சேனையை வென்றார்;
நம் ஸ்தோத்திரப் பாட்டைப் பெறுவார்
அல்லேலூயா!

3. இந்நாள் எழுந்த வேந்தரே,
என்றைக்கும் அரசாள்வீரே!
களித்து ஆர்ப்பரிப்போமே!
அல்லேலூயா!

4. எல்லாரும் உம்மைப் போற்ற நீர்
மரித்துயிர்த்திருக்கிறீர்;
சாகாத ஜீவன் அருள்வீர்
அல்லேலூயா!

**171** *Easter Alleluya* **பா.124**

A.M. 126 L.M.

1. **இந்நாளே கிறிஸ்து வெற்றியை**
அடைந்து, தம் பகைஞரைச்
சிறைப்பிடித்துக் கொண்டுபோம்
ஜெய நாளென்று பாடுவோம்
அல்லேலூயா!

2. பேய் பாவம் சாவு நரகம்
எக்கேடும், இன்றையத்தினம்
எழுந்த கிறிஸ்தின் காலுக்குக்
கீழாய் விழுந்து கெட்டது
அல்லேலூயா!

3. இரண்டு சீஷரோடன்றே
வழியில் கர்த்தர் பேசவே,
பேரின்பம் மூண்டு பிறகு
ஆரென்றறியலாயிற்று
அல்லேலூயா!

4. அந்நாளில் சீஷர் கர்த்தரின்
அற்புதக் காட்சி கண்டபின்
துக்கித்தவர்கள் நெஞ்சுக்குச்
சந்தோஷ பூரிப்பாயிற்று
அல்லேலூயா!

5. புளிப்பில்லாத அப்பமாம்
சன்மார்க்கப் போதகத்தை நாம்
வழங்கிக் கொண்டிருக்கிறோம்
புளித்த மாவைத் தள்ளுவோம்
அல்லேலூயா!

6. கர்த்தாவே, எங்கள் நீதிக்காய்
நீர் எழுந்தீர் கெம்பீரமாய்;
வெற்றி சிறந்த உமக்கே
மா ஸ்தோத்திரம் உண்டாகவே!
அல்லேலூயா!

Jesus Lives

**172** *St. Albinus* **பா.125**

A.M. 140 I 7,8,7,8

1. **இயேசு உயிர்த்தெழுந்ததால்**
சாவின் பயம் அணுகாது
உயிர்த்தெழுந்தார் ஆதலால்
சாவு நம்மை மேற்கொள்ளாது
அல்லேலூயா!

2. உயிர்த்தெழுந்தார் மரணம்
நித்திய ஜீவ வாசல் ஆகும்
இதினால் பயங்கரம்
சாவில் முற்றும் நீங்கிப்போகும்
அல்லேலூயா!

3. உயிர்த்தெழுந்தார் மாந்தர்க்காய்
ஜீவன் ஈந்து மாண்டதாலே
இயேசுவை மா நேசமாய்
சேவிப்போம் மெய்ப் பக்தியோடே
அல்லேலூயா!

அட்டவணை

4. உயிர்த்தெழுந்தார் பேரன்பை
நீக்க முடியாது ஏதும்;
ஜீவன் சாவிலும் நம்மை
அது கைவிடாது காக்கும்
அல்லேலூயா!

5. உயிர்த்தெழுந்தார் வேந்தராய்
சர்வ லோகம் அரசாள்வார்;
அவரோடானந்தமாய்
பக்தர் இளைப்பாறி வாழ்வார்
அல்லேலூயா!

**173** Jesus Christ is risen today **பா.126**

A.M. 134 II *Easter Hymn* 7,7,7,7

1. **இன்று கிறிஸ்து எழுந்தார்,**
அல்லேலூயா!
இன்று வெற்றி சிறந்தார்
அல்லேலூயா!
சிலுவை சுமந்தவர்,
அல்லேலூயா!
மோட்சத்தைத் திறந்தவர்
அல்லேலூயா!

2. ஸ்தோத்திரப் பாட்டுப் பாடுவோம்
அல்லேலூயா!
விண்ணின் வேந்தைப் போற்றுவோம்
அல்லேலூயா!
அவர் தாழ்ந்துயர்ந்தாரே
அல்லேலூயா!
மாந்தர் மீட்பர் ஆனாரே,
அல்லேலூயா!

3. பாடநுபவித்தவர்,
அல்லேலூயா!
ரட்சிப்புக்குக் காரணர்
அல்லேலூயா!
வானில் இப்போதாள்கிறார்;
அல்லேலூயா!
தூதர் பாட்டைக் கேட்கிறார்
அல்லேலூயா!

**174** Christ is risen! Christ is risen! **பா.127**

A.M. 138 I *Resurrexit* 8,7,8,7,7,5,7,5

1. **கிறிஸ்தெழுந்தார்! கிறிஸ்தெழுந்தார்**
சாவின்சுரை முறித்தார்
கிறிஸ்தெழுந்தார்! கிறிஸ்தெழுந்தார்!
அல்லேலூயா பாடுங்கள்!

நம்மை மீட்கச் சகித்தார்
தெய்வ சித்தால்
சிலுவையில் மரித்தார்,
அவர் ஸ்வாமியாம்.

கிறிஸ்தெழுந்தார்! கிறிஸ்தெழுந்தார்!
சாவின் கூரை முறித்தார்;
கிறிஸ்தெழுந்தார்! கிறிஸ்தெழுந்தார்!
அல்லேலூயா பாடுங்கள்!

2. நாதன் சாவை ஜெயங்கொண்டார்
விண்ணோர் மண்ணோர் மகிழ்ந்தார்;
நேசக் கர்த்தர் எழுந்ததோ
மா அதிசயமன்றோ?

தந்தை வலப் பக்கத்தில்
என்றும் ஆளுவார்
மீண்டும் நடுத்தீர்ப்பினில்
நம்மை அழைப்பார்.

அட்டவணை

3. வான தூதர் சேனை வந்து,
விண் பதியை வாழ்த்தவே,
வார்த்தை அவதாரர்க்கே விண்
வாஞ்சித்தக மகிழ்ந்தே;

வான ஜோதி இலங்க
பூமி மகிழ,
கிறிஸ்துவே சர்வாதிபர்
என்குதே சிஷ்டி.

**175** *Regent, Square* **பா.128**

A.M. 232 II 8,7,8,7,8,7

1. **சபையாரே, கூடிப் பாடி**
கர்த்தரை நாம் போற்றுவோம்;
பூரிப்பாய் மகிழ் கொண்டாடி,
களிகூரக்கடவோம்
இந்நாள் கிறிஸ்து சாவை வென்று
எழுந்தார்; ஆர்ப்பரிப்போம்.

2. சிலுவையில் ஜீவன் விட்டு,
பின்பு கல்லறையிலே
தாழ்மையாக வைக்கப்பட்டு
மூன்றாம் நாள் எழுந்தாரே;
லோக மீட்பர், வல்ல நாதர்,
வெற்றி வேந்தர் ஆனாரே.

3. மீட்பரே, நீர் மாட்சியாக
சாவின் கூரை முறித்தீர்;
நாங்கள் நீதிமான்களாக
பிதாமுன்னே நிற்கிறீர்;
என்றென்றைக்கும் விண் மண்ணோரும்
உம்மை வாழ்த்தப் பெறுவீர்.

அட்டவணை

4. சாவின் ஜெயம் ஜெயமல்ல,
தேகம் மண்ணாய்ப் போயினும்,
எல்லாம் கீழ்ப்படுத்த வல்ல
கர்த்தராலே மீளவும்
ஜீவன் பெற்று, மேன்மை கொண்டு,
மறு ரூபமாகிடும்.

Welcome happy morn

**176** *Hermas* **பா.131**

A.M. 683 11, 11, 11, 11

1. **'வாழ்க பாக்கிய காலை!' என்றும் கூறுவார்'**
இன்று சத்துருநாசம்! இன்றே மீட்பின் நாள்!
மாண்டோர் ஜீவன் பெற்றீர், நித்திய தெய்வமாம்
உம்மைச் சிஷ்டி யாவும் தாழ்ந்து சேவிக்கும்.

'வாழ்க பாக்கிய காலை' என்றும் கூறுவார்;
இன்று சத்துரு நாசம்! இன்றே மீட்பின் நாள்!

2. துளிர் காலம் பூண்டு பூமி மகிழ்ந்தே,
மீளும் ராயர் பின்செல் நற்பேறெனவே;
பசும் புல் வயல் பூவும் துளிர் இலையும்
துக்கம் அற்றார், வெற்றி கொண்டார் என்குதே.

3. மாதங்கள் தொடர்பும், நாட்கள் நீடிப்பும்,
ஓடும் நிமிஷமும் உம்மை வாழ்த்துதே;
காலை ஒளியும், விண், வயல், கடலும்
இருள் வென்ற வேந்தே, உம்மைப் போற்றுதே.

4. நீர் எம் மீட்பர், கர்த்தர், ஜீவன், சுகமாம்,
நீர் பிதாவின் திவ்விய ஏக சுதனம்;
நரர் சுபாவம் போக்க கிருபை பூண்டீர்,
மாந்தர் மீட்படைய மானிடன் ஆனீர்.

அட்டவணை

5. ஜீவ காரணர் நீர் சாவுக்குட்பட்டீர்,
மீட்பின் பலம் காட்ட பாதாளம் சென்றீர்;
இன்று மூன்றாம் நாளில் எழுந்திருப்பேன்,
என்று சொன்ன வாக்கை நின்று காருமேன்.

6. பேயால் கட்டுண்டோரின் சிறை நீக்குமே,
வீழ்ந்தோர் யார்க்கும் புனர் ஜீவன் தாருமே;
மாந்தர் யார்க்கும் ஜோதி முகம் காட்டுமே,
உமதொளி தந்து எம்மைக் காருமே.

**177** **கி.கீ.67**

*சங்கராபரணம்* *திஸ்ர ஏகதாளம்*

***பல்லவி***

**ஆமென், அல்லேலூயா! மகத்துவத் தம்பராபரா,**
ஆமென், அல்லேலூயா! ஜெயம்! ஜெயம்! அனந்த தோத்திரா

***அனுபல்லவி***

தொல்லை அனாதி தந்தார், வந்தார், இறந்
துயிர்த்தெழுந்தாரே, உன்னதமே! – ஆமென்

***சரணங்கள்***

1. வெற்றிகொண் டார்ப்பரித்து – கொடும்வே
தாளத்தைச் சங்கரித்து – முறித்து;
பத்ராசனக கிறிஸ்து – மரித்து
பாடுபட்டுத்தரித்து, முடித்தார் – ஆமென்

2. சாவின் கூர் ஒடிந்து, மடிந்து
தடுப்புச் சுவர் இடிந்து – விழுந்து,
ஜீவனே விடிந்து – தேவாலயத்
திரை ரெண்டாய்க் கிழிந்து ஒழிந்தது – ஆமென்

அட்டவணை

3. வேதம் நிறைவேற்றி, – மெய் தோற்றி
மீட்டுக்கரையேற்றி, – பொய்மாற்றி,
பாவிகளைத் தேற்றி, – கொண்டாற்றி
பத்ராசனத் தேற்றி வாழ்வித்தார். – ஆமென்

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**178** **கி.கீ.68**

*பியாகு* *ஆதிதாளம்*

***பல்லவி***

**எழுந்தார் இறைவன் – ஜெயமே ஜெயமெனவே**
எழுந்தார் இறைவன்

***சரணங்கள்***

1. விழுந்தவரைக் கரையேற்றப் – பாவத்
தழுந்து மனுக்குலத்தை மாற்ற – விண்ணுக்
கெழுந்து நாம் அவரையே போற்ற, –எழுந்தார்

2. செத்தவர் மீண்டுமே பிழைக்க, – உயர்
நித்திய ஜீவனை அளிக்கத் – தேவ
பக்தர் யாவரும் களிக்க –எழுந்தார்

3. கருதிய காரியம் வாய்க்கத் – தேவ
சுருதி மொழிகளெல்லாம் காக்க – நம்
இரு திறத்தாரையும் சேர்க்க –எழுந்தார்

4. சாவின் பயங்கரத்தை ஒழிக்கக் – கெட்ட
ஆவியின் வல்லமையை அழிக்க – இப்
பூவின் மீது சபை செழிக்க –எழுந்தார்

5. ஏதுந் தீவினை செய்யாத் தூயன் – எப்
போதுமே நன்மைபுரி நேயன் –தப்
பாது காத்திடும் நல்லாயன் –எழுந்தார்

*–சா. பரமானந்தம்*

அட்டவணை

**179** **கி.கீ.69**

*சங்கராபரணம்* *திஸ்ர ஏகதாளம்*

1. **இந்நாளில் ஏசுநாதர் உயிர்த்தார், கம்பீரமாய்**
இகல் அலகை சாவும்வென்றதிக வீரமாய்
மகிழ் கொண்டாடுவோம்
மகிழ் கொண்டாடுவோம்

2. போர்ச்சேவகர் சமாதி சூழ்ந்துகாவலிருக்க
புகழார்ந்தெழுந்தனர், தூதன் வந்து கல்மூடிப்பிரிக்க-மகிழ்

3. அதிகாலையில் சீமோனோடு யோவானும் ஓடிட
அக்கல்லறையினின் றேகினார் இவர் ஆய்ந்து தேடிட-மகிழ்

4. பரிசுத்தனை அழிவுகாண வொட்டீர் என்று முன்
பகர் வேதச் சொற்படி பேதமற்றெழுந்தார் திருச்சுதன்-மகிழ்

5. இவ்வண்ணமாய்ப் பரன் செயலை எண்ணி நாடுவோம்
எல்லோருமே களிகூர்ந்தினிதுடன் சேர்ந்துபாடுவோம்- மகிழ்

*- யோ. பால்மர்*

**180** **கி.கீ.388**

*கேதாரம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார்**
உயிர்த்தெழுந்தார் நரகை ஜெயித்தெழுந்தார்

***சரணங்கள்***

1. வேதாளக் கணங்கள் ஓடிடவே,
ஓடிடவே உருகி வாடிடவே. - யூத

2. வானத்தின் சேனைகள் துதித்திடவே,
துதித்திடவே பரனைத் துதித்திடவே. - யூத

3. மரணத்தின் சங்கிலிகள் தெறிபட்டன,
தெறிபட்டன நொடியில் முறிபட்டன. - யூத

அட்டவணை

4. எழுந்தார் என்றதொனி எங்குங் கேட்குதே,
எங்குங் கேட்குதே, பயத்தை என்றும் நீக்குதே. -யூத

5. மாதர் தூதரைக் கண்டகமகிழ்ந்தார்,
அகமகிழ்ந்தார், பரனை அவர் புகழ்ந்தார். -யூத

6. மரித்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை,
மரிப்பதில்லை, இனி மரிப்பதில்லை -யூத

7. கிறிஸ்தோரே நாமவர் பாதம் பணிவோம்,
பாதம் பணிவோம், பதத்தைச் சிரமணிவோம் -யூத

**181** Alleluya Perenne

A.M. 296 II 10,10,7

1. **மேலோகத்தாரே புகழ்ந்து போற்றி**
சாலோசையாய்த் துதித்துப் பாடுங்கள்
ஓயாத அல்லேலூயா!

2. ஓயா ஒளிமுன் நிற்கும் சேனையே
ஆர்ப்பரித்து ஓய்யார தொனியாய்
ஓயாத அல்லேலூயா!

3. மாட்சிமையான பாடல் தொனிக்கும்
ஆட்சி செய்யும் ராஜாவை வாழ்த்திடும்
ஓயாத அல்லேலூயா!

4. கிறிஸ்தேசுவின் முன் ஓசை எழும்பும்
சதா காலமும் புகழ் மகிமை
ஓயாத அல்லேலூயா!

**182** Hail Festal day whose glory never fades **பா.130**

A.M. 650 Salve Festadies 10,10

1. **பண்டிகை நாள்! மகிழ் கொண்டாடுவோம்**
வென்றுயிர்த்தோரைப் போற்றிப் பாடுவோம்
பண்டிகை நாள்! மகிழ் கொண்டாடுவோம்.

அட்டவணை

2. அருளாம் நாதர் உயிர்த்தெழும் காலம்
மரம் துளிர்விடும் நல் வசந்தம்!

3. பூலோகெங்கும் நறுமலர் மணம்
மேலோகெங்கும் மின் ஜோதியின் மயம்.

4. முளைத்துப் பூக்கும் பூண்டு புல்களும்
களிப்பாய், கர்த்தர் ஜெயித்தார் என்னும்

5. சாத்தான் தொலைந்ததால் விண், மண், ஜலம்
கீர்த்தனம் பாடிக் களிகூர்ந்திடும்.

6. குருசில் தொங்கினோர் நம் கடவுள்;
சிருஷ்டி நாம் தொழுவோம் வாருங்கள்.

7. அநாதி நித்திய தெய்வ மைந்தனார்
மனுக்குலத்தை மீட்டு ரட்சித்தார்.

8. நரரை மீட்க நரனாய் வந்தார்;
நரகம், சாவு, பேயையும் வென்றார்

9. பிதா, சுதன், சுத்தாவிக்கென்றென்றும்
துதி, புகழ், கனமும் ஏறிடும்.

**183** **பா.132**

A.M. 382, 81 *St. George, Edmund* 7,7,7,7

1. **வைகறை இருக்கையில்**
ஓடி வந்த மரியாள்
கல்லறையின் அருகில்
கண்ணீர் விட்டு அழுதாள்
'என்தன் நாதர் எங்கேயோ?
அவர் தேகம் இல்லையே!
கொண்டு போனவர் யாரோ?'
என்று ஏங்கி நின்றாளே.

அட்டவணை

2. இவ்வாறேங்கி நிற்கையில்
இயேசு, 'மரியாள்' என்றார்
துக்கம் கொண்ட நெஞ்சத்தில்
பூரிப்பை உண்டாக்கினார்
தெய்வ வாக்கு ஜீவனாம்
தெய்வ நேசம் மோட்சமே;
தூய சிந்தையோர் எல்லாம்
காட்சி பெற்று வாழ்வாரே

**184** **கி.கீ.277**

*குரஞ்சி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**மரித்தோர் எவரும் உயிர்த்தெழுவார்**
வானெக்காளத் தொனி முழங்க

***அனுபல்லவி***

எரி புகை மேக ரத மேறி
ஏசு மகா ராஜன் வருங்கால். - மரித்தோர்

***சரணங்கள்***

1. தூதர் மின் னாற்றிசை துலங்க
ஜோதி வான் பறை இடி முழங்க
பாதகர் நெஞ்சம் நடுநடுங்க
பரிசுத் தோர் திரள் மனதிலங்க. - மரித்தோர்

2. வானம் புவியும் வையகமும்
மட மட வென்று நிலை பெயர
ஆன பொருளெல்லாம் அகன்றோட
அவரவர் தம் தம் வரிசையிலே. - மரித்தோர்

3. அழிவுள் ளோராய் விதைக்கப்பட்டோர்
அழியா மேனியை அணிந்திடுவார்
எளிய ரூபமாய் விதைக்கப்பட்டோர்
என்றும் வாழும் ஜோதிகளாய் - மரித்தோர்

*-சு.ச. ஏசடியான்*

அட்டவணை

**185** Crown Him King

S.S.94

1. **வாழ்க வாழ்க கிறிஸ்து ராயரே!**
யுகாயுகம் துதி உமக்கே
மேன்மை, கனம் உந்தன் நாமமே
இப்போ தெப்போதுமே.

***பல்லவி***

வாழ்க வாழ்க நீரே வாழ்க!
மாட்சி மிகு மோட்ச வேந்தர் நீர்
வாழ்க நீரே வாழ்க
பெருந் துதி ஏற்பீர்.

2. வாழ்த்தும் வாழ்த்தும் வானோர் சேனையே
பாடலோடு அவர் பாதமே
மாந்தர் யாரும் சேர்ந்து பாடுமே
ராஜாதி ராஜரே.

3. பாவம் பேயை வென்ற வீரரே
தூய ஆவி எம்மை ஆளவே
உந்தன் நாமத்தில் ஜெயிப்போமே
என்றென்றும் வாழ்கவே

## 8. பரமேறுதல்

**186** Crown Him with many crowns **பா.134**

A.M. 304 *Diadamata* D.S.M.

1. **தெய்வாட்டுக் குட்டிக்கு**
பன் முடி சூட்டிடும்;
இன்னிசையாய்ப் பேரோசையாய்
விண் கீதம் முழங்கும்
உள்ளமே போற்றிடு
உனக்காய் மாண்டோராம்
சதாகாலமும் அவரே
ஒப்பற்ற வேந்தராம்.

அட்டவணை

2. அன்பார்ந்த கர்த்தர்க்கு
பன் முடி சூட்டிடும்;
கை கால் விலாவின் காயங்கள்
விண்ணிலும் விளங்கும்.
பார்ப்பரோ தூதரும்
ஏறிட்டக் காயங்கள்?
பணிவரே சாஷ்டாங்கமாய்
மூடுவர் தம் கண்கள்.

3. சமாதானக் கர்த்தர்!
பன் முடி சூட்டிடும்;
போர் ஓய்ந்து ஜெப ஸ்தோத்ரமே
பூமியை நிரப்பும்
ஆள்வார் என்றென்றைக்கும்;
ஆளும் எவ்விடமும்
விண் லோக பாக்கியச் சிறப்பு
விளங்கி வளரும்.

4. ஆண்டாண்டும் ஆள்வோர்க்கு
பன் முடி சூட்டிடும்,
சராசரங்கள் சிஷ்டித்தோர்
உன்னத தெய்வமும்;
பாவிக்காய் ஆருயிர்
ஈந்த என் மீட்பரே,
சதா நித்திய காலமாய்
உமக்குத் துதியே.

**187** Church Triumphant **பா.135**

A.M. 35 L.M.

1. **மகிழ், கர்த்தாவின் மந்தையே**
இதோ, கெம்பீரத்துடனே
பரத்துக்குள் அதிபதி
எழுந்து போனதால் துதி.

அட்டவணை

2. விண்ணோர் குழாம் மகிழ்ச்சியாய்
கொண்டாடி, மா வணக்கமாய்
பணிந்து, இயேசு ஸ்வாமிக்கு
ஆராதனை செலுத்திற்று

3. கர்த்தாதி கர்த்தர் நமக்குத்
தலைவரானார் என்பது
பரத்தின் தூதருக்கெல்லாம்
விசேஷித்த சந்தோஷமாம்

4. ஆ, இயேசு தெய்வ மைந்தனே,
கர்த்தா, பர்த்தா, முதல்வரே
அடியார் நெஞ்சு உமக்கு
என்றும் ஆதீனம் ஆனது.

5. விண்ணோரைப் போல் மண்ணோர்களே
நம் ஆண்டவரை என்றுமே
அன்பாகக் கூடிப் பாடுங்கள்
அவரின் மேன்மை கூறுங்கள்.

**188** Hail the day that sees Him rise **பா.136**

A.M. 147 *Ascension* 7,7,7,7

1. **வாஞ்சைப்பட்ட இயேசுவே, அல்லேலூயா!**
இந்தப் பூதலத்திலே அல்லுலூயா!
கொஞ்ச நாள்தான் தங்கினீர்; அல்லேலூயா!
பின்பு மோட்சம் ஏகினீர், அல்லுலூயா!

2. வான ஆசனத்திலே அல்லேலூயா!
வீற்றிருந்து நித்தமே அல்லேலூயா!
துதி பெறும் தேவரீர் அல்லேலூயா!
பூதலத்தை மறவீர், அல்லேலூயா!

அட்டவணை

3. திருக்கரம் குவித்து, அல்லேலூயா!
திருக்காயம் காண்பித்து, அல்லேலூயா!
திருவாய் மலர்ந்து நீர் அல்லேலூயா!
மாந்தர்க்காய் மன்றாடுவீர், அல்லுலூயா!

4. மண்ணைவிட்டுப் பிரிந்தும், அல்லேலூயா!
வான லோகம் போயினும், அல்லேலூயா!
எங்கள் ஜெபம் கேளுமே, அல்லேலூயா!
எங்கள் நெஞ்சில் தங்குமே அல்லேலூயா!

**189** **கி.கீ.70**

*பூரிகல்யாணி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**மகிழ், மகிழ்! மந்தையே, நீ; அல்லேலூயா! பரன்,**
மைந்தன் பரமேறினார், அல்லேலூயா!

***அனுபல்லவி***

மகிழ், மகிழ், பரன் மைந்தன் மகத்துவ பரமேறினார்;
திகழ் திருச்சேனை பாடும் அல்லேலூயா இன்று -மகிழ்

***சரணங்கள்***

1. வானமெல்லாம் நிரப்ப மனுஷ மைந்தன் எல்லா
வானங்கள் மேலேறினார், அல்லேலூயா!
தீனதயாளு நம்மைச் சேர்ந்த தலைவராயினார்,
ஞானமுடன் பாடுங்கள், அல்லேலூயா, இன்று -மகிழ்

2. ஏசுபரன் நமக்கு இறையானார்; இது
எல்லாவர்க்குஞ் சந்தோஷம், அல்லேலூயா!
வாசம் நாம் செய்யத் தந்தை வளவில் இடம்பிடித்த
நேசமுன்னத நேசம், அல்லேலூயா, இன்று -மகிழ்

3. தந்தை வலப்பாகத்தில் சத்திய கிறிஸ்து எங்கள்
சத்துருக்கள் மேற்சிறந்தார், அல்லேலூயா!
சொந்தக் காயங்கள் காட்டிச் சுகிர்தமுடன் ஜெபிப்பார்;
மந்தையே, உந்தனுக்காய் அல்லேலூயா, இன்று -மகிழ்

4. மோட்ச சுதந்தரர் நாம் வானோருக்கும் ஒப்பர்,
முடிவில்லாப் பாக்கியர் நாம், அல்லேலூயா!
பாழ்ஜெகம் நிலையல்ல, பரம சஞ்சாரிகள் நாம்
சூட்சுமக் கர்த்தனுக்கே அல்லேலூயா, இன்று– மகிழ்

5. பூதலமந்தமட்டும் உங்களுடனே நித்தம்
புனிதன் இருப்பேனென்றார்; அல்லேலூயா!
ஏதெமக்குக் குறைச்சல் ஏசெங்களோடிருந்தால்,
யாதுமோசந்தொடரும்? அல்லேலூயா, இன்று– மகிழ்

*– ஞா. சாமுவேல்*

## 9. மாட்சிமை

**190** **கி.கீ.77**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**என்ன என் ஆனந்தம்! என்ன என் ஆனந்தம்!**
சொல்லக் கூடாதே:
மன்னன் கிறிஸ்து என் பாவத்தை எல்லாம்
மன்னித்து விட்டாரே.

***சரணங்கள்***

1. கூடுவோம், ஆடுவோம், பாடுவோம், நன்றாய்
மகிழ் கொண்டாடுவோம்;
நாடியே நம்மைத் தேடியே வந்த
நாதனைப் போற்றிடுவோம்.

2. பாவங்கள், சாபங்கள், கோபங்கள் எல்லாம்
பரிகரித்தாரே;
தேவாதி தேவன் என் உள்ளத்தில் வந்து
தேற்றியே விட்டாரே.

3. அட்சயன் பட்சமாய் இரட்சிப்பை எங்களுக்–கு
அருளினதாலே
நிச்சயம் சுவாமியைப் பற்றியே சாட்சி
பகர வேண்டியதே.

அட்டவணை

4. வெண்ணங்கி பொன்முடி வாத்தியம் மேல்வீட்டில்
ஜெயக் கொடியுடனே
மண்ணுலகில் வந்து விண்ணுலகில் சென்ற
மன்னனைத் தோத்தரிப்போம்.

*–த. சத்தியநாதன்*

**191** **கி.கீ.78**

*ஆனந்தபைரவி* *ஆதிதாளம்*

***பல்லவி***

ஆத்துமமே, என் முழு உள்ளமே – உன்
ஆண்டவரைத் தொழு தேத்து – இந்நாள் வரை
அன்பு வைத் தாதரித்த – உன்
ஆண்டவரைத் தொழு தேத்து

***சரணங்கள்***

1. போற்றிடும் வானோர், பூதலத்துள்ளோர்
சாற்றுதற் கரிய தன்மையுள்ள – ஆத்துமமே

2. தலைமுறை தலைமுறை தாங்கும் விநோத
உலக முன் தோன்றி ஒழியாத – ஆத்துமமே

3. தினம் தினம் உலகில் நீ செய் பலவான
வினை பொறுத்தருளும், மேலான – ஆத்துமமே

4. வாதை, நோய், துன்பம் மாற்றி, அனந்த
ஓதரும் தயை செய் துயிர் தந்த – ஆத்துமமே

5. உற்றுனக் கிரங்கி உரிமை பாராட்டும்
முற்றும் கிருபையினால் முடி சூட்டும் – ஆத்துமமே

6. துதி மிகுந்தேறத் தோத்தரி தினமே
இதயமே, உள்ளமே, என் மனமே – ஆத்துமமே

*– தைரியம் ரைட்டர்*

அட்டவணை

**192** **கி.கீ.80**

*எதுகுலகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

ஏசுவையே துதிசெய் நீ மனமே
ஏசுவையே துதிசெய் – கிறிஸ்தேசுவையே

***சரணங்கள்***

1. மாசணுகாத பராபர வஸ்து,
நேசகுமாரன் மெய்யான கிறிஸ்து – ஏசுவையே

2. அந்தரவான் தரையுந் தரு தந்தன்
சுந்தர மிகுந்த சவுந்தரா நந்தன் – ஏசுவையே

3. எண்ணின காரியம் யாவும் முகிக்க
மண்ணிலும் விண்ணிலும் வாழ்ந்து சுகிக்க
– ஏசுவையே

*– வேதநாயகம் சாசுதிரியார்*

**193** **கி.கீ.81**

*சூரியகாந்தம்* *ரூபகதாளம்*

***பல்லவி***

துதி தங்கிய பரமண்டல சுவிசேடக நாமம்
சுப மங்கள மிகு சம்பிரம சுக சோபன ஷேமம்!

***சரணங்கள்***

1. அதி சுந்தர நிறை கொண்டுயர் அருள் மோக்கிஷ தீபன்,
கதி உம்பர்கள் தொழும் இங்கித கருணைப் பிரதாபன் –துதி

2. மந்தை ஆயர் பணிந்து பாதம் மகிழ்ந்து வாழ்த்திய அத்தனார்
நிந்தையாய் ஒரு கந்தை மூடவும் வந்த மாபரி சுத்தனார் –துதி

3. திருவான் உல கரசாய் வளர் தேவ சொரூபனார்
ஒரு மாதுடை வினை மாறிட நரர் ரூபமதானார் –துதி

4. அபிராம் முனி யிடமேவிய பதிலாள் உபகாரன்
எபிரேயர்கள் குலம் தாவீதென் அரசற் கோர்குமாரன் –துதி

அட்டவணை

5. சாதா ரண வேதா கம சாஸ்த்ர சுவிசேஷன்
கோதே புரி ஆதா முடை கோத்ர திரு வேஷன் -துதி

6. விண் ணாடரும் மண் ணாடரும் மேவுந் திருப் பாதன்
பண்ணோதுவர் கண்ணாம் வளர் பரமண்டல நாதன் -துதி

*-வேதநாயகம் சாசுதிரியார்*

**194** **கி.கீ.83**

*சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

சீர் ஏசு நாதனுக்கு ஜெயமங்களம்; ஆதி
திரியேக நாதனுக்குச் சுபமங்களம்

***அனுபல்லவி***

பாரேறு நீதனுக்கு, பரமபொற் பாதனுக்கு
நேரேறு போதனுக்கு நித்திய சங்கீதனுக்கு -சீர்

***சரணங்கள்***

1. ஆதி சரு வேசனுக்கு, ஈசனுக்கு மங்களம்
அகிலப் பிர காசனுக்கு, நேசனுக்கு மங்களம்
நீதி பரன் பாலனுக்கு, நித்திய குணாலனுக்கு
ஓதும் அனுகூலனுக்கு, உயர் மனுவேலனுக்கு -சீர்

2. மானாபி மானனுக்கு, வானனுக்கு மங்களம்;
வளர் கலைக் கியானனுக்கு, ஞானனுக்கு மங்களம்
கானான் நல் தேயனுக்குக் கன்னிமரி சேயனுக்கு
கோனார் சகாயனுக்கு, கூறு பெத்தலேயனுக்கு -சீர்

3. பத்து லட்ச ணத்தனுக்குச், சுத்தனுக்கு மங்களம்
பரம பதத்தனுக்கு நித்தனுக்கு மங்களம்;
சத்திய விஸ்தாரனுக்குச் சருவாதி காரனுக்கு
பத்தர் உப காரனுக்குப் பரம குமாரனுக்கு -சீர்

*-வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

**195** **கி.கீ.84**

*யமுனா கல்யாணி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**பாதம் வந்தனமே! – வரப்பிர**
சாதம் எந்தனமே

***சரணங்கள்***

1. ஆதரவொடு வேதமே விடுத் தாளும் அற்புதனே,
திவ்ய சுதனே, கிருபைப் பதனே, சுசிகர –பாதம்

2. பேசுதற்கரிதான ஸ்துத்திய பெருமைக் கோமானே
மெய்ச் சீமானே, அருள் கோனே, சுசிகர –பாதம்

3. ஞானமாய் நரர்க் கான ஜீவனை நல்கிய சீலா,
மனு வேலா, துரை, பாலா, சுசிகர –பாதம்

4. தீவினை தொலைத் தாவியே மிகுத் தேவும் இங்கிதமே,
என் ரஞ்சிதமே, நீ சந்ததமே! சுசிகர –பாதம்

5. தாசரை விசுவாசமாய்க் கையில் தாங்குபகாரா,
அதிகாரா, கன தீரா சுசிகர –பாதம்

*– ஆ. அல்லின்*

**196** **கி.கீ.85**

*பைரவி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தோத்திரம் செய்வேனே – ரட்சகனைத்**
தோத்திரம் செய்வேனே

***அனுபல்லவி***

பாத்திரமாக்க இம்மாத்ரம் கருணைவைத்த
பார்த்திபனை யூதக் கோத்திரனை, என்றும் –தோத்திரம்

அட்டவணை

### *சரணங்கள்*

1. அன்னை மரி சுதனை – புல்மீது
அமிழ்துக் கழுதவனை
முன்னணை மீதுற்ற, சின்னக் குமாரனை
முன்னுரை நூற்படி, இந்நிலத் துற்றோனை–தோத்திரம்

2. கந்தை பொதிந்தவனை, – வானோர்களும்
வந்தடி பணிபவனை
மந்தையர்க் கானந்த மாட்சியயளித்தோனை
வான பரன் என்னும் ஞான குணவானை – தோத்திரம்

3. செம்பொன் னுருவானைத் – தேசிகர்கள்
தேடும் குருவானை
அம்பர மேவிய உம்பர் கணத்தோடு
அன்பு பெற நின்று, பைம் பொன் மலர் தூவி – தோத்திரம்

*–த. சத்தியநாதன் பிள்ளை*

**197** **கி.கீ.87**

*கமாஸ்* *ஆதிதாளம்*

### *பல்லவி*

**ஏசு நாயகனைத் துதி செய், செய்**
செய், செய், செய், ஏசு நாயகனை

### *சரணங்கள்*

1. பாசந்தனிலுழலும் பேய் மதியே, ஐயன்
பாதத்தை அன்றி உனக்கார் கதியே?
பூசும் மாங்கிஷ மொடு புவி நிதியே வெறும்
பொய், பொய், பொய், பொய், பொய் –ஏசு

2. ஆணுவ மெனும் பேயினை முடுக்கும், பர
மானந்த சுக கிரக பதம் கொடுக்கும்,
வேண அபீஷ்டங்கள் வந்தடுக்கும், இது
மெய், மெய், மெய், மெய், மெய் –ஏசு

அட்டவணை

3. தகை பெறும் விண்டலந் தனிலுதயம் செயும்
சசி, கதிர் மீன் முதல் பொருளெதையும்
வகையுடன் அருள் கடவுளை இருதயந்தனில்
வை, வை, வை, வை, வை -ஏசு

4. நாதபூதபௌதீக ஸ்தாபகனை, வேத
நாவலர் மீதிலென்றும் ஞாபகனை
ஓதரிதான சர்வ வியாபகனைப் பணிந்-து
உய், உய், உய், உய், உய் -ஏசு

*-தேவவரம் முன்ஷி*

**198** **கி.கீ.88**

*தோடி* *ஏகதாளம்*

***பல்லவி***

**உனக்கு நிகரானவர் யார்? - இந்த**
உலக முழுவதிலுமே.

***அனுபல்லவி***

தனக்கு தானே நிகராம் தாதை திருச் சுதனே
மனுக்குலம் தன்னை மீட்க மானிடனாக வந்த -உனக்கு

***சரணங்கள்***

1. தாய் மகளுக்காக சாவாளோ - கூடப் பிறந்த
தமையன் தம்பிக்காய் மாய்வானோ?
நேயன் நேயர்க்காய் சாவானோ? தனதுயிரை
நேர் விரோதிக்காய் ஈவானோ?
நீ இம் மண்ணுலகில் நீசர்கட்காக வந்து
காயும் மனமடவர்க்காக மரித்தாய் சுவாமி - உனக்கு

அட்டவணை

2. கந்தை உரிந்தெறிந்தனை – நீதியின் ஆடை
கனக்க உடுத்துவித்தனை
மந்தையில் சேர்த்துவைத்தனை, கடிகணையை
மாற்றி எந்தனைக் காத்தனை;
கந்த மலர்ப் பாதனே, கனக ரத்ன மேருவே,
சிந்தை உவந்து வந்த தியாக ராசனே சுவாமி –உனக்கு

*–ல. பொன்னுச்சுவாமி*

**199** **கி.கீ.90**

*புன்னகவராளி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தேவதே, ஓர் ஏக வஸ்து, தேவ நாமனாம் கிறிஸ்து**
தேவன் ஆதியே நமா!

***அனுபல்லவி***

ஜீவ ஆவி எகோவா, அல்பா ஒமேகா, நமஸ்து – ஒரு – தேவதே

***சரணங்கள்***

1. மூவராய் அரூபியாய் முன் ஊழி ஊழி காலம் வாழ்
பாவ தாழ்விலா வலா, பராபரா, தயாபரா!–ஒரு–தேவதே

2. ஆதியாய் அனாதியாய், அரூபியாய்ச் சொரூபியாய்,
நீதி ஞாய நேர்மையாய், நீடூழி ஆள் சுயாதிபா!
– ஒரு – தேவதே

3. மாசில்லா நேச வாச மட்டில்லா நன்மையே
தேசுலா வனாதி ஏசு மா சிறந்த உண்மையே!
– ஒரு – தேவதே

4. ஈறில்லா மெய்ஞ்ஞான ஜோதி, ஏகமாம் ஆனந்தமே
மாறிலா தனுக்ரகஞ் செய்ய வந்த ஆதியந்தமே!
– ஒரு – தேவதே

*– வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

**200** **கி.கீ.93**

*உசேனி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சொல்லரும் மெய்ஞ்ஞானரே, மேன்மைப்பிரபுவே**
சுரூபத் தரூபக் கோனாரே – உரை

***அனுபல்லவி***

வல்லறஞ் சிறந்து மனுவானாரே – உயர்
இல்லறந் துறந்து குடிலானாரே – உரை – சொல்

***சரணங்கள்***

1. மாடாயர் தேடும் வஸ்துபகாரி, – மிகு
கேடாளர் நாடுங் கிறிஸ்து சற்காரி,
வையகம் புரப்பதற்கு வந்தாரே, – அருள்
பெய்து நவமும் தவமுந் தந்தாரே,–உரை – சொல்லரும்

2. அச்சய சவுந்தர அசரீரி – அதி
உச்சித சுதந்தர அருள்வாரி,
ஐயா வல்லாவே, மாதேவா – ஓ!
துய்யா, நல்லாவே, ஏகோவா, – உரை – சொல்லரும்

3. பாவ வினை யாவையுந் தீர்த்தாரே, – உயர்
தேவ சபையில் எமைச் சேர்த்தாரே;
செல்லமாய் முகம் பார்த்தாரே, – பெரும்
பொக்கிஷம் போல் எமைச் சேர்த்தாரே,–உரை–சொல்லரும்

*– வேதநாயகம் சாசுதிரியார்*

**201** **கி.கீ.94**

*ஹரிகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

இயேசுவின் நாமமே திருநாமம், – முழு
இருதயத்தால் தொழுவோம் நாமும்

அட்டவணை

***சரணங்கள்***

1. காசினியில் அதனுக் கிணையில்லையே; – விசு
வாசித்த வர்களுக்குக் குறையில்லையே – இயேசு

2. இத்தரையில் மெத்தவதி சயநாமம்; – அதை
நித்தமுந் தொழுபவர்க்கு ஜெய நாமம் – இயேசு

3. உத்தம மகிமைப் பிரசித்த நாமம்; – இது
சத்திய விதேய மனமொத்த நாமம் – இயேசு

4. விண்ணவரும் பண்ணுடன் கொண்டாடும் நாமம்;– நமை
கண்டதிர்ந்து பயந்தோடு தேவநாமம் – இயேசு

5. பட்சமுள்ள ரட்சைசெயு முபகாரி – பெரும்
பாவப்பிணிகள் நீக்கும் பரிகாரி – இயேசு

*–ச.பே. ஞானமணி*

**202** **கி.கீ.95**

*தோடி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**யேசு நசரையி னதிபதியே, – பவ நரர்பினை யென வரும்.**

***அனுபல்லவி***

தேசுறு பரதல வாசப் பிரகாசனே
ஜீவனே, அமரர் பாவனே மகத்துவ – யேசு

***சரணங்கள்***

1. இந்த உலகு சுவை தந்து போராடுதே,
எனதுடலும் அதுவோ டிசைந்து சீராடுதே,
தந்தர அலகை சூழ நின்று வாதாடுதே
சாமி, பாவியகம் நோயினில் வாடுதே – யேசு

அட்டவணை

2. நின் சுய பெலனல்லாமல் என் பெலன் ஏது
நினைவு, செயல், வசனம், முழுதும் பொல்லாது;
தஞ்சம் உனை அடைந்தேன், தவற விடாது;
தாங்கி ஆள் கருணை ஓங்கி எப்போதும் – யேசு

3. கிருபையுடன் என் இருதயந்தனில் வாரும்;
கேடு பாடுகள் யாவையும் தீரும்
பொறுமை, நம்பிக்கை, அன்பு, போதவே தாரும்
பொன்னு லோகமதில் என்னையே சேரும் – யேசு

*– சவரிமுத்து உபாத்தியாயர்*

**203** **கி.கீ.98**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சுந்தரப் பரம தேவ மைந்தன் ஏசுக் கிறிஸ்துவுக்குத்**
தோத்திரம் புகழ்ச்சி நித்திய கீர்த்தனம் என்றும்

***அனுபல்லவி***

அந்தரம் புவியும் தந்து, சொந்த ஜீவனையும் ஈந்து
ஆற்றினார்; நமை ஒன்றாய் கூட்டினார்; அருள் முடி
சூட்டினார்; கிருபையால் தேற்றினாரே, துதி – சுந்தரப்

***சரணங்கள்***

1. பாதகப் பசாசால் வந்த தீதெனும் பவத்தால் நொந்த
பாவிகளான நமை உசாவி மீட்டாரே;
வேத பிதாவுக் குகந்த ஜாதியாகக் கூட்ட வந்த
மேசியாவைப் பற்றும் விசு வாச வீட்டாரே
கோதணுகா நீதிபரன் பாதமதின் ஆதரவில்
கூடுங்கள்; பவத்துயர்
போடுங்கள் ஜெயத்தைக் கொண்டாடுங்கள்
துதி சொல்லிப் பாடுங்கள் பாடுங்கள் என்றும் – சுந்தரப்

அட்டவணை

2. விண்ணிலுள்ள ஜோதிகளும் எண்ணடங்காச் சேனைகளும்
விந்தையாய்க் கிறிஸ்துவைப் பணிந்து போற்றவே
மண்ணிலுள்ள ஜாதிகளும் நண்ணும்பலபொருள்களும்
வல்லபரன் எனத் துதி சொல்லி ஏத்தவே
அண்ணலாம் பிதாவுக் கொரே புண்ணியக் குமாரனைக்
கொண்டாடிட – அவர் பதம்
தேடிட – வெகு திரள் கூடிடத்
துதிபுகழ் பாடிடப் பாடிட என்றும் – சுந்தரப்

3. சத்தியத் தரசர்களும் வித்தகப் பெரியார்களும்
சங்கத் தோர்களுங் கிருபை தங்கி வாழவே
எத்திசை மனிதர்களும் பக்தர் விசுவாசிகளும்
ஏக மிகுஞ் சமாதான மாக வாழவே
உத்தம போதகர்களும் சத்ய திருச்சபைகளும்
உயர்ந்து – வாழ, தீயோன்
பயந்து – தாழ மிக நயந்து
கிறிஸ்துவுக்கு ஜெயந்தான், நயந்தான் என்றும் – சுந்தரப்

*– மரியான் உபதேசியார்*

**204** **கி.கீ.99**

*உசேனி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**பார்க்க முனம் வருவேன்; – நெருக்கத்தில்**
பத்ரமாகத் கரிசித்த மேசியாவை

***அனுபல்லவி***

ஆர்க்கும் இரங்கும் பராபரனின் சுதன்
அன்பின் மனுடவ தாரத்தைச் சிந்தித்து – பார்

***சரணங்கள்***

1. நிச்சய சாதாரண சத்திய வேதனை,
நின்மல ஞான வரப்பிரசாதனை,
உச்சித வாக்ய சுவிசேட போதனை
உன்னத ரட்சகர் கிறிஸ்தேசு நாதனை – பார்

அட்டவணை

2. முற் பிதாக்கள் விரும்பிய தேட்டம்,
முன்னே ஆதிப் பிதாவின் சிரேட்டம்,
எப்பு விக்கும் எவர்க்கும் கொண்டாட்டம்
எந்தையின் சுதன் மேல் என்றன் நாட்டம். – பார்

3. ஆசைக் கிறிஸ்துண்மை யான நல் ஆயனை,
ஆத்தும நாயகர் ஆன என் நேயனை,
பாச வலையில் கை தூக்கின நாயனை,
பக்ஷ மொடு காத்த முக்ய சகாயனை. – பார்

4. ஆச்சரிய மான நேசத்தை, பாசத்தை,
அன்பின் திருமுகத்தை, ஐந்து காயத்தைக்
காட்சி தரும் இரு பாதத்தை, பாவியைக்
கைதூக்கி, விட்ட கரத்தை, உரித்தாக. – பார்

*– வேதநாயகம் சாசுதிரியார்*

**205** **கி.கீ.103**

*ஹரிகாம்போதி* *ஏகதாளம்*

***பல்லவி***

**பாவிக்கு நேசராரே**
யேசு மானுவேலரே, – ஆ! நரர்

1. மாசற்ற தேவனார், மைந்தப் பிரதாபரே,
யேசு கிறிஸ்துநாதரே, ஆசை மானுவேலரே! –ஆ!

2. பிரயாசத்தோரே, பாரஞ் சுமந்தோரே
கிருபைக் கண்ணுள்ளோரே, யேசு மானுவேலரே –ஆ!

3. நெரித்த நாணல் முறியார், பொரித்த திரயவியார்
நிர்ப்பந்தரைத் தள்ளாரே, யேசு மானுவேலரே –ஆ!

4. கெட்ட குமாரர்க்குக் கிருபைப் பிதா வந்தார்
இட்ட ப்ரசாதத்தாரே, யேசு மானுவேலரே –ஆ!

*– வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

**206** **கி.கீ.106**

*ஹரிகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ராச ராச பிதா மைந்த தேசுலாவுசதா நந்த**
யேசு நாயகனார் சொந்த மேசியா நந்தனே!

***அனுபல்லவி***

ஜெகதீசு ரேசுரன் சுக நேச மீசுரன் மக – ராச

***சரணங்கள்***

1. மாசிலா மணியே! மந்த்ர ஆசிலா அணியே! சுந்தர
நேசமே பணியே, தந்திர மோசமே தணியே!
நிறைவான காந்தனே! இறையான சாந்தனே! மறை – ராச

2. ஆதியந்த மில்லான் அந்த மாதினுந்தியிலே, முந்த
வேத பந்தனமாய் வந்த பாதம் வந்தனமே
பத ஆமனாமனா! சுதனாமனாமனா! சித – ராச

3. மேன்மையா சனனே, நன்மை மேவுபோசனனே, தொன்மை
பான்மை வாசனனே, புன்மை பாவ மோசனனே
கிருபா கரா நரா! சருவேசுரா, பரா ஸிரீ – ராச

4. வீடு தேடவுமே, தந்தை நாடு கூடவுமே, மைந்தர்
கேடு மூடவுமே விந்தையோடு பாடவுமே
நரவேட மேவினான், சுரராடு கோவினான், பர – ராச

*– வேதநாயகம் சாசுதிரியார்*

**207** **கி.கீ.108**

*அமிர்தகல்யாணி* *சாபுதாளம்*

***பல்லவி***

**எத்தனை நாவால் துதிப்பேன் எந்தன்**
கர்த்தா உன் கருணையைப் பாடிப் புகழ்ந்து

அட்டவணை

### *அனுபல்லவி*

நினைக்க நினைக்க எந்தன் நெஞ்சமெல்லாம் உருகும்
நின்னைச் சொல் மாலையால் சூட்டி மகிழும் – எத்தனை

### *சரணங்கள்*

1. நம்பினோரல்லோ அறிவார் – எந்தன்
தம்பிரானே உந்தன் கம்பீர குணம்
அம்பரா உன் அன்பின் அதிசய நடத்துதல்
சம்பூரண சவரட்சணை செல்வம். – எத்தனை

2. பிரார்த்தனை கேட்கும் பெம்மானே – இந்தப்
பேதை பலவீனம் பாராதருள் கோனே!
சரணென்றுன் செம்பாத மலரடி சேர்ந்தோ
தாவிப் பிடித்துக் கவலை தீர்த்தோனே! – எத்தனை

3. துணிவாய் என் நெஞ்சே தீவிரமாய் – மிகத்
தொழுது ஆண்டவன்செயல் நினைந்து
எண்ணில் அடங்காது இறைவனின் கிருபை
விண்ணவன் சேவையில் வீரமாய்ச் செல்லு. – எத்தனை

*– ஏசுதாசன் சவரிராயன்*

**208** **கி.கீ.109**

*கேதாரம்* *ஆதிதாளம்*

### *பல்லவி*

**ஏசு கிறிஸ்து நாதர்**
எல்லோருக்கும் ரட்சகர்

*வாக்க*

### *சரணங்கள்*

1. மாசில்லாத மெய்த் தேவன்
மானிடரூ புடையார்
யேசு கிறிஸ்து வென்ற
இனிய நாமமுடையார் – ஏசு

அட்டவணை

2. வம்பு நிறைந்த இந்த
மானிட ஜாதிகள் மேல்
அன்பு நிறைந்த கர்த்தர்
அதிக உருக்கமுள்ளோர் – ஏசு

3. பாவத்தில் கோபம் வைப்பார்
பாவிமேல் கோபம் வையார்
ஆவலாய் நம்பும் பாவிக்
கடைக்கலம் ஆக நிற்பார் – ஏசு

4. தன்னுயிர் தன்னை விட்டுச்
சருவ லோகத்திலுள்ள
மன்னுயிர்களை மீட்க
மரித்தே உயிர்த்த கர்த்தர் – ஏசு

5. அந்தர வானத்திலும்
அகிலாண்ட கோடியிலும்
எந்தெந்த லோகத்திலும்
இவரிவரே ரட்சகர் – ஏசு

*– பா. தாவீது*

## III. திருச்சபை

## 1. ஒருமைப்பாடு

**209** Lubeck **பா.170**

A.M. 34 7,7,7,7

1. **ஆ, சகோதரர் ஒன்றாய்**
ஏகமான சிந்தையாய்
சஞ்சரித்தல், எத்தனை
நேர்த்தியான இனிமை!

அட்டவணை

2. அது ஆரோன் சிரசில்
வார்த்துக் கீழ்வடிகையில்
கந்தம் வீசும் எண்ணெயே
போன்றதாயிருக்குமே.

3. அது எர்மோன் மேலேயும்
சீயோன் மேடுகளிலும்
பெய்கிற ஆகாசத்து
நற்பனியைப் போன்றது.

4. அங்கேதான் தயாபரர்
ஆசீர்வாதம் தருவார்
அங்கிப்போதும் என்றைக்கும்
வாழ்வுண்டாகிப் பெருகும்.

5. மேய்ப்பரே நீர் கிருபை
செய்து, சிதறுண்டதை
மந்தையாக்கி, யாவையும்
சேர்த்தணைத்துக் கொள்ளவும்

6. எங்கள் நெஞ்சில் சகல
நற்குணங்களும் வர
தெய்வ அன்பை அதிலே
ஊற்றும், இயேசு கிறிஸ்துவே

7. நீரே நெஞ்சை நெஞ்சுடன்
கட்டி, நேசத்தின் பலன்
நன்மை தீமை நாளிலும்
காணக் கட்டளையிடும்

8. மூன்றொன்றாகிய பிதா
மைந்தன் ஆவியும் எல்லா
நாளும் ஒருமைப்படும்
போல் இம்மந்தை ஒன்றவும்

The Church's One Foundation

**210** *Aurelia* **பா.172**

A.M. 215 7,6,7,6 D

1. **சபையின் அஸ்திபாரம்**
நம் மீட்பர் கிறிஸ்துவே
சபையின் ஜன்மாதாரம்,
அவரின் வார்த்தையே
தம் மணவாட்டியாக
வந்ததைத் தேடினார்.
தமக்குச் சொந்தமாக
மரித்ததைக் கொண்டார்.

2. எத்தேசத்தார் சேர்ந்தாலும்
சபை ஒன்றே ஒன்றாம்;
ஒரே விஸ்வாசத்தாலும்
ஒரே ரட்சிப்புண்டாம்
ஒரே தெய்வீக நாமம்
சபையை இணைக்கும்
ஓர் திவ்விய ஞானாகாரம்
பக்தரைப் போஷிக்கும்.

3. புறத்தியார் விரோதம்
பயத்தை உறுத்தும்;
உள்ளானவரின் துரோகம்
கிலேசப்படுத்தும்
பக்தர் ஓயாத சத்தம்
எம்மட்டும் என்பதாம்,
ராவில் நிலைத்த துக்கம்
காலையில் களிப்பாம்.

4. மேலான வான காட்சி
கண்டாசீர்வாதத்தை
பெற்று போர் ஓய்ந்து வெற்றி
சிறந்து, மாட்சிமை
அடையும் பரியந்தம்
இன்னா உழைப்பிலும்
நீங்காத சமாதானம்
மெய்ச் சபை வாஞ்சிக்கும்.

5. என்றாலும், கர்த்தாவோடு
சபைக்கு ஐக்கியமும்
இளைப்பாறுவோரோடு
இன்ப இணக்கமும்.
இப்பாக்ய தூயோரோடு
கர்த்தாவே, நாங்களும்
விண் லோகத்தில் உம்மோடு
தங்கக் கடாட்சியும்.

**211** *St. Edmund* **பா.174**

A.M. 81 7,7,7,7 D

1. **பிதா சுதன் ஆவியே**
ஏகரான ஸ்வாமியே
கேளும் நெஞ்சின் வேண்டலை
தாரும் சமாதானத்தை
அன்புக்கேற்ற உணர்வும்
அன்னியோன்னிய ஐக்கியமும்
ஈந்து ஆசீர்வதியும்
திவ்விய நேசம் ஊற்றிடும்.

அட்டவணை

2. உந்தன் அடியாரை நீர்
ஒரே மந்தையாக்குவீர்;
ஒரே ஆவியும் உண்டே
விசுவாசமும் ஒன்றே;
ஒன்றே எங்கள் நம்பிக்கை
ஐக்கியமாக்கி எங்களை
ஆண்டு கொள்ளும் கர்த்தரே,
ஏக சிந்தை தாருமே.

3. மீட்டுக்கொண்ட ஆண்டவா,
அன்னியோன்னிய காரணா,
ஜீவ நேசா, தேவரீர்
வேண்டல் கேட்டிரங்குவீர்;
பிதா சுதன் ஆவியே,
ஏகரான ஸ்வாமியே
உந்தன் திவ்விய ஐக்கியமும்
தந்து ஆட்கொண்டருளும்.

**212** **கி.கீ.284**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**உச்சித மோட்ச பட்டணம் போக**
ஓடி நடப்போமே– அங்கே
உன்னத யேசு மன்னவருண்டு, ஓயா இன்பமுண்டு

***சரணங்கள்***

1. சித்திரச் சீயோன் பெற்றிடச் செல்லும்
சேனையின் கூட்டமதாய், –எங்கள்
ஜீவனினதிபர் யேசு நம்மகிபர்
சீயோன் பதி மனுவேல். – உச்சித

2. அன்பினால் அழைப்பார், ஆறுதல் சொல்வார்
அதிபதி யேசையர்– அங்கே
இன்பங்களுண்டு; இயேசுவின் சமூகம்
என்றென்றும் ஆறுதலே – உச்சித

3. கீதங்களோடு யேசுவைப் போற்றிக்
கெம்பீரமாய் நடப்போம் –அங்கே
கிளர் ஒளியுள்ள பட்டன ராசன்
கீதங்கள் நாம் அறைவோம். – உச்சித

*–கிறிஸ்மஸ்*

**213** **கி.கீ.286**

*உசேனி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**தந்தானைத் துதிப்போமே – திருச்**
சபையாரே, கவி – பாடிப்பாடி.

***அனுபல்லவி***

விந்தையாய் நமக்கனந்தனந்தமான,
விள்ளற்கரியதோர் நன்மை மிகமிகத் – தந்தானைத்

***சரணங்கள்***

1. ஒய்யாரத்துச் சீயோனே – நீயும்
மெய்யாகக் களிகூர்ந்து நேர்ந்து
ஐயனேசுக்குனின் கையைக் கூப்பித் துதி
செய்குவையே, மகிழ் கொள்ளுவையே நாமும் – தந்தானைத்

2. கண்ணாரக்களித்தாயே, – நன்மைக்
காட்சியைக் கண்டு ருசித்துப் புசித்து
எண்ணுக்கடங்காத எத்தனையோ நன்மை
இன்னுமுன்மேற் சோனாமாரிபோற் பெய்துமே. – தந்தானைத்

அட்டவணை

3. தென்னிந்திய திருச்சபையே – உனை
முற்றாய்க் கொள்ளவே அலைந்து திரிந்து
சத்துக் குலைந்துனைச் சத்தியாக்கத் தம்மின்
ரத்தத்தைச் சிந்தி எடுத்தே உயிர் வரம். – தந்தானைத்

4. தூரம் திரிந்த சீயோனே – உனைத்
தூக்கியெடுத்துக் கரத்தினிலேந்தி
ஆரங்கள் பூட்டி அலங்கரித்து நினை
அத்தன் மணவாட்டி யாக்கினது என்னை! – தந்தானைத்

5. சிங்காரக் கன்னிமாரே – உம்
அலங்காரக் கும்மி அடித்துப் படித்து
மங்காத உம் மணவாளன் யேசுதனை
வாழ்த்தி வாழ்த்தி ஏத்திப் பணிந்திடும். – தந்தானைத்

*– வே. மாசிலாமணி*

**214** **கி.கீ.289**

*ஆனந்தபைரவி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஆலயம்போய்த் தொழவா ருமென்ற தொனி**
ஆனந்தப்பரவசம் அருளுதாத்துமந்தனில்

***அனுபல்லவி***

ஆலயம் தொழுவது சாலவும் நன்றென
ஆன்றோருரை நெறி சான்ற வர்க்கானதே
ஆவலாயதி காலையும் பகல் மாலையுந் திருநாளிலும் பரன்
– ஆலயம்

அட்டவணை

1. பரம சன்னதியென்றும் பரிசுத்த தூதர்கள்
பணிந்து புகழ்ந்து கீதம் பாடியஞ்சலி செய்யும்
முறையோதுந் திருமறை கரமேந்தி தக்ஷணை
முழுமனதோடு கொண்டு உளம் இதழ் துதிவிண்டு
மோட்ச மாநகர் காட்சியால் இக சாட்சியாம் பரன்
மாட்சி காணவே. – ஆலயம்

2. பூர்வமுதல் தொழும்பர் போந்தாலயந் தொழுதார்
புனித சுதனும் நமக்கினு முன் மாதிரி தந்தார்
ஆர்வமுளாரவரே ஆராருடனுஞ் சென்றார்
ஐயனின் மகிமையே அங்கும் விளங்க நின்றார்
ஆதலாலினி யாரிலுங்குறை யோதிடாதென துள்ளமே இனி
– ஆலயம்

3. தனித்தியா னத்துடன் சமுசார ஜெபம் நன்று
சபையாரோ டர்ச்சனை தருதல் மிகவும் நன்று
இனிதே சத்திய வேதம் பொருளறவே உணர்ந்து
இலகு சுடர்கள் போல உலகுக்கொளியே தந்து
எந்தையார் சுதன் சிந்தையில் வளர்ந் தென்றுமன்பதில்
ஒன்றவே திரு – ஆலயம்

*–ஜி.சே. வேதநாயகம்*

**215** **கி.கீ.293**

*சங்கராபரணம்* *ஏகதாளம்*

***பல்லவி***

**வாரும் நாம் எல்லோரும் கூடி,**
மகிழ் கொண்டாடுவோம் – சற்றும்
மாசிலா நம் யேசு நாதரை
வாழ்த்திப் பாடுவோம் ஆ!

அட்டவணை

### *சரணங்கள்*

1. தாரகம் அற்ற ஏழைகள் தழைக்க நாயனார் – இந்தத்
தாரணியிலே மனுடவ தாரம் ஆயினார். – வாரும்

2. மா பதவியை இழந்து வறியர் ஆன நாம் – அங்கே
மாட்சி உற வேண்டியே அவர் தாழ்ச்சி ஆயினார். – வாரும்

3. ஞாலமதில் அவர்க்கிணை நண்பர் யாருளர் – பாரும்
நம் உயிரை மீட்கவே அவர் தம் உயிர் விட்டார் – வாரும்

4. மா கொடிய சாவதின் வலிமை நீக்கியே – இந்த
மண்டலத்தி னின்றுயிர்த் தவர் விண்டலஞ் சென்றார். – வாரும்

5. பாவிகட் காய்ப் பரனிடம் பரிந்து வேண்டியே – அவர்
பட்சம் வைத்துறும் தொழும்பரை ரட்சை செய்கிறார். – வாரும்

*– யோ. பால்மர்*

**216** **கி.கீ.296**

*நாதநாமக்கிரியை* *சாபுதாளம்*

### *பல்லவி*

**சரணம் நம்பினேன் யேசு நாதா – இது**

### *அனுபல்லவி*

தருணம் தருணம் உன்றன் கருணை கூர், வேதா – சரணம்

### *சரணங்கள்*

1. நின் அருளால் இங்கே வந்து – என்றும்
நின் அடைக்கலமாக என்னையே தந்து
முன் னாள் வினையைத் துறந்து – ஆதி
மூலமே, உனக் கோலம், ரட்சியும் என்று – சரணம்

2. சன்னதி முன் தொண்டன் நின்றே – என்றும்
தாயான கருணை உனக்கு உண்டென்றே
சென்னிமேல் கரம் தூக்கி நின்றே, உன்னைச்
சேவிக்கும் எளியேனைக் கோபிக்காய் என்றே – சரணம்

அட்டவணை

3. அலைவாய்த் துரும்புபோல் ஆடி – உன
ததி கருணை வரச் செம்பாதந் தேடித்
தொலையாத வாழ்வை மன்றாடி – அன்பின்
தோத்ர சங்கீர்த்தன கீதங்கள் பாடி – சரணம்

4. இனிய கருணை பொழிவதோ – எனை
இரு கரத்தால் அணை என் கிறிஸ்து நாதா
கனி வினை நீக்கிய நீதா – நசரைக்
கர்த்தாதி கர்த்தா உன் கருணையைத் தா, தா – சரணம்

*– த. சத்தியநாதன்*

**217** **கி.கீ.381**

*குரஞ்சி* *ஆதிதாளம்*

1. **தேவனே உம்மை யாந் துத்தியஞ் செய்கிறோம்**
தேவரீர் கர்த்தனென் றெங்கும்பிரஸ் தாபிப்போம்.

2. நித்திய தந்தையாம் நிர்மல னும்மையே
நித்தம்பூ மண்டலம் நின்றுவ ணங்கிடும்.

3. சம்மன சோருட சர்வசே னைகளும்
சாவிலா மண்டல சக்திகள் யாவரும்.

4. சேராபீன் கேருபீன் சேர்ந்தங்கோய் வில்லாமல்
சிந்தையாய் உந்தனின் சீர்புகழ் பாடுவார்.

5. சேனையின் தேவனே, கர்த்தரே, நீர் மிக்க
சுத்தரே, சுத்தரே, சுத்தரே என்கிறார்.

6. வானமும் பூமியும் உந்தனின் மாட்சியை
வாகுடன் காட்டுமே வள்ளலே யென்கிறார்.

7. மாட்சிமை பெற்றிடு மாவப்போஸ் தலரும்
மாய்விலா உம்மையே மன்றொடு போற்றுவார்.

8. தீர்க்கரென் கின்றவச் சீர்பெற்ற சங்கமும்
தெய்வமே உம்மையே தீர்க்கமாய் போற்றுவார்.

9. வீரமாய் நின்றிட்ட உம்ரத்த சாட்சிகள்
வீவிலா உம்மையே விண்ணதில் போற்றுவார்.

அட்டவணை

10. மட்டிலா மாட்சிமை பெற்றுள தந்தையே
மாவணக் கம்பெறும் மைந்தனைப் போற்றுவார்.
11. தேற்றுதல் செய்திடுந் தூயமா ஆவியைத்
தெய்வலோ கத்திலும் பூவிலும் போற்றுவார்.
12. பூவெல்லாம் போயுள சுத்தமா சங்கமும்
புண்ணியன் உம்மையே சுத்தமா சங்கமும்
13 மா கிறிஸ்து சீரல்லோ மகிமையின் ராஜன்
மாய்வில்லாத் தந்தைக்கு நித்திய மைந்தன்.
14. நரரைநீர் மீட்டிட முன்வந்த பொழுது
நற்கன்னி கர்ப்பத்தை வெறுத்தோட விலையே.
15. மரணத்தை வென்றிட்டு மாபக்தர் வசிக்க
மைந்தனே திறந்திட்டீர் மோட்சத்தைச் சிறக்க.
16. திருத்தந்தை யென்போரின் திகழ்மாட்சி யதிலே
தினமும் நீ ரிருக்கின்றீர் வலப்பக்கந்தனிலே.
17. தரணியோர் எங்கட்குத் தகுந்தீர்ப்பு அளிக்கத்
தாண்டிநீர் வருவீரென் றென்றுநம் புவோம்.
18. மாவிலை கொண்ட உம் ரத்தத்தால் மீட்டிட
மாந்தருக் கேதயை செய்திட வேண்டுவோம்
19. எங்களை நித்திய உம்மகிமையிலே
ஏகமாய்ச் சுத்தரோ டென்றும்நீர் சேர்த்திடும்.
20. அத்தனே ரட்சியும் ஐயன் உம்மாட்களை
ஆசீர்வதியுஞ்சு தந்தரந் தன்னைநீர்.
21. என்றைக்கும் மாண்டிடும் இச்சனந் தன்னை நீர்
எங்கும் உயர்த்திடு மென்றுமை வேண்டுவோம்.
22. இத்தினம் முற்றிலும் எப்பவஞ் செய்திடா–து
எங்களைக் காத்திட ஏகனே வேண்டுவோம்.
23. எங்களுக் கேதயை செய்திடும் ஐயா நீர்
என்றைக்கும் உம்மையேநம்பியிருக்கிறோம்.
24. உம்மையே நம்பினான் உய்கின்றே னாதலால்
ஒன்றிலுந் துன்பமே நேரவிடாதிரும்.

*– ச.த. ஞானமணி*

அட்டவணை

**218** **கி.கீ.392**

*சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**எந்நாளுந் துதித்திடுவீர் – அந்த**
இசர வேலின் ஏகோவா வைநீர்

***அனுபல்லவி***

இந்தநற் சாதியிற் சிந்தையாய்ச் சாலவே
விந்தைபு ரிந்திடு மெந்தைப ரன்றனை – எந்நாளுந்

***சரணங்கள்***

1. கர்த்தாவின் வழி செய்யவும் – தீமை
கட்டோடே நீக்கும் ரட்சிப்பை யார்க்கும்
கெம்பீரமாகச் சொல்லவும்
சுத்தனே யானாய் கர்த்தர் முன் போவாய்
கண்டுகொள் பாலா இந்தசொல் மாளா – எந்நாளுந்

2. தன்னாடு தனைச் சந்தித்து – மீட்டுத்
தாட்டிகப் பகைவரை ஓட்டிட உலகினில்
தாசன் தாவீது வம்வசத்து
இன்பர க்ஷண்யக் கொம்பைத் தந்தான்
இதோ நீர் கண்டு சிந்தையாய் நின்று – எந்நாளுந்

3. அந்தகாரத்திலிருப்போர் – சாவின்
ஆழவி ருள்தனிற் காலங்கள் போக்குவோர்
அங்குபிர காசமடைந்து
அந்த சமாதான உந்தரங் கண்டிட
ஆதித்தன் தோன்றிளார் ஜாதிக ளேநீர் – எந்நாளுந்

4. விந்தைப்பி தாவர்க்கும் – ஏக
வித்தான யேசு ரக்ஷக னார்க்கும்
வீவிலா ஆவியவர்க்கும்
சந்ததம் மகிமை சந்ததமென்று
சற்றுநீர் சொல்லிப் பற்றுடன் அள்ளி – எந்நாளுந்

*– ச.த. ஞானமணி*

அட்டவணை

**219** **கி.கீ.288**

*பிலஹரி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சேனைகளின் கர்த்தரே! நின்**
திருவிலம் அளவற இனிதினிதே!

***அனுபல்லவி***

வானவானங்கள் கொள்ளாத
ஈன ஆன்மாவைத் தள்ளாத – சேனை

1. திருவருளிலமே, கனுறும் உணரும்
தெருளம்பகமே, இனிதுறும் நிசமிது – சேனை

2. ஈண்டடியார் கேட்டிடும், நின்வசனமினிதே, இனிதே!
இகபர நலமொளிர் இதமிகு பெயருள
எமதரசெனும் நய – சேனை

3. புவியொர் பதிவான் புகநிதியே!
புனருவி ருறுமுழுக் கருளினிதே!
புதுவிடமே, புகுமனமே, புதுமதியே!
பரிவொடு இனிதருள்! – சேனை

4. பேயோட புவி பேதை மாமிசம்
பேணிடாதடியாருனைப்
பேறு தந்தவனே, யெனச்சொலி
பேணிடத்துணை ஈவையே!
பேசருமுன்னந்தம், பேதைகளின் சொந்தம் பேதமிலானந்தம்
பிசகொழியே, திடமளியே!
பெருமலையினிலரு முயிர்தரும் – சேனை

5. ஆலய மது நிறைவான
அவைக் குறை வொழிந்தேக
அவரவருனதில மெனமன விடர்சாக,
அருளும் பொருளுந் தெருளும் செறிந்திடும்
ஆலய பர னேச
ஆசுக மது வீச
ஆரண மொழி பேச
ஆ! புது எருசலையாம்
ஆலய மொரு நிலையாம்
அது நிக ரெது? – சேனை

*– ஞா. சாமுவேல்*

**220** **கி.கீ.292**

*செஞ்சுருட்டி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**சரணம், சரணம், சரணம் எனக்குன்**
தயை புரியும், என்பரனே

***அனுபல்லவி***

மரணத்தின் பெலன் அழித்துயிர்த்த என்
மன்னா, ஓசன்னா!

***சரணங்கள்***

1. தரணிதனில் வந்தவதரித்த தற்
பரனே, எனக்காக – வலு
மரணம் அடைந்தும், உயிர்த்தெழுந்த தென்
மகிமை, நித்திய பெருமை – சரணம்

2. சுரர்கள் போற்றும் பரனே உனக்குத்
துரோகியான எனக்கு – நீயே
இரவு பகல் என் குறைவு நீக்க, உண்
டேது நலம் என்மீது – சரணம்

அட்டவணை

3. தப்பின ஆடதற் கொத்த அடியேனைத்
தானே வந்து தேட – உனக்
கெப்படிச் சித்தம் உண்டானதிவ் வற்பனுக்
கற்புதமாம் முடி சூட – சரணம்

4. எவ்வித நன்மைக்கும் காரணனே, உனை
ஏழை அடியேனே, – பற்றி
இவ் வுலகத்தில் எவ்வேளையும் போற்றவே,
இரங்காய், எனக் கிரங்காய் – சரணம்

*– யோ. பால்மர்*

**221** **கி.கீ.285**

*ஆனந்தபைரவி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**திருமா மறையே – அருள்பதியே! நின்**
திருச்சபை வளர நின்தயை புரியே

***சரணங்கள்***

1. கருணை வாசகக் கதிர்பலத் தொளிர
கனகார் புவிநின்றே அகல
மருள்ஜன மொளிபுற அவனரு ளுணர – திருமா

2. யேசு நாமமெங் கணுமொளி வீச
இறையே நினை மெய் விசுவாச
நேச மோடேயுனின் தாசர்கள் பேச – திருமா

3. ஞாலம் அந்தமட் டெம்முடனிருக்க
நயவாக் களித்தாய் எமக்குருக்கச்
சீலமதாயுனின் வசனமதுரைக்க – திருமா

4. ஆறிரண்டு பேரான வருடனே
அமலா இருந்தாய் வெகுதிடனே
போரற அருளிய நேயமே போலே – திருமா

அட்டவணை

5. நின்னையன்றிக் கட்டிட எமக்காகா
நேயா, தூயா நினை வாகா
உன்னி உழைத்திடப் பலமளி யேகா – திருமா

6. சத்ய போதம் இத்தரைதனில் செழிக்க
தமியோர் நின் புகழே உரைக்க
நித்திய பாக்கியமே புவிக் களிக்க – திருமா

*– ஞா. சாமுவேல்*

## 2. திருமறை

**222** *Moscow* **பா.175**

A.M. 360 II 6,6,4,6,6,6,4

1. **ஆதியில் இருளை**
அகற்றி, ஒளியைப்
படைத்த நீர்
உம் சுவிசேஷத்தைக்
கேளாத தேசத்தைக்
கண்ணோக்கி, கர்த்தாவே
பிரகாசிப்பீர்

2. நற்சீராம் சுகத்தை
மெய்ஞான பார்வையை
அளித்த நீர்,
நைந்தோர் சுகிக்கவும்,
கண்ணற்றோர் காணவும்
மானிடர் பேரிலும்
பிரகாசிப்பீர்.

அட்டவணை

3. சத்தியமும் நேசமும்
உள்ளான ஜீவனும்
அளிக்கும் நீர்,
வெள்ளத்தின் மீதிலே
புறாப்போல பறந்தே
பார் இருள் நீக்கியே
பிரகாசிப்பீர்.

4. ஞானமும் வன்மையும்
தூய்மையும் அருளும்
திரியேகா நீர்,
கடலைப் போன்றதாய்
மெய்யொளி எங்குமாய்ப்
பரம்பும் வண்ணமாய்
பிரகாசிப்பீர்.

**223** Lord Thy Word Abideth **பா.177**

A.M. 243 6,6,6,6

1. **நாதன் வேதம் என்றும்**
எங்கள் வழி காட்டும்;
அதை நம்புவோர்க்கும்
மகிழ் ஒளி வீசும்.

2. ஆறுதலின் வேதம்
மீட்பின் சுவிசேஷம்
சத்துரு கிட்டும் போதும்
பயம் முற்றும் நீக்கும்.

3. புசல், அலை மோதின்
மேகம் இருள் மூடின்
வேதம் ஒளி வீசும்
க்ஷேம வழி சேர்க்கும்.

அட்டவணை

4. வாக்குக்கெட்டா இன்பம்
எண்ணில்லாத செல்வம்
பேதை மானிடர்க்கும்
தெய்வ வார்த்தை ஈயும்.

5. ஜீவனுள்ளமட்டும்
வேதம் பெலன் தரும்
சாவு வரும்போதும்
வேதம் ஆற்றித் தேற்றும்.

6. நாதா, உந்தன் வாக்கை
கற்றுணர்ந்து உம்மை
நேசித்தடியாரும்
என்றும் பற்றச் செய்யும்.

**224** **கி.கீ.246**

*மோகனம்* *ஏகதாளம்*

***பல்லவி***

**பாதைக்கு தீபமாமே**
பரிசுத்த ஆகமம் –மா நல்ல

***சரணங்கள்***

1. பாதைக்கு தீபமே, பாவிக்கு லாபமே
பேதைக்குத் திரவியமே, பரிசுத்த ஆகமம். –மா நல்ல

2. தேனின் மதுரமே, திவ்ய அமுதமே
வான பிதாவின் வாக்கே பரிசுத்த ஆகமம். –மா நல்ல

3. நீதியி னாதாரமே நெறியுள்ளோர் செல்வமே
ஜாதிகள் மேன்மையாமே பரிசுத்த ஆகமம். –மா நல்ல

4. ஞான சமுத்திரமே நல்ல சுமுத்திரையே
ஈனர்க்கும்ஆதரவே பரிசுத்த ஆகமம். –மா நல்ல

அட்டவணை

5. உலகோர்க் குயிர்துணை, உண்டோ அதற்கிணை?
அலகையை வெல்லுங்கணை பரிசுத்த ஆகமம். –மா நல்ல

6. எல்லையில்லா விஸ்தாரம், எவர்க்கும்ப ரமாகரம்
வல்ல பரனின் வேதம் ஆகமம். –மா நல்ல

*– தா. அருளானந்தம்*

**225** **கி.கீ.243**

*ஹரிகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சத்திய வேதத்தைத் தினம் தியானி**
சகல பேர்க்கும் அதபிமானி

***அனுபல்லவி***

உத்தம ஜீவிய வழி காட்டும், உயர்வானுலகில் உனைக் கூட்டும் –சத்திய

***சரணங்கள்***

1. வாலிபர் தமக்கூண் அதுவாகும், வயோதியர்க்கும் அதுணவாகும்
பாலகர்க்கினிய பாலும் அதாம்; படிமீ தாத்மபசி தணிக்கும் – சத்திய

2. சத்துருப் பேயுடன் அமர்புரியும் தருணம் அது நல் ஆயுதமாம்
புத்திரர் மித்திரரோடு மகிழும் பொழுதும் அது நல் உறவாகும் – சத்திய

3. புலைமேவிய மானிட ரிதயம் புனிதம் பெறுதற்கதுமருந்தாம்
நிலையா நரர்வாணாள் நிலைக்க நேயகாய கற்பம் அதாம் – சத்திய

4. கதியின் வழிகாணாதவர்கள் கண்ணுக்கரிய கலிக்கம் அது
புதிய எருசாலேம்பதிக்குப் போகும் பயணத்துணையும் அது – சத்திய

5. மாந்தர் ரக்ஷிப்படையும் வழி வழுத்தும் வேதவார்த்தை அது
வேந்தர் அமைச்சர் முதலெவர்க்கும் விதித்த பிரமாணமும் அதுவே
– சத்திய

*– மு. சாமுவேல்*

அட்டவணை

**226** **கி.கீ.245**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**வேத புத்தகமே, வேத புத்தகமே**
வேத புத்தகமே, விலை பெற்ற செல்வம் நீயே.

***சரணங்கள்***

1. பேதைகளின் ஞானமே, - பெரிய திரவியமே
பாதைக்கு நல் தீபமே,- பாக்யர்விரும்புந் தேனே!-வேத

2. என்னை எனக்குக் காட்டி, - என் நிலைமையைமாற்றிப்
பொன்னுலகத்தைக் காட்டிப் போகும் வழி
சொல்வாயே - வேத

3. துன்பகாலம் ஆறுதல் - உன்னால்வரும் நிசமே
இன்பமாகுஞ் சாவென்றாய் - என்றும்
நம்பினபேர்க்கே - வேத

4. பன்னிரு மாதங்களும் - பறித்துண்ணலாம் உன்கனி
உன்னைத் தியானிப்பவர் - உயர்கதி
சேர்ந்திடுவார். - வேத

*- அருளானந்தம் பிரசங்கியார்*

## 3. திருமுழுக்கு

**227** Winchester New **பா.179**

A.M. 50 L.M.

1. **தம்மண்டை வந்த பாலரை**
ஆசீர்வதித்த ரட்சகர்
இப்போதும் சிறுவர்களை
அணைக்கத் தயையுள்ளவர்.

அட்டவணை

2. குழந்தைகளுக்காகவும்
மரித்துயிர்த்த ஆண்டவர்
சிறந்த நன்மை வரமும்
தரக் காருணியமுள்ளவர்.

3. ஆ, இயேசுவே இப்பிள்ளையை
அணைத்து ஏந்தியருளும்
அளவில்லாசீர்வாதத்தை
அன்பாகத் தந்திரட்சியும்.

**228** In Token that Thou Shalt Not Fear **பா.180**

A.M. 328 *St. Stephen* C.M.

1. **நீ குருசில் மாண்ட கிறிஸ்துவை**
அறிக்கைபண்ணவும்
அஞ்சாவண்ணம் உன் நெற்றிமேல்
சிலுவை வரைந்தோம்.

2. கிறிஸ்துவின் மாண்பைக் கூறவே
வெட்காதபடிக்கும்
அவரின் நிந்தைக் குறிப்பை
உன்பேரில் தீட்டினோம்.

3. நீ கிறிஸ்துவின் செங்கொடிக்கீழ்
துணிந்து நிற்கவும்
சாமட்டும் நற்போராட்டத்தை
நடத்தும்படிக்கும்.

4. நீ கிறிஸ்துசென்ற பாதையில்
நேராகச் செல்லவும்
நிந்தை எண்ணாமல் சிலுவை
சகித்தீடேறவும்.

அட்டவணை

5. கிறிஸ்துவின் அடையாளத்தை
சபை முன்னே பெற்றாய்
நீ அவர் குருசைச் சுமந்தால்
பொற்கிரீடம் பூணுவாய்.

**229** The Son of man From Jordan Rose **பா.181**
A.M. 320 I *St. Flavian* C.M.

1. **யோர்தான் விட்டேறி, மனுஷ**
குமாரன் ஜெபித்தார்;
வானின்றுப் போதிறங்கின
புறா உருக் கண்டார்.

2. நல்லாவி அபிஷேகமாய்
அவர்மேல் தங்கினார்;
என் நேச மைந்தன் என்பதாய்
பிதா விளம்பினார்.

3. அவ்வாறு ஸ்நானத்தால் புது
பிறப்பை அடைந்தார்;
மெய்த் தெய்வ புத்திரர் என்று
விஸ்வாசத்தால் காண்பார்.

4. கபடில்லாப் புறாத் தன்மை
தரிக்கப்படுவார்;
நல்லாவி தங்கள் உள்ளத்தை
நடத்தப் பெறுவார்.

5. உம் ரத்த ஊற்றால் பாவத்தை
நீக்கின கிறிஸ்துவே;
தூய்மையோரான தாசரை
தற்காத்துக் கொள்ளுமே.

அட்டவணை

6. சீர்கெட்ட லோகம் மீட்டோரே,
பிதா ஆவியையும்;
உம்மோடு ஏகராகவே
என்றென்றும் துதிப்போம்.

**230** **கி.கீ.300**

*பிலஹரி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**இந்தக் குழந்தையை நீர் ஏற்றுக்கொள்ளும் கர்த்தாவே**

***அனுபல்லவி***

உந்தன் ஞானஸ்நானத்தால் உமக்குப் பிள்ளையாய் வந்த – இந்த

***சரணங்கள்***

1. பிள்ளைகள் எனக் கதிகப் பிரியம் வரலாம், என்று
உள்ளமுருகிச் சொன்ன உத்தம சத்தியனே –இந்த
2. பாலரைக் கையில் ஏந்தி பண்பாய் ஆசீர்வதித்த
சீலமாயின்றும் வந்தாசீர்வாதம் செய்யும், ஐயா –இந்த
3. உமக் கூழியஞ் செய்யவும் உம்மைச் சிநேகிக்கவும்
உமது ஆவியைத்தந்து உம்முடமந்தை சேர்த்து –இந்த
4. உலகமும் பேய்ப் பசாசும் ஒன்றும் தீது செய்யாமல்
நலமாய் இதைக் காத்தாளும், நன்மைப் பராபரனே! –இந்த
5. விசுவாசத் தோடிதுந்தன் மேய்ப்புக்கும் உள்ளடங்கிப்
புசிய மரம்போல் தெய்வ பத்தியிலே வளர – இந்த

*– பா. தாவீது*

**231** **கி.கீ.302**

*காம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஞானஸ்நான மா ஞானத்திரவியமே, திரு**
நாமம் ஜலமோடு சேர்

***சரணங்கள்***

1. வானபரன் யேசுலக மானிடர்க்காய்ப் பாடுபட்டு
வாய்த்தநலம் இலவசமாய்க் கொடுத்திட,
ஞானமுட னேசகல மானிடரைச் சீடராக்க,
நல்ல தேவ நாமமதைச் சொல்லிஜலம் வாருமென்ற -ஞான

2. தண்ணீராவியால் பிறக்கார் விண்டலம் பெறாரெனவே
சத்தியன் உரைத்தமொழி சுத்தமுணர்ந்து
சின்னவர், பெரியவர்கள் சீரியர்கள் பூரியர்கள்
செம்மைபெற மூழ்குவர்கள் இம்முழுக்கில் வேதமுறை -ஞான

3. கண்ணினாலே காண்பதென்ன? தண்ணீர்தானேயென்று சொல்லிக்
கர்த்தனி னுரைமறப்ப தெத்தனை மோசம்
அண்ணலார் பரிசுத்தாவி தன்னையுமிணைக்கு நேர்மை
அறிந்தவரே யிருகண் தெரிந்தவர் திருவருள் - ஞான

*- ஞா. சாமுவேல்*

**232** **கி.கீ.301**

*மோகனம்* *ஏகதாளம்*

***பல்லவி***

**பாலர் நேசனே - மிகப் - பரிவுகூர்ந்திந்தப்**
பாலரை யேந்தி - ஆசீர் - வதியும், யேசுவே

***சரணங்கள்***

1. பாலர் வந்திடத் -தடை - பண்ணொணாதென்றீர்;
சாலவந்தருள் - தந்து - தலைமேற் கைவைப்பீர்-பாலர்

2. வான ராச்சியம் - இவர் - வசத்த தென்றீரே;
ஞானஸ்நானத்தால் - உந்தம் - நாமஞ்சூட்டுவீர்-பாலர்

3. கானம் பாடியே - பாலர் - கர்த்தரே உமைத்
தானே, ஓசன்னா! - எனச் - சத்தமிட்டாரே - பாலர்

அட்டவணை

4. தேவ பாலனே, – நீருஞ், – சிறிய பிள்ளையாய்
மேவினீரதால் – உமை – வேண்டினோ மையா – பாலர்

5. ஆவியா லிவர் – ஞான – அபிஷேகம் பெற
ஜீவ நேசரே, – அருள் – சிறியர்க் கீவீரே – பாலர்

6. தாசர் நாங்கள் செய் – வாக்குத் – தத்தம் மீறாமல்
நேச யேசுவே, – யெமை – நிலைநிறுத்துவீர் – பாலர்

*– சு.ச. எரேமியா*

**233** Jesus is Calling

1. **பாவி உன் மீட்பர் கரிசனையாய்**
அழைக்கிறார்! அழைக்கிறார்!
அலைந்து திரிந்து ஏன் கெடுவாய்
யேசுவின் ரட்சிப்பைப் பார்!

***பல்லவி***

அழைக்கிறார்! அழைக்கிறார்!
விரும்பி, வருந்தி உந்தனை அழைக்கிறார்!

2. இளைத்தும் தவித்தும் போனவனை
அழைக்கிறார்! அழைக்கிறார்!
நம்பிக்கையோடவர் சரணத்தைச்
சேருவாய் தள்ளமாட்டார்

3. தாமதமின்றி இந்நேரத்தினில்
வந்திடுவாய்! வந்திடுவாய்
பாவமுற்ற உன் நெஞ்சத்தினில்
வாழ்வையும் பெற்றிடுவாய்!

4. விரும்பி வருந்தி அழைக்கிறார்
ஓடியே வா! ஓடியே வா!
வந்திடுவோரைச் சந்தோஷிப்பிப்பார்
உடனே! உடனே வா!

அட்டவணை

**234** Have you been to Jesus

S.S.379

1. **பரிசுத்தம் பெற வந்திட்டீர்களா?**
ஒப்பில்லா திரு ஸ்நானத்தினால்
பாவ தோஷம் நீங்க நம்பினீர்களா?
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்.

***பல்லவி***

மாசில்லா–சுத்தமா?
திருப் புண்ணிய தீர்த்தத்தினால்
குற்றம் நீங்கிவிடக் குணம் மாறிற்றா?
ஆட்டுக் குட்டியின் ரத்தத்தினால்.

2. பரலோக சிந்தை அணிந்தீர்களா?
வல்ல மீட்பர் தயாளத்தினால்
மறு ஜன்ம குணமடைந்தீர்களா?
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

3. மணவாளன் வரக் களிப்பீர்களா?
தூய நதியின் ஸ்நானத்தினால்
மோட்சகரை ஏறிச் சுகிப்பீர்களா?
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

4. மாசுகரை நீங்கும் நீசப்பாவியே
சுத்த ரத்தத்தின் சக்தியினால்
முத்திப் பேறுண்டாகும் குற்றவாளியே
ஆட்டுக்குட்டியின் ரத்தத்தினால்

**235** There shall be showers of Blessing **நா.கீ.283**

S.S.306

1. **அருள் ஏராளமாய் பெய்யும்**
உறுதி வாக்கிதுவே
ஆறுதல் தேறுதல் செய்யும்
சபையை உயிர்ப்பிக்குமே

***பல்லவி***

அருள் ஏராளம்
அருள் அவசியமே
அற்பமாய் சொற்பமாயல்ல
திரளாய் பெய்யட்டுமே

2. அருள் ஏராளமாய்ப் பெய்யும்
மேகமந்தாரமுண்டாம்
காடான நிலத்திலேயும்
செழிப்பும் பூரிப்புமாம் - அருள் ஏராளம்

3. அருள் ஏராளமாய் பெய்யும்
யேசு வந்தருளுமேன்
இங்குள்ள கூட்டத்திலேயும்
க்ரியை செய்தருளுமேன். - அருள் ஏராளம்

4. அருள் ஏராளமாயப் பெய்யும்
பொழியும் இச்சணமே!
அருளின் மாரியைத் தாரும்
ஜீவ தயாபரரே. - அருள் ஏராளம்

அட்டவணை

# 4. திடப்படுத்தல்

**236** O Jesus I Have Promised **பா.183**

A.M. 271 I 7,6,7,6 D

1. **எப்போதும், இயேசு நாதா,**
உம்மைப் பின்பற்றுவேன்
என்றே தீர்மானமாக
நான் வாக்குக் கொடுத்தேன்
நீர் என்னைத் தாங்கிக் காப்பீர்
அப்போது அஞ்சிடேன்;
முன்சென்று பாதை காட்டும்,
நான் வழி தவறேன்.

2. பூலோக இன்பம் செல்வம்
வீண் ஆசாபாசத்தால்
என் ஆத்துமா, மயங்காமல்
தெய்வீக பலத்தால்
நீர் துணை நின்று தாங்கும்,
என் அருள் நாயகா
தீங்கணுகாமல் காரும்,
மா வல்ல ரட்சகா.

3. ஆங்காரம் சுய சித்தம்
தகாத சிந்தையால்
மா கலக்கம் உண்டாகி
நான் தடுமாறினால்
நீர் பேசும், அருள் நாதா,
கொந்தளிப்படங்கும்
உம் நேச சத்தம் கேட்டு
என் ஆவி மகிழும்.

அட்டவணை

4. பின்பற்றினால் விண் வீட்டில்
பேரின்பம் பெறுவீர்
என்றே உம் சீஷர் நோக்கி
நீர் வாக்கு அளித்தீர்
அவ்வருள் வாக்கை நம்பி
இவ்வேழை அடியேன்
இதோ பின்செல்வேன் என்று
பிரதிக்னை பண்ணினேன்.

5. ஓயாமல் பெலன் தாரும்
உம்மடிச்சுவட்டில்
கால் வைத்து நடந்தேகி
நான் யாத்திரை செய்கையில்
நீர் வழி காட்டி என்னை
கைதாங்கி வருவீர்;
அப்பாலே மோட்ச வீட்டில்
பேர் வாழ்வை அருள்வீர்.

**237** **கி.கீ.304**

*யமுனா கல்யாணி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**பரிசுத்தாவி நீர் வாரும்! – திடப்**
படுத்தல் பெறுவோர்க் கருள் தாரும்! – இன்று

***அனுபல்லவி***

அருளினைப் பெருக்கும் அக்கினி மயமே
ஆவியின் நற்கனி நல்குமா தூயமே – பரி

***சரணங்கள்***

1. செயல்குண வசனத் தீதுகள் போக
திருச்சபை யதிலிவர் பூரணராக
ஜெயமொடு பேயை எதிர்த்துக் கொண்டேக
ஜெபதப தியானஞ் செய்வதற்காக – பரி

அட்டவணை

2. நற்கருணைதனை நலமுடன் வாங்க,
நாளொரு மேனியாய் ஆவியி லோங்க,
சற்குணராய் இவர் சபையைக் கை தாங்க,
சகல தீதான பேதங்களும் நீங்க – பரி

3. அஞ்ஞானங்க ளோடிவர் சமர் புரிய,
அருண்மறை யதினாழங் களையறிய,
நெஞ்சினில் அன்பு கொழுந்துவிட் டெரிய,
நின்னடியாரிவ ரென்பது தெரிய – பரி

4. பக்தியுந் தாழ்மையுமா யிவர் உய்ய,
பரிசுத்தமான ஜீவியஞ் செய்ய,
நித்தமுங் கிருபையின் கனி கொய்ய,
நிலைவரமாய் இவராவியில் துய்ய – பரி

5. தினமறை யோதி ஜெபித்து மன்றாட,
திருச்சபை யதின்ஐக் கியத்தினிற்கூட,
உணர்வோடு தொழுது கீதங்கள் பாட,
உள்ளந் திருந்து ஜீவாறுகளோட – பரி

*– ச.பே. ஞானமணி*

**238** **நூ.கீ.191**

***பல்லவி***

**பின் செல்வேன் என் மீட்பரே; – நானும்மைப்**
பின் செல்வேன், என் மீட்பரே

***அனுபல்லவி***

நான் செய்த பாவங்கள் நின் தயவால் தீர
நாதா ஜீவன் விட்டாய் வன் குருசில்லாதால் – பின்

1. என் சிலுவை எடுத்தேன், – எல்லாம் விட்டு
என்றும் நின்னையே அடுத்தேன்
நின்திருப்பாதத் தடங்களை நோக்கி நான்
நித்தமும் வாழ்வேனுன் சித்தம் என்றும் செய்து – பின்

2. சிங்கம் போல கெர்ச்சித்தே – என்தன் நேரே
சீறி மிக வெதிர்த்தே
கங்குல் பகலும் தீ அம்பு என் மேல் எய்யும்
கடியின் மேல் ஜெயம் பெற்று அடியேன் நின்னருள்
பெற்றுப் – பின்

3. நெருக்கம் செய்தால் மனுஷர் – அதென்னையுன்
நெஞ்சண்டை யோட்டுவதாம்
யாரிடத்தில் பல சோதனைகள் பதைத்தாலும்
பார்த்திபனே; உன்னை ஒருபோதுமே விடேன் – பின்

4. காசினியோர்கள் என்னைப் பகைத்தாலும்
காதல னேசு உன்னைப்
பாசமதாகவே பணிந்து தொழுவேனே;
பாக்கிய நகரில் பின் உன்னோடு வாழ்வேனே – பின்

**239** **கி.கீ.305**

*ஆனந்த பைரவி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**சிந்தைசெய்யும் எனில் நிரம்புவீர், தேவாவி உமைச்**
சிந்தைசெய்யும் என்னை நிரப்புவீர்

***அனுபல்லவி***

தந்தைப் பரனாரினின்றும் மைந்தனார் கிறிஸ்தினின்றும்
விந்தையாய்ப் புறப்பட்டேகும் வித்தகத்தின் ஆவியே நீர்
– சிந்தை

***சரணங்கள்***

1. பாலனாய்ப் பரமதந்தைக்கும் – அவரின்நேய
சீலனாம் கிறிஸ்தியேசுக்கும்
சாலவே என்றென்னைச் சேர்த்திட்டீர்–அத்தாலே தேவ
கோலம் என்றன் பங்கதாயிற்று
தந்தைதாயர் தந்த வாக்கைச் சொந்தவாயால் நான் கொடுக்க
வந்திருக்கும் வேளைதனில் தந்தைசுதன்
ஆவியே நீர் – சிந்தை

2. திரியேக தேவனே என்றே - அவரைவிட்டுப்
பிரியேன் என் பிராணன்போனாலும்
அரிய, அவரின் தயையே - எனக்கு என்றும்
உரிய ஒன்றான பொருளே
பொய், லோகம், மாம்சம் என்னைப் பிடித்திழுத்தாலும்
மெய் பரிசுத்தாவி உதவுவீர் எனக்கென்றும்.- சிந்தை

3. பக்தியுள்ள ஜீவியம் செய்து - பகலின் சேயாய்
எத்திசையிலும் விளங்கிடச்
சுத்தமனம் செய்கையைத் தரும் - எனைநான் என்றும்
தத்தம் செய்யக் கற்பித்தருளும்
உன்னதத்தில் வாழ் தந்தைக்கும் உயர்சுதன்
ஆவியர்க்கும்
என்னகத்தினின்றும் துதி ஏறுவதாக ஆமென்.
- சிந்தை

*- வே. தேவசகாயம்*

## 5. திருவிருந்து

**240** Dies Dominica, Cruger **பா.184**

A.M. 321, 219 7,6,7,6 D

1. **ஆ இயேசுவே, உம்மாலே**
நான் மீட்கப்பட்டவன்
உம் திவ்விய ரத்தத்தாலே
நான் சுத்தமானவன்;
மிகுந்த கஸ்தியாலே
என் தோஷத்தைத் தீர்த்தீர்,
உமது சாவினாலே
நீர் என்னை ரட்சித்தீர்.

அட்டவணை

2. நான் உம்மால் என்றும் வாழ,
இப்பந்தியில் நீரே
என் ஆவிக்கேற்றதான
அமிர்தம் தந்தீரே
உம் ஆசீர்வாதம் ஈந்து,
என் பாவம் மன்னியும்
அன்போடு என்னைச் சேர்த்து
தயாளம் காண்பியும்.

3. நீர் இன்னும் என்னில் காணும்
பொல்லாங்கு யாவையும்
அகற்றிப்போட வாரும்,
என் நெஞ்சில் தங்கிடும்
நான் உம்மைப் பற்றிக்கொள்ள
கருணை புரியும்;
மிகுந்த தாழ்மையுள்ள
சித்தம் கடாட்சியும்.

4. நல் மீட்பரே, உம்மோடு
நான் ஐக்கியமாகவும்,
நாடோறும் வாஞ்சையோடு
உம்மில் நிலைக்கவும்,
மிகுந்த அன்பினாலே
துணை செய்தருளும்
தெய்வீக அப்பத்தாலே
நீர் என்னைப் போஷியும்.

அட்டவணை

**241** St. Raphael **பா.186**

A.M. 287 8,7,8,7,4,7

1. **ஆத்துமாவே, உன்னை ஜோடி;**
தோஷம் யாவையும் விடு;
மீட்பரண்டை சேர ஓடி
நன்றாய் ஜாக்கிரதைப்படு;
கர்த்தர் உன்னை
பந்திக்கு அழைக்கிறார்

2. இந்தப் போஜனத்தின் மேலே
வாஞ்சையாய் இருக்கிறேன்;
உம்மையே இம்மானுவேலே,
பக்தியாய் உட்கொள்ளுவேன்,
தேவரீரே
ஜீவ அப்பமானவர்.

3. மாசில்லாத ரத்தத்தாலே
என்னை அன்பாய் ரட்சித்தீர்;
அதை நீர் இரக்கத்தாலே,
எனக்கென்றும் ஈகிறீர்;
இந்தப் பானம்
என்னை நித்தம் காக்கவே.

4. உம்முடைய சாவின் லாபம்
மாட்சிமை மிகுந்தது;
என்னிடத்திலுள்ள சாபம்
உம்மால்தானே நீங்கிற்று
அப்பமாக
உம்மை நான் அருந்தவே.

I am not Worthy Holy Lord

**242** *Beatutudo, Leicester* **பா.187**

A.M. C.M.323, 438 I

1. **உம் அருள் பெற, இயேசுவே**
நான் பாத்திரன் அல்லேன்;
என்றாலும் தாசன் பேரிலே
கடாக்ஷம் வையுமேன்.

2. நீர் எனக்குள் பிரவேசிக்க,
நான் தக்கோன் அல்லவே;
நீர் என் பாழ் நெஞ்சை ஆசிக்க
நிமித்தம் இல்லையே.

3. ஆனாலும் வாரும் தயவாய்
மா நேச ரக்ஷகா;
என்றைக்கும் தங்கும் ஐக்கியமாய்
என் பாவ நாசகா.

4. நற்கருணையாம் பந்திக்கும்
அபாத்திரன் ஆயினேன்;
நற் சீரைத் தந்து என்னையும்
கண்ணோக்கிப் பாருமேன்.

5. தெய்வீக பான போஜனம்
அன்பாக ஈகிறீர்;
மெய்யான திவ்விய அமிர்தம்
உட்கொள்ளச் செய்கிறீர்.

6. என் பக்தி, ஜீவன் இதினால்
நீர் விர்த்தியாக்குமேன்;
உந்தன் சரீரம் இரத்தத்தால்
சுத்தாங்கம் பண்ணுமேன்.

அட்டவணை

7. என் ஆவி, தேகம், செல்வமும்
நான் தத்தம் செய்கிறேன்;
ஆ! இயேசுவே சமஸ்தமும்
பிரதிஷ்டை செய்கிறேன்.

**243** **பா.188**

A.M. 323 *Leicester* C.M.

1. **உம்மாலேதான் என் இயேசுவே**
ரட்சிக்கப்படுவேன்;
உம்மாலேதான் பேரின்பத்தை
அடைந்து களிப்பேன்.

2. இப்பந்தியில் நீர் ஈவது
பரம அமிர்தம்
இனி நான் பெற்றுக் கொள்வது
அநந்த பாக்கியம்.

3. இவ்வேழை அடியேனுக்கு
சந்தோஷத்தைத் தந்தீர்
இக்கட்டு வரும்பொழுது
நீர் என்னைத் தேற்றுவீர்.

4. பூமியில் தங்கும் அளவும்
உம்மையே பற்றுவேன்;
எவ்வேளையும் எவ்விடமும்
நான் உம்மைப் போற்றுவேன்.

**244** Holley, Rivalux **பா.189**

S.S.599, A.M.164 L.M.

1. **என் மீட்பர் இயேசு கிறிஸ்துவே;**
உம் பாதத்தண்டை நிற்கிறேன்;
திக்கற்ற பிள்ளை கெஞ்சவே,
தள்ளாமல் சேர்த்துக் கொள்ளுமேன்.

அட்டவணை

2. என் கிரியைகள் எம்மாத்திரம்?
பிரயாசை எல்லாம் விருதா;
உம்மாலேயே மெய்ப் பாக்கியம்
உண்டாகும் நேச ரட்சகா.

3. உந்தன் சரீரம் ரத்தமும்
மெய்ப் பொருள் என்று அறிவேன்;
உட்கொண்டன்பாய் அருந்தவும்,
நான் பரவசமாகுவேன்.

4. மாசற்ற திரு ரத்தத்தை
கொண்டென்னைச் சுத்திகரியும்
மா திவ்விய ஜீவ அப்பத்தை
என் நெஞ்சத்தில் தந்தருளும்.

5. என் நாதா உம் சரீரமே
மேலான திவ்விய போஜனம்
மாசற்ற உந்தன் ரத்தமே
மெய்யான பான பாக்கியம்.

**245** Draw Nigh And Take The Body **பா.190**

A.M.313 10,10

1. **கர்த்தரின் மாம்சம் வந்துட்கொள்ளுங்கள்**
சிந்துண்ட ரத்தம் பானம் பண்ணுங்கள்.

2. தூய ரத்தத்தால் ரட்சிப்படைந்தோம்
நற்பெலன் பெற்று துதி ஏற்றுவோம்.

3. தெய்வ குமாரன், மீட்பின் காரணர்
தம் சிலுவையால் வெற்றி பெற்றவர்.

4. தாமே ஆசாரி, தாமே பலியாய்
தம்மைச் செலுத்தினார் எல்லார்க்குமாய்.

5. பண்டை ஏற்பாட்டின் பலிகள் எல்லாம்
இந்த ரகசியத்தின் முன் குறிப்பாம்.

அட்டவணை

6. சாவின் கடூர வன்மை மேற்கொண்டார்
தம் பக்தருக்கருள் கடாட்சிப்பார்.

7. உண்மை நெஞ்சோடு சேர்ந்து வாருங்கள்
ரட்சிப்பின் பாதுகாப்பை வாங்குங்கள்

8. தம் பக்தரை ஈங்காண்டு காக்கிறார்
அன்பர்க்கு நித்திய ஜீவன் ஈகிறார்

9. விண் அப்பத்தாலே திருப்தி செய்கிறார்
ஜீவ தண்ணீரால் தாகம் தீர்க்கிறார்

10. எல்லாரும் தீர்ப்பு நாளில் வணங்கும்
அல்பா ஒமேகா நம்மோடுண்டிங்கும்.

**246** Jesus Gentlest Saviour **பா.191**

A.M.107 Caswall 6,5,6,5

1. **சாந்த இயேசு சுவாமீ,**
வந்திந்நேரமும்,
எங்கள் நெஞ்சை உந்தன்
ஈவால் நிரப்பும்.

2. வானம், பூமி, ஆழி
உந்தன் மாட்சிமை
ராஜரீகத்தையும்
கொள்ள ஏலாதே.

3. ஆனால், பாலர் போன்ற
ஏழை நெஞ்சத்தார்
மாட்சி பெற்ற உம்மை
ஏற்கப் பெறுவார்.

4. விண்ணின் ஆசீர்வாதம்
மண்ணில் தாசர்க்கே
ஈயும் உம்மை நாங்கள்
போற்றல் எவ்வாறே?

அட்டவணை

5. அன்பு, தெய்வ பயம்
நல் வரங்களும்,
சாமட்டும் நிலைக்க
ஈயும் அருளும்.

I Hunger And I Thirst

**247** *Quam Dilecta, Eden* **பா.193**

A.M.242, 701 6,6,6,6

1. **தீராத தாகத்தால்**
என் உள்ளம் தொய்ந்ததே,
ஆ, ஜீவ தண்ணீரால்
தேற்றும் நல் மீட்பரே.

2. விடாய்த்த பூமியில்
என் பசி ஆற்றுமே;
நீர் போஷிக்காவிடில்
திக்கற்றுச் சாவேனே.

3. தெய்வீக போஜனம்
மெய் மன்னா தேவரீர்;
மண்ணோரின் அமிர்தம்
என் ஜீவ ஊற்று நீர்.

4. உம் தூய ரத்தத்தால்,
எம் பாவம் போக்கினீர்;
உம் திரு மாம்சத்தால்
ஆன்மாவைப் போஷிப்பீர்.

5. மா திவ்விய ஐக்கியத்தை
இதால் உண்டாக்குவீர்;
மேலான பாக்கியத்தை
ஏராளமாக்குவீர்.

அட்டவணை

6. இவ்வருள் பந்தியில்
பிரசன்னமாகுமே;
என் ஏழை நெஞ்சத்தில்
எப்போதும் தங்குமே.

Strengthen For Service Lord

**248** *Cross of Jesus, Stuttart* **பா.194**

A.M.640 II, 76 8,7,8,7

1. **தூய பந்தி சேர்ந்த கைகள்**
சேவை செய்யக் காத்திடும்;
தூய தொனி கேட்ட செவி
தீக்குரல் கேளாமலும்.

2. தூயர் தூயர் என்ற நாவு
வஞ்சனை பேசாமலும்;
தூய அன்பைக் கண்ட கண்கள்
என்றும் நம்பி நோக்கவும்.

3. தூய ஸ்தலம் சென்ற கால்கள்
ஒளியில் நடக்கவும்;
தூய ஆவி பெற்ற எம்மில்
நவ ஜீவன் பொங்கவும்.

And Now O Father Mindful Of Thy Love

**249** *Unde Et Memores* **பா.197**

A.M. 322 I 10,10,10,10,10,10

1. **பிதாவே, எங்களை கல்வாரியில்**
நீர் மீட்ட அன்பை நாங்கள் உணர்ந்தே,
நரர்க்காய் விண்ணில் உம் சமூகத்தில்
பரிந்து பேசும் கிறிஸ்துவுடனே,
ஒரே மெய்யான பலி படைப்போம்
இங்கே அதை உம்முன் பாராட்டுவோம்.

அட்டவணை

2. ஆ! எங்கள் குற்றம் கறை யாவையும்
பாராமல் கிறிஸ்து முகம் நோக்குமே
விஸ்வாஸம் மங்கி, ஜெபம் குன்றியும்
உம் பேரருளைப் போக்கடித்தோமே;
என்றாலும், எங்கள் பாவம் ஆக்கினை
இடையில் வைத்தோம் மீட்பர் புண்ணியத்தை.

3. இவ்வேளை எங்கள் நண்பர்க்காகவும்
உம் சன்னிதானம் வேண்டல் செய்வோமே;
சிறந்த நன்மை யாவும் அளியும்;
உம் மார்பினில் அணைத்துக் காருமே;
எத்தீங்கும் அனுகாமல் விலக்கும்;
உம்மில் நிலைக்க பெலன் அருளும்.

4. இவ்வாறு அண்டினோம் உம் சரணம்
மா சாந்தமுள்ள மீட்பரான நீர்
பேரின்பம் தரும் திவ்விய போஜனம்
கொடுப்பதாலும் தீமை நீக்குவீர்.
உற்சாகத்தோடு உம்மை என்றைக்கும்
சேவித்துப் பற்றத் துணை புரியும்.

**250** Come For The Feast is Spread **பா.198**

A.M. 281 6,4,6,4..6,6,6,4

1. **விருந்தைச் சேருமேன்,**
அழைக்கிறார்;
ஆகாரம் பாருமேன்
போஷிப்பிப்பார்;
தாகத்தைத் தீர்க்கவும்
இயேசுவின் மார்பிலும்
சாய்ந்திளைப்பாறவும்
வா, பாவி, வா.

அட்டவணை

2. ஊற்றண்டை சேரவும்,
ஜீவனுண்டாம்;
பாடும் விசாரமும்
நீங்கும் எல்லாம்;
நம்பி வந்தோருக்கு
திருப்தி உண்டாயிற்று;
ஜீவாற்றின் அண்டைக்கு
வா, பாவி, வா.

3. மீட்பரின் பாதமும்
சேராவிடில்
தோல்வியே நேரிடும்
போராட்டத்தில்
இயேசுவே வல்லவர்,
இயேசுவே நல்லவர்,
இயேசுவே ஆண்டவர்,
வா, பாவி, வா.

4. மோட்சத்தின் பாதையில்
முன் செல்லுவாய்;
சிற்றின்ப வாழ்வினில்
ஏன் உழல்வாய்?
வாடாத கிரீடமும்
ஆனந்தக் களிப்பும்
பேர் வாழ்வும் பெறவும்
வா, பாவி, வா.

5. சேருவேன் இயேசுவே
ஏற்றுக் கொள்வீர்;
பாவமும் அறவே,
சுத்தம் செய்வீர்;
அப்பாலே மோட்சத்தில்
ஆனந்தக் கடலில்
மூழ்கிப் பேரின்பத்தில்
கெம்பீரிப்பேன்.

**251** **கி.கீ.306**

*சங்கராபரணம்* *ரூபகதாளம்*

***பல்லவி***

**கர்த்தரின் பந்தியில் வா, – சகோதரா**
கர்த்தரின் பந்தியில் வா.

***அனுபல்லவி***

கர்த்தர் அன்பாய்ச் சொந்த ரத்தத்தைச் சிந்தின
காரணத்தை மனப் பூரணமாய் எண்ணி, – கர்த்தரின்

***சரணங்கள்***

1. ஜீவ அப்பம் அல்லோ? – கிறிஸ்துவின்
திருச்சரீரம் அல்லோ?
பாவ மனங் கல்லோ? – உனக்காய்ப்
பகிரப்பட்டதல்லோ?
தேவ குமாரனின் ஜீவ அப்பத்தை நீ
தின்று அவருடன் என்றும் பிழைத்திட – கர்த்தரின்

2. தேவ அன்பைப் பாரு – கிறிஸ்துவின்
சீஷர் குறை தீரு,
பாவக் கேட்டைக் கூறு – ராப்போசன
பந்திதனில் சேரு
சாவுக்குரிய மா பாவமுள்ள லோகம்
தன்னில் மனம் வைத்து அன்னியன் ஆகாதே. – கர்த்தரின்

3. அன்பின் விருந்தாமே – கர்த்தருடன்
ஐக்யப் பந்தியாமே;
துன்பம் துயர் போமே – இருதயம்
சுத்த திடனாமே;
இன்பம் மிகும் தேவ அன்பின் விருந்துக்கு
ஏது தாமதமும் இல்லாதிப்போதே வா. – கர்த்தரின்

*– மரியான் உபதேசியார்*

அட்டவணை

**252** **கி.கீ.309**

*தேவகாந்தாரி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தாரகமே – பசிதாகத்துடன் உம்மில்**
வேகத்துடனே வாரேன்.

***அனுபல்லவி***

சீருஞ் செல்வமும் பெற்றுத் தேறும்படிக் கென்னிடம்
சேரும் யாரையும் ஒருபோதும் தள்ளிடேனென்றீர். –தாரகமே

***சரணங்கள்***

1. பாவமகலத் தேவ கோபமது ஒழியப்
பாடுபட்டுயிர் விடுத்தீர் – பின்னும்
ஜீவ போசன மெனக்கீய உமையே அந்தச்
சிலுவைதனிலே பகுத்தீர்
மேவியெனை நெருக்கித் தாவும் பவத்தைக் கொன்று
சேவித் துயிர்பிழைக்க, தேவே, உமையுட்கொள்ள, –தாரகமே

2. காணாதொழிந்த ஆடு வீணாய்ப் போகாமல் அதை
கண்டுபிடித்தி ரட்சித்தீர் – அது
பேணுதலுடன் பரி பூரண மடைந்திடப்
பேருல குதித்தேனென்றீர்;
வேணுமுமது நீதிபூண நிறைவா யுன்றன்
மாணருளுந் திருப்தியானே பெற உம்மிடம். –தாரகமே

3. தந்த திருவசனம் உந்தம் இராப்போசனம்
தகமை எத்தனமாமே – யான்
சிந்தை பணிந்தவற்றை என்றன் மனதுட்கொள்ளத்
தேவசுத்தாவி தாமே;
உந்தம் தசையுதிர விந்தை விருந்தினை யான்
சந்தத முண்டு துதி சாற்ற அருள் செய்வீரே! –தாரகமே

*– வே. மாசிலாமணி*

அட்டவணை

**253** **கி.கீ.311**

*தேவகாந்தாரி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**அன்பரின் நேசம் ஆர் சொல்லாகும்? – அதிசய**
அன்பரின் நேசம் ஆர் சொல்லாகும்?

***அனுபல்லவி***

துன்ப அகோரம் தொடர்ந்திடும் நேரம் – அதிசய

1. இதுவென் சரீரம், இதுவென்றன் ரத்தம்
எனை நினைத்திடும்படி அருந்துமென்றாரே. – அதிசய

2. பிரிந்திடும் வேளை நெருங்கினதாலே
வருந்தின சீஷர்க்காய் மறுகி நின்றாரே. – அதிசய

3. வியாழனிரவினில் வியாகுலத்தோடே
விளம்பின போதகம் மறந்திடலாமோ? – அதிசய

4. செடியும் கொடியும்போல் சேர்ந்து தம்மோடே
முடிவு பரியந்தம் நிலைப்பீரென்றாரே – அதிசய

5. பக்தர் கட்காகப் பரமனை நோக்கி
மொத்தவும் ஊக்கமாய் வேண்டிக் கொண்டாரே. – அதிசய

*– சா. பரமானந்தம்*

**254** **கி.கீ.307**

*உசேனி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**போசனந்தா னுமுண்டோ – திருராப்**
போசனம் போலுலகில்?

***அனுபல்லவி***

ராசரும் வையக நீசரும் அம்பரன்
நேசரும் யேசுவின் தாசரும் உண்டிடப் – போசனம்

அட்டவணை

1. கர்த்தன் மரணத்தின் சாசன போசனம்
கன்மிகட் கானமெய் நேசத்தின் போசனம்
பக்தரை யொன்றாய் இணைத்திடும் போசனம்
பஞ்சகாலத்தும் கிடைத்திடும் போசனம். –போசனம்

2. பூர்வ ஏற்பாட்டோர்கள் காணாத போசனம்
பொன் வானதூதரும் உண்ணாத போசனம்
ஓர் காலமும் குறைவாகாத போசனம்;
ஒப்பில்லான் மாமிசம் ரத்தமாம் போசனம் –போசனம்

3. பஸ்காப் பலியின்பொருள் என்னும் போசனம்
பாவி புசிக்கும் சமாதான போசனம்;
நிஷ்கார நிந்தைப் பவம்போக்கும் போசனம்
நின்மலன் தந்திடும் அற்புதப் போசனம். –போசனம்

4. மாமலைப் பீடப் பலியான போசனம்
மானிட ஞானத்துக் கெட்டாத போசனம்
ஆமென்று நாங்கள் போதித்திடும் போசனம்
அத்தனார் மெய் மொழியாலான போசனம். –போசனம்

5. மாமிசம் அப்பத்தோடே வரும் போசனம்;
வல்லன் ரத்தன் ரசத்தோடும் போசனம்;
பூமியில் மோட்சம் கொணர்ந்திடும் போசனம்
பொய்க் கிறிஸ்தோர்களுக் காக்கினைப் போசனம் –போசனம்

6. ஒப்பனை யென்னக் கூடாதமெய்ப் போசனம்
ஒன்று மற்றொன்றாக மாறாத போசனம்;
தப்பற நாங்கள் புசித்திடும் போசனம்
சந்தோஷப் பாவப் பொறுப்பீயும் போசனம். –போசனம்

7. செத்தும் உயிரோ டெழும்பிடும் போசனம்;
சீவனோ டென்றென்றும் வாழ்விக்கும் போசனம்;
நித்த முண்டாலும் சலிக்காத போசனம்
நேச சஞ்சீவி யெனுந்திருப் போசனம். –போசனம்

– *ஞா. சாமுவேல்*

அட்டவணை

**255** **கி.கீ.310**

*பிலஹரி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**அருமை ரட்சகா, கூடி வந்தோம் – உம**
தன்பின் விருந்தருந்த வந்தோம்

***அனுபல்லவி***

அறிவுக் கெட்டாத ஆச்சரியமான
அன்பை நினைக்க – அருமை

***சரணங்கள்***

1. ஆராயும் எமதுள்ளங்களை – பல
வாறான நோக்கம் எண்ணங்களைச்
சீராய்ச் சுத்தமனதாய் உட்கொள்ள நீர்
திருவருள் கூரும். –அருமை

2. ஜீவ அப்பமும் பானமும் நீர் – எங்கள்
தேவையாவும் திருப்தி செய்வீர்
கோவே! மா பயபக்தியாய் விருந்து
கொண்டாட இப்போ. –அருமை

3. உமதன்பின் பிரசன்னம் பெற்றோம் – உமது
ஒளி முகதரிசனம் முற்றோம்
சமாதானம், அன்பு சந்தோஷமும் எமில்
தங்கச் செய்திடும். –அருமை

4. கிருபை விருந்தின் இந்த ஐக்கியம் – பூவில்
கிடைத்தற்கரிய பெரும் பாக்கியம்
அரும் பிரியத்தோ டெங்களை நேசிக்கும்
குருவே வந்தனம்! –அருமை

5. எங்கட்காய் உமை ஒப்புவித்தீர்! – கொடும்
ஈனச் சிலுவையில் மரித்தீர்
பொங்கும் பேரன்பை எங்கும் தெரிவிப்போம்,
புண்ணிய நாதரே! –அருமை

அட்டவணை

6. பந்திக் கெசமான் நீர் யேசுவே! – எமைச்
சொந்தமாய் வரவழைத்தீரே
உந்தம் கிருபை வல்லமை பெற்றுமக்
கூழியஞ் செய்ய. –அருமை

*– வே. சந்தியாகு*

## 6. குரு அருட்பொழிவு

**256** *Clarion* **பா.199**
A.M.644 8,7,8,7

1. **அபிஷேகம் பெற்ற சீஷர்**
தெய்வ வாக்கைக் கூறினார்
கட்டளை கொடுத்த மீட்பர்
“கூட இருப்பேன்” என்றார்.

2. இயேசுவே, நீர் சொன்ன வண்ணம்
ஏழை அடியாருக்கே
ஊக்கம் தந்து நல்ல எண்ணம்
சித்தியாகச் செய்வீரே.

3. முத்திரிக்கப்பட்ட யாரும்
ஆவியால் நிறைந்தோராய்
வாக்கைக் கூற வரம் தாரும்
அனல் மூட்டும் தயவாய்.

4. வாக்குத்தத்தம் நிறைவேற
சர்வ தேசத்தார்களும்
உந்தன் பாதம் வந்து சேர
அநுக்கிரகம் செய்திடும்.

5. பிதா, சுதன், தூய ஆவி
என்னும் தேவரீருக்கே
தோத்திரம், புகழ்ச்சி, கீர்த்தி
விண் மண்ணில் உண்டாகுமே!

அட்டவணை

**257** I Bind Unto Myself Today **பா.202**

A.M.457 *St. Patrick* D.L.M.

1. **நான் மூவரான ஏகரை**
இன்றே துதித்தழைக்கிறேன்;
திரித்துவர் மா நாமத்தை
என் ஆடையாக அணிந்தேன்.

2. மெய் விசுவாசத் திண்மையால்
நித்தியத்திற்காய் அணிந்துள்ளேன்;
கிறிஸ்துவின் அவதாரமும்,
யோர்தானில் பெற்ற தீட்சையும்,
சிலுவை மாண்டு மீட்டதும்,
உயிர்த்தெழல், பரமேறுதல்
மா தீர்ப்புநாள் பிரசன்னமும்,
நான் இன்றென்னில் அணிந்துள்ளேன்.

3. கேரூபின் நித்திய நேசமும்,
சேராபின் நீங்கா சேவையும்,
என்னாதர் கூறும் தீர்ப்புமே,
அப்போஸ்தலரின் வேதமே
முன்னோர், கனா, தீர்க்கர் கூற்றும்
கன்னியர் தூய நெஞ்சமும்,
சான்றோரின் செய்கை சேவையும்
நான் இன்றென்னில் அணிந்துள்ளேன்.

4. நடத்த தெய்வ பெலனும்,
தற்காத்துக் கேட்டுத் தாங்கிடும்
அவர் கண் காது சத்துவம்,
போதிக்க அவர் ஞானமும்
நற்பாதை காட்டும் கரமும்,
உரைக்க தெய்வ வார்த்தையும்,
பரம சேனை காவலும்
நான் இன்றென்னில் அணிந்துள்ளேன்.

அட்டவணை

5. கிறிஸ்தென்னோடும் கிறிஸ்தென்னுள்ளும்
கிறிஸ்து முன்னும் கிறிஸ்து பின்னும்
கிறிஸ்து ஆற்றும், கிறிஸ்து தேற்றும்,
கிறிஸ்து ஆளும், கிறிஸ்து காரும்,
இன்ப நாளும் துன்ப நாளும்
கிறிஸ்து தாங்கும் தொல்லை ஓய்வில்,
கிறிஸ்து தாங்கும் நேசர் நெஞ்சில்
நேயர் சேயர் தம்மின் வாயில்.

6. நான் மூவரான ஏகரை
இன்றே துதித்தழைக்கிறேன்
திரித்துவர் மா நாமத்தை
என் ஆடையாக அணிந்தேன்
சராசரங்கள் படைத்த
பிதா குமாரன் ஆவியே,
ரக்ஷணிய நாதா கிறிஸ்துவே,
மா மேன்மை ஸ்தோத்ரம் உமக்கே.

**258** **கி.கீ.314**

*மோகனம்* *சாபுதாளம்*

***பல்லவி***

**தருணம் இதில் யேசுபரனே! – உமதாவி**
தரவேணும் சுவாமி!

***அனுபல்லவி***

அருள்தரும் சத்ய வல்ல, அன்பின் ஜெபத்தின் ஆவி
அபிஷேகம் பெறுமுன்றன் அடியர்மேல் அமர்ந்திட. –தருணம்

***சரணங்கள்***

1. விந்தை, ஞானம், அறிவு வேத சத்தியங்களில்
மிக்க உயர்ந்து தேர்ந்து விண்ணொளி இவர் வீசச்
சத்யம் சகலத் துள்ளும் தாசர்களை நடத்தும்
சத்ய ஆவி இவர்மேல் சம்பூரணமாய்ப் பெய்ய. –தருணம்

அட்டவணை

2. பாவத்தை வேரறுக்கும் ஆவியின் வாள் பிடித்துப்
பலமாகவே இவர் உலகினில் போர் செய்யச்
சாவுற்றோர்களை நித்ய ஜீவனைப் பெறச் செய்யும்
மா வீரராய் விளங்க வல்லாவியே இறங்க. – தருணம்

3. ஆவியின் கனியென்னும் அன்பாதி குணங்களை
அனுதினமும் இவர் அணிகல மாயணிந்து
மேவும் திருமந்தையை மேய்த்து வளர்க்க நல்ல
மேய்ப்பரே அன்பின் ஆவி வாய்ப்பாய் இவரில் தங்க. – தருணம்

4. ஏக்கம் ஆத்தும தாகம் இடைவிடாமல் அடைந்து
ஊக்கத்துடனே இவர் ஓயாமல் ஜெபித்திட
வாக்குக் கடங்காப் பெருமூச்சோடே எமக்கா
மன்றாடும் ஜெப ஆவி என்றென்றும் நிரம்பிட – தருணம்

5. மாசுகளற உம்மில் வாசமாக நிலைத்து
மாபணிவாய் உந்தம் மகிமையை நிதம் தேடத்
தேசுறு அருள்நாதா, தாசர் உள்ளத்தினின்று
ஜீவ நதிகள் ஓடிச் செல்வம் பொழியச் செய்ய. – தருணம்

– *வே. சத்தியாகு*

**259** O Thou Who Makest Souls To Shine **பா.200**

A.M.353 *St. Lawrence* L.M.

1. **காத்தாவே, பரஞ்சோதியால்**
ஆன்மாவைப் பிரகாசிப்பிப்பீர்;
சீர் அருள் என்னும் பனியால்
உம் அன்பாய்வோரை உய்விப்பீர்.

2. உம் மந்தை சுத்தமாகவும்,
விளக்கெல்லாம் இலங்கவும்
போதகர் சபையாருக்கும்
வரப்பிரசாதம் அருளும்.

அட்டவணை

3. விண் ஆள் தாம் முதல் ஆகியே
மற்றோரை ஆங்குயர்த்தவும்,
விஸ்வாசம், நம்பிக்கை, அன்பே
பிரசங்கிப்போர்க்கு ஈந்திடும்.

4. எவ்வேழையான பேர்களும்
மேலான ராஜியம் சேரவே,
கேட்போர்க்குக் கற்க விருப்பம்,
சற்குணம், சாந்தம் நல்குமே.

5. நிர்ப்பந்த ஆயுள் முழுவதும்
ஒன்றாய் விழித்திருக்கவே
உம் மேய்ப்பர், மந்தை இரண்டையும்
ஆசீர்வதித்துக் காருமே.

6. இவ்வாறு அருள் செய்திடில்
உம்மில் பிழைத்தும்மில் சாவோம்;
இம்மையில் நாங்கள் வாழ்க்கையில்
சாவாமையை முன் ருசிப்போம்.

## 7. திருப்பணி

**260** God is Working His purpose Out **பா.205**

A.M.735 I *Benson* 15,15,15,19

1. **கர்த்தர் தம் கிரியை செய்கிறார்**
ஆண்டாண்டுகள் தோறுமே;
கர்த்தர் தம் கிரியை செய்கிறார்
அவர் காலம் வருமே
ஆண்டுகள் செல்ல வந்திடும், ஆம்
அவரின் ராஜ்யமே;
ஆண்டவர் மகிமை புவியை நிரப்பும்
ஆழி ஜலம் போலவே.

அட்டவணை

2. கர்த்தரின் செய்தி கேட்பராம்,
பூமி எங்கும் உள்ளோரே
பக்தர் அச்செய்தி கூறுவார்
அவர் வாக்கை கைக்கொண்டே
கண்டமே, தீவே, கேட்பீரே,
ஆம், அவரின் வார்த்தையே;
ஆண்டவர் மகிமை புவியை நிரப்பும்
ஆழி ஜலம் போலவே.

3. கர்த்தரின் கிரியை செய்திட
மாந்தரை ஒன்றாக்கிட
அத்தனார் சாந்த பிரபுவின்
திவ்விய ராஜ்யம் தோன்றிட;
தொண்டராம் நாம் என் செய்வதாம்?
ஆம்! விரைந்து வந்திட
ஆண்டவர் மகிமை புவியை நிரப்பும்
ஆழி ஜலம் போலவே.

4. கர்த்தரின் சுவிசேஷமாம்
மகத்தான ஜோதியை
எத்திக்கிலும் பரப்பிட வாரும்!
ஏற்றும் கொடியை!
துண்டிப்போம் பாவம் சாபத்தை
ஆம் அவரின் ஆவியால்!
ஆண்டவர் மகிமை புவியை நிரப்பும்
ஆழி ஜலம் போலவே.

5. கர்த்தரின் துணையின்றியே
வேலை யாவும் வீணாமே;
வித்தில் விண்ணுயிர் இல்லையேல்
விளைவு நாம் காணோமே;
(ஆயின்) ஆண்டுகள் செல்ல வந்திடும்
ஆம் அவரின் ராஜ்யமே!
ஆண்டவர் மகிமை புவியை நிரப்பும்
ஆழி ஜலம் போலவே.

அட்டவணை

**261** Blow Ye The Trumpet Blow **பா.207**

A.M.546 Darwall's 148th 6,6,6,6,8,8

1. **கர்த்தாவின் தாசரே**
எக்காளம் ஊதுங்கள்;
சந்தோஷ செய்தியை
எங்கெங்கும் கூறுங்கள்;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

2. எல்லார் முன்பாகவும்
இயேசுவை உயர்த்துங்கள்
அவரே யாவர்க்கும்
ரட்சகர் என்னுங்கள்
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

3. மோட்சத்தைப் பாவத்தால்
இழந்த மாந்தரே,
கிறிஸ்துவின் ரத்தத்தால்
மோட்சம் கிடைக்குமே.
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

4. பாவம் பிசாசுக்கும்
சிறைப்பட்டோர்களே
உங்களை ரட்சிக்கும்
மீட்பர் நல் இயேசுவே.
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

அட்டவணை

5. சந்தோஷ செய்தியை
எல்லாரும் கேளுங்கள்
அன்போடு இயேசுவை
இப்போதே சேருங்கள்;
சிறைப்பட்டோரின் மீட்புக்கு
யூபிலி ஆண்டு வந்தது.

**262** Thy Kingdom Come O God **பா.209**
A.M.217 *St. Cecilia* 6,6,6,6

1. **கிறிஸ்து எம் ராயரே,**
வந்தாளுகை செய்யும்
வெம் பாவம் நீங்கவே
செங்கோலைச் செலுத்தும்.

2. விரோதம் நீங்கியே,
விண்போல மண்ணிலும்
தூய்மையும் அன்புமே
எப்போது செழிக்கும்?

3. உம் வாக்குக்கேற்றதாய்
வீண் போரும் பகையும்
சீர் கேடும் முற்றுமாய்
எப்போது ஒழியும்?

4. எழும்பும், கர்த்தாவே,
வல்லராய் வாருமேன்
தாசர் தவித்தோமே,
வந்தாற்றித் தேற்றுமேன்.

5. உம் மார்க்கம் நாமமும்
பலர் பழிக்கின்றார்
துர் கிரியை பலரும்
நாணாமல் செய்கின்றார்.

6. தேசங்கள் யாவிலும்
மெய் பக்தி மங்கிற்றே
விண் ஜோதி வீசிடும்
மா விடி வெள்ளியே.

**263** Alleluia Dulce Carmen **பா.211**
A.M. 82 8,7,8,7,4,7

1. **தேசத்தார்கள் யாரும் வந்து**
சுவிசேஷ வார்த்தையே
கேட்டு உந்தன் ஜோதி கண்டு
சேவிப்பார்கள் என்றீரே;
ஆ, கர்த்தாவே
வாக்கை நிறைவேற்றுமேன்.

2. வையகம் எல்லாம் மிகுந்த
புத்தியீனமுள்ளது
அதால் மாந்தர்க்குள் புகுந்த
கேடு மா பலத்தது
ஆ கர்த்தாவே
மாந்தரை இரட்சியும்.

3. உம்முடைய வார்த்தை சொல்ல
போகும் போதகர்களை
நீர் பலப்படுத்தி, நல்ல
புத்தி தந்து, நேசத்தை
ஆவியாலே
ஊழியர்க்கு ஈந்திடும்

4. வார்த்தை கேட்கும் ஊர் ஜனங்கள்
உண்மையை உணரவும்
அங்கங்குள்ள பொய் மதங்கள்,
யாவும் நீங்கிப் போகவும்
தூய வல்ல
ஆவியைக் கடாட்சியும்.

அட்டவணை

**264** Jesus Shall Reign Where'er The Sun **பா.212**

S.S.1084 *Duke Street* L.M.

1. **பகலோன் கதிர்போலுமே**
இயேசுவின் ராஜரீகமே
பூலோகத்தில் வியாபிக்கும்
நீடுழி காலம் வர்த்திக்கும்.

2. பற்பல ஜாதி தேசத்தார்
அற்புத அன்பைப் போற்றுவார்;
பாலரும் இன்ப ஓசையாய்
ஆராதிப்பார் சந்தோஷமாய்.

3. நல் மீட்பர் ராஜ்யம் எங்குமே,
சிரேஷ்ட பாக்கியம் தங்குமே,
துன்புற்றோர் ஆறித் தேறுவார்,
திக்கற்றோர் வாழ்ந்து பூரிப்பார்.

4. பூலோக மாந்தர் யாவரும்
வானோரின் சேனைத் திரளும்
சாஷ்டாங்கம் செய்து போற்றுவார்
"நீர் வாழ்க, ராயரே" என்பார்.

**265** *Warrington* **பா.214**

A.M. I L.M.

1. **மேலோக வெற்றி சபையும்**
பூலோக யுத்த சபையும்
ஒன்றாகக் கூடிச் சுதனை
துதித்துப் பாடும் கீர்த்தனை.

2. ராஜாக்களுக்கு ராஜாவே,
கிருபாதார பலியே,
மரித்தெழுந்த தேவரீர்
செங்கோல் செலுத்தி ஆளுவீர்.

அட்டவணை

3. பூமியில் உள்ள தேசத்தோர்,
பற்பல பாஷை பேசுவோர்
எல்லாரையும் ஒன்றாகவே
இழுத்துக் கொள்வேன் என்றீரே.

4. கிரேக்கர், யூதர், தீவார்கள்;
ராஜாக்கள், குடி ஜனங்கள்,
கற்றோர், கல்லாதோர் யாவரும்
வந்தும்மைப் போற்றச் செய்திடும்.

5. பொன், வெள்ளி, முத்து, ரத்னமும்
எல்லாப் பூலோக மேன்மையும்
காணிக்கையாக உமக்கே
செலுத்தப்படும் இயேசுவே.

**266** There is a Gate That Stands Afar **பா.203**

S.S.372 8,7,8,7

1. **அதோ! ஓர் ஜீவ வாசலே!**
அவ்வாசலில் ஓர் ஜோதி
எப்போதும் வீசுகின்றதே
மங்காத அருள் ஜோதி.

ஆ! ஆழ்ந்த அன்பு இதுவே!
அவ்வாசல் திறவுண்டதே.
பாரேன்! பாரேன்
பார் திறவுண்டதே.

2. அவ்வாசலுள் பிரவேசிப்போர்
கண்டடைவார் மெய்வாழ்வும்
கீழோர், மேலோர், இல்லோர், உள்ளோர்
எத்தேச ஜாதியாரும்.

3. அஞ்சாமல் அண்டிச் சேருவோம்,
அவ்வாசலில் உட்செல்வோம்;
எப்பாவம் துன்பும் நீங்கிப்போம்
கர்த்தாவைத் துதி செய்வோம்.

அட்டவணை

**267** Must I go and Empty Handed **பா.203**

S.S. 789

1. **கேரை ஏறி உமதண்டை**
நிற்கும் போது ரக்ஷகா!
உதவாமல் பலனற்று
வெட்கப்பட்டுப் போவேனோ?

***பல்லவி***

ஆத்துமா ஒன்றும் ரக்ஷிக்காமல்
வெட்கத்தோடே ஆண்டவா!
வெறுங்கையனாக உம்மைக்
கண்டு கொள்ளல் ஆகுமா?

2. ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை
வைத்திராமல் சோம்பலாய்க்
காலங்கழித்தோர் அந்நாளில்
துக்கிப்பார் நீர்ப்பந்தராய்

3. தேவரீர் கை தாங்க சற்றும்
சாவுக்கஞ்சிக் கலங்கேன்
ஆயினும் நான் பலன் காண
உடைக்காமற் போயினேன்!

4. வாணாள் எல்லாம் வீணாளாகச்
சென்று போயிற்றே, ஐயோ!
மோசம் போனேன்! விட்ட நன்மை
அழுதாலும் வருமோ?

5. பக்தரே உற்சாகத்தோடு
எழும்பிப் பிரகாசிப்பீர்!
ஆத்துமாக்கள் இயேசுவண்டை
வந்து சேர உழைப்பீர்.

அட்டவணை

# 8. நற்செய்திப்பணி

**268** **கி.கீ.267**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தாசரே, இத்தரணியை அன்பாய்**
இயேசுவுக்கு சொந்தமாக்குவோம்.

***அனுபல்லவி***

நேசமாய் இயேசுவைக் கூறுவோம், அவரைக் காண்பிப்போம்,
மாவிருள் நீக்குவோம், வெளிச்சம் வீசுவோம் – தாசரே

***சரணங்கள்***

1. வருத்தப்பட்டுப் பாரஞ்சுமப்போரை,
வருந்தியன்பாய் அழைத்திடுவோம்
உரித்தாய் இயேசு பாவப் பாரத்தை,
நமது துக்கத்தை, நமது துன்பத்தைச் சுமந்து தீர்த்தாரே. – தாசரே

2. பசியுற்றோர்க்குப் பிணியாளிகட்குப்
பட்சமாக உதவி செய்வோம்,
உசித நன்மைகள் நிறைந்து, தமை மறந்து,
இயேசு கனிந்து, திரிந்தனரே. – தாசரே

3. நெருக்கப்பட்டு ஒடுக்கப்பட்டோரை
நீசரை நாம் உயர்த்திடுவோம்
பொறுக்கவொண்ணாக் கஷ்டத்துக்குள்
நிஷ்டூரத்துக்குள், படுகுழிக்குள் விழுந்தனரே. – தாசரே

4. இந்து தேச மாது சிரோமணிகளை
விந்தை யொளிக்குள் வரவழைப்போம்,
சுந்தர குணங்களடைந்து அறிவிலுயர்ந்து
நிர்பந்தங்கள் தீர்ந்து, சிறந்திலங்கிட. – தாசரே

5. மார்க்கம் தப்பி நடப்போரைச் சத்ய
வழிக்குள் வந்திடச் சேர்த்திடுவோம்
ஊக்கமாக ஜெபித்திடுவோம், நாமுயன்றிடுவோம்
நாம் உழைத்திடுவோம், நாம் ஜெயித்திடுவோம். – தாசரே

*–வே. சந்தியாகு*

அட்டவணை

**269** **கி.கீ.269**

*பியாகு* *ரூபகதாளம்*

***பல்லவி***

**ஆத்தும ஆதாயம் செய்குவோமே – இது**
ஆண்டவர்க்குப் பிரியம்; – நாமதினால்
ஆசீர்வாதம் பெறுவோம்,

***அநுபல்லவி***

சாத்திரம் யாவும் தெரிந்த கிறிஸ்தையன்
தஞ்சத்தைப் பெற்று நாமிந்த மாவேலையில்
ஆத்திரமாக முயற்சி செய்வோமாகில்
அற்புதமான பலனை அடையலாம்.

***சரணங்கள்***

1. பாழுலக முழுவதையும் ஒருவன் சம்
பாதித்துக் கொண்டாலும் – ஒரு
நாளுமழியாத ஆத்துமத்தை அவன்
நஷ்டப்படுத்தி விட்டால்,
ஆளுந்துரையவனாயிருந்தாலுமே,
அத்தால் அவனுக்கு லாபமில்லை யென்று,
ஏழை ரூபங்கொண்டு ஞாலமதில் வந்த
எம்பெருமான் கிறிஸ்தேசன்று சொன்னாரே. –ஆத்தும

2. கெட்டுப்போன ஆத்துமாக்களை ரட்சிக்க
மட்டில்லா தேவசுதன் – வானை
விட்டுலகில் கனபாடு பட்டு ஜீவன்
விட்டதும் விந்தைதானே;
துட்டை யொருத்தியி னாத்துமத்தை மீட்க
தூயபரன் முன்னோர் கிணற்றருகிலே
இட்டமுடன் செய்த இரட்சணிய வேலையை
இந்த நிமிஷமே சிந்தையி லெண்ணியே. –ஆத்தும

*– யே. ஞானமணி*

அட்டவணை

**270** **கி.கீ.270**

*மோகனம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஜீவ வசனங் கூறுவோம் – சகோதரரே;**
சேர்ந்தே எக்காளம் ஊதுவோம்.

***அனுபல்லவி***

பாவிகள் மேலுருகிப் பாடுபட்டு மரித்த
ஜீவாதி பதி யேசு சிந்தை மகிழ்ந்திடவே. – ஜீவ

***சரணங்கள்***

1. பாதகப் பேயின் வலையில், – ஐயோ! திரள் பேர்
பட்டு மடியும் வேளையில்
பேதமையோடு பிடிவாத மருள் மிகுந்து
வேதனை தானடையப் போவோர் கதி பெறவே. – ஜீவ

2. காடுதனிலே அலைந்தோம் – கிறிஸ்தேசு
கர்த்தன் சேவையில் அமர்ந்தோம்
நாடு, நகர், கிராமந் தேடி நாம் பெற்றடைந்த
நல்ல ஈவு வரங்கள் எல்லாருங் கண்டடைய. – ஜீவ

3. பூலோகம் எங்கும் நமையே – கிறிஸ்து நாதர்
போகச் சொல்லி விதித்தாரே;
காலமெல்லாம் உம்மோடு கூடயிருப்பேன் என்ற
கர்த்தன் வாக்கை நினைத்து எத்தேசமுந் திரிந்து. – ஜீவ

4. விண்ணின் மகிமை துறந்தார், – கிறிஸ்து நமை
மீட்கக் குருசில் இறந்தார்;
மண்ணின் புகழ், பெருமை எல்லாம் தூசுகுப்பை என்
றெண்ணிச் சிலுவைதனை எடுத்து மகிழ்ச்சியோடு. – ஜீவ

*– வே. மாசிலாமணி*

அட்டவணை

**271** **கி.கீ.271**

*மோகனம்* *சாபுதாளம்*

### *பல்லவி*

**உன்றன் திருப்பணியை உறுதியுடன் புரிய**

உதவாத பாவி நானே.

### *அனுபல்லவி*

அந்தகாரமே நின்றுன் அருணோதயமே கண்டு

வந்த நாள் முதற்கொண்டு வைத்தாய் எனக்குன் தொண்டு–உன்றன்

### *சரணங்கள்*

1. வேதனத்தின் பொருட்டோ, மேலவர் நிமித்தமே
வெளியிட்டறிக்கை செய்யவோ? – உல
காதாயம் சுயநயம் அகிலத்துரிய புகழ்
அடைந்து ப்ரகாசிக்கவோ?
ஓதிக்காலங் கழிக்க உலகாவி அடைந்தவன்
நீதிக்கெனைப் பலியாய் நேர்ந்துகொண் டுழைக்கேனோ?– உன்றன்

2. வேனல் குளிரைக் கண்டு மேனி மிகவெருண்டு
வெளியேறா தகம் துஞ்சினேன் – வேளைப்
பான முணவுபிந்த பலபிணி வருமென்ற
பயத்தாலே நித மஞ்சினேன்;
கானகம் மலைசென்று கடும்பணி குளிர்வென்று
போனகம் நீரகன்று புவியி லுழைத்த யேசு. – உன்றன்

3. காடோ, மலை நதியோ, கடலோ, கடந்தலுத்துக்
கஸ்தி மிகவே அடைந்து – உடல்
பாடுங் கவலை நோயும் பசியும் நிருவாணமும்,
பகைவர் திருடர் மோசமும்
சாடக் கிறிஸ்துவுக்குத் தகுந்த பானபலியாய்
ஓடத்தனை யொப்பித்தோன் உறுதி யெனக்கில்லையே. – உன்றன்

அட்டவணை

4. வண்டி குடைகள் ஜோடுவைத்தும் எனது கூடு
மயங்கி அயர்ந்து வாடுதே – இனி
என்று மிருப்பிடத்திலிருந்து பணி புரிய
இசைந்தென் மனது நாடுதே;
ஒன்றும் உதவியின்று ஊரே அலைந்து சென்று
நன்றே நிதம்புரிந்த நரனே பரனே யேசு. – உன்றன்

*– ஜி.சே. வேதநாயகம்*

**272** **கி.கீ.272**

*பியாகு* *ஆதிதாளம்*

1. **வீராதி வீரர் இயேசு சேனை நாங்கள்,**
சேனை நாங்கள், இயேசுவின் சேனை நாங்கள்.

2. திரு வசனத்தை எங்கும் திரிந்து சொல்வோம்,
திரிந்து சொல்வோம், அதை அறிந்து சொல்வோம்.

3. அறிவீன மென்னும் காட்டை அதமாக்குவோம்,
அதமாக்குவோம்; ஞானமதால் தாக்குவோம்.

4. சிலுவைக் கொடியைச் சேரத் தேடிப் பிடிப்போம்,
தேடிப் பிடிப்போம், அன்பு கூர்ந்து பிடிப்போம்.

5. ரட்சண்ய சீராவுடன் நீதிக் கவசம்,
நீதிக் கவசம், கையாடுவோம் வாசம்.

6. விசுவாசக் கேடகத்தை மேலுயர்த்துவோம்,
மேலுயர்த்துவோம், அதை மேலுயர்த்துவோம்.

7. பாவச் சோதனைத் தடைகள் பாசம் நீக்குவோம்,
பாசம் நீக்குவோம்; ஆசாபாசம் போக்குவோம்.

*– சா. சீமோன்*

அட்டவணை

**273** Jesus Saves **கன்.கீ.273**

S.S.1079

**1. நல்ல செய்தி! யேசுவை**
நோக்கிப்பார்! ரட்சிப்பார்
நம்பி வந்து அவரை
நோக்கிப்பார்! ரட்சிப்பார்
எந்தப் பாவியாயினும்
தள்ளமாட்டேன் என்கிறார்
துரோகம் செய்த போதிலும்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்.

2. எங்கும் செய்தி சொல்லுவோம்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
தேசா தேசம் கூறுவோம்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்!
எந்த நாடு தீவிலும்
யேசு காத்து நிற்கிறார்
மூடன் நீசன் ஆகிலும்
நோக்கிப்பார்! ரட்சிப்பார்.

3. இன்னும் கேள்! மா நேசராம்
இயேசுவே காக்கிறார்
நம்பும் பக்தரை யெல்லாம்
காக்கிறார்! காக்கிறார்
சற்றும் தவறாமலும்
கையில் ஏந்திக் கொள்ளுவார்;
கேடு பாடில்லாமலும்
காக்கிறார்! காக்கிறார்.

அட்டவணை

4. சுவிசேஷம் இதுவே!
காக்கிறார்! காக்கிறார்
பாவம் நீங்கிப் பின்னுமே
காக்கிறார்! காக்கிறார்
மோட்சம் சேருமளவும்
தாங்கிக் கொண்டே இருப்பார்
தீமையைச் செய்யாமலும்
காக்கிறார்! காக்கிறார்.

**274** **கி.கீ.371**
*பரசு* *ஆதிதாளம்*

***பல்லவி***

**யேசுவுக்கு நமது தேசத்தைச் சொந்தமாக்கப்**
பாசமாய் முயல்வோம், தாசரே!

***அனுபல்லவி***

தேசொளி ஞாலமெங்கும் வீசும் இயேசுவில் விசு
வாசம் வைத்தன் பின் சுவிசேஷத்தை ஏந்தி – யேசு

***சரணங்கள்***

1. கங்காநதி துவக்கி கன்னியாகுமரி வரை
எங்குமே யேசுராஜா ஆளவே – அவர்
சிங்காரக்கொடி மேலிலங்கக் குடிகளெல்லாம்
மங்காச் சந்தோஷ முற்று வாழவே, மன்னன். – யேசு

2. விந்தைப் பூர்வீக நூல்கள் தத்துவ ஞானத்துக்கு
மெத்தப் பேர் போன இந்து தேசமாம்; இதில்
சத்தியமாக வந்த நித்யர் யேசுவின் பரி
சுத்த பரம ஞான ஜோதியாய்த் தோன்ற. – யேசு

3. தீய மாமூல் வழக்கம் ஓய வீண்பக்தி நீங்க,
மாயக் கோட்பாடு முற்றும் மாறவே, – யேசு
தூயன் சத்தியவேத ஞாய விதிகள் உள்ளம்
பாயநம் நாட்டார் குணமாகவே, வல்ல. – யேசு

4. நம்மை வெறுத்து யேசுநாதனுக் கொப்புவித்துச்
செம்மையுடன் உழைத்துச் சேவிப்போம்; அவர்க்
குண்மை பாராட்டி நமக்குள்ள யாவும் படைத்து
நம்மாலியன்றளவு முயல்வோமே என்றும். – யேசு

*– வே. சந்தியாகு*

**275** **நூ.கீ.387**

**ஜெயம் ஜெயம் அல்லேலூயா ஜெயம் ஜெயம் எப்போதும்**
யேசுநாதர் நாமத்திற்கு ஜெயம் ஜெயம் எப்போதும்.

1. உம்மைப் பின்செல்வேன் என் சுவாமி எனக்காக நீர் மரித்தீர்
எல்லாரும் ஓடினாலும் உமதன்பால் நானிருப்பேன்.

2. பாவி பாவி பாவி பாவி பரலோகம் சேரவா
பிராணநாதர் பாதத்தண்டை தாவியே ஓடிவா.

3. பாவ சஞ்சலத்தை விட நாளை வரக் காத்திராதே
ரட்சகரே அழைக்கிறார் பாவியே ஓடிவா.

4. நானே வழி சத்தியம் நானே ஜீவன் என்றாரே
நாதன் கிறிஸ்துவண்டை பாவியே ஓடி வா.

## 9. திருமணம்

**276** The Voice that Breathed O'er Eden **பா.216**

A.M. 350 II *Matrimony* 7,6,7,6

1. **ஏதேனில் ஆதி மணம்**
உண்டான நாளிலே
பிறந்த ஆசீர்வாதம்
மாறாதிருக்குமே.

2. இப்போதும் பக்தியுள்ளோர்
மணமும் தூய்மையாம்
மூவர் பிரசன்னமாவார்
மும்முறை வாழ்த்துண்டாம்.

அட்டவணை

3. ஆதாமுக்கு ஏவாளைக்
கொடுத்த பிதாவே
இம்மாப்பிள்ளைக்கிப் பெண்ணை
அளிக்க வாருமே

4. இரு தன்மையும் சேர்ந்த
கன்னியின் மைந்தனே
இவர் இரு கையும்
இணக்க வாருமே.

5. மெய் மணவாளனான
தெய்வ குமாரர்க்கே
சபையாம் மனையாளை
ஜோடிக்கும் ஆவியே.

6. நீரும் இந்நேரம் வந்து
இவ்விரு பேரையும்
இணைத்து, அன்பாய் வாழ்த்தி
மெய்பாக்கியம் ஈந்திடும்.

7. கிறிஸ்துவின் பாரியோடே
எழும்பும் வரைக்கும்
எத்தீங்கில் நின்றும் காத்து
பேர் வாழ்வு ஈந்திடும்.

O Perfect Love All Human Thought Transcending

**277** *Strength And Stay Perfect Love* **பா.218**

11,10,11,10

1. **புத்திக்கெட்டாத அன்பின் வாரீ, பாரும்**
உம் பாதம் அண்டினோமே, தேவரீர்
விவாகத்தால் இணைக்கும் இரு பேரும்
ஒன்றாக வாழும் அன்பை ஈகுவீர்.

அட்டவணை

2. ஆ ஜீவ ஊற்றே, இவரில் உம் நேசம்,
நல் நம்பிக்கையும், நோவு சாவிலும்
உம் பேரில் சாரும் ஊக்க விசுவாசம்,
குன்றாத தீரமும் தந்தருளும்.

3. பூலோகத் துன்பம் இன்பமாக மாற்றி,
மெய்ச் சமாதானம் தந்து தேற்றுவீர்;
வாழ்நாளின் ஈற்றில் மோட்ச கரையேற்றி
நிறைந்த ஜீவன், அன்பும் நல்குவீர்.

**278** **கன்.கீ.318**

*இந்துஸ்தான்* *ஏகதாளம்*

**பயந்து கர்த்தரின் பக்தி வழியில்**
பணிந்து நடப்போன் பாக்கியவான்
முயன்று உழைத்தே பலனை உண்பான்
முடிவில் பாக்கியம் மேன்மை காண்பான்

1. உண்ணுதற்கினிய கனிகளைத் தரும்
தண்ணிழல் திராட்சைக் கொடி போல் வளரும்
கண்ணிய மனைவி மகிழ்ந்து இருப்பாள்
எண்ணரும் நலங்கள் இல்லத்தில் புரிவாள்

2. ஒலிவமரத்தைச் சூழ்ந்து மேலே
உயரும் பச்சிளங் கன்றுகள் போல
மெலிவிலா நல்ல பாலகரும் பாலே
மிகவும் களித்து வாழ்வர் அன்பாலே

3. கர்த்தருன் வீட்டைக் கட்டாவிடில் அதைக்
கட்டுவோர் முயற்சி வீணாம் அறி இதை
கர்த்தரால் வாரும் சுதந்திரம் பிள்ளைகள்
கர்ப்பத்தின் கனியும் கர்த்தரின் கிருபை

*-வீ.ப.கா. சுந்தரம்*

அட்டவணை

**279** **கி.கீ.343**

*கமாஸ்* *அடதாளம்*

***பல்லவி***

**நிச்சயம் செய்குவோம் வாரீர், – வதுவரர்க்கு**
நிச்சயம் செய்குவோம் வாரீர்.

***சரணங்கள்***

1. மெச்சும் கல்யாண குண விமலன் துணையை நம்பி
இச்சிறு தம்பதிகள் இருவர் மனம் விரும்பி. –நிச்சயம்

2. வாழ்க்கை வனத்தினிலே மலரும் மணமும்போலே
மனையறம் நடத்திட மனம் இவர் கொண்டதாலே. – நிச்சயம்

3. செடியும் கொடியும்போலே உடலும் உயிரும் போலே
கூடி மணவாழ்வினில் வரக்கருத்திவர் கொண்டதாலே
– நிச்சயம்

4. இரவியும் கதிரும்போல் பாவுடன் ஊடும் போலே
இருவரும் நீடூழி இனிது வாழப் பூமேலே. – நிச்சயம்

*–வீ. ஜெயராஜ்*

**280** **கி.கீ.345**

*கேதாரகௌளனம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**யேசு நாயகா, வந்தாளும் – எந்நாளும் திவ்ய**
யேசு நாயகா, வந்தாளும்

***அனுபல்லவி***

ஆசீர்வாதமாக இந்த நேச மணமே நன்றாக. – யேசு

***சரணங்கள்***

1. சுந்தரம் மிகும்படி முன் அந்த மணவீட்டில்
உந்தன் அருள் தந்த தயை போல அன்பாலே – யேசு

2. உத்தம சன்மார்க்க நெறி, பக்தி, விசுவாசம்
நித்திய சமாதானம் உற்று, வாழ, மிக வாழ – யேசு

அட்டவணை

3. துங்கம் மிகு நன் கனம் விளங்கி, வளமாக
மங்களம் ஓங்க, நலம் தாங்க – யேசு

4. நித்திய சுபசோபனமோ டெத்திசையினும் பெருகப்
புத்திர சந்தானமே செழிக்க தழைக்க. – யேசு

*–வேதநாயகம் சாஸ்திரிகள்*

**281** **கி.கீ.346**

*சூரியகாந்தம்* *ரூபகதாளம்*

***பல்லவி***

**குணம் இங்கித வடிவாய் உயர் கோவே, இயேசு தேவே**
மணம் இங்கதி வளமாய் உற வருவீர், மேசியாவே.

***சரணங்கள்***

1. மன்றல் செய்து மனை புது மண
வாளனோ டவனேரும்
தன் துணையான மங்கையும் இங்கே
தழைக்க அருள் தாரும். – குணம்

2. ஆதி மானிடர்க்கான ஓர் துணை
அன்றமைத்த நற் போதனை
தீதற இணையாம் இவர்க்கருள்
செய்குவீர், எங்கள் நாதனே. – குணம்

3. தொன்று கானாவின் மன்றல் ஓங்கிடத்
தோன்றிய தயாபரனே
இன்று மன்றல் சிறந்திட அருள்
ஈந்திடும், க்ருபா கரனே – குணம்

4. பண்பதில் அவலேசமும் குறை
பாடில்லாத தெய்வீகனே,
நண்பதில் இருபேரும் வாழ்ந்திட
நண்ணும், மா திரியேகனே. – குணம்

5. உற்ற நல் உறவோடும் எங்கள்
உரிமை ஆனவர் யாரும்
பற்றதாய் உறு பக்தியோடும்மைப்
பாட நல் மனம் தாரும் - குணம்

*- யோ. பால்மர்*

**282** **கி.கீ.349**

*துஜாவந்தி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**இந்த மங்களம் செழிக்கவே – கிருபை செய்யும்**
எங்கள் திரித்துவ தேவனே!

***அனுபல்லவி***

சுந்தரக் கானாவின் மணப் பந்தலில் சென்றம்மணத்தைக்
கந்தரசமாகச் செய்த விந்தை போல், இங்கேயும் வந்து.
– இந்த

***சரணங்கள்***

1. ஆதித் தொடுத் தன்பை எடுத்தாய், மானிடர் தமை
ஆணும் பெண்ணுமாகப் படைத்தாய்;
நீதி வரம் நாலுங் கொடுத்தாய் – பெற்றுப் பெறுகி
நிற்க உலகத்தில் விடுத்தாய்
மாதவர் பணியும் வேத போதனே அந்தப்படி உன்
ஆதரவைக் கொண்டு சுதன் நீதயை நம்பிப்புரிந்த
– இந்த

2. தக்க ஆபிராமும் விண்டனன்; அதனை மன
துக்குள் எலியேசர் கொண்டனன்
முக்கிய ஆரன் நிலத்தண்டினன்; - நினைத்தபடி
சக்கிமதாகக் கண்டனன்;
பக்குவம் எரைத்திடா ரெபேக்காளும் ஈசாக்குவுக்குத்
தக்கமண வாழியாகத் தந்து தயை செய்தாற் போல.
– இந்த

3. சத்திய வேதத்தின் வாசனே; அருளம் பரி
சுத்த சுவிசேட நேசனே
பக்தர்கள் பவ விமோசனே – பழுதணுவும்
அற்ற கிறிஸ்தேசு ராசனே
வெற்றியால் யாக்கோபுவுக்கு முற்றிலும் அளித்த பேறாய்ப்
புத்திர சம்பத்துண்டாக்கி நித்ய சுபசோபனமாய். – இந்த

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**283** **கி.கீ.350**

*நாதநாமக்கிரியை* *சாபுதாளம்*

***பல்லவி***

**இம்மணர்க் கும்மருள் ஈயும் பர வாசா!**
ஏசுக் கிறிஸ்தையா, ஓ! சருவேசா!

***சரணங்கள்***

1. செம்மையும் நன்மையும் செல்வமும் தாரும்
தேவரீர் இவ்வீரு பேரையும் காரும். –இம்

2. ஆதாமோ டேவையை அன்றமைத்தீரே
அவ்விதமாக நீர் இன்றும் செய்வீரே. –இம்

3. அன்பன் ஈசாக்கு ரெபேக்காட் கிரங்கி
ஆபிரகாமுடன் சாராளைக் காத்தீர். –இம்

4. உந்தயை பெற்றிவர் ஓங்கிப் பெருகவும்
ஒருவர்க்கொருவர் நல்லன்பில் நிலைக்கவும். –இம்

5. தாழ்மை பொறுமைகள் சற்குண மேன்மைகள்
தந்தும தாவியைக் கொண்டு காத்தாளுமேன். –இம்

6. இயேசு கிறிஸ்துவை நேசித்து வாழவும்
இன்ப விசுவாச வீட்டார் என்றாகவும். –இம்

*–பா. தாவீது*

அட்டவணை

**284** **ப.கீ.306**

*இராகம்: இந்துஸ்தான் காப்பி* *ஆதிதாளம்*

***பல்லவி***

மண வாழ்வு புவி வாழ்வினில் வாழ்வு – மங்கள வாழ்வு
மருவிய சோபன சுப வாழ்வு

***சரணங்கள்***

1. துணை பிரியாது, தோகையிம்மாது
சுப மண மகளிவர் இதுபோது
மணமுறை யோது வசனம் விடாது
வந்தன ருமதருள் பெறவேது, – நல்ல – மண

2. ஜீவ தயாகரா, சிருஷ்டியதிகாரா,
தெய்வீக மாமண வலங்காரா
தேவ குமாரா திருவெல்லையூரா
சேர்ந்தவர்க்கருள் தராதிருப்பீரா? – நல்ல – மண

3. குடித்தன வீரம், குணமுள்ள தாரம்,
கொடுத்துக் கொண்டாலது சமுசாரம்
அடக்கமாசாரம், அன்பு, உதாரம்
அம்புவி தனில் மனைக்கலங்காரம் – நல்ல – மண

4. மன்றல் செய் தேவி, மணாளனுக்காவி
மந்திரம் அவர்குறை மேதாவி
மன்றியிப் பூவி லமிர்த சஞ்சீவி;
அவளையில்லாதவ னொரு பாவி – நல்ல – மண

**285** **ப.கீ.30**

*இராகம்: இங்கிலீஷ்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**மங்களம்! ஜெயமங்களம்**
மாசில்லா திரியேகர்க்கு!

அட்டவணை

***அனுபல்லவி***

சங்கையின் ராஜர்க்கு
எங்குமாபுகழ் நேசர்க்கு – மங்களம்

***சரணங்கள்***

1. அந்தம் ஆதி யில்லாதவர்,
விந்தை யுலகம் செய்தவர்,
முந்த நமை நேசித்தவர்,
மூவுலகுக்கும் ஆண்டவர்
சந்ததம் வாழ்பவர்,
எந்தையாம் பிதாவுக்கு. –மங்களம்

2. வான லோகமே விட்டு,
ஈனப்பாவியையிட்டு
தானமா யுயிர் விட்டு
தீன நரரைத் தான் மீட்டு,
வாழும் மணவா ளர்க்கு
நன்மைசெய் மனுவேலர்க்கு. –மங்களம்

3. சுத்த இதயமே தந்து,
பக்தர் மனதிலே வந்து
அத்த னாலயமா யீந்து
நித்தம் துதிபெற நின்று,
சத்தியம் போதிக்கும்
சுவாமி பரிசுத்தாவிக்கும். –மங்களம்

**286**

**1. ஆசீர்வதியும் கர்த்தரே ஆனந்த மிகவே**
நேசா உதியும் சுத்தரே நித்தம் மகிழவே.

***பல்லவி***

வீசீரோ வான ஜோதி கதிரிங்கே
மேசியா எம் மணவாளனே
ஆசாரியரும் வான் ராஜனும்
ஆசீர் வதித்திடும்.

அட்டவணை

2. இம்மண வீட்டில் வாரீரோ, ஏசு ராயரே
உம் மணம் வீசச் செய்யீரோ, ஓங்கும் நேசமதால்
இம் மணமக்கள் மீதிறங்கிடவே
இவ்விரு பேரையுங் காக்கவே
விண் மக்களாக நடக்கவே
வேந்தா நடத்துமே – வீசீரோ

3. இம்மண மக்களோடென்றும் என்றென்றும் தங்கிடும்
உம்மையே கண்டும் பின் சென்றும் ஓங்கச் செய்தருளும்
இம்மையே மோட்சமாக்கும் வல்லவரே
இன்பத் தோடன் பாக்கி சூட்சமே
உம்மிலே தங்கித்தரிக்க
ஊக்கமருளுமே – வீசீரோ

4. ஒற்றுமையாக்கும் இவரை ஊடாக நீர் நின்றே
பற்றோடும் மீது சாய்ந்துமே பாரில் வசிக்கவே
வெற்றி பெற்றோங்குமே இவர் நெஞ்சத்திலே
வீற்றாளும் நீர் ஏசு ராஜனாம்
உற்றவான் ராயர் சேயர்க்கே
ஒப்பாய் ஒழுகவே. – வீசீரோ

5. பூதல ஆசீர்வாதத்தால் பூரணமாகவே
ஆதரித்தாளும் கர்த்தரே ஆசீர்வதித்திடும்
மாதிரளாக இவர் சந்ததியார்
வந் துதித்தும்மை என்றும் பிரஸ்தாபிக்க
ஆ தேவ கிருபை தீர்மானம்
ஆம் போல் அருளுமேன். – வீசீரோ

6. ஞான விவாகம் எப்பொழுதும் ஞாபமாகவே
வான மணாளன் வாஞ்சித்து வாழ்க மனை யாளை
ஆனந்தமாகவே தூய தன்மையைதை
ஆடையாய் நீர் ஈயத்தரித்து
சேனையோடே நீர் வரையில்
சேர்ந்து நீர் சுகிக்கவே. – வீசீரோ

*–அருள்திரு. P. சாமுவேல் பாக்கியநாதன்*

அட்டவணை

**287**

*பல்லவி*

**மங்களம் செழிக்க கிருபை அருளும் மங்கள நாதனே**

*சரணங்கள்*

1. மங்கள நித்திய மங்கள நீ
   மங்கள முத்தியும் நாதனும் நீ
   எங்கள் புங்கவ நீ எங்கள் துங்கவ நீ
   உத்தம சத்திய நித்திய தத்துவ மெத்த மகத்துவ
   அத்தனுக் கத்தனாம் ஆபிராம் தேவ நீ. – மங்கள

2. மணமகன் ............................ அவர்களுக்கும்
   மணமகள் ................................ அம்மாளுக்கும்
   மானு வேலர்க்கும் மகானுபவர்க்கும்
   பக்தியுடன் புத்தி முத்தியளித்திடும் நித்தியனே உனைத்
   துத்தியம் செய்திடும் சத்திய வேதர்க்கும். – மங்களம்

3. சங்கை நித்திய நாதனும் நீ
   பங்கமில் சத்திய போதனும் நீ
   மங்கா மாட்சிமை நீ தங்கக் காசியும் நீ
   இத்தரை இத் திருமணத்தின் இருவர்
   ஒத்து நல் இன்பம் உற்றவர் வாழ நடத்தியருளுமே– மங்களம்

*– ஆபிரகாம் பண்டிதர்*

**288**

S.S.93

**1. நேச ராஜாவாம் பொன்னேசு நாதா**
   வாசமாய் இம்மன்றல் சிறந்தோங்க
   ஆசையோடெழுந்து அன்பின் நாதா
   தேசு நல்குவீர் சுகம் நூங்க.

அட்டவணை

*பல்லவி*

நித்யானந்த செல்வம் நிறைவாரி
சத்ய சுருதியின் மொழிபோல் – உம்
சித்தமாகிப் பெய்யும் அருள் மாரி
நித்தம் எமின் கண்மணிகள் மேல்.

2. ப்ரபை சூழ்ந்த பாக்யம் ஈயும் நேயா
ப்ரியம் தோய்ந்த செல்வம் யாவும் கூட – நல்
ஸ்திரமாக உந்தன் பாதம் சார்ந்து
கிருபை ஊக்கமோடென்றும் தேட – நித்யா

3. தேவ சேவைக்கான மேல் வரங்கள்
சேயர் மீதேராளமாகத் தங்க
ஜீவ காருண்யரின் பொற்குணங்கள்
செல்வர் ஜீவியத்தில் விளங்க. – நித்யா

4. ஆசி தாரும் அன்பரிரு பேர்க்கும்
அருள் ப்ரபை இவர் மேலே வீசும்
நேசர்க்கும் முகப்பிரசன்னம் நல்கும்
நீர் மெய்ச் சமாதானம் ஈயுமேன். – நித்யா

**289** S.S.295

The Lord bless thee and
keep thee;
The Lord make His face
shine upon thee;
And be gracious unto thee;
The Lord lift up His
Countenance upon thee,
And give thee peace.

அட்டவணை

கர்த்தர் தம் ஆசி காவல்
க்ருபை யாவும் ஈவாரா
ஜோதி முகத்தால் தம்மை
பிரகாசிப்பிப்பாராக
கர்த்தர் தம் முகப்பிரசன்னத்தால்
சமாதானம் உமக்கு ஈவாரா.

**290**

**கலியாணமாம் கலியாணம்**
கானாவூரு கலியாணம்
கர்த்தன் இயேசு கனிவுடனே
கலந்து கொண்ட கலியாணம்
கலியாணமாம் கலியாணம்.

1. விருந்தினர்கள் விரும்பியே
அருந்த ரசமும் இல்லையே
அறிந்த மரியாள் அவரிடம்
அறிவிக்கவே விரைந்தனள்

2. கருணை வள்ளல் இயேசுவும்
கனிவாய் நீரை ரசமதாய்
மாற்றி அனைவர் பசியையும்
ஆற்றி அருளை வழங்கினார்

3. இல்லறமாம் பாதையில்
இல்லை என்னும் வேளையில்
சொல்லிடுவீர் அவரிடம்
நல்லறமாய் வாழுவீர்

*-மெ. தாமஸ் தங்கராஜ்*

அட்டவணை

# 10. தேவாலய மங்கலப் படைப்பு

Pleasant Are Thy Courts Above

**291** *Maidstone* **பா.220**

A.M. 240 7,7,7,7,D

1. **ஆண்டவா! மேலோகில் உம்**
அன்பின் ஜோதி ஸ்தலமும்
பூவில் ஆலயமுமே
பக்தர்க்கு மா இன்பமே.
தாசர் சபை சேர்ந்திட,
நிறைவாம் அருள் பெற
ஜோதி காட்சி காணவும்,
ஏங்கி உள்ளம் வாஞ்சிக்கும்.

2. பட்சிகள் உம் பீடமே
சுற்றித் தங்கிப் பாடுமே;
பாடுவாரே பக்தரும்,
திவ்விய மார்பில் தங்கியும்;
புறாதான் பேழை நீங்கியே
மீண்டும் வந்தாற்போலவே
ஆற்றில் காணா நின் பக்தர்
ஆறிப்பாதம் தரிப்பர்.

3. அழுகையின் பள்ளத்தில்
ஆர்ப்பரிப்பார் உள்ளத்தில்
ஜீவ ஊற்றுப் பொங்கிடும்
மன்னா நித்தம் பெய்திடும்;
பலம் நித்தம் ஓங்கியே
உந்தன் பாதம் சேரவே,
துதிப்பார் சாஷ்டாங்கமாய்
ஜீவ கால அன்புக்காய்.

அட்டவணை

4. பெற மோட்ச பாக்கியம்
பூவில் வேண்டும் சமூகம்;
ரட்சை செய்யும் தயவால்
பாதம் சேர்த்தருள்வதால்.
நீரே சூரியன் கேடகம்,
வழித்துணை காவலும்;
கிருபை மகிமையும்
மேலும் மேலும் பொழியும்.

**292** *We Love the Place O God* **பா.221**

A.M.242 Quam Dilecta 6,6,6,6

1. **கர்த்தா, நீர் வசிக்கும்**
ஸ்தலத்தை நேசிப்போம்;
பாரின்பம் யாவிலும்
உம் வீட்டை வாஞ்சிப்போம்.

2. உம் ஜெப வீட்டினில்
அடியார் கூட நீர்
பிரசன்னமாகியே
உம் மந்தை வாழ்த்துவீர்.

3. மெய் ஞானஸ்நானத்தின்
ஸ்தானத்தை நேசிப்போம்
விண் புறாவாம் ஆவியால்
பேரருள் பெறுவோம்

4. மா தூய பந்தியாம்
உம் பீடம் நேசிப்போம்
விஸ்வாசத்தால் அதில்
சமுகம் பணிவோம்.

5. மெய் ஜீவனுள்ளதாம்
உம் வார்த்தை நேசிப்போம்
சந்தோஷம், ஆறுதல்
அதில் கண்டடைவோம்.

அட்டவணை

6. உன் அன்பின் பெருக்கை
இங்கெண்ணிப் போற்றுவோம்
விண் ஜெய கீதமோ
எப்போது பாடுவோம்?

7. கர்த்தா, உம் முகத்தை
கண்ணாரக் காணவே
உம்மை இப்பாரினில்
நேசிக்க ஏவுமே.

**293** **கி.கீ.317**

*காமஸ்* *சாபுதாளம்*

***பல்லவி***

**தேவனே, யேசு நாதனே, இத்**
தேவ ஆலயம் வந்திடும்;
தேவ ஆலயம் வந்தவர்க் கருள்
திவ்ய ஆவியை ஈந்திடும்.

***சரணங்கள்***

1. பாவிகள் உமக்காலயஞ் செய்ய
பாத்திரர்களோ? அல்லவே;
பாவநாசராம் யேசுவே உம்மால்
பாத்திரராய் இதைச் செய்தனர். – தேவனே

2. கூடி வந்தும்மையே பணிந்திடக்
குறித்த இச்சிறு ஆலயம்
நாடி வந்தவர் யாவருக்கு முன்
நல்வசன முளதாகவும். – தேவனே

3. தேவனே உமக்கான ஆலயம்
பாவியின் சிறு நெஞ்சமே
பாவம் யாவையும் நீக்கியே சிறு
தேவ ஆலய மாக்கிடும். – தேவனே

*–ச. தாவீது*

அட்டவணை

**294** *Christ is our Corner - stone* **பா.222**

A.M.239, 546 *Harewood, Majesty* 6,6,6,6,8,8

1. **மூலைக்கல் கிறிஸ்துவே**
அவர் மேல் கட்டுவோம்;
அவர் மெய் பக்தரே
விண்ணில் வசிப்போராம்;
அவரின் அன்பை நம்புவோம்
தயை பேரின்பம் பெறுவோம்.

2. எம் ஸ்தோத்ரப் பாடலால்
ஆலயம் முழங்குவோம்;
ஏறிடும் எம் நாவால்
திரியேகர் துதியும்
மா நாமம் மிக்கப் போற்றுவோம்
ஆனந்தம் ஆர்க்கப் பாடுவோம்.

3. கிருபாகரா, இங்கே
தங்கியே கேட்டிடும்
மா ஊக்க ஜெபமே
பக்தியாம் வேண்டலும்
வணங்கும் அனைவோருமே
பெற்றிட ஆசி மாரியே.

4. வேண்டும் விண் கிருபை
அடியார் பெற்றிட
பெற்ற நற்கிருபை
என்றென்றும் தங்கிட
உம் தாசரைத் தற்காத்திடும்
விண் நித்திய ஓய்வில் சேர்த்திடும்

அட்டவணை

**295** **கி.கீ.316**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

### *பல்லவி*

**மாமனோகரா! இவ்வாலயம் வந்தருள் கூரும்**
மாமனோகரா! பராபரா!

### *சரணங்கள்*

1. பூமியாளும் நாதனே, நரர்!
போகம் நாடும் நீதனே!
நாமே வாழ்த்தும் தாசர் நடுவில்
தாமதம் இல்லாமல் எழுந்தருள்! – மா

2. நாதனே, இவ்வாலயத்தை
நலமாய்த் தந்தாய் தாசர்க்கே
பாதம் போற்றி வாழ்த்துவோம் குரு
பரனே, பராபரா தினம். – மா

3. நின் திருத்தயை பொறுமை
நின் திரு மகிமையும்
சத்தமாய் நிறைந்திட இதில்
சந்ததம் ஈவாய் நின் ஆசியை. – மா

4. தோத்திரம் ஜெபம் தியானம்
தூய்மையாம் பிரசங்கமும்
பார்த்திபா இவ்வாலயத்தில்
பக்தியாகவே நடந்திட. – மா

5. நீதி ஞாயம் தெய்வபக்தி
நேர்மை வேதத் தியானமும்
நாதனில் விஸ்வாசமும் மிஞ்சி
நன்று போற்ற தாசர்க்கருள் புரி. – மா

*–ச.ஜெ. சிங்க்*

அட்டவணை

**296** **ப.கீ.317**

*இராகம்: பிலகரி* *ரூபகதாளம்*

### *பல்லவி*

**நித்தம், நித்தம் பரிசுத்தர் துத்தியம் செய்யும் தேவே – இவ்வாலயம்**
**நேயத்துடன் வரும் யாவர்க்கும் உன் அருள் தாவே.**

### *அனுபல்லவி*

**எத்திசையும் பணி கர்த்தாதி கர்த்தன் நம்**
**ஏசு கிறிஸ்துவின் நாமத்திற்கே துதி!**
**சத்ய சுவிசேஷம் எங்கும் பரம்ப**
**தயை அளித்தாளும் தயாபரனுக்கென்றும்**
**சர்வாதிகாரம்–மகிமையும் தகும் நமஸ்காரம் பெருகவும்**
**தத் தித் திமி தத் தித் திமி தனுத்த சேம் தரி**
**தாம் தரிகிட தளங்கு தோமென. – நித்தம்**

### *சரணங்கள்*

1. **அம்பரம் ஆசனம், பூமியைப் பாதத்தில் கண்டாய் – மிக**
**அஞ்சிப் பணிந்தோர் இருதயத்தும் குடி கொண்டாய்**
**இம்பர் பணிந்து நாம் ஏற்ற கிருபையைத் தந்தாய்– எங்கே**
**இரண்டொரு மூவர் இசைந்தாலும் வருவோம், என்றாய்;**
**இன்ப முழுக்க தாகும் ஞானஸ்நானம்**
**எல்லா உலகத்தார்க் கீயும் பிரதானம்;**
**அன்பர் அடையும் கருணை ராப்போஜனம்**
**ஆத்துமாவுக்கு நல் ஆறுதலாம் தினம்;**
**ஆ! உபகாரம் பரா பரன் அளித்தார் இந்நேரம் எங்கட்கெந்த**
**ஆபத்திலும் சாபத்திலும் அருமையாய், தேவ**
**கோபத்திலும் யாவற்றிலும் கிருபையாகவே. – நித்தம்**

அட்டவணை

2. எத்தலத்தோர்க்கும் உன் உத்தம வார்த்தையைக் கூறும் சுவி
சேஷ குருமாருக்குக் கிருபை பெலன் தாரும்
சுத்த நற்போதகத்தில் பயிலும் நற்சபையாரும் – மெய்ச்
சுடர் வழி கண்டு நடக்கக் கருணைக் கண் பாரும்
பக்தி, விசுவாசம், நம்பிக்கை எங்களில்
பாலித்தருளும்; எக் காலும்; நிலை நிற்க
முக்தி பெறும் கடை நாள் வரை ஆவி
முத்திரையாக நிதம் புரிந்தாளும்;
மூவர் ஒன்றாய் வந் திவ் வீட்டில் மேவும்;
அன்பாய் நின் – நல்வார்த்தை
முற்பட்ட மகத்துவத் தயையால் உளங்கொள
முற்பொற் சிறை நற்பிற் சிறையே வணங்கியே. – நித்தம்

**297** **கி.கீ.297**

*புன்னாகவராளி* *ரூபகதாளம்*

### *கண்ணிகள்*

1. **வந்தருள் இவ்வாலயத்தில் மகிமை ஏகோவாவே – உனை**
வாழ்த்தும் அடியார்க்கு நிதம் வாய்த்த பெரு வாழ்வே!
அந்தி பகல் இங்குனை வந்தடையும் அடியார்க் கிரங்கி
ஆதரவாய் ஆண்டு கொள்வாய், ஆதி பராபரன் குமாரா!

2. திருக் கருணை மொழியால் மனத் திருக்கறுக்கும்,
பொருட்டெழுந்து
தீய வினை மதித் தழிப்பாய், தேவர் பெருமானே!
பெருக்கமுள உன் வசனம் பேதையருக்கே பலிக்க
உருக்கமுடன் இரங்கும் ஐயா, உன் பதமே தஞ்சம் என்றும்

3. சஞ்சலம் மிஞ்சும் மனதால் சரணம் உனக்கென்று வரும்
தமியர் தமக்காறுதலாய்த் தயை செய், ஆதிசேயா!
செஞ் சொல் மலிந்த புலவா செப்பு தமிழ்க் குகந்த உன்றன்
சீரடிக்கண் சேர்பவர்க்கே, ஆருயிர் உண்டாவதற்கே.

அட்டவணை

4. பூவுலகை ஆளும் மன்னர், போதம் உணர் வேதியர் உன்
பொற் பதத்தை அர்ச்சிக்கவே, நற்பதம் தா, தேவே!
மூவுலகிலும் துதியும், முக்யம் மகத்துவம் கனமும்
மா பலமுமே உமக்கே, மங்களம் உண்டாவதாக.

*-காபிரியேல் உபதேசியார்*

## IV. திருநாட்கள்

## 1. பிரசன்னத் திருநாள்

**298** *Earth Hath Many A Noble City* **பா.85**

A.M.76 *Stuttgart* 8,7,8,7

1. **பூமி மீது ஊர்கள் தம்மில்**
பெத்லெகேமே, சீர் பெற்றாய்,
உன்னில் நின்று விண்ணின் நாதர்
ஆள வந்தார் ராஜனாய்.

2. கர்த்தன் மனுடாவதாரம்
ஆன செய்தி பூமிக்கு
தெரிவித்த விண் நட்சத்திரம்
வெய்யோனிலும் அழகு.

3. சாஸ்திரிமார் புல் முன்னணையில்
காணிக்கை படைக்கிறார்
வெள்ளைப் போளம், தூபவர்க்கம்,
பொன்னும் சமர்ப்பிக்கப்பார்;

4. தூபவர்க்கம் தெய்வம் காட்டும்,
பொன் நம் ராஜன் பகரும்
வெள்ளைப் போளம் அவர் சாவைத்
தெரிவிக்கும் ரகசியம்.

அட்டவணை

5. புறஜாதியாரும் உம்மை
பணிந்தார்; அவ்வண்ணமே
இன்று உம் பிரசன்னம் நாங்கள்
ஆசரிப்போம், இயேசுவே.

**299** *Brightest And Best of the Stars* **பா.86**

A.M.643 I Bede, Epiphany Hymn 11,10,11,10

1. **விடியற்காலத்து வெள்ளியே, தோன்றி**
கார் இருள் நீங்கத் துணைபுரிவாய்
உதய நட்சத்திரமே, ஒளி காட்டி
பாலக மீட்பர்பால் சேர்த்திடுவாய்.

2. தண் பனித்துளிகள் இலங்கும்போது
முன்னணையில் அவர் தூங்குகின்றார்
வேந்தர், சிருஷ்டிகர், நல் மீட்பர் என்று
தூதர்கள் வணங்கிப் பாடுகின்றார்.

3. ஏதோமின் சுகந்தம் கடலின் முத்து
மலையின் மாணிக்கம் உச்சிதமோ?
நற்சோலையின் வெள்ளைப் போளம் எடுத்து
தங்கமுடன் படைத்தல் தகுமோ?

4. எத்தனை காணிக்கை தான் அளித்தாலும்
மீட்பர் கடாக்ஷம் பெறல் அரிதே;
நெஞ்சின் துதியே நல் காணிக்கையாகும்
ஏழையின் ஜெபம் அவர்க்கருமை

5. விடியற்காலத்து வெள்ளியே, தோன்றிக்
கார் இருள் நீங்கத் துணைபுரிவாய்;
உதய நக்ஷத்திரமே ஒளி காட்டிப்
பாலக மீட்பர்பால் சேர்ந்திடுவாய்.

அட்டவணை

**300** *As with Gladness Men of old* **பா.87**

A.M.79 *Dix* 7,7,7,7,7,7

1. விண் மீன் நோக்கிக் களிப்பாய்
சாஸ்திரிமார்தாம் ஆவலாய்
பின்சென்றார் அவ்வெள்ளியை
முன் நடத்தும் ஜோதியை
நேச கர்த்தா, நாங்களும்
உம்மைப் பின் செல்வோம் என்றும்.

2. தாழ்வாம் கொட்டில் நோக்கியே
மகிழ்வோடு விரைந்தே
விண் மண்ணோரும் வணங்கும்,
பாதம் வீழ்ந்தார் பணிந்தும்,
மனதார நாங்களும்,
தேடிப் பாதம் சேரவும்.

3. முன்னணையின் முன்னதாய்
பொன் படைத்தார் பணிவாய்
படைப்போமே நாங்களும்
பொன் சம்பத்து யாவையும்
தூய்மை பக்தி பூரிப்பாய்
கிறிஸ்துவாம் விண் வேந்தர்க்காய்

4. தூய இயேசு நித்தமும்
ஜீவ பாதை நடத்தும்,
பாரின் வாழ்க்கை முடிவில்
ஆவியை நீர் மோட்சத்தில்
சேர்ப்பீர், உந்தன் மாட்சியே
போதும் வேண்டாம் ஜோதியே.

அட்டவணை

5. ஒளிர் மோட்ச நாட்டிலே
வேண்டாம் சிஷ்டி ஜோதியே;
நீரே நித்திய சூரியனும்
ஜோதி இன்பம் கிரீடமும்
வேந்தே, என்றும் போற்றுவோம்
அல்லேலூயா பாடுவோம்.

**301** **கி.கீ.36**

*மாஞ்சி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**அரசனைக் காணமலிருப்போமோ? – நமது**
ஆயுளை வீணாகக் கழிப்போமோ? – அரசனை

***அனுபல்லவி***

பரம்பரை ஞானத்தைப் பழிப்போமோ? – யூதர்
பாடனுபவங்களை ஒழிப்போமோ? – யூத

***சரணங்கள்***

1. யாக்கோபிலோர் வெள்ளி உதிக்குமென்றே, – இஸ்ரேல்
ராஜ செங்கோலெங்கும் கதிக்குமென்றே
ஆக்கமிழந்து மறுவாக்குரைத்த பாலாம்
தீர்க்கன் மொழி பொய்யாத பாக்கியமே! – யூத –அரசனை

2. தேசோ மயத்தாரகை தோன்றுது பார்! – மேற்குத்
திசை வழி காட்டிமுன் செல்லுது பார்!
பூசனைக்காண நன்கொடைகள் கொண்டே –அவர்
பொன்னடி வணங்குவோம் நடவுமின்றே! – யூத –அரசனை

3. அலங்காரமனை யொன்று தோணுது பார்! – அதன்
அழகு மனமுங் கண்ணும் கவர்ந்தது பார்!
இளவர சங்கிருக்கும் நிச்சயம் பார்! – நாம்
எடுத்த கருமம் சித்தியாகிடும் பார்! – யூத –அரசனை

அட்டவணை

4. அரமனையில் அவரைக் காணோமே! – அதை
அகன்று தென்மார்க்கமாய்த் திரும்புவோமே!
மறைந்த உடு அதோ பார்! திரும்பினதே பெத்லேம்
வாசலில் நமைக் கொண்டு சேர்க்குது பார்! – யூத –அரசனை

5. பொன் தூபவர்க்கம் வெள்ளைப் போளமிட்டே, – ராயர்
பொற்கழல் அர்ச்சனை புரிவோமே!
வன்கண்ணன் ஏரோதைப் பாராமல், – தேவ
வாக்கினால் திரும்பினோம் சோராமல் – யூத –அரசனை

*–ஜி.சே. வேதநாயகம்*

## 2. பரிசுத்த ஆவியின் திருநாள்

**302** *Arnstadi, Bow Church, Thuringia* **பா.138**

A.M.669 5,5,8,8,5,5

1. **தெய்வ ஆவியே,**
பூர்வ நாளிலே
பல பாஷை பேசும் நாவும்
மேன்மையான வரம் யாவும்
உம்மால் வந்ததே
தெய்வ ஆவியே.

2. சத்திய ஆவியே
போதகர் நீரே
மீட்பர் அருமையைக் காட்டி
அவர் சாயலாக மாற்றி
என்னை ஆளுமே
சத்திய ஆவியே.

அட்டவணை

3. ஜீவ ஊற்று நீர்
என்னில் ஊறுவீர்;
சுத்தமற்ற ஸ்பாவம் நீக்க
ஆத்துமாவின் தாகந் தீர்க்க,
ஜீவ ஊற்று நீர்;
என்னில் ஊறுவீர்.

4. நேச ஆவியே
எந்தன் நெஞ்சிலே
ஐயம் நீங்க, இச்சை மாள,
தெய்வ சமாதானம் ஆள,
வாசம் பண்ணுமே
நேச ஆவியே.

**303** *Spirit Divine Attend our Prayers* **பா.139**

S.S.187 C.M.

1. தெய்வாவி, மனவாசராய்
வந்தனல் மூட்டுவீர்;
உம் அடியாரின் உள்ளத்தில்
மா கிரியை செய்குவீர்.

2. நீர் சோதிபோல் பிரகாசித்து,
நிர்ப்பந்த ஸ்திதியும்;
என் கேடும் காட்டி, ஜீவனாம்
மெய்ப் பாதை காண்பியும்.

3. நீர் வான அக்னி போலவே
துர் ஆசை சிந்தையும்
தீக் குணமும் சுட்டெரிப்பீர்
பொல்லாத செய்கையும்.

அட்டவணை

4. நற்பனிபோலும் இறங்கும்
இவ்வேற்ற நேரத்தில்;
செழிப்புண்டாகச் செய்திடும்
பாழான நிலத்தில்.

5. புறாவைப்போல சாந்தமாய்
நீர் செட்டை விரிப்பீர்;
மெய்ச் சமாதானம் ஆறுதல்
நற் சீரும் அருள்வீர்.

6. நீர் பெரும் காற்றைப் போலவும்
வந்தசைத்தருளும்;
கல் நெஞ்சை மாற்றிப் பேரன்பை
நன்குணரச் செய்யும்.

**304** *Our Blest Redeemer Ere He Breathed* **பா.140**

A.M.207 8,6,8,4

1. **பரத்துக்கேறு முன்னமே**
பேரருள் நாதனார்
தேற்றரவாளன் ஆவியை
வாக்களித்தார்.

2. விருந்து போலத் தேற்றவும்
அவ்வாவி சேருவார்
எத் தாழ்மையான நெஞ்சிலும்
சஞ்சரிப்பார்.

3. அமர்ந்த மென்மை சத்தத்தை
போல் நெஞ்சில் பேசுவார்
வீண் பயம் நீக்கிக் குணத்தை
சீராக்குவார்.

4. நற்சிந்தை, தூய விருப்பம்
தீயோன் மேல் வெற்றியும்
எல்லாம் அவரால் மாத்திரம்
உண்டாகிவிடும்.

5. ஆ, நேச தூய ஆவியே
உம் பெலன் ஈந்திடும்
சுத்தாங்கம் ஈந்து, நெஞ்சிலே
நீர் தங்கிடும்.

**305** **கி.கீ.111**

*சேனாவதி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**அரூபியே, அரூப சொரூபியே – எமை**
ஆளும் பரிசுத்தரூபியே, அரூப சொரூபியே

***அனுபல்லவி***

திருவினா டுறை நிதான கருணையா திபதி மோன
சுரநரர் வணங்கும் வான ஒரு பரா பர மெய்ஞ்ஞான –அரு

***சரணங்கள்***

1. ஆதி காரண அரூபியே – அசரீரி சத்ய
நீதி ஆரண சொரூபியே
வேத வாசக சமுத்ர ஓதும் வாய்மைகள் சுமுத்ர
தீதிலா துயர் விசித்ர, ஜாதி யாருட பவித்ர –அரூ

2. சீரு லாவிய தெய்வீகமே – திரி முதல் ஒரு பொருள்
ஏரு லாவிய சிநேகமே
பாருளோர் பணிந்து போற்றும் ஆரியா அடியர் சாற்றும்
நேரமே புகழை ஏற்றும் வீரமாய் மனதை ஆற்றும் –அரூ

அட்டவணை

3. பக்தர் பாதகம் அடாமலே – பசா சுலகுடல்
சத்ரு சோதனை படாமலே,
அத்தனார் தேவ கோபம் நித்ய வேதனைகள் சாபம்
முற்றும் மாறிடத் தயாபம் வைத்து நீடுன் ப்ரதாபம் –அரு

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**306** **கி.கீ.112**

*நாதநாமக்கிரியை* *ரூபகதாளம்*

***பல்லவி***

**உந்தன் ஆவியே, சுவாமி என்றன் மீதினில்**
வந்து சேரவே, அருள் தந்து காவுமே.

***சரணங்கள்***

1. முந்து மானிடர் வினை தந்த சாபமும்
நிந்தை யாவுமே படவந்த ஏசுவே. – உந்தன்

2. மதி மயக்குதே பேயும் மன தியக்குதே
அதிகமாய்க் கடல் அலை அறைந்து பாயுதே – உந்தன்

3. சத்ய ஆவியைச் சீடர்க் கித்தரை விட
சித்தமாய் உரை புரி நித்ய தேவனே. – உந்தன்

4. பெந்தேகோஸ் தெனும் மா சிறந்த நாளிலே
விந்தை ஆவியின் அருள் தந்த நேர்மையே. – உந்தன்

5. தாசன் யானுமே புகழ் வீசும் வாய்மையே
வாச மாகவே அருள், நேச தேவனே. – உந்தன்

*–சவரிமுத்து உபாத்தியார்*

**307** **கி.கீ.113**

*நாதநாமக்கிரியை* *சாபுதாளம்*

***சரணங்கள்***

1. **இந்த வேளையினில் வந்தருளும், தேவ ஆவியே – இப்போ**
எங்கள் மீதிறங்கித் தங்கி வரம் தாரும், ஆவியே.

அட்டவணை

2. அந்தணர் தம்மிடம் விந்தை செய்த சத்ய ஆவியே – முன்
ஆச்சரியமாகக் காட்சி தந்த ஞான ஆவியே.

3. ஆர்ச்சியர்க் கந்நாளில் அற்புதம் செய்தாண்ட ஆவியே – இந்த
ஆதிரை மீதினில் தீதகற்றியாளும், ஆவியே.

4. ஆருமறியாத ஆறுதல் செய்திடும் ஆவியே – இங்கு
அஞ்ஞானம் அகற்றி, மெய்ஞ்ஞானம் புகட்டும் ஆவியே

5. சித்தம் இரங்காயோ, நித்தியராகிய ஆவியே – அருள்
ஜீவ வழி காட்டிப் பாவம் அகற்றிடும், ஆவியே.

6. வாரும் வாரும் கண் பாரும், பரிசுத்த ஆவியே – இன்று
வந்து சபை மீதில் சிந்தை வைத்தருளும் ஆவியே.

7. தேற்றரவாளன் என்றேற்றிப் புகழ்ந்திடும் ஆவியே – நிதம்
சித்தம் வைத்தென் மீதில் முற்றிலும் காத்திடும் ஆவியே.

*–ச. யோசேப்பு*

**308** **கி.கீ.115**

*மோகனம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சமயமிது நல்ல சமயம், உமதாவி**
தரவேணுமே சாமி

***அனுபல்லவி***

அமையுஞ் சத்துவங்குன்றி,
அருள்ஞானத் துயிரின்றி,
அமர்ந்து சேர்ந்தெழும்பா துறங்கிடும்
அடியன்மீ தனல் மூட்டி யுயிர்தர, – சமய

1. யேசு கிறிஸ்துவின்மேல் நேசம் பக்தியும், விசு
வாசம், நம்பிக்கை, சமாதானம் மங்கிடலாச்சே;
வீசுங்கிரணத்தாவி நேசச்சுவாலை மூட்டி
மிஞ்சுஞ் சீவ நற்கனிகளீங்குமைக்
கெஞ்சு தாசனின் மனதிலோங்கிட, – சமய

அட்டவணை

2. ஜெயமோதவமோ தேவதியானமோ வாஞ்சையோ
செய்யுஞ்சுயமுயற்சி தொய்யுங் காரணமேனோ?
தவனம் ஞானாமுதின் மேல் சற்றுமில்லாததேனோ
தந்தையேயுயிர் தந்தென்னைத் தாங்கிட
உந்தயையினுற் சாகநல்லாவியை. – சமய

3. ஓதும் பிரசங்கமும் ஓசைக்கைத்தாளம்போல
ஒலிக்குதல்லாமல் பலன் பலிக்குதில்லை, தாக்குள்
ஏதுமற்றிடும் பள்ளத்தெலும்பு உயிர்த்தெழும்ப
எசேக்கியேலுரை வாக்கிலுயிரருள்
போக்கியே செய்த ஆவியே இங்ஙனம். – சமய

4. பெந்தெகோஸ்தினில் கூடிவந்த சீடரையன்று
உந்தனாவியினைப் பொழிந்தபிஷேகஞ் செய்த
விந்தைபோலெமதிடம் வந்தெம் வேலைகள் முற்றும்
வேதனே உமதருளினுயிர் பெறப்
பூதலர் உமைப் போற்றநின் சேயராய். – சமய

*–வே. மாசிலாமணி*

**309** **கி.கீ.116**

*அமிர் கல்யாணி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஆவியை மழைபோலே யூற்றும் – பல**
சாதிகளை யேசு மந்தையிற் கூட்டும்.

***அனுபல்லவி***

பாவிக்காய் ஜீவனை விட்ட கிறிஸ்தே
பரிந்து நீர் பேசியே இறங்கிடச் செய்யும். – ஆவியை

1. அன்பினால் ஜீவனை விட்டீர் – ஆவி
அருள்மாரி பொழியவே பரலோகஞ் சென்றீர்
இன்பப் பெருக்கிலே பொங்கி மகிழ
ஏராளமான ஜனங்களைச் சேரும். – ஆவியை

அட்டவணை

2. சிதறுண்டலைகிற ஆட்டைப் – பின்னும்
தேடிப் பிடித்து நீர் தூக்கிச் சுமந்து
பதறாதே நான் தான் உன் நல் மேய்ப்பன் யேசு
பாக்கியரென்னும் நல் வாக்கையருளும். – ஆவியை

3. காத்திருந்த பல பேரும் – மனங்
கடினங் கொள்ளா முன்னே உம் பாதஞ் சேரும்
தோத்திரக் கீதங்கள்பாடிப் புகழ்ந்து
சுத்தலோகம் வரத் தூயாவி ஊற்றும். – ஆவியை

4. தோத்திரக் கீதங்கள் பாடி – எங்கும்
சுவிசேஷ ஜெயத்தையே நிதம் நிதம் தேடிப்
பாத்திரராக அநேகரெழும்பப்
பரிசுத்த ஆவியின் அருள் மாரி ஊற்றும். – ஆவியை

*–அருளானந்தம் பிரசங்கியார்*

**310** **கி.கீ.117**

*காபி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஆவியை அருளுமே, சுவாமீ – எனக்**
காயுயிர் கொடுத்த வானத்தினரசே

***சரணங்கள்***

1. பாவிக்கு ஆவியின் கனியெனுஞ் சிநேகம்
பரம சந்தோஷம், நீடிய சாந்தம்
தேவ சமாதானம், நற்குணம், தயவு
திட விசுவாசம் சிறிதெனுமில்லை – ஆவியை

2. தீபத்துக் கெண்ணையைச் சீக்கிரம் ஊற்றும்
திரியவியாமலே தீண்டியே யேற்றும்
பாவ அசூசங்கள் விலக்கியே மாற்றும்
பரிசுத்த வரந் தந்தென் குறைகளைத் தீரும் – ஆவியை

அட்டவணை

3. நற்கனி தேடிவருங் காலங்களல்லவோ?
நானொருகனியற்ற பாழ் மரமல்லவோ?
முற் கனி முகங்காணா வெம்பயி ரல்லவோ?
முழு நெஞ்சம் விளைவற்ற உவர் நிலமல்லவோ? – ஆவியை

*– அருளானந்தம் பிரசங்கியார்*

**311** **கி.கீ.119**
*கரஹரப்பிரியா* *ஆதிதாளம்*

***பல்லவி***

**வரவேணும் பரனாவியே**
இரங்குஞ் சுடராய் மேவியே

***அனுபல்லவி***

மருளாம் பாவம் மருவிய எனக்கு
வானாக்கினியால் ஞான தீட்சை தர – வர

1. பலமான எப்பாவமும் பாழாக்கும் மா நோய்களும்
வலிய கொடும் ரோகமும் மாம்ச சிந்தை ஓடுமே;
பலி பீடத்தில் என்னைப் பலியாக வைத்தேன்,
எலியாவின் ஜெபத்துக் கிரங்கிய வண்ணம். – வர

2. என்றன் பவம் யாவையும் எரிக்கும் வகை தேடியும்
எங்கும் இந்த லோகத்தில் எத் தீயுமே காண்கிலேன்
என்றன் செயலால் யாதொன்றும் முடியா
தின்றே வானாக் கினி வரவேணும். – வர

3. குடி கொள் எந்த பாவமும் அடியோடே தொலைந்திடும்
தடுத்தாட் கொள்ளும் தோஷமும் சாம்பலாகச் செய்திடும்;
படி மிசைகாற்றுக்குப் பறந்தோடும் சாம்பல் போல்
அடியேன் யேசுவுக் கனுதினம் பணி செய்ய. – வர

*– வே. சந்தியாகு*

அட்டவணை

**312** **கி.கீ.121**

*மணிரங்கு* *ஏகதாளம்*

**பல்லவி**

**தீய மனதை மாற்ற வாரும், தூய ஆவியே – கன**
நேய ஆவியே

**சரணங்கள்**

1. மாய பாசத்தழுந்தி வாடி மாளுஞ் சாவிதால், – மிக
மாயும்பாவி நான். – தீய

2. தீமை செய்ய நாடுதென்றன் திருக்கு நெஞ்சமே – மருள்
தீர்க்கும் தஞ்சமே. – தீய

3. பரத்தை நோக்க மனம் அற்றேனே, பதடி தான், ஐயா – ஒரு
பாவி நான் ஐயா – தீய

5. புதிய சிந்தை, புதிய ஆசை புதுப்பித்தாக்கவே – அதைப்
புகழ்ந்து காக்கவே – தீய

5. ஏக்கத்தோடேன் மீட்பைத் தேடி, இரந்து கெஞ்சவே – தினம்
இதயம் அஞ்சவே. – தீய

6. கிறிஸ்து மீது நாட்டங் கொண்டு கீதம் பாடவே – அவர்
கிருபை தேடவே. – தீய

7. தேவ வசனப் பாலின் மீது தேட்டம் உன்னவே, – மிகு
தெளிவு துன்னவே. – தீய

8. ஜெபத்தின் தாகம் அகத்தில் ஊற்றி ஜெபித்துப் போற்றவே – மிகச்
சிறப்பாய் ஏற்றவே. – தீய

*–வின்பிரட் போதகர்*

**313** **கி.கீ.122**

*சயிந்தவி* *ஆதிதாளம்*

**பல்லவி**

ஐயையா, நான் ஒரு மா பாவி – என்னை
ஆண்டு நடத்துவீர், தேவாவி!

### *சரணங்கள்*

1. மெய் ஐயா, இது தருணம் ஐயா, – என்றன்
மீதிலிரங்கச் சமயம் ஐயா;
ஐயையா, இப்போ தென்மேல் இரங்கி, – வெகு
அவசியம் வரவேணும் தேவாவி! – ஐயையா

2. எனதிருதயம் பாழ்நிலமாம், – ஏழை
என்னைத் திருத்தி நீர் அன்பாகத்
தினமும் வந்து வழி நடத்தும், – ஞான
தீபமே, உன்னத தேவாவி! – ஐயையா

3. ஆகாத லோகத்தின் வாழ்வை எல்லாம் – தினம்
அருவருத்து நான் தள்ளுதற்கு
வாகான சுத்த மனம் தருவீர், – நீர்
வல்லவராகிய தேவாவி! – ஐயையா

4. பத்தியின் பாதை விலகாமல் – கெட்ட
பாவத்தில் ஆசைகள் வையாமல்
சத்திய வேதப்படி நடக்க, – என்னைத்
தாங்கி நடத்திடும் தேவாவி! – ஐயையா

5. அன்பு, பொறுமை, நற்சந்தோஷம் – என்
ஆண்டவரின் மேல் விசுவாசம்
இன்ப மிகு மெய்ச் சமாதானம், – இவை
யாவும் தருவீரே, தேவாவி! – ஐயையா

6. ஏசு கிறிஸ்துவில் நான் சார்ந்து – அவர்
இடத்திலேயே நம்பிக்கை வைக்க
மாசில்லாத் துய்யனே, வந்துதவும், – நீர்
வராமல் தீராதே, தேவாவி! – ஐயையா

*–பா. தாவீது*

அட்டவணை

**314** *Wareham* **பா.273**
A.M.63 L.M.

1. **இறங்கும், தெய்வ ஆவியே,**
அடியார் ஆத்துமத்திலே
பரத்தின் வரம் ஈந்திடும்
மிகுந்த அன்பை ஊற்றிடும்.

2. உம்மாலே தோன்றும் ஜோதியால்,
எத்தேசத்தாரையும் அன்பால்
சம்பந்தமாக்கி, யாவர்க்கும்
மெய் நம்பிக்கையை ஈந்திடும்.

3. பரத்தின் தூய தீபமே,
பரத்துக்கேறிப் போகவே
வானாட்டு வழி காண்பியும்
விழாதவாறு தாங்கிடும்.

4. களிப்பிலும் தவிப்பிலும்
பிழைப்பிலும் இறப்பிலும்
எப்போதும் ஊக்கமாகவே
இருக்கும்படி செய்யுமே.

**315** Breathe on me Breath of God **பா.274**
A.M.671 *Aylesbury* S.M.

1. **ஊதும், தெய்வாவியை;**
புத்துயிர் நிரம்ப;
நாதா என் வாஞ்சை செய்கையில்
உம்மைப்போல் ஆகிட.

2. ஊதும், தெய்வாவியை;
தூய்மையால் நிரம்ப;
உம்மில் ஒன்றாகி யாவையும்
சகிக்கச் செய்திட.

அட்டவணை

3. ஊதும், தெய்வாவியை;
முற்றும் ஆட்கொள்ளுவீர்
தீதான தேகம் மனதில்
வானாக்கினி மூட்டுவீர்.

4. ஊதும், தெய்வாவியை;
சாகேன் நான் என்றுமாய்
சதாவாய் வாழ்வேன் உம்மோடு
பூரண ஜீவியாய்.

**316** Sharrock Backland **பா.275**
A.M.334 7,7,7,7

1. **காற்றுத்திசை நான்கிலும்**
நின்றுலர்ந்த எலும்பும்
ஜீவன் பெறச் செய்யுமே
வல்ல தெய்வ ஆவியே.

2. ஈரமற்ற நெஞ்சத்தில்
பனிபோல் இந்நேரத்தில்
இறங்கும் நல்லாவியே
புது ஜீவன் தாருமே.

3. சத்துவத்தின் ஆவியே
பேயை நித்தம் வெல்லவே
துணை செய்ய வாருமேன்
போந்த சக்தி தாருமேன்.

4. ஞானம் பெலன் உணர்வும்,
அறிவும் விவேகமும்
தெய்வ பக்தி பயமும்
ஏழும் தந்து தேற்றிடும்.

அட்டவணை

5. தந்தை மைந்தன் ஆவியே
எங்கள் பாவம் நீங்கவே
கிருபை கடாட்சியும்
சுத்தமாக்கியருளும்.

**317** *All Saints* **பா.276**

A.M.427 8,7,8,7,7,7

1. **சுத்த ஆவீ, என்னில் தங்கும்**
நானும் சுத்தன் ஆகவே;
பாவ அழுக்கெல்லாம் நீக்கும்
உம் ஆலயமாகவே
என்னை நீர் சிங்காரியும்
வாசம் பண்ணும் நித்தமும்.

2. சத்திய ஆவீ, என்னில் தங்கும்
நானும் சத்தியன் ஆகவே;
தெய்வ பக்தி என்னில் முற்றும்
வளர்ந்தேறச் செய்யுமே
நீர் என்னில் பிரவேசியும்
ஆண்டுகொள்ளும் நித்தமும்.

3. நேச ஆவீ , என்னில் தங்கும்
நானும் நேசன் ஆகவே;
துர்ச் சுபாவம் போகப் பண்ணும்
அன்பில் நான் வேரூன்றவே
அன்பின் ஸ்வாலை எழுப்பும்
மென் மேலும் வளர்த்திடும்.

4. வல்ல ஆவீ, என்னில் தங்கும்
நானும் வல்லோன் ஆகவே
சாத்தான் என்னைத் தூண்டிவிடும்
போது ஜெயங்கொள்ளவே
நீர் என் பக்கத்தில் இரும்
என்னைப் பலப்படுத்தும்.

அட்டவணை

5. நல்ல ஆவீ, என்னில் தங்கும்
நானும் நல்லோன் ஆகவே;
பகை, மேட்டிமை , விரோதம்
மற்றும் தீமை யாவுமே
என்னை விட்டகற்றுமேன்,
என்னைச் சீர்ப்படுத்துமேன்.

6. தெய்வ ஆவீ, என்னில் தங்கும்
நானும் உம்மில் தங்கவே;
மோட்ச பாதையில் நடத்தும்
இயேசுவின் முகத்தையே
தெளிவாகக் காண்பியும்
என்னை முற்றும் ரட்சியும்.

**318** Come Holy Ghost our souls inspire **பா.277**

A.M.157 *Veni Creator* L.M.

1. **மா தூய ஆவி! இறங்கும்,**
விண் தீபம் நெஞ்சில் ஏற்றிடும்;
ஞானாபிஷேக தைலம் நீர்
நல்வரம் ஏழும் ஈகிறீர்.

2. மெய் ஜீவன், ஆறுதல், அன்பும்
உம் அபிஷேகம் தந்திடும்;
ஓயாத ஒளி வீசியே
உள்ளத்தின் மருள் நீக்குமே.

3. துக்கிக்கும் நெஞ்சைத் தேற்றவே
ஏராள அருள் பெய்யுமே;
மாற்றார் வராமல் காத்திடும்
சீர் வாழ்வு சுகம் ஈந்திடும்.

4. பிதா, குமாரன், ஆவியும்
திரியேகர் என்றும் போதியும்;
யுகயுகங்களாகவே
உம் தாசர் பாடும் பாட்டிதே
பிதா, சுதன், சுத்தாவி! உமக்கே
சதா நித்தியமும் ஸ்துத்தியமே!

**319** *Mannheim* **பா.278**

A.M.287 *வேறு வசனம்* 8,7,8,7,4,7

1. **வாரும் தெய்வ ஆவி வாரும்**
எங்கள் ஆத்துமத்திலே;
எங்களுக்குயிரைத் தாரும்
வாரும் சுத்த ஆவியே;
ஞான தீபம்
ஸ்வாமி, நீரே ஏற்றுமே!

2. எங்கள் நெஞ்சில் நல்ல புத்தி
தெய்வ பக்தி தோன்றவே
அதை நீர் குணப்படுத்தி
தப்பு சிந்தை யாவுமே
மாற்ற வாரும்
நல்ல தெய்வ ஆவியே!

3. மோட்ச மார்க்கத்தைக் குறித்து
எவ்வகைத் தப்பெண்ணமும்
நீக்கி எங்களைத் தற்காத்து
நல்லோராக்கியருளும்
கால் தள்ளாடில்
பெலன் ஈந்து தாங்கிடும்.

4. நெஞ்சு எங்களில் கலங்கி
"நாயகனே இரட்சியும்",
என்று கெஞ்சும்போதிரங்கி
ஆற்றித் தேற்றிக் கொண்டிரும்
துன்பம் நீங்க
நீர் சகாயராய் இரும்.

அட்டவணை

## 3. திரித்துவத் திருநாள்

**320** Father of Heaven whose love profound **பா.142**

A.M.164 I *Rivaulx* L.M.

1. **பிதாவே, மா தயாபரா,**
ரட்சிப்பின் ஆதி காரணா
சிம்மாசன முன் தாழுவேன்
அன்பாக மன்னிப்பீயுமேன்.

2. பிதாவின் வார்த்தை மைந்தனே
தீர்க்கர், ஆசாரியர், வேந்தே
சிம்மாசன முன் தாழுவேன்
ரட்சணிய அருள் ஈயுமேன்.

3. அநாதி ஆவி, உம்மாலே
மரித்த ஆன்மா உய்யுமே;
சிம்மாசன முன் தாழுவேன்
தெய்வீக ஜீவன் ஈயுமேன்.

4. பிதா குமாரன் ஆவியே
திரியேகரான ஸ்வாமியே
சிம்மாசன முன் தாழுவேன்
அன்பருள் ஜீவன் ஈயுமேன்.

**321** *Moscow, Lyte* **பா.143**

A.M.360 II, S.S.204 6,6,4,6,6,6,4

1. **வானமும் பூமியும்**
சமஸ்த அண்டமும்
படைத்த நீர்;
வேதத்தின் ஒளியைப்
பரப்பி இருளை
அகற்றி, செங்கோலை
செலுத்துவீர்.

அட்டவணை

2. மீட்பை உண்டாக்கவும்
மாந்தரைக் காக்கவும்
பிறந்த நீர்,
பாவத்தை அழித்து
சாத்தானை மிதித்து
மாந்தரை ரட்சித்து
நடத்துவீர்.

3. பாவியின் நெஞ்சத்தை
திருப்பி ஜீவனைக்
கொடுக்கும் நீர்;
சபையை முழுதும்
திருத்தித் தேற்றவும்
ஏகமாய்ச் சேர்க்கவும்
அருளுவீர்.

4. ஞானம் நிறைந்தவர்
அன்பு மிகுந்தவர்
திரியேகரே;
ராஜ்ஜியம், வல்லமை
நித்திய மகிமை,
உமக்கே உரிமை
ஆண்டவரே.

**322** **கி.கீ.211**

*பியாகடை* *ரூபகதாளம்*

***பல்லவி***

**ஆரணத் திரித்துவமே – எமை**
ஆண்டருள், மகத்துவமே

***அனுபல்லவி***

பூரண தேவ பிதா, சுதன் ஆவியே,
பொன்னுலகத்தெழும் உன்னதமான
போதக்ருபையா பத்ததி நீதிச் சுடரே, நித்திய – ஆரண

அட்டவணை

***சரணங்கள்***

1. அன்றன்றை அப்பத்தைத் தாரும் – எங்கள்
ஆபத்தனைத்தையும் தீரும்;
இன்றும் என்றெங்களைச் சேரும்; – திரு
இரக்கத்தால் முகம்பாரும்;
நன்றி கெட்டோர்களைக் கொன்று போடாதேயும்
ஞானத் தனு மானத்தொளிர்
மேன்மை திவ்விய பானத்தருள். – ஆரண

2. மூவர் ஒன்றான யெகோவா – உயர்
முக்ய கிருபையின் தேவா
மேவி அடியாரைத் தேவா – பல
வெவ்வினையினின்றும் கா, வா;
பாவிகள் நாங்கள் ஏவையின் மக்களே
பக்ஷமே, பரம பொக்ஷமே,
பாடும்புகழ் நாடும் பரி
வோடும் தயை நீடும்பரா! – ஆரண

*–வேதநாயகம் சாசுதிரியார்*

## 4. திருத்தொண்டர்

**புனிதர் ஸ்தேவான் திருநாள் - டிசம்பர் 26**

**323** First on martyrs thou whose name **பா.74**
A.M.34 *Lubeck* 7,7,7,7

1. **முதல் ரத்தச்சாட்சியாய்**
மாண்ட ஸ்தேவானே, கண்டாய்
வாடா கிரீடம் உன்னதாம்
என்றுன் நாமம் காட்டுமாம்.

அட்டவணை

2. உந்தன் காயம் யாவிலும்
விண் பிரகாசம் இலங்கும்;
தெய்வ தூதன் போலவே
விளங்கும் உன் முகமே.

3. மாண்ட உந்தன் மீட்பர்க்காய்
முதல் மாளும் பாக்கியனாய்
அவர்போல் பிதா கையில்
ஆவி விட்டாய் சாகையில்.

4. கர்த்தர்பின் முதல்வனாய்
ரத்த பாதையில் சென்றாய்
இன்றும் உன்பின் செல்கின்றார்
எண்ணிறந்த பக்தர், பார்!

5. மாபிதாவே, ஸ்தோத்திரம்
கன்னி மைந்தா, ஸ்தோத்திரம்
வான் புறாவே, ஸ்தோத்திரம்
நித்தம் நித்தம் ஸ்தோத்திரம்.

## புனிதர் யோவான் திருநாள் - டிசம்பர் 27

**324** Breslau, St. John **பா.75**
A.M.200 L.M.

**1. உம் அவதாரம் பாரினில்**
கண்ணுற்ற பக்தனாம் யோவான்
கர்த்தா, உம் சாந்த மார்பினில்
அன்பாகச் சாயவும் பெற்றான்.

2. சாவுறும் தன்மை தேவரீர்
தரித்தும், திவ்விய வாசகன்
அநாதி ஜோதி ரூபம் நீர்
என்றே தெரிந்துகொண்டனன்.

அட்டவணை

3. கழுகைப் பொல் வான் பறந்தே
மா ரகசியம் கண்ணோக்கினான்
நீர் திவ்விய வார்த்தையாம் என்றே
மெய்யான சாட்சி கூறினான்.

4. உம் அன்பு அவன் உள்ளத்தில்
பெருகி பொங்கி வடிந்து
அவன் நல் ஆகமங்களில்
இன்னும் பிரகாசிக்கின்றது.

5. சீர் கன்னி மைந்தா, இயேசுவே
பூலோக ஜோதியான நீர்
பிதா, நல்லாவியோடுமே
என்றென்றும் துதி பெறுவீர்.

## குற்றமில்லா பாலகர் திருநாள் - டிசம்பர் 28

**325** Around the Throne of God in Heaven **பா.75**

Old Golden Bells 417 *Innocents Day* C.M.

1. **கோடானுகோடி சிறியோர்**
மேலோகில் நிற்கிறார்
எப்பாவம் தோஷமின்றியும்
ஓயாமல் பாடுவார்
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே!

2. பேரின்ப வீட்டில் சுகமும்
மெய் வாழ்வும் நிறைவாய்
உண்டாக, சிறு பாலரும்
சேர்ந்தார் எவ்விதமாய்?
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

3. மா பாவம் போக்கச் சிந்தினார்
மீட்பர் தம் ரத்தத்தை
அப்பாலர் மூழ்கி அடைந்தார்
சுத்தாங்க ஸ்திதியை
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

4. ஏரோதின் வாளால் மடிந்து,
தம் பாலன் மீட்பர்க்காய்
ஆருயிரை நீத்ததாலே
உம் பாதம் சேர்ந்தோர்க்காய்
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

5. பெத்தலைத் தூயபாலர் போல்
வியாதி ஆபத்தால்
சுத்த இளமையில் சென்றோர்
எண்ணற்ற பாலரால்
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

6. இப்பூமியில் நல்மீட்பரின்
பேரன்பை அறிந்தார்
விண் வீட்டில் அவர் அண்டையில்
நின்றாரவரிப்பார்
விண்ணில் ஸ்தோத்ரம்! ஸ்தோத்ரம்!
இயேசுநாதா உமக்கே.

**விருத்தசேதன திருநாள் - சனவரி 1**

**326** The ancient law departs **பா.77**

A.M.70 *St. Michael* S.M.

**1. பூர்வ பிரமாணத்தை**
**அகற்றி, நாதனார்**
**சிறந்த புது ஏற்பாட்டைப்**
**பக்தர்க்கு ஈகிறார்.**

அட்டவணை

2. ஜோதியில் ஜோதியாம்
மாசற்ற பாலனார்
பூலோகப் பாவத்தால் உண்டாம்
நிந்தை சுமக்கிறார்.

3. தம் பாலிய மாம்சத்தில்
கூர் நோவுணர்கிறார்
தாம் பலியென்று ரத்தத்தில்
முத்திரை பெறுகிறார்.

4. தெய்வீகப் பாலனே
இயேசு என்றுமே நீர்
மெய் மீட்பராய் இந்நாளிலே
சீர் நாமம் ஏற்கிறீர்.

5. அநாதி மைந்தனாய்
விண் மாட்சிமையில் நீர்
பிதா நல்லாவியோடொன்றாய்
புகழ்ச்சி பெறுவீர்.

**புனிதர் அந்திரேயா திருநாள் - நவம்பர் 30**

| | | |
|---|---|---|
| **327** | Jesus Calls us O'er tumult | **பா.144** |
| S.S.762, A.M.634 | Clarion | 8,7,8,7 |

1. **கொந்தளிக்கும் லோக வாழ்வில்**
கேட்போம் மீட்பர் சத்தத்தை
நித்தம் நித்தம் மா அன்போடு
'நேசா! பின் செல்வாய் என்னை'

2. பூர்வ சீஷன் அந்திரேயா
கேட்டான் அந்த சத்தமே
வீடு, வேலை, இனம் யாவும்
விட்டான் அவர்க்காகவே.

அட்டவணை

3. மண் பொன் மாய லோக வாழ்வை
விட்டு நீங்க அழைப்பார்
பற்று பாசம் யாவும் தள்ளி
'என்னை நேசிப்பாய்' என்பார்

4. இன்பம், துன்பம், கஷ்டம் சோர்வு
வேலை, தொல்லை, ஓய்விலும்,
யாவின் மேலாய்த் தம்மைச் சார
நம்மை அழைப்பார் இன்றும்.

5. மீட்பரே, உம் சத்தம் கேட்டு,
கீழ்ப்படிய அருளும்;
முற்றும் உம்மில் அன்பு வைத்து
என்றும் சேவிக்கச் செய்யும்.

**புனிதர் தோமா திருநாள் - டிசம்பர் 21**

**328** We have not seen we cannot see **பா.145**

A.M.612 *Beulah* C.M.

1. **விண் போகும் பாதை தூரமாம்**
என்றே நாம் எண்ணுவோம்
பகைஞரின் கொடூரமாம்
வன்மையை உணர்வோம்.

2. ஆனால் எப்பாடும் பாவமும்
இல்லா அவ்விண்ணையே
நாம் கண்டிலோம், நாம் காணவும்
இம்மையில் கூடாதே.

3. சிற்றின்பத்தை வெறுத்தாலும்,
உள்ளத்தை முற்றும் நாம்
கர்த்தாவுக் கொப்புவித்தலும்
அரிதென் றெண்ணலாம்.

அட்டவணை

4. ஆனாலோ, பாவம் நீக்கிட
அகோர வேதனை
மீட்பர் அடைந்து மாண்டதும்
நாம் காணக் கூடாதே.

5. பக்தன் தோமாவே, உன் போலும்
கண்ணால் காணாமலே
விஸ்வாசம் தக்கதாயினும்
சந்தேகம் கொள்வோமே.

6. என்றாலும் காணாதிருந்தும்
விஸ்வாசித்தோர் பாக்கியர்
என்றே நீ பெற்ற வாக்கையும்
நாங்களும் சார்ந்தவர்.

**புனிதர் பவுலடியார் திருநாள் - ஜனவரி 25**

**329** The shepherd now was smitten **பா.146**

A.M.405 *Vulpius* 7,6,7,6

1. **மேய்ப்பரை வெட்ட ஓநாய்**
ஆட்டைப் பட்சிக்கவே,
சிதறடிக்கப்பட்ட
மந்தைமேல் பாய்ந்ததே.

2. சவுல் சீஷரைக் கட்ட
மா மூர்க்கமாய்ச் சென்றான்;
விண் ஜோதி க்ஷணம் கண்டு
தரையில் விழுந்தான்.

3. ஏன் என்னைத் துன்பம் செய்வாய்
என்றே காதுற்றதும்
"கர்த்தாவே, யாது செய்வேன்?"
என்றான் நடுங்கியும்

4. கிறிஸ்துவின் சத்துரு நல்ல
போர்ச் சேவகனானான்
கொல் ஓநாய் போன்றோன் ஆட்டு
குட்டிக் கொப்பாயினான்.

5. நல் மேய்ப்பர் இயேசு சுவாமீ
மந்தையைக் காருமே
அலையும் ஆட்டை உம்பால்
நீர் கொண்டு வாருமே.

**கிறிஸ்து திருமுன்னிலைப் படுத்தப்பட்ட திருநாள் - பிப்ரவரி 2**

**330** O Zion open wide thy gates **பா.147**

A.M.407 *Bristol* C.M.

1. **உன் வாசல் திற, சீயோனே!**
மெய்ப் பொருளானவர்
தாமே ஆசாரிய பலியாய்
உன்னிடம் வந்தனர்.

2. கடாக்கள் ரத்தம் சிந்தல் ஏன்?
பிதாவின் மைந்தனார்
தம் பீட மீது பாவத்தின்
நிவாரணம் ஆனார்.

3. தன் பாலன் ஸ்வாமி என்றோர்ந்தே
தூய தாய் மரியாள்
ஓர் ஜோடு புறாக் குஞ்சுகள் தான்
காணிக்கையாய் வைத்தாள்.

4. தாம் எதிர் பார்த்த கர்த்தரை
அன்னாள் சிமியோனும்
கண்ணுற்ற சாட்சி கூறினார்
ஆனந்தமாகவும்.

அட்டவணை

5. சௌபாக்யவதி மாதாவோ
தன் நெஞ்சில் யாவையும்
வைத்தெண்ணியே வணங்கினாள்
மா மௌனமாகவும்.

6. பிதா, குமாரன், ஆவிக்கும்
நீடூழி காலமே
எல்லாக் கனம், மகிமையும்
மேன் மேலும் ஓங்குமே.

**புனிதர் மத்தியா திருநாள் - பிப்ரவரி 24**

**331** Bishop of the souls of man **பா.148**

A.M.408 *Sherbone* 7,7,7,7,7,7

1. **ஆத்துமாக்கள் மேய்ப்பரே**
மந்தையைப் பட்சிக்கவும்
சாத்தான் பாயும் ஓநாய் போல்
கிட்டிச் சேரும் நேரமும்
நாச மோசம் இன்றியே
காரும் நல்ல மேய்ப்பரே.

2. பணம் ஒன்றே ஆசிக்கும்
கூலியாளோ ஓடுவான்
காவல் இன்றிக் கிடக்கும்
தொழுவத்தின் வாசல் தான்
வாசல், காவல் ஆன நீர்
மந்தை முன் நின்றருள்வீர்.

3. கெட்டுப் போன யூதாஸின்
ஸ்தானத்திற்குத் தேவரீர்
சீஷர் சீட்டுப் போடவே
மத்தியா நியமித்தீர்
எங்கள் ஐயம் யாவிலும்
கர்த்தரே நடத்திடும்.

அட்டவணை

4. புது சீயோன் நகரில்
பக்தர் வரிசையிலே
நிற்கும் மத்தியாவோடும்
நாங்கள் சேரச் செய்யுமே
கண் குளிர உம்மையும்
காணும் பாக்கியம் அருளும்.

**புனிதர் மாற்கு திருநாள் - ஏப்ரல் 25**

**332** St. Francis Xavier **பா.149**

A.M.638 C.M.

1. **கிறிஸ்துவின் சுவிசேஷகர்**
நற்செய்தி கூறினார்
யாவருக்கும் திவ்விய ரகசியம்
விளங்கக் காட்டினார்.

2. பூர்வீக ஞானர் மங்கலாய்
அறிந்த வாக்கையே
கார்மேகம் இல்லாப் பகல்போல்
இவர்கள் கண்டாரே.

3. மெய் மாந்தனான கர்த்தரின்
மகா செய்கை எல்லாம்
உரைக்கும் திவ்விய வசனம்
சாகாமை உள்ளதாம்.

4. நால் சுவிசேஷகரையும்
ஓர் ஆவி ஏவினார்
தம் வேதத்தாலே நம்மையும்
ஒப்போதழைக்கிறார்.

5. நீர் பரிசுத்த மார்க்குவால்
புகன்ற செய்திக்கே
அடியார் உம்மை இத்தினம்
துதிப்போம், கர்த்தரே.

அட்டவணை

**புனிதர் பிலிப்பு, யாக்போபு திருநாள் - மே 1**

| | | |
|---|---|---|
| **333** | There is one way and only one | **பா.150** |
| A.M.411 | *St. Philip and St. James* | L.M. |

1. **காரிருள் பாவம் இன்றியே,**
பகலோனாக ஸ்வாமிதாம்
பிரகாசம் வீசும் நாட்டிற்கே
ஒன்றான வழி கிறிஸ்துதாம்.

2. ஒன்றான திவ்விய சத்தியத்தை
நம் மீட்பர் வந்து போதித்தார்
பக்தர்க்கொன்றான ஜீவனை
தம் ரத்தத்தால் சம்பாதித்தார்.

3. முற்காலம் தூயோன் பிலிப்பு
காணாததை நாம் உணர்ந்தோம்
கிறிஸ்துவில் ஸ்வாமியைக் கண்டு
மேலான ஞானம் அடைந்தோம்.

4. நற்செய்கையில் நிலைப்போர்க்கே
வாடாத கிரீடம் என்று தான்
விஸ்வாசிகள் கைக்கொள்ளவே
யாக்கோபு பக்தன் கூறினான்.

5. மெய் வழி, சத்தியம் ஜீவனும்
மாந்தர்க்காய் ஆன இயேசுவே
பிதாவின் முகம் நாங்களும்
கண்டென்றும் வாழச் செய்யுமே.

**புனிதர் பர்னபா திருநாள் - ஜூன் 11**

| | | |
|---|---|---|
| **334** | Brightly did the Light Divine | **பா.151** |
| A.M.412 | *St. Vienna* | 7,7,7,7 |

1. **“ஆறுதலின் மகனாம்”**
என்னும் நாமம் பெற்றோனாம்
பக்தன் செய்கை வாக்கிலே
திவ்விய ஒளி வீசிற்றே.

அட்டவணை

2. தெய்வ அருள் பெற்றவன்
மா சந்தோஷம் கொண்டனன்
வார்த்தை கேட்டநேகரும்
சேர்ந்தார் கர்த்தர் அண்டையும்.

3. பவுல் பர்னபாவையும்
ஊழியத்திற்கழைத்தும்
வல்ல ஞான வரத்தை
ஈந்திர், தூய ஆவியே.

4. கிறிஸ்து வலப் பக்கமாய்
நாங்களும் மாசற்றோராய்
நிற்க எங்கள் நெஞ்சையும்
தேவரீரே நிரப்பும்.

**புனிதர் யோவான் ஸ்நானகன் திருநாள் - ஜூன் 24**

**335** On Jordan's banks the Baptist's cry **பா.152**

A.M.50 *Winchester New* L.M.

1. **கர்த்தர் சமீபமாம் என்றே**
யோர்தான் நதியின் அருகே,
முன் தூதன் யோவான் கூறிடும்
நற்செய்தி கேட்க விழியும்.

2. விருந்தும் போன்றே நாதனார்
நம் நெஞ்சில் வந்து தங்குவார்;
அவர்க்கு வழி ஆகவும்
அகத்தைச் சுத்தம் பண்ணுவோம்.

3. நாதா, நீர் எங்கள் தஞ்சமும்,
ரட்சிப்பும், ஜீவ கிரீடமும்,
உம் அருள் அற்ற யாவரும்
உலர்வார் புஷ்பம் போலவும்.

4. நோய் கொண்டோர் சொஸ்தமாகவும்
வீழ்ந்தோர் கால் ஊன்றி நிற்கவும்
பூலோகம் சீர் அடையவும்
எழும்பி நீர் பிரகாசியும்.

5. உமக்கு சாட்சி கூறியே
வழி ஆயத்தமாகவே
யோவான் ஸ்நானன்போல் நாங்களும்
உம் அருள் பெறச் செய்திடும்.

**புனிதர் பேதுரு திருநாள் - ஜூன் 29**

**336** Forsaken once and thrice denied **பா.153**

A.M.416 *Derry* 8,8,8,6

1. **ஓர் முறை விட்டு மும்முறை**
சீமோன் மறுத்தும் ஆண்டவர்
என்னிலே அன்புண்டா? என்றே
உயிர்த்தபின் கேட்டனர்.

2. விஸ்வாசமின்றிக் கர்த்தரை
பன்முறை நாமும் மறுத்தோம்
பயத்தினால் பலமுறை
நம் நேசரை விட்டோம்.

3. சீமோனோ சேவல் கூவுங்கால்
மனம் கசந்து அழுதான்
பாறை போல் நின்று பாசத்தால்
கர்த்தாவைச் சேவித்தான்.

4. அவன் போல் அச்சங்கொள்ளினும்
நாமோ மெய்யன்பு கூர்ந்திலோம்
பாவத்தால் வெட்கம் அடைந்தும்
கண்ணீர் சொரிந்திலோம்.

அட்டவணை

5. நாங்களும் உம்மை விட்டுமே
பன்முறை மறுதலித்தும்
நீர் எம்மைப் பார்த்து இயேசுவே
நெஞ்சுருகச் செய்யும்.

6. இடறும் வேளை தாங்கிடும்
உம்மைச் சேவிக்கும் கைகளும்
உம்மை நேசிக்கும் நெஞ்சமும்
அடியார்க்கருளும்.

**புனிதர் மகதலேனா மரியாள் திருநாள் - ஜுலை 22**

**337** Unto Mary demon-haunted **பா.154**

A.M.436 II *Deerhurst* 8,7,8,7,D

1. **பேயின் கோஷ்டம் ஊரின் தீழ்ப்பு**
ராவின் கோரக் கனாவால்
மாய்ந்த பாவி மரியாளை
மீட்பர் மீட்டார், அன்பினால்
மாதை மீட்ட நாதா, எம்மின்
பாவம் கோஷ்டம் நீக்கியே
தீதாம் இருள் தேங்கும் நெஞ்சில்
ஞான ஜோதி தாருமே.

2. தூய்மையான மரியாளே
நாதர் பாதம் நீங்காது
வாய்மையோடு சேவை ஆற்றி
சென்றாள் எங்கும் ஓயாது
நாதா நாங்கள் தாழ்மையோடும்
ஊக்கத்தோடும் மகிழ்வாய்
யாதும் சேவை செய்ய உந்தன்
ஆவி தாரும் தயவாய்.

அட்டவணை

3. மீட்பர் சிலுவையில் தொங்கி
ஜீவன் விடக் கண்டனள்;
மீண்ட நாதர் பாதம் வீழ்ந்து
யார்க்கும் முன்னர் கண்டனள்;
நாதா வாழ்வின் இன்பம் நண்பர்,
அற்றே நாங்கள் சோர்கையில்
பாதம் சேர்ந்து ஈறில்லாத
இன்பம் தாரும் நெஞ்சினில்.

**புனிதர் யாக்கோபு திருநாள் - ஜூலை 25**

**338** For all Thy Saints a noble throng **பா.155**

A.M.418 *St. James* C.M.

1. **இளமை முதுமையிலும்**
பட்டயம் தீயாலே
மரித்த பக்தர்க்காகவும்
மா ஸ்தோத்திரம், கர்த்தரே.

2. உம் நல்லழைப்பைக் கேட்டதும்
யாக்கோபப்போஸ்தலன்
தன் தந்தை வீட்டை நீங்கியும்
உம்மைப் பின்பற்றினன்.

3. மற்றிரு சீஷரோடுமே
யவீர் வீட்டுள் சென்றான்;
உயர் மலைமேல் ஏறியே
உம்மாட்சிமை கண்டான்.

4. உம்மோடு காவில் ஜெபித்தும்
உம் பாத்திரம் குடித்தான்;
ஏரோதால் மாண்டு மீளவும்
உம்மைத் தரிசித்தான்.

அட்டவணை

5. பூலோக இன்ப துன்பத்தை
மறந்து நாங்களும்
விண்ஸ்தலம் நாட அருளைக்
கர்த்தாவே, அளியும்.

6. நாங்கள் உம் பாத்திரம் குடித்தால்
நீர் வரும் நாளிலே
வாடாத கிரீடத்தை உம்மால்
அணிந்து கொள்வோமே.

**மறுரூப திருநாள் - ஆகஸ்ட் 6**

**339** O Master it is good to be **பா.156**

A.M.662 *Addison's* D.L.M.

1. **இவ்வுயர் மலைமீதினில்**
எம் நாதா, உந்தன் பாதத்தில்
உம் தாசர் கண்ணால் காண்கிறோம்
சீனாய் மலைமேல் கற்பனை
வானோரால் பெற்ற மோசேயைத்
தீ, காற்று, கம்பம் கண்டோனை
மா மென்மை சத்தம் கேட்டோனை.

2. இவ்வுயர் மலை மீதிலே
எம் நாதர் சீஷர் மூவரே;
கற்பாறை போன்ற பேதுரு
நிற்பான் எப்பாவம் எதிர்த்து;
இடி முழக்க மக்களாம்;
கடிந்த பேச்சு யாக்கோபாம்
"அன்பே கடவுள்" போதிப்பான்
உன்னத ஞானியாம் யோவான்.

அட்டவணை

3. இவ்வுயர் மலைமீதிலும்
உயர்ந்து உள்ளம் பொங்கிடும்
பரமன் ஜோதி தோன்றிடும்
பகலோன் ஜோதிமாய்த்திடும்
மா தூய ஆடை வெண்மையே!
நாம் மேலும் மேலும் ஏறியே
நம் நாதர் ரூபம் காண்போமே.

4. இவ்வுயர் மலைமீதினில்
எம் நாதர் தூய பாதத்தில்
மா இருள் மேகம் மூடினும்
மா ஜோதி பார்வை வாட்டினும்
காண்போமே தெய்வ மைந்தனை
கேட்போமே தெய்வ வார்த்தையை
“இவர் என் நேச மைந்தனார்!
இவர்க்குச் செவிகொடுப்பீர்.”

**புனிதர் பர்த்தொலொமேயு திருநாள் - ஆகஸ்ட் 24**

| | | |
|---|---|---|
| **340** | King of saints to whom the number | **பா.157** |
| A.M.419 | *Everton* | 8,7,8,7,D |

1. **தூயர் ராஜா, எண்ணிறந்த**
வான்மீன் சேனை அறிவீர்;
மாந்தர் அறியா அநேகர்
உம்மைப் போற்றப் பெறுவீர்;
எண்ணரிய பக்தர் கூட்டம்
லோக இருள் மூடினும்
விண்ணின் ராஜ சமூகத்தில்
சுடர் போல விளங்கும்.

அட்டவணை

2. அந்தக் கூட்டத்தில் சிறந்த
ஓர் அப்போஸ்தலனுக்காய்
நாங்கள் உம்மைத் துதி செய்வோம்
வருஷா வருஷமாய்;
கர்த்தர்க்காக அவன் பட்ட
நற் பிரயாசம் கண்டதார்?
பக்தரின் மறைந்த வாழ்க்கை
கர்த்தர் தாமே அறிவார்.

3. தாசரது ஜெபம், சாந்தம்
பாடு, கஸ்தி யாவுமே
தெய்வ மைந்தன் புஸ்தகத்தில்
தீட்டப்பட்டிருக்குமே;
இவை உந்தன் பொக்கிஷங்கள்;
நாதா, அந்த நாளிலும்
உம் சம்பத்தை எண்ணும்போது
எண்ணும் அடியாரையும்.

**புனிதர் மத்தேயு திருநாள் - செப்டம்பர் 21**

**341** Behold the master Passeth by **பா.158**

A.M.615 *St. Matthew Gloucester* L.M.

1. **இதோ, உன் நாதர் செல்கின்றார்!**
உன்னை அழைக்கும், அன்பைப் பார்!
“வீண் லோகம் விட்டென்பின் செல்வாய்”
என்றன்பாய்ச் சொல்வதைக் கேளாய்

2. துன்பத்தில் உழல்வோனே நீ
மோட்சத்தின் வாழ்வைக் கவனி;
பற்றாசை நீக்கி, விண்ணைப் பார்;
இதோ, உன் நாதர் செல்கின்றார்!

அட்டவணை

3. அவ்வழைப்பை இப் பக்தன் தான்
கேட்டே செல்வத்தை வெறுத்தான்;
சீர் இயேசுவின் சிலுவைக்காய்
எல்லாம் எண்ணினான் நஷ்டமாய்.

4. நாடோறும் என் பின் செல் என்னும்
அழைப்பு அவன் நெஞ்சிலும்
உற்சாகத்தோடுழைக்கவே
திட சித்தம் உண்டாக்கிற்றே.

5. நாடோறும் நம்மை நாதர் தாம்
அழைத்தும் தாமதம் ஏனாம்?
ஏன் மோட்ச வாழ்வைத் தள்ளுவோம்?
ஏன் லோக மாயை நாடுவோம்?

6. மத்தேயு பக்தன் போலவும்
எல்லாம் வெறுத்து நாங்களும்
நல் மனதோடு உம்மையே
பின்பற்ற ஏவும், கர்த்தரே.

**தூய மிகாவேல் முதலான சகல தேவ தூதர்கள் திருநாள்-செப்.29**

**342** Life and Strength of all thy servants **பா.159**

A.M.634 *Clarion* 8,7,8,7

1. **தந்தையின் பிரகாசமாகி**
பக்தர் ஜீவனானோரே
விண்ணோரோடு மண்ணோர் சேர்ந்து
உம்மைத் துதி செய்வாரே.

2. கோடா கோடித் தூதர் கூட்டம்
யுத்த வீர சேனை தான்
வெற்றிக் குருசைக் கையில் தாங்கி
தூய மிகாவேல் நிற்பான்.

அட்டவணை

3. பட்டயத்தை ஓங்கி துரோக
சேனை விண்ணின்றோட்டுவான்
தெய்வ சத்துவத்தால் வலு
சர்ப்பத்தையும் மிதிப்பான்.

4. தீய சேனை அஞ்சி ஓட
நாங்கள் மோட்சம் சேரவும்
எங்கள் போரில் விண்ணோர்துணை
கிறிஸ்துவே கடாட்சியும்.

5. மா பிதாவாம் நித்திய ஜீவா
மாண்டுயிர்த்த மைந்தனே
தூய ஆவியே, எந்நாளும்
ஸ்தோத்திரம், என்றும் உமக்கே.

**தூய மிகாவேல் முதலான சகல தேவ தூதர்கள் திருநாள்-செப்.29**

**343** Around the Throne of God a band **பா.160**

A.M.164 II *Charnwood* L.M.

1. **தெய்வாசன முன் நிற்பரே**
சேவகத் தூதர் சேனையே;
பண் மீட்டி விண்ணில் பாடுவர்
பொன்முடி மாண்பாய் சூடுவர்.

2. சன்னிதி சேவை ஆற்றுவர்
இன்னிசை பாடிப் போற்றுவர்
நாதரின் ஆணை ஏற்றுமே
மேதினியோரைக் காப்பரே

3. நாதா உம் தூதர் நாளெல்லாம்
நடத்திட நற்பாதையாம்
மாலை இராவின் தூக்கத்தில்
சீலமாய்க் காக்க பாங்கினில்

அட்டவணை

4. எத்தீங்கு பயம் சேதமே
கர்த்தா தொடாது எங்களை
வாணாள் முடிந்தும் பாதமே
மாண்பாகச் சேர்வோம் தூதரை.

**புனிதர் லூக்கா திருநாள் - அக்டோபர் 18**

**344** **பா.161**

A.M.238 *Martyrdon* C.M.

1. **முன்னே சரீர வைத்தியனாம்**
லூக்காவைத் தேவரீர்;
ஆன்மாவின் சா நோய் தீர்க்கவும்
கர்த்தாவே, அழைத்தீர்.

2. ஆன்மாவின் ரோகம் நீக்கிடும்
மெய்யான வைத்தியரே
உம் வார்த்தையாம் மருந்தினால்
நற்சுகம் ஈயுமே.

3. கர்த்தாவே, பாவக் குஷ்டத்தால்
சா வேதனை யுற்றோம்;
உம் கரத்தால் தொட்டருளும்;
அப்போது சுகிப்போம்.

4. ஆன்மாக்கள் திமிர் வாதத்தால்
மரித்துப் போயினும்
நீ வல்ல வாக்கைக் கூறுங்கால்
திரும்ப ஜீவிக்கும்.

5. துர் ஆசை தீய நெஞ்சிலே
தீப்போலக் காயினும்
உம் சாந்தச் சொல்லால் கோஷ்டத்தை
தணியச் செய்திடும்.

அட்டவணை

6. எத்தீங்கும் நீக்கும் இயேசுவே
நற்பாதம் அண்டினோம்
உம் பூர்ண கடாட்சத்தால்
சுத்தாங்கம் பெறுவோம்.

**புனிதர் சீமோன், யூதா திருநாள் - அக்டோபர் 28**

**345** Thou who sentest Thine apostles **பா.162**

A.M.426 *Nukapu* 8,7,8,7,8,7

1. **இயேசு ஸ்வாமி, சீமோன் யூதா**
என்னும் உம் அப்போஸ்தலர்
ஒன்று சேர்ந்து உமக்காக
உழைத்த சகோதரர்
தங்கள் வேலை ஓய்ந்த போது
வெற்றிக் கிரீடம் பெற்றனர்.

2. அவர்கள் உம் அருளாலே
நேசத்தோடு போதித்தார்
சபையில் முற்காலம் பல
அற்புதங்கள் காண்பித்தார்
மார்க்கக் கேடுண்டான வேளை
எச்சரித்துக் கண்டித்தார்.

3. சீமோன் யூதா போன்ற உந்தன்
பக்தர் பல்லோருடனும்
பளிங்காழி முன்னே நாங்கள்
உம்மைப் போற்றும் அளவும்
சாவுக்கும் அஞ்சாமல் உம்மைப்
பற்றி ஏவி அருளும்.

4. அற்புதங்கள் செய்யும் வல்ல
மா பிதாவே, ஸ்தோத்திரம்;
நீதி சத்தியமும் நிறைந்த
மாந்தர் வேந்தே, ஸ்தோத்திரம்
தூய ஆவியே, என்றைக்கும்
உமக்கெங்கள் ஸ்தோத்திரம்.

அட்டவணை

**புனிதர் மரியாள் மங்களவாக்கு திருநாள் - மார்ச் 25**
**(பாமாலையில் மங்கள கவிக்குப் பின்னுள்ள பாடல்)**

**346** Praise Ye the Lord this day

A.M.409 *Annuciation* S.M.

1. **ஆசித்த பக்தர்க்குச்**
சந்தோஷமானதாம்
இந்நாளுக்காய்க் கர்த்தாவுக்கு
கனம் புகழ் எல்லாம்.

2. ஸ்திரீயின் வித்தானவர்
ஓர் கன்னி கர்ப்பத்தில்
பிறப்பார் என்று உத்தமர்
கண்டார் முன்னுரையில்.

3. விஸ்வாச பக்தியாய்
மா சாந்த மரியாள்
அருளின் வார்த்தை தாழ்மையாய்
பணிந்து நம்பினாள்.

4. தெய்வீக மாட்சிமை
உன் மேல் நிழலிடும்
என்னும் வாக்கேற்ற அம்மாதைப்
போல் நாமும் பணிவோம்.

5. மெய் அவதாரமாம்
நல் மீட்பர் பிறப்பால்
தாயானாள் பாக்கியவதியாம்
காபிரியேல் வாக்கால்.

6. சீர் கன்னி மைந்தனே
இயேசுவே, தேவரீர்
பிதா நல்லாவியோடுமே
புகழ்ச்சி பெறுவீர்.

அட்டவணை

# 5. சகல பரிசுத்தவான்கள்

**சகல பரிசுத்தவான்கள் திருநாள் - நவம்பர் 1**

**347** The Saints of God their Conflict Past **பா.164**

A.M.426 *Nukapu* 8,7,8,7,8,7

**1. ஆ பாக்கிய தெய்வ பக்தரே!**
உம் நீண்ட போர் முடிந்ததே
வெற்றி கொண்டே, சர்வாயுதம்
வைத்து விட்டீர் கர்த்தாவிடம்
சீர் பக்தரே, அமர்ந்து நீர்
இயேசுவின் பாதத்தில் வாழ்வீர்.

2. ஆ பாக்கிய தெய்வ பக்தரே!
மா அலுப்பாம் பிரயாணத்தை
முடித்து, இனி அலைவும்
சோர்வும் இல்லாமல் வாழ்ந்திடும்
சீர் பக்தரே, அமர்ந்து நீர்
நல் வீட்டில் இளைப்பாறுவீர்.

3. ஆ பாக்கிய தெய்வ பக்தரே!
இஜ்ஜீவ யாத்திரை ஓய்ந்ததே;
இப்போதபாயப் புயலும்
உம்மைச் சேராது கிஞ்சித்தும்
சீர் பக்தரே, அமர்ந்து நீர்
இன்பத் துறையில் தங்குவீர்.

4. ஆ பாக்கிய தெய்வ பக்தரே!
உம் மேனி மண்ணில் தூங்கவே
மாண்பாய் எழும்புமளவும்
விழித்துக் காத்துக்கொண்டிரும்
சீர் பக்தரே, மகிழ்ந்து நீர்
நம் ராஜா வருவார் என்பீர்.

அட்டவணை

5. கேளும் தூயோரின் நாதரே
பரிந்து பேசும் மீட்பரே,
வாழ் நாள் எல்லாம் நல்லாவியே
கடாட்சம் வைத்து ஆளுமே;
சீர் பக்தரோடு நாங்களும்
மேலோகில் சேரச் செய்திடும்.

**348** Who are these like stars appearing **பா.166**

A.M.427 *All Saints* 8,7,8,7,7,7

1. **வான ஜோதியாய் இலங்கி**
மாண்பாய்ப் பொன்முடி தாங்கி
தெய்வ ஆசனமுன் நிற்பார்
மாட்சியாம் இவ்வானோர் யார்?
அல்லேலூயா! முழங்கும்
விண்ணின்வேந்தர் துதியும்.

2. பகலோனின் ஜோதியோடு
தெய்வ நீதி அணிந்து
தூய வெண்மையான அங்கி
என்றும் தூய்மை விளங்கி,
தூயோராய்த் தரித்தனர்
எங்கிருந்து வந்தனர்?

3. ஜீவ காலம் முற்றும் மீட்பர்
மேன்மைக்காய்ப் போராடினர்
லோகத்தாரின் சேர்க்கை நீக்கி
சாவுமட்டும் போராடி
போரில் முற்றும் நின்றனர்
மீட்பராலே வென்றனர்.

4. வேதனை தம் நெஞ்சைப் பீற
ஓங்கு துன்பம் சூழ்ந்திட,
பணிந்து தம் தெய்வம் நோக்கி
வேண்டலோடு போராடி
இப்போ போர் முடித்திட்டார்
ஸ்வாமி கண்ணீர் நீக்கினார்.

5. சர்வ வல்லோர் சந்நிதியில்
திவ்விய ஊழியத்தினில்
நின்று, தேகம் ஆவியோடு
கட்டளை கீழ்ப்படிந்து
உன்னதத்தில் சேர்ந்திட்டார்
என்றும் தெய்வம் நோக்குவார்.

For all the Saints who from their labours rest

**349** For All The Saints **பா.167**

A.M.437 III 10,10,10

1. **விஸ்வாசத்தோடு சாட்சி பகர்ந்தே**
தம் வேலை முடித்தோர் நிமித்தமே
கர்த்தாவே, உம்மைத் துதி செய்வோம்
அல்லேலூயா! அல்லேலூயா!

2. நீர் அவர் கோட்டை, வல் கன் மலையாம்
நீர் யுத்தத்தில் சேனைத் தலைவராம்
நீர் காரிருளில் பரஞ்சோதியாம்
அல்லேலூயா! அல்லேலூயா!

3. முன் நாளில் பக்தர் நற்போராடியே
வென்றார்போல் நாங்கள் வீரராகவே
பொற்கிரீடம் பெற்று கொள்வோமாகவே
அல்லேலூயா! அல்லேலூயா!

அட்டவணை

4. இங்கே போராடி நாங்கள் களைத்தும்
உம் பக்தர் மேன்மையில் விளங்கினும்
யாவரும் உம்மில் ஓர் சபை என்றும்
அல்லேலூயா! அல்லேலூயா!

5. போர் நீண்டு மா கடூரமாகவே
கெம்பீர கீதம் விண்ணில் கேட்குமே
நாம் அதைக் கேட்டுத் தைரியம் கொள்வோமே
அல்லேலூயா! அல்லேலூயா!

6. செவ்வானம் மேற்கில் தோன்றி ஒளிரும்
மெய் வீரருக்கு ஓய்வு வாய்த்திடும்;
சீர் பரதீசில்பாக்கியம் அமையும்
அல்லேலூயா! அல்லேலூயா!

7. மேலான பகல் பின் விடியும் பார்!
வென்றோர் கெம்பீரமாய் எழும்புவார்
மாண்புறும் ராஜா முன்னே செல்லுவார்,
அல்லேலூயா! அல்லேலூயா!

8. அநந்த கூட்டம் நாற்றிசை நின்றும்
திரியேகருக்கு ஸ்தோத்ரம் பாடியும்,
விண் மாட்சி வாசலுள் பிரவேசிக்கும்
அல்லேலூயா! அல்லேலூயா!

**350** How bright these glorious spirits shine **பா.168**
A.M.438 I *Beautitudo* C.M.

1. **வெள்ளங்கி பூண்டு மாட்சியாய்**
நிற்கும் இப்பாக்கியர் யார்?
சதா சந்தோஷ ஸ்தலத்தை
எவ்வாறு அடைந்தார்?

அட்டவணை

2. மிகுந்த துன்பத்தினின்றே
இவர்கள் மீண்டவர்
தம் அங்கி கிறிஸ்து ரத்தத்தில்
தூய்மையாய்த் தோய்த்தவர்

3. குருத்தோலை பிடித்தோராய்
விண் ஆசன முன்னர்
செம் ஜோதியில் தம் நாதரை
இப்போது சேவிப்பர்.

4. வெம்பசி, தாகம் வெய்யிலும்
சற்றேனும் அறியார்,
பகலோனாக ஸ்வாமிதாம்
நற்காந்தி வீசுவார்.

5. சிங்காசனத்தின் மத்தியில்
விண் ஆட்டுக்குட்டிதாம்
மெய் அமிர்தத்தால் பக்தரை
போஷித்துக் காப்பாராம்.

6. நல் மேய்ச்சல், ஜீவ தண்ணீர்க்கும்
அவர் நடத்துவார்,
இவர்கள் கண்ணீர் யாவையும்
கர்த்தர் தாம் துடைப்பார்.

7. நாம் வாழ்த்தும் ஸ்வாமியாம் பிதா,
குமாரன் ஆவிக்கும்,
நீடூழி காலமாகவே
துதி உண்டாகவும்.

அட்டவணை

**351** **பா.169**

A.M.81 *St. Edmund* 7,7,7,7, D

1. **வெள்ளை அங்கி தரித்து**
சுடர் ஒளியுள்ளோர் ஆர்?
ஸ்வாமியை ஆராதித்து
பூரிப்போர் களிப்போர் ஆர்?
சிலுவையை எடுத்து
இயேசுவின் நிமித்தமே
யுத்தம் பண்ணிப் பொறுத்து
நின்றோர் இவர்கள்தானே.

2. மா துன்பத்திலிருந்து
வந்து விசுவாசத்தால்
தெய்வ நீதி அணிந்து
சுத்தமானார்; ஆதலால்
ஓய்வில்லாமல் கர்த்தரை
கிட்டி நின்று சேவிப்பார்,
கர்த்தர் சுத்தவான்களை
சேர்த்து ஆசீர்வதிப்பார்.

3. அவர் ஜெயம் கொண்டோராய்
இனி சோதிக்கப்படார்
தீமை நீங்கித் தூயோராய்
பசி தாகம் அறியார்
மத்தியான உஷ்டணம்
இனி படமாட்டாதே;
அவர்கள் மெய்ப் பாக்கியம்
வளர்ந்தோங்கும் நித்தமே.

4. தெய்வ ஆட்டுக்குட்டியும்
அவர்களைப் போஷிப்பார்;
ஜீவ தருக் கனியும்
ஜீவ நீரும் அளிப்பார்;
துக்கம் துன்பம் ஒழித்து
குறை யாவும் நீக்குவார்;
கண்ணீரையும் துடைத்து
அன்பினால் நிரப்புவார்

**352** Ten thousand Times Ten Thousand **பா.406**
A.M.222 *Alford* 7,6,8,6 D

1. **மின்னும் வெள்ளங்கி பூண்டு**
மீட்புற்ற கூட்டத்தார்
பொன்னகர்செல்லும் பாதையில்
பல் கோடியாய்ச் செல்வார்
வெம் பாவம் சாவை இவர்
வென்றார் – போர் ஓய்ந்ததே
செம்பொன்னாம் வாசல் திறவும்
செல்வார் இவர் உள்ளே.

2. முழங்கும் அல்லேலூயா
மண் விண்ணை நிரப்பும்
விளங்கும் கோடி வீணைகள்
விஜயம் சாற்றிடும்,
சராசரங்கள் யாவும்
சுகிக்கும் நாள் இதே
இராவின் துன்பம் நோவுக்கு
ஈடாம் பேரின்பமே

அட்டவணை

3. அன்பான நண்பர் கூடி
ஆனந்தம் அடைவார்;
மாண்பான நேசம் நீங்காதே
ஒன்றாக வாழுவார்;
கண்ணீர் வடித்த கண்கள்
களித்திலங்கிடும்,
மண்ணில் பிரிந்த உயிர்கள்
மீளவும் சேர்ந்திடும்

4. சிறந்த உந்தன் மீட்பைச்
சமீபமாக்குமே;
தெரிந்து கொள்ளப்பட்டவர்
தொகை நிரப்புமே;
உரைத்த உந்தன் காட்சி
உம்பரில் காட்டுவீர்;
இறைவா, ஏங்கும் தாசர்க்கு
இறங்கி வருவீர்.

**353** There is a blessed Home **பா.407**

A.M.230 *The Blessed Home* 6,6,6,6 D

1. **விண் வாசஸ்தலமாம்**
பேரின்ப வீடுண்டே
கிலேசம் பாடெல்லாம்
இல்லாமல் போகுமே;
விஸ்வாசம் காட்சி ஆம்,
நம்பிக்கை சித்திக்கும்;
மா ஜோதியால் எல்லாம்
என்றும் பிரகாசிக்கும்.

அட்டவணை

2. தூதர் ஆராதிக்கும்
மெய்ப் பாக்கியமாம் ஸ்தலம்
அங்கே ஒலித்திடும்
சந்தோஷக் கீர்த்தனம்;
தெய்வாசனம் முன்னே
பல்லாயிரம் பக்தர்
திரியேக நாதரை
வணங்கிப் போற்றுவர்.

3. தெய்வாட்டுக் குட்டியின்
கை கால், விலாவிலே
ஐங்காயம் நோக்கிடின்,
ஒப்பற்ற இன்பமே!
சீர் வெற்றி ஈந்ததால்
அன்போடு சேவிப்போம்;
பேரருள் பெற்றதால்
என்றைக்கும் போற்றுவோம்.

4. துன்புற்ற பக்தரே,
விண் வீட்டை நாடுங்கள்;
தொய்யாமல் நித்தமே
முன் சென்று ஏகுங்கள்;
இத் துன்பம் மாறுமே,
மேலோக நாதனார்
நல் வார்த்தை சொல்லியே
பேரின்பம் ஈகுவார்.

**354** **கி.கீ.326**

*காமாஸ்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தேவ லோகமதில்**
சேவிப்பார் தூயவர்கள்

***அனுபல்லவி***

மாவலராகிய தேவன்றன் பலத்தால் – ரீ
பூவினில் ஜீவித்துப் புகழுறும் ஜெயம் பெற்றார் – தேவ

***சரணங்கள்***

1. வானமண்டல பொல்லா ஆவியின் சேனையோடும் – பல
மான துரைத்தனம், அதிகாரம், பிரபஞ்ச அதிபதியிவர்களோடும்
ஞானமாய்த் தேவ சர்வாயுதம் தரித்து – ரீ
நலமுடன் போராடி உலகினில் ஜெயங் கொண்டார் – தேவ

2. பட்டயம், நிர்வாணம், பசி, நாச மோசங்களும் – மா
பாடு வியாகுலத்தோடு உபத்ரவம், பஞ்சமும் மிஞ்சி வந்தும்
துட்டர்கள் கிட்டினும் மட்டில்லா அன்பரால் – ரீ
துணிவுடன் முற்றிலும் ஜெயித்த விசுவாசிகள் – தேவ

3. பாரத்தையும், தமை நெஞ்கிய பாவத்தையும் – தள்ளிப்
பட்சமுறும் யேசுரட்சகர் மீது தம் பார்வையை வைத்து என்றும்
வீரமாய் ஓடியே வெற்றி சிறந்தவர் – ரீ
வேகும் அக்கினியின் உக்கிரம் அவித்தவர் – தேவ

4. ஜெயங்கொள்ளுவோர் பரதீசினில் வீற்றிருப்பார் – வாடா
ஜீவ கிரீடம் அணிந்தாளுகை செய்வார், ஜீவகனி புசிப்பார்
வியப்புறு புது நாமம், வெள்ளுடை பெற்றுமே – ரீ
விடிவெள்ளியாய் நித்யம்விளங்கி ஜொலித்திடுவார் – தேவ

*– வே. சந்தியாகு ஐயர்*

அட்டவணை

**355** **கி.கீ.328**

*கேதாரகௌளம்* *சாபுதாளம்*

### *பல்லவி*

**பக்தருடன் பாடுவேன் – பரமசபை**
முக்தர்குழாம் கூடுவேன்

### *அனுபல்லவி*

அன்பால் அணைக்கும் அருள்நாதன் மார்பினில்
இன்பம் நுகர்ந்திளைப்பாறுவோர் கூட நான், – பக்தருடன்

### *சரணங்கள்*

1. அன்பு அழியாதல்லோ – அவ்வண்ணமே
அன்பர் என் இன்பர்களும்,
பொன்னடிப் பூமானின் புத்துயிர் பெற்றதால்
என்னுடன் தங்குவார் எண்ணூழி காலமாய் –பக்தருடன்

2. இகமும் பரமும் ஒன்றே இவ்வடியார்க்–கு
அகமும் ஆண்டவன் அடியே,
சுகமும் நற்செல்வமும் சுற்றமும் உற்றமும்
இகலில்லா ரட்சகன் இன்பப் பொற்பாதமே –பக்தருடன்

3. தாயின் தயவுடையதாய்த் தமியன் நின்
சேயன் கண் மூடுகையில்,
பாயொளிப் பசும் பொன்னே, பக்தர் சிந்தாமணி,
தூயா, திருப்பாதத் தரிசனம் தந்தருள் –பக்தருடன்

*– ஏசுதாசன் சவரிராயன்*

அட்டவணை

**356** **கி.கீ.327**

*கள்ளடா* *ஆதிதாளம்*

***பல்லவி***

**வெள்ளை அங்கிகள் தரித்த**

விமல முத்தர் இவர் யார்?

***அனுபல்லவி***

கள்ளமில்லா ஆட்டுக்குட்டிக்

கருணை வள்ளல் முன் நிற்கும். –வெள்ளை

***சரணங்கள்***

1. நானாதிக்கிலுமிருந்து
நயந்து வந்தவர் இவர்
கோணாது துன்பக் கடலில்
குளித்து வந்தவர் இவர். –வெள்ளை

2. குருத் தோலைகள் பிடித்துக்
கொற்றவனைச் சூழநிற்கும்
பெருத்த கூட்டத்தார் இவர்
பேரன்பின் அடியார்களாம். –வெள்ளை

3. ஆட்டுக் குட்டியாலே மீட்பை
அடைந்த உத்தமர் இவர்
தேட்டமுடனே நாயனைச்
சேவித்து நிற்கின்றார் நித்தம். –வெள்ளை

4. பசிதாகம் யாவுமற்றார்
பாக்கிய நிலைமை பெற்றார்
உச்சித மோட்சத்தின் கண்ணீர்
உகுக்கா வாழ்வினை யுற்றார். –வெள்ளை

*– ல.ஈ. ஸ்தேவான் ஐயர்*

அட்டவணை

**357** **கி.கீ.281**

*காம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**வான நகரத்தின் மேன்மையெனச் சொலுவோம், கன**
வலன் நலவருக்கருள்

***சரணங்கள்***

1. பானொளிரத்னங்கள் அஸ்திபாரமாந் திருவாசல்கள்
பன்னிரு முத்துக்கள் தெரு பொன்னின்மயமே
தேனிலும் மதுரம் தெளிவிற் பளிங்கதான ஆறும்
ஜீவதருவும் இருக்கும் செப்பரும் அழகதான – வான

2. அங்கு நோய், துன்பம், விசாரம், அக்ரமம், கண்ணீர் தரித்ரம்
அற்பமு மிருப்பதில்லை, சொற்பமாகிலும்
பொங்கியே முச்சத்துருக்கள் போரினுக் கிழுப்ப தில்லை
புண்ணியனார் சொன்னதிரு உன்னத எருசலையாம் – வான

3. அந்நகர்க் குடிகள் வெண்மையான அலங்காரமான
அர்ச்சய உடுப்பு, சிரமானதிற் கிரீடம்
மன்னவர் போலே அணிந்து மகிமையினாசனத்தில்
வாய்மையாக வீற்றிருப்பர் தூய்மையான அந்த நகல் – வான

4. நேயமுற் பிதாக்கள், தீர்க்கர், நின்மலன் அப்போஸ்தலர்கள்
நீதிமான்கள் எல்லவரும் தூதர் நல்லோரும்
ஓய்வின்றித் தோத்ர கீத உச்சிதத் தொனிமுழக்கி
உன்னதனைப் போற்றுவார்கள், பன்னரும் சிறப்பதுள்ள – வான

*– ஞா. சாமுவேல்*

அட்டவணை

# V. சிறப்புத் தினங்கள்

## 1. தோத்திரப் பண்டிகை

**358** Requiem **பா.226**

A.M.368 III 8,7,8,7,7,7

**1. காலந்தோறும் தயவாக**
தேவரீர் அளித்திடும்
பலவித நன்மைக்காக
என்ன ஈடுதான் தகும்?
எங்கள் வாயும் உள்ளமும்
என்றும் உம்மைப் போற்றிடும்.

2. மாந்தர் பண்படுத்தி வித்தைப்
பூமியில் விதைக்கிறார்
கர்த்தரே அன்பாக அதை
முளைத்தோங்கச் செய்கிறார்
ஏற்ற காலம் மழையும்
பெய்து பூண்டை நனைக்கும்.

3. உம்முடைய சித்தத்தாலே
காற்று வெயில் வீசுமே
கால மழை பனியாலே
பயிர்கள் செழிக்குமே
உழுவோர் பிரயாசம் நீர்
சித்தியாகச் செய்கிறீர்.

4. ஆதலால் மகிழ்ந்து நாங்கள்
உம்மை அன்பாய்த் துதிப்போம்
தாழ்மையோடு உமக்கெங்கள்
நெஞ்சத்தையே படைப்போம்
தேகம் போஷிக்கின்ற நீர்
ஆவியையும் போஷிப்பீர்.

அட்டவணை

**359** We plough the fields and scatter **பா.227**

A.M.383 *Wir pflugen* 7,6,7,6 D

1. **வயல் உழுது தூவி**
நல் விதை விதைப்போம்
கர்த்தாவின் கரம் அதை
விளையச் செய்யுமாம்;
அந்தந்தக் காலம் ஈவார்
நற்பனி மழையும்
சீதோஷ்ணம் வெயில் காற்று
அறுப்பு வரையும்.

நல் ஈவுகள் யாவும்
ஈபவர் கர்த்தரே
துதிப்போம் என்றும் துதிப்போம்
அவர் மா அன்பையே.

2. விண் வானம் ஆழி பூமி
அவரே சிருஷ்டித்தார்
புஷ்பாதி விண் நட்சத்திரம்
பாங்காய் அமைக்கிறார்
அடக்கி ஆழி காற்று
உண்பிப்பார் பட்சிகள்
போஷிப்பிப்பார் அன்றன்றும்
மைந்தாராம் மாந்தர்கள்.

3. நல் ஈவு பலன் பாக்கியம்
விதைப்பு அறுப்பை
ஜீவன் சுகம் ஆகாரம்
தரும் பிதா உம்மைத்
துதிப்போம் அன்பாய் ஏற்பீர்
படைக்கும் காணிக்கை;
யாவிலும் மேலாய்க் கேட்கும்
தாழ்மையாம் உள்ளத்தை.

அட்டவணை

**360** Nun Danket **பா.386**

A.M.379 6,7,6,7,6,6,6,6

1. **சர்வத்தையும் அன்பாய்க்**
காப்பாற்றிடும் கர்த்தாவை,
அநேக நன்மையால்
ஆட்கொண்ட நம் பிரானை
இப்போது ஏகமாய்
எல்லாரும் போற்றுவோம்
மா நன்றி கூறியே,
சாஷ்டாங்கம் பண்ணுவோம்.

2. தயாபரா, என்றும்
எம்மோடிருப் பீராக
கடாட்சம் காண்பித்து
மெய் வாழ்வை ஈவீராக
மயங்கும் வேளையில்
நேர் பாதை காட்டுவீர்
இம்மை மறுமையில்
எத்தீங்கும் நீக்குவீர்.

3. வானாதி வானத்தில்
என்றென்றும் அரசாளும்
திரியேக தெய்வத்தை
விண்ணோர் மண்ணோர் எல்லோரும்
இப்போதும் எப்போதும்
ஆதியிற் போலவே
புகழ்ந்து ஸ்தோத்திரம்
செலுத்துவார்களே.

அட்டவணை

**361** *Surrey* **பா.387**

A.M.554 II 8,8,8,8,8,8

1. **ஆ என்னில் நூறு வாயும் நாவும்**
இருந்தால், கர்த்தர் எனக்கு
அன்பாகச் செய்த நன்மையாவும்,
அவைகளால் பிரசங்கித்து
துதிகளோடே சொல்லுவேன்,
ஓயா தொனியாய்ப் பாடுவேன்.

2. என் சத்தம் வானமளவாக
போய் எட்ட வேண்டும் என்கிறேன்;
கர்த்தாவைப் போற்ற வாஞ்சையாக
என் ரத்தம் பொங்க ஆசிப்பேன்;
ஒவ்வொரு மூச்சும் நாடியும்
துதியும் பாட்டுமாகவும்.

3. ஆ, என்னில் சோம்பலாயிராதே,
என் உள்ளமே நன்றாய் விழி;
கர்த்தாவை நோக்கி ஓய்வில்லாதே
கருத்துடன் ஸ்தோத்திரி;
ஸ்தோத்திரி, என் ஆவியே,
ஸ்தோத்திரி, என் தேகமே.

4. வனத்திலுள்ள பச்சையான
எல்லா வித இலைகளே
வெளியில் பூக்கும் அந்தமான
மலர்களின் ஏராளமே
என்னோடே கூட நீங்களும்
அசைந்திசைந்து போற்றவும்.

அட்டவணை

5. கர்த்தாவால் ஜீவன் பெற்றிருக்கும்
கணக்கில்லா உயிர்களே,
பணிந்து போற்ற உங்களுக்கும்
எந்நேரமும் அடுக்குமே;
துதியாய் உங்கள் சத்தமும்
ஓர்மித் தெழும்பி ஏறவும்.

**362** O for a thousand tongues to sing **பா.388**

A.M.199 *St. James* C.M.

1. **எத்தனை நாவால் பாடுவேன்**
என் மீட்பர் துதியை!
என் ஆண்டவர் என் ராஜனின்
மேன்மை மகிமையை!

2. பாவிக்கு உந்தன் நாமமோ
ஆரோக்கியம் ஜீவனாம்
பயமோ துக்க துன்பமோ
ஓட்டும் இன்கீதமாம்

3. உமது சத்தம் கேட்குங்கால்
மரித்தோர் ஜீவிப்பார்
புலம்பல் நீங்கும் பூரிப்பால்
நிர்ப்பாக்கியர் நம்புவார்.

4. ஊமையோர், செவிடோர்களும்,
அந்தகர், ஊனரும்,
உம் மீட்பர்! போற்றும்! கேட்டிடும்!
நோக்கும்! குதித்திடும்!

5. என் ஆண்டவா, என் தெய்வமே,
பூலோகம் எங்கணும்
பிரஸ்தாபிக்க உம் நாமமே
பேர் அருள் ஈந்திடும்.

அட்டவணை

**363** Semper / Aspectemus **பா.389**

A.M.461 C.M.

1. **தூதாக்கள் விண்ணில் பாடிய**
தயாபரருக்கே
துதி செலுத்து, சகல
நரரின் கூட்டமே.

2. மா செயல்களைச் செய்கிற
பராபரனைப் போல்
ஆர்? என்றவரை உத்தம
கருத்தாய்ப் போற்றுங்கள்.

3. இந்நாள் வரைக்கும் நமக்கு
சுகம் அருளினார்
நீங்கா இக்கட்டைத் தமது
கரத்தால் நீக்கினார்.

4. நாம் செய்திருக்கும் பாவத்தைப்
பாராதிருக்கிறார்
தெய்வீக ஆக்கினைகளை
அன்பாய் அகற்றினார்.

5. இனியும் நாம் மகிழ்ச்சியாய்
இருக்கச் சகல
தீங்கையும் அவர் தயவாய்
விலக்கியருள.

6. புவியில் சமாதானத்தை
அவர் தந்தென்றைக்கும்
அன்பாய் நாம் செய்யும் வேலையை
ஆசீர்வதிக்கவும்.

7. நம்மோடே அவர் தயவாய்
இருந்து, துக்கமும்
வியாகுலமும் தூரமாய்
விலகப் பண்வும்.

அட்டவணை

8. நாம் சாகுமட்டுக்கும், கர்த்தா
நாம் தங்கும் கோட்டையும்
நாம் சாகும்போது நம்முட
கதியுமாகவும்.

9. பிரிந்து போகும் ஆவியை
மோட்சானந்தத்திலே
அவர் சேர்த்ததைத் தம்மண்டை
மகிழ்ச்சியாக்கவே.

**364** O Lord of heaven and earth **பா.391**

A.M.365 *Almsgiving* 8,8,8,4

1. **விண் மண்ணை ஆளும் கர்த்தரே,**
எவ்வாறு உம்மை நேசித்தே
துதிப்போம்? நன்மையாவுமே
நீர் ஈகிறீர்.

2. உம் அன்பைக் கூறும் மாரியும்
வெய்யோனின் செம்பொன் காந்தியும்,
பூ, கனி, விளை, பயிரும்,
எல்லாம் ஈந்தீர்.

3. எம் ஜீவன், சுகம், பெலனும்,
இல் வாழ்க்கை, சமாதானமும்,
பூலோக ஆசீர்வாதமும்
எல்லாம் ஈந்தீர்.

4. சீர்கெட்ட மாந்தர் மீள நீர்
உம் ஏக மைந்தனைத் தந்தீர்;
மேலும் தயாள தேவரீர்
எல்லாம் ஈந்தீர்.

அட்டவணை

5. தம் ஜீவன், அன்பு, பெலனை
ஏழாம் மா நல் வரங்களை
பொழியும் தூய ஆவியை
அருள்கிறீர்.

6. மன்னிப்பும் மீட்பும் அடைந்தோம்
மேலான நம்பிக்கை பெற்றோம்;
பிதாவே பதில் என் செய்வோம்?
எல்லாம் ஈந்தீர்.

7. தன்னயம் நஷ்டமாகுமே
உமக்களிக்கும் யாவுமே
குன்றாத செல்வம் கர்த்தரே
எல்லாம் ஈந்தீர்.

8. தர்மத்தைக் கடன் என்பதாய்
பதில் ஈவீர் பன்மடங்காய்;
இக்காணிக்கையைத் தயவாய்
ஏற்றுக்கொள்வீர்.

9. உம்மாலே பெற்றோம் யாவையும்
தர்மத்தைச் செய்ய ஆசையும்
உம்மோடு நாங்கள் வாழவும்
அருள் செய்வீர்.

**365** **கி.கீ.273**

*பியாகு* *ரூபகதாளம்*

***பல்லவி***

**ஆண்டவர் பங்காகவே, தசம பாகம்**
அன்பர்களே, தாரும் – அதால் வரும்
இன்பந்தனைப் பாரும்.

அட்டவணை

### அனுபல்லவி

வான்பல கணிகளைத் திறந்தாசீர்
வாதங்கள் இடங்கொள்ளாமற் போகுமட்டும்
நான் தருவேன், பரிசோதியுங்களென்று
ராஜாதிராஜ சம்பூரணர் சொல்வதால் – ஆண்டவர்

### சரணங்கள்

1. வேதாளராஜன் அருஞ்சிறை மீட்டாளும்
விண்ணவர் கோமானே – அந்த
மேதகத்தை நன்றி ஞாபகஞ் செய்திட
விதித்தது தானே
வேதனம் வியாபாரம், காலி, பறவையில்
வேளாண்மை, கைத்தொழில், வேறு வழிகளில்
ஊதியமாகும் எதிலும் அவர் பாகம்
உத்தமமாகப் பிரதிஷ்டை பண்ணியே. – ஆண்டவர்

2. ஆலயங் கட்ட அருச்சனை செய்ய
அதற்குளதைப் பேண – தேவ
ஊழியரைத் தாங்கி உன்னத போதனை
ஓதும் நன்மை காண
ஏழைகள், கைம்பெண்கள், அனாதைப் பாலகர்
ஏதுகரமற்ற ஊனர், பிணியாளர்
சாலவறிவு நாகரீக மற்றவர்
தக்க துணைபெற்றுத் துக்கமகன்றிட – ஆண்டவர்

3. நம்மைப் படைத்துச் சுகம் பெலன் செல்வங்கள்
யாவும் நமக்கீந்து – நல்ல
இம்மானுவே லென்றொரு மகனைத் தந்து
இவ்வா றன்புகூர்ந்து
நன்மை புரிந்த பிதாவைக் கனம் பண்ண
நம்மையும் நம்முடயாவையு மீந்தாலும்
சம்மததே அதிலும் தசம பாகம்
தாவென்று கேட்கிறார்; மாவிந்தை யல்லவோ? – ஆண்டவர்

*– ஜி.சே. வேதநாயகம்*

அட்டவணை

**366** **கி.கீ.274**

*பியாகு* *ஆதிதாளம்*

***பல்லவி***

**நீதியாமோ? நீ சொல்லும் – ஓய்!**
நெறியுளோரே, அறம் செய்யாதிருந்திடில், – நீதி

***சரணங்கள்***

1. ஆதுலர்க் கீவதே பாக்யிம் – பிறரை
ஆதரித்திடுவதே யோக்கியம் – ஓகோ!
பாதகம் செய்யில் நிர்பாக்கியம் – மோட்ச
பாதை நடக்கில் சிலாக்கியம். – நீதி

2. தரித்திரர்க் கிரங்குவோன் உடனே – இடுவான்
தற்பரனுக் கவன் கடனே – என்று
கருத்துடன் சுருதியில் திடனே – உரைத்தார்
கடுநெஞ் சகல மானிடனே. – நீதி

3. அன்புடன் விதவையும் போட்ட – காசை
அதி வியப்பாய் யேசு காட்டப் – புகழ்
இன்புடன் அவள் மிசை சூட்ட – அதை
எவர்களும் அகத்தினில் நாட்ட. – நீதி

4. பிறர் புகழும்படி இன்றே – செய்தால்
பிரயோசனமில்லை என்றே, – பரன்
மறையதில் விளம்பினார் நன்றே; – அம்
மாதிரி விலகாது நின்றே. – நீதி

5. பரிதானம் வாங்குதல் தீது – அதைப்
பறித்தறம் செய்தல் தகாது – உமக்
குரியதில் ஈவது போதம் – இதில்
ஊன்றி இருப்பதே நீதம். – நீதி

அட்டவணை

6. ஏழைகளுக் கீயாது ஆஸ்தி – ஐயே
ஈண்டு சேர்த்திடில் என்ன கீர்த்தி – இதோ?
வாழுல கடைந்திடில் நேர்த்தி – என்றும்
வாழலாம், அதுவே மா பூர்த்தி. – நீதி

*–ச. யோசேப்பு*

**367** **கி.கீ.357**

*யமுனா கல்யாணி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தோத்திரப்பண்டிகை ஆசரிப்போமே**
தூயகம் ஊறிய பக்தியால் நாமே. – தோத்திர

***சரணங்கள்***

1. பாத்திரம் இதுவெனப் பகர் உடல் பொருளாவி,
பரமனுக் கர்ப்பணஞ்செய் பரிவு நிறைய மேவித். – தோத்திர
2. பனித்துளி நிலத்தினைப் பண்படுத்தினதன்றே,
பகரு முகில் கொழுமைப் படுத்திய தெண்ணி நன்றே. – தோத்திர
3. கடவுளே பயிருக்குக் கனமழை பெய்வித்தாரே,
காங்கையால் கதிர்வளம் கதிக்கவும் உய்வித்தாரே. – தோத்திர
4. நெஞ்சத்தில் தெய்வ அன்பாம் நிதிநிகர் விதை பெய்து
நித்திய சமாதானம் நிறுவ விண்ணப்பம் செய்து. – தோத்திர
5. இறைவன் இரத்தக் கையால் இரட்சண்யம் அருள் வித்தை
இதயத்தில் விதைத்ததற் கின்குணப் பலன் வைத்துத். – தோத்திர

*–சா. மாசிலாமணி ஆசிரியர்*

**368** **கி.கீ.275**

*துஜாவந்தி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**கர்த்தருக்குக் காணிக்கையிதோ! தம்மையே தந்த**
கர்த்தருக்குக் காணிக்கை! இதோ!

அட்டவணை

### *அனுபல்லவி*

கர்த்தருக்குக் காணிக்கையாய்ப்
பத்திலொன்று நான் கொடுப்பேன்
சத்ய கிறிஸ்து நாதர்
சபையை வர்த்திக்கவேணும் – கர்த்தருக்கு

### *சரணங்கள்*

1. அநியாயம் நீங்க வேணும் – உலகிலே மெய்
அறிவு வளர வேணும்
தனியேக மெய்த்தேவனை – நற்தேசத்தில்
சகலரும் போற்ற வேணும்

கனிவாய்ப் போதகர் வேதம்
கற்றறிந்து சொல்லவேணும்
கணக்காய் இதன் செலவு
கட்டி வரவேணும், அய்யா. – கர்த்தருக்கு

2. ஆபிரகாம் பத்திலொன்றையே – மெல்கிசேதேக்குக்கு
அனைத்திலும் தந்ததையே.
மா பிரியமாக வாசித்தேன் – இஸ்ரயேல் பெத்தேல்
வள்ளற்குச் செய் பொருத்தனையே

ஆண்டவர் பரன் அவர்கட்
கனைத்தும் ஆசீர்வதித்துத்
தாபரம் தமதடி கீழ்த்
தத்தளித்த தெல்லாங் கேட்டேன். – கர்த்தருக்கு

3. கொஞ்சங் கொஞ்சமாகச் சேர்த்தேன் – இதோ இத்தனை
கூடினதைக் கொண்டிதோ வந்தேன்
நஞ்சை விளை வினிலோர் பாகம் – சேர்த்து வைத்தேனான்
நாலாவகை வரத்திற் கொஞ்சம்

புஞ்சை பல போகத்திலும்
போட்டு வைத்தேனான் குறுணி
புத்தகக் கணக்கில் கண்ட
தித்தனைத் தொகையுமாச்சு. – கர்த்தருக்கு

**369** **வ.தி.நூ.236**

*பல்லவி*

**கர்த்தருக்குக் காணிக்கை பக்தியாய் கொண்டு வாரும்**
அத்தன் கிறிஸ்து நம்மை ஆசீர்வதிப்பார் நித்தம்.

1. திருச்சபையோரே நீங்கள் தேவ சன்னிதி
வரும்போது வெறுங்கையாய் – வரவொண்ணா தென்றுணர்ந்து

2. தசமபாகங்களெல்லாம் சுவாமி பண்டசாலைக்கு
நிசமதாகவே–கொடும் நன்மை மிகப் பெறுவீர்.

3. சிறுக விதைக்கிறவன் சிறுகவே தானறுப்பான்
பெருக விதைக்கிறவன் பெருகவே தானறுப்பான்.

4. அவனவன் விசனமும் அலட்டுதலோடுமல்ல
அமலன் அன்பு கூரவே அகமகிழ்வோடு தானே.

5. நெல் கம்பு கேப்பை சோளம் புல் காடைக்கண்ணி சாமை
வெல்லம் பருத்தி வற்றல் வெங்காயம் பயறுகள்.

6. தேங்காய் கிழங்கு மல்லி தேன் நெய் காய்கனிகளும்
பாங்காய் நீ செய்து வரும் பல வேலைப் பொருள்களும்.

7. துட்டு ரூபாய் நகைகள் பட்டு நெசவுப் பொருள்
முட்டை கோழி புறாக்கள் மாடு கிடாயாடுகள்.

8. யாவிலும் மேலான தாய் தேவனுக்கேயுமது
ஆவி ஆத்துமா சரீரம் யாவும் படைத்தே இப்போ.

9. மனுசர் உங்கள் நற்கிரியை மதித்து மகா தேவனை
மகிமைப்படுத்த உங்கள் வெளிச்சம் பிரகாசிக்க.

அட்டவணை

**370** **கி.கீ.276**

*முகாரி* *ஆதிதாளம்*

### *பல்லவி*

**காணிக்கை தருவாயே – கர்த்தருக்குனது**
காணிக்கை தருவாயே

### *அனுபல்லவி*

காணிக்கை தா உனக்காய் ஆணிக் குரிசி லேசு
வேணும் ரட்சிப்பினை நீ காணும்படி செய்ததால் – காணிக்கை

### *சரணங்கள்*

1. பத்தில் ஒரு பங்குதானோ – பத்தினில் கட்டுப்
பட்ட யூதருக்கல்லவோ?
அத்தன் உனக்களித்த அளவை உட்கார்ந்து பார்த்தால்
பத்தில் ஒரு பங்கல்ல, பலமடங்காகிடாதோ? –காணிக்கை

2. உன்றன் உடல் உன் சொந்தமோ? – அதை விடினும்
உன்மனம் ஆவி பந்தமோ?
அன்னவன் உடைய தென்றறிந்து உணர்வாயானால்
உன்னையும் உன்னுடைய உடைமையுமல்லோ ஈவாய் –காணிக்கை

3. தேவ வசனம் பரப்ப – அதனுக்கென்று
செல்லும் செலவை நிரப்ப
ஆவலாய் யேசுவுக்கே ஆராதனை நடத்தும்
தேவ ஊழியத்துக்கும் திறந்தமனதுடனே –காணிக்கை

4. பயிர் பலன் மூலமாகவும் – இன்றும் பலர்க்குப்
பணம் முதலானதாகவும்
உயிர்ப் பிராணியாகவும் உதவும் கடவுளுக்கே
உயிரைப் படைப்பாயோ, உடைமையைக் கொடாவிடில் –காணிக்கை

*–ல. பொன்னுசுவாமி*

அட்டவணை

**371**

**கர்த்தர் சிருஷ்டித்த சகல சிருஷ்டிகளே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**வானங்களே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**மழையே, பனியே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**தேவனுடைய காற்றுகளே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**அக்கினியே, உஷ்ணமே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**மாரிகாலமே, கோடை காலமே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**இரவே, பகலே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**ஒளியே, இருளே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**மின்னல்களே, மேகங்களே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

அட்டவணை

**மலைகளே, குன்றுகளே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**பூமியில் முளைத்தெழும்பும் எல்லாத் தாவரங்களே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**ஆகாயத்துச் சகல பறவைகளே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**காட்டு மிருகங்களே, நாட்டு மிருகங்களே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**மனுக்களே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**கர்த்தரின் ஊழியக்காரரே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**நீதிமான்களின் ஆவிகளே, ஆத்துமாக்களே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

**பரிசுத்தமும் தாழ்மையுமுள்ள இருதயமுடைய மனிதர்களே;**
கர்த்தரைப் போற்றி, போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

*பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும்*
*மகிமை உண்டாவதாக.*

*ஆதியிலும், இப்பொழுதும், எப்பொழுதுமான சதாகாலங்களிலும்*
*மகிமை உண்டாவதாக ஆமென்.*

அட்டவணை

**372** **ஞா.பா.255**

1. **சங்கம் கூடி ஏழைக்கென்று**
நல் விவேகத்துடனே
அறஞ் செய்யும் குணம் நன்று,
அதைத்தாரும், தேவனே;
ஆஸ்தியுள்ளவர்கள் வந்து
மா உதாரத்துடனே
ஏழைகள் மேல் தயை வைத்து
நன்மை செய்ய ஏவுமே.

2. நேசம் காட்டி ஓர் விதவை
நல்ல மனதுடனே
எளிமையில் போட்டகாசை
மேன்மையாய்ப் புகழ்ந்தீரே;
தேவனே, உம்மாலே நாங்கள்
நன்றாய் காக்கப்பட்டோமே
இம்மைக்கேற்ற பாக்கியங்கள்
உம்மால் பெற்றுக் கொண்டோமே!

3. நாதா, நீர் பொழிந்த அருள்
நாங்கள் எண்ணி, அவ்வாறே
எங்கள் சொந்தமான பொருள்
வறியோர்க்கு ஈயவே
தேவரீருக் கேற்றதான
தர்ம சிந்தை நிறைவாய்
எங்களுக்கிப் போதுண்டாக
ஏதும் மா கடாட்சமாய்.

அட்டவணை

# 2. புதுமனை புகுவிழா

**373** **கி.கீ.370**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தேவா இவ்வீட்டில் இன்றே மேவி எழுந்து வரவே – தயை**
செய்வாய் எமது கோவே!

***சரணங்கள்***

1. மூவர் ஒருவரான தேவா – கிறிஸ்து நாதா, எங்கள்
முன்னவா சத்ய வேதா!
பூவில் எமக்குதவி யாருமில்லை எம் தாதா – யேசு
புண்ணியனே மா நீதா! – இங்கு
நண்ணுவாய், மெய்ப் போதா – தயை
பண்ணுவாய் வினோதா!
மேவி உனதருளை ஈவாய் இவ்வீட்டின் மீது
ஜீவனே, யேசு கோனே – ஏழைப்
பாவிகள் மீட்பன் தானே – தேவா

2. விந்தையுடன் களிப்பும் சந்தமுடன் உண்டாக – அதி
மேன்மையுடன் சிநேகம்
அந்தமுடன் பெருகி எந்தப் பாவமும் ஏக – என்றும்
அத்தனோ டுறவாக – ஜெப
துந்துமிகள் முழங்க – ஐக்யம்
பந்தமுடன் இலங்க,
தந்தைப் பரனே, இன்று உன்றன் அருள் நிறைவாய்ச்
சொந்தமுடன் ஈவாயே – இவர்
சந்ததம் வாழ நீயே – தேவா

அட்டவணை

3. இங்கு வசிக்கும் மட்டும் துங்கன் மொழிக் கிசைந்தே – பரன்
இஷ்டப்படி நடந்தே,
அங்கம் மனது யாவும் பங்கம் இன்றித் தொடர்ந்தே – இவர்
அனுதினமும் மகிழ்ந்தே – உயர்
அம்பர வீட்டில் சேர்ந்து – மிகு
கெம்பீரமாக வாழ்ந்து
புங்கமுடன் நிதமும் தங்கி யேசு பரனில்
இங்கிதமாய்க் கொண்டாட – நிதம்
மங்களக் கவி பாட – தேவா

*–ச. யோசேப்பு*

## 3. துன்ப காலம்

**374** **கி.கீ.367**

*மணிரங்கு* *ரூபகதாளம்*

***பல்லவி***

**வாரும், எமது வறுமை நீக்க**
வாரும், தேவனே; – மழை தாரும் ஜீவனே

***சரணங்கள்***

1. பாரில் மிகுக்கும் வருத்தத்தாலே
பாடும் நீண்டதே வெகு கேடும் நீண்டதே – வாரும்

2. நட்டபயிர்கள் மழை இல்லாமல்
பட்டுப் போச்சுதே மிகக் கஷ்டம் ஆச்சுதே – வாரும்

3. பச்சை மரங்கள் கனிகள் இன்றிப்
பாறிப்போச்சுதே அன்னம் பாறல் ஆச்சுதே – வாரும்

4. தரணி யாவும் வெம்மையாலே
ததும்புதே, ஐயா; நரர் தயங்கிறோம் மெய்யாய் – வாரும்

5. கருணையுள்ள நாதனே, இத்
தருணம் வாருமே எங்கள் தயங்கல் தீருமே – வாரும்

*–ச. யோசேப்பு*

அட்டவணை

**375** **கி.கீ.369**

*அமிர்தகல்யாணி* *சாபுதாளம்*

***பல்லவி***

**தேவா எனைமறக்காதே – இந்தச்**
சிறியன் படுந்துயரில் தூரநிற்காதே

***அனுபல்லவி***

நேயா உனையன்றி நீசனுக்கார் கதி?
தூயா கிருபைகூர், நான் மகாதோஷி – தேவா

***சரணங்கள்***

1. வானுலகோர்தொழும் நாதா – இந்த
மானிடர் கரையேற வந்தசகாயா!
காலை மாலைகள் தோறும் கரைந்து உருகுகின்ற
கர்ம சண்டாளனைக் கண்ணோக்க லாகாதா? – தேவா

2. பாவியின் மேலிரங்கையா! பொல்லாப்
பாதகனைக் கைவிடாதே நலமெய்யா!
தாரணி தன்னில் தவிக்குமிவ்வேழையைத்
தாங்கியாதரித்துந்தன் தயைபுரி ஐயா! – தேவா

3. என் மீறுதல் நினையாதே, எந்தன்
இளமையின் பாவத்தை மனதில் வையாதே
உன்பாதஞ் சேர்ந்தேன் உவந்தேனுனையடைந்தேன்
நின் பாதந்தானே நிலையாகக் கண்டேன் – தேவா

4. நெருக்கப்படுகிறேன் தேவா – என்னை
உருக்கமாய்ப் பாராய் கிறிஸ்தேசுநாதா!
இரக்கம் வைத்தென்றனின், குறைதனை நீக்கு,
என்னை ஆட்கொண்டவா, இயேசு சர்வேசா – தேவா

5. சரணம், சரணம் சருவேசா! – இந்தத்
தருணம் தருணம் உன்றன் கருணை கூர் நேசா!
மரண வேளையிலும் நடுத்தீர்வை தினத்திலும்
மா பாதகன் என்னை ரட்சியாய் நாதா! – தேவா

*–ஆ. தேவதாசன்*

அட்டவணை

# 4. பாலர் ஞாயிறு

**376** Jesus is our shepherd **பா.237**

S.S. 1153 *Goshen* 6,5,6,5, D

1. **இயேசு எங்கள் மேய்ப்பர்**
கண்ணீர் துடைப்பார்
மார்பில் சேர்த்தணைத்து
பயம் நீக்குவார்
துன்பம் நேரிட்டாலும்
இன்பம் ஆயினும்
இயேசுவின்பின் செல்வோம்
பாலர் யாவரும்.

2. நல்ல மேய்ப்பர் சத்தம்
நன்றாய் அறிவோம்
காதுக்கின்பமாகக்
கேட்டுக் களிப்போம்
கண்டித்தாலும் நேசர்
ஆற்றித் தேற்றுவார்
நாங்கள் பின்னே செல்ல
வழி காட்டுவார்.

3. ஆட்டுக்காக மேய்ப்பர்
ரத்தம் சிந்தினார்
அதில் மூழ்கினோரே
தூயர் ஆகுவார்
பாவ குணம் நீக்கி
முற்றும் ரட்சிப்பார்
திவ்விய தூய சாயல்
ஆக மற்றுவார்.

அட்டவணை

4. இயேசு நல்ல மேய்ப்பர்
ஆட்டைப் போஷிப்பார்
ஓநாய்கள் வந்தாலும்
தொடவே ஒட்டார்
சாவின் பள்ளத்தாக்கில்
அஞ்சவே மாட்டோம்
பாதாளத்தின் மேலும்
ஜெயங் கொள்ளுவோம்.

**377** Jesus Loves me this I know **பா.238**

S.S. 1155 7,7,7,7

1. **இயேசு என்தன் நேசரே,**
கண்டேன் வேத நூலிலே
பாலர் அவர் சொந்தந்தான்
தாங்க அவர் வல்லோர்தான்.

இயேசு என் நேசர்,
இயேசு என் நேசர்,
இயேசு என் நேசர்,
மெய் வேத வாக்கிதே.

2. என்னை மீட்க மரித்தார்,
மோட்ச வாசல் திறந்தார்,
என்தன் பாவம் நீக்குவார்,
பாலன் என்னை ரட்சிப்பார்.

3. பெலவீனம் நோவிலும்,
என்றும் என்னை நேசிக்கும்,
இயேசு தாங்கித் தேற்றுவார்,
பாதுகாக்க வருவார்.

4. என்தன் மீட்பர் இயேசுவே,
தாங்குவார் என்னருகே;
நேசனாய் நான் மரித்தால்,
மோட்சம் சேர்ப்பார் அன்பினால்.

அட்டவணை

**378** Jesus Loves birds us shine **பா.239**

S.S. 1188 5,5,6,5,6,5,6,5

1. **இயேசு கற்பித்தார்**
ஒளி வீசவே,
சிறு தீபம் போல
இருள் நீக்கவே;
அந்தகார லோகில்
ஒளி வீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும்
பிரகாசிப்போம்.

2. முதல் அவர்க்காய்
ஒளி வீசுவோம்,
ஒளி மங்கிடாமல்
காத்துக்கொள்ளுவோம்;
இயேசு நோக்கிப் பார்க்க
ஒளி வீசுவோம்
அங்கும் இங்கும் எங்கும்
பிரகாசிப்போம்.

3. பிறர் நன்மைக்கும்
ஒளி வீசுவோம்;
உலகின் மா இருள்
நீக்க முயல்வோம்;
பாவம் சாபம் யாவும்
பறந்தோடிப்போம்;
அங்கும் இங்கும் எங்கும்
பிரகாசிப்போம்.

அட்டவணை

**379** Eudoxia **பா.241**
A.M. 346 6,5,6,5

**1. சின்னப் பரதேசி**
மோட்சம் நாடினேன்;
லோகத்தின் சிற்றின்பம்
வெறுத்து விட்டேன்.

2. முத்தி அடைந்தோரைப்
பாவம் சேராதே
துக்க சத்தம் அங்கே
என்றும் கேளாதே

3. சின்னப் பரதேசி
இங்கே சீர்ப்படேன்;
அங்கே வெள்ளை அங்கி
தரித்துக்கொள்வேன்.

4. என்னைச் சுத்தமாக
காரும், இயேசுவே;
தினம் வழி காட்டும்,
தெய்வ ஆவியே

5. சாந்த இயேசு ஸ்வாமீ
உம்மை நேசிப்பேன்;
என்றும் உந்தன் சீஷன்
ஆகப் பார்க்கிறேன்.

**380** All things bright and beautiful **பா.243**
A.M. 573 7,6,7,6

**நேர்த்தியானதனைத்தும்**
சின்னம் பெரிதெல்லாம்
ஞானம், விந்தை ஆனதும்
கர்த்தாவின் படைப்பாம்.

1. பற்பல வர்ணத்தோடு
மலரும் புஷ்பமும்
இனிமையாகப் பாடி
பறக்கும் பட்சியும்.

அட்டவணை

2. மேலோர், கீழானோரையும்,
தத்தம் ஸ்திதியிலே,
அரணில், குடிசையில்
வசிக்கச் செய்தாரே.

3. இலங்கும் அருவியும்
மா நீல மலையும்
பொன் நிற உதயமும்
குளிர்ந்த மாலையும்.

4. வசந்த காலத் தென்றல்
பூங்கனித் தோட்டமும்
காலத்துக்கேற்ற மழை
வெய்யோனின் காந்தியும்.

5. மரமடர்ந்த சோலை
பசும் புல் தரையும்
தண்ணீர்மேல் தாமரைப்பூ
மற்றெந்த வஸ்துவும்.

6. ஆம் சர்வவல்ல கர்த்தா
எல்லாம் நன்றாய்ச் செய்தார்
இதை நாம் பார்த்துப் போற்ற
நாவையும் சிஷ்டித்தார்.

**381** There's Friend for little children **பா.245**

G.B.640 8,6,7,6,7,6,7,6

1. **பாலரே, ஓர் நேசர் உண்டு**
விண் மோட்ச வீட்டிலே;
நீங்கா இந்நேசர் அன்பு
ஓர் நாளும் குன்றாதே.
உற்றாரின் நேசம் யாவும்
நாள் செல்ல மாறினும்
இவ்வன்பர் திவ்விய நேசம்
மாறாமல் நிலைக்கும்.

அட்டவணை

2. பாலரே, ஓர் வீடு உண்டு
விண் மோட்ச நாட்டிலே
பேர் வாழ்வுண்டாக இயேசு
அங்கரசாள்வாரே;
ஒப்பற்ற அந்த வீட்டை
நாம் நாட வேண்டாமோ?
அங்குள்ளோர் இன்ப வாழ்வில்
ஓர் தாழ்ச்சிதானுண்டோ!

3. பாலரே, ஓர் கிரீடம் உண்டு
விண் மோட்ச வீட்டில் நீர்
நல் மீட்பரின் பேரன்பால்
பொற் கிரீடம் அணிவீர்;
இப்போது மீட்பைப் பெற்று
மா நேசர் பின்சென்றார்;
இவ்வாடா ஜீவ கிரீடம்
அப்போது சூடுவார்.

4. பாலரே, ஓர் கீதம் உண்டு
விண் மோட்ச வீட்டிலே
மா ஜெய கீதம் பாட
ஓர் வீணையும் உண்டே;
அந்நாட்டின் இன்பம் எல்லாம்
நம் மீட்பர்க்குரிமை;
நீர் அவரிடம் வாரும்
ஈவார் அவ்வின்பத்தை.

**382** **கி.கீ.321**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**பாலர் ஞாயிறிது, பாசமாய் வாரும்;**
பாடி இயேசு நாமம் பணிந்து போற்றும்.

அட்டவணை

***அனுபல்லவி***

தாலந்தை புதைத்திடாமல் தாமதமே பண்ணிடாமல்
ஞாலமீதிறங்கி வந்த சுவாமி இயேசு அன்பாய் எண்ணிப் – பாலர்

***சரணங்கள்***

1. பாலர் சங்கத்தாலே மாட்சிமை பெற்றோம்
பாலர் நேசர் பதம் பணியக்கற்றோம்
பாரில் ஜோதி வீசுகின்ற பரிசுத்த வேதம் கற்றோம்
ஊரில் எங்கும் நம் பஞ்சாங்கம் ஓதும் பாலியர் நேசன்
கண்டோம் – பாலர்

2. தேடி வந்தலையும் தேசிகருண்டு
பாடி ஆர்ப்பரிக்க பாலர் பாட்டுண்டு
கூடி வந்து ஆனந்திக்கக் கூட்டப் பண்டிகையுமுண்டு
நாடி மீட்பர் பாதம் பாலர் தேட எல்லா ஏதுமுண்டு. – பாலர்

3. இன்று மட்டும் நம்மை ஏந்தி வந்தாரே
இன்னும் நித்யமும் பாதுகாப்பாரே
அன்பின் சங்கம் இதைக் கொண்டு ஆத்ம நேசர் செய்துவரும்
எண்ணி முடியா நன்மையை ஏகமாக எண்ணிக்கொண்டு – பாலர்

*–சா. பரமானந்தம்*

**383** **ஞா.பா.300**

1. **இங்கே நொந்து கொள்கிறோம்**
**கூடிப் பின்பு நீங்குவோம்**
**அங்கென்றும் நீங்கிடோம்.**

**ஆ, அதுவே இன்பம்**
**இன்பம், இன்பம், இன்பம்**
**ஆ, அதுவே இன்பம்**
**விண்ணில் என்றும் தங்குவோம்.**

அட்டவணை

2. தேவதாசர் யாவரும்
தூய மோட்ச வாசரும்
அங்கொன்றாய்ப் பாடுவோம் - ஆ, அது

3. பள்ளிக் கூடம் எங்கிலும்
உள்ள நல்ல பாலரும்
அங்கென்றும் தங்குவார். - ஆ, அது

4. எங்கள் நல் உபாத்திமார்
நேசமுள்ள குருமார்
நீங்காமல் தங்குவார். - ஆ, அது

5. மா சந்தோஷங் கொள்ளுவோம்
யேசுவை நாம் காணுவோம்
சிம்மாசனத்தின் மேல். - ஆ, அது

6. அங்கெல்லாரும் கூடுவோம்
கிறிஸ்துவைக் கொண்டாடுவோம்
ஓயாமல் பாடுவோம். - ஆ, அது

## 5. வாலிபர் பாக்கள்

**384** Soldiers of Christ arise **பா.247**

A.M. 270 *St. Ethelwald* S.M.

1. **கிறிஸ்துவின் வீரரே**
சர்வாயுதத்தையும்
கர்த்தர் ஈயும் பலத்தாலே
எழுந்தணிந்திடும்.

2. அத்திவ்விய பலத்தால்
வல்லமை அடைந்தார்,
சேனைக் கர்த்தாவை நம்பினால்
மெய் வீரர் ஆகுவார்.

3. அவர் மா பலத்தால்
ஸ்திரமாய் நின்றுமே
சர்வாயுதத்தைக் கர்த்தரால்
தரித்துக் கொள்ளுமே.

4. இருளின் சக்தியை
மிதித்து வெல்லவும்,
பலத்தின் மேலும் பலத்தை
அடைந்து போர் செய்யும்.

5. போர் ஓய்ந்து, வேலையை
முடித்த பின்னர் நீர்
கிறிஸ்துவால் வாடா கிரீடத்தை
அணிந்து கொள்ளுவீர்.

6. பிதாவும் ஆவியும்
உம்மோடு இயேசுவே
திரியேக தெய்வமாய் என்றும்
மகிமை ஏற்பாரே.

**385** We're soldiers of the king **பா.248**
S.S.684 D.S.M.

1. **கிறிஸ்துவின் வீரர் நாம்**;
ரத்தத்தால் மீட்டாராம்
இப்போது சேனை சேர்ந்து நாம்
அவர்க்காய்ப் போர் செய்வோம்
அபாயத்தினூடும்
மகிழ்ந்து பாடுவோம்
தம் வீரரை நடத்துவோர்
நெஞ்சில் திடன் ஈவார்.

கிறிஸ்துவின் – (வீரர்) – வீரர் நாம்
புகழ்ந்து – (போற்றி) – போற்றுவோம்
நம் மேன்மையுள்ள ராஜனை
எக்காலும் சேவிப்போம்.

அட்டவணை

2. கிறிஸ்துவின் வீரர் நாம்,
அவரின் பேர் நாமம்
சிலுவை மேலாய் நின்றதாம்,
மாண்போடு தாங்குவோம்
நஷ்டமும் லாபமே
எந்நோவும் இன்பமே,
அவரின் நாமம் ஏற்றிடும்
கிறிஸ்துவின் வீரர்க்கே.

3. கிறிஸ்துவின் வீரராய்
அவர்க்காய் சகிப்போம்
வேதனை நிந்தை வெட்கமும்
அவரோடாளுவோம்,
காலம் சமீபமே,
ஓங்கிப் போர் செய்வோமே
மாண்பாகக் கிரீடம் சூடுவோம்
கிறிஸ்துவின் வீரரே.

**386** Stand up Stand up for Jesus **பா.249**
S.S.680 7,6,7,6 D

1. **நல் மீட்பர் பட்சம் நில்லும்**
ரட்சணிய வீரரே,
ராஜாவின் கொடியேற்றிப்
போராட்டம் செய்யுமே
சேனாதிபதி இயேசு
மாற்றாரை மேற்கொள்வார்,
பின் வெற்றி கிரீடம் சூடி
செங்கோலும் ஓச்சுவார்.

அட்டவணை

2. நல் மீட்பர் பட்சம் நில்லும்
எக்காளம் ஊதுங்கால்
போர்க்கோலத்தோடு சென்று
மெய் விசுவாசத்தால்
அஞ்சாமல் ஆண்மையோடே
போராடி வாருமேன்,
பிசாசின் திரள் சேனை
நீர் வீழ்த்தி வெல்லுமேன்.

3. நல் மீட்பர் பட்சம் நில்லும்
எவ்வீர சூரமும்
நம்பாமல் திவ்விய சக்தி
பெற்றே பிரயோகியும்
சர்வாயுதத்தை ஈயும்
கர்த்தாவை சாருவீர்,
எம்மோசமும் பாராமல்
முன் தண்டில் செல்லுவீர்.

4. நல் மீட்பர் பட்சம் நில்லும்
போராட்டம் ஓயுமே
வெம்போரின் கோஷ்டம் வெற்றி
பாட்டாக மாறுமே
மேற்கொள்ளும் வீரர் ஜீவ
பொற் கிரீடம் சூடுவார்,
விண்லோக நாதரோடே
வீற்றரசாளுவார்.

அட்டவணை

**387** One there is above all others **பா.250**

S.S.65 8,4,8,4,8,8,8,4

1. **யாரிலும் மேலான அன்பர்**
மா நேசரே,
தாய்க்கும் மேலாம் நல்ல நண்பர்
மா நேசரே,
மற்ற நேசர் விட்டுப் போவார்
நேசித்தாலும் கோபம் கொள்வார்
இயேசுவோ என்றென்றும் விடார்
மா நேசரே,

2. என்னைத் தேடிச் சுத்தஞ் செய்தார்
மா நேசரே
பற்றிக் கொண்ட என்னை விடார்
மா நேசரே
இன்றும் என்றும் பாதுகாப்பார்
பற்றினோரை மீட்டுக் கொள்வார்
துன்ப நாளில் தேற்றல் செய்வார்
மா நேசரே.

3. நெஞ்சமே நீ தியானம் பண்ணு
மா நேசரை
என்றுமே விடாமல் எண்ணு
மா நேசரை
எந்தத் துன்பம் வந்தும், நில்லு
நேரே மோட்ச பாதை செல்லு
இயேசுவாலே யாவும் வெல்லு,
மா நேசரே.

அட்டவணை

4. என்றென்றைக்கும் கீர்த்தி சொல்வோம்
மா நேசரே,
சோர்வுற்றாலும் வீரங் கொள்வோம்
மா நேசரே,
கொண்ட நோக்கம் சித்தி செய்வார்
நம்மை அவர் சேர்த்துக் கொள்வார்,
மோட்ச நன்மை யாவும் ஈவார்,
மா நேசரே.

**388** **கி.கீ.397**

*கரகரப்ரியை* *ஆதிதாளம்*

***பல்லவி***

**எங்கும் புகழ் யேசு ராசனுக்கே**
எழில் மாட்சிமை வளர் வாலிபரே!

***அநுபல்லவி***

உங்களையல்லவோ உண்மை வேதங் காக்கும்
உயர்வீரரெனப் பக்தர் ஓதுகிறார் – எங்கும்

***சரணங்கள்***

1. ஆயிரத் தொருவர் ஆவிரல்லோ நீரும்
அதை அறிந்து துதி செய்குவீர்
தாயினும் மடங்குசதம் அன்புடைய
சாமி யேசுவிக்கிதயம் தந்திடுவீர் – எங்கும்

2. கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்குக்
கடன்பட்டவர்கள் கண்திறக்கவே,
பல்வழி அலையும் பாதை தப்பினோரைப்
பரிந்து திருப்ப நிதம் பார்த்திடுவீர் – எங்கும்

3. தாழ்மை சற்குணமும் தயை காருண்யமும்
தழைப்பதல்லோ தகுந்த கல்வி?
பாழுந்துர்க்குணமும் பாவச் செய்கையாவும்
பறந்தோடப் பார்ப்பதுங்கள் பாரமன்றோ? – எங்கும்

அட்டவணை

4. சுத்த சுவிசேஷம் துரிதமாய்ச் செல்ல
தூதர் நீங்களே தூயன்வீரரே
கர்த்தரின் பாதத்தில் காலைமாலை தங்கிக்
கருணை நிறை வசனம் கற்றிடுவீர் – எங்கும்

*-ல. பொன்னுசுவாமி*

## 6. வருஷப் பிறப்பு

**389** Austria **பா.78**

A.M.292 I 8,7,8,7 D

1. **ஆண்டவா, உமக்கே ஸ்தோத்ரம்,**
அடியேனைக் காத்தீரே
மீண்டும் என்னை உமக்கேற்ற
சேவை செய்யக் கொள்வீரே,
என் இதயம் மனம் செயல்
யாவும் உம்மைத் துதிக்கும்
ஆண்டவா, உமக்கே ஸ்தோத்திரம்
அடியேனை ஆட்கொள்ளும்.

2. இவ்வுலக வாழ்நாள் எல்லாம்
நான் உமக்காய் வாழவும்,
அன்பு, தியாகம், அருள், பக்தி
அனைத்தும் பெற்றோங்கவும்,
பாவ அழுக்கெல்லாம் நீக்கி
தூய பாதை செல்லவும்,
ஆண்டவா, உம் அருள் தாரும்
அடியேனை ஆட்கொள்ளும்.

அட்டவணை

3. வியாதி, துக்கம், தொல்லை வந்தால்
உம்மை நோக்கிக் கெஞ்சுவேன்;
உம் பிரசன்னம் எனக்கின்பம்
சாவுக்கும் நான் அஞ்சிடேன்;
துன்பத்தில் என் நண்பர் நீரே,
இன்பம் ஈபவர் நீரே,
ஆண்டவா, நீர் தாம் என் தஞ்சம்,
அடியேனை ஆட்கொள்ளும்.

4. மூவராம் திரியேகர்க்கென்றும்
மாட்சி மேன்மை மகிமை;
விண்ணில் தூதர் தூயர் கூட்டம்
அவர் நாமம் துதிக்கும்
மண்ணில் மாந்தர் கூட்டம் யாவும்
அவர் பாதம் போற்றவும்,
ஆண்டவா, உம் அருள் தாரும்,
அடியாரை ஆட்கொள்ளும்.

**390** For Thy mercy and Thy grace **பா.80**

A.M. 73 Culbach *7*,7,7,7

1. **இன்னோர் ஆண்டு முற்றுமாய்**
எங்களை மகா அன்பாய்க்
காத்து வந்தீர் இயேசுவே,
உம்மைத் துதி செய்வோமே.

2. நீரே இந்த ஆண்டிலும்
எங்கள் துணையாயிரும்;
எந்தத் துன்பம் தாழ்விலும்
கூடத் தங்கியருளும்.

3. யாரேனும் இவ்வாண்டினில்
சாவின் பள்ளத்தாக்கினில்
செல்லின், உந்தன் கோலாலே
தேற்றும், நல்ல மேய்ப்பரே.

4. நாங்கள் உந்தன் தாசராய்
தூய்மை பக்தி உள்ளோராய்
சாமட்டும் நிலைக்க நீர்
காத்து கிரீடம் ஈகுவீர்.

5. ஏக கர்த்தராம் நீரே
மன்னர் மன்னன் எனவே
என்றும் உம்மைப் போற்றுவோம்
உந்தன் வீட்டில் வாழுவோம்.

**391** Deer Hurst **பா.81**

A.M. 436 II 8,7,8,7 D

1. **வருஷப் பிறப்பாம் இன்று**
புது பக்தியுடனே
தேவரீரிடத்தில் வந்து
வாழ்த்துல் செய்ய, இயேசுவே
உந்தன் ஆவியை அளித்து
என்னைப் பலப்படுத்தும்,
அடியேனை ஆதரித்து,
வழி காட்டியாய் இரும்.

2. இது கிருபை பொழியும்
வருஷம் ஆகட்டுமேன்,
என்னில் ஒளி வீசச் செய்யும்,
என் அழுக்கை அடியேன்
முழுவதும் கண்டறிந்து,
அருவருக்கச் செய்யும்
பாவம் யாவையும் மன்னித்து
நற்குணத்தை அளியும்.

அட்டவணை

3. நீர் என் அழுகையைக் கண்டு
துக்கத்தாலே கலங்கும்
அடியேனைத் தேற்றல் செய்து
திடன் அளித்தருளும்
இந்த புது வருஷத்தில்
பாவத்துக்கும் கேட்டுக்கும்
தப்புவித்து என்னிடத்தில்
கிருபை கூர்ந்தருளும்

4. மாயமற்ற கிறிஸ்தோனாக
இந்த வருஷத்திலே
நான் நடக்கத்தக்கதாக
ஈவளியும் கர்த்தரே
யாவர்மேலும் அன்பின் சிந்தை
வைத்து, தெய்வ பக்தியை
எனக்கு ரட்சிப்புண்டாக
காண்பித்திருப்பேனாக.

5. பூரிப்பாய் இவ்வருஷத்தை
நான் முடிக்க என்னை நீர்
தாங்கி உந்தன் திருக் கையை
என்மேல் வைக்கக்கடவீர்
வருத்தம் வந்தாலும், உம்மை
நம்பிப் பற்றிக் கொள்ளுவேன்
மரித்தாலும் பேரின்பத்தை
நான் அடைந்து வாழுவேன்.

**392** When all Thy mercies O my God **பா.83**

A.M. 517 C.M.

1. **நீர் தந்த நன்மை யாவையும்**
நினைத்து, கர்த்தரே,
மகிழ்ச்சியோடு என்றைக்கும்
நான் துதிசெய்வேனே.

அட்டவணை

2. குழந்தைப் பருவமுதல்
குறைவில்லாமலே
எனக்களித்த நன்மைகள்
ஏராளமானதே.

3. என்னோடு வாலிபத்திலும்
இருந்தீர் தேவரீர்,
இக்கட்டுண்டான காலத்தும்
விழாமல் தாங்கினீர்.

4. அநேகமான தீமைகள்
அண்டாமல் தடுத்தீர்
கைம்மாறில்லாத நன்மைகள்
கர்த்தாவே பொழிந்தீர்.

5. இம்மையில் என்றும் தாழ்மையாய்
தெய்வன்பை நினைப்பேன்
மறுமையில் வணக்கமாய்
உம்மையே போற்றுவேன்.

6. புகழ்ச்சி, துதி, தோத்திரம்,
ஒன்றான உமக்கே
இகத்திலும் பரத்திலும்
எழும்பத் தகுமே.

**393** **கி.கீ.359**

*பிலகரி* *ஆதிதாளம்*

***பல்லவி***

ஆனந்தமே! ஜெயா! ஜெயா!
அகமகிழ்ந்தனைவரும் பாடிடுவோம்.

***அனுபல்லவி***

ஞானரட்சகர், நாதர் நமை –இந்த
நாள்வரை ஞாலமதினில் காத்தார் – புகழ் –ஆனந்தமே

அட்டவணை

*சரணங்கள்*

1. சங்கு கனம், வளர் செங்கோலரசிவை
தளராதுள கிறிஸ்தானவராம்,
எங்கள் ரட்சகரேசு நமை -வெகு
இரக்கங் கிருபையுடன் ரட்சித்ததால், -புகழ் -ஆனந்தமே

2. முந்து வருட மதனில் மனுடரில் வெகு
மோசகஸ்திகள் தனிலேயுழல,
தந்து நமக்குயிருடையுணவும் - வெகு
தயவுடன் யேசு தற்காத்ததினால்-புகழ் -ஆனந்தமே

3. பஞ்சம் பசிக்கும் பட்டயத்துக்கும் வெகு கொடும்
பாழ் கொள்ளை நோய் விஷதோஷத்திற்கும்
தஞ்ச ரட்சகர் தவிர்த்து நமை -இத்
தரை தனில் குறை தணித்தாற்றியதால்-புகழ் -ஆனந்தமே

*-வே. மாசிலாமணி*

**394** **கி.கீ.360**

*பியாகு* *சாபுதாளம்*

*பல்லவி*

**எந்நாளுமே துதிப்பாய் - என்னாத்துமாவே, நீ**
எந்நாளுமே துதிப்பாய்!

*அனுபல்லவி*

இந்நாள் வரையிலே உன்னதனார் செய்த;
எண்ணில்லா நன்மைகள் யாவு மறவாது -எந்நாளுமே

*சரணங்கள்*

1. பாவங்கள் எத்தனையோ - நினையா திருத்தாருன்
பாவங்கள் எத்தனையோ?
பாழான நோயை அகற்றிக் குணமாக்கிப்
பாரினில் வைத்த மகா தயவை எண்ணி -எந்நாளுமே

அட்டவணை

2. எத்தனையோ கிருபை – உன்னுயிர்க்குச் செய்தாரே
எத்தனையோ கிருபை?
நித்தமுனை முடி சூட்டினதுமன்றி,
நேயமதாக ஜீவனை மீட்டதால் – எந்நாளுமே

3. நன்மையாலுன் வாயை – நிறைத்தாரே பூர்த்தியாய்
நன்மையாலுன் வாயை;
உன்வயது கழுகைப்போல் பலங்கொண்டு,
ஓங்கு இளமைபோலாகவே செய்ததால், –எந்நாளுமே

4. பூமிக்கும் வானத்துக்கும் – உள்ள தூரம் போலவே,
பூமிக்கும் வானத்துக்கும்,
சாமி பயமுள்ளவர் மேல் அவர் அருள்
சாலவும் தங்குமே, சத்திய மேயிது; –எந்நாளுமே

5. மன்னிப்பு மாட்சிமையாம் – மாதேவனருளும்
மன்னிப்பு மாட்சிமையாம்;
எண்ணுவாயோ கிழக்கு மேற்கின் தூரமே?
எண்ணில் உன் பாவம் அகன்றதத்தூரமே –எந்நாளுமே

6. தந்தைதன் பிள்ளைகட்கு – தயவோடிரங்கானோ
தந்தைதன் பிள்ளைகட்கு?
எந்த வேளையும் அவரோடு தங்கினால்,
சொந்தம் பாராட்டியே தூக்கிச் சுமப்பாரே; –எந்நாளுமே

*–சா. பரமானந்தம்*

**395** **கி.கீ.363**

*ஆனந்தபைரவி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**இம்மட்டும் ஜீவன் தந்த கர்த்தாவை அத்தியந்த**
எண்ணமாய் ஸ்தோத்தரிப்போமாக

***அனுபல்லவி***

நம்மை ரட்சிக்க வந்து தம்மைப் பலியாய்த் தந்து
நற்சுகம் மேவவும் அற்புதமாகவும்.

அட்டவணை

***சரணங்கள்***

1. காலம் சொல் போல் கழியும், தண்ணீரைப்போல் வடியும்,
கனாவைப் போலேயும் ஒழியும்;
வாலிபமும் மறையும், சீலம் எல்லாம் குறையும்,
மண்ணின் வாழ்வொன்றும் நிற்க மாட்டாது;
கோலப் பதுமைக்கும், நீர்க்குமிழிக்கும், புகைக்குமே
கொண்ட உலகத்தில் அண்ட பரன் எமைக்
கண்டு கருணைகள் விண்டு தயவுடன், -இம்

2. பலவித இக்கட்டையும் திகில்களையும் கடந்தோம்
பரம பாதையைத் தொடர்ந்தோம்;
வலிய தீமையை வென்றோம், நலியும்
ஆசையைக் கொன்றோம்,
வஞ்சர் பகைக்கும் தப்பி நின்றோம்;
கலி என்றதெல்லாம் விண்டோம், கர்த்தாவின்
மீட்பைக் கண்டோம்;
காய்ந்த மனதொடு பாய்ந்து விழு கணம்
சாய்ந்து கெடவும், ஆராய்ந்து நெறியுடன், -இம்

3. சன சேதம் வருவிக்கும் கேடுகட்கோர் முடிவு
தந்து, நொறுக்கினதைக் கட்டிக்,
கன சபையை ஆதரித் தன்பாய் ஆசீர்வதித்துக்
கண்ணோக்கி எல்லார் மேல் அன்றன்று
தினமும் அருள் உதிக்கச் செய்து, தமது தேவ
சிந்தை யினோடதி விந்தையதாய் உயிர்
மைந்தனால் எங்களை இந்த வினோதமாய். -இம்

*-வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

**396** Fides **பா.82**

A.M. 654 8,7,8,7,8,8,7

1. **இம்மட்டும் தெய்வ கிருபை**
அடியேனை ரட்சித்து,
இக்கட்டிலும் என் ஜீவனை
அன்பாய்ப் பராமரித்து,
மா தயவாய் நடத்திற்று;
இம்மட்டும் ஸ்வாமி எனக்கு
சகாயம் செய்து வாரார்.

2. என் ஜீவனுள்ள நாளெல்லாம்
நான் கண்ட உண்மைக்காக
கர்த்தாவுக் கெனதுண்மையாம்
துதியுண்டாவதாக,
அதிசய அன்புடனே
சகாயம் செய்தீர் என்பதே
என் மனமும் என் வாக்கும்.

3. இனியும் உமதுண்மையில்
சகாயம் செய்து வாரும்
என் இயேசுவின் காயங்களில்
முடிய என்னைக் காரும்
கிறிஸ்துவின் ரத்தம் நீதியும்
எக்காலமும் எவ்விடமும்
என்னை ரட்சிக்க, ஆமேன்.

**397** O God our help in ages past **பா.253**

A.M. 165 C.M.

1. **கர்த்தாவே, யுகயுகமாய்**
எம் துணை ஆயினீர்;
நீர் இன்னும் வரும் காலமாய்
எம் நம்பிக்கை ஆவீர்.

அட்டவணை

2. உம் ஆசனத்தின் நிழலே
பக்தர் அடைக்கலம்
உம் வன்மையுள்ள புயமே
நிச்சய கேடகம்.

3. பூலோகம் உருவாகியே
மலைகள் தோன்றுமுன்
சுயம்புவாய் என்றும் நீரே
மாறா பராபரன்.

4. ஆயிரம் ஆண்டு உமக்கு
ஓர் நாளைப் போலாமே
யுகங்கள் தேவரீருக்கு
ஓர் இமைக்கொப்பாமே

5. சாவுக்குள்ளான மானிடர்
நிலைக்கவே மாட்டார்
உலர்ந்த பூவைப் போல் அவர்
உதிர்ந்து போகிறார்.

6. கர்த்தாவே, யுக யுகமாய்
எம் துணை ஆயினீர்
இக்காட்டில் நற் சகாயராய்
எம் நித்திய வீடாவீர்.

## 7. இருநூறாம் ஆண்டு விழா

**398**

**ஓ இயேசுவே! பாரில் உந்தன் ஆட்சி வருகவே**
நின் உலகிலே வாழ்வு நிறையும் மாட்சி நிறைந்ததே

1. அன்புறவு சமாதானம், நீதியுடன் முழு நிறைவும்
ஆண்டவனின் மாட்சிமிக்க ஆட்சியதன் அடையாளம்
ஆன்ற அதன் அமைப்புகளும் என்றென்றும் புதியவைகள்
ஆதி வாழ்க்கை மறைந்திடுமே ஜோதியாக மலர்ந்திடுமே.

அட்டவணை

2. ஆட்சியதன் மாதிரியே அர்ப்பணமாம் வாழ்க்கையதே
மாட்சிமையான சிலுவையே ஆட்சியதன் வல்லமையே
காட்சியாகச் சிலுவையிலே இயேசு நாதர் மகிமை பெற்றார்
சாட்சியாக மகிமையினை அவர் போலவே அடைந்திடுவோம்.

3. பழமை வாதப் பெருமைகளால் விளைந்திருக்கும் பிரிவினைகள்
கலைந்துவிட இறைவனாட்சி வந்து எமை ஒன்றாக்கக்
கர்த்தனவர் வருகைக்காகக் காத்திருந்த இஸ்ரவேல் போல்
காத்திருந்து இறைவனவர் ஆளுகையை அறிந்திடுவோம்.

4. நான்கு சுவர் மட்டிலுமே எட்டிடும் நம் இறைப் பணியும்
நலிந்திடாமல் எட்டுத்திக்கும் உடைந்து எங்கும் ஒளி தரவும்
நில உலகில் இறைாட்சியால் புத்துயிரே பெற்றிடவும்
நிறைவுடனே பணியும் செய்வோம் மாதிரியை மாற்றிடுவோம்.

*-அருள்திரு. அறிவர் J. கிறிஸ்டோபர்*

**399**

1. **வளர்ந்தே பெருகுக என்றே - உளம்**
மகிழ்ந்தே புகழ்ந்திட வாரீர்
தளர்ந்தே சோர்வுறும் கால்களே - பலம்
அடைந்தே நடந்திட வாரீர்.

பெருகுவோம் - வளர்ந்து
பெருகுவோம் - தேவன்
அருளும் ஆவியின்
அருமையாம் ஒளியில்-வளர்ந்தே பெருகுவோம்

2. இரு நூறாண்டுகள் மேலாய் - நெல்லைத்
திருச்சபை வளர்ந்திட நேர்ந்தார்
வரும்பல ஆண்டுகள் எல்லாம் - இன்னும்
பெருகிட அருள்வரம் ஈவார்.

அட்டவணை

3. பிரிவினை எழுந்திடும் நேரம் – நம்மைக்
கரிசனையோடவர் இணைத்தார்
உரிமையாய் ஒருமையில் வளர – அவர்
பரிவுடன் தினம் நடத்திடுவார்

4. தூய்மையில் தவறிய வேளை – நம்மைத்
தூயவர் தூக்கியே எடுத்தார்
தாய்மையின் கரம் கொண்டு மேலும் – நம்மைத்
தாங்கியே தினம் அணைத்திடுவார்.

5. ஒளியென உலகினில் வந்தார் – நம்மை
ஒளியென விளங்கிட அழைத்தார்
ஒளிதரும் தீபங்களாக – என்றும்
ஒளிர்ந்திட ஓடியே வாரீர்.

*–மெ. தாமஸ் தங்கராஜ்*

**400**

1. **இரண்டு நூறு ஆண்டுகள்**
இடைவிடாநல் ஊழியங்கள்
இன்னும் தொடர்ந்திடப் பாடுங்கள்
இறைவன் கிருபை வேண்டுங்கள்

பாடுங்கள், பாடுங்கள்
அன்றுபோல் இன்றும் என்றும்
அவர் கிருபை பெருகி வர
பாடுங்கள், பாடுங்கள்

2. அந்நியர் பலர் ஊழியராய்
இந்நிலம் வந்து மாதிரியாய்
இலங்கினார் உண்மைக் கிறிஸ்தவராய்
இறைவனாம் ஏசுவின் மாண்பிற்காய் –பாடுங்கள்

அட்டவணை

3. இன்னல்கள் வாட்டிய நிலைதனிலும்
இன்முகம் காட்டியே இறைப்பணியைப்
பின்னடையாமல் செய்தோர் முன்னோர்
பின்னோடியாய் நாம் தொடர்ந்திடுவோம்–பாடுங்கள்

4. இத்திருமண்டலம் இலங்கிடவே
இயன்ற உதவி செய்வோமென்று
உரத்த குரலில் பாடுங்களேன்
பெருத்த மகிழ்வு தேடுங்களேன். –பாடுங்கள்

5. திருமண்டலத்தின் திருப்பணிகள்
திறம்பட இலங்கி முழுமைபெற
தினம் தினம் நீவிர் முழந்தாளிட்டுத்
திரு அவதாரனை வேண்டிடுங்கள் – பாடுங்கள்

*–தா. ஜோசப் ஜெயக்குமார்*

**401**

1. **அல்லேலூயா தேவனுக்குத் துதி மகிமையே**
அதிசயமாய் அற்புதமாய் வழி நடத்தினார்
இரண்டு நூறு ஆண்டுகள் விந்தையாகவே
இறைவன் இயேசு அருளினால் வளர்ந்து பெருகுவோம்.

***பல்லவி***

உள்ளத்தில் நன்றியால் நிரம்பிப் பாடுவோம்
வெள்ளம் போல் பெருகிடும் இன்ப கீதத்தால்
எள்ளளவும் குன்றிடா தேவ கிருபையால்
அகமகிழ்ந்து அல்லேலூயா துதி முழங்குவோம்.

2. கொல்கொதாவின் தியாக அன்பு உள்ளம் கவர்ந்திடத்
தொல்லை ஏற்று அன்பர் பலர் தொண்டு புரிந்தனர்
அல்லும் பகலும் இயேசு என்று பேசித் திரிந்தனர்
கல் மனங்கள் கரைந்து உருக உதிரம் சிந்தினர்.

அட்டவணை

3. தேவாலயக் கற்கள் பேசும் தியாக சரிதையும்
நிறுவனங்கள் அனைத்தும் கூறும் கண்ணீர்க் கதைகளும்
மேன்மை செல்வம் யாவும் துறந்த அன்புத் தொண்டர்கள்
ஆன்மாக்களின் வேட்கையுடன் மெழுகாய் உருகினார்.

4. தியாகத்தால் எழுந்த சபைகள் வளர்ந்து பெருகவும்
கண்ணீரால் வளர்ந்த சேவை சிறந்து விளங்கவும்
தன்னலம் இல் பொருள் என்றென்றும் ஆகிட
தூய்மை தொண்டு தொடர நாமும் துதித்து மகிழுவோம்.

5. உயர்ந்து நிற்கும் கோபுரங்கள் தொண்டின் மகிமையும்
நிமிர்ந்து நோக்கும் நமது சபைகள் பெருமை சேர்த்திடும்
பன்மடங்காய் கிறிஸ்தவர்கள் பெருகி வளர்ந்திட
ஒன்றாய் இணைந்து இயேசுவுக்காய் என்றும் உழைப்போம்.

## 402

*ஹம்சவொளி* — *ஆதிதாளம்*

### *பல்லவி*

**இறைவனைப் போற்றிப் புகழ்வோம் – எங்கள்**
இருநூறாம் ஆண்டு நிறைவு விழாவில்.

### *அனுபல்லவி*

திருநெல்வேலியின் திருச்சபை வளர
திருப்பணியாளரின் திருப்பணி பெருக.

### *சரணங்கள்*

1. நிறைவான ஆவி புறாவைப் போல் இறங்கும்
குறைகளை நீக்கி கறைகளைப் போக்கும்
திறமுள்ள வலிமை பெற பலமருளும்
பிறர்நலம் கருதி உரமுடன் உழைத்து.

2. ஒலிவ இலைபோல் பொலிவுறும் சமாதானம்
பலியாட்டுக்குட்டிப் பலியினால் கிட்டும்
வலிந்த தம் அன்பால் மலிந்தது கிருபை
நலிந்த நம்மக்கட்குப் பலித்தது நன்மை.

அட்டவணை

3. மலர்ந்திடும் லீலி மலர்போல் தூய்மை
புலர்ந்திடும் நீதி பலர் மனம்மாறிட
உலர்ந்திட்ட எலும்புகள் உலகிலுயிர் பெற்றுத்
துலங்கிடத் திருச்சபை இலங்கிடச் செய்த

4. ஒளிபெற்று எங்கும் ஒளியுடன் வாழ்ந்து
ஒளியின் பிள்ளைகளாய் ஒளி வீசிடுவோம்
ஒளிதனில் மற்றோரை வழி நடத்திடுவோம்
ஒளி பிரகாசிக்க விழிப்புடன் ஜெபித்து

5. ஆலயந்தோறும் அவர் நாமம் துதித்து
சீலமுடன் நாமும் செலுத்துவோம் நன்றி
வேலையில் புகுமுன் வேதம் வாசித்து
காலையும் மாலையும் களிப்புடன் புகழ்ந்து

6. கிறிஸ்துவை அறிகிற அறிவினில் வளர்ந்து
பரிசுத்த ஆவியின் பலன் மிக அடைந்து
பரிசுத்தம் சமாதானம் பெருகிடத் திருச்சபை
எரிந்திடும் விளக்காய் எங்கும் பிரகாசிக்க

*-மா.சா. ஏசுதாசன்*

## VI. பொதுவான பாடல்கள்

## 1. கிறிஸ்தவ வாழ்க்கை

**403** Immortal Invisible God only wise **பா.252**

Revised, A.M.372, S.P.535 11, 11, 11, 11

1. **என்றென்றும் ஜீவிப்போர் அதரிசனர்,**
எட்டா ஒளியில் உள்ளோர் சர்வ ஞானர்
மா மேன்மை மகத்துவர் அநாதியோராம்;
சர்வவல்லோர் வென்றோர் நாமம் போற்றுவோம்.

அட்டவணை

2. ஓய்வோ துரிதமோ இன்றி ஒளி போல்,
ஒடுங்கா பொன்றா சக்தியோடாள்வதால்,
வான் எட்டும் மலைபோல் உம் நீதி நிற்கும்
அன்பு நன்மை பெய்யும் உந்தன் மேகமும்.

3. பேருயிர், சிற்றுயிர் ஜீவன் தேவரீர்,
யாவர்க்குள்ளும் உய்வீர் மெய்யாம் ஜீவன் நீர்;
மலர் இலைபோல் மலர்வோம், செழிப்போம்,
உதிர்வோம், சாவோம், நீரோ மாறாதோராம்.

4. மா மாட்சி, பிதா தூய ஜோதி தந்தாய்
தாழுவர் உம் தூதர் மா வணக்கமாய்
துதிப்போம் மகத்தாய்க் காணத் தோற்றுவீர்
கண் கூசும் ஜோதியாம் ஜோதி தேவரீர்.

**404** Let us with a gladsom mind **பா.254**

A.M.33 A.M.381 7,7,7,7

1. **களிப்புடன் கூடுவோம்**
கர்த்தரை நாம் போற்றுவோம்
அவர் தயை என்றைக்கும்
தாசரோடு நிலைக்கும்.

2. ஆதி முதல் அவரே
நன்மை யாவும் செய்தாரே
அவர் தயை என்றைக்கும்
மாந்தர் மேலே சொரியும்.

3. இஸ்ரவேலைப் போஷித்தார்
நித்தம் வழி காட்டினார்
அவர் தயை என்றைக்கும்
மன்னா போலே சொரியும்.

அட்டவணை

4. வானம் பூமி புதிதாய்ச்
சிஷ்டிப்பாரோ ஞானமாய்
அவர் தயை என்றைக்கும்
அதால் காணும் யாருக்கும்.

**405** **பா.255**

A.M.42 C.M.

1. **ஆ, களிகூர்ந்து பூரித்து**
மகிழ், என் மனதே
பராபரன்தான் உனது
அநந்த பங்காமே.

2. அவர் உன் பங்கு, உன் பலன்;
உன் கேடகம் நன்றாய்த்
திடப்படுத்தும் உன் திடன்;
நீ கைவிடப்படாய்.

3. உன் நெஞ்சு ராவும் பகலும்
துக்கிப்பதென்ன? நீ
உன் கவலை, அனைத்தையும்
கர்த்தாவுக்கொப்புவி.

4. உன் சிறு வயது முதல்
பராமரித்தாரே;
கர்த்தாவால் வெகு மோசங்கள்
விலக்கப்பட்டதே.

5. கர்த்தாவின் ஆளுகை எல்லாம்
தப்பற்றதல்லவோ,
அவர் கைசெய்கிறதெல்லாம்
நன்றாய் முடியாதோ?

6. ஆகையினால் கர்த்தாவுக்கு
நீ பிள்ளைப் பக்தியாய்
எப்போதும் கீழ்ப்படிந்திரு
அப்போது வாழ்வாய்.

**406** My God how Wonderful Thou art **பா.256**

A.M. 169 C.M.

1. **விண்ணோர்கள் போற்றும் ஆண்டவா,**
உம் மேன்மை அற்புதம்,
பளிங்குபோலத் தோன்றுமே
உம் கிருபாசனம்!

2. நித்தியானந்த தயாபரா
அல்பா ஒமேகாவே,
மா தூயர் போற்றும் ஆண்டவா,
ராஜாதி ராஜாவே!

3. உம் ஞானம் தூய்மை வல்லமை
அளவிறந்ததே;
நீர் தூயர், தூயர், உந்தனை,
துதித்தல் இன்பமே!

4. அன்பின் சொரூபி தேவரீர்
நான் பாவியாயினும்
என் நீச நெஞ்சைக் கேட்கிறீர்
உம் சொந்தமாகவும்.

5. உம்மைப் போல் தயை மிகுந்த
ஓர் தந்தையும் உண்டோ?
உம்மைப் போல் அன்பு நிறைந்த
தாய்தானும் ஈண்டுண்டோ?

6. என்பாவமெல்லாம் மன்னித்தீர்,
சுத்தாங்கம் நல்கினீர்;
என் குற்றமெல்லாம் தாங்கினீர்;
அன்பின் பிரவாகம் நீர்!

7. மேலோக நித்திய பாக்கியத்தை
நான் பெற்று வாழுவேன்;
உம் திவ்விய இன்ப முகத்தைக்
கண்ணுற்றுப் பூரிப்பேன்.

அட்டவணை

**407** Jesus the very thought of thee **பா.258**

A.M. 178 I C.M.

1. **இயேசுவே உம்மை தியானித்தால்**
உள்ளம் கனியுமே;
கண்ணார உம்மைக் காணுங்கால்
பரமானந்தமே.

2. மானிட மீட்பர் இயேசுவின்
சீர் நாமம் போலவே,
இன் கீத நாதம் ஆய்ந்திடின்
உண்டோ இப்பாரிலே?

3. நீர் நொறுங்குண்ட நெஞ்சுக்கு
நம்பிக்கை ஆகுவீர்;
நீர் சாந்தமுள்ள மாந்தர்க்கு
சந்தோஷம் ஈகுவீர்.

4. கேட்போர்க்கும் தேடுவோர்க்கும் நீர்
ஈவீர் எந்நன்மையும்
கண்டடைந்தோரின் பாக்கிய சீர்
யார் சொல்ல முடியும்?

5. இயேசுவின் அன்பை உணர்ந்து
மெய் பக்தர் அறிவார்;
அவ்வன்பின் ஆழம் அளந்து
மற்றோர் அறிந்திடார்.

6. இயேசுவே எங்கள் முக்தியும்
பேரின்பமும் நீரே
இப்போதும் நித்திய காலமும்
நீர் எங்கள் மாட்சியே.

அட்டவணை

| | | |
|---|---|---|
| **408** | The king of Love my shepherd is | **பா.262** |
| A.M. 197 | *Dominus regit me* | 8,7,8,7 |

1. **என் மேய்ப்பர் இயேசு கிறிஸ்துதான்,**
நான் தாழ்ச்சியடையேனே;
ஆட்கொண்டோர் சொந்தமான நான்
குறையடைகிலேனே.

2. ஜீவாற்றில் ஓடும் தண்ணீரால்
என் ஆத்மத் தாகம் தீர்ப்பார்;
மெய் மன்னாவாம் தம் வார்த்தையால்
நல் மேய்ச்சல் எனக்கீவார்.

3. நான் பாதை விட்டு ஓடுங்கால்
அன்பாகத் தேடிப் பார்ப்பார்;
தோள்மீதில் ஏற்றிக் காப்பதால்
மகா சந்தோஷங் கொள்வார்.

4. சா நிழல் பள்ளத்தாக்கிலே
நான் போக நேரிட்டாலும்
உன் அன்பின் கோலைப் பற்றவே
அதே என் வழி காட்டும்.

5. இவ்வேழைக்கும் ஓர் பந்தியை
பகைஞர்க்கெதிர் வைத்தீர்;
உம்மாவியால் என் சிரசை
தைலாபிஷேகம் செய்வீர்.

6. என் ஆயுள் எல்லாம் என் பாத்திரம்
நிரம்பி வழிந்தோடும்;
ஜீவாற்றின் நீரால் என்னுள்ளம்
நிறைந்து பொங்கிப்பாயும்.

7. என் ஜீவ காலம் முற்றிலும்
கடாட்சம் பெற்று வாழ்வேன்;
கர்த்தாவின் வீட்டில் என்றைக்கும்
நான் தங்கிப் பூரிப்பாவேன்.

அட்டவணை

**409** Jesu Thou Joy of Loving hearts **பா.263**

A.M. 190 *Ealing* L.M.

1. **ஜீவாதிபதி, ஜோதியே**
பக்தரின் இன்ப இயேசுவே,
லோகின் மா இன்பம் ருசித்தும்
சேர்ந்தோம் உம்பாதமே மீண்டும்.

2. பாதம் சேர்ந்தோரை மீட்பீரே
இவ்வுண்மை என்றும் மாறாதே;
தேடுவோர்க்கு நீர் நல்லவர்;
பற்றுவோர்க்குச் சம்பூரணர்.

3. விண் அப்பம் உம்மில் ருசிப்போம்,
முற்றும் உட்கொள்ள ஆசிப்போம்;
நீர் ஜீவ ஊற்று உம்மிலே
உள்ளத்தின் தாகம் தீருமே.

4. மாறிடும் வாழ்க்கை யாவிலும்
எம் ஆத்மா உம்மை வாஞ்சிக்கும்
உம் அருட் பார்வை இன்பமே
விஸ்வாசிப்போர்க்குப் பாக்கியமே.

5. தங்கும் எம்மோடு, இயேசுவே
எக்காலும் ஆற்றித் தேற்றுமே
காரிருள் பாவம் ஓட்டுமே
உம் தூய ஜோதி வீசுமே

**410** How sweet the Name of Jesus Sounds **பா.264**

A.M. 176 *St. Peter* C.M.

1. **நல் மீட்பர் இயேசு நாமமே**
என் காதுக்கின்பமாம்
புண்பட்ட நெஞ்சை ஆற்றவே
ஊற்றுண்ட தைலமாம்.

அட்டவணை

2. அந்நாமம் நைந்த ஆவியை
நன்றாகத் தேற்றுமே;
துக்கத்தால் தொய்ந்த உள்ளத்தை
திடப்படுத்துமே.

3. பசித்த ஆத்துமாவுக்கு
மன்னாவைப் போலாகும்;
இளைத்துப் போன ஆவிக்கு
ஆரோக்கியம் தந்திடும்.

4. என் ரட்சகா, என் கேடகம்,
என் கோட்டையும் நீரே
நிறைந்த அருள் பொக்கிஷம்
அனைத்தும் நீர்தாமே.

5. மா நேசர், மேய்ப்பர் பர்த்தாவும்
என் ஜீவனும் நீரே;
என் தீர்க்கரும், என் ராஜாவும்
ஆசாரியருமே.

6. என் நெஞ்சின் ஊக்கம் அற்பந்தான்,
என் அன்பில் குளிர்ந்தேன்;
உன் முகம் பார்க்கும்போதோ நான்
சீராகப் போற்றுவேன்.

7. இம்மையில் ஆயுள் முழுதும்
உம் அன்பைக் கூறுவேன்;
உம் நாமத்தால் என் சாவிலும்
நான் ஆறித்தேறுவேன்.

**411** Thou art the way by Thee alone **பா.265**

A.M. 199 *St. James* C.M.

1. **நீர் திவ்விய வழி, இயேசுவே**
நீர் பாவநாசர்தாம்,
பிதாவிடத்தில் சேர்வதும்
உமது மூலமாம்.

2. நீர் திவ்விய சத்தியம் இயேசுவே
உம் வாக்கு ஞானமாம்;
என் நெஞ்சில் அதின் ஜோதியால்
பிரகாசமும் உண்டாம்.

3. நீர் திவ்விய ஜீவன், இயேசுவே
வெம் சாவை ஜெயித்தீர்;
உம்மைப் பின்பற்றும் யாவர்க்கும்
சாகாமை ஈகுவீர்.

4. நீர் வழி, சத்தியம், ஜீவனும்
அவ்வழி செல்லவும்;
சத்தியம் பற்றி, ஜீவனை
அடையவும் செய்யும்.

**412** Praise Him Praise Him **பா.267**

S.S.208 12,10,12,10,12,10,12,10

1. **போற்றும், போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!**
வானோர் கூடிப் பாடவும் இன்பமாய்,
பாரிலேயும் நாம சங்கீர்த்தனம் செய்ய;
மாந்தர் யாரும், வாரும் ஆனந்தமாய்,
நேச மேய்ப்பன் கரத்தில் ஏந்துமாறு
இயேசு நாதர் நம்மையும் தாங்குவார்;
போற்றும், போற்றும்! தெய்வ குமாரனைப் போற்றும்
பாதுகாத்து நித்தமும் போஷிப்பார்.

அட்டவணை

2. போற்றும், போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!
பாவம் போக்கப் பாரினில் ஜென்மித்தார்;
பாடுபட்டுப் பிராணத் தியாகமும் செய்து
வானலோக வாசலைத் திறந்தார்.
மா கர்த்தாவே, ஸ்தோத்திரம் என்றும் என்றும்
வாழ்க, வாழ்க, ஜெகத்து ரட்சகா!
அருள் நாதா, மாசணுகா பரஞ்சோதி,
வல்ல நாதா, கருணை நாயகா!

3. போற்றும், போற்றும்! புண்ணிய நாதரைப் போற்றும்!
விண்ணும் மண்ணும் இசைந்து பாடவும்;
போற்றும், போற்றும், மீட்பர் மகத்துவமாக
ஆட்சி செய்வார் நித்திய காலமும்;
ஏக ராஜா, மாட்சிமையோடு வந்து,
இயேசு சுவாமி, பூமியில் ஆளுமேன்;
லோகம் எங்கும் நீதியின் செங்கோலை ஓச்சி
ஜோதியாகப் பாலனம் பண்ணுமேன்.

**413** Onward Christian Soldiers **பா.384**

A.M.391 II, SS 706 6,5,6,5, D

1. **யுத்தம் செய்வோம், வாரும்**
கிறிஸ்து வீரரே!
இயேசு சேனை கர்த்தர்
பின்னே செல்வோமே!
வெற்றி வேந்தராக
முன்னே போகிறார்;
ஜெயக் கொடி ஏற்றி
போர் நடத்துவார்.
*யுத்தம் செய்வோம் வாரும்,*
*கிறிஸ்து வீரரே!*
*இயேசு சேனை கர்த்தர்*
*பின்னே செல்வோமே!*

2. கிறிஸ்து வீரர்காள், நீர்
வெல்ல முயலும்
பின்னிடாமல் நின்று
ஆரவாரியும்!
சாத்தான் கூட்டம் அந்த
தொனிக்கதிரும்;
நரகாஸ்திவாரம்
அஞ்சி அசையும்!

3. கிறிஸ்து சபை வல்ல
சேனை போன்ற தாம்;
பக்தர் சென்ற பாதை
செல்கின்றோமே நாம்,
கிறிஸ்து தாசர் யாரும்
ஓர் சரீரமே;
விசுவாசம், அன்பு,
நம்பிக்கை ஒன்றே.

4. கிரீடம், ராஜ மேன்மை
யாவும் சிதையும்
கிறிஸ்து சபைதானே
என்றும் நிலைக்கும்;
"நரகத்தின் வாசல்
ஜெயங்கொள்ளாதே",
என்ற திவ்விய வாக்கு
வீணாய்ப் போகாதே.

5. பக்தரே, ஒன்றாக,
கூட்டம் கூடுமேன்,
எங்களோடு சேர்ந்து
ஆர்ப்பரியுமேன்!
விண்ணோர் மண்ணோர் கூட்டம்
இயேசு ராயர்க்கே
கீர்த்தி, புகழ், மேன்மை
என்றும் பாடுமே.

**414** The Head that once was Crowned with Thorn **பா.270**

A.M. 301 C.M.

1. **முள் கிரீடம் பூண்ட நாதனார்**
மா மாட்சி பெற்றாரே
விண் கிரீடம் இப்போ சூடினார்
வென்றோராம் வீரரே.

2. உன்னத ஸ்தானம் விண்ணிலே
இவர்க்கே சொந்தமாம்
மன்னாதி மன்னர் கர்த்தரே
விண் மாட்சி ஜோதியாம்

3. அண்ணலின் நாமம் அன்பையும்
நன்றாய் அறிந்தோராம்
விண்ணோர் மண்ணோர் மகிழ்ச்சியும்
இம் மீட்பர் நாதராம்

4. சிலுவையின் மா நிந்தையும்
பேரருள் பெறுவார்
நிலையாம் நாமம் பூரிப்பும்
அன்னோர் அடைகுவார்

5. நாதர் போல் பாரில் பாடுற்றே
அவரோடாள்வாராம்
தெய்வன்பின் மறை அறிவே
சந்தோஷம் பலனாம்.

6. சிந்தை சாவான சிலுவை
நம் ஜீவன் சுகமாம்
நம் சம்பத்து, நம் நம்பிக்கை
நம் ஓயா தியானமாம்.

அட்டவணை

**415** Barmouth **பா.271**

A.M. 6 I 7,7,7,7,7

1. **யாரை நான் புகழுவேன்?**
யாரை நான் அறிகிறேன்?
என் கதியும் பங்கும் யார்,
நான் பாராட்டும் மேன்மை யார்?
தெய்வ ஆட்டுக்குட்டி தான்.

2. யார் நான் நிற்கும் கன்மலை,
யார் என் திட நம்பிக்கை?
குற்றத்தை சுமந்தோர் யார்,
தெய்வ நேசம் தந்தோர் யார்?
தெய்வ ஆட்டுக்குட்டி தான்.

3. எந்தன் பிராண பெலன் யார்,
ஆத்துமத்தின் சாரம் யார்?
யாரால் பாவி நீதிமான்
யாரால் தெய்வ பிள்ளை நான்?
தெய்வ ஆட்டுக் குட்டியால்.

4. கஸ்தியில் சகாயர் யார்,
சாவின் சாவு ஆனோர் யார்?
என்னைத் தூதர் கூட்டத்தில்
சேர்ப்போர் யார் நான் சாகையில்?
தெய்வ ஆட்டுக்குட்டி தான்

5. இயேசு தான் என் ஞானமே
அவர் என் சங்கீதமே;
நீங்களும் புகழுங்கள்,
அவரைப் பின்செல்லுங்கள்
தெய்வ ஆட்டுக்குட்டியை.

அட்டவணை

**416** My God I Love Thee **பா.272**

A.M. 106 C.M.

1. **விண் வாழ்வில் ஆசை வைத்தல்ல,**
நித்திய சாவையே
நான் அஞ்சியல்ல, ஆண்டவா,
நேசிப்பேன் உம்மையே.

2. மனுக்குலம் அனைத்தையும்
உம் குருசில் அணைத்தீர்;
எனக்காய் ஆணி ஈட்டியும்
நிந்தையும் சகித்தீர்

3. சத்துருநீசன் எனக்காய்
சகித்தீர், நாதரே,
இரத்த வேர்வை வேதனை
வல் துக்கம் சாவுமே

4. என் திவ்விய நாதர் இயேசுவை,
நரக அச்சமும்
நன் மோட்ச ஆசையும் அற்றே,
நேசிப்பேன் முற்றிலும்.

5. எவ்வீவும் எதிர்நோக்கிடேன்
பிரதி பலனும்,
என்னை மா, அன்பா! நேசித்தீர்
நேசிப்பேன் நீசனும்.

6. என் சுவாமி நித்திய வேந்தரும்
நீர் தாமே; ஆசையால்
என்றென்றும் உம்மை நேசித்துப்
புகழ்வேன் பாடலால்.

அட்டவணை

# 2. தெய்வ அழைப்பு

**417** Maidstone **பா.279**

A.M. 240 7,7,7,7 D

1. **உங்களைப் படைத்தவர்**
சருவ தயாபரர்;
தம்மில் வாழ்ந்து ஜீவிக்க,
என்றும் தம்மோடிருக்க
ஆசைப்பட்டோர் உங்களைப்
பார்த்து, "என் சிநேகத்தை
தள்ளிவிட்டு நிற்பதார்?
திரும்புங்கள்", என்கிறார்.

2. உங்களை ரட்சித்தவர்
தெய்வ சுதனானவர்;
திரு ரத்தம் சிந்தினார்,
சிலுவையில் மரித்தார்;
"நீங்கள் வீணில் சாவதேன்!
மரித்துங்களை மீட்டேன்,"
என்று கூறி நிற்கிறார்
"திரும்புங்கள்," என்கிறார்.

3. உங்களை நேசிப்பவர்
தூய ஆவியானவர்
நயம் பயம் காட்டினார்,
குணப்பட ஏவினார்;
"தயை பெற வாரீரோ,
மீட்பைத் தேடமாட்டீரோ!"
என்றிரங்கிக் கேட்கிறார்,
"திரும்புங்கள்," என்கிறார்.

அட்டவணை

From the Cross uplifted high

**418** Wells, Gethsemane **பா.281**

S.S.416, A.M.110 7,7,7,7,7,7

1. **சிலுவை மரத்திலே**
இயேசுவை நான் நோக்கவே
என்னைப் பார்த்தழைக்கிறார்,
காயம் காட்டிச் சொல்கின்றார்;
மீட்பின் செய்கை ஆயிற்றே,
வாழ வாவேன், பாவியே.

2. பாவ பலியான தால்
குத்தப்பட்டேன் ஈட்டியால்;
ரத்தம் பூசப்பட்டு நீ
எனக்குன்னை ஒப்புவி;
மீட்பின் செய்கை ஆயிற்றே
வாழ வாவேன், பாவியே.

3. பான போஜனம் நானே,
விருந்துண்டு வாழ்வாயே;
பிதாவண்டை சேரலாம்
நேச பிள்ளை ஆகலாம்;
மீட்பின் செய்கை ஆயிற்றே
வாழ வாவேன், பாவியே.

4. சீக்கிரத்தில் வருவேன்
உன்னைச் சேர்ந்து வாழ்விப்பேன்
நித்தியானந்தம் மோட்சத்தில்
உண்டு, வா என்னண்டையில்;
மீட்பின் செய்கை ஆயிற்றே
வாழ வாவேன், பாவியே.

அட்டவணை

**419** Art thou wear art thou langvid **பா.282**

A.M. 254 II 8,5,8,3

1. **துக்க பாரத்தால் இளைத்து**
நொந்து போனாயோ?
இயேசு உன்னைத் தேற்றிக்கொள்வார்
வாராயோ?

2. அன்பின் ரூபகாரமாக
என்ன காண்பித்தார்?
அவர் பாதம் கை விலாவில்
காயம் பார்.

3. அவர் சிரசதின் கிரீடம்
செய்ததெதனால்?
ரத்தினம் பொன்னாலுமல்ல
முள்ளினால்.

4. கண்டு பிடித்தண்டினாலும்
துன்பம் வருமோ!
கஷ்டம், துக்கம், கண்ணீர் யாவும்
இம்மையே.

5. அவரைப் பின்பற்றினோர்க்கு
துன்பம் மாறுமோ?"
சாவின் கூரும் மாறிப்போகும்,
போதாதோ?

6. பாவியேனை ஏற்றுக்கொள்ள
மாட்டேன் என்பாரோ!
விண், மண் ஒழிந்தாலும் உன்னை
தள்ளாரே!

7. போரில் வெற்றி சிறந்தோர்க்கு
கதியா ஈவார்?
தூதர், தீர்க்கர், தூயர், யாரும்
ஆம், என்பார்.

அட்டவணை

| **420** | Hark my soul it is the Lord | **பா.283** |
|---|---|---|
| A.M. 260 | St. Bees | 7,7,7,7 |

1. **பாவி கேள்! உன் ஆண்டவர்,**
அறையுண்ட ரட்சகர்,
கேட்கிறார், என் மகனே,
அன்புண்டோ என் பேரிலே.

2. நீக்கினேன் உன் குற்றத்தை,
கட்டினேன் உன் காயத்தை,
தேடிப்பார்த்து ரட்சித்தேன்,
ஒளி வீசப்பண்ணினேன்.

3. தாயின் மிக்க பாசமும்,
ஆபத்தாலே குன்றினும்,
குன்றமாட்டாதென்றுமே
ஒப்பில்லா என் நேசமே.

4. எனதன்பின் பெருக்கும்
ஆழம் நீளம் உயரமும்
சொல்லி முடியாது, பார்;
என்னைப் போன்ற நேசனார்?

5. திவ்விய ரூபம் தரிப்பாய்,
என்னோடரசாளுவாய்;
ஆதலால் சொல் மகனே,
என்புண்டோ என் பேரிலே?

6. இயேசுவே, என் பக்தியும்
அன்பும் சொற்பமாயினும்
உம்மையே நான் பற்றினேன்
அன்பின் ஸ்வாலை ஏற்றுமேன்!

அட்டவணை

**421** I heard the voice of Jesus say **பா.284**

A.M. 257 *Vax Dilecti* D.C.M.

1. **வா, பாவி, இளைப்பாற வா,**
என் திவ்விய மார்பிலே
நீ சாய்ந்து சுகி, என்பதாய்
நல் மீட்பர் கூறவே;
இளைத்துப்போன நீசனாய்
வந்தாறித் தேறினேன்;
என் பாரம் நீங்கி, இயேசுவால்
சந்தோஷமாயினேன்.

2. வா, பாவி, தாகந்தீர வா,
தாராளமாகவே
நான் ஜீவ தண்ணீர் தருவேன்,
என்றார் என் நாதரே;
அவ்வாறு ஜீவ ஊற்றிலே,
நான் பானம்பண்ணினேன்;
என் தாகம் தீர்ந்து பலமும்
பேர் வாழ்வும் அடைந்தேன்.

3. வா, பாவி, இருள் நீங்க வா;
நான் லோக ஜோதியே,
உன் நெஞ்சில் ஒளி வீசுவேன்,
என்றார் என் நேசரே;
மெய்ஞான அருணோதயம்
அவ்வாறு நான் கண்டேன்;
அஜ்ஜோதியில் சந்தோஷமாய்
நான் என்றும் ஜீவிப்பேன்.

அட்டவணை

**422** **கி.கீ.125**

*ஹரிகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தேன் இனிமையிலும் ஏசுவின் நாமம் திவ்விய**
**மதுரமாமே – அதைத்**
தேடியே நாடி ஓடியே வருவாய்இ தினமும் நீ மனமே

***சரணங்கள்***

1. காசினிதனிலே நேசமதாகக் கஷ்டத்தை உத்தரித்தே – பாவக்
கசடதை அறுத்துச் சாபத்தைத் தொலைத்தார்
கண்டுணர் நீ மனமே –தேன்

2. பாவியை மீட்கத் தாவியே உயிரைத் தாமே ஈந்தவராம்
– பின்னும்
நேமியாம் கருணை நிலைவரமுண்டு,
நிதம் துதி மனமே –தேன்

3. காலையில் பனிபோல் மாயமாய் யாவும் உபாயமாய்
நீங்கிவிடும் – என்றும்
கர்த்தரின் பாதம் நிச்சயம் நம்பு கருத்தாய் நீ மனமே –தேன்

4. துன்பத்தில் இன்பம் தொல்லையில் நல்ல துணைவராம்
நேசரிடம்; – நீயும்
அன்பதாய்ச் சேர்த்தால் அணைத்துனைக் காப்பார்;
ஆசை கொள் நீ மனமே – தேன்

5. பூலோகத்தாரும் மேலோகத்தாரும் புகழ்ந்து போற்று
நாமம் – அதைப்
பூண்டுகொண்டால்தான் பொன்னகர் வாழ்வில் புகுவாய்
நீ மனமே –தேன்

*–அ. சவரிமுத்துப் போதகர்*

அட்டவணை

**423** **கி.கீ.128**

*சூரியகாந்தம்* *ரூபகதாளம்*

***பல்லவி***

**விசுவாசியின் காதில்பட, யேசுவென்ற நாமம்**
விருப்பாயவர் செவியில் தொனி இனிப்பாகுது பாசம்

***சரணங்கள்***

1. பசித்த ஆத்துமாவைப் பசியாற்று மன்னாவதுவே
முசிப்பாறுதல் இளைத்தோர்க்கெல்லாம் முற்றும்
அந்தப் பெயரே. – விசு

2. துயரையது நீக்கிக் காயமாற்றிக் குணப்படுத்தும்
பயங்கள் யாவும் யேசு வென்றால் பறந்தோடியே
போகும். –விசு

3. காயப்பட்ட இருதயத்தைக் கழுவிச் சுத்தப்படுத்தும்
மாயை கொண்ட நெஞ்சையது மயக்கமின்றி விடுக்கும் –விசு

4. எல்லை இல்லாக் கிருபைத்திரள் ஏற்று நிறைந்திருக்கும்
எல்லா நாளும் மாறாச் செல்வம் யேசுவென்ற பெயரே–விசு

5. என்னாண்டவா, என் ஜீவனே, என் மார்க்கமே, முடிவே,
என்னால் வருந்துதியை நீரே ஏற்றுக்கொள்ளும், தேவே–விசு

*–பாளையங்கோட்டைப் பாடல்*

**424** **கி.கீ.129**

*தன்யாசி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**காலத்தின் அருமையை அறிந்து வாழாவிடில்**
கண்ணீர் விடுவாயே

***அனுபல்லவி***

ஞாலத்தில் பரனுன்னை நாட்டின நோக்கத்தை
சீலமாய் நினைத்தவர் மூலம் பிழைத்திடுவாய்

அட்டவணை

*சரணங்கள்*

1. மதியையிழந்து தீய வழியிலே நீ நடந்தால்
வருங்கோபம் அறிந்திடாயோ?
கதியாம் ரட்சண்ய வாழ்வை நீ கண்டு மகிழ்ந்திட
காலம் இதுவே நல்ல காலம் என்றறியாயோ?– காலத்தின்

2. இகத்தினில் ஊழியம் அகத்தினில் நிறைவேற
ஏசுனை அழைத்தாரல்லோ?
மகத்துவ வேலையை மறந்து தூங்குவாயானால்
பகற்கால முடியும் ராக்காலத்திலென்னசெய்வாய்? –காலத்தின்

3. நோவாவின் காலத்தில் நூற்றிருபது ஆண்டு
நோக்கிப்பின் அழித்தாரன்றோ?
தாவாத கிருபையால் தாங்கி உனக்களித்த
தவணையின் காலமிவ் வருட முடியலாமே –காலத்தின்

4. முந்தின எரேமியா அனனியாவுக் குரைத்த
முடிவை நீ அறியாயோ?
எந்தக் காலமும் சிரஞ்சீவியென்றெண்ணிடாமல்
ஏற்ற ஆயத்தமாய் எப்போதும் இருந்திடாயோ? –காலத்தின்

*–சா. பரமானந்தம்*

**425** **கி.கீ.131**

*கமாஸ்* *ஆதிதாளம்*

*பல்லவி*

**யேசு நாமம் ஒன்றை நம்புவீர்**
பூலோகத்தாரே

*சரணங்கள்*

1. யேசு நாமம் ஒன்றை நம்பும்;
ரட்சண்யத்துக்கிதுவே ஸ்தம்பம்;
பேசும் வேறே நாமமெல்லாம்
பேருலகை ரட்சிக்காதே. – யேசு

அட்டவணை

2. பார்த்திபன் தாவீது குல
கோத்திரக் கன்னி மரிபால்,
நேத்திரம் போலே உதித்து
நேமியின் ரட்சகனான. – யேசு

3. பூதலத் தஞ்ஞான இருள்
போக்கவே மெய்ஞ்ஞான பெருஞ்
ஜோதியாய் விளங்கும் நீதிச்
சூரியனான மகத்வ. – யேசு

4. பாவிகளீடேற மோட்சப்
பாக்கியம் பெறுவதற்காய்
ஜீவன் விட்டுயிர்த்தெழுந்து
சேணுலகுக்கேறிச் சென்ற. – யேசு

5. விண்டலத்தவர்கள் சூழ
வெருண்டலகை பதறி வீழ;
மண்டலத்தைத் தீர்வை செய்ய
மாமுகில் மீதேறி வரும். – யேசு

*ஈ.சா. பாக்கியநாதன்*

**426** **கி.கீ.132**

*கரஹரப்பிரியை* *ஆதிதாளம்*

***பல்லவி***

**மரித்தாரே கிறிஸ்தேசு**
உனக்காகப் பாவி

***சரணங்கள்***

1. திரித்துவத் துதித்தோர் தெய்வீக சேயே,
தீன தயாளத்துவ மனுவேலே பாராய்; –மரித்தாரே

2. லோகத்தின் பாவத்தைத் தேகத்தில் சுமந்தே,
லோலாயமாயச் சிலுவையிலே பாராய்; –மரித்தாரே

அட்டவணை

3. மகத்தான தண்டனை நிவிர்த்திப்பதற்கே;
மா பாடுபட்டுத் தரித்ததே பாராய்; -மரித்தாரே

4. மன்னிப்புண்டாக்கவே மத்தியஸ்தராக
மாவாதைக்குள்ளானானார் தாமே நீ பாராய். -மரித்தாரே

**427** **கி.கீ.133**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**விலை மதியா ரத்தத்தாலே**
மீட்கப்பட்டீரே.

***சரணங்கள்***

1. உலையும் பொன் வெள்ளி
உலோகத்தாலல்ல -ரீ-ரீ-ரீ-ரீ-
சிலுவையி லேசுபரன் - வலத்
திருவிலாவில் வடியும். - விலை

2. நீருமக் குரிமை
சினைப்பதுமலையே -ரீ-ரீ-ரீ-ரீ-
சீர்மண மகனுடைமை, நீவிர்
சிந்திப்பது கடமை. - விலை

3. ஆகங்கள் அவர்க்கு
ஆலய மலவோ? -ரீ-ரீ-ரீ-ரீ-
மோக இச்சைகளணுகாதிருத்தல்
முக்கிய மென்றறியீர். - விலை

4. ஆவியுந் தேவன்
அகமதுதானே, -ரீ-ரீ-ரீ-ரீ-
தேவதுதிக ளதிலே - எழச்
செய்வீர் தினமும் மிகவே. - விலை

அட்டவணை

5. மனமது அவர்க்கு
மாத்திரம் சொந்தம், -ரீ-ரீ-ரீ-ரீ-
பிளமுறு கேடறிவு - அதைப்
பின் தொடர்வது இழிவு. - விலை

*-வே. மாசிலாமணி*

**428** **கி.கீ.134**

*காம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**எப்படியும் பாவிகளை ஓப்புரவாக்கிக் கொள்வதற்கு**
இப்புவியிலே உதித்தார்; அற்புதந்தானே

***அனுபல்லவி***

மெய்ப்பரம் புவியும் தந்த தற்பரன் அனாதி பிதா
நற்புதல்வனான ஏசுநாத கிருபாகரனார் - எப்

***சரணங்கள்***

1. மட்டில்லாப்பொருள் அனைத்தும் திட்டமாகவே படைத்து
இட்டமாய் அனுக்கிரகித்த சிட்டிகன் தானே;
கட்டளையிட்ட கற்பனை விட்டொரு சர்ப்பத்தின் வாயில்
பட்டு நரகத்துக்காளாய்க் கெட்டழிந்த பேர் என்றாலும்- எப்

2. அச்சயன் மோசேயைக் கொண்டான் றெச்சரித் தெழுதித்தந்த
உச்சித கற்பனை கடந்திச்சையினாலே
துர்ச்சனப் பாசாசைக் கூடி மிச்சமாய்ப் பாவங்கள் செய்து
நிச்சயம் கெட்டுப் போனார்கள், ரட்சிக்கக் கூடாதென்றாலும்-எப்

3. தாக்கிய பராபரன் உண்டாக்கிய அனந்த செல்வப்
பாக்கியங்கள் அனைத்தையும் போக்கடித்துமே
யோக்கியம் தெய்வ புத்ர சிலாக்கியம் எல்லாம் இழந்து
பேய்க்கடிமை ஆட்கள் கேட்டை நீக்குதற்
கேலாதென்றாலும் - எப்

அட்டவணை

4. மேட்டிமை எல்லாம் துறந்து காட்டுக்குள் இருக்கும் அந்த
மாட்டுக்கொட்டிலில் பிறந்தோர் ஆட்டுக் குட்டி போல்
பாட்டுக்கிடமாய் உலகை மீட்டுக் கொண்டனந்த மோட்ச
வீட்டுக்குட்படுத்த மாந்தர் நாட்டுக்குள் மரித்துயிர்த்து– எப்

*– வேதநாயகம் சாஸ்திரியார்*

**429** **கி.கீ.135**

*செஞ்சுருட்டி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**பாவம் போக்கும் ஜீவநதியைப்**
பாராய் வந்து பாராய் – பாவி

***அனுபல்லவி***

தீவினை தீர்க்கும் தேவமரியின்
திருரத்த மிந்த ஆறாம் – பாரில் – பாவம்

1. கல்வாரி மலைச்சிகர மீதுற்றுக்
கண்கள் ஐந்து திறந்தே; – அதோ!
மல்கிச் சிலுவை யடியில் விழுந்து
வழிந்தோடுது பாராய் – பாவி – பாவம்

2. பாவச் சுமையால் நொந்து சோர்ந்து
பதறி விழுந் தலறி – நிதம்
கூவியழுத அனந்தம் பேரிதில்
குளித்தே யுளங் களித்தார், – பாவி – பாவம்

3. பத்தருளத்தி லிடைவிடாமல்
பாய்ந்து வளமீந்து – அதை
நித்தமும் பரிசுத்த குணத்தில்
நிலைநாட்டுது பாராய் – பாவி – பாவம்

அட்டவணை

4. ஒருதரம் இந்த நதியின் தீர்த்தம்
உண்டோர் ஜீவன் கண்டோர் – தாகம்
அறுதியடைவர்; வேறொருநதிக்
கலையார், தேடி யலையார், – பாவி – பாவம்

5. நித்தியந்தனில் கலந்துறையுஞ் செந்
நீரார் நதியிதிலே தங்கள்
வஸ்திரந் தோய்த்த சுத்தர் சபையில்
வாழ்ந்துகீதம் பாடாய் – பாவி – பாவம்

*–ஜி.சே. வேதநாயகம்*

**430** **கி.கீ.137**

*எதுகுலகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**உலகில் பாவப்பாரத்தால் சோரும் – இளைப்**
பூர்ந்த நரரே, வந்து சேரும்

***அனுபல்லவி***

அலைசடிப் பட்டவரே, வாரும் – என்றன்
ஆறுதலால் அவற்றைத் தீரும்;–பொல்லா – உலகில்

1. பாவி என்றெண்ணித் திகைப் போரும் – என்றன்
பாவம் தீராதென் றிருப் போரும்,
ஆவலாய் ஓடி வந்து சேரும், – நான்
ஆகாமியர்க்காக வந்த தோரும்; – பொல்லா –உலகில்

2. இளமை என்றே எண்ணி, நில்லாதே; – சாவும்
இளமை என்று சொல்லிச் செல்லாதே;
வளமாய் வருவதைத் தள்ளாதே; – கெட்ட
வழக்க மிதையே கைக் கொள்ளாதே –பொல்லா –உலகில்

அட்டவணை

3. வாலிப ப்ராய மிதில் நாளும் – இன்ப
வாழ்வு சுகிக்க வென்று மாளும்
சீலரே, இன்றென் னுரை கேளும்; – அவை
சேர்க்கும் நரகத்தில் எந்நாளும் – பொல்லா –உலகில்

4. காலம் கடந்த கிழவோரே, – வீணாய்க்
காலம் கழித்தே உழல்வோரே,
காலமே தேட மறந்தாரே, – உங்கள்
கவலையைத் தீர்ப்பேன், அறிவீரே– பொல்லா – உலகில்

*–ஏ.சு. சவரிராயன்*

**431** **கி.கீ.141**

*பியாகு* *ரூபகதாளம்*

***பல்லவி***

**உன்றன் சுயமதியே நெறி என்று**
உகந்து சாயாதே; – அதில் நீ
மகிழ்ந்துமாயாதே

***சரணங்கள்***

1. மைந்தனே, தேவ மறைப்படி யானும்
வழுத்தும்மதிதனைக் கேளாய்; – தீங்
கொழித் திதமாய் மனந் தாழாய்; அருள் சூழாய். –உன்றன்

2. சொந்தம் உனதுளம் என்றுநீ பார்க்கிலோ,
வந்து விளையுமே கேடு; – அதின்
தந்திரப் போக்கை விட்டோடு; கதி தேடு. –உன்றன்

3. துட்டர் தம் ஆலோசனைப்படியே தொடர்ந்
திட்ட மதாய் நடவாதே; – தீயர்
கெட்ட வழியில் நில்லாதே; அது தீதே. – உன்றன்

4. சக்கந்தக் காரர் இருக்கும் இடத்தொரு
மிக்க இருக்க நண்ணாதே; – அவர்
ஐக்யம் நலம் என்றெண்ணாதே; அதொண்ணாதே –உன்றன்

அட்டவணை

5. நான் எனும் எண்ண மதால் பிறரை அவ
மானிப்பது வெகு பாவம்; - அதின்
மேல் நிற்குமே தேவ கோபம்; மனஸ்தாபம். - உன்றன்

*-யோ. பால்மர்*

**432** **கி.கீ.143**

*உசேனி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**வேறு ஜென்மம் வேணும் - மனம்**
மாறுதலாகிய உள்ள சுத்தி எனும்

***சரணங்கள்***

1. கூறு பரிசுத்தர் மாறிலா தேவனின்
தேறுதலான விண் பேறு பெற இங்கே - வேறு
2. பாவசுபாவமும் ஜீவியமும் மாறத்
தேவனின் சாயலை மேவுவதாகிய - வேறு
3. மானிடரின் அபிமானத்தினாலல்ல,
வானவரின் க்ருபா தானமாய் வரும் - வேறு
4. ஒன்றான ரட்சகர் வென்றியை நம்பி,
மன்றாடுவோருக்கு ஒன்றுவதாகிய - வேறு
5. மைந்தர் கெடாமல் உகந்து ஈடேறவே,
சொந்த மகன் தனைத் தந்த பிதா அருள் - வேறு
6. மண்ணினில் பத்தராய் நண்ணி நடக்கவும்
விண்ணினில் சுத்தராய்த் தண்ணொளி கொள்ளவும் -வேறு

*-த. யோசேப்பு*

**433** **கி.கீ.145**

*ஹரிகாம்போதி* *ஏகதாளம்*

***பல்லவி***

**வா, பாவீ, மலைத்து நில்லாதே, வா**

அட்டவணை

***சரணங்கள்***

1. என்னிடத்தில் ஒரு நன்மையுமில்லையென்
றெண்ணித் திகையாதே;
உன்னிடத்தில் ஒன்றுமில்லை, அறிவேனே
உள்ளபடி வாவேன். - வா

2. உன்றனுக்காகவே நானேயடிபட்டேன்
உன் பாவத்தைச் சுமந்தேன்;
சிந்திய என் திரு ரத்தத்தால் உன் பாவம்
தீர்த்து விட்டேன், பாவி, வா. - வா

3. கொடிய பாவத்தழலில் விழுந்து
குன்றிப் போனாயோ?
ஒடுங்கி வருந்தும் பாவிகள் தஞ்சம் நான்
ஒன்றுக்கும் அஞ்சாதே, வா. - வா

4. விலக யாதொரு கதியில்லாதவன்
உலகை நம்பலாமோ?
சிலுவை பாவிகளடைக்கலமல்லோ?
சீக்கிரம் ஓடி வாவேன். - வா

5. என்னிடத்தில் வரும் பாவி யெவரையும்
இகழ்ந்து தள்ளேனே;
மன்னிய மேலோக வாழ்வை அருள்வேனே,
வாராயோ, பாவி? - வா

*-தேவசகாயம் உபாத்தியாயர்*

**434** **கி.கீ.148**

*உசேனி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**குணப்படு பாவி, தேவ**
கோபம் வரும் மேவி - இப்போ

அட்டவணை

### *அனுபல்லவி*

கணப் பொழுதினில் காயம் மறைந்து போம்;
காலமிருக்கையில் சீலமதாக நீ.

### *சரணங்கள்*

1. கர்த்தனை நீ மறந்தாய் – அவர்
கற்பனையைத் துறந்தாய்,
பக்தியின்மை தெரிந்தாய், – பொல்லாப்
பாவ வழி திரிந்தாய்,
புத்தி கெட்ட ஆட்டுக் குட்டியே ஓடி வா,
உத்தம மேய்ப்பனார் கத்தி யழைக்கிறார். –குணப்படு

2. துக்கமடையாயோ? – பாவி
துயரமாகாயோ?
மிக்கப் புலம்பாயோ? – மனம்
மெலிந்துருகாயோ?
இக்கணம் பாவக் கசப்பை யுணராயோ?
தக்க அருமறைப் பக்கந் தொடராயோ? –குணப்படு

3. தாவீ தரசனைப்போல், – தன்னைத்
தாழ்த்தும் மனாசேயைப் போல்
பாவி மனுஷியைப் போல் – மனம்
பதைத்த பேதுரு போல்
தேவனுக்கேற்காத தீமை செய்தேனென்று
கூவிப் புலம்பு நல் ஆவியின் சொற்படி –குணப்படு

4. உன்னை நீ நம்பாதே! – இவ்
வுலகையும் நம்பாதே;
பொன்னை நீ நம்பாதே; – எப்
பொருளையும் நம்பாதே;
தன்னைப் பலியிட்டுத் தரணி மீட்டவர்
நின்னையும் ரட்சிப்பார், அனைவரைப் பற்று –குணப்படு

*–ஞா. சாமுவேல்*

அட்டவணை

**435** **கி.கீ.149**

*ஹரிகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஓகோ! பாவத்தினை விட்டோடாயோ?**
உள்ளமே, யேசு அன்பை நாடாயோ?

***சரணங்கள்***

1. மா கிருபையாக, ஏகன் அன்பாக
வந்ததிலையோ பூவில் உனக்காக? - ஓகோ!

2. நாற்பது நாளாய்த் தீப்பசிக் காளாய்
நாதன் உன் பொருட்டிருந்தார், கேளாய்? - ஓகோ!

3. யூதர்கள் வைய; வேதனை செய்ய,
உன்பவம் செய்த தவர் உளம் நைய. - ஓகோ!

4. சிலுவையில் இறுக்க, உலகரும் நொறுக்கச்
செய்ததுன் பவம் மேசியா இறக்க, - ஓகோ!

5. அலகை உன் மீதுபல வகைத் தீது
ஆவலுடன் செய்வதால் புவி மீது, - ஓகோ!

6. ஐயோ! என் மனமே, வையகம் வனமே;
அழியா உலகில் அன்புற்றனுதினமே. - ஓகோ!

*-யோ. பால்மர்*

**436** **கி.கீ.150**

*ஹரிகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**மகனே, உன் நெஞ்செனக்குத் தாராயோ? — மோட்ச**
வாழ்வைத் தருவேன், இது பாராயோ?

***சரணங்கள்***

1. அகத்தின் அசுத்தமெல்லாம் துடைப்பேனே, - பாவ
அழுக்கை நீக்கி அருள் கொடுப்பேனே, - மகனே

அட்டவணை

2. உன் பாவம் முற்றும் பரி கரிப்பேனே – அதை
உண்மையாய் அகற்றயான் மரித்தேனே. - மகனே

3. பாவம் அனைத்துமே விட்டோடாயோ? – நித்ய
பரகதி வாழ்வை இன்றே தேடாயோ? - மகனே

4. உலக வாழ்வினை விட்டகல்வாயே, - மகா
உவப்பாய்க் கதி ஈவேன்; மகிழ்வாயே. - மகனே

5. உன்றன் ஆத்துமத்தை நீ படைப்பாயே, - அதில்
ஊக்கமாய் வசிக்க இடம் கொடுப்பாயே. - மகனே

*–ச. யோசேப்பு*

**437** **கி.கீ.151**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**பாவி, இன்றே திரும்பாயோ? – நேச**
ஆவியின் சத்தம் கேளாயோ?

மேவி தயை நிரம்பி ஏவி உனை விரும்பிக்
கூவி அழைக்கையிலே தாவி யேசுவை நோக்கி –பாவி

***சரணங்கள்***

1. பாவம் தொடர்ந்து செல்லுமே – பாவ
சாபம் அடர்ந்து கொல்லுமே; – உனின்ப
லாபம் எல்லாமே சாபம்; காலமிதுவே காலம்;
தாபம் உளவுன் யேசு மா பரிதாபம் கண்டு –பாவி

2. எத்தனை போதனை பெற்றாய் – ஐயையோ!
சுத்தமாய்ச் சாதனை அற்றாய், என்றாலும்
அத்தனை பாவத்தையும் முற்றுமாக வெறுத்து,
அத்தனே, தத்தம் செய்தேன், நித்தமும் காவு மென்று –பாவி

அட்டவணை

3. கல்வாரியில் தொங்கினோர் யார்? – உனக்
கல்லோ நேசர் ஏங்கினோர் பார்! – இன்னும்
பொல்லா மனதுடனே கல் போல் கடினமாகிச்
செல்வோரையும் நிந்தித்து எல்லாக் கேட்டுக்குள்ளான –பாவி

4. நிலை யின்றலை கின்றோரே – ரத்த
விலை மதியாமல் சென்றோரே – போதும்;
மலையாமல் யேசுவிடம் தொலையாத கவலை சொல்லி
உலையா, நம்பிக்கை வைத்து நிலையான ரட்சைபெற –பாவி

*–ஐ.த. சாமுவேல்*

**438** **கி.கீ.152**

*கமாஸ்* *ரூபகதாளம்*

***பல்லவி***

**நீயுனக்குச் சொந்தமல்லவே; மீட்கப்பட்ட பாவி,**
நீயுனக்குச் சொந்தமல்லவே.

***அனுபல்லவி***

நீயுனக்குச் சொந்தமல்லவே,
நிமலன் கிறிஸ்து நாதர்க்கே சொந்தம் – நீ

***சரணங்கள்***

1. சிலுவை மரத்தில் தொங்கி மரித்தாரே; திரு ரத்தம் ரத்தம்
திரு விலாவில் வடியுது பாரே;
வலிய பரிசத்தால் கொண்டாரே;
வான மகிமை யுனக்கீவாரே. –நீ

2. இந்த நன்றியை மறந்து போனாயோ? இயேசுவை விட்டு
எங்கேயாகிலும் மறைந்து திரிவாயோ?
சந்ததமுனதிதயங் காயமும்,
சாமி கிறிஸ்தினுடையதல்லவோ? –நீ

அட்டவணை

3. பழைய பாவத்தாசை வருகுதோ? பசாசின் மேலே
பட்சமுனக்குத் திரும்ப வருகுதோ?
அழியும் நிமிஷத் தாசை காட்டியே
அக்கினிக் கடல் தள்ளுவானேன்? –நீ

4. பிழைக்கினும் அவர்க்கே பிழைப்பாயே, உலகைவிட்டுப்
பிரியினும் அவர்க்கே மரிப்பாயே,
உழைத்து மரித்தும் உயிர்த்த நாதரின்,
உயர் பதவியில் என்றும் நிலைப்பாய். –நீ

*–தேவசகாயம் உபாத்தியாயர்*

**439** **கி.கீ.154**

*ஆனந்தபைரவி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**பாதகன் என் வினைதீர், ஐயா, கிருபாகரா, நின்**
பாடு நினைந் தெனைச் சேர், ஐயா.

***அனுபல்லவி***

தீதகற்றவே சிறந்த
சேண் உலகினிமை விட்டு,
பூதலத் துகந்து வந்த
புண்ணியனே, யேசு தேவா. –பாதகன்

***சரணங்கள்***

1. வந்துறும் எப்பாவிகளையும் – அங்கீகரிக்கும்
மாசில்லாத யேசு நாதனே,
உந்தன் இடம் வந்துளமே உருகி அழுத மாது
முந்தி மிகச் செய்த பாவம் முழுதும் பொறுத்தாய்
அன்றோ? –பாதகன்

2. சிந்தின உன் உதிரம் அதே – தீயோன் மறத்தைச்
சின்ன பின்னம் செய்ய வல்லதே;
பந்தம் உற உன்றன் வலப் பாகமுற்ற கள்வனையே
விந்தையுற வேரட்சித்த வேதனே, அவ்விதமாயே –பாதகன்

அட்டவணை

3. அற்பவிசுவாசமுளன் ஆம் – அடியேனை இனி
ஆதரிப்பதார்? உன் தஞ்சமே;
தற்பரா, உனைத்தரிசித்தன்றி நம்பிடேன், எனவே
செப்பின தோமாவுக்குப்போல், திரு உருக்காட்சி தந்து.
– பாதகன்

*–யோ. பால்மர்*

**440** **கி.கீ.155**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஆண்டவா, மோட்சகதி நாயனே**
மீண்டவா, பாவிக் கிரங்கையனே.

***சரணங்கள்***

1. நீண்ட ஆயுளுள்ளவா, நெறி மறை கொடுத்தவா
தாண்டி உலகில் வந்தாயே, தயாளமுள்ள யேசுவே –ஆண்டவா

2. பெத்தலேக மூரிலே பிள்ளையாய்ப் பிறந்தாயே;
சித்தம் வைத்திரங்க மாட்டாயோ; தேவசீல மைந்தனே?
– ஆண்டவா

3. பாவியான மனுஷி உன் பாதமுத்தி செய்திட
ஜீவ வாக்குரைக்கவில்லையோ, தேற்றல் செய்யும்
மீட்பரே? – ஆண்டவா

4. பேதலித்த சீமோனைப் பேணி முகம் பார்த்தாயே,
ஆதரவு நீ தான் அல்லவோ, அருமையுள்ள அப்பனே?
– ஆண்டவா

5. கொல்கதா மலையிலே குருசினில் தொங்கையிலே,
பொல்லாருக்கிரங்க வில்லையோ, பொறுமையுள்ள
தேவனே? – ஆண்டவா

6. பாவவினை தீர்க்கவே பாடு மிகப் பட்டாயே;
கோபமின்றி என்னை நோக்காயோ, குருசில்
அறையுண்டவா? – ஆண்டவா

*–யோ. அருளப்பன்*

அட்டவணை

**441** **கி.கீ.124**

*வனஸ்பதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**யேசு நாமமல்லாம் – உலகினில்**

வேறு நாமம் இல்லை, – கிறிஸ்து

***அனுபல்லவி***

தேசுலாவிய கேரூபீம்பணி
திவ்ய வானவர் முனிவர் கண்மணி
மாசில்லாத மெய்ஞ்ஞான சிகாமணி
மதிக்கும் சத்திய வேத சிரோமண். – யேசு

***சரணங்கள்***

1. வானமும் புவியும் – கதி – ரோன்மதி உடுவும்
கானல் வரை கடலும் – நர – ரான எவ்வுயிரும்
தானே படைத்தருள் ஆதி காரணன்
சர்வ ஜீவ தயாபரா பூரணன்
ஈனர் வாக்குக் கெட்டாத மெய்யாரணன்,
இலங்கும் வேத சங்கீத பாராயணன். – யேசு

2. காவிலாத மேவை – செய் – தீவினையதனால்
பூவின் மாந்தர் படும் – துயர் – தேவ கோபமற,
பாவிகளைப் பரனோடுற வாக்கப்,
பரம எருசலேம் நகர் சேர்க்க
மேவுமலகை அரணைத் தூளாக்க,
மேதினியில் சமாதானம் உண்டாக்க. – யேசு

3. பண்டு வேதியர்கள் – கைக்– கொண்டமாமறையில்
விண்ட நாமமல்லாமல் – உயர்– அண்ட மீதினிலும்
மண்டலத்திலும், ஆழி கீழிலும்
மாருதம் செலும் அட்ட திக்கிலும்
தொண்டர் கூக்குரல் எட்டும் தூரத்திலும்
துஷ்டர் வர விரும்பாத இடத்திலும். – யேசு

*–ஈ.சா. பாக்கியநாதன்*

அட்டவணை

**442** **கி.கீ.139**

*முகாரி* *சாபுதாளம்*

***பல்லவி***

**தாகம் மிகுந்தவரே, அமர்ந்த**
தண்ணீரண்டை வாரும். - ஓ

1. ஏகன் நானுங்களையே அழைக்கும் என்தன்
இன்ப வாக்குத்தத்தமே, - நம்பி
வேகமாக ஓடி வாருமெனதிடம்,
வேண்டியதைத் தருவேன். - ஓ

2. காசுபணமது, அற்றுலகந்தன்னில்
கஷ்டப்படுவோரே, - விசு
வாசமாய் என்னிடம் வந்து விலையின்றி
வாங்கியே சாப்பிடுமே. - ஓ

3. பாரச்சுமையோடு பாரில் வருத்தங்கள்
பட்டு உழல்வோரே - வாரும்
நேரே, உமக்கிளைப்பாறுதலாவியை
நேசமாய்த் தந்திடுவேன். - ஓ

4. அப்பமல்லாத பொருளையும் திருப்தி
ஆகாத வஸ்துவையும், - நம்பித்
தப்பிதமாய்ப் பிரயாசத்தையும் பணம்
தன்னையுமேன் கெடுப்பீர்? - ஓ

5. கர்த்தரைக் கண்டடையத்தக்க காலத்தில்
கண்டிடுமே உடனே; - உந்தன்
அத்தன் சமீபமாக இருக்கும்போதே
ஆவலாய்க் கூப்பிடுமே.

*-வே. மாசிலாமணி*

அட்டவணை

## 3. பாவ அறிக்கை

**443** Love Divine **பா.286**
A.M.520 I 8,7,8,7

1. இயேசுவே, உம்மையல்லாமல்
நாங்கள் மா நிர்ப்பாக்கியர்,
எந்த நன்மையுமில்லாமல்
கெட்டுப்போன மானிடர்.

2. நாங்கள் பாவ இருளாலே
அந்தகாரப்பட்டவர்;
சர்ப்பத்தின் விஷத்தினாலே
தாங்கா நோய் பிடித்தவர்.

3. இந்தக் கெட்ட லோகம் எங்கும்
பாவக் கண்ணி மிகுதி;
தேவரீராலன்றி யாரும்
தப்பி வாழ்வதெப்படி?

4. இயேசுவே, பலத்தைத் தந்து
அந்தகாரம் அகற்றும்;
ஞானக் கண்ணைத் தெளிவித்து
எங்கள் மேல் பிரகாசியும்.

**444** University College **பா.288**
A.M.432 I 7,7,7,7

1. **ஸ்வாமியே, நான் எத்தனை**
பாவ பாதகங்களை
செய்துவந்தேன் என்று நீர்
நன்றாய்த் தூண்டிக் காட்டுவீர்.

2. ஐயோ! பாவ தோஷத்தால்
கெட்டுப்போனேன், ஆதலால்
நித்தம் வாடி நோகிறேன்,
துக்கத்தால் திகைக்கிறேன்.

அட்டவணை

3. நெஞ்சு என்னைக் குத்தவும்,
துன்பம் துயர் மிஞ்சவும்,
ஆவியும் கலங்கிற்றே
கண்ணீர் பாய்ந்து ஓடிற்றே.

4. வெட்கம் கொண்ட அடியேன்
துக்கமுள்ளோனாய் வந்தேன்
ஸ்வாமீ என்னைச் சாலவும்
தேற்றி மன்னித்தருளும்.

**445** Saviour when in dust to thee **பா.290**

A.M.251 I 7,7,7,7 D

1. **நாங்கள் பாவப் பாரத்தால்**
கஸ்தியுற்றுச் சோருங்கால்
தாழ்மையாக உம்மையே
நோக்கி, கண்ணீருடனே
ஊக்கத்தோடு வாஞ்சையாய்
கெஞ்சும்போது தயவாய்
சிந்தை வைத்து இயேசுவே
எங்கள் வேண்டல் கேளுமே.

2. மோட்சத்தை நீர் விட்டதும்
மாந்தனாய்ப் பிறந்ததும்
ஏழையாய் வளர்ந்ததும்
உற்ற பசி தாகமும்
சாத்தான் வன்மை வென்றதும்
லோகம் மீட்ட நேசமும்
சிந்தை வைத்து, இயேசுவே
எங்கள் வேண்டல் கேளுமே.

அட்டவணை

3. லாசருவின் கல்லறை
அண்டைபட்ட துக்கத்தை
சீயோன் அழிவுக்காய் நீர்
விட்ட சஞ்சலக் கண்ணீர்
யூதாஸ் துரோகி எனவும்
துக்கத்தோடுரைத்ததும்
சிந்தை வைத்து, இயேசுவே
எங்கள் வேண்டல் கேளுமே.

4. காவில் பட்ட கஸ்தியும்
ரத்த சோரி வேர்வையும்
முள்ளின் கிரீடம், நிந்தனை
ஆணி, ஈட்டி, வேதனை,
மெய்யில் ஐந்து காயமும்,
சாவின் நோவும், வாதையும்
சிந்தை வைத்து, இயேசுவே
எங்கள் வேண்டல் கேளுமே.

5. பிரேத சேமம், கல்லறை
காத்த காவல், முத்திரை
சாவை வென்ற சத்துவம்
பரமேறும் அற்புதம்
நம்பினோர்க்கு ரட்சிப்பை
ஈயும் அன்பின் வல்லமை
சிந்தை வைத்து, இயேசுவே
எங்கள் வேண்டல் கேளுமே.

**446** Just as I am without one Plea **பா.292**

S.S.473, A.M.108 8,8,8,6

1. **நான் பாவிதான், – ஆனாலும் நீர்**
மாசற்ற இரத்தம் சிந்தினீர்;
வா என்று என்னை அழைத்தீர்;
என் மீட்பரே, வந்தேன்.

அட்டவணை

2. நான் பாவிதான், - என் நெஞ்சிலே
கறை பிடித்துக் கெட்டேனே
என் கறை நீங்க இப்போதே,
என் மீட்பரே, வந்தேன்.

3. நான் பாவிதான், - மா பயத்தால்
திகைத்து, பாவப் பாரத்தால்
அமிழ்ந்து மாண்டு போவதால்,
என் மீட்பரே, வந்தேன்.

4. நான் பாவிதான், - மெய்யாயினும்
சீர், நேர்மை, செல்வம், மோட்சமும்
அடைவதற்கு உம்மிடம்
என் மீட்பரே, வந்தேன்.

5. நான் பாவிதான் - இரங்குவீர்
அணைத்து, காத்து, ரட்சிப்பீர்,
அருளாம் செல்வம் அளிப்பீர்;
என் மீட்பரே, வந்தேன்.

6. நான் பாவிதான், - அன்பாக நீர்
நீங்கா தடைகள் நீக்கினீர்;
உமக்கு சொந்தம் ஆக்கினீர்
என் மீட்பரே, வந்தேன்.

**447** **கி.கீ.157**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**திருப்பாதம் சேராமல் இருப்பேனோ — நான்**
தெய்வத்தைத் தேடாமல் பிழைப்பேனோ?

***சரணங்கள்***

1. அருட்கடலாம் ஈசன் அடியவர் பாசன்!
உருக்கம் நிறைந்த விண்ணுயிரான நேசன்! -திரு

2. ஆவியும் ஆத்மமும் ஆண்டவர் பங்கே,
பூவில் அவரல்லால் புகலிடம் எங்கே? -திரு

அட்டவணை

3. சத்திய மார்க்கமும் சகலமுமான,
நித்திய ஜீவனும் நிமலனுமான. - திரு

4. ஆறுதல், தேறுதல் அளித்திடும் சேயன்,
கூறு மகிமையில் சேர்த்திடும் தூயன். - திரு

5. உலையில் மெழுகு போல் உருகுதென் நெஞ்சம்,
மலையாதுன் திருவடி வணங்கினேன் தஞ்சம் -திரு

*-சா. பரமானந்தம்*

**448** **கி.கீ.158**

*முகாரி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தீயன் ஆயினேன், ஐயா, எளியேன் உற்ற**
தீவினை அனைத்தும் தீரும்;
தேவரீர் மேலே என் பாரம்,
தீயன் ஆயினேன், ஐயா.

***அனுபல்லவி***

மாயவலை வீசுவலு பேயின் வினை தீர,
நேயமுடனே உறுசகாயனாய் எமக்கென்றிங்கு
நிச்சயித்தெழுந்த எங்கள்
அச்சயா திருக்குமாரா. - தீயன்

***சரணங்கள்***

1. நன்மை செய்யவே நான் நினைத்தாலும் என்
தன்மை வேறதாய்ப் பின்னம் ஆகுமே;
என்ன என்தன் நீதி கந்தை
அன்ன அருவருப்பாமே;
எத்தனை ஆனாலும் உன்தன்
சித்தம் வைத்தனுக்கிரகிப்பாய். - தீயன்

அட்டவணை

2. பாவம் மீறி என் ஆவி தள்ளாடி நற்
சீவ பாதையைத் தாவி ஓடியே,
ஆவலாய் அழி வுறும் துர்ச்
சாவின் வழியே தொடர்ந்து
அக்கிரமச் செய்கைகளில்
சிக்கினேன்; ஐயோ, உன் தஞ்சம்! – தீயன்

3. தீது செய்பவன் தேவன் முன்னே உத்ர
வாதியாய் உறு நீதம் உண்டென,
போதம் உற வேத நெறி
ஓதிய ஏசு நாதா, உன்
புண்ணியத்தால் என்னை உய்யப்
பண்ணிடக் கிருபை செய்வாய். – தீயன்

*–யோ. பால்மர்*

**449** **கி.கீ.159**

*உசேனி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**யேசு நாதனே – இரங்கும் என் – யேசு நாதனே!**

***அனுபல்லவி***

ஆசைக் கிறிஸ்தென தன்புள்ள நேசனே!
அருளே! தெருளே! பொருளே!
ஆவல் ஆகினேன், மகா பிரலாபம் மூழ்கினேன்;
ஆயா! ஆயா! தூயா! ரட்சியும்;
ஆபத்தினால் பரிதபித்து நிற்கிறேன். –யேசு

***சரணங்கள்***

1. அருமைரட்சகனே! உனை அல்லாமல் ஆதரவார்? ஐயா!
ஆத்தும நாயகன் நீ என்னக்கல்லவோ? அன்புகூர் மெய்யா!
தருணம், தருணம் கைவிடாதேயும்;
தலைவா! நலவா! வலவா!
தாமதியாதே – கிருபை செய்யும் – சாமி இப்போதே
தாதா! நாதா! நீதா! நீகா!
தருமப்பிர காசனே! பரம சருவேசனே! –யேசு

அட்டவணை

2. ஐந்து காயத்தின் கிருபைக் கோட்டையில் அடைக்கலந்தாவே
ஆதாமின் பாவத்தாலே மானிடன் ஆன மெய் வாழ்வே
விந்தைக் கிருபை அளிக்க வேண்டும்
விமலா! நிமலா! அமலா!
வேறுபண்ணாதே – மிகும்சீறு – மாறுநண்ணாதே
மேலா! கோலா! நூலா! நீயே
விரும்பிச் சேரும், கோவே! திரும்பிப்பாரும், தேவே! –யேசு

3. உன்னைப்போல் நரர்க்கார் பாடுபட்டது? உரிமைச் சீமானே
உத்தம மேய்ப்பனே! சத்திய மீட்பனே! உண்மைக் கோமானே!
என்னை ரட்சிப்ப துன்கடன் அல்லவோ?
இறையே! நிறையே! பொறையே!
ஏதம் இல்லானே! அடியாரைத் – தீது சொல்லானே!
ஏகா! வாகா! ஆகா! இரட்சியும்;
இரக்கமே உன்தஞ்சம்; நெருக்கமே பிரபஞ்சம். –யேசு

*–வேதநாயகம் சாஸ்திரியார்*

**450** **கி.கீ.161**

*உசேனி* *ரூபகதாளம்*

1. **பாவியாம் எனை மேவிப்பார், ஐயா – யேசுநாதா ஸ்வாமி;**
பட்சமாக என் பாவந்தீர் ஐயா.

2. தேவத்ரோகி பாவி நான் அன்றோ, யேசுநாதா ஸ்வாமி
சீர்பதம் துணையன்றி வேறுண்டோ?

3. தீவினையுறு சாவு மேவிற்றே – யேசுநாதா ஸ்வாமி
சித்தம் வைத்திரட்சித்தாள் ஏழையே.

4. சஞ்சலமிகுந்தஞ்சல் ஆயினேன், யேசுநாதா ஸ்வாமி
தங்கும் உனை விட்டெங்கே ஏகுவேன்?

5. மனது, வாக்கு வினைகளில் எல்லாம்–யேசுநாதா ஸ்வாமி
மாசுளோனாய்க் கூசினேன் ஐயா.

அட்டவணை

6. **என்தன் நீதி ஓர் கந்தை அல்லவோ, – யேசுநாதா ஸ்வாமி**
**என் செய்வேனே? மறு தஞ்சம் இல்லையே.**

7. **அலகையோடெனை உலகம் ஏய்க்குமே–யேசுநாதா ஸ்வாமி**
**ஆதரவில்லை பாதுகா, ஐயா.**

8. **மன்னுயிர்க் கெனத்தன்னுயிர் விட்ட – யேசுநாதா ஸ்வாமி**
**வந்தெனது நிர்ப்பந்தம் பார், ஐயா.**

*–யோ. பால்மர்*

**451** **கி.கீ.162**

*ஆகிரி* *சாபுதாளம்*

***புலம்பல்***

1. **ஆதி பராபரனின் சுதனே, கிறிஸ்தேசுநாதா – எனக்**
காகவே இத்தனைபாடுகள் பட்டீரோ, யேசுநாதா?
தீதணுகாத பராபரன் சேய் அல்லோ, யேசுநாதா? – நீர்
செய்தகுற்றம் அணுவாகிலும் தான் உண்டோ, யேசுநாதா?
பாதகன் நான் அல்லோ கட்டுண்ண வேண்டிய தேசுநாதா? – சற்றும்
பாவம் இல்லாத நீர் கட்டுண்ணப் பட்டதேன், யேசுநாதா?
வாதை எனக்கு வரத்தகும் அல்லவோ, யேசுநாதா? – சற்றும்
மாசணுகாத நீர் வாதைக்குள் ஆனீரோ, யேசுநாதா?

2. மத்தியஸ்தனாய் எனக்காக வந்தீர் அல்லோ, யேசுநாதா? – இந்த
வஞ்சகன் சொந்தப்பிணையாளி நீர் அல்லோ, யேசுநாதா? – இந்த
எத்தனை பாதகம்செய்தவனாகிலும் யேசுநாதா – எனை
ரட்சிப்பதுன் கடன் அல்லாமல், ஆர்கடன் யேசுநாதா?
சத்துரு நான் என்றறிந்தும் இருந்தீரே யேசு நாதா? – கெட்ட
சண்டாளன் சிந்தையை முற்றும் அறிவீரே, யேசுநாதா?
சித்தம் இரங்கி எனை முகம் பார்க்கவே யேசுநாதா? – என்னைத்
தேடி வலிய வரத் தயவானீரோ, யேசுநாதா?

அட்டவணை

3. பத்தம் இல்லாததுரோகி நான் அல்லவோ, யேசுநாதா? – உமைப்
பாடுபடுத்தின பாதகன் நான் அல்லோ, யேசுநாதா?
பெத்தரிக்கமான பெருமையினாலே நான் யேசுநாதா? – கெட்ட
பேயைச் சிநேகித்து, இக்கோலம் ஆகினேன், யேசுநாதா?
புத்தியில்லா மிருகம் போல் ஆயினேன், யேசுநாதா? – மனம்
போன வழியெல்லாம்போய் அலைந்தேங்கினேன் யேசுநாதா?
சித்தம் வைத்தென் பேரில் திருக்கடைக் கண்ணோக்கி யேசுநாதா– உன்தன்
சீர்பதம் சாஸ்வதம் சேவை புரியச்செய் யேசுநாதா?

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**452** **கி.கீ.163**

*தன்யாசி* *ஆதிதாளம்*

### *பல்லவி*

**எத்தனை திரள் என் பாவம், என் தேவனே!**
எளியன்மேல் இரங்கையனே

### *அனுபல்லவி*

நித்தம் என் இருதயம் தீயதென் பரனே;
நிலைவரம் எனில் இல்லை; நீ என் தாபரமே –எத்தனை

### *சரணங்கள்*

1. பந்தம் உன்மேல் எனக்கில்லை என்பேனோ?
பணிந்திடல் ஒழிவேனோ?
சுத்தமுறுங் கரம்கால்கள், விலாவினில்
தோன்றுது காயங்கள், தூய சிநேகா! –எத்தனை

2. என்றன் அநீதிகள் என் கண்கள் முனமே
இடைவிடாதிருக்கையிலே,
உன்றன் மிகுங் கிருபை, ஓ! மிகவும் பெரிதே,
உத்தம மனமுடையோய், எனை ஆளும்! –எத்தனை

அட்டவணை

3. ஆயங்கொள்வோன்போல், பாவஸ்திரீ போல்
அருகிலிருந்த கள்ளன் போல்
நேயமாய் உன் சரண் சரண் என வணங்கினேன்
நீ எனக்காகவே மரித்தனை, பரனே! – எத்தனை

4. கெட்ட மகன் போல் துட்டனாய் அலைந்தேன்,
கெடு பஞ்சத்தால் நலிந்தேன்;
இட்டமாய் மகன் எனப் பாத்திரன் அல னான்
எனை ரட்சித்திடல் உன்றன் நிமித்தமே, அப்பனே! – எத்தனை

*–த. பலவேந்திரம்*

**453** **கி.கீ.164**

*காம்போதி* *சாபுதாளம்*

***பல்லவி***

**1. திருமுகத் தொளிவற்று; பெருவினைகளில் உற்றுச்**
சீர் கெட்ட பாவி ஆனேன் – நான்
ஒருமுகமாய் உனதிடம் மனந்திரும்பிட
ஊக்கம் அருள், பரனே.

2. துரிச்சையினால் என் அசுத்தம் நிறைந்து நல்
சோபிதம் நான் இழந்தேன் – பேய்ப்
பரீட்சையினாலும் மயக்கம் அடையும் இப்
பாவிக் கிரங் கையனே.

3. பாதகர் மீதில் பரிதபியாமலும்,
பாவம் பெறாமலும் நீ – சுத்த
நீதியை நோக்கில், உனது சமூகத்தில்
நிற்பவர் ஆர், துய்யனே?

4. தன் புண்ணியத்தால் எவனும் மன்னிப்புறத்
தக்கவன் இல்லை மெய்யாய் – எந்தை!
உன் தயையால் உன் திருச்சுதன் மூலமாய்
உண்டு பொறுப்பெனக்கே.

அட்டவணை

5. மண்ணையே நோக்கி உழன்று தவிக்கும் என்
வஞ்சக நெஞ்சதனை – நேராய்
விண்ணையே நோக்கிடப் பண், இறைவா; உனை
வேண்டி மன்றாடுகின்றேன்.

6. மாறுபாடான இவ் வேழைக்கிரங்கி நீ
மன்னிப்பருள் வதன்றி, – எனக்
காறுதலாக உனது நல் ஆவியை
அனுக்கிரகித்தாள், பரனே.

*–யோ. பால்மர்*

**454** **கி.கீ.165**

*முகாரி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஆரும் துணை இல்லையே, எனக்**
காதியான் திருப்பாலா; – உன்தன்
ஐந்து காயத்தின் அடைக்கலம் கொடுத்
தாளுவாய், யேசுநாதா.

***அனுபல்லவி***

சீர் உலாவு பூங்காவில் ஓர் கனி
தின்ற பாதகம் மாற்றவே,
சிலுவை மீதினில் உயிர்விடும்
தேவனே என் சுவாமி.

***சரணங்கள்***

1. முந்துமானிடர் தந்த தீவினை முழுவதும் அறவேண்டியே
முள் முடியுடன் குருசில் ஏறிய முன்னவா, கிருபை கூர்வையே;
சிந்தும் உன் உதிரத்தில் என்வினை தீர்த்திரட்சியும் ஐயனே;
தீயபாவி எனக்கு வேறொருசெயலிடம் துணை இல்லையே! – ஆரும்

2. தந்தை தாயரும், மைந்தர் மாதரும் சகலரும் உதவார்களே;
சாகும் நாளதில் நீ அலால் எனைத் தாங்குவார்களும் உண்டுமோ?
சொந்தம் நீ எனக்கன்றி வேறொரு சொந்தமானவர் இல்லையே
சுற்றமும் பொருள் அத்தமும் முழுபத்தமே, என் தத்தனே. – ஆரும்

3. கள்ளனாயினும் வெள்ளனாயினும் பிள்ளை நான் உனக் கல்லவோ?
கர்த்தனே, வலப் பக்கமேவிய கள்ளனுக் கருள் செய்தையே
தள்ளி என்னைவிடாமல் உன்னடி தந்து காத்தருள் அப்பனே
தயவாய் ஒரு குருசில் ஏறிய சருவ ஜீவ தயா பரா. – ஆரும்

4. நன்றி அற்றவனாகிலும் எனைக் கொன்று போடுவதாகுமோ?
நட்டமே படும் கெட்டமைந்தனின் கிட்ட ஓடினதில்லையோ?
கொன்றவர்க் கருள் செய்யும் என்று பிதாவை நோக்கிய கொற்றவா,
குற்றம் ஏதும்செய்தாலும் நீ, எனைப் பெற்றவா, பொறுத்தாள்வையே
– ஆரும்

5. பத்தியேதும் இலாது மாய சுகத்தை நாடிய பித்தனாய்ப்
பாழிலே என்றன் நாள் எலாங் கெடுத் தேழையாகினேன், என் செய்வேன்?
சத்ருவான பிசாசினால் வரும் தந்திரம் கொடிதல்லவோ?
தஞ்சம் அற்றவன் ஆகினேன், உனதஞ்சல் கூறும் அனாதியே. –ஆரும்

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**455** **கி.கீ.166**

*முகாரி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஐயையா, நான் பாவி – என்னை**
**ஆளும் தயாபரனே!**

***சரணங்கள்***

1. பொய்யாம் உலக உல்லாசாத்தினால் மனம்
போனவழி நடந்தேன்; — ஏ
சையா, அபயம்! அபயம்! இரங்கும், மே
சையா, என் தாதாவே -ஐயையா

2. எத்தனை சூதுகள், எத்தனை வாதுகள்;
எத்தனை தீதுகளோ? - என–து
அத்தனே! என் பிழை அத்தனையும் பொறுத்
தாண்டருளும், கோவே -ஐயையா

3. வஞ்சகமோ, கரவோ, கபடோ, மாய்
மாலமோ, ரண்டகமோ? — மனச்
சஞ்சலம் நீக்கி எனக்கருள் செய்யும்,
சமஸ்த நன்மைக் கடலே -ஐயையா

4. பொய்யும், புரட்டும், உருட்டும், திருட்டும்,
பொறாமையும், ஆணவமும் - விட்
டுய்யும்படி அருள் செய்யும், அனாதி ஓர்
ஏகதிரித்துவனே -ஐயையா

5. உன்னை எல்லாத்திலும்பார்க்கச் சிநேகித்
துனதடியார்களையும் — நான்
என்னைச் சிநேகிக்கிறாற்போல் சிநேகிக்க
ஏவும் பராபரனே -ஐயையா

*-வேதநாயகம் சாசுதிரியார்*

**456** **கி.கீ.167**

*மணிரங்கு* *ஏகதாளம்*

***பல்லவி***

**இரங்கும் இரங்கும், கருணைவாரி,**
ஏசு ராசனே, - பாவ - நாசநேசனே!

அட்டவணை

***சரணங்கள்***

1. திரங்கொண்டாவி வரங்கொண்டுய்யச்
   சிறுமை பார் ஐயா; – ஏழை வறுமை தீர் ஐயா, –இரங்கும்
2. அடியன் பாவக் கடி விஷத்தால்
   அயர்ந்து போகின்றேன் – மிகப் – பயந்து சாகின்றேன் – இரங்கும்
3. தீமை அன்றி வாய்மை செய்யத்
   தெரிகிலேன், ஐயா – தெரிவைப் – புரிகிலேன், ஐயா. – இரங்கும்
4. பாவி ஏற்றும் கவி மன்றாட்டைப்
   பரிந்து கேள், ஐயா, – தயை – புரிந்து மீள், ஐயா –இரங்கும்

*–அ. வேதக்கண் உபாத்தியாயர்*

**457** **கி.கீ.168**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சேர், ஐயா; எளியேன் செய் பவ வினை**
தீர், ஐயா.

***சரணங்கள்***

1. பார், ஐயா, உன் பதமே கதி; – ஏழைப்
   பாவிமேல் கண் பார்த்திரங்கி, – எனைச் –சேர்
2. தீதினை உணர்ந்த சோரனைப் – பர
   தீசிலே அன்று சேர்க்கலையோ? – எனைச் –சேர்
3. மாசிலா கிறிஸ் தேசுபரா, – உனை
   வந்தடைந்தனன், தஞ்சம், என்றே – எனைச் –சேர்
4. தஞ்சம் என்றுனைத் தான் அடைந்தோர் தமைத்
   தள்ளிடேன் என்று சாற்றினையே; – எனைச் –சேர்
5. பாவம் மா சிவப்பாயினும், – அதை
   பஞ்செனச் செய்வேன், என்றனையே; – எனைச் –சேர்
6. தீயர்க்காய்ப் பிணையாய் மரித்த – யேசு
   தேவனே, கருணாகரனே, – எனைச் – சேர்

*–யோ. பால்மர்*

அட்டவணை

**458** **கி.கீ.172**

*ஆனந்தபைரவி* *ரூபகதாளம்*

### *பல்லவி*

**தருணம் இதில் அருள் செய், யேசுபரனே, பாவச் சுமையானது**
தாங்க ஏழையாலே அரி தேங்கல் உற லானேன்

### *அனுபல்லவி*

மரண மதின் உரமே ஒழித் தலகைத் திறம் அறவே செய்து
வதையே விளைத்திடு தீவினை சிதைய வகைபுரி, பரனே – தருணம்

### *சரணங்கள்*

1. உலகர் உறு பவமானதைத் தலைமேல் சுமந்த ததனை அற
ஒழிக்க, நண்பர் செழிக்க, வனம் தெளிக்க வந்த பரம்பொருளே
பலகாலம் இத்தலமே ஒருநிலையே எனப் புலமீ துன்னிப்
பாழில் அழி ஏழை தனை ஆளவே இவ்வேளை வர. – தருணம்

2. வருத்தமுடன் அகப் பாரமே தரித்தோர் தமை விருப்போட நீர்
வாரும் எனைச் சேரும், என்ற சீரை அறிந்தே ஏழையேன்
திருத்தமுடன் எனைக்காத்து, நற்கருத்தை அளித்திருத்த அருள்
செய்ய, நானும் உய்யக் கருணை பெய்யக் கெஞ்சினேன் ஐயனே –தருணம்

*–யோ. பால்மர்*

**459** **கி.கீ.174**

*உசேனி* *ரூபகதாளம்*

### *பல்லவி*

**தந்தை சருவேஸ்பரனே, உந்தன் மகன் யேசுவுக்காய்**
எந்தன் முகம் பார்த்திரங்குவாயே – இம்மாத்ரம் நீயே,

### *சரணங்கள்*

1. அந்தமதிலா அகாரி, சந்ததமுமே விசாரி
விந்தை அருள்மேவும் அசரீரி, மெய்ஞ்ஞான வாரி! –தந்தை

அட்டவணை

2. ஞானபரனே, ஒருத்வ மானமுதலே, திரித்வ
மேன்மை வடிவான மகத்வ மேலான தத்வ! – தந்தை

3. விற்பன விவேக நூலா, அற்புதமான சீலா,
நற்பரம லோக அனுகூலா, நன்மை க்ருபாலா!– தந்தை

4. ஆதிமுதலான நேசா, வேதமறை மீதுலாசா
பேதகம் இலாத சத்ய வாசா, ஞான ப்ரகாசா! – தந்தை

5. வந்த வினை யாவும்தீரும், நிந்தை அணுகாமல் காரும்,
சிந்தை மகிழ்ந்தே, கண்ணாலே பாரும்; சீர்பாதம் தாரும்.
– தந்தை

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**460** **கி.கீ.176**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

தேவா, இரக்கம் இல்லையோ? – இயேசு
தேவா, இரக்கம் இல்லையோ?

***அனுபல்லவி***

ஜீவா, பரப்ரம ஏ கோவா, திரித்துவத்தின்
மூவாள் ஒன்றாகவந்த தாவீதின் மைந்தன், ஒரே –தேவா

***சரணங்கள்***

1. எல்லாம் அறிந்த பொருளே, – எங்கள்
இல்லாமை நீக்கும் அருளே, – கொடும்
பொல்லா மனதுடைய கல்லான பாவிகளைக்
கொல்லா தருள் புரியும் நல்லாயன் யேசு நாதா! –தேவா

2. எங்கும் நிறைந்த ஜோதியே, – ஏழைப்
பங்கில் உறைந்த நீதியே, – எங்கள்
சங்கடமான பாவ சங்கதங்களை நீக்கும்
துங்க இஸ்ரவேலின் வங்கிஷ க்ரீடாபதி! –தேவா

அட்டவணை

3. வேதாந்த வேத முடிவே – ஜெக
ஆதாரம் ஆன வடிவே – ஐயா
தாதாவும் எமைப் பெற்ற மாதாவும் நீயே; – யேசு
நாதா, ரட்சியும், வேறே ஆதாரம் எமக்கில்லை –தேவா

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**461** **கி.கீ.177**

*ஹரிகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**பரனே திருக்கடைக்கண் பாராயோ? என்றன்**
பாவத்துயர் அனைத்தும் தீராயோ?

***சரணங்கள்***

1. திறம் இலாத எனை முனியாமல் – யான்
செய்த குற்றம் ஒன்றும் நினையாமல் –பரனே
2. மாய வலையில் பட்டுச் சிக்காமல் – லோக
வாழ்வில் மயங்கி மனம் புக்காமல் –பரனே
3. அடியேனுக் கருள் செய் இப்போது, – உன
தடிமைக் குன்னை அன்றிக் கதி ஏது? –பரனே
4. வஞ்சகக் கவலை கெடுத் தோட்டாயோ? – என்றன்
மனது களிக்க வரமாட்டாயோ? –பரனே
5. ஏசுவின் முகத்துக் காய் மாத்ரம் – எனக்
கிரக்கம் செய்யும்; உமக்கே தோத்ரம்! –பரனே

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**462** **கி.கீ.180**

*காமாஸ்* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஜீவனேசு கிருபாசன்னா, எனின்**
சிறுமை தீர்த்தருள் ஓசன்னா!

அட்டவணை

***சரணங்கள்***

1. காவில் ஆதஞ் செய் பாவமூடவே
கடிய பேய் நரகோடவே
பூவுள்ளோருமைப் பாடவே, பரி
பூரண க்ருபை நீடவே. -ஜீவ

2. தொண்டர் பாதக ரண்டகங் கெட
துயரமேபடும் அத்தனே,
தொண்டன் நின் சரணண்டினேன்; எனின்
நோயைத் தீர், பரிசுத்தனே! -ஜீவ

3. அடியர் அடி பெற, அலகை அழல் விழ
அரிய பொன்முடி கொடுபட
படியில் நான் படுங் கொடிய விடர் கெட,
பலது தீமையு முறிபட. -ஜீவ

*-தேவசிகாமணி சாசுதிரியார்*

**463** **கி.கீ.183**

*எதுகுலகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**கிருபை புரிந்தெனை ஆள்; - நீ பரனே!**
கிருபை புரிந்தெனை ஆள்; - நிதம்

***சரணங்கள்***

1. திரு அருள் நீடு மெய்ஞ்ஞான திரித்து,
வரில்நரனாகிய மா துவின் வித்து! -கிருபை

2. பண்ணின பாவமெலாம் அகல்வித்து
நிண்ணயமாய் மிகவுந் தயை வைத்து -கிருபை

3. தந்திரவான் கடியின் சிறைமீட்டு;
எந்தை, மகிழ்ந்துன்றன் அன்பு பாராட்டு. -கிருபை

4. தீமை உறும் பல ஆசையை நீக்கிச்
சாமி! என்னை உமக்காலயம் ஆக்கி -கிருபை

5. தொல் வினையால் வரும் சாபம் ஒழித்து,
நல் வினையே செய் திராணி அளித்து. -கிருபை

6. அம்பரமீதுறை வானவர் போற்ற
கெம்பீரமாய் விசுவாசிகள் ஏத்த. -கிருபை

*-மதுரநாயகம் உபதேசியார்*

**464** Thuringia

A.M.669 I 5,5,8,8,5,5

1. **எங்கே ஓடுவேன்?**
பாதகன் ஆனேன்
தீமை எங்கும் என்னை மூடும்
ஆதரிக்க ஆரால் கூடும்?
எங்கே ஓடுவேன்,
பாதகன் ஆனேன்.

2. யேசு ஸ்வாமி, நீர்
என்னைக் கூப்பிட்டீர்
ஆதலால் உம்மண்டை வந்து
அன்புடன் உம்மைப் பணிந்து
நிற்கிறேன்; ஆ! நீர்
என்னைக் கூப்பிட்டீர்.

3. பாவத்தால் உண்டாம்
துன்பமே எல்லாம்
உம்மால் தீர நீர் மரித்தீர்,
மாசில்லாத ரத்தம் விட்டீர்
இவ்விதமாய் நீர்
என்னை ரட்சித்தீர்.

4. குற்றம் தீயது
அதிலும் அது
நீர் அடைந்த சாவினாலே
நீங்கிப் போயிற்றாதலாலே
ஏழைப் பாவியேன்
நீதிமானானேன்.

அட்டவணை

**465** **பா.293**

G.B.290, A.M.370 8,8,8,8,8,8

1. **நிர்ப்பந்தமான பாவியாய்**
நான் இங்கே தேவரீருக்கே
முன்பாக மா கலக்கமாய்
நடுங்கி வந்தேன், கர்த்தரே;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

2. ஆ! என் குரூர பாவத்தால்
மிகுந்த துக்கம் அடைந்தேன்;
ஆ ஸ்வாமீ, துயரத்தினால்
நிறைந்த ஏழை அடியேன்
இரங்குமேன், இரங்குமேன்
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

3. என் குற்றத்துக்குத் தக்கதாய்
செய்யாமல் தயவாய் இரும்;
பிதாவே, என்னைப் பிள்ளையாய்
இரங்கி நோக்கியருளும்
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

4. என் நெஞ்சின் திகில் தணித்து,
என்மேல் இரங்கி ரட்சியும்
திவ்விய சந்தோஷம் அளித்து
எப்போதும் கூடவே இரும்;
இரங்குமேன், இரங்குமேன்,
என்றும்மைக் கெஞ்சிக் கேட்கிறேன்.

அட்டவணை

**466** **கி.கீ.160**

*நீலாம்புரி* *ஆதிதாளம்*

1. **ஐயோ, நான் ஒருபாவ ஜென்மி ஆனேனே!**
ஆண்டு ரட்சித் தருள்வாய், -மனுவேலனே!
உய்யும்படி, தெய்வமே உன்னை அல்லால் எனக்கோர்
ஒதுக்கிட முண்டோ வேறே? - மனுவேலனே!

2. நல் வரமாய்ப் பெற்ற நீதி, சுசி, பாக்கியம்
ஞானம் எலாம் இழந்து - மனுவேலனே!
சொல்ல வெட்கம் அநீதி, சுசிகேடு, நிர்பாக்கியம்
துர்ப்புத்தியும் அடைந்தேன், - மனுவேலனே!

3. மாட்சி உறும் சிங்கார வனமாம் என துளத்தை
மங்கு கடாக்கினேனே, - மனுவேலனே!
ஆட்சி கொளும் உன் சுத்த ஆலயமாம் என் நெஞ்சை
அலகைக் கிடம் ஆக்கினேன், - மனுவேலனே!

4. உன்னை முழுப் பெலத்தால் நேசியாமலே நெஞ்சம்
உரங் கொண்ட பாவி ஆனேன் - மனுவேலனே!
என்னை நிகராக என் பிறனை நேசியாமல் நான்
இகலுற றிருந்தேனையா, - மனுவேலனே!

5. துப்புர வாம் சுத்தக் கண்ணனே, உன் முன் இன்னும்
துணி கரமாய் நடந்து, - மனுவேலனே!
இப்படி ஜென்ம கன்ம பாவத்தால் கேடடைந்த
ஏழைப் பாவிக் கிரங்காய், - மனுவேலனே!

*-யோ. பால்மர்*

**467** O Happy Day! **சுவி.கீ.7, நூ.கீ.318**

S.S.866

1. **என் பாவம் தீர்ந்த நாளையே**
அன்போடு எண்ணி ஜீவிப்பேன்
அந்நாளில் பெற்ற ஈவையே
சந்தோஷமாய்க் கொண்டாடுவேன்

அட்டவணை

*பல்லவி*

இன்ப நாள்! இன்ப நாள்!
என் பாவம் தீர்ந்துபோன நாள்!
பேரன்பர் என்னை ரட்சித்தார்
சீராக்கி இன்பம் நல்கினார்
இன்ப நாள் இன்ப நாள்
என் பாவம் தீர்ந்து போன நாள்.

2. இம்மானுவேல் இப்பாவியைத்
தம் சொந்தமாக்கிக் கொண்டனர்
சந்தேகம் நீக்கி மன்னிப்பைத்
தந்தென்னை அன்பாய் சேர்த்தனர்.

3. என் உள்ளமே; உன் மீட்பரை
என்றைக்கும் சார்ந்து வாழுவாய்
ஆருயிர் தந்த நாதரை
ஓர்காலும் விட்டு நீங்கிடாய்

4. ஆட்கொண்ட நாதா! எந்தனை
நாடோறும் தத்தம் செய்குவேன்
பின் மோட்ச வீட்டில் பேரன்பை
இன்னோசையாலே பாடுவேன்.

**468** **கி.கீ.171**

*மோஹனம்* *சாபுதாளம்*

*பல்லவி*

**சருவேசுரா, ஏழைப்பாவி – என் பேரிலே**
தயவாய் இரும், ஸ்வாமி

*அனுபல்லவி*

திரியேக பரதேவா, நெறி மேவும் ஒரு யோவா,
சித்தம் இரங்கிக் காத்துக் கிறிஸ்தின் முகத்தைப் பார்த்து

– சரு

1. தந்தை நின் ஒன்றான மைந்தன் தனைக் கொடுத்தித் தகைமை
உலகை நேசித்தாய் – நின்
சொந்தக் கிருபை தனைச் சிந்தித்துணர மறை
தொகுத்தெனக் குபதேசித்தாய்;
இந்தப் பெரிய நேசம் புந்திக் கொளிய தாக்கும்;
எந்தப் படியும் என் நிர்பந்தம் அனைத்தும் போக்கும். –சரு

2. தேவரீர்க்கேற்காத தீவினைகளைச் செய்தும் தண்டியாமல்
பொறுத்தீர் –நீர்
யாவும் அறிந்திருந்தும், கோபித்துக் கைவிடாதென் நன்றிக்
கேட்டை மறுத்தீர்,
ஜீவனே, உமக்குப் பாவி பதில் என் செய்வேன்?
மேவி அடிதொழாமல் ஆவி எங்ஙனம் உய்வேன்? –சரு

3. நெஞ்சில் தெய்வ பயம் கொஞ்சமேனும் இல்லாமல் நீதி
வழியைக் கடந்தேன் – கெட்ட
வஞ்ச உலக வாழ்வை மிஞ்சத் தேடிப், பேயின்
மனதுக்கேற்க நடந்தேன்,
பஞ்ச பாவி கூவிக் கெஞ்சும் ஜெபத்தைக் கேளும்
தஞ்சம் என்றேன்; உனக்கே அஞ்சல் என்றெனை ஆளும். –சரு

*–வேதநாயகம் சாஸ்திரியார்*

**469** **கி.கீ.179**

*சைந்தவி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தருணமே, பரம சரீரி; எனைத்**
தாங்கி அருள், கருணைவாரி

***அனுபல்லவி***

உரிமை அடியர் அனுசாரி, – உயர்
எருசலை நகர் அதிகாரி, அதி –தரு

அட்டவணை

1. வாரர் அடி தொழும் வெகு மானி – பரன் – மகிமை
ஒளிர் தேவ சமானி
நரர் பிணை ஒரு பிரதானி, – யேசு நாயகன் – என
தெஜமானி அதி. –தரு

2. ஆதாரம் உனை அன்றியாரே? – எனை – அன்பாய்த்
திருக்கண் கொண்டு பாரே;
பாதாரவிந்தம் கதி சேரே –இஸ்ரேல் – பார்த்திபன் தவிது
வங்கிஷ வேரே, அதி. –தரு

3. நித்த நித்த மாக என்றன் மேலே – வருவ – தெத்தனை
துன்பங்கள் ஒருக் காலே;
அத்தனையும் நீக்குதற்குன் காலே – எனக் – குத்தம
துணைதான் மனு வேலே, அதி. –தரு

4. கங்குல பகலும் துயரம். கோவே;– வரும் கலக்கம் ஒழித்
தெனைத் தற் காவே!
பங் கெனக்குத் தந்த மெய் மன்னாவே – ஏழைப்
பாவியை ரட்சியும், ஏசு தேவே! அதி. –தரு

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**470** **கி.கீ.181**

*காம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**யேசுவே, கிருபாசனப்பதியே, கெட்ட**
இழிஞன் எனை மீட்டருள்,
ஏசுவே, கிருபாசனப்பதியே.

***சரணங்கள்***

1. காசினியில் உன்னை அன்றி, தாசன் எனக் காதரவு
கண்டிலேன், சருவ வல்ல மண்டலாதிபா!
நேசமாய் ஏழைக்கிரங்கி, மோசம் அணுகாது காத்து
நித்தனே, எனைத் திருத்தி, வைத்தருள் புத்தி வருத்தி, – யேசுவே

அட்டவணை

2. பேயுடைச் சிறையதிலும், காய வினைக் கேடதிலும்
பின்னமாகச் சிக்குண்டதுர்க் கன்மி ஆயினேன்;
தீயரை மீட்கும் பொருளாய் நேயம் உற்றுதிரம் விட்ட
தேவனே, எனைக்கண் நோக்கித் தீவினை அனைத்தும் நீக்கி. –யேசுவே

3. சிறைப்படுத்தின வற்றைச் சிறையாக்கி விட்டஅதி
தீரமுள்ள எங்கள் உபகார வள்ளலே,
குறை ஏதுனை அண்டினோர்க் கிறைவா? எனைச் சதிக்கும்
குற்றங்கள் அறவேதீர்த்து, முற்றுமுடியக் கண் பார்த்து, –யேசுவே

4. பொல்லா உலகம் அதில் நல்லார் எவரும் இல்லை
புண்ணியனே, உன் சரணம் நண்ணி அண்டினேன்;
எல்லார்க்குள் எல்லாம்நீ அல்லோ எனக்குதவி?
இந்நாள் அருள் புரிந்து உன் ஆவியைச் சொரிந்து, –யேசுவே

*–யோ. பால்மர்*

## 4. கிறிஸ்துவைப் பின்பற்றுதல்

**471** Lord I hear of showers of blessing **பா.295**
S.S. 485 8,7,8,7

1. **அருள் மாரி எங்குமாக**
பெய்ய, அடியேனையும்
கர்த்தரே, நீர் நேசமாக
சந்தித்தாசீர்வதியும்;
என்னையும், என்னையும்
சந்தித்தாசீர்வதியும்.

2. என் பிதாவே, பாவியேனை
கைவிடாமல் நோக்குமேன்;
திக்கில்லா இவ்வேழையேனை
நீர் அணைத்துக் காருமேன்;
என்னையும், என்னையும்
நீர் அணைத்துக் காருமேன்.

அட்டவணை

3. இயேசுவே, நீர் கைவிடாமல்
என்னைச் சேர்த்து ரட்சியும்;
ரத்தத்தாலே மாசில்லாமல்
சுத்தமாக்கியருளும்;
என்னையும், என்னையும்
சுத்தமாக்கியருளும்.

4. தூய ஆவி கைவிடாமல்
என்னை ஆட்கொண்டருளும்;
பாதை காட்டிக் கேடில்லாமல்
என்றும் காத்துத் தேற்றிடும்;
என்னையும், என்னையும்
என்றும் காத்துத் தேற்றிடும்.

5. மாறா சுத்த தெய்வ அன்பும்,
மீட்பர் தூய ரத்தமும்,
தெய்வ ஆவி சக்திதானும்
மாண்பாய்த் தோன்றச் செய்திடும்;
என்னிலும், என்னிலும்
மாண்பாய்த் தோன்றச் செய்திடும்.

**472** Seek ye first not earthly pleasure **பா.296**

A.M.255, 416, 119 Cairns, Avignon, Derry 8,8,8,6

1. **அற்ப வாழ்வை வாஞ்சியாமல்**
இன்பம் செல்வம் பின்பற்றாமல்
தெய்வ நேசத்தை ஓயாமல்
நாடுவாய், நாடுவாய்.

2. விரும்பாதே பேர்ப் பிரஸ்தாபம்,
லோக மகிமை பிரதாபம்;
ஆத்ம வாழ்வின் நித்திய லாபம்
நாடுவாய், நாடுவாய்.

அட்டவணை

3. நாடுவாய் தெய்வாசீர்வாதம்,
கர்த்தர் ஈயும் சற்பிரசாதம்;
பாவம் தீரத் திருப்பாதம்
நாடுவாய், நாடுவாய்.

4. மீட்பர்போல் சுத்தாங்கமாகத்
தாழ்மையோடு சாந்தமாகத்
தொண்டு செய்ய ஆவலாக,
நாடுவாய், நாடுவாய்.

5. பிறர் இயேசுவண்டை சேர,
அவராலே கடைத்தேற
தெய்வ சித்தம் நிறைவேற
நாடுவாய், நாடுவாய்.

6. அருள் நாதர் அரசாளும்
காலம் வந்து, சர்வத்ராளும்
மீட்பைக் காணவும், எந்நாளும்
நாடுவாய், நாடுவாய்.

**473** Search Me O God My Actions Try **பா.298**

S.S.587 C.M.

1. **ஆராய்ந்து பாரும், கர்த்தரே;**
என் செய்கை யாவையும்
நீர் காணுமாறு காணவே
என்னில் பிரகாசியும்.

2. ஆராயும் என்தன் உள்ளத்தை,
நீர் சோதித்தறிவீர்;
என் அந்தரங்க பாவத்தை
மா தெளிவாக்குவீர்

அட்டவணை

3. ஆராயும் சுடரொளியால்
துராசை தோன்றவும்;
மெய் மனஸ்தாபம் அதனால்
உண்டாக்கியருளும்.

4. ஆராயும் சிந்தை, யோசனை,
எவ்வகை நோக்கமும்,
அசுத்த மனோபாவனை
உள்ளிந்திரியங்களும்.

5. ஆராயும் மறைவிடத்தை
உம் தூயக் கண்ணினால்;
அரோசிப்பேன் என் பாவத்தை
உம் பேரருளினால்.

6. இவ்வாறு நீர் ஆராய்கையில்,
சாஷ்டாங்கம் பண்ணுவேன்;
உம் சரணார விந்தத்தில்
பணிந்து போற்றுவேன்.

**474** My Spirit soul and body **பா.300**

A.M.301, 438 I *St. Magnus, Beatitudo* C.M.

1. **என் ஆவி ஆன்மா தேகமும்**
இதோ படைக்கிறேன்;
என்றும் உம் சொந்தமாகவும்
பிரதிஷ்டை செய்கிறேன்.

2. ஆ இயேசு வல்ல இரட்சகா
உம் நாமம் நம்புவேன்;
ரட்சிப்பீர், மா தயாபரா
உம் வாக்கை வேண்டுவேன்.

அட்டவணை

3. எப்பாவம் நீங்க உறுப்பு
தந்தேன் சமூலமாய்;
போராட்டம் வெற்றி சிறப்பு
படைக்கலங்களாய்.

4. நான் உம்மில் ஜீவித்தல் மகா
மேலான பாக்கியம்
தெய்வ சுதா, என் இரட்சகா,
என் ஜீவனாயிரும்.

5. என் நாதா, திரு இரத்தத்தால்
சுத்தாங்கம் சொந்தமே;
ஆனேன்! உம் தூய ஆவியால்
பலி நான் உமக்கே.

**475** Contemplation **பா.301**

A.M.517 C.M.

1. **என் நெஞ்சை, ஸ்வாமீ, உமக்கே**
ஈவாய்ப் படைக்கிறேன்;
நீர் இந்தக் காணிக்கையையே
கேட்டீர் என்றறிவேன்.

2. என் மகனே உன் நெஞ்சைத் தா
நீ இக்கடனைத் தீர்;
வேறெங்கும் நீ சுகப்பட
மாட்டாயே என்கிறீர்.

3. அப்பா நீர் அதைத் தயவாய்
அங்கீகரிக்கவும்,
நான் அதை உள்ளவண்ணமாய்
தந்தேன். அன்பாயிரும்.

4. மெய்தானே, அது தூய்மையும்
நற்சீரு மற்றது;
அழுக்கும் தீட்டும் மாய்கையும்
அதில் நிரம்பிற்று.

அட்டவணை

5. நான் உண்மையாய்க் குணப்பட
அதை நொறுக்குமேன்;
இத் தயவை நீர் காண்பிக்க
பணிந்து கேட்கிறேன்.

6. ஆ, என் கல் நெஞ்சை நீர் நன்றாய்
உருக்கி முழுவதும்
புலம்பலும் கண்ணீருமாய்
கரையப் பண்ணவும்.

7. நீர் என்னைக் கிறிஸ்தின் சாயலாய்,
எல்லோரிடத்திலும்
மென்மேல் புறம்பும் உள்ளுமாய்
நற்சாந்தமாக்கவும்.

8. நீர் என்னைக் கிறிஸ்து மார்க்கத்தில்
மேற்பூச்சும் மாயமும்
இல்லாதோனாக்கி, அவரில்
நல்லுண்மையாக்கவும்.

9. என் முழு நெஞ்சையும் அன்பாய்
நீர், ஸ்வாமீ என்றைக்கும்
அகமும் ஆலயமுமாய்
எடைத்துக் கொண்டிரும்.

10. நீர் அதை ஆளும், கர்த்தரே,
அதால் நான் பாக்கியன்
நான் உலகத்தானல்லவே,
நான் உம்முடையவன்.

11. போ, லோகமே, போ, பாவமே;
என் நெஞ்சை அடியேன்
எக்காலத்துக்கும், இயேசுவே,
கொடுத்திருக்கிறேன்.

**476** Take my life and let it be **பா.302**

A.M.517 C.M.

1. **எந்தன் ஜீவன், இயேசுவே,**
சொந்தமாக ஆளுமே;
எந்தன் காலம் நேரமும்
நீர் கையாடியருளும்.

2. எந்தன் கை பேரன்பினால்
ஏவப்படும்; எந்தன் கால்
சேவை செய்ய விரையும்,
அழகாக விளங்கும்.

3. எந்தன் நாவு இன்பமாய்
உம்மைப் பாடவும், என் வாய்
மீட்பின் செய்தி கூறவும்
ஏதுவாக்கியருளும்

4. எந்தன் ஆஸ்தி, தேவரீர்,
முற்றும் அங்கீகரிப்பீர்;
புத்தி கல்வி யாவையும்
சித்தம் போல் பிரயோகியும்.

5. எந்தன் சித்தம் இயேசுவே
ஒப்புவித்து விட்டேனே;
எந்தன் நெஞ்சில் தங்குவீர்,
அதை நித்தம் ஆளுவீர்.

6. திருப் பாதம் பற்றினேன்
எந்தன் நேசம் ஊற்றினேன்;
என்னையே சமூலமாய்
தத்தம் செய்தேன் நித்தமாய்.

**477** Deer hurst **பா.305**

A.M.436 II 8,7,8,7 D

1. **தீயோர் சொல்வதைக் கேளாமல்**
பாவத்துக்கு விலகி,
பரிகாசரைச் சேராமல்
நல்லோரோடு பழகி,
கர்த்தர் தந்த வேதம் நம்பி
வாஞ்சை வைத்து, அதைத்தான்
ராப்பகலும் ஓதும் ஞானி
என்றும் வாழும் பாக்கியவான்.

2. நதி ஓரத்தில் வாடாமல்
நடப்பட்டு வளர்ந்து
கனி தந்து, உதிராமல்
இலை என்றும் பசந்து,
காற்றைத் தாங்கும் மரம்போல
அசைவின்றியே நிற்பான்;
அவன் செய்கை யாவும் வாய்க்க
ஆசீர்வாதம் பெறுவான்.

3. தீயோர், பதர்போல் நில்லாமல்
தீர்ப்பு நாளில் விழுவார்;
நீதிமான்களோடிராமல்
நாணி நைந்து அழிவார்;
இங்கே பாவி மகிழ்ந்தாலும்
பாவ பலன் நாசந்தான்;
நீதிமான் இங்கழுதாலும்
கர்த்தர் வீட்டில் வாழுவான்.

அட்டவணை

**478** Take time to be Holy **பா.306**

S.S.608 11,11,11,11

1. **தூய்மை பெற நாடு; கர்த்தர் பாதமே**
நிலைத்தவர் வார்த்தை உட்கொள்ளென்றுமே;
கூடி பக்தரோடு சோர்ந்தோர் தாங்குவாய்
யாவிலுமே தெய்வதயை நாடுவாய்.

2. தூய்மை பெற நாடு; லோகக் கோஷ்டத்தில்
தனித்திரு நாளும் அவர் பாதத்தில்
யேசுவைப்போலாவாய் நோக்கின் அவரை;
பார்ப்போர் உன்னில் காண்பார் அவர் சாயலை.

3. தூய்மை பெற நாடு; கர்த்தர் நடத்த,
என்ன நேரிட்டாலும், அவர் பின் செல்ல;
இன்பம் துன்பம் நேர்ந்தும் விடாய் அவரை,
நோக்கியவர் வாக்கில் வைப்பாய் நம்பிக்கை.

4. தூய்மை பெற நாடு; ஆத்மா அமர்ந்து,
சிந்தை செய்கை யாவும் அவர்க்குட்பட்டு,
அன்பின் ஜீவ ஊற்றைச் சேர்ந்து ருசிக்க;
முற்றும் தூய்மையாவாய் விண்ணில் வசிக்க.

**479** Darewall's **பா.308**

T.H.148, A.M.546 6,6,6,6,8,8

1. **பரத்தின் ஜோதியே,**
என்மேல் இறங்கிடும்;
பிரகாசத்துடனே
உள்ளத்தில் விளங்கும்;
நீர் ஜீவ ஜோதி, தேவரீர்
நற் கதிர் வீசக் கடவீர்.

அட்டவணை

2. நிறைந்த அருளால்
லௌகீக ஆசையை
அகற்றி, ஆவியால்
பேரின்ப வாஞ்சையை
வளர்த்து நித்தம் பலமாய்
வேரூன்றச் செய்யும் தயவாய்.

3. நீர் என்னை ஆளுகில்,
நான் வாழ்ந்து பூரிப்பேன்;
நீர் என்னை மறக்கில்,
நான் தாழ்ந்து மாளுவேன்;
என் ஊக்கம் ஜீவனும் நீரே,
கடாட்சம் செய்யும், கர்த்தரே.

4. தெய்வன்பும் தயவும்
உம்மாலேயே உண்டாம்;
நற்குணம் யாவுக்கும்
நீர் ஜீவ ஊற்றேயாம்
நான் வாழும்படி என்றைக்கும்
என்னை நிரப்பியருளும்.

**480** Take Up Thy Cross The Saviour said **பா.312**
A.M.263 L.M.

1. **சிலுவை தாங்கு மீட்பர் பின்**
அவரின் சீஷனாகவே;
வெறுப்பாய் உன்னை லோகத்தைப்
பின் செல்வாய் தாழ்மையாகவே.

2. சிலுவை தாங்கு, பாரத்தால்
கோழை நெஞ்சோனாய் அஞ்சிடாய்;
விண்பலம் உன்னைத் தாங்கிடும்
வல்லமை வீரம் பெறுவாய்.

அட்டவணை

3. சிலுவை தாங்கு, மேட்டிமை
கொள்ளாய், எந்நிந்தை எண்ணிடாய்;
நீ பாவம் சாவை மேற்கொள்ள
உன் மீட்பர் மாண்டார் ஈனமாய்.

4. சிலுவை தாங்கி நின்றிடு,
தீரமாய் மோசம் யாவிலும்;
சிலுவை சேர்க்கும் மோட்சத்தில்
சாவின் மேல் வெற்றி ஈந்திடும்.

5. சிலுவை தாங்கிக் கிறிஸ்துவை
பின் செல்வாய் ஆயுள் முற்றுமே;
மகிமை கிரீடம் சூடுவாய்
சிலுவை தாங்கின் மட்டுமே.

6. திரியேகரான மா கர்த்தா,
என்றென்றும் போற்றப்படுவீர்;
மேலோக நித்திய வாழ்வுக்கே
அடியாரை நடத்துவீர்.

**481** Ad Inferos **பா.314**
A.M.122 8,7,8,7

1. **வாழ்க, சிலுவையே வாழ்க!**
பாரமற்ற பாரமே
உன்னை முழு மனதார
தோள் மேல் ஏற்றிக் கொள்வேனே.

2. இந்த நிந்தை லச்சை அல்ல,
இது வெட்கம் அல்லவே;
ஏனெனில் பொல்லாப்புக்கல்ல
நன்மைக்காக வருதே.

3. உலகத்தின் ஜோதியான
இயேசுதாமும் நிந்தைக்கே
ஏதுவாகி, ஈனமான
சிலுவையில் மாண்டாரே.

4. சிலுவை சுமந்தோராக
அவரைப் பின்பற்றுவோம்;
தீரங்கொண்டு வீரராகத்
துன்பம் நிந்தை சகிப்போம்.

5. நேசர் தயவாய் நம்மோடு
சொல்லும் ஒரு வார்த்தையே
துக்கத்தை எல்லாம் கட்டோடு
நீங்கிப் போகச் செய்யுமே.

6. சாகும்போது, திறவுண்ட
வானத்தையும், அதிலே
மகிமையினால் சூழுண்ட
இயேசுவையும் காண்போமே.

7. வாழ்க, சிலுவையே! வாழ்க,
மோட்சத்தின் முன் தூதனே!
நீதிமான்கள் இளைப்பாற
நேர் வழியாம் வாசலே!

**482** O God of Bethel By whose Hand **பா.315**

A.M.238 C.M.

1. **அன்போடு எம்மைப் போஷிக்கும்**
பெத்தேலின் தெய்வமே
முன்னோரையும் நடத்தினீர்
கஷ்டம் இவ்வாழ்விலே.

அட்டவணை

2. கிருபாசனமுன் படைப்போம்
எம் ஜெபம் ஸ்தோத்ரமும்;
தலைமுறையாய்த் தேவரீர்
எம் தெய்வமாயிரும்.

3. மயங்கும் ஜீவ பாதையில்
மெய்ப் பாதை காட்டிடும்;
அன்றன்றுமே நீர் தருவீர்
ஆகாரம் வஸ்திரமும்.

4. இஜ்ஜீவிய ஓட்டம் முடிந்து,
பிதாவின் வீட்டினில்
சேர்ந்திளைப்பாறுமளவும்
காப்பீர் உம் மறைவில்.

5. இவ்வாறான பேர் நன்மைக்காய்
பணிந்து கெஞ்சினோம்;
நீர் தாம் எம் தெய்வம் என்றுமே,
சுதந்தரமுமாம்.

**483** Lead us O Father in the Paths **பா.318**

A.M.31 II 10,10,10,10

1. **உம் சார்பினில் நடத்தும், தந்தையே;**
உம் துணையின்றித் தவறுவோமே,
சந்தேகம் சூழும், துக்கம் மிஞ்சிடும்;
மெய் வழி கிறிஸ்து மூலம் நடத்தும்.

2. சத்தியத்தில் நடத்தும், தந்தையே;
உம் துணையின்றி கேடு சூழுமே;
வாணாள் சிற்றின்ப மாய்கையால் கெடும்,
சற்றும் நம்பிக்கையற்றே வாடிடும்.

அட்டவணை

3. சன்மார்க்கத்தில் நடத்தும், தந்தையே;
உம் துணையின்றி வழி காணோமே;
கார்மேகம் மூடி இருள் சூழுவோம்,
உம்மாலே சேதமின்றிச் செல்லுவோம்.

4. விண் ஓய்வுக்கு நடத்தும், தந்தையே;
காடுமேடான பாதை என்றுமே
உம் சித்தம்போலே துன்பம் இன்பமும்
தந்தடியாரை வானோர் ஆக்கிடும்.

**484** He Leadeth me O blessed thought **பா.320**
S.S.542 L.M.

1. **என் முன்னே மேய்ப்பர் போகிறார்**
நல் மேய்ப்பராகக் காக்கிறார்;
ஓர் காலும் என்னைக் கைவிடார்;
நேர் பாதை காட்டிப் போகிறார்.

முன் செல்கின்றார்! முன் செல்கின்றார்!
என் முன்னே சென்றுபோகிறார்
நல் மேய்ப்பர் சத்தம் அறிவேன்
அன்போடு பின்சென்றேகுவேன்.

2. கார் மேகம் வந்து மூடினும்,
சீர் ஜோதி தோன்றி வீசினும்,
என் வாழ்வு தாழ்வில் நீங்கிடார்;
என்றைக்கும் முன்னே போகிறார்.

3. மெய்ப் பாதை காட்டிப் பின் செல்வேன்
தெய்வீக கையால் தாங்குமேன்;
எவ்விக்கினம் வந்தாலும் நீர்
இவ்வேழை முன்னே போகிறீர்.

அட்டவணை

4. ஒப்பற்ற உம் காருணியத்தால்
இப்பூமி பாடு தீருங்கால்,
நீர் சாவை வெல்லச் செய்குவீர்
பேரின்பம் காட்டி முன்செல்வீர்.

**Lead Kindly light**

**485** Lux Benigna, Sandon **பா.323**

A.M.266 I, II 10,4,10,4,10,10

1. **காரிருளில் என் நேச தீபமே,**
**நடத்துமேன்;**
வேறொளியில்லை, வீடும் தூரமே
நடத்துமேன்;
நீர் தாங்கின் தூரக்காட்சி ஆசியேன்;
ஓர் அடி மட்டும் என் முன் காட்டுமேன்.

2. என் இஷ்டப்படி நடந்தேன், ஐயோ!
முன்னாளிலே
ஒத்தாசை தேடவில்லை இப்போதோ
நடத்துமே;
உல்லாசம் நாடினேன், திகிலிலும்
வீம்புகொண்டேன் அன்பாக மன்னியும்.

3. இம்மட்டும் என்னை ஆசீர்வதித்தீர்;
இனி மேலும்
காடாறு சேறு குன்றில் தேவரீர்
நடத்திடும்;
உதய நேரம் வரக் களிப்பேன்;
மறைந்து போன நேசரைக் காண்பேன்.

அட்டவணை

**486** Guide Me O THou Great Jehovah **பா.324**

A.M.281 *Mannheim* 8,7,8,7,4,7

1. **பாதை காட்டும், மாயெகோவா,**
பரதேசியான நான்
பலவீனன், அறிவீனன்;
இவ்வு லோகம் காடுதான்;
வானாகாரம்
தந்து என்னைப் போஷியும்.

2. ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றை
நீர் திறந்து தாருமேன்;
தீப மேக ஸ்தம்பம் காட்டும்
வழியில் நடத்துமேன்;
வல்ல மீட்பர்!

என்னைத் தாங்   கும், இயேசுவே.

3. சாவின் அந்தகாரம் வந்து
என்னை மூடும் நேரத்தில்
சாவின் மேலும் வெற்றி தந்து,
என்னைச் சேர்ப்பீர் மோட்சத்தில்
கீத வாழ்த்தல்
உமக்கென்றும் பாடுவேன்

**487** Thy Way not mine O Lord **பா.325**

A.M.265 *Ibstone* 6,6,6,6

1. **மயங்கும் தாசனை**
நாதா, நீர் நடத்தும்
என் பாதை காட்டியாய்ச்
சகாயம் புரியும்.

அட்டவணை

2. நீர் காட்டும் பாதைதான்
எப்போதும் நல்லதே;
கற்று, நேர் ஆயினும்
விண் வீடு சேர்க்குமே.

3. என் சித்தம் ஆபத்தாம்
உம் சித்தம் நாடுவேன்
நான் செல்லும் பாதையை
நீர் காட்டக் கெஞ்சுவேன்.

4. நான் தேடும் ராஜியம்
உம் சொந்தமானதே
அங்கென்னைச் சேர்த்திடும்
பாதையும் உம்மதே.

5. உம் சித்தம்போல நீர்
என் பாத்திரம் எடுத்தும்
சந்தோஷம், சஞ்சலம்
ஏதாலும் நிரப்பும்.

6. வியாதி. சுகமோ
இஷ்டர் பகைஞரோ
வறுமை, செல்வமோ
சிறிதோ, பெரிதோ.

7. என் இஷ்டம் எதிலும்
வேண்டாம், என் நாதரே
என் வழி காட்டியாம்
நீர் சர்வ ஞானரே.

அட்டவணை

**488** Saviour Like a Shepherd Lead us **பா.326**

S.S.1164 *Neale* 8,7,8,7,8,7

1. **ரட்சா பெருமானே பாரும்**
புண்ணிய பாதம் அண்டினோம்
சுத்தமாக்கி சீரைத் தாரும்
தேடிவந்து நிற்கிறோம்!
இயேசு நாதா, இயேசு நாதா
உந்தன் சொந்தமாயினோம்

2. மேய்ப்பன் போல முந்திச் சென்றும்
பாதுகாத்தும் வருவீர்
ஜீவ தண்ணீரண்டை என்றும்
இளைப்பாறச் செய்குவீர்;
இயேசு நாதா, இயேசு நாதா
மேய்ச்சல் காட்டிப் போஷிப்பீர்.

3. நீதி பாதை தவறாமல்
நேசமாய் நடத்துவீர்
மோசம் பயமுமில்லாமல்
தங்கச் செய்து தாங்குவீர்
இயேசு நாதா, இயேசு நாதா
ஒருபோதும் கைவிடீர்.

4. ஜீவ கால பரியந்தம்
மேய்த்தும் காத்தும் வருவீர்
பின்பு மோட்ச பேரானந்தம்
தந்து வாழச் செய்குவீர்;
இயேசு நாதா, இயேசு நாதா
ஊழிகாலம் வாழ்விப்பீர்.

அட்டவணை

**489** Through All the Changing Scenes of Life **பா.327**

A.M.290 *Wilshire* C.M.

1. **வாழ்நாளில் யாது நேரிட்டும்**
எவ்வின்ப துன்பத்தில்
நான் போற்றுவேன், என்ஸ்வாமியை
சிந்தித்து ஆன்மாவில்.

2. சேர்ந்தே ஒன்றாய் நாம் போற்றுவோம்
அவர் மா நாமமே;
என் தீங்கில் கேட்டார் வேண்டலே
தந்தார் சகாயமே.

3. சன்மார்க்கர் ஸ்தலம் சூழ்ந்துமே
விண் சேனை காத்திடும்
கர்த்தாவைச் சாரும் யாவர்க்கும்
சகாயம் கிட்டிடும்.

4. அவர் மா அன்பை ருசிப்பின்
பக்தர் நீர் காண்பீராம்
பக்தரே பக்தர் மட்டுமே
மெய்ப் பேறு பெற்றோராம்.

5. கர்த்தாவுக்கஞ்சும் பக்தர்காள்!
அச்சம் வேறில்லையே;
களித்தவரைச் சேவிப்பின்
ஈவார் உம் தேவையே.

6. நாம் போற்றும் ஸ்வாமியாம் பிதா
குமாரன் ஆவிக்கே,
ஆதியில் போலும் எப்போதும்
மகிமை யாவுமே.

அட்டவணை

**490** **கி.கீ.184**

*மோகனம்* *சாபுதாளம்*

***பல்லவி***

**பாவியாகவே வாரேன்; பாவம் போக்கும் பலியாம்**
என் யேசுவே, வாரேன் – பாவியாகவே வாரேன்.

***சரணங்கள்***

1. பாவக்கறை போமோ என் பாடால்? உன் பாடாலன்றிப்
போவதில்லை என்றே பொல்லாத பாவியே நான் –பாவி

2. நீ வா, உன் பாவம் என்னால் நீங்கும் என்று சொன்னீரே
தேவா, உன் வாக்கை நம்பிச் சீர் கேடன் நீசனும் நான். –பாவி

3. பேய்மருள் உலகுடல் பேராசையால் மயங்கிப்
போயும் அவற்றோடு போரில் அயர்ச்சியாய் நான். –பாவி

4. ஜீவ செல்வ ஞான சீல சுகங்கள் அற்றேன்
தாவென்று வேண்டிய சாவில் சஞ்சரித்த நான். –பாவி

5. துன்பங்கள் நீக்கி உன்னைத் தூக்கி அணைப்பேன் என்றீர்;
இன்ப வாக்குத்தத்தத்தை இன்றைக்கே நம்பியே நான். –பாவி

6. உன்னைச் சேர ஒட்டாமல் ஊன்றிய தடை யாவும்
உன்னன்பால் நீங்கி நல் உயிர் அடைந்தோங்கவே நான். –பாவி

*–ஏ. வெப்*

**491** **கி.கீ.185**

*முகாரி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஐயையா, நான் வந்தேன் – தேவ**
ஆட்டுக்குட்டி, வந்தேன்

***சரணங்கள்***

1. துய்யன் நீர் சோரி பாவி எனக்காய்ச் சிந்தித்
துஷ்டன் எனை அழைத்தீர் – தயை
செய்வோம் என்றே; இதை அல்லாது போக்கில்லை
தேவாட்டுக்குட்டி, வந்தேன் –ஐயையா

அட்டவணை

2. உள்ளக் கறைகளில் ஒன்றேனும் தானாய்
ஒழிந்தால் வருவேன், என்று – நில்லேன்
தெள் உம் உதிரம் கறையாவும் தீர்த்திடும்
தேவாட்டுக்குட்டி வந்தேன் –ஐயையா

3. எண்ணம், வெளியே போராட்டங்கள், உட்பயம்
எத்தனை, எத்தனையோ! – இவை
திண்ணம் அகற்றி எளியனை ரட்சியும்;
தேவாட்டுக்குட்டி வந்தேன். –ஐயையா

4. ஏற்றுக்கொண்டு மன்னிப் பீந்து சுத்திகரித்
தென்னை அரவணையும் – மனம்
தேற்றிக் கொண்டேன் உந்தம் வாக்குத்தத்தங்களால்
தேவாட்டுக்குட்டி வந்தேன் –ஐயையா

5. மட்டற்ற உம் அன்பினால் தடை எதும்
மாறி அகன்றதுவே – இனி
திட்டமே உந்தம் உடைமை யான் என்றென்றும்
தேவாட்டுக்குட்டி வந்தேன் –ஐயையா

*–அ. வேதக்கண் உபாத்தியாயர்*

**492** **கி.கீ.188**

*தோடி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**யேசு ராசா – எனை – ஆளும் நேசா!**

***சரணங்கள்***

1. மாசில்லாமணி ஆன முச்சுடர்
மேசியா அரசே – மனு
வேலே, மாமறை நூலே தேவ செங்
கோலே, இங்கெனின் மேலே அன்பு செய் – யேசு

அட்டவணை

2. தாவீ தரசன் மைந்தா, – நின்
சரணம், சரணம் எந்தா! – சதா
னந்தா வா னந்தா, உ
வந்தாள் மிக வந்தனம், வந்தனம்! – யேசு

3. ஐயா, என் மனம் ஆற்றி, – உன
தடிமை என்றெனைத் தேற்றிக் – குண
மாக்கி, வினை நீக்கிக், கை
தூக்கி, மெய்ப் பாக்கியம் கொடு. – யேசு

4. சுத்த திரித்துவ வஸ்துவே – சுவி
சேட மகத்துவ கிறிஸ்துவே, – பரி
சுத்தனே, கரி சித்தெனை
இரட்சித் தடிமை கொள்; நித்தியம் தோத்திரம். – யேசு

5. மங்களம் ஈசாவே – வளம் மிகும்
சங்கையின் ராசாவே – நரர்
வாழ்வே, மன்னாவே, மெய்த்
தேவே உமக் கோசன்னாவே. – யேசு

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**493** **கி.கீ.192**

*பைரவி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**விந்தை கிறிஸ்தேசு ராசா!**
உந்தஞ் சிலுவை என் மேன்மை

**அனுபல்லவி**

சுந்தர மிகும் இந்த பூவில்
எந்த மேன்மைகள் எனக்கிருப்பினும் – விந்தை

அட்டவணை

**சரணங்கள்**

1. திரண்ட ஆஸ்தி, உயர்ந்த கல்வி
செல்வாக்குகள் மிக விருப்பினும்
குருநசை நோக்கி பார்க்க எனக்கு
உரிய பெருமைகள் யாவும் அற்பமே. -விந்தை

2. உம் குருசே ஆசிக்கெல்லாம்
ஊற்றாம் வற்றா ஜீவ நதியாம்
துங்க ரத்த ஊற்றில் மூழ்கித்
தூய்மையடைந்தே மேன்மையாகினேன் - விந்தை

3. சென்னி, விலா, கை, கானின்று
சிந்துதோ! துயரோடன்பு;
மன்னா, இதைப் போன்ற காட்சி
எந்நாளிலுமே எங்கும் காணேன் - விந்தை

4. இந்த விந்தை அன்புக் கீடாய்
என்ன காணிக்கை ஈந்திடுவேன்;
எந்த அரும் பொருள் ஈடாகும்?
என்னை முற்றிலும் உமக்களிக்கிறேன் - விந்தை

*-வே. சந்தியாகு*

**494** **கி.கீ.193**

*யமுனா கல்யாணி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**ஆசையாகினேன் கோவே – உனக்**
கனந்த ஸ்தோத்திரம், தேவே!

***அனுபல்லவி***

யேசு கிறிஸ்து மாசத்துவத்து ரட்சகா, ஒரே தட்சகா! – ஆசை

***சரணங்கள்***

1. வேதா, ஞானப் பர்த்தா, – என் – தாதா நீயே கர்த்தா
மா தாரகம் நீ என்றே, பரமானந்தா, சச்சிதானந்தா. – ஆசை

அட்டவணை

2. கானான் நாட்டுக் கரசே – உயர் – வான் நாட்டார்தொழும் சிரசே
நானாட்ட முடன் தேடித் தேடி நாடிப், பதம் பாடி –ஆசை

3. வீணாய் காலம் கழித்தேன் – சற்றும் – தோணாமல் நின்று விழித்தேன்
காணா தாட்டைத் தேடிச் சுமந்த கருத்தே, எனைத் திருத்தே –ஆசை

4. வந்தனம், வந்தனம், யோவா – நீ – சந்ததம் சந்ததம் கா வா,
விந்தையாய் உனைப் பணிந்தேன், சத்ய வேதா, யேசு நாதா! –ஆசை

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**495** **கி.கீ.196**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**நம்பி வந்தேன் மேசியா, நான் நம்பிவந்தேனே – திவ்ய**
சரணம்! சரணம்! சரணம் ஐயா, நான் நம்பிவந்தேனே –நான்

***சரணங்கள்***

1. தம்பிரான் ஒருவனே, தம்பமே தருவனே – வரு
தவிது குமர குரு பரமனுவேலே, நம்பிவந்தேனே –நான்

2. நின்பாத தரிசனம் அன்பான தரிசனம் – நித
நிதசரி தொழுவ திதம் எனவும் உறுதியில் நம்பி வந்தேனே –நான்

3. நாதனே, கிருபைகூர், வேதனே, சிறுமை தீர் – அதி
நலம் மிகும் உனதிரு திருவடி அருளே நம்பி வந்தேனே –நான்

4. பாவியில் பாவியே, கோவியில் கோவியே – கன
பரிவுடன் அருள்புரி, அகல விடாதே, நம்பி வந்தேனே –நான்

5. ஆதி ஓலோலமே பாதுகா காலமே – உன
தடிமைகள் படுதுயர் அவதிகள் மெத்த நம்பி வந்தேனே –நான்

*–வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

**496** **கி.கீ.199**

*உசேனி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**என் உள்ளங் கவரும் நீர் மரித்த**
இன்பக் குருசண்டை இன்னும் நெருங்கிட

***அனுபல்லவி***

என்பாவம் போக்கவே ஈட்டியால் குத்துண்டு
இரத்தம், தண்ணீர் வழிந்தோடும் விலாவண்டை -என்

***சரணங்கள்***

1. உந்தன் மகா இன்ப சத்தம் நான் கேட்டவன்
உமதாச்சரிய அன்பை உணர்ந்தவன்
எந்தையே, நானும்மைச் சேர்ந்தவனாயினும்
இன்னும் நெருங்கி நான் உம்மண்டை சேர்ந்திட -என்

2. சுத்தக் கிருபையின் வல்லமையால் என்னை
முத்திரியும் உமக்கூழியம் செய்திட
அத்தனே உம்மில் நல் நம்பிக்கையாய் உந்தன்
சித்தமே என் சித்தமாகப் பிழைத்திட -என்

3. உந்தனடிதனில் உறைந்து தனித்து
ஓர் மணி நேரம் கழிப்பதே பாக்கியம்
என் தேவனே, அதி நேசமாய் உம்முடன்
இன்ப சம்பாஷணை செய்வதே ஆனந்தம் -என்

4. அம்பரா, மரண ஆழி தாண்டும் வரை
அறிய முடியா அன்பின் ஆழம் உண்டு
என் பரனே, உந்தன் அன்பின் ஆழத்தை நான்
இம்மையில் கூடியமட்டும் அறிந்திட -என்

*-வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

**497** **கி.கீ.201**

*உசேனி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**பாதம் ஒன்றே வேண்டும் – இந்தப்**
பாரில் எனக்கு மற்றேதும் வேண்டாம் – உன்

**சரணங்கள்**

1. நாதனே, துங்க மெய் – வேதனே பொங்குநற்
காதலுடன் துய்ய – தூதர் தொழுஞ் செய்ய –பாதம்

2. சீறும் புயலினால் – வாரிதி பொங்கிடப்
பாரில் நடந்தாற்போல் – நீர்மேல் நடந்த உன் –பாதம்

3. வீசும் கமழ் கொண்ட வாசனைத் தைலத்தை
ஆசையுடன் – மரி – பூசிப் பணிந்த பொற் –பாதம்

4. போக்கிடமற்ற எம் ஆக்கினை யாவையும்,
நீக்கிடவே மரந் – தூக்கி நடந்த நற் –பாதம்

5. நானிலத்தோர் உயர் வான் நிலத் தேற வல்
ஆணி துளைத்திடத் – தானே கொடுத்த உன் –பாதம்

6. பாதம் அடைந்தவர்க் – காதரவாய்ப் பிர
சாதம் அருள் யேசு – நாதனே என்றும் உன் –பாதம்

–யாழ்ப்பாணப் பாடல்

**498** **கி.கீ.202**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1. **வாரும் ஐயா, போதகரே,**
வந்தெம்மிடம் தங்கியிரும்,
சேரும் ஐயா பந்தியினில்,
சிறியவராம் எங்களிடம்.

அட்டவணை

2. ஒளிமங்கி இருளாச்சே,
உத்தமனே, வாரும் ஐயா!
கழித்திரவு காத்திருப்போம்
காதலனே, கருணை செய்வாய்.

3. நான் இருப்பேன், நடுவில் என்றாய்
நாயன் உன் நாமம் நமஸ்கரிக்க
தாமதமேன் தயை புரிய
தற்பரனே, நலம் தருவாய்.

4. உன்றன் மனை திருச்சபையை
உலகமெங்கும் வளர்த்திடுவாய்
பந்தமறப் பரிகரித்தே
பாக்யம் அளித் தாண்டருள்வாய்.

*–வேதநாயகம் சாஸ்திரிகள்*

**499** **கி.கீ.205**

*காம்போதி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஐயா, உமது சித்தம் ஆகிடவே வேணும்**

***அநுபல்லவி***

மெய்யாய் எனது சித்தம் வெகுமோசமே காணும் – ஐயா

***சரணங்கள்***

1. ஆடு போல் வழி தப்பி அவனவன் வழியொப்பிக்
கேடடைந்தோர் பாவத்தைக் கிறிஸ்துமேல் சுமத்தினீர் –ஐயா
2. ஜீவனோ மரணமோ, செல்வமோ வறுமையோ
யாவிலெனை நிறுத்த தேவரீர் நினைக்கினும் –ஐயா
3. வசை, இசை, பகை, நேசம் வாழ்வுயர் வதிமோசம்
பசி, நிருவாணம், நாசம், பாடு, நோயடைகினும் –ஐயா
4. என்னிஷ்டம் வாயாததால் எத்தனை துயர் கொண்டேன்
பொன்னடிக் கீழடங்கிப் புகழுமக்கென்று வாழ்வேன் –ஐயா
5. குயவன்கைக் களிமண்ணாய்க் குருவே உமக்கமைவேன்
நயமிது வென்றறிந்த ஞானமுள்ள பிதாவே! –ஐயா

*–ஜி.சே. வேதநாயகம்*

**500** **கி.கீ.206**

*நாதநாமக்கிரியை* *ரூபகதாளம்*

***பல்லவி***

**நினையேன், மனம், நினையேன் தினம்**
உனை மீட்ட யேசுவையே.

***அனுபல்லவி***

கன மேவிய மனு வேலனைக் கன காசன சுதனை – நினை

***சரணங்கள்***

1. கவனமுடன் நீடி, உனக்காக அருள் தேடிப்
புவன மதில் பிறந்து திவ்ய புதுமை மிகச் சிறந்து,
தவன மறு ஆத்மா ஜீவ தண்ணீர் உண, சும்மா
பவம் நீக்கிய வானாசனப் பதியை, சுரர் கதியை. –நினை

2. நரக அழலாலே கெடு நாசம்வந்த காலே
உருகி, மனம் இரங்கித் தொலைத்துண்மையுடன் இணங்கி
பரமனோடு உறவாக்கி, மெய்ப்பலனும் பெறத்தாக்கி
பெருக நலம் புரிந்தோன் மறை பேதம் இன்றி அறைந்தோன். –நினை

3. ஜெயமும் புத்ர சுவிகாரமும், சிறந்த நீதியும், மகா
நயந்த பரிசுத்தம் தேவ ஞானமுடன் மீட்பும்
சுயமாக்கியும் அளித்தும் தனதுயிரைப் பலிகொடுத்தும்
பயன் ஏலவே, தூய ஆவியைப் பரிந்தோனையே கனிந்தே –நினை

*–ஆ. அல்லின்*

**501** **கி.கீ.208**

*பியாக்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**என் மீட்பர் உயிரோடிருக்கையிலே எனக்**
**கென்ன குறைவுண்டு? நீ சொல், மனமே**

அட்டவணை

***சரணங்கள்***

1. என்னுயிர் மீட்கவே தன்னுயிர் கொடுத்தோர்,
என்னோடிருக்கவே எழுந்திருந்தோர்;
விண்ணுலகுயர்ந்தோர், உன்னதஞ் சிறந்தோர்
மித்திரனே, சுகபத்திர மருளும் –என்

2. பாபமோ, மரணமோ, நரகமோ, பேயோ,
பயந்து நடுங்கிட ஜெயஞ் சிறந்தோர்
சாபமே தீர்த்தோர் சற்குருநாதன்;
சஞ்சலமினியேன்? நெஞ்சமே, மகிழாய் –என்

3. ஆசிசெய்திடுவார், அருள்மிக அளிப்பார்
அம்பரந் தனிலெனக்காய் ஜெபிப்பார்;
மோசமே மறைப்பார், முன்னமே நடப்பார்;
மோட்ச வழி சத்யம் வாசல் உயிரெனும் –என்

4. கவலைகள் தீர்ப்பார், கண்ணீர் துடைப்பார்
கடைசிமட்டுங் கைவிடா திருப்பார்;
பவமனிப்பளிப்பார், பாக்கியங் கொடுப்பார்
பரம பதவியினுள் என்றனை எடுப்பார் –என்

5. போனது போகட்டும், புவிவசை பேசட்டும்
பொல்லான் அம்புக ளெய்திடட்டும்,
ஆனது ஆகட்டும், அருள் மழை பெய்திடும்
அன்பு மிகும் பேரின்ப மெனக்கருள் –என்

**502** **கி.கீ.212**

*புன்னாகவராளி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஆதியாம் மகாராசனே, – எந்த வேளையும்**
அடியனோடிரும், ஈசனே

***அனுபல்லவி***

அட்டவணை

தீதில்லா சருவேசா, தேசுறும் பிரகாசா,
பாதகன் யான் மிகு பலவீனன் ஆனதால் –ஆதியாம்

1. பாவிபெலனால், ஐயனே, – நின்றால் என்னைப்
பகைவர் ஜெயிப்பார், மெய்யனே;
தேவா, துணை நீர் ஐயனே; – சிறியனிடம்
சேர்ந்தே வசியும் துய்யனே
மேவும் தஞ்சம் எனக்கு வேண்டும் காவலன் நீரே,
சாவு வரையும் என்னைத் தாங்கி அரவணையும். –ஆதியாம்

2. இரக்கம் பொழிய வாருமே, – கிருபையாக,
இறைவா, என்னிடம் சேருமே;
உருக்கம் நிறைந்த நீருமே – அனவரதம்
உந்தம் அருளைத் தாருமே
செருக்காய் எம்மீதிகலோர் சேதம் செய்ய நினைக்கும்
திருக்கை அகற்றி என்னில் தினமும் அருள் புரியும்.
– ஆதியாம்

3. எந்தன் மரணமட்டுமே – அருகில் நீரே
இருந்தால் மகா இஷ்டமே
எந்த அகிதர் கெட்டுமே இமைப் பொழுதில்
ஏகிப் போவார் திட்டமே
தந்தை சுதன் நீரல்லால் தஞ்சம் வேறாருமில்லை
விந்தை மேவும் கதியில் மேன்மையுடன் வாழ்கவே.
– ஆதியாம்

*–ச. யோசேப்பு*

**503** **கி.கீ.214**

*ஆனந்தபைரவி* *ஆதிதாளம்*

1. **அடியேன் மனது வாக்கும் கொடிய நடத்தையுமே**
ஆவியால் சீர்படுத்தும் ஸ்வாமி

2. உமக்கே யான் சொந்தம்; தீயோர் தமக் கந்நியனாய்ப்போக
உதவும் எளியேனுக்கென சுவாமி

அட்டவணை

3. அன்பின் வடிவே, பாவத் துன்பம் இல்லாமல் வாழ
அடைந்தேன் உமை யான் சேரும் ஸ்வாமி

4. நீரே எனக்கு வேண்டும், தாரணி முற்றும் வேண்டாம்;
நீசனை ஆட்கொள்ளும், என் ஸ்வாமி

5. பூமியில் வசித்தும், நீர் தாமே எனது வாஞ்சை
புகலிடம் அளியும், என் ஸ்வாமி

6. சஞ்சல மேதெனக்கு? பஞ்சம் படைகளேது?
தஞ்சம் நீர் தாம் எனக்கென் ஸ்வாமி

7. விண்ணிலோரிடமும், யான் மண்ணுலகை வெறுக்க
மெய்த் தவமும் தாரும். என் ஸ்வாமி

*-தேவவரம் முன்சி*

**504** **கி.கீ.216**

*ஹரிகாம்போதி* *ஆதிதாளம்*

***பல்லவி***

தேவ பிதா என்றன் மேய்ப்பன் அல்லோ
சிறுமை தாழ்ச்சி அடைகிலனே

***அனுபல்லவி***

ஆவலதாய் எனைப் பைம்புன்மேல்
அவர் மேய்த் தமர் நீர் அருளுகின்றார் - தேவ

***சரணங்கள்***

1. ஆத்துமந் தன்னைக் குளிரப்பண்ணி
அடியேன் கால்களை நீதி என்னும்
நேர்த்தியாம் பாதையில் அவர் நிமித்தம்
நிதமும் சுகமாய் நடத்துகின்றார் - தேவ

2. சா நிழல் பள்ளத் திறங்கிடினும்
சற்றும் தீங்கு கண்டஞ்சேனே
வானபரன் என் னோடிருப்பார்
வளை தடியும் கோலுமே தேற்றும் - தேவ

அட்டவணை

3. பகைவர்க் கெதிரே ஒரு பந்தி
பாங்காய் எனக்கென் றேற்படுத்திச்
சுக தயிலம் கொண்டென் தலையைச்
சுபமாய் அபிஷேகம் செய்குவார் – தேவ

4. ஆயுள் முழுவதும் என் பாத்ரம்
அருளும் நலமுமாய் நிரம்பும்,
நேயன் வீட்டினில் சிறப்போடே
நெடுநாள் குடியாய் நிலைத்திருப்பேன் – தேவ

*–த. யோசேப்பு*

**505** **கி.கீ.217**

*சாமா* *சாபுதாளம்*

***பல்லவி***

**யேசு நேசிக்கிறார் – யேசு நேசிக்கிறார்;**
யேசு என்னையும் நேசிக்க யான் செய்த
தென்ன மா தவமோ!

***சரணங்கள்***

1. நீசனாமெனைத்தான் இயேசு நேசிக்கிறார்
மாசில்லாத பரன் சுதன்றன் முழு
மனதால் நேசிக்கிறார் – இயேசு

2. பரம தந்தை தந்த பரிசுத்த வேதம்
நரராமீனரை நேசிக்கிறாரென
நவிலல் ஆச்சரியம் – இயேசு

3. நாதனை மறந்து நாட்கழித் துலைந்தும்
நீதன், யேசெனை நேசிக்கிறாரெனல்
நித்தம் ஆச்சரியம் – இயேசு

4. ஆசை யேசுவென்னை அன்பாய் நேசிக்கிறார்
அதை நினைத்தவர் அன்பின் கரத்துளே
ஆவலாய்ப் பறப்பேன் – இயேசு

அட்டவணை

5. ராசன் இயேசுவின் மேல் இன்ப கீதஞ் சொலில்,
ஈசன் யேசெனைத் தானேசித்தாரென்ற
இணையில் கீதஞ்சொல்வேன் – இயேசு

*–ர. பிரெக்கன்ரிஜ்*

**506** **கி.கீ.219**

*தேவகாந்தாரி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**தந்தேன் என்னை இயேசுவே**
இந்த நேரமே உமக்கே.

***அனுபல்லவி***

உந்தனுக்கே ஊழியஞ்செய்யத்
தந்தேன் என்னைத் தாங்கியருளும் – தந்தேன்

***சரணங்கள்***

1. ஜீவ காலம் முழுதும்
தேவ பணி செய்திடுவேன்
பூவில் கடும் போர் புரிகையில்
காவும் உந்தன் கரத்தினில் வைத்து – தந்தேன்

2. உலகோர் என்னை நெருக்கிப்
பலமாய் யுத்தம் செய்திடினும்
நலமாய் சர்வ ஆயுதம் பூண்டு
நானிலத்தினில் நாதா வெல்லுவேன் – தந்தேன்

3. உந்தன் சித்தமே செய்வேன்
எந்தன் சித்தம் ஒழித்திடுவேன்
எந்த இடம் எனக்குக் காட்டினும்
இயேசுவே அங்கே இதோ போகிறேன் – தந்தேன்

4. கஷ்டம் நஷ்டம் வந்தாலும்
துஷ்டர் கூடிச் சூழ்ந்திட்டாலும்
அஷ்டதிக்கும் ஆளும் தேவனே
அடியேன் உம்மில் அமரச் செய்திடும் – தந்தேன்

அட்டவணை

5. ஒன்றுமில்லை நான் ஐயா!
உம்மாலன்றி ஒன்றும் செய்யேன்
அன்று சீஷர்க்களித்த ஆவியால்
இன்றே அடியேனை நிரப்பும் – தந்தேன்

*–வே. சந்தியாகு*

**507** **கி.கீ.220**

*சங்கராபரணம்* *சாபுதாளம்*

***பல்லவி***

**என்னை ஜீவபலியாய் ஒப்புவித்தேன்**
ஏற்றுக் கொள்ளும் இயேசுவே.

***அனுபல்லவி***

அன்னை தந்தை உந்தம் சன்னதி முன்னின்று
சொன்ன வாக்குத் தத்த மல்லாது, இப்போது – என்னை

***சரணங்கள்***

1. அந்தகாரத்தினின்றும் பவப்பேய்
அடிமைத் தனத்தினின்றும்
சொந்த ரத்தக் கிரயத்தால் எனை மீட்ட
எந்தையே, உந்தனுக்கிதோ! படைக்கிறேன் –என்னை

2. ஆத்ம சரீரமதை உமக்கு
ஆதீன மாக்கி வைத்தேன்
பாத்ரமதாய் அதை பாவித்துக் கொள்ளக்
காத்திருக்கின்றேன், கருணைசெய் தேவா –என்னை

3. நீதியி னாயுதமாய் அவயவம்
நேர்ந்து விட்டேன் உமக்கு
ஜோதி பரிசுத்த ராலயமாகவே
சொந்தமாய்த் தந்தேன் என்றன் சரீரத்தை –என்னை

*–சா. சீமோன்*

அட்டவணை

**508** **கி.கீ.223**

*முகாரி* *சாபுதாளம்*

***பல்லவி***

**என் சிலுவை எடுத்து என் யேசுவே**
இச்சணம் பின்னே வாரேன்.

***அனுபல்லவி***

இந்நில மீதினில் எனக்காயுயிர் விட்டீர்
இரட்சகரே! எனக்குள்ள யாவும் விட்டு –என்

***சரணங்கள்***

1. உலகும்மை விட்டிடினும் – உம் தயையாயால்
உம்மைநான் பின் செல்லுவேன்
அலகை என் மேல் பாய்ந்து அதிகமாய் எதிர்த்தாலும்
அஞ்சாமல் போர்செய்து அவனை மேற்கொண்டு நான் –என்

2. என்றன் சுதந்தரத்தை – இழக்கினும்
சொந்தம் நீரே எனக்கு
பந்து சனங்களும் பற்றுறு நேசரும்
பாதைத்துப் பழிப்பின் என் பங்கு நீரல்லவோ! –என்

3. பாடுகள் பட்டிடுவேன் – உம்மோடு நான்
பாருநுகஞ் சுமப்பேன்
ஆடுகளுக்காக அரிய சீவன் தந்த
அன்பான மேய்ப்பரே, ஆடுகளை மேய்ப்பேன். –என்

4. ஆசை மேற்கொள்ள விடேன், – கெட்டலோக
பாசம் அணுகவிடேன்
ஈசன் லோகத்திலென்றும் நேசமுடனே தங்கி
மாசுகளற உந்தன் தாசனாய் விளங்கிட. –என்

*–வே. சந்தியாகு*

அட்டவணை

**509** Long in Darkness We Have Waited **பா.310**

A.M.403 8,7,8,7

1. **வல்ல இயேசு கிறிஸ்து நாதா,**
நல்ல நேச மீட்பர் நீர்;
பற்று, பாசம் கட்டு முற்றும்
அற்றுப் போகப் பண்ணுவீர்.

2. அருள் ஜோதி தோன்றிடாமல்,
இருள் மூடிக் கிடந்தோம்;
திக்கில்லாமல் பாவப் பற்றில்
சிக்கிக் கொண்டே இருந்தோம்.

3. பக்தி ஒன்றுமில்லை, பாரும்
சக்தியற்றுப் போயினோம்;
ஜீவ பாதை சென்றிடாமல்
பாவப் பாதை நடந்தோம்.

4. இயேசு நாதரே, இப்போது
நேசமாக நிற்கிறீர்;
"என்னை நம்பு, பாவம் நீக்கி
உன்னைக் காப்பேன்" என்கிறீர்.

5. நம்பி வந்து, பாவ நாசா
உந்தன் பாதம் அண்டினோம்;
தூய ரத்தம் பாயக் கண்டு,
தீய செய்கை வெறுத்தோம்.

6. பாவச் சேற்றிலே விழாமல்
தேவரீரே காத்திடும்;
வல்ல ஆவியாலே என்றும்
வெல்லச் செய்து ரட்சியும்.

அட்டவணை

Jesus I My Cross Have Taken

**510** *Austria* **பா.311**

A.M.292 I, S.S.319, 597 8,7,8,7 D

1. **சிலுவை சுமந்தோனாக,**
இயேசு உம்மைப் பற்றுவேன்;
ஏழைப் பரதேசியாக
மோட்ச வீடு நாடுவேன்
உற்றார், மேன்மை, ஆஸ்தி, கல்வி,
ஞானம், லோகம், அனைத்தும்
அற்பக் குப்பை என்று எண்ணி,
வெறுப்பேனே முற்றிலும்.

2. உமக்காகப் பாடுபட்டோன்
நஷ்டப்படமாட்டானே;
உமக்கென்று ஜீவன் விட்டோன்
சாகா ஜீவன் பெற்றானே;
உம்மை வெல்ல மீட்பர் என்று
சொல்லி, நித்தம் பற்றுவேன்;
கஸ்திப்பட்டும் சாவை வென்று,
வாடா கிரீடம் பெறுவேன்.

3. துஷ்டர் என்னைப் பகைத்தாலும்,
நீரே தஞ்சம் ஆகுவீர்;
கஸ்தி என்ன நேரிட்டாலும்
இனி மேன்மை தருவீர்;
உமதன்பு என்னைத் தேற்றத்,
துக்கம், பயமில்லையே,
நாதா, உம் பிரசன்னம் நீங்க,
இன்பமெல்லாம் துன்பமே.

அட்டவணை

4. நெஞ்சமே, உன் மேன்மை எண்ணு
வரும் செல்வம் நோக்கிப்பார்
மோட்ச நன்மை தேடிக்கொள்ளு
உன் சுதந்தரத்தைக் கா;
கொஞ்ச வேளைக்குள் பறந்து
இயேசு அண்டை சேருவாய்;
தெய்வ தூதரோடு நின்று
என்றென்றைக்கும் துதிப்பாய்.

**511** **கி.கீ.200**

*ஆனந்தபைரவி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**நம்பினேன், உன தடிமை நான், ஐயா– திடப்படுத்தி என்றனை**
நடத்திக் காப்பதுன் கடமை தான், ஐயா

***சரணங்கள்***

உம்பரும் புவி நண்பரும் மற்ற
உயிர்களும் பல பொருள்களும் தொழும்
தம்பிரானே, மெய் யம்பராபரா
தாசன் மீது நன் னேசு அருள் செய் – நம்பி

***சரணங்கள்***

1. தீதாம் என் பாவம் யாவையும் பொறுத்து – திருக்
கருணையின் அருள்
செய்து பின்வரும் இடர்களை அறுத்து,
வேதாந்தப்படி என்னைத் தான் வெறுத்து – நான்
உனைப்பின் செல்ல, உன்
மெய் அருளை என் உள்ளத்தில் நிறுத்து
ஆதாரம் எனக்கார், உனை அன்றி,
அம்புவியில் யான் நம்ப வேறுண்டோ? – உன்
பாதா தாரத்தில் ஒதுங்கினேன்; எனைப்
பாரும் கிருபையைத் தாரும், ஐயனே! – நம்பி

2. சுத்த இருதயத்தினைத் தருவாய் – பரிபூரணானந்த
ஜோதி ஆவியின் நல்துணை அருள்வாய்,
நித்தமும் பய பக்தியைத் தருவாய்; – நான் ஊழியம் செய்ய,
நீதனே, எந்தன்முன் எழுந்தருள்வாய்;
அத்தனும் அனு கூலனுமான
பத்தனே; பரிசித்தனே, உனைப்
பாடினேன்; கிருபை சூடி ஆள், ஐயா! – நம்பி

3. ஊக்கமும் மனத்தீர்க்கமும் வேணும் – சுவிசேஷ உரையை
உற்றுப் பார்த்ததில் தேறவும் வேணும்;
ஆக்கமும் அன்பர்ச் சேர்க்கையும் வேணும் – உனக்
கூழியம் செய்ய
ஆவியும் அதின் ஈவதும் வேணும்;
ஏக்கமும் மனக்கவலையும் நித்ய
இன்பமுள்ள உன் அன்பின் நல்திரு
வாக்கையே நோக்கி இருப்பதால் என்முன்
வாரும்; கிருபை தாரும், ஐயனே! – நம்பி

*–மரியான் உபதேசியார்*

**512** **கி.கீ.218**

*தேசிகதோடி* *சாபுதாளம்*

1. **பக்தியாய்ச் செபம் பண்ணவே**
சுத்தமாய்த் தெரியாதய்யா!
புத்தியோடும்மைப் போற்ற, நல்
சித்தம் ஈந்திடும், யேசுவே!

2. பாவப் பாதையை விட்டு நான்
ஜீவ பாதையில் சேர, நல்
ஆவி தந்தெனை ஆட்கொளும்
தேவ தேவ குமாரனே!

அட்டவணை

3. பொய்யும் வஞ்சமும் போக்கியே
மெய்யும் அன்பும் விடாமல் யான்
தெய்வமே உனைச் சேவித்திங்
குய்யும் நல்வரம் உதவுவாய்

4. அப்பனே! உனதன்பினுக்
கெப்படிப் பதில் ஈட்டுவேன்?
செப்பும் என்னிதயத்தையே
ஒப்படைத்தனன் உன்னதே

5. சிறுவன் நானுனைச் செவ்வையாய்
அறியவும், முழு அன்பினால்
நிறையுமுள்ள நிலைக்கவும்
இறைவனே! வரம் ஈகுவாய்

6. அண்ணலே! உனதாலயம்
நண்ணி, நல்லுணர்வோடுனை
எண்ணி யெண்ணி இறைஞ்ச, உன்
கண்ணில் இன்னருள் காட்டுவாய்.

*-ஹெ.ஆ. கிருட்டிணன்*

**513** **கி.கீ.393**

*ஸ்ரீரஞ்சினி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஆண்டவா, உன்றன் சேவைக்கடியேன் அர்ப்பணஞ் செய்யத்**
தூண்டும் உன் ஆவி அருள்வாய்

***அனுபல்லவி***

என்னைத் தியாகிக்க ஏவும்
உன் அனல் மூட்டிடுவாய்
இந்நிலம் தன்னில்மாளும்
மனுமக்கள் மீட்பிற்காக – ஆண்டவா

அட்டவணை

### *சரணங்கள்*

1. புசிக்கக் பண்டமில்லாமல்
பூவில் இல்லமுமே அன்றி,
நசித்து நலிந்து நாட்டில்
கசிந்து கண்ணீர் சொரிந்து
தேச மெல்லாம் தியங்கும்
நேசமக்கள் சேவைக்கே
நிமலா எனை ஏற்றுக்கொள். -ஆண்டவா

2. வறுமை வன் கடன் வியாதி
குருட்டாட்டம் கட்டி கடும்
அறிவீனம் அந்தகாரம்
மருள்மூடி மக்கள் வாடும்,
தருணம் இக்காலமதால்
குருநாதா உனதன்பை
அருள்வாய், அடியேனுக்கே. -ஆண்டவா

3. அருமை ரட்சகா, உன்றன்
அரும்பாடு கண்ணீர்த் தியாகம்,
பேரன்பு பாரச் சிலுவை
சருவமும் கண்ட என்றன்
இருதயம் நைந்துருகி
வெறும் பேச்சாய் நின்றிடாமல்
தருணம் எனையே தந்தேன். -ஆண்டவா

4. உலகே உனதாயினும்
தலைசாய்க்கத் தாவில்லாமல்
நலமே புரிந்து திரிந்தாய்
எல்லாம் துறந்து யான் உன்
நல்லாவி கொண்டுழைக்க
வல்லா, உனின் சிலுவை
அல்லால் வழி வேறுண்டோ? -ஆண்டவா

*-ஏசுதாசன் சவரிராயன்*

அட்டவணை

# 5. விசுவாசம்

**514** *Innsbruck* **பா.328**

A.M.86, 276 I 8,8,6 D

1. **அஞ்சாதிரு என் நெஞ்சமே,**
உன் கர்த்தர் துன்ப நாளிலே
கண்பார்ப்போம் என்கிறார்;
இக்கட்டில் திகையாதிரு,
தகுந்த துணை உனக்கு
தப்பாமல் செய்குவார்.

2. தாவீதும் யோபும் யோசேப்பும்
அநேக நீதிமான்களும்
உன்னிலும் வெகுவாய்
கஸ்தியடைந்தும் பக்தியில்
வேரூன்றி ஏற்ற வேளையில்
வாழ்ந்தார்கள் பூர்த்தியாய்.

3. கருத்தாய் தெய்வ தயவை
எப்போதும் நம்பும் பிள்ளையைச்
சகாயர் மறவார்;
மெய் பக்தி உன்னில் வேர் கொண்டால்
இரக்கமான கரத்தால்
அணைத்து பாலிப்பார்.

4. என் நெஞ்சமே, மகிழ்ந்திரு;
பேய், லோகம், துன்பம் உனக்கு
பொல்லாப்புச் செய்யாதே;
இம்மானுவேல் உன் கன்மலை
அவர் மேல் வைத்த நம்பிக்கை
அபத்தம் ஆகாதே.

அட்டவணை

**515** I am Trusting Three Lord Jesus **பா.329**

G.B.417 *Bullinger* 8,5,8,3

1. **அருள் நாதா நம்பி வந்தேன்**
நோக்கக்கடவீர்
கைமாறின்றி என்னை முற்றும்
ரட்சிப்பீர்.

2. தஞ்சம் வேண்டி நம்பி வந்தேன்
திருப் பாதத்தில்;
பாவ மன்னிப்பருள்வீர் இந்
நேரத்தில்.

3. தூய்மை வேண்டி நம்பி வந்தேன்
உந்தன் ஆவியால்,
சுத்தி செய்வீர் மாசில்லாத
ரத்தத்தால்.

4. துணை வேண்டி நம்பி வந்தேன்,
பாதை காட்டுவீர்;
திருப்தி செய்து நித்தம் நன்மை
நல்குவீர்.

5. சக்தி வேண்டி நம்பி வந்தேன்;
ஞானம் பெலனும்
அக்னி நாவும் வல்ல வாக்கும்
ஈந்திடும்.

6. இயேசுநாதா நம்பி வந்தேன்
தவறாமலே
என்னை என்றும் தாங்கி நின்று
காருமே.

அட்டவணை

| | | |
|---|---|---|
| **516** | There is A Fountain Filled with Blood | **பா.331** |
| S.S.663 | *Belmont* | C.M. |

1. **இம்மானுவேலின் இரத்தத்தால்**
நிறைந்த ஊற்றுண்டே;
எப்பாவத் தீங்கும் அதனால்
நிவிர்த்தியாகுமே

2. மா பாவியான கள்ளனும்
அவ்வூற்றில் மூழ்கினான;
மன்னிப்பும் மோட்சானந்தமும்
அடைந்து பூரித்தான்

3. அவ்வாறு நானும் இயேசுவால்
விமோசனம் பெற்றேன்;
என் பாவம் நீங்கிப் போனதால்
ஓயாமல் பாடுவேன்.

4. காயத்தில் ஓடும் ரத்தத்தை
விஸ்வாசத்தால் கண்டேன்;
ஒப்பற்ற மீட்பர் நேசத்தை
எங்கும் பிரஸ்தாபிப்பேன்

5. விண்ணில் வல்ல நாதரை
நான் கண்டு பூரிப்பேன்;
என்தனை மீட்ட நேசத்தைக்
கொண்டாடிப் போற்றுவேன்

| | | |
|---|---|---|
| **517** | Jesus Keep me Near The Cross | **பா.333** |
| S.S.134 | | 7,6,7,6 |

1. **இயேசுவே! கல்வாரியில்**
என்னை வைத்துக்கொள்ளும்;
பாவம் போக்கும் ரத்தமாம்
திவ்விய ஊற்றைக் காட்டும்.

அட்டவணை

*மீட்பரே! மீட்பரே!*
*எந்தன் மேன்மை நீரே!*
*விண்ணில் வாழுமளவும்*
*நன்மை செய்குவீரே!*

2. பாவியேன் கல்வாரியில்
ரட்சிப்பைப் பெற்றேனே
ஞான ஜோதி தோன்றவும்
கண்டு பூரித்தேனே.

3. ரட்சகா! கல்வாரியின்
காட்சி கண்டோனாக
பக்தியோடு ஜீவிக்க
என்னை ஆள்வீராக.

4. இன்னமும் கல்வாரியில்
ஆவலாய் நிற்பேனே;
பின்பு மோட்ச லோகத்தில்
என்றும் வாழுவேனே.

Nearer My God to Thee

**518** **பா.336**

S.S.581 6,4,6,4,6,6,6,4

1. **உம்மண்டை, கர்த்தரே,**
நான் சேரட்டும்;
சிலுவை சுமந்து
நடப்பினும்;
என் ஆவல் என்றுமே
உம்மண்டை கர்த்தரே
நான் சேர்வதே.

அட்டவணை

2. தாசன் யாக்கோபைப் போல்
ராக் காலத்தில்
திக்கற்றுக் கல்லின் மேல்
தூங்குகையில்,
என்தன் கனாவிலே
உம்மண்டை கர்த்தரே,
இருப்பேனே.

3. நீர் என்னை நடத்தும்
பாதை எல்லாம்
விண் எட்டும் ஏணிபோல்
விளங்குமாம்;
தூதர் அழைப்பாரே
உம்மண்டை கர்த்தரே
நான் சேரவே.

4. விழித்து உம்மையே
நான் துதிப்பேன்.
என் துயர்க் கல்லை உம்
வீடாக்குவேன்;
என் துன்பத்தாலுமே
உம்மண்டை கர்த்தரே
நான் சேர்வேனே.

**519** Nativity **பா.338**

A.M.299 I C.M.

1. **என் ஆண்டவா, என் பாகமே,**
நீர் நித்த மாட்சிமை;
விஸ்தார வையகத்திலே
நீரே என் வாஞ்சனை.

அட்டவணை

2. இவ் வானமும் இப்பூமியும்
மிகுந்த அற்பமே;
இவைகளில் ஏதாகிலும்
உமக்கொப்பாகாதே.

3. பூலோக ஆஸ்திகள் எல்லாம்
எனக்கிருந்துமே
என் நெஞ்சில், கர்த்தரே, நீர்தாம்
தங்கா விட்டால் வீணே.

4. சிநேகம், சுகம், செல்வமும்
உம் ஈவாய்ப் பெறுவேன்;
நன்மைக்கு ஊற்றாம் உம்மையும்
நான் நாடித் தேடுவேன்.

5. நீர் நிறைவான ஆஸ்தியே
நீரே சமஸ்தமும்;
என் ஏழை நெஞ்சை, கர்த்தரே
உம்மாலே நிரப்பும்.

**520** My Hope is Built On Nothing Less **பா.339**

S.S.902 8,8,8,8,8,8

1. **என் மீட்பர் ரத்தம் சிந்தினார்,**
மா நீதியும் சம்பாதித்தார்;
என் சொந்த நீதி வெறுத்தேன்,
இயேசுவின் நாமம் நம்புவேன்;
நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்,
வேறஸ்திபாரம் மணல் தான்.

2. கார் மேகம் அவர் முகத்தை
மறைக்கும் காலம், அவரை
எப்போதும் போல நம்புவேன்
மாறாதவர் என்றறிவேன்
நான் நிற்கும் பாறை கிறிஸ்துதான்
வேறஸ்திபாரம் மணல் தான்.

3. மரண வெள்ளம் பொங்கினும்
என் மாம்சம் சோர்ந்து போயினும்
உம் வாக்குத்தத்தம் ஆணையும்
என் நெஞ்சை ஆற்றித் தேற்றிடும்
நான் நிற்கும் பாறை கிறிஸ்து தான்
வேறஸ்திபாரம் மணல் தான்.

4. நியாயத்தீர்ப்புக் காலத்தில்
எக்காள சத்தம் கேட்கையில்
அஞ்சேன் என் மீட்பர் நீதியே
அநீதன் என்னை மூடுமே
நான் நிற்கும் பாறை கிறிஸ்து தான்,
வேறஸ்திபாரம் மணல் தான்.

**521** Cruger **பா.342**

A.M.219, 604 I 7,6,7,6 D

1. **கர்த்தர் என் பக்கமாகில்**
எனக்குப் பயம் ஏன்?
உபத்திரவம் உண்டாகில்
மன்றாடிக் கெஞ்சுவேன்
அப்போதென் மேலே வந்த
பொல்லா வினை எல்லாம்
பலத்த காற்றடித்த
துரும்பு போலே ஆம்.

2. என் நெஞ்சின் அஸ்திபாரம்
மேலான கர்த்தரே;
அதாலே பக்தர் யாரும்
திடன் கொள்வார்களே
நான் ஏழைப் பலவீனன்,
வியாதிப்பட்டோனே
அவரில் சொஸ்தம், ஜீவன்
சமஸ்தமும் உண்டே.

அட்டவணை

3. என் நீதி இயேசுதானே
அவர் இல்லாவிட்டால்
பிதாவுக்கு முன் நானே
மா பாவியானதால்
விழிக்கவும் கூடாதே
என் இயேசுவன்றியே
ரட்சிப்புக் கிடையாதே;
என் மீட்பர் அவரே.

4. என் சாவு இயேசுவாலே
விழுங்கப்பட்டது;
இவர் இரக்கத்தாலே
என் பாவக் கேட்டுக்கு
நான் நன்றாய் நீங்கலானேன்
நான் நியாயத்தீர்ப்புக்கும்
பயப்படாதோனானேன்
வாழ்வெனக்கு வரும்

5. தெய்வாவி என்னில் தங்கி
என்னை நடத்தவே
பயம் எல்லாம் அடங்கி
திடனாய் மாறுதே
அப்பாவே என்று சொல்ல
அவர் என் நெஞ்சுக்கே
ஆற்றல் சகாயம் செய்ய
என் ஆவி தேறுதே

6. என் உள்ளமே களிக்கும்
துக்கிக்க வேண்டுமோ?
கர்த்தர் என் மேல் உதிக்கும்
பகலோன் அல்லவோ?
பரத்தில் வைக்கப்பட்ட
அநந்த பூரிப்பே
என் ஆவிக்கு பலத்த
திடன் உண்டாக்குமே.

அட்டவணை

**522** Clarion, Stuttgart **பா.345**

A.M.634, 76 8,7,8,7

1. **சேதம் அற, யாவும் வர**
கர்த்தர் ஆதரிக்கிறார்;
காற்றடித்தும், கொந்தளித்தும்
இயேசுவை நீ பற்றப்பார்.

2. இயேசு பாரார், அவர் காரார்
தூங்குவார் என்றெண்ணாதே;
கலங்காதே, தவிக்காதே
நம்பினோனை விடாரே.

3. கண்மூடாத உறங்காத
உன் கர்த்தாவைப் பற்றி, நீ
அவர் தாமே, காப்பாராமே
என்று அவரைப்பணி.

4. உன் விசாரம் மா விஸ்தாரம்
ஆகிலும் கர்த்தாவுக்கு
நீ கீழ்ப்பட்டு, கிலேசமற்று
அவருக்குக் காத்திரு.

5. தெய்வ கைக்கும் வல்லமைக்கும்
சகலமும் கூடாதோ?
எந்தச் சிக்கும் எந்தப் பிக்கும்
அவரால் அறும் அல்லோ

6. சீரில்லாத உன் ஆகாத
மனதுன்னை ஆள்வது
நல்லதல்ல, அதற்கல்ல
கர்த்தருக்குக் கீழ்ப்படு.

7. கர்த்தர் தந்த உன்மேல் வந்த
பாரத்தைச் சுமந்திரு
நீ சலித்தால், நீ பின்னிட்டால்
குற்றம் பெரிதாகுது.

அட்டவணை

8. ஆமேன், நித்தம் தெய்வ சித்தம்
செய்யப்பட்ட யாவையும்
நீர் குறித்து, நீர் கற்பித்து,
நீர் நடத்தியருளும்.

As helpless as a child who clings

**523** *Waldrons, St. Peter* **பா.346**

A.M.596 C.M.

1. **தந்தை தன் சிறு பாலனை**
கையேந்தித் தாங்குவான்;
சீராட்டப் பெற்ற பாலகன்
அபாயம் நினையான்.

2. அவ்வாறே என்னை, தந்தையே.
காப்பாற்றித் தாங்குவீர்;
என் பலவீனம் நீங்கவும்
கையேந்தி வருவீர்.

3. மாதாவின் நேச மடியில்
சாய்ந்தாடும் குழந்தை
தாயாரின் முகம் பார்க்கையில்
மறக்கும் கிலேசத்தை.

4. அவ்வாறே, நேச ரட்சகா
உம் அருள் முகத்தை
நான் பார்க்க, ஸ்திரமாக்குவீர்
என் விசுவாசத்தை.

5. தாய் தந்தைப் பக்கம் பாலரை
உட்கார வைக்குங்கால்,
சந்தோஷித்துள்ளம் களிப்பார்
பெற்றோரின் அன்பினால்.

அட்டவணை

6. அவ்வாறே திருப்பாதத்தில்
ஆனந்தம் அடைந்தேன்;
மேன்மேலும் அருள் நாதரே
பேன்பை ருசிப்பேன்.

**524** *Dix* **பா.347**

A.M.79 7,7,7,7,7,7

1. **தெய்வ ஆட்டுக்குட்டியே**
லோகத்தாரின் மீட்பரே,
உம்மால் மீட்கப்பட்ட நான்
தேவரீர்க்கு அடியான்;
நீர் என் கோட்டை தஞ்சமாம்,
ஆர் என் வாழ்வை நீக்கலாம்.

2. உம்மைப் பற்றும் நேசத்தை,
உம்மில் வைக்கும் பக்தியை
பேயும், கெட்ட லோகமும்
மூர்க்கமாய் விரோதிக்கும்;
இன்பம் துன்பம் நித்தமே
கண்ணியாக நிற்குமே.

3. கர்த்தரே, என் உள்ளத்தில்
அருள் தந்தென் மனதில்
அந்தகாரம் நீங்கிட
அன்பின் தீபம் ஸ்வாலிக்க
ஆவியின் நல் ஈவையும்
பூர்த்தியாக அளியும்

4. எந்த நாழிகையிலே
நீர் வந்தாலும் இயேசுவே,
உம்மையே நான் சந்திக்க
கண்ணால் கண்டு களிக்க,
நான் விழித்திருக்கவே
நித்தம் ஏவி வாருமே.

அட்டவணை

So weak am I O gracious Lord

**525** St. Peter **பா.348**

A.M.176 C.M.

1. **நான் பலவீன தோஷியாம்,**
நீர் தயா மூர்த்தியே;
நின்பாதத் தூளும் மேலிடும்
நீர்பந்த நீசனே.

2. எப்பாவம் வெட்கம் எட்டிடா
ஏகாந்த ஜோதியே,
என் பாவம் நிந்தை தாங்கினீர்
என் சொல்வேன் அன்பையே.

3. பிதாவின் மாட்சி ஆசனம்
ஆபாத்திர பாவிக்காய்
சுதா, நீர் நீத்து மாந்தர் தம்
சரீரம் எடுத்தீர்.

4. கை காலில் ஆணி பாய்ச்சுங்கால்
சகித்தீர் சாந்தமாய்;
ஐயா, எந்நாமம் சாற்ற உம்
பொறுமை தூய்மைக்கே!

5. அன்பே நீர் மாந்தன் ஆகினீர்
என் அன்பைப் பெற்றிட;
நான் பாவி, தோஷி, வெட்கத்தால்
முன்னிற்கத் துணியேன்.

6. உம் தயை அன்பால் மட்டுமே
நான் பாத்திரன் ஆயினேன்
உம் தாசர் காக்கும் வண்ணமே
காப்பீர் நீர் என்னையும்.

அட்டவணை

**526** Whom have I Lord in Heaven but Thee **பா.351**

S.S.845 8,6,8,6,8,8,8,8

1. **மேலோகத்தில் என் பங்கு நீர்**
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
மேலான நன்மை தேவரீர்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
நீர் பாரில் ரத்தம் சிந்தினீர்
பேரன்பைக் காட்டி மரித்தீர்
சீர்கெட்ட என்னை ரட்சித்தீர்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

2. பூலோக மேன்மை வாஞ்சியேன்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
மேலோக இன்பம் நாடுவேன்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
இப்பாரின் வாழ்வு நில்லாதே
தப்பாமல் வாடிப் போகுமே
ஒப்பற்ற செல்வம் நீர் நீரே
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

3. நீர் ஏழையேனைக் கைவிடீர்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
சீராகக் காத்து ஆளுவீர்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
பொன் வெள்ளி ஆஸ்தி போயினும்
துன்புற்றுப் பாடு படினும்
என் விசுவாசம் நிலைக்கும்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

அட்டவணை

4. தீயோன் விரோதம் செய்யினும்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
ஓயாமலே போராடினும்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
அம்மூர்க்கம் கண்டு அஞ்சிடேன்
உம்மாலே வெற்றி சிறப்பேன்
கெம்பீர கீதம் பாடுவேன்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

5. வெம் சாவையும் மேற்கொள்ளுவேன்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
உம் நேச மார்பில் சுகிப்பேன்
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!
பேரன்பரே! கை தாங்குவீர்
நீர் விண்ணில் சேர்த்து வாழ்விப்பீர்
ஓயாப் பேரின்பம் ஈகுவீர்,
கிறிஸ்துவே! கிறிஸ்துவே!

| | | |
|---|---|---|
| **527** | Rock of ages cleft for me | **பா.350** |
| A.M.184, S.S.237 | Petra, Redhead | 7,7,7,7,7,7 |

1. **பிளவுண்ட மலையே**
புகலிடம் ஈயுமே;
பக்கம் பட்ட காயமும்
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்
பாவதோஷம் யாவையும்
நீக்கும்படி அருளும்.

2. எந்தக் கிரியை செய்துமே,
உந்தன் நீதி கிட்டாதே;
கண்ணீர் நித்தம் சொரிந்தும்
கஷ்ட தவம் புரிந்தும்
பாவம் நீங்க மாட்டாதே
நீரே மீட்பர் இயேசுவே.

அட்டவணை

3. யாதுமற்ற ஏழை நான்,
நாதியற்ற நீசன் தான்;
உம் சிலுவை தஞ்சமே,
உந்தன் நீதி ஆடையே;
தூய ஊற்றை அண்டினேன்,
தூய்மையாக்கேல் மாளுவேன்.

4. நிழல் போன்ற வாழ்விலே,
கண்ணை மூடும் சாவிலே
கண்ணுக்கெட்டா லோகத்தில்
நடுத்தீர்வைத் தினத்தில்
பிளவுண்ட மலையே,
புகலிடம் ஈயுமே.

**528** **கி.கீ.225**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**எல்லாம் இயேசுவே – எனக்கெல்லா மேசுவே.**

***அனுபல்லவி***

தொல்லைமிகு மிவ்வுலகில் – துணை யேசுவே. – எல்

***சரணங்கள்***

1. ஆயனும் சகாயனும் நேயனும் உபாயனும்
நாயனும் எனக்கன்பான ஞானமண வாளனும் –எல்

2. தந்தை தாய் இனம் ஜனம் பந்துளோர் சிநேகிதர்
சந்தோட சகலயோக, சம்பூரண பாக்யமும் –எல்

3. கவலையில் ஆறுதலும், கங்குலிலென் ஜோதியும்
கஷ்டநோய்ப் படுக்கையிலே கை கண்ட அவிழ்தமும் –எல்

4. போதகப் பிதாவுமென் போக்கினில் வரத்தினில்
ஆதரவு செய்திடுங் கூட்டாளிமென் தோழனும். –எல்

அட்டவணை

5. அணியும் ஆபரணமும் ஆஸ்தியும் – சம்பாத்யமும்
பிணையாளியும் மீட்பருமென் பிரிய மத்தியஸ்தனும் –எல்

6. ஆன ஜீவ அப்பமும் ஆவலுமென் காவலும்
ஞான கீதமும் சதுரும் நாட்டமும் கொண்டாட்டமும் –எல்

*–யே. ஞானமணி*

**529** **கி.கீ.227**

*பிலஹரி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**உனக்கொத்தாசை வரும் நல் பருவதம், – இதோ!**

***அனுபல்லவி***

தினமும் மனது நொந்து சிந்தை கலங்குவோனே. –உன

***சரணங்கள்***

1. வானம் புவி திரையும் வகுத்த நன்மைப் பிதாவின்
மாட்சிமையின் கரமே வல்லமையுள்ள தல்லோ? –உன

2. காலைத் தள்ளாடவொட்டார், கரத்தைத் தளரவொட்டார்
மாலை உறங்கமாட்டார், மறதியாய்ப் போக மாட்டார். –உன

3. கர்த்தருனைக் காப்பவராம், கரமதில் சேர்ப்பவராம்
நித்தியம் உன்றனுக்கு நிழலாயிருப்பவராம். –உன

4. பகலில் வெயிலெனிலும் இரவில் நிலவெனிலும்
இகல் தருவதுமில்லை, இன்னல் செய்வதுமில்லை. –உன

5. தீங்கு தொடராதுன்னை, தீமை படராதுன்மேல்
தாங்குவார் தூதர் கோடி, தாளிடறாதபடி. –உன

6. போக்கும் ஆசீர்வாதமாம், வரத்தும் ஆசீர்வாதமாம்
காக்கைக் குஞ்சுகள் முதல் கதறி நம்பிவிடுமே. –உன

7. துன்ப துயரத்திலும் துக்க சமயத்திலும்
இன்பமுறும் பொழுதும் எல்லாம் உனக்கவரே. –உன

*–பாளையங்கோட்டைப் பாடல்*

அட்டவணை

**530** **கி.கீ.228**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**துங்கனில் ஒதுங்குவோன் பங்கமின்றித் தங்குவான்**

***அனுபல்லவி***

கங்குல் பக லும்பரனார் காவல் அர ணாதலால் – துங்

***சரணங்கள்***

1. வேடன் கண்ணி குத்துங்கால், விக்கினங்கள் சுற்றுங்கால்
மூடி உனைக் காப்பரே, ஒரு மோசமின்றிச் சேர்ப்பரே. –துங்

2. பக்கத்திலே ஆயிரம், பாலே பதினாயிரம்
சிக்கென வீழ்ந்தாலுமே, தீங்குனை அண்டாதுகாண். –துங்

3. கண்ணினாலே பார்க்குவாய், கடவுள் செயல் நோக்குவாய்.
அண்ணலே உன் அடைக்கலம், ஆண்டவர் உன் தாபரம். –துங்

4. தீங்குனை அண்டாமலும், தீனங்கள் தீண்டாமலும்
பாங்கு தூதர் காபந்தில் பத்திரமாய் வாழ்வையே. –துங்

5. பாதம் கல்லிடறாமல், பகைவர் உக்ரம் மீறாமல்,
தூதர் உனைக் கைகளில் தூக்கி ஏந்திக் கொள்வரே. –துங்

6. நீடுநாட்களாகவே கேடு துன்பம் போகவே
வீடுபரதீசினில் சூடுவான் மா மகிமைகள். –துங்

*–த. யோசேப்பு*

**531** **கி.கீ.229**

*பியாகு* *ரூபகதாளம்*

***பல்லவி***

**கிஞ்சிதமும் நெஞ்சே, அஞ்சிடாதே நல்ல**
**கேடகத்தைப் பிடி நீ – விசுவாசக்**
**கேடகத்தைப் பிடி நீ**

அட்டவணை

## அனுபல்லவி

வஞ்சனையாகவே பேய் எதிர்த்துன்றனை
வன்னிக் கணைதொடுத் தெய்கின்ற வேளையில்
நெஞ்சில் படாமல் தடுக்க அது நல்ல
நிச்சயமான பரிசை அறிந்து நீ – கிஞ்சிதமும்

## சரணங்கள்

1. பாவத்தை வெறுக்க, ஆபத்தைச் சகிக்க
பத்தியில் தெளிக்கவும், – நித்ய
ஜீவனைப் பிடிக்க, லோகத்தை ஜெயிக்க
திறமை அளிக்கவும்
சாவே, உன் கூர் எங்கே? பாதாளமே உன்
ஜெயம் எங்கே? என்று நீ கூவிக் களிக்கவும்
தேவன் உகந்துனைத் தான் அங்கீகரிக்க
செய்யவுமே அது திவ்ய நல் ஆயுதம். –கிஞ்சிதமும்

2. பண்டையர் அந்தப் பரிசையினால் அல்லோ,
கண்டடைந்தார் பேறு? – நல்ல
தொண்டன் ஆபேல் முதலான வைதீகரைத்
தொகுத்து வெவ்வேறு
விண்டுரைக்கில் பெருகும் தீ அணைத்ததும்,
வீரிய சிங்கத்தின் வாயை அடைத்ததும்,
கண்டிதமாய் வெற்றி கொண்டது மாம்பல
காரியங்களையும் பார், இது மா ஜெயம். –கிஞ்சிதமும்

3. ஊற்றமுடன் இப்பரிசைப் பிடித்திட
உன் செயல் மா பேதம் – அதின்
தோற்றமும் முடிவும் ஏசுபரன் செயல்
துணை அவர் பாதம்
ஏற்றர வணைக்கவே பணிவாக
இரந்து மன்றாடி அவர் மூலமாகவே
ஆற்றல் செய் தேற்றரவாளி பரிசுத்த
ஆவி உதவியை மேவி, அடைந்து நீ. –கிஞ்சிதமும்

*–யோ. பால்மர்*

அட்டவணை

**532** **கி.கீ.231**

*கரஹரப்பிரியை* *ரூபகதாளம்*

### *பல்லவி*

**அஞ்சாதே யேசு ரட்சகர்**
ஆத்மத்துயர் நீக்க வல்லவர்.

### *அனுபல்லவி*

வஞ்சமே மிஞ்சுமா பஞ்சபாதகன் நானென்று. - அஞ்

### *சரணங்கள்*

1. திருடன் ஒருவன் மரிக்கும் வேளையில்
திருச்சுதன் பதம் தழுவிக் கதிக்-கு
அருள் பெற்றான், என் வேதஞ் சொல்வதை
ஆய்ந்து மனஞ் சாய்ந்து நீ செல். - அஞ்

2. வெள்ளிக் காசொன்றை இழந்து விட்டவள்
வீட்டைப் பெருக்கிப் பார்த் தெடுத்தபின்
துள்ளிப் பூரிக்கும் போல் உன் மேலே
தூதர் சங்கமும் களிப்பதாலே. - அஞ்

3. மேய்ப்பன் மந்தையை விலகின ஆட்டை
வெகு கவலையாய்த் தேடிக் கண்டபின்
வாய்ப்புடன் மனம் மகிழும் போலே
மானுவேலுனைத் தழுவலாலே. - அஞ்

4. தொண்ணூற் றொன்பது நீதியரிலுந்
துயரடை பாவி யொருவன் மீதினில்
எண்ணருந் தூதர் மகிழ்வதாலே
இரட்சிப்புனக்குப் பலித்ததாலே. - அஞ்

5. மரணத்தின் கூரை ஒடித்த வல்லவன்
வருந்தி அழைத்த விருந்துக்கு வரத்
தருணம் ஈதெனத் தாசர் கூடிச்
சாற்றும் மொழியை ஏற்று நீவர. - அஞ்

*-ச.ஐ.*

அட்டவணை

**533** **கி.கீ.234**

*பியாகடை* *ஏகதாளம்*

***பல்லவி***

**நல்லாயன் யேசு சாமி, ராஜன்தாவீ துடை மகவு**
ஒரே மகவு, ஆட்டுக்காய் உயிர் தாரார்.

***சரணங்கள்***

1. எல்லார்க்கும் பெரியான், எம்பிரான் தம்பிரான்
ஏகவஸ்தோரே ஏகோவா, – மா
தேவ கிறிஸ்து நீ கா, வா, வா. –நல்

2. மன்னர் மன்னர் கொண்டாடிய நீடிய
வானப் பரமகு மாரா வோ – அதி
ஞானத் திறம் மிகும் வீராவோ. –நல்

3. விண்ணாடர் முழங்க, மண்ணாடர் விளங்க,
மேவி வந்தமே சையாவே – படு
பாவி சொந்தம் ஏ சையாவே. –நல்

4. சீராட்டுக் காட்டி எந்தையார், தந்தையார்
திருக்கடைக் கண்ணால் பார்த்தாரே – வந்து,
திரும்பத் திரும்ப எனைச் சேர்த்தாரே. –நல்

5. ஆட்டைக் கூட்டி ஓர் தொழுவத்தில் அடைப்பார்
அரிய நல்ல மேய்ச்சல் கொடுப்பார், – அன்
பாகத் தோளினிலே எடுப்பார். –நல்

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**534** **கி.கீ.235**

*நாதநாமக்கிரியை* *சாபுதாளம்*

***பல்லவி***

**வாரா வினை வந்தாலும் சோராதே மனமே;**
வல்ல கிறிஸ்துனக்கு நல்ல தாரகமே.

அட்டவணை

*சரணங்கள்*

1. சூரன் சதித்துன் மீது வலை வீசினாலும்
சோராதே ஏசுபரன் தஞ்சம் விடாதே. –வாரா

2. உலகம் எதிர்த்துனக்கு மலைவு செய்தாலும்
உறுதிவிட்டயராதே நெறி தவறாதே. –வாரா

3. பெற்ற பிதாப்போல் உன் குற்றம் எண்ணாரே
பிள்ளை ஆகில் அவர் தள்ளிவிடாரே. –வாரா

4. தன் உயிர் ஈந்திட்ட உன் யேசுநாதர்
தள்ளுவரோ? அன்பு கொள் அவர் மீதே. –வாரா

5. மரணம் உறுகின்ற தருணம் வந்தாலும்
மருள விழாதே, நல் அருளை விடாதே. –வாரா

6. வையகமே உனக்குய்ய ஓர் நிலையோ?
வானவனை முற்றும் தான் அடைவாயே! –வாரா

*–யோ. பால்மர்*

**535** **கி.கீ.236**

*சஹானா* *ஆதிதாளம்*

*பல்லவி*

**நெஞ்சமே தள்ளாடி நொந்து**
நீ கலங்காதே – கிறிஸ்
தேசுவே உனக்கு நல்ல
நேச துணையே.

*சரணங்கள்*

1. தஞ்சமான தோழர்களும் வஞ்சகமாக – உன்னை
தாக்கியே பகைஞராக நின்றபோதிலும். –நெஞ்சமே

2. அன்னை தந்தை ஆனவரும் பின்ன பேதமாய் –உனை
அங்கலாய்க்க விட்டெளிஞன் ஆன போதிலும் –நெஞ்சமே

3. ஜீவனம் இழந்து துன்பம் மேவினாலும் – மா
சிறுமையாய்ச் சகிக்கொணா வறுமை கொண்டாலும். –நெஞ்சமே

அட்டவணை

4. பஞ்சமும் பசியும் வந்து கெஞ்ச வைத்தாலும் – மிகு
பாரமாய்ச் சுமை உன் மேலே பற்றி நின்றாலும். –நெஞ்சமே

5. கெட்ட நோயிலும் நீ அகப் பட்டுழன்றாலும், – எந்தக்
கேடுகள் உன்மேலே வந்து மூடினாலும். –நெஞ்சமே

6. ஆன வீடு தானும் கொள்ளை ஆன போதிலும், – கிறிஸ்
தண்ணலே, உனக் கெல்லாம் என் றெண்ணி நிறைவாய் –நெஞ்சமே

*–யோ. பால்மர்*

**536** **கி.கீ.226**

*பங்காளா* *ஆதிதாளம்*

***பல்லவி***

**விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான் – மெய்**
**விசுவாசமுள்ளவன் தான் தழைப்பான்.**

***சரணங்கள்***

1. நிசமாக நாம் பாவத்தினில் பிறந்தோர் – முழு
விஷமான பாவத்தினால் இறந்தோர். – விசு

2. உய்யும் வகையறியோம், பெலனேயில்லை; – நரர்
செய்யும் கிரியைகளில் நலனேயில்லை. – விசு

3. பாவக் கடனொழிக்கப் பலமே யற்றோம் – எச்
சாபம் அழிவினுக்கும் தகைமை யுற்றோம். – விசு

4. தேவன் கிருபையொன்றே நமைப் பார்க்கும் – அவர்
மாவன்பே பாவிகளின் கடன் தீர்க்கும். – விசு

5. நீதிமானைக் குற்றஞ்சாட்ட யாராலேயாகும்? – அவன்
பாதகம் பழிமரணம், யாவுமே போகும். – விசு

6. தேவனின் பிள்ளை நானென்றே அவன் துள்ளுவான் – தீய
பாவ வழிதனைப் பகைத்தே தள்ளுவான். – விசு

*–ஞா. சாமுவேல்*

அட்டவணை

# 6. கிறிஸ்தவ ஒழுக்கம்

**537** Fierce raged the Tempest **பா.352**

A.M.285 *St. Aelred* 8,8,8,3

1. **அகோர காற்றடித்ததே**
ஆ! சீஷர் தத்தளித்தாரே;
நீரோ நல் நித்திரையிலே
அமர்ந்தீர்.

2. மடிந்தோம்! எம்மை ரட்சிப்பீர்!
எழும்பும் என்க, தேவரீர்;
காற்றை அதட்டிப் பேசினீர்
"அமரு".

3. அட்சணமே அடங்கிற்றே
காற்று கடல் சிசுபோலே;
அலைகள் கீழ்ப்படிந்ததே
உம் சித்தம்.

4. துக்க சாகர கோஷ்டத்தில்
ஓங்கு துயர் அடைகையில்
பேசுவீர் ஆற உள்ளத்தில்
"அமரு".

**538** My God the spring of all my joys **பா.354**

S.S.327, A.M.176 *Tallis* C.M.

1. **என் களிப்புக்குக் காரணம்**
என் நல்ல நாதரே;
பகலில் நீர் என் மகிமை
ராவில் என் ஜோதியே.

2. இருளிலே நீர் தோன்றினால்
என் மனம் மகிழும்;
நீர் விடிவெள்ளி, ஆனதால்
என்னில் பிரகாசியும்.

அட்டவணை

3. இயேசுவைத் தந்த தயவு
என் செல்வமானதால்;
என் ஆத்துமா சந்தோஷித்து
மகிழும் வாழ்வினால்.

4. நரகத்துக்கும் சாவுக்கும்
அஞ்சாமல் இருப்பேன்;
தெய்வன்பும் விசுவாசமும்
கொண்டு நான் வெல்லுவேன்.

**539** God moves in a mysterious way **பா.355**

A.M.373 *London New* C.M.

**1. கர்த்தாவின் அற்புதச் செய்கை**
புத்திக் கெட்டாததாம்;
பொங்கு கடல் கடுங்காற்றை
அடக்கி ஆள்வோராம்.

2. தம் வல்ல ஞான நோக்கத்தை
மா ஆழமாகவே;
மறைத்து வைத்தும், தம்வேளை
முடியச் செய்வாரே.

3. திகில் அடைந்த தாசரே
மெய் வீரம் கொண்டிடும்;
மின் இடியாய்க் கார் மேகமே
விண் மாரி சொரியும்.

4. உம் அற்ப புத்தி தள்ளிடும்
நம்பிக்கை கொள்வீரே;
கோபமுள்ளோராய்த் தோன்றினும்
உருக்க அன்பரே.

5. மூடர் நம்பிக்கையின்றியே
விண் ஞானம் உணரார்;
தெய்வத்தின் ஞானம் தெய்வமே
வெளிப்படுத்துவார்.

அட்டவணை

**540** Peace perfect peace **பா.358**

S.S.726, A.M.537 *Pax, Tecum* 10,10

1. **மெய்ச் சமாதானமா துர் உலகில்?**
ஆம், இயேசு ரத்தம் பாயும் நெஞ்சினில்.

2. மெய்ச் சமாதானமா பல் தொல்லையில்?
ஆம், இயேசு சித்தத்தை நாம் செய்கையில்.

3. மெய்ச் சமாதானமா சூழ் துக்கத்தில்?
ஆம், இயேசு சீர் அமர்ந்த நெஞ்சத்தில்.

4. மெய்ச் சமாதானமா உற்றார் நீங்கில்?
ஆம், இயேசு கரம் நம்மைக் காக்கையில்.

5. மெய்ச் சமாதானமா சிற்றறிவில்?
ஆம், இயேசு ராஜன் என்று அறிகில்.

6. மெய்ச் சமாதானமா சா நிழலில்?
ஆம், இயேசு சாவை வென்றிருக்கையில்.

7. பூலோகத் துன்பம் ஒழிந்த பின்னர்,
இயேசு மெய்ச் சமாதானம் அருள்வார்.

**541** O Love That Will Not Let Me Go **பா.359**

S.S.633 *St. Margaret's* 9,9,9,9,6

1. **அன்பே விடாமல் சேர்த்துக் கொண்டீர்**
சோர்ந்த என் நெஞ்சம் உம்மில் ஆறும்;
தந்தேன் என் ஜீவன் நீரே தந்தீர்
பிரவாக அன்பில் பாய்ந்தென்றும்
ஜீவாறாய்ப் பெருகும்.

2. ஜோதி! என் ஆயுள் முற்றும் நீரே;
வைத்தேன் உம்மில் என் மங்கும் தீபம்;
நீர் மூட்டுவீர் உம் ஜோதியாலே;
பேர் ஒளிக் கதிரால் உள்ளம்
மேன் மேலும் ஸ்வாலிக்கும்.

அட்டவணை

3. பேரின்பம் நோவில் என்னைத் தேடும்!
என் உள்ளம் உந்தன் வீடே என்றும்;
கார் மேகத்திலும் வான ஜோதி!
விடியுங்காலை களிப்போம்!
உம் வாக்கு மெய் மெய்யே.

4. குருசே! என் வீரம் திடன் நீயே;
உந்தன் பாதம் விட்டென்றும் நீங்கேன்;
வீண் மாயை யாவும் குப்பை நீத்தேன்;
விண் மேனியாய் நித்திய ஜீவன்
வளர்ந்து செழிக்கும்.

**542** Cassel, Heathlands, Barmouth **பா.360**

A.M.100,389,218,6 I 7,7,7,7,7,7

1. **என் கர்த்தாவே, உம்மில் தான்**
முழு நெஞ்சத்தாலே நான்
வாஞ்சை கொண்டு, நித்தமும்
லோக வாழ்வை அற்பமும்
குப்பையும் என்றெண்ணுவேன்,

உம்மையே சிநேகிப்பேன்.

2. லோகத்தாரின் களிப்பு
துக்கங்கொண்ட நெஞ்சுக்கு
சஞ்சலத்தையன்றியே,
தேற்றத்தை உண்டாக்காதே;
உம்மையெ சிநேகிப்பேன்

அதால் பாக்கியம் அடைவேன்.

3. தேவரீரில் வாழ்வெல்லாம்
பூர்த்தியாகவே உண்டாம்;
உம்மில் வாஞ்சை கொள்வோனாய்
உண்மையான நேசனாய்
சேர்வோனுக்குத் தேவரீர்
அந்த வாழ்வைக் கொடுப்பீர்.

அட்டவணை

4. ஆறுதலும் பூரிப்பும்,
ஜீவனும் மகிழ்ச்சியும்
உம்மால் தா என்றைக்கும்
குறைவின்றிக் கிடைக்கும்;
நீரே அன்பின் காரணர்
கருணைத் தயாபரர்.

**543** Love Divine all Loves Excelling **பா.361**

S.S.242 8,7,8,7, D

**1. ஒப்பில்லாத திவ்விய அன்பே,**
மோட்சானந்தா, தேவரீர்
எங்கள் நெஞ்சில் வாசம் செய்தே
அருள் பூர்த்தியாக்குவீர்
மா தயாள இயேசு நாதா
அன்பு மயமான நீர்,
நைந்த உள்ளத்தில் இறங்கி
உம் ரட்சிப்பால் சந்திப்பீர்.

2. உமது நல் ஆவி தாரும்,
எங்கள் நெஞ்சு பூரிப்பாய்
உம்மில் சார நீரே வாரும்,
சுத்த அன்பின் வடிவாய்;
பாவ ஆசை எல்லாம் நீக்கி
அடியாரை ரட்சியும்;
விசுவாசத்தைத் துவக்கி
முடிப்பவராய் இரும்.

3. வல்ல நாதா எங்கள் பேரில்
மீட்பின் அன்பை ஊற்றுமே;
விரைவாய் உம் ஆலயத்தில்
வந்து என்றும் தங்குமே.
வானோர் போல நாங்கள் உம்மை
நித்தம் வாழ்த்திச் சேவிப்போம்;
ஓய்வில்லாமல் உமதன்பைப்
பூரிப்பாய்க் கொண்டாடுவோம்.

அட்டவணை

4. உந்தன் புது சிஷ்டிப்பையும்
சுத்த தூய்மையாக்குமேன்;
உந்தன் திவ்விய ரசிப்பையும்
பூரணப்படுத்துமேன்;
எங்கள் கிரீடம் உம்முன் வைத்து
அன்பில் மூழ்கிப் போற்றியும்,
மேன்மை மேலே மேன்மை பெற்று
விண்ணில் வாழச் செய்திடும்.

**544** O Love Divine How Sweet Thou Art **பா.362**

A.M.195, S.A.249 8,8,6 D

1. **தெய்வன்புதான் மா இனிமை,**
அதற்கென்றே என் உள்ளத்தைக்
கொடுத்திருக்கிறேன்;
என் மீட்பர் அன்பின் அளவை
அறிவதே என் மகிமை;
எப்போது அறிவேன்?

2. பாதாளம் சாவைப் பார்க்கிலும்
அவரின் நேசம் பலமும்
ஆழமுமானதே;
பூலோகத்தார் எல்லாருக்கும்
மாட்சிமையுள்ள வானோர்க்கும்
எட்டாததாயிற்றே.

3. தெய்வன்பின் ஆழம், கர்த்தாவே;
அளந்து பார்த்தவர் நீரே,
அன்பின் பிரவாகத்தை
என் ஏழை நெஞ்சில் ஊற்றிடும்;
இதே என் உள்ளம் வாஞ்சிக்கும்
தீராத வாஞ்சனை.

அட்டவணை

4. உம் திரு முகம் பார்ப்பதும்
உம்மண்டை நித்தம் சேர்வதும்,
என் முழு வாஞ்சையாம்;
உம் திவ்விய சத்தம் கேட்பது
எனக்கு இன்பம், களிப்பும்,
என் மோட்ச பாக்கியமாம்.

**545** Thee Will I Love My strength **பா.363**

A.M.370, 721 8,8,8,8,8,8

1. **நான் உம்மை முழுமனதால்**
சிநேகிப்பேன், என் இயேசுவே;
நான் உம்மை நித்தம் வாஞ்சையால்
பின்பற்றுவேன், என் ஜீவனே;
என் சாவு வேளை மட்டும் நீர்
என் நெஞ்சில்தானே தங்குவீர்.

2. நான் உம்மை நேசிப்பேன், நீர் தாம்
என் உத்தம சிநேகிதர்;
நீர் தெய்வ ஆட்டுக்குட்டியாம்
நீரே என் மீட்பரானவர்;
நான் உம்மை முன் சேராததே
நிர்ப்பந்தம்; வெட்கம்; நஷ்டமே.

3. உம்மைப் பற்றாமல் வீணனாய்
பொல்லாங்கைச் செய்து சுற்றினேன்;
பரத்தை விட்டுத் தூரமாய்,
இகத்தை அன்பாய்ப் பற்றினேன்;
இப்போ நான் உம்மைச் சேர்ந்தது
நீர்தாமே செய்த தயவு.

அட்டவணை

4. நான் உம்மைச் சுக வாழ்விலும்
சிநேகிப்பேன் என் கர்த்தரே;
நான் உம்மைத் துன்ப நாளிலும்
நேசிப்பேன் என்தன் இயேசுவே;
என் சாவு வேளை மட்டும் நீர்
என் நெஞ்சில் தானே தங்குவீர்.

**546** Gracious Spirit Holy Ghost **பா.364**

A.M.210 7,7,7,5

1. **பெந்தேகொஸ்தின் ஆவியே,**
உம்மால் போதிக்கப்பட்டே,
கேட்போம் உன்னத ஈவே,
தூய மெய்யன்பே.

2. அன்பு யாவும் சகிக்கும்
தீதெண்ணாது சாந்தமும்
அது வெல்லும் சாவையும்,
அன்பை ஈயுமேன்.

3. போதனையும் ஓய்ந்திடும்
பூரண அறிவிலும்;
அன்பே என்றும் நிலைக்கும்;
அன்பை ஈயுமேன்.

4. காட்சியால் விஸ்வாசமும்
பூரிப்பால் நம்பிக்கையும்
ஓயும், என்றும் ஒளிரும்
அன்பை ஈயுமேன்.

5. அன்பு விசுவாசமும்
நம்பிக்கை இம்மூன்றிலும்
ஒப்பற்ற மேலானதும்
அன்பை ஈயுமேன்.

6. தூய நேச ஆவியே
உம்மைப் போற்றும் தாசர்க்கே
எங்கள் பேரில் அமர்ந்தே
அன்பை ஈயுமேன்.

அட்டவணை

**547** My Faith Looks Up To Thee **பா.366**

A.M.360 II Moscow 6,6,4,6,6,6,4

1. **அருள் நிறைந்தவர்**
பூரண ரட்சகர்
தேவரீரே;
ஜெபத்தைக் கேட்கவும்
பாவத்தை நீக்கவும்
பரத்தில் சேர்க்கவும்
வல்லவரே.

2. சோரும் என் நெஞ்சுக்கு
பேரருள் பொழிந்து
பெலன் கொடும்,
ஆ! எனக்காகவே
மரித்தீர், இயேசுவே;
என் அன்பின் ஸ்வாலையே
ஓங்கச் செய்யும்.

3. பூமியில் துக்கமும்
சஞ்சலம் கஸ்தியும்
வருகினும்,
இரவில் ஒளியும்
சலிப்பில் களிப்பும்
துன்பத்தில் இன்பமும்
அளித்திடும்.

4. மரிக்கும் காலத்தில்
கலக்கம் நேரிடில்,
சகாயரே
என்னைக் கைதூக்கவும்
ஆறுதல் செய்யவும்
மோட்சத்தில் சேர்க்கவும்
வருவீரே.

**548** God is Here And That to Bless Us **பா.367**
S.S.307 8,7,8,7

1. **ஆண்டவா! பிரசன்னமாகி**
ஜீவன் ஊதி உயிர்ப்பியும்
ஆசை காட்டும் தாசர் மீதில்
ஆசீர்வாதம் ஊற்றிடும்

*அருள்மாரி எங்கள் பேரில்*
*வருஷிக்கப் பண்ணுவீர்*
*ஆசையோடு நிற்கிறோமே*
*ஆசீர்வாதம் ஊற்றுவீர்.*

2. தேவரீரின் பாதத்தண்டை
ஆவலோடே கூடினோம்
உந்தன் திவ்விய அபிஷேகம்
நம்பி நாடி அண்டினோம்.

3. ஆண்டவா! மெய் பக்தர் செய்யும்
வேண்டுகோளைக் கேட்கிறீர்
அன்பின் ஸ்வாலை எங்கள் நெஞ்சில்
இன்று மூட்டி நிற்கிறீர்.

4. தாசர் தேடும் அபிஷேகம்
இயேசுவே! கடாட்சியும்
பெந்தே கோஸ்தின் திவ்விய ஈவை
தந்து ஆசீர்வதியும்.

**549** O Jesus Christ Grow Thou in Me **பா.369**
A.M.172 II *Richmond* C.M.

1. **என் ரட்சகா, நீர் என்னிலே**
மென்மேலும் விளங்கும்;
பொல்லாத சிந்தை நீங்கவே
சகாயம் புரியும்.

அட்டவணை

2. என் பலவீனம் தாங்குவீர்
மா வல்ல கரத்தால்;
சாவிருள் யாவும் நீக்குவீர்
மெய் ஜீவன் ஜோதியால்.

3. துராசாபாசம் நீங்கிடும்
உந்தன் பிரகாசத்தால்
சுத்தாங்கக் குணம் பிறக்கும்
நல்லாவி அருளால்.

4. மாசற்ற திவ்விய சாயலை
உண்டாக்கியருளும்;
என்னில் தெய்வீக மகிமை
மென்மேலும் காண்பியும்.

5. சந்தோஷிப்பித்துத் தாங்குவீர்
ஒப்பற்ற பலத்தால்;
என் நெஞ்சில் அனல் மூட்டுவீர்
பேரன்பின் ஸ்வாலையால்.

6. நீர் பெருக, நான் சிறுக
நீர் கிரியை செய்திடும்;
மெய் பக்தியில் நான் வளர
காடாட்சித்தருளும்.

**550** Jesus Lover Of My Soul **பா.370**

A.M.251 II, 193, S.S.227 *Aberystwyth* 7,7,7,7 D

1. **எந்தன் ஆத்ம நேசரே,**
வெள்ளம் போன்ற துன்பத்தில்,
தாசன் திக்கில்லாமலே
தடுமாறிப் போகையில்,
தஞ்சம் தந்து இயேசுவே,
திவ்விய மார்பில் காருமேன்;
அப்பால் கரையேற்றியே
மோட்ச வீட்டில் சேருமேன்.

அட்டவணை

2. வல்ல தேவரீர் அல்லால்
வேறே தஞ்சம் அறியேன்;
கைவிடாமல் நேசத்தால்
ஆற்றித் தேற்றித் தாங்குமேன்;
நீரே எந்தன் நம்பிக்கை
நீர் சகாயம் செய்குவீர்;
ஏதுமற்ற ஏழையை
செட்டையாலே மூடுவீர்

3. குறை யாவும் நீக்கிட
நாதா, நீர் சம்பூரணர்
திக்கற்றோரைத் தாங்கிட
நீரே மா தயாபரர்
நான் அசுத்த பாவிதான்
நீரோ தூயர் தூயரே;
நான் அநீதி கேடுள்ளோன்
நீர் நிறைந்த நித்தியரே.

4. பாவம் யாவும் மன்னிக்க
ஆரருள் அமைந்த நீர்
என்னைச் சுத்திகரிக்க
அருள் பாயச் செய்குவீர்
ஜீவ ஊற்றாம் இயேசுவே
எந்தன் தாகம் தீருமேன்
ஸ்வாமி என்றும் என்னிலே
நீர் சுரந்து ஊறுமேன்.

**551** Franconia **பா.372**
A.M.261 S.M.

1. **ஜெபத்தின் ஆவலை**
என் நெஞ்சில் அருளும்;
தெய்வாவீ, லோக நேசத்தை
என்னை விட்டகற்றும்.

அட்டவணை

2. பூலோக சிந்தையை
வெறுத்துத் தள்ளுவேன்;
மேலான நித்திய இன்பத்தை
நான் தேட ஏவுமேன்.

3. எனக்குத் துணையாய்
என் பக்கத்தில் இரும்;
நான் நிலை நிற்கும்படியாய்
கிருபை அளியும்.

4. தெய்வன்பின் பாசத்தால்
கட்டுண்டு என்றைக்கும்
உம்மை என் முழு மனதால்
பின்பற்றச் செய்திடும்.

**552** What A Friend We Have in Jesus **பா.376**

S.S.319 8,7,8,7, D

1. **பாவ சஞ்சலத்தை நீக்க**
பிராண நண்பர் தான் உண்டே
பாவ பாரம் தீர்ந்து போக
மீட்பர் பாதம் தஞ்சமே;
சால துக்க துன்பத்தாலே
நெஞ்சம் நொந்து சோருங்கால்,
துன்பம் இன்பமாக மாறும்
ஊக்கமான ஜெபத்தால்.

2. கஷ்ட நஷ்டம் உண்டானாலும்
இயேசுவண்டை சேருவோம்,
மோச நாசம் நேரிட்டாலும்,
ஜெப தூபம் காட்டுவோம்;
நீக்குவாரே நெஞ்சின் நோவை
பெலவீனம் தாங்குவார்;
நீக்குவாரே மனச் சோர்பை
தீய குணம் மாற்றுவார்.

அட்டவணை

3. பெலவீனமான போதும்
கிருபாசன உண்டே;
பந்து ஜனம் சாகும் போதும்
புகலிடம் இதுவே;
ஒப்பில்லாத பிராண நேசா!
உம்மை நம்பி நேசிப்போம்
அளவற்ற அருள் நாதா!
உம்மை நோக்கிக் கெஞ்சுவோம்.

**553** We who would Valiant Be **பா.380**

S.P.515 6,5,6,5,6,6,6,5

1. **கர்த்தரை என்றுமே**
பின் செல்லும் சீஷன்,
எத்தோல்வி தீங்குமே
மேற்கொள்ளும் வீரன்
எப்பயமின்றியே
தான் கொண்ட எண்ணமே
விடானே என்றுமே,
மோட்சம் செல்லுவோன்.

2. திகில் உண்டாக்குவார்
கோரக் கதையால்,
தாமே தத்தளிப்பார்
வீரன் ஊற்றத்தால்;
மாற்றாரை மடக்கி
ராட்சதர் அடக்கி
காட்டிடுவான் சக்தி
மோட்சம் செல்லுவோன்.

3. கர்த்தா, நீர் காத்திட
தூய ஆவியால்
பெறுவேன் நித்திய
ஜீவன் முடிவில்;
வீண் எண்ணம் ஓடிடும்,
வீண் பயம் நீங்கிடும்,
முயற்சிப்பேன் என்றும்
மோட்சம் செல்லுவேன்.

**554** Duke Street, Pentecost **பா.381**
A.M.540 L.M.

1. **ஜெயித்த இயேசு நாதர்தாம்**
சம்பாதித்த மெய் ஆஸ்தியாம்,
சாகாத ஜீவன் பூரிப்பும்
நமக்கென்றைக்கும் கிடைக்கும்.

2. பயமும் நோவும் இயேசுவால்
முற்றும் விலகிப் போவதால்,
சந்தோஷமாய்ப் போராடுவோம்
அவரால் வெற்றி கொள்ளுவோம்.

3. சா மட்டும் நிலைநின்றவன்,
போராட்டம் செய்து வென்றவன்
வானோரின் சங்கம் சேருவான்
தன் மீட்பரோடு வாழுவான்.

4. வெற்றி சிறந்த தேவரீர்
ஜெயிக்கப் பாதை காண்பித்தீர்
நீர் வென்றவண்ணம் நாங்களும்
வென்றேறத் தயை அருளும்.

அட்டவணை

Through The Nignt Of Doubt And Sorrow

**555** *St. Oswald* **பா.382**

A.M.274 L.M.

**1. துக்கம் திகில் இருள் சூழ,**
மோட்ச யாத்திரை செய்கிறோம்;
கீதம் பாடி முன்னே நோக்கி
மோட்ச பாதை செல்கிறோம்.

2. இருள் சூழ்ந்தும் பிரகாசிக்கும்
தீபஸ்தம்ப ஜோதியும்;
வீரமாக ஐக்கியமாக
முன்னே செல்வோம் ராவிலும்.

3. பக்தரோடு தங்கிச் செல்லும்
தெய்வமாம் ஒளி ஒன்றே;
இருள் நீங்க அச்சம் நீங்கும்
பாதை முற்றும் பகலே.

4. எங்கள் ஜீவ நோக்கம் ஒன்றே
குன்றா விசுவாசமும்
எங்கள் ஊக்க வாஞ்சை ஒன்றே,
ஒன்றே எம் நம்பிக்கையும்.

5. மோட்சம் செல்லும் கோடிப் பேரும்
பாடும் பாட்டு ஒன்றேயாம்
ஆபத்து, போராட்டம், தெய்வப்
பாதை செல்வதும் ஒன்றாம்.

6. மோட்ச கரை சேர்ந்த பின்னும்
பூரிப்பானந்தம் ஒன்றே;
ஒரே சர்வ வல்ல பிதா
அன்பால் அரசாள்வாரே.

அட்டவணை

7. முன்னே செல்வீர், தோழரே நீர்
சிலுவை உம் பலமாம்;
நிந்தை தாங்கி போர்புரிவீர்
ஆயுள் காலமும் எல்லாம்.

8. நியாயத் தீர்ப்பு மா தினத்தில்
கல்லறை விட்டெழுவோம்
துக்கம் திகில் யாவும் நீங்கும்
பாடும் ராவும் ஓய்ந்துபோம்.

The Son of God Goes Forth To War

**556** *Old 81st* **பா.385**

A.M.439 D.C.M.

**1. விண் கிரீடம் பெறப் போருக்கு**
கிறிஸ்தேசு செல்கின்றார்;
அவரின் வெற்றிக் கொடிக்கு
கீழாகப் போவோன் யார்?
தன் துக்க பாத்திரம் குடித்து
சோராமல் நிற்போன் யார்?
தன் சிலுவையை எடுத்து
அவர் பின் செல்வோன் யார்?

2. முதலாம் ரத்த சாட்சியாய்
மரித்தோன், வானத்தில்
கர்த்தாவை விசுவாசமாய்
கண்ணோக்கித் துன்பத்தில்
கொலைஞர்க்காக வேண்டிட
சண்டாளரால் மாண்டான்;
பகைஞர்க்காக ஜெபிக்க
யார் அவன்பின் செல்வான்?

அட்டவணை

3. தெய்வாவி வந்து தங்கின
ஈராறு சீஷர்கள்
மகத்துவமாய் விளங்கின
நம்பிக்கையுள்ளோர்கள்
தீ துன்பம், வாளைச் சகித்தே
சிங்கத்தால் பீறுண்டார்
மரிக்கவும் அஞ்சாமலே
அவர்போல் செல்வோர் யார்?

4. சிறந்த சேனா வீரராய்
கெம்பீரக் கூட்டத்தார்
சிங்காசனத்தைச் சூழ்ந்தோராய்
கொண்டாடி நிற்கிறார்
எப்பாடும் நீங்கி மோட்சத்தை
சேர்ந்தோர்போல் நாங்களும்
உம்மிடம் சேர அருளைக்
கர்த்தா கடாட்சியும்

**557** **கி.கீ.238**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**மாற்றீர் என் கவலை அருள்பெற**
மாற்றீர் என் கவலை – மிக
மாற்றியே கலி தீர்த்தீர் உமது
மகிமையை நிறைவேற்றி.

***சரணங்கள்***

1. சமனவரசே, நீர் தந்தை
சமனவரசே, நீர் – ஒரு
சந்திர பதம் போல் சுடரே விடுத்தீர்,
தாசனுரு வெடுத்தீர். – மாற்றீர்

2. சூதலகையை நீக்கி, அழலின்
சூதலகையை நீக்கி, - என்கை
தூக்கி உலகிடர் போக்கி, எமையே
துதிக்கவும் மயலாக்கி - மாற்றீர்

3. சடலமுலகம் சூது, பொல்லாச்
சடலமுலகம் சூது, - இது
தகாததின் மடவாது கொடியது;
சஞ்சலம் இனி யேது? - மாற்றீர்

4. நலங்கடனை வழுவி, சுகிர்தன்
நலங்கடனை வழுவி, - வழி
நழுவி விழுமெனைக் கழுவி அழகாய்
நலமாக்கவே வருவீர். - மாற்றீர்

*-வேதநாயகம் சாசுதிரியார்*

**558** **கி.கீ.251**

*கமாஸ்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**அன்பே பிரதானம் - சகோதர**
அன்பே பிரதானம்

***சரணங்கள்***

1. பண்புறு ஞானம் - பரம நம்பிக்கை,
இன்ப விஸ்வாசம் இவைகளிலெல்லாம். -அன்பே

2. பலபல பாஷை - படித்தறிந்தாலும்,
கலகல வென்னும் கைமணியாமே. -அன்பே

3. என் பொருள் யாவும் - ஈந்தளித்தாலும்
அன்பிலையானால் - அதிற்பயனில்லை. -அன்பே

4. துணிவுடனுடலைச் - சுடக்கொடுத்தாலும்
பணிய அன்பில்லால் பயனதிலில்லை. -அன்பே

5. சாந்தமும் தயவும் – சகல நற்குணமும்
போந்த சத்தியமும் பொறுமையுமுள்ள. –அன்பே

6. புகழிறு மாப்பு, – பொழிவு பொறாமை
பகைய நியாயப் பாவமுஞ் செய்யா. –அன்பே

7. சினமடையாது, தீங்கு முன்னாது
தினமழியாது – தீமை செய்யாது. –அன்பே

8. சகலமுந் தாங்கும், சகலமும் நம்பும்
மிகைபட வென்றும் – மேன்மை பெற்றோங்கும். –அன்பே

*–ச.பே. ஞானமணி*

**559** **கி.கீ.256**

*சஹானா* *ஆதிதாளம்*

***கண்ணிகள்***

**1. ஆண்டவரின் நாமமதை ஈண்டு போற்றுவேன் – அவர்**
ஆளுகையின் நீதி அன்பின் வாழி சாற்றுவேன் –ஆண்

2. உத்தம வழியில் நிதம் புத்தி கொள்ளுவேன் – மன
உண்மையுடன் வாழ்ந்து தீய கன்மம் தள்ளுவேன்.–ஆண்

3. கெட்ட விஷயங்கள் எனை ஒட்டுவதில்லை – மதி
கேடரின் புரளிகளும் கிட்டுவதில்லை. –ஆண்

4. வஞ்சகங்களை உகக்கும் நெஞ்சை நீக்குவேன்–பொல்லா
மார்க்கங்களிலே நடக்கும் தீர்க்கம் போக்குவேன். –ஆண்

5. மற்றவனை ஏசி வாயால் குற்றங்கள் செய்யும் – துஷ்ட
மாந்தர் மேலே பற்றாமலென் பாந்தவம் நையும் –ஆண்

6. பொய்யர்களை என்னுடனே உய்ய ஒட்டேனே – மகா
புரளிச் செய்யும் எத்தர்களின் திரளில்கிட்டேனே. –ஆண்

7. சீருடையோர் பேரில் அன்பு கூருவேனே – நல்ல
சீரொழுகு சான்றோர் தயை சேருவேனே. –ஆண்

*–த. யோசேப்பு*

அட்டவணை

**560** **கி.கீ.257**

*துஜாவந்தி* *ஆதிதாளம்*

### *பல்லவி*

**புத்தியாய் நடந்து வாருங்கள் – திரு வசனப்**
பூட்டைத் திறந்து பாருங்கள்.

### *அனுபல்லவி*

சத்தியத்தைப் பற்றிக்கொண்டு
தன்னைச் சுத்தி பண்ணிக்கொண்டு
நித்தமும் ஜெபம், தருமம்
நீதி செய்து, பாடிக்கொண்டு – புத்தி

### *சரணங்கள்*

1. ஆருடைய பிள்ளைகள் நீங்கள்? – திரு உரையில்
அறிந்து உணர்ந்து பாருங்கள்
சீருடைய தெய்வப் பிள்ளைகள் – நீங்கள்; ஏதிந்த
தித்தரிப்பு செய்யும் வகைகள்?
கூருடன் மெய்த் திருமறை குறித்துச் சொல்வதைத் தினம்
நேருடன் ஆராய்ந்து பார்த்து நித்திய ஒளியில் தானே – புத்தி

2. ஆவியை அடக்காதிருங்கள்; மறை சொல்லுவதை
அசட்டை செய்யாமல் பாருங்கள்;
ஜீவனை அடையத் தேடுங்கள் – யேசு கிறிஸ்தின்
சிந்தையைத் தரித்துக் கொள்ளுங்கள்;
மேவியே ஜெபம், மன்றாட்டு, விண்ணப்பம் வேண்டுதலோடு
தாவி, யேசுவைப் பிடித்துத் தளரா நடையோடுன்னிப் – புத்தி

3. ஏசுக் கிறிஸ்தையன் பதத்தைத் – துதித்துப் போற்றி
இன்பமாய்ச் சத்திய வேதத்தை
வாசித்து ஆராய்ந்து, நலத்தைப் – பிடித்துளத்தில்
வைத்துக்கொண்டு இவ்வுலகத்தை
நேசியாமல் பகைத்துங்கள் நித்திய ரட்சிப்பைத் தினம்
ஆசையோடு தேடி, நீங்கள் அடையும்படி முற்றிலும் – புத்தி

அட்டவணை

4. பரிசுத்த கூட்டம் அல்லவோ? – நீங்கள் எல்லாரும்
பரன் மகன் தேட்டம் அல்லவோ?
தரிசிக்க நாட்டம் அல்லவோ? கிறிஸ்தின் உள்ளம்
தன்னிலே கொண்டாட்டம் அல்லவோ?
பரிசனை செய்தவர் பொற் பாதத்தை மனதில் உன்னிக்
கரிசனை யோடு தேடிக் காணத் தீயோன் நாணப் படிப் – புத்தி

*–மரியான் உபதேசியார்*

**561** **கி.கீ.258**

*குரஞ்சி* *திஸ்ர ஏகதாளம்*

1. **சகோதரர்க ளொருமித்துச்**
சஞ்சரிப்பதோ எத்தனை
மகா நலமும் இன்பமும்
வாய்த்த செயலாயிருக்குமே

2. ஆரோன் சிரசில் வார்த்த நல்
அபிஷேகத்தின் தைலந்தான்
ஊறித் தாடியில் அங்கியில்
ஒழுகுமானந்தம் போலவே

3. எர்மோன் மலையின் பேரிலும்
இசைந்த சீயோன் மலையிலும்
சேர்மானமாய்ப் பெய்கின்ற
திவலைப் பனியைப் போலவே

4. தேசம் மார்க்கம் இரண்டிற்கும்
சேனை எகோவா தருகிற
ஆசீர்வாதம் சீவனும்
அங்கே என்றுமுள்ளதே

*–அருமைநாயகம் சட்டம்*

அட்டவணை

**562** **கி.கீ.263**

*பைரவி* *சாபுதாளம்*

***பல்லவி***

**பொக்கிஷம் சேர்த்திடுங்கள் – பரத்திலே**

***அனுபல்லவி***

பக்கிஷமாகப் பரத்திலே பொக்கிஷம்
மிக்கவே சேர்ப்பது மேலான பாக்கியம் –பொக்

1. பொட்டு அரிக்காதே – அங்கே புழுப்
பூச்சி கெடுக்காதே
துட்டரங்கே, கன்னமிட்டுத் திருடாரே;
துருவும் பிடியாது, குறையாது, அழியாது –பொக்

2. விண்ணுலகந் தன்னிலே பொக்கிஷத்தை
விரும்பியே சேர்த்திடுவோர்
மண்ணிலும் விண்ணிலும் வாழ்வது திண்ணமே
மாயப் ப்ரபஞ்சத்தின் வாழ்வெல்லாங் குப்பையே –பொக்

3. உங்கள் பொக்கிஷம் எங்கேயோ – அங்கே உங்கள்
உள்ளமுமே யிருக்கும்
இங்கித மோட்சத்தை என்றும் நினைக்கவே
என்றும் வைக்கப்பாரும் உங்கள் பொக்கிஷத்தை –பொக்

4. ஜீவன் சுகத்துடனே – இருக்கையில்
ஆவலாயிப்பொழுதே
தேவலோகத்திலே ஜீவ பொக்கிஷத்தைச்
சேர்த்திடுவோர் மெத்தப் பாக்கியவான்களே. –பொக்

*–யோ. ஞானமணி*

அட்டவணை

**563** **கி.கீ.253**

*உசேனி* *ரூபகதாளம்*

***பல்லவி***

**நித்தம் முயல் மனமே! பரி**
சுத்த ஜீவியத்தில் மெத்த வளர நீ.

***சரணங்கள்***

1. அத்தன் யேசுவினில் பத்தியாய் அமர்ந்து
சத்திய வேதத்தால் நித்தம் உன்னைப் போஷி! -நித்தம்
2. அல்பகல் யேசுவோ டதிக நேரத்தை
ஆசையாய்க் கழி நீ அவரைப்போலாவாய். -நித்தம்
3. தேவன்றன் பிள்ளைகள் யாவரையும் நேசி
ஆவலாய் எளியோர்க் கன்பாலுதவி செய். -நித்தம்
4. யேசுவே உன்றனை என்றும் நடத்துவார்
இன்ப துன்பத்திலும் அன்பாய் நீ பின் செல்லு -நித்தம்
5. எந்த எண்ணத்தையும் யேசுவின் கீழ் ஆக்கி
உன்றன் உள்ளத்தில் அமர்ந்திரு சாந்தமாய். -நித்தம்
6. மேவும் அன்பினுக்குள் தேவாவி நடத்த
மேலான வாழ்வுக்குத் தக்கவனாகுவாய். -நித்தம்

*-வே. சந்தியாகு*

## 7. சிகிச்சை

**564** Thine Arm O Lord In Days of Old **பா.223**

A.M.369 *St. Matthew* D.C.M.

1. **கர்த்தா உம் மாட்சி கரத்தால்**
நோய் சாவும் நீங்கிற்றே;
சுத்தாங்க சுகம் ஜீவனும்
உம் வார்த்தை நல்கிற்றே;
அந்தகர் ஊமை செவிடர்,
நிர்ப்பந்தராம் குஷ்டர்,
சொந்த பல்வேறு ரோகஸ்தர்,
நாடோறும் வந்தனர்.

அட்டவணை

2. மா வல்ல கரம் தொடவே,
ஆரோக்கியம் பெற்றனர்;
பார்வை நற்செவி பேச்சுமே
பெற்றே திரும்பினர்
மா வல்ல நாதா, இன்றுமே
மறுகும் ரோகியும்
சாவோரும் தங்கும் சாலையில்
ஆரோக்கியம் அளியும்.

3. ஆரோக்கிய ஜீவ நாதரே,
நீரே எம் மீட்பராய்,
ஆரோக்கியம் ஜீவன் சீருமே
அருளும் தயவாய்;
சரீரம் நற்சீர் நிறைந்து
உம் மக்கள் யாவரும்
சன்மார்க்க ஞானம் உள்ளோராய்
உம்மைத் துதிக்கவும்.

**565** **கி.கீ.351**

*சஹானா* *சாபுதாளம்*

***பல்லவி***

**சூரியன் அஸ்தமித்திருண்டிடும் வேளையில்**
சூழ்ந்தனர் பிணியாளிகள் – உனை நெருங்கித்
துயர் தீர வேண்டினரே.

***அனுபல்லவி***

இன்னேரம் உன்தயை தேடும் இவ்வடியாரின்
இன்னலெல்லாம் ஓட அன்பே உன்னருள் ஈவாய்– சூரி

1. பேயின் அகோரத்வம் உனைக்கண்டு பறந்தது,
நோயும் நிர்ப்பந்தமும் நீ தொட ஒழிந்தன,
வாய்க்கும் சுகானந்தம் உனை நம்பினோர்க்கெல்லாம்,
தாய்க் கருணையுடையோய், இன்றும் உன் தயை கூர்வாய். –சூரி

அட்டவணை

2. இஷ்டரின் துரோகத்தால் இடர் அடைந்துழல்வோரும்
துஷ்டர் செய்துன்பத்தால் தயங்கித் தவிப்போரும்
கஷ்டமெல்லாம் தீர்ந்து களிக்கக் கருணை கூர்வாய்
அஷ்டதிக்கும் ஆள்வோய், அபயம் அபயம் என்றோம். –சூரி

3. எளியோர் வறுமையில் இன்னருள் ஊற்றுவாய்
விழிப்போடிரவிற் கண்ணீர் விடுவோரைத் தேற்றுவாய்
வழி தப்பி அலைவோரை வழி காட்டி ஆற்றுவாய்
பழி பாவம் துணிவோரைத் தடுத்தாண்டு மாற்றுவாய். –சூரி

4. சருவ சக்தி சதா காலமும் உனதல்லோ?
வருத்த மெல்லாம் ஓடும் வார்த்தை ஒன்று சொல்ல
உரித்தாய்க் கரத்தினால் உன்னடியாரைத் தொடுவாயே
கருகுங் கங்குலிலும் யாம் களிப்பாய்ச் சுகிப்போமே. – சூரி

*–ஏசுதாசன் சவரிராயன்*

## 8. வறட்சி

**566** **பா.231**

A.M.52 *Luther* 8,7,8,7,8,8,7

1. **ஆ நீதியுள்ள கர்த்தரே,**
வயல் வறண்டதாலே
எச்ஜீவனும் வதங்கிற்றே;
இக்கேடு எங்களாலே
நடந்த பாவத்தின் பலன்,
என்றெங்களில் ஒவ்வொருத்தன்
துக்கித்துச் செல்வானாக.

2. ஆ, எங்கள் மீறுதல்களை
இரக்கமாய் மன்னியும்;
நீரே அடியார் நம்பிக்கை
சகாயத்தை அளியும்;
கர்த்தாவே சுத்த தயவால்
மழையைத் தந்து, அதினால்
நிலத்தைப் பூரிப்பாக்கும்.

அட்டவணை

3. தயாபரா, நீர் உமது
நல் வாக்கு நிறைவேற,
காய்ந்து கிடக்கும் பூமிக்குத்
தண்ணீர் இறைப்பீராக;
வானுலகாளும் கர்த்தரே,
மழையை உம்மை அன்றியே
ஆர் பெய்யப் பண்ணக்கூடும்?

4. மூச்சற்ற விக்ரகங்களால்
கூடாது; தேவரீரே
வானத்தைத் திருக் கரத்தால்
விரித்தீர்; அதில் நீரே
அளவில்லாமல் ஆள்பவர்,
நீரே பிதா, நீர் ரட்சகர்,
உம்மாலே யாவும் ஆகும்.

## 9. கிறிஸ்தவ இல்லறம்

**567** **கி.கீ.396**

*காம்போதி* *சாபுதாளம்*

***பல்லவி***

**கிறிஸ்தவ இல்லறமே – சிறந்திடக்**
கிருபை செய்வீர், பரனே!

***அனுபல்லவி***

பரிசுத்த மரியன்னை, பாலன் யேசு, யோசேப்புப்
பண்பாய் நடத்திவந்த இன்பக் குடும்பம்போல – கிறிஸ்

***சரணங்கள்***

1. ஜெபமென்னும் தூபமே தினம் வானம் ஏறவும்,
திரு வேத வாக்கியம் செவிகளில் கேட்கவும்,
சுப ஞானக்கீர்த்தனை துத்தியம் பாடவும்,
சுதனேசு தலைமையில் தூய வீடாகவும் –கிறிஸ்

அட்டவணை

2. ஊழியம் புரியவும் ஊதியம் விரும்பாமல்,
உவந்த பெத்தானியா ஊரின் குடும்பம் போல,
நாளும் யேசு பிரானை நல் விருந்தாளியாக்கி
நாடியவர் பாதத்தில் கூடியமர்ந்து கேட்டு. -கிறிஸ்

3. அன்போடாத்துமதாகம் அரிய பரோபகாரம்
அருமையாக நிறைந்த அயலார்க்கொளி விளக்காய்
துன்பஞ் செய்கிற பல தொத்து வியாதிகளைத்
தூரந்துரத்தும் வகைசொல்லிச் சேவையைச் செய்து,- கிறிஸ்

4. மலையதின் மேலுள்ள மாளிகையைப் போலவே,
மற்றவர்களுக்கு முன் மாதிரியாய் நின்று,
கலை உடை உணவிலும், கல்வி முயற்சியிலும்
கர்த்தருக் கேற்ற பரிசுத்தக் குடும்பமாகக் -கிறிஸ்

**568** Ellers **பா.229**

A.M.31, S.S.291 10,10,10,10

1. **அடியார் வேண்டல் கேளும், இயேசுவே;**
உம் பாதம் சேர்ந்தோம் தாசர் இந்நாளே;
நல் வீட்டைக் கட்ட நீரே வருவீர்
உம் ஆசி தேடி வந்தோம் நாங்களே.

2. எங்கள் நல் வீட்டில் நீரே தங்குவீர்
பந்தியில் நீரும் கூட அமர்வீர்
எங்கள் நற்பேச்சில் நீரும் மகிழ்வீர்
எங்கள் துன்பத்தை இன்பமாக்குவீர்.

3. பாலனாய் வந்த இயேசு ரட்சகா
எம் பாலர் முகம் பாரும், நாயகா
தெய்வ கிருபை நற்குணம் நற்செயல்
யாவிலும் இவர் ஓங்கச் செய்வீரே.

அட்டவணை

4. வாலிபர் நெறி தவறாமலும்,
ஈனர் இழிஞரைச் சேராமலும்,
ஞானமாய் வாழ்ந்து சீலமுடனே
நல் சேவை செய்ய நீர் அருள்வீரே.

5. மூத்தோர் முதியோர் யாரையும் அன்பாய்க்
காரும், உம் பலம் ஆறுதல் தாரும்;
நோயுற்றோர் பலவீனர் யாரையும்
தளர்ச்சி தீர்த்துத் தாபரித்திடும்.

6. எம் வீட்டை இந்நாள் பிரிந்து சென்று
எங்கெங்கோ தங்கும் எல்லாப்பேரையும்
அன்பாய் அணைத்து ஆதரித்திடும்
அவரைக் காத்து அல்லும் பகலும்.

7. ஆண்டாண்டாய் எங்கள் வீடு வளர,
ஆவியில் அன்பில் என்றும் பெருக,
எங்கள் நல் நாட்டில் இன்ப இல்லங்கள்
இயேசுவின் வீடாய் என்றும் பொலிக.

## 10. பிரிவு சமயம்

**569** God Be With You Till We Meet Again **பா.232**
S.S.298 *Randolph* 9,8,8,9

1. **சொற்பக் காலம் பிரிந்தாலும் பார்,**
பின்பு ஏக சபையாக
கூடுவோம் ஆனந்தமாக
அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.

*கூடுவோம்... கூடுவோம்*
*இயேசுவோடு வாழுவோம்;*
*கூடுவோம்... கூடுவோம்*
*அது மட்டும் கர்த்தர் தாங்குவார்.*

அட்டவணை

2. அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்
மிக்க ஞானத்தால் நடத்தி
மோசமின்றியும் காப்பாற்றி
அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்

3. அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்
சிறகாலே மூடிக் காத்து
மன்னா தந்து போஷிப்பித்து
அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்

4. அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்
துன்பம் துக்கம் நேரிட்டாலே
கையில் ஏந்தி அன்பினாலே
அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்

5. அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்
ஜெயக்கொடி பறந்திடும்
சாவும் தோற்றுப் பறந்தோடும்
அதுமட்டும் கர்த்தர் தாங்குவார்.

## 11. தேச வாழ்த்து

**570** Hai Hindustan **பா.236**

A.M.360 *Moscow* 6,6,4,6,6,6,4

1. **வாழ்க எம் தேசமே!**
ஊழியாய் ஓங்கியே
வாழ்ந்திடுவாய்!
பூர்வீக தேசமே!
கூறொண்ணா கீர்த்தியே
பார் போற்றும் மேன்மையே
நீ பெறுவாய்!

அட்டவணை

2. உன் வயல் வெளிகள்
உன்னத காட்சிகள்
ஒப்பற்றதே!
வான் எட்டும் பர்வதம்
கான்யாறு காற்றுகள்
போன்றே மா மாட்சியாய்
நீ ஓங்குவாய்!

3. கர்த்தாவின் கரமே
நித்தியம் எம் தேசமே,
உன் மேலுமே!
உன் நாதர் கிறிஸ்துவே;
உன் அன்பர் வாக்கையே
அன்போடு பற்றியே
நீ ஓங்குவாய்!

**571** *(ஜன கன மன என்ற இசை)* **கி.கீ.398**

1. **இமயமும் குமரியும் எல்லைக் கடலுடை**
எந்தாய் நாட்டினைக் காத்தாள்
நெஞ்சார் அன்பின் தியாகசேவையே
நெறியாம் சிலுவையின் வீரம்
தங்கிடத் தேசத்தலைவர் மேல் ஆசி
சாந்தியின் வாழ்வருள் நாதா!
சமாதானம் இயேசுவின் வீடே
சகலர்க்கும் சாந்தி எம் நாடே
சாந்தி இதற்கில்லை ஈடே
இமயமும் குமரியும் எல்லைக்கடலுடை
எந்தாய் நாட்டினைக் காத்தாள்
ஜெயமே, ஜெயமே, ஜெயமே!
ஜெய, ஜெய, ஜெய, ஜெயமே!

அட்டவணை

2. உழவெழத் தொழிலெழ உற்பத்தி மிகவே
ஓங்கிய வர்த்தகம் தாங்கப்
பொய்யா மொழி மாகாணத்தலைவர்
புருஷோத்தம மந்திரிகள்
நற்கிறிஸ் திறைவனின் சிலுவைச் சேவை
நட்புடன் கருணை இலங்கப்
பணிவிடை நேர்மை அருளே
பரனர செனப் பகர் தெருளே
பாரதம் போற்றும் மெய்ப் பொருளே!
இமயமும் குமரியும் எல்லைக்கடலுடை
எந்தாய் நாட்டினைக் காத்தாள்
ஜெயமே, ஜெயமே, ஜெயமே!
ஜெய, ஜெய, ஜெய, ஜெயமே!

*–சா.ஜா. நல்லையா*

## 12. மரணம்

**572** St. Alphege **பா.393**

A.M.350 I 7,6,7,6

1. **என் ஜீவன் கிறிஸ்துதாமே,**
அதாலே எனக்கு
என் சாவாதாயமாமே
நெஞ்சே, மகிழ்ந்திரு.

2. நான் இயேசு வசமாக
சேர்ந்தென்றும் வாழவே,
மா சமாதானமாகப்
பிரிந்து போவேனே.

3. பாடற்றுபோம், அந்நாளே
என் நோவும் முடியும்
என் மீட்பர் புண்ணியத்தாலே
மெய் வாழ்வு தொடங்கும்.

அட்டவணை

4. நான் பேச்சு மூச்சில்லாமல்
குளிர்ந்து போயினும்
என் ஆவியைத் தள்ளாமல்
உம்மண்டை சேர்த்திடும்.

5. அப்போது நான் அமர்ந்து
என் நோவை மறப்பேன்
உம் சாந்த மார்பில் சாய்ந்து
நன்கிளைப்பாறுவேன்.

6. நான் உம்மைக் கெட்டியாக
பிடித்தும்முடனே
அநந்த பூரிப்பாக
வாழட்டும் இயேசுவே.

**573** On The Resurrection Morning **பா.396**

A.M.499 I 8,7,8,3

1. **உயிர்த்தெழும் காலைதன்னில்**
ஆவி தேகம் கூடவும்,
துக்கம் நீங்கும் ஓலம் ஓயும்
நோவும் போம்.

2. ஆவி தேகம் சிறு போது
நீங்க, தேகம் ஓய்வுறும்
தூய அமைதியில் தங்கி
துயிலும்.

3. பாதம் உதயத்தை நோக்கி
சோர்ந்த தேகம் துயிலும்,
உயிர்த்தெழும் மாட்சி நாளின்
வரைக்கும்.

4. ஆவியோ தியானம் மூழ்கி
ஆவலாய் செய் விண்ணப்பம்
கீதமாய் உயிர்க்கும் நாளில்
பாடிடும்.

5. சேர்ந்த ஆவி தேகமதை
அப்பால் பிரியாதொன்றும்
கிறிஸ்து சாயல் தன்னில் கண்டு
பூரிக்கும்.

6. உயிர்த்தெழும் நாளின் மாட்சி
யாரால் சொல்லிமுடியும்?
நித்திய காலம் மா சந்தோஷம்
நிலைக்கும்.

7. ஆ, அப்பாக்கிய மாட்சி நாளில்
மாண்டோர் உயிர்த்தெழுவார்
பெற்றோர் பிள்ளை சுற்றத்தாரும்
கூடுவார்.

8. நின் சிலுவை பற்றும் எம்மை
சாவில் நியாயத்தீர்ப்பிலும்
காத்து, மா அக்கூட்டம் சேரும்,
இயேசுவே.

**574** Jerusalem On High **பா.399**

A.M.233 *Christ Church* 6,6,6,6

1. **உன்னத சாலேமே**
என் கீதம் நகரம்;
நான் சாகும் நேரமே
மேலான ஆனந்தம்!

அட்டவணை

*விண் ஸ்தானமே!*
*கர்த்தா எந்நாள்*
*உம் திருத் தாள்*
*சேவிப்பேனே!*

2. பூவில் தகாரென்றே
தீர்ப்புற்ற நாதனார்
தம் தூதரால் அங்கே
சீர் வாழ்த்தல் பெறுவார்.

3. அங்கே பிரயாணத்தை
பிதாக்கள் முடிப்பார்
வாஞ்சித்த பிரபுவை
ஞானியர் காணுவார்.

4. தூய அப்போஸ்தலர்
சந்தோஷமாய்க் காண்பேன்;
பொன் வீணை வாசிப்பர்
இசை பாடக் கேட்பேன்.

5. சீர் ரத்தச் சாட்சிகள்
வெள்ளங்கி பூணுவார்
தங்கள் தழும்புகள்
கொண்டு மாண்படைவார்.

6. கேதார் கூடாரத்தில்
இங்கே வசிக்கிறேன்;
நல் மோட்ச பாதையில்
உம்மைப் பின்பற்றுவேன்.

**575** Jerusalem My Happy Home **பா.400**
S.S.129 *Southwell* C.M.

1. **எருசலேம் என் ஆலயம்**
ஆசித்த வீடதே;
நான் அதைக் கண்டு பாக்கியம்
அடைய வேண்டுமே.

அட்டவணை

2. பொற்றளம் போட்ட வீதியில்
எப்போதுலாவுவேன்?
பளிங்காய்த் தோன்றும் ஸ்தலத்தில்
எப்போது பணிவேன்?

3. எந்நாளும் கூட்டம் கூட்டமாய்
நிற்கும் அம்மோட்சத்தார்
கர்த்தாவைப் போற்றிக் களிப்பாய்
ஓய்வின்றிப் பாடுவார்.

4. நானும் அங்குள்ள கூட்டத்தில்
சேர்ந்தும்மைக் காணவே
வாஞ்சித்து லோக துன்பத்தில்
களிப்பேன், இயேசுவே.

5. எருசலேம் என் ஆலயம்,
நான் உன்னில் வாழுவேன்
என் ஆவல், என் அடைக்கலம்
எப்போது சேருவேன்?

**576** For Ever With The Lord **பா.401**

A.M.231, S.S.917 *Nearer Home* D.S.M.

1. **“என்றும் கர்த்தாவுடன்,**
நான் கூடி வாழுவேன்,”
இவ்வாக்கினால் சாகாவரன்
செத்தாலும் ஜீவிப்பேன்
பற்றாசையால் உம்மை
விட்டே நான் அலைந்தேன்,
நாடோறும் வழி நடந்தே
விண் வீட்டைக் கிட்டுவேன்

அட்டவணை

2. அதோ சமீபமே,
பிதாவின் வீடுதான்!
என் ஞானக் கண்கள் காணுமே
மின்னும் பொன்னகர் வான்,
தூயோர் சுதந்தரம்,
நான் நேசிக்கும் நாடே,
என் ஆவி மேலெருசலேம்
சேரத் தவிக்குமே.

3. "கர்த்தாவுடன் என்றும்!"
பிதாவே, இங்கும் நீர்
இவ்வாக்கை நிறைவேற்றவும்
சித்தம் கொண்டருள்வீர்,
என் பக்கம் தங்கிடின்,
தப்பாமலே நிற்பேன்,
கை தூக்கி என்னைத் தாங்கிடின்
போராடி வெல்லுவேன்.

4. என் ஜீவன் போகும் நாள்
கிழியும் இத்திரை,
சாவை அழிப்பேன் சாவினால்
சாகா உயிர் பெற்றே
என் தேவனைக் காண்பேன்,
நின்று களிப்புடன்
சிம்மாசனத்தின் முன் சொல்வேன்
"என்றும் கர்த்தாவுடன்".

**577** Brief Life is here our portion **பா.392**

A.M.224, 225 Kocher, St. Alphege 7,6,7,6

1. **இம்மையின் துக்கம், துன்பம்**
கண்ணீரும் மாறிப் போம்
முடிவில்லாத இன்பம்
பரத்தில் பெறுவோம்.

அட்டவணை

2. இதென்ன நல்ல ஈடு,
துன்பத்துக்கின்பமா?
பரத்தில் நிற்கும் வீடு
மரிக்கும் பாவிக்கா?

3. இப்போது விழிப்போடு
போராட்டம் செய்குவோம்;
விண்ணில் மகிழ்ச்சியோடு
பொற் கிரீடம் சூடுவோம்

4. இகத்தின் அந்தகார
ராக்காலம் நீங்கிப்போம்;
சிறந்து ஜெயமாக
பரத்தில் வாழுவோம்.

5. நம் சொந்த ராஜாவான
கர்த்தாவை நோக்குவோம்
கடாட்ச ஜோதியான
அவரில் பூரிப்போம்.

**578** **கி.கீ.355**

*காபி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**கல்லும் அல்லவே, காயம் – வல்லும் அல்லவே – இது**

***அனுபல்லவி***

வெள்ளி, பொன் விலைமதியா மேரும் அல்லவே. –கல்

***சரணங்கள்***

1. வல்லமை பேசாதே, நாளை வருவதறியாய் – அதால்
நல்ல வழி தேடி தேவ நாமத்தைத் தியானி. –கல்

2. சூரியன் கீழ்க் கண்டதெல்லாம் மாயை அல்லவோ? – சாலமோன்
பார் அறிய சொன்னதை நீ பார்த்தறியாயோ? –கல்

அட்டவணை

3. காற்றடித்த மேகம் புகைக் கொப்பதாகவே, – இங்கே
போற்றிய மனுடர் ஜீவன் போய் ஒழியுமே. –கல்

4. வேகமாய் வடியும் ஆற்றுக் கொப்பதாகவே – மாய
தேக நரர் நாட்களும் சீக்கிரம் கழியுமே. –கல்

5. இராப் பகல், இருள், வெளிச்சம் மாறும் வண்ணமே – ஐயோ!
நாட்களின் மகிழ்ச்சிக்கு மா மாறுதல் உண்டே. –கல்

6. பூவதும் உதிரும், பசும் புல்லும் வதங்கும். – அது
போலவே நரர் உருவம் மாறி வதங்கும். –கல்

7. மேலது கீழ், கீழது மேல் ஆம் உருளை போல், – நரர்
மேன்மையும் வாழ்வும் கீழது மேலும் ஆகுமே. –கல்

8. நுண்ணிமை ஞானி என்றாலும் கீர்த்தி பெற்றாலும் – ஐயோ!
அன்னவன் மலையும் நேரம் யாவும் கலையும். –கல்

9. ஆசனம், துரைத்தனம், தத்துவங்கள் ஒழியும் – அர
சாண்ட மன்னரும் ஒரு நாள் மாண்டொழிவாரே. –கல்

10. யாவும் ஓட்டமாகப் பாயும் யாவும் அழியும் – மெய்த்
தேவபக்தி யேகெலிக்கும், ஜீவன் நிலைக்கும். –கல்

*–வேதநாயகம் சாஸ்திரியார்*

**579** **கி.கீ.356**

*காபி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**பொன்னகர்ப் பயணம் போகும் புண்ணியர்களே – மகிமை**
என்னவென்றுரைக்க வல்லோர் யாருமில்லையே.

***சரணங்கள்***

1. உன்னத சுதனுக்கேதும் ஒப்புமையுண்டோ? – அவர்
தன்னுதிரந் தந்து கொண்ட தன்மையருமை. – பொன்

2. லாசருக் கழுத கண்ணீர் நம்முடையதே – அவர்
நேசமார்பில் சாய்ந்து கொள்ளும் நித்திரையிதே. – பொன்

அட்டவணை

3. வந்தழைத்துப் போயென்னோடு வைப்பே னென்றவர் – இன்று
வந்தழைத்துப் போகுமேன்மை மாந்தருக் குண்டோ? – பொன்

4. மண்ணினா லுண்டான வுடல் மண்ணேயாயினும், – யேசு
தன்னுருவோடே எழும்பும் சத்தியம் இதே. – பொன்

5. கண்ணீர் துடைத்தெம்மை யாற்றும் கர்த்தரருகில் – சென்றோர்
நண்ணியே ஜீவகனி யுண் டின்னல் நீங்குவார். – பொன்

6. ஆட்டுக்குட்டியானவர் சிங்காசனங் கண்டு – புதுப்
பாட்டுக்கள் பாடும் சுத்தர் கூட்டமடைந்தார். – பொன்

7. கர்த்தருக் குள்ளே மரிப்போர் பாக்கியரென்று – சொல்லும்
உத்தம வேதத்தின் உண்மை உன்னத மல்லோ? – பொன்

*–ஜி.சே. வேதநாயகம்*

**580** **கி.கீ.353**

*துஜாவந்தி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஆறுதல் அடை, மனமே – கிறிஸ்துவுக்குள்**
ஆறுதல் அடை, மனமே.

***அனுபல்லவி***

பாருள் பாவத்தால் வந்த பலனாம் மரண மதின்
கூரை அழித்த யேசு கொற்ற வன்றனை நோக்கி. – ஆறு

***சரணங்கள்***

1. நம்பிக்கையற்றோரைப்போலே – மரித்தோர்க்காக
நலிவதேன் ஒருக்காலே,
உம்பர் கோன் மேகத்தின் மேலே – தோன்றிடும் போ
துயிர்த்தெழும்புவதாலே,
வெம்பிப் புலம்பி அழ வேண்டாம், கிறிஸ்துவெனும்
தம்பிரான் திருமொழிச் சாரத்தை ருசிபார்த்து. – ஆறு

2. ஜீவ நதிகள் ஓடுமே – எருசலேமில்
திரளாய் ஜனங்கள் கூடுமே;
தேவ துதியைப் பாடுமே – யேசுகிறிஸ்தின்
ஜெயத்தைச் சொல்லிக் கொண்டாடுமே,
ஆவலுடனே நாமும் அதையே அடைவதற்கு
ஜீவ வசனந்தன்னைத் திடனாய்ப் பிடிப்போமாக. – ஆறு

3. எண்ணம் கவலைகள் உண்டாம் – மரித்தோர்க்காக
ஏக்கம் பெருமூச்சும் உண்டாம்;
கண்ணீர் சொரிவதும் உண்டாம் – துயரம் மிஞ்சிக்
கலங்கி அழுவதும் உண்டாம்
அண்ணல் கிறிஸ்துவும் முன் எண்ணிக் கண்ணீர் விட்டார்
நண்ணி அவரை ஜெபம் பண்ணித் துயரைவிட்டு. – ஆறு

4. யேசுவைப் பற்றின பேர்கள் – மரித்தும் உயிர்த்
தெழுந்து புறப்படுவார்கள்;
மாசற்ற தேவன் அவர்கள் – உடனிருக்க
மகிமை பெற்றிருப்பார்கள்,
பேச வேண்டுமோ? யேசு ராசன் சமூகமதில்
நேசமுடன் என்றைக்கும் வாசம் செய்வார்கள் அல்லோ? – ஆறு

*–மரியான் உபதேசியார்*

**581** *Riseholme*

A.M.275 8,8,8,4

1. **பொன்னாய் இலங்கும் காலையும்**
**விண் காந்தியும் ஒழிந்ததே**
**திரும்ப மாலை நிழலும்**
**படர்ந்ததே.**

2. **வாழ்நாளின் காலை நேரமும்**
**மத்தியானமும் மறையுமே**
**கர்த்தாவே அந்திப்பொழுதும்**
**நடத்துமே.**

அட்டவணை

3. விண் வீட்டை நாங்கள் நாடவே
உம் அருள் நெஞ்சில் ஊற்றிடும்
பொன்நகர் நாங்கள் சேரவே
துணை செய்யும்.

4. அங்கே குன்றாத ஜீவனும்
ஒளியும் தங்கும் நித்தமாய்
விண்ணோரின் கீதம் முழங்கும்
ஓயாததாய்.

5. ராநிழலோ அங்கில்லையாம்
தூயோர் வெள்ளங்கி தரிப்பார்
ஜோதியில் ஜோதி தேவன் தாம்
அரசாள்வார்.

## 13. இறைவேண்டல்

**582** **கி.கீ.400**

*ஹரிகாம்போதி* ***கழிநெடில்*** *ஏகதாளம்*

**உன்னதப் பரமண்டலங்களில் வசிக்கும்**
ஒளிர்பிதாவே உனின் நாமம்
உயர் பரிசுத்த மாய்த்தொழுப் படுக
உனது ராச்சிய முறைவருக
முன்னிய உனது சித்தமே பரத்தில்
முடியுமாப்போல, இப்புவியில்
முடிவுறச் செய்யப் படுவதுமாக
முழுதும் நின் கரத்தையே நோக்கும்
நின் அடியார்க்கன் றாடக உணவு
நிரம்பவே அருள், பிறர் இயற்றும்
நீதிக்கே டினை யாம் பொறுப்பது போல
நிமலனே எம்பவம் மனியாய்
இன்னமும் எமைச்சோ தனைக்குட்படாமல்
இடர் தவிர்த் திரக்கமாய்க் காவாய்
இராச்சியம் வல்லமை மகிமை மற்றெவையும்
என்றும் உன் உடைமையே; ஆமென்.

*–சவரிமுத்து உபாத்தியாயர்*

அட்டவணை

**583** **கி.கீ.239**

*நாதநாமக்கிரியை* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஜெப சிந்தை எனில் தாரும், தேவா – என்னை**

***அனுபல்லவி***

அபயமென் றுனக்குக்கை
அளித்தேன் பொற்பாதா –ஜெப

***சரணங்கள்***

1. உண்மை மனதோ டுன்னைக் கெஞ்ச – உல
கெண்ண மெல்லாம் அகற்றி உரிமையே மிஞ்ச,
தொன்மை ஆயக்காரன் போலஞ்ச, – பவ
தோஷமகலத் திருரத்தம் உள்ளிஞ்ச –ஜெப

2. இடைவிடாமல் செய்யும் எண்ணம் – என்
இதயத்தில் உதயமாய் இலங்கிடப் பண்ணும்,
சடமுலகப் பேயை வெல்லும் – நற்
சாதக முண்டாகத் தயைசெய் என்னுள்ளம் –ஜெப

3. ஊக்கமுடன் ஜெபம் செய்ய – தகா
நோக்கமெல்லாம் கெட்டு நொறுங்கியே நைய,
பேய்க்கண மோடுபோர் செய்ய – நல்
ஆக்கம் எனில் தந்து ஏக்கம் தீர்ந்துய்ய. – ஜெப

*–சா. சீமோன்*

**584** **கி.கீ.241**

*காபி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஏற்றுக்கொண்டருளுமே, தேவா! – இப்போ**
தேழையேன் ஜெபத்தை இயேசுவின் மூலம்

அட்டவணை

***சரணங்கள்***

1. சாற்றின ஆதி ஆயத்த ஜெபமும்
சாந்தமாய் ஜெபித்த பாவ அறிக்கையும்
தேற்றிக் கொண்டருளும் மன்னிப்பின் மருவும்
திவ்விய பாதத்தில் வைக்கிறேன், ஸ்வாமி –ஏற்று

2. குறைவுண்டு இதிலே, அருமைப் பிதாவே
குற்றம் மன்னித்திடும் யேசுவின் மூலம்
முறைப்படி கேட்க நான் தெரியாத பாவி,
முழுதும் மேசையாமேல் வைக்கிறேன் ஸ்வாமி –ஏற்று

3. மறுரூப ஆவி வேண்டுமென் ஸ்வாமி
மனமெல்லாம் புதிதாக்கிடும் ஸ்வாமி
சிறுமைப்பட்டடியேன் கேட்கிறேன் ஸ்வாமி
தேற்றிடும் புதுபலன் ஊற்றிடும் ஸ்வாமி –ஏற்று

4. விசுவாசம் பெருகி நிலைத்திடச் செய்யும்
வெளிப்படும் மறைபொருள் பலப்படச் செய்யும்
சிசுவைப்போல் மறுபடி பிறந்திடச் செய்யும்
தேவாவி என்னுளந் தங்கிடச் செய்யும் –ஏற்று

*–அருளாநந்தம் பிரசங்கியார்*

**585** **கி.கீ.242**

*பைரவி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஆ! இன்ப கால மல்லோ – ஜெபவேளை**
ஆனந்த காலமல்லோ?

***அனுபல்லவி***

பூவின் கவலைகள் போக்கி என் ஆசையைப்
பொன்னுல காதிபன் முன்னே கொண்டேகிடும். – ஆ!

அட்டவணை

*சரணங்கள்*

1. துன்பம் துயர் நீக்கி பொல்லாங்கள் – சோதனைகள் போக்கி,
அம்பர வாசிகளோ – டிதயத்தை – இன்ப உறவாக்கி
கெம்பீரமாகவே தம்பிரான் ஆசனம்
கிட்டி மகிழ்வுடனுற்று வரச் செய்யும். – ஆ!

2. ஜீவ ஆறுதல் பெற்று – பிஸ்காவின் – சிகரமதனில் உற்று
தேவ நகர் கண்ணுற்றுச் – சடலத்தை – ஜெகத்தில் எறிந்து விட்டு
ஆவி களிப்புடன் ஆகாயஞ் செல்லவே
அன்போடு பார்த்து நல் வந்தனஞ் சொல்லுவேன் – ஆ!

*–ம. வேதமாணிக்கம்*

**586** **நூ.கீ.251**

*நாதநாமக்கிரியை* *ஆதிதாளம்*

**பரமண்டலங்களில் வீற்றிருக்கும்**
பரம பிதாவே எந்நாளும்
பரிசுத்தப்படுக உம் நாமம்
பரிவுடன் வருக உம் ராஜ்ஜியம்
பரலோகத்தில் உமது சித்தம்,
பண்புடன் செய்யப்படுவது போல்
தரணியிலுமது சித்தமே
தவறாது செய்யப்படுக சதா.
அன்றன்றுள்ள எம் ஆகாரம்
அன்புடன் எங்களுக் கீந்தருளும்
நன்றயலார் கடன் யாம் மன்னிக்கும்
நன்னயம் போலெம் பிழை மன்னியும்
தேவே சோதனைக் கெமை விலக்கி
தீமையினின்றெமை விலக்கி
மேவும் ராஜ்ஜியம் வல்லமை மகிமை
மிகவும் உமதென்றுமே ஆமென்.

அட்டவணை

**587** As Pants the Hart for cooling Streams **பா.375**

A.M.238 *Martyrdom* C.M.

1. **நீரோடையை மான் வாஞ்சித்துக்**
கதறும் வண்ணமாய்,
என் ஆண்டவா, என் ஆத்துமம்
தவிக்கும் உமக்காய்.

2. தயாள கர்த்தா, உமக்காய்
என் உள்ளம் ஏங்காதோ?
உம் மாட்சியுள்ள முகத்தை
எப்போது காண்பேனோ?

3. என் உள்ளமே, விசாரம் ஏன்?
நம்பிக்கை கொண்டு நீ
சதா உன் ஜீவ ஊற்றேயாம்
கர்த்தாவை ஸ்தோத்திரி.

4. நாம் வாழ்த்தும் கர்த்தனார் பிதா
குமாரன், ஆவிக்கும்
ஆதிமுதல் என்றென்றுமே
துதி உண்டாகவும்.

**588** **நூ.கீ.248**

S.S.873

1. **ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா**
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்வீர்

***பல்லவி***

ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கிதுவே சட்டம்

அட்டவணை

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தைப் பற்றிக்கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்வீர்

3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
வாகான தாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடு வேண்டிக்கொள்வோம்

4. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கிவிடும்
சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம்

## 14. சிலுவை சரிதை

God the Father, God the Son

**589** மனஸ்தாப லித்தானியா **பா.408**

A.M.466 II *Litany*

1. **தந்தை சுதன், ஆவியே,**
ஸ்வாமியாம் திரியேகரே
வானாசனமீதுற்றே,
எங்களுக்கு இரங்கும்.

2. எங்களை நீர் மீட்கவும்,
ராஜாசனம் விட்டிங்கும்
வந்தீர் ஏழையாகவும்
கேளும், தூய இயேசுவே.

3. பாவிகள் விருந்தரே,
பாதந்தழும் பாவிக்கே
நேச வார்த்தை சொன்னீரே;
கேளும், தூய இயேசுவே.

அட்டவணை

4. சீமோன் மறுதலித்தும்
அவன் கண்ணீர் சிந்தவும்
கண்டித்தீர் நீர் நோக்கியும்
கேளும், தூய இயேசுவே.

5. வாதைச் சிலுவை நின்றே
இன்று பரதீஸிலே
சேர்வாய் என்றுரைத்தீரே;
கேளும், தூய இயேசுவே.

6. நீசர் நிந்தை சகித்தீர்
பாவிக்காய் நொறுங்குண்டீர்
பாவமின்றித் தீர்ப்புற்றீர்
கேளும், தூய இயேசுவே.

7. ஆண்டீர் சிலுவையினால்
மீட்டீர் சுத்த ரத்தத்தால்
மாண்டீர் கொடும் சாவினால்
கேளும், தூய இயேசுவே.

8. தப்பிப்போனோர் மேய்ப்பரே
நோவில் ஆற்றல் செய்வோரே
ஆழ்ந்து போனோர் ஓலமே
கேளும், தூய இயேசுவே.

9. மாசில்லா உம் தூய்மையும்
எங்கள் பாவம் நீக்கவும்
மனஸ்தாவம் ஈயவும்
கெஞ்சுகின்றோம், இயேசுவே.

10. பாவத்தை அகற்றியே
திவ்விய அருள் பேணியே,
உம் சமூகம் நாடவே;
கெஞ்சுகின்றோம், இயேசுவே.

அட்டவணை

11. நாங்கள் உம்மை நம்பவும்
ஆசாபாசம் நீக்கவும்
பக்தர் சாந்தர் ஆகவும்
கெஞ்சுகின்றோம், இயேசுவே.

12. பாவத்துக்குச் சாகவும்
நீதிக்குப் பிழைக்கவும்
ஜீவ பாதை செல்லவும்
கெஞ்சுகின்றோம் இயேசுவே.

13. எங்கள் போர் முடியவும்
நீள் பிரயாணம் ஓயவும்
நாங்கள் இளைப்பாறவும்
கெஞ்சுகின்றோம், இயேசுவே.

**590** God the Father, God the Son **பா.409**

A.M.466 II *Litany* 7,7,7,7

1. **தந்தை சுதன் ஆவியே,**
ஸ்வாமியாம் திரியேகரே
வானாசனமீதுற்றே,
எங்களுக்கு இரங்கும்.

2. நிந்தை, கஸ்தி, தேவரீர்
எங்கள் பொருட்டடைந்தீர்;
தாசர் வேண்டுதலை நீர்
கேளும், தூய இயேசுவே.

3. சீஷர் மூவர் தூங்கவே
கெத்செமனே காவிலே
உற்ற வேதனையாலே
கேளும், தூய இயேசுவே.

4. தந்தை சித்தம் ஆகவும்
வந்த பாத்திரம் நீங்கவும்
நீர் ஜெபித்ததாலேயும்
கேளும், தூய இயேசுவே.

5. யூதாஸ் முத்தஞ் செய்யவே
யூதர் உம்மைக் கட்டவே
சிறைப்பட்டதாலுமே
கேளும், தூய இயேசுவே.

6. வாரால் பட்ட காயமும்,
போர்த்த சிவப்பங்கியும்,
முள்ளின் கிரீடமூலமும்
கேளும், தூய இயேசுவே.

7. ராஜன் உம்மைத் தள்ளியே,
கள்ளன் பரபாசையே
கேட்டுக்கொண்டதாலுமே
கேளும், தூய இயேசுவே.

8. சிலுவையில் அறையும்
என்று யூதர் கூவவும்,
சாகச் சென்றதாலேயும்
கேளும், தூய இயேசுவே.

9. நீர் சுமந்த குரூசாலே
நீர் குடிக்கும் படிக்கே
தந்த காடியாலுமே
கேளும், தூய இயேசுவே.

10. கால் கரத்தில் ஆணியும்,
காட்டும் மேல்விலாசமும்,
காரிருள் நிமித்தமும்
கேளும், தூய இயேசுவே.

அட்டவணை

11. ஆடை சீட்டுப் போட்டதால்,
சாவின் வாதை பார்க்குங்கால்,
யூதர் செய்த நிந்தையால்
கேளும், தூய இயேசுவே.

12. சொன்ன ஏழு வார்த்தையால்
சோர்ந்து தலை சாய்ந்ததால்,
உந்தன் பிரேதச் சேமத்தால்
கேளும், தூய இயேசுவே.

13. சோதனை நெருக்கத்தில்,
நாங்கள் தொய்ந்து போகையில்,
உந்தன் சாவின் வன்மையில்
காரும், தூய இயேசுவே.

14. உம் சிலுவைப் பொருட்டே
யாவும நஷ்டம் எனவே
நாங்கள் எண்ணும்படிக்கே
காரும், தூய இயேசுவே.

15. நாங்கள் உம்மைப் பற்றியே
சாவின் நோவைக் கடந்தே,
உம் சமூகம் சேரவே
காரும், தூய இயேசுவே. ஆமேன்.

**591** In His own raiment clad **பா.410**

6,4,6,3

**I. கேள்வி**

1. **தம் ரத்தத்தில் தோய்ந்த**
அங்கி போர்த்து
மாதர் பின் புலம்ப
நடந்து;

அட்டவணை

2. பாரச் சிலுவையால்
சோர்வுறவே,
துணையாள் நிற்கின்றான்
பாதையே.

3. கூடியே செல்கின்றார்
அப்பாதையே;
பின்னே தாங்குகின்றான்
சீமோனே.

4. குருசைச் சுமந்தெங்கே
செல்லுகின்றார்?
முன் தாங்கிச் சுமக்கும்
அவர் யார்?

**II. மறுமொழி**

5. அவர் பின் செல்லுங்கள்
கல்வாரிக்கே
அவர் பராபரன்
மைந்தனே.

6. அவரின் நேசரே,
நின்று, சற்றே
திவ்விய முகம் உற்று
பாருமே.

7. சிலுவைச் சரிதை
கற்றுக் கொள்வீர்!
பேரன்பை அதனால்
அறிவீர்

8. பாதையில் செல்வோரே
முன் ஏகிடும்
ரூபத்தில் காணீரோ
சௌந்தரியம்.

அட்டவணை

## III. சிலுவை சரிதை

9. குருசில் அறையுண்ட
மனிதனாய்
உம்மை நோக்குகின்றேன்
எனக்காய்.

10. கூர் முள் உம் கிரீடமாம்,
குருசாசனம்
சிந்தினீர் எனக்காய்
உம் ரத்தம்.

11. உம் தலை சாய்க்கவோ
திண்டு இல்லை
கட்டையாம் சிலுவை
உம் மெத்தை.

12. ஆணி கை, கால் ஈட்டி
பக்கம் பாய்ந்தும்,
ஒத்தாசைக்கங்கில்லை
எவரும்.

13. பட்டப்பகல் இதோ
ராவாயிற்றே,
தூரத்தில் நிற்கின்றார்
உற்றாரே.

14. ஆ, பெரும் ஓலமே!
தோய் சோரியில்
உம் சிரம் சாய்க்கிறீர்
மார்பினில்

15. சாகும் கள்ளன் உம்மை
நிந்திக்கவும்,
சகிக்கின்றீரோ நீர்
என்னாலும்?

அட்டவணை

16. தூரத்தில் தனியாய்
உம் சொந்தத்தார்
மௌனமாய் அழுது
நிற்கின்றார்

17. இயேசு நசரேத்தான்
யூதர் ராஜா
என்னும் விலாசம் உம்
பட்டமா?

18. பாவி என் பொருட்டு
மாளவும் நீர்
என்னில் எந்நன்மையை
காண்கின்றீர்?

**IV. சிலுவையின் அழைப்பு**

*(குருவானவர் பாடுவது)*

19. நோவில் பெற்றேன் சேயே
அன்பில் காத்தேன்;
நீ விண்ணில் சேரவே
நான் வந்தேன்

20. தூரமாய் அலையும்
உன்னைக் கண்டேன்;
என்னண்டைக் கிட்டிவா
அணைப்பேன்.

21. என் ரத்தம் சிந்தினேன்
உன் பொருட்டாய்
உன்னைக் கொள்ள வந்தேன்
சொந்தமாய்

22. எனக்காய் அழாதே
அன்பின் சேயே,
போராடு, மோட்சத்தில்
சேரவே.

**V. இயேசுவை நாம் வேண்டல்**

23. நான் துன்ப இருளில்,
விண் ஜோதியே,
சாமட்டும் உம் பின்னே
செல்வேனே;

24. எப்பாரமாயினும்
உம் சிலுவை,
நீர் தாங்கின் சுமப்பேன்
உம்மோடே.

25. நீர் என்னைச் சொந்தமாய்
கொண்டால், வேறே
யார் உம்மிலும் நேசர்
ஆவாரே?

26. இம்மையில் உம்மண்டை
நான் தங்கியே
மறுமையில் வாழ
செய்யுமே.

## 15. முடிவு கவிகள்

**592** **(பா.முடிவு கவிகள் 4 / D)**

A.M.520 I, 76 *Love Divine, Stuttgart* 8,7,8,7

**தெய்வ ஆசீர்வாதத்தோடே**
அடியாரை அனுப்பும்
வார்த்தை என்னும் அப்பத்தாலே
போஷித்து வளர்ப்பியும்.

இப்போதும்மைத் தேடி வந்து
மனதாரப் போற்றினோம்
மோட்ச லோகத்தில் களித்து,
உம்மை வாழ்த்தித் தொழுவோம்.

அட்டவணை

**593** **பா. மங்கள கவிகள் 2**

S.S.242 8,7,8,7

**கர்த்தர் தந்த ஈவுக்காக**
என்றென்றைக்கும் தோத்திரம்!
விண்ணோர் மண்ணோர் கூட்டமாக,
பாடுவார் சங்கீர்த்தனம்
மீட்கப்பட்ட யாவராலும்
ஏக தேவரீருக்கே
ஆரவாரமாய் என்றைக்கும்
தோத்திரம் உண்டாகவே!

**594** **பா. மங்கள கவிகள் 4**

S.S.287 *Dismissal* 4,8,7,8,7,8,7

**பரமண்டலத்திலுள்ள**
வானோர் நீங்கள் பக்தியாய்
இந்தப் பூமி எங்குமுள்ள
மண்ணோர் நீங்கள் களிப்பாய்
துதியுங்கள், துதியுங்கள்
பிதா, சுதன் ஆவியை.

**595** **பா. மங்கள கவிகள் 3**

*St.John (anvergal)* 6,6,6,6,8,8

**கெம்பீரமாகவே**
**சங்கீதம்** பாடுங்கள்
மாந்தர் எல்லாருமே
மகிழ்ந்து போற்றுங்கள்
பிதா, குமாரன் ஆவியாம்
திரியேகருக்குத் துதியாம்.

அட்டவணை

**அதிகாலை ஆராதனை முடிவுப் பாடல்**

**596**

எந்தன் இன்ப இயேசுவை நீர்
தினம் என்னை நடத்தும்
நாளை எந்தன் நாள் அல்லவே
நேற்றும் சென்று போயிற்றே
இன்று உம் வழியில் செல்ல
பெலன் தாரும் இயேசுவே. ஆமென்.

**597**

**கர்த்தாவே இந்த இராவினில்**
நான் நித்திரை செய்யும் வேளையில்
எனக்கு எந்த மோசமும்
வராமல் பாது காத்திடும்

காலையில் நான் விழிக்கையில்
என் ஆத்துமா உம் பார்வையில்
எப்பாவமும் இல்லாமலே
விளங்கச் செய்யும் தேவனே.

**598** **பா. முடிவு கவிகள் 3**
S.S.300 S.M

**கர்த்தாவே இருளின்**
பயங்கள் நீக்கிடும்
விழிக்குமட்டும் தூதரின்
நற்காவல் ஈந்திடும்.

அட்டவணை

**599** **பா. முடிவு கவிகள் 2**

A.M.432 I *University College* 6,6,7,7

**கர்த்தரே, தற்காரும்,**
ஆசீர்வாதம் தாரும்,
எங்கள் மேல் உம் முகத்தை
வைத்து, வீசும் ஒளியை.
எங்களுக்கன்றன்று
சமாதானம் தந்து
கிறிஸ்தைக் காட்டிப் போதிக்கும்
உமதாவியைக் கொடும்,
எங்கள் மீட்பரான
இயேசுவின் மேலான
நாமத்துக்கு மகிமை,
ஆமென். கேட்பீர் ஜெபத்தை.

**600** **நூ.கீ.411**

**தேவரீர் உம் சமாதானம்**
என்னில் தாருமே
வெறுப்பினில் உம் அன்பையும்
விரோதத்தில் மன்னிப்பையும்
காரிருளில் ஒளியையும்
துக்கத்தினில் களிப்பையும்
கொடுக்கும் உம் சமாதான
கருவியாக மாற்றிடும் ஆமென்.

**601** New Every Morning is the Love **பா.32**

A.M.4 *Helcombe* L.M.

1. **நாம் நித்திரை செய்து விழித்தோம்**
நற்சுகம் பலம் அடைந்தோம்
நாள்தோறும் தெய்வ அன்பையே
உணர்ந்து ஸ்துதி செய்வோமே.

அட்டவணை

2. தீங்கை விலக்கிப் பாவத்தை
மன்னித்து, மோட்ச நம்பிக்கை
மென்மேலும் ஓங்க நாதனார்
கடாட்சம் செய்து காக்கிறார்.

3. அன்றன்று வரும் வேலையை
நாம் செய்கின்ற பணிவிடை
என்றெண்ணியே ஒவ்வொன்றையும்
படைப்போம் பலியாகவும்.

4. நம்மை வெறுத்து, கர்த்தரின்
சமீபம் சேர விரும்பின்
அன்றாடக கடமையும்
ஓர் ஏதுவாக விளங்கும்.

5. ஜெபிக்கும் வண்ணம் உய்யவும்
கர்த்தாவே, பலம் ஈந்திடும்;
உம்மண்டை நாங்கள் வாழவும்
தகுந்தோர் ஆக்கியருளும்.

**602** **கி.கீ.341**

*புன்னாகவராளி* *சாபுதாளம்*

***பல்லவி***

**ஒருபோதும் மறவாத உண்மைப் பிதாவிருக்க**
உனக்கென்ன குறை மகனே – ஒரு

***அனுபல்லவி***

சிறுவந்தொட்டுனையொரு
செல்லப்பிள்ளைபோற் காத்த
உரிமைத் தந்தை யென்றென்றும்
உயிரோடிப்பாருன்னை – ஒரு

அட்டவணை

*சரணங்கள்*

1. கப்பலினடித் தட்டில் – களைப்புடன் தூங்குவார்
கதறுமுன் சத்தங்கேட்டால் – கடல் புசலமர்த்துவார்
எப்பெரிய போரிலும் – ஏற்ற ஆயுதமீவார்
ஏழைப்பிள்ளை உனக்கு – ஏற்ற தந்தை நானென்பார் – ஒரு

2. கடல் தனக் கதிகாரி – கர்த்தரென் றறிவாயே
கடவாதிருக்க வெல்லை – கற்பித்தாரவர் சேயே
விடுவாளோ பிள்ளையத் தாய் – மேதினியிற்றனியே?
மெய்ப் பரனை நீ தினம் – விசுவாசித்திருப்பாயே –ஒரு

3. உன்னாசை விசுவாசம் – ஜெபமும் வீணாகுமா?
உறக்க மில்லாதவர் கண் – உன்னைவிட் டொழியுமா?
இந்நில மீதிலுனக் – கென்னவந்தாலும் சும்மா
இருக்குமா அவர் மனம்?– உருக்கமில்லாதே போமா?–ஒரு

4. உலகப் பேயுடலாசை – உன்னை மோசம் செய்யாது
ஊக்கம் விடாதே திரு – வுளமுனை மறவாது
இலகும் பரிசுத்தாவி எழில் வரம் ஒழியாது
என்றும் மாறாத நண்பன் –இரட்சகருடன் சேர்ந்து –ஒரு

*–ச. முத்துசாமி உபாத்தியாயர்*

**603** **பா.260**

S.P.S.23 5,6,7,5,5,8

1. **உன்னத மான**
மா இராஜாவான
சீர் சிறந்த இயேசுவே;
உம்மில் களித்து
உம்மைத் துதித்து
நேசித்துக் கொண்டிருப்பேனே.

அட்டவணை

2. பூ மலர் காடும்
பயிர் ஓங்கும் நாடும்
அந்தமும் சிறப்புமாம்
இயேசுவின் அந்தம்
எனக்கானந்தம்
என் மனதின் குளிர்ச்சியாம்.

3. அண்டங்கள் யாவும்
சூரியன் நிலாவும்
அந்தமாய்ப் பிரகாசிக்கும்
அவர் முன்பாக
மா ஜோதியாக
மினுங்கும் யாவும் மங்கிப்போம்.

4. விண் மண்ணுடைய
மகிமை மறைய
அவர் அந்தமானவர்;
வானத்திலேயும்
பூமியிலேயும்
நான் நாடினோர் என் ரட்சகர்.

**604** **கி.கீ.250**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

*பல்லவி*

**வேதவசன விதைகளைப் புவியில்**
விதைப்பில் தெளிப்பில் வெகு நல்ல பாடம்

*அனுபல்லவி*

பாதைதனில் விதைக்கும் பக்தனருள் வேதம்
பக்தர்களைச் சேர்க்கும் சுத்தனருள் பாதம் – வேத

அட்டவணை

***சரணங்கள்***

1. அதிசய வசனம் இந்திய கரையில்
ஆழமாய் மரமாய் நடப்பட்டு வருதே
நதிவெள்ளம் பெறுதே நலமிக்கத்தருதே,
நாளும் பாவியிடம் பேர் பெற்று வருதே -வேத

2. தீயர்கள் துணையாய் துன்புறும் வேளையில்
தேறுதலளித்துத் துலங்கிடும் வசனம்
நேயமாய் மனதில் இறுகவே நின்று
நிமலன் கிருபை நிறைவுறச் செய்யும் -வேத

3. நால்வகைத் தாளமேளங்கள் கொட்ட
நடனமுடை சபைமிகக்கூடச்
சாலவே மக்கள் இன்னிசை பாடச்
சாமி வந்து சேர சந்தோஷங் கொண்டாட - வேத

*-கைபாட்டு*

**திடப்படுத்தல்**

**605** Just as I am Thine own to be **பா.182**

A.M.24 I Hesperus Abends L.M.

*(குறிப்பு: இப்பா முழுவதிலும் நான்காம் அடியை நாதா வந்தேன் என நான்கு அசையாக மட்டும் அமைத்து,* Song of Praise 583 *இன் இராகமாகப் பாடலாம்)*

1. **இளைஞர் நேசா, அன்பரே,**
அடியேனை உம் சொந்தமாய்
படைத்திட சமூலமாய்
ஆண்டவா, கர்த்தா – நான் வந்தேன்.

2. இளமைக் காலை என்னையே
படைப்பேன் வாக்குப்படியே,
பின்வையேன் ஒன்றும் – இப்போதே
பூரண ஆவலாய் வந்தேன்.

அட்டவணை

3. ஒளியில் என்றும் ஜீவிப்பேன்
நீதிக்காய் என்றும் உழைப்பேன்,
முழுபலத்தால் சேவிப்பேன்;
உம்மண்டை ஆதலால் வந்தேன்.

4. சிறியேன் திடகாத்திரன்
சத்தியம் நீதி, உமக்காய்
ஜீவிப்பேன் நல்லுத்தமனாய்;
ஜீவாதிபதி - நான் வந்தேன்.

5. பொன், புகழ், சித்தி, இன்பமும்
மேன்மையாய்த் தோன்றும் - ஆயினும்
விஸ்வாசமே மேல் நாட்டமாய்
ஜீவ நாள் முற்றிலும் — வந்தேன்.

6. உமக்காய் மேன்மையடைய
ஜெயித்து, கிரீடம் சூடிட,
பணிந்தும் பாதம் படைக்க
ஆண்டவா, கர்த்தா - நான் வந்தேன்.

**606** **பா.192**

S.P.273 *Picardy* 15,15,15

1. **தற்பரா தயாபரா, நின் தக்ஷணை கைப்பற்றினோம்;**
பொற்பரா, நினைப் புகழ்ந்து போற்றினோம் பொன் நாமமே;
அற்புதா, அடைக்கலம் நீ, ஆதரித்தனுப்புவாய்.

2. நாவினால் நமஸ்கரித்து, நாதா நினைப் பாடினோம்,
பாவியான பாதகரைப் பார்த்திபா, கடாக்ஷித்தே
ஆவியால் நிரப்பி எம்மை ஆசீர்வதித்தருள்வாய்

3. நின் சரீரத்தால் எம் மாம்சம் நீதியாக்கப் பெற்றதே,
மன்னவா, எம்மாசும் நீக்கி மாட்சி முகம் காட்டுவை,
கன்னலன்ன அன்பின் ஆசி, கர்த்தனே விளம்புவாய்.

அட்டவணை

4. தந்தை முகம் என்றும் காணும் மைந்தன் இயேசு நாதனே
மந்தையாயெமை மதித்த மாசில் மணி மேசியா
விந்தை முகம் காட்டினை நீ வீழ்ந்துணைப் பணிவோமே.

**607** Let all mortal flesh keep silence **பா.196**
S.P.273 *Picardy* 15,15,15

1. **பயத்தோடும் பக்தியோடும் தூய சிந்தையுள்ளோராய்**
சபையார் அமர்ந்து நிற்க, ஆசீர்வாத வள்ளலாம்
தெய்வ சுதன் கிறிஸ்து நாதர் ராஜனாய் விளங்குவார்.

2. வேந்தர்க்கெல்லாம் வேந்தர் முன்னே கன்னிமரி மைந்தனாய்
பாரில் வந்து நின்றார்; இதோ, சர்வ வல்ல கர்த்தராய்
வானாகாரமான தம்மால் பக்தரைப் போஷிப்பிப்பார்.

3. தூத கணங்கள் முன் சென்று பாதை செவ்வை பண்ணவே
விண்ணினின்று அவர் தோன்ற ஜோதியில் மா ஜோதியாய்
வெய்யோன் கண்ட இருள் எனத் தீயோன் ராஜ்யம் மாயுமே.

4. ஆறு செட்டையுள்ள சேராப், கண்வளரா கேருபின்
செட்டையால் வதனம் மூடி, என்றும் ஆரவாரித்து
அல்லேலூயா, அல்லேலூயா, கர்த்தா, என்று போற்றுவார்.

What can wash away my stain? nothing but the blood of Jesus

**608** **சுவி.கீ.30**
S.S.874

1. **பாவ தோஷம் நீக்கிட,**
**மீட்பரின் இரத்தம் தானே!**
**தீய குணம் மாற்றிட**
**மீட்பரின் இரத்தம் தானே!**

அட்டவணை

***பல்லவி***

*மெய்யாம் ஜீவ நதி*
*பாவம் போக்கும் நதி*
*வேறே நதியை அறியேன்*
*மீட்பரின் இரத்தம் தானே*

2. என்னைச் சுத்தமாக்கிட
மீட்பரின் இரத்தம் தானே
மன்னிப்பை நான் பெற்றிட
மீட்பரின் இரத்தம் தானே,

3. வேறே இக்ஷிப்பில்லையே
மீட்பரின் இரத்தம் தானே!
புண்ணியக் கிரியை செல்லாதே!
மீட்பரின் இரத்தம் தானே!

4. மோட்ச மார்க்கம் இதுவே!
மீட்பரின் இரத்தம் தானே!
ஏசு சுத்த தீர்த்தமே!
மீட்பரின் இரத்தம் தானே!

Lord Here Watch Thy Church is Keeping

**609** *Everton* **பா.210**

A.M.362 8,7,8,7 D

1. **திருச்சபை காத்திருக்க**
எந்நாள், நாதா, வருவீர்?
எந்நாள் துக்க ரா முடிய
பகல் விடியச் செய்வீர்?
நெல் விளைந்து வாடிப்போக
அறுப்போரும் குறைந்தார்;
சாத்தான் கொள்ளை வைத்துக்கொள்ள
கிறிஸ்து வீணாயோ மாண்டார்?

2. சிஷ்டிக்கெல்லாம் உற்ற செய்தி
கோடாகோடி கேளாரே;
யார்தான் கேட்பார் சொல்வார் இன்றி?
நாதா, வார்த்தை ஈயுமே,
வார்த்தை ஈயும்; சுவிசேஷ
தொனி எங்கும் ஒலித்தும்
எல்லாத் தேசத்தாரும் திவ்விய
மீட்பைக் கேட்கச் செய்திடும்

3. நீர் தெரிந்தோர் ஈறுகாலம்
ஒன்றாய் சேர்க்கப்படுவார்
சாத்தான் கட்டப்பட்டுப் பாவம்
மாய, கிறிஸ்து ஆளுவார்;
பசி, தாகம், நோவு சாவும்
கண்ணீர் யாவும்; நீங்கவே
திருச்சபை காத்திருக்கும்
இயேசு ஸ்வாமீ, வாருமே.

**610** *Culbach* **பா.79**

A.M.73 7,7,7,7

1. **இம்மட்டும் ஜீவன் தந்த**
கர்த்தாவை அத்தியந்த
பணிவோடுண்மையாக
ஸ்தோத்திரிப்போமாக.

2. நாள் பேச்சைப்போல் கழியும்
தண்ணீரைப்போல் வடியும்;
இதோ, இந்நாள் வரைக்கும்
இவ்வேழை மண் பிழைக்கும்.

3. அநேக விதமான
இக்கட்டையும் உண்டான
திகிலையும் கடந்தோம்;
கர்த்தாவின் மீட்பைக் கண்டோம்.

அட்டவணை

4. அடியார் எச்சரிப்பும்
விசாரிப்பும் விழிப்பும்
தயாபரா, நீர் தாமே
காக்காவிட்டால் வீணாமே.

5. தினமும் நவமான
அன்பாய் நீர் செய்ததான
அநுக்ரகத்துக்காகத்
துதி உண்டாவதாக.

6. துன்னாளில் நாங்கள் தாழ்ந்து
நொந்தாலும் உம்மைச் சார்ந்து
நிலைக்கிறதற்காக
திடன் அளிப்பீராக.

7. மா ஜன சேதத்துக்கும்
உண்டான போர்களுக்கும்
ஓர் முடிவு வரட்டும்
நொறுங்கினதைக் கட்டும்.

8. சபையை ஆதரித்து,
அன்பாய் ஆசீர்வதித்து
எல்லாருக்கும் அன்றன்றும்
அருள் உதிக்கப்பண்ணும்.

9. பொல்லாரைத் தயவாக
திருப்பிக்கொள்வீராக;
இருளிலே திரியும்
ஜனத்துக்கொளி தாரும்.

10. திக்கற்றவரைக் காரும்,
நோயாளிகளைப்பாரும்,
துக்கித்தவரைத் தேற்றும்
சாவோரைக் கரையேற்றும்.

அட்டவணை

11. பரத்துக்கு நேராக
நடக்கிறதற்காக,
அடியாரை எந்நாளும்
தெய்வாவியாலே ஆளும்.

12. அடியார் அத்தியந்த
பணிவாய்க் கேட்டுவந்த
வரங்களை அன்பாக
தந்தருளுவீராக.

**611** **கி.கீ.364**

*ஆனந்தபைரவி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**இன்னமும் நாம் யேசு பாதத்தில் சந்திக்கும் வரை**
என்றும் கர்த்தருன்னைக் காப்பாரே.

***அனுபல்லவி***

தன்னுடைய காவலுன்மேல் – தப்பாமல் வைத்துத் தற்காத்துத்
தன்னிரு கரத்தால் உன்னைத் – தாங்கியே காத்துக்கொண்டு – இன்ன

***சரணங்கள்***

1. தன்னிரு சிறகுகளின்கீழ் – உன்னை மறைத்துத்
தாங்கித் தயவோடு காப்பாரே!
இன்னமும் திருமன்னாவை – என்றும் உனக்களித்தே
இன்பமோடே உன்னைத்தாங்கி – எல்லாத் தீங்குக்குந் தற்காத்து.
– இன்ன

2. ஜீவியத்தின் பாரம் உன்னையே – வதைத்திடாமல்
சீருடனே கர்த்தர் காப்பாரே
பாவ சோதனைகள் உன்மேல் – படர்ந்து பிடித்திடாமல்
பாலித்தணைத்தே உன்னையே – பட்சமோடே பாதுகாத்து. – இன்ன

3. ஆண்டவரின் அன்பின் கொடிதான் – உன்மேல் பறந்து
ஆட, மகிழ்ந் தானந்தங் கொள்வாய்!
நீண்டிடும் ஆயுளளித்து நிதமும் சுகத்தைத் தந்து
நீண்ட காலமாக உன்னை – நேசித்துப் பரிபாலித்து. – இன்ன

*–ச.ஜெ.சிங்க்*

**612** Father in heaven who lovest all **பா.246**

A.M.35 *Church Triumphant* L.M.

1. **அன்புருவாம் எம் ஆண்டவா,**
எம் ஜெபம் கேளும் நாயகா;
நாங்கள் உம் ராஜ்ஜியம் ஆண்டாண்டும்
பாங்குடன் கட்ட அருளும்.

2. வாலிபத்தில் உம் நுகமே
வாய்மை வலுவாய் ஏற்றுமே
வாழ்க்கை நெறியாம் சத்தியம்
நாட்ட அருள்வீர் நித்தியம்.

3. அல்லும் பகலும் ஆசையே
அடக்கி ஆண்டு, உமக்கே;
படைக்க எம்மைப் பக்தியாய்
பழுதேயற்ற பலியாய்.

4. சுய திருப்தி நாடாதே,
உம் தீர்ப்பை முற்றும் நாடவே
வேண்டாம் பிறர் பயம் தயை
வீரமாய்ப் பின் செல்வோம் உம்மை.

5. திடனற்றோரைத் தாங்கிட
துக்கிப்பவரை ஆற்றிட
வாக்கால் மனத்தால் யாரையும்
வருத்தா பலம் ஈந்திடும்.

அட்டவணை

6. எளிதாம் வாழ்க்கை ஏங்கிட,
தீங்கற்ற இன்பம் தேடிட,
மன்னிக்க முற்றும் தீமையை
நேசிக்க மனு ஜாதியை.

**613** **கி.கீ.126**

*மோகனம்* *ஆதிதாளம்*

### *பல்லவி*

**ஒரு மருந்தரும் குருமருந்-(து)**
உம்பரத்தில் நான் கண்டேனே.

### *அனுபல்லவி*

அருள் மருந்துடன் ஆனந்த மருந்து,
ஆதியிற்றனாய் முளைத்த மருந்து,
வரும் வினைகளை மாற்றும் மருந்து
வறுமையுள்ளோர்க்கே வாய்த்த மருந்து. - ஒரு

### *சரணங்கள்*

1. சிங்கார வனத்தில் செழித்த மருந்து,
ஜீவதரு மீதில் படர்ந்த மருந்து,
மங்கை ஏவை பவம் மாற்றும் மருந்து
வல்ல சர்ப்ப விஷம் மாய்த்த மருந்து. - ஒரு

2. மோசே முதல் முன்னோர் காணா மருந்து,
மோட்ச மகிமையைக் காட்டும் மருந்து
தேசத்தோர் பிணியைத் தீர்த்த மருந்து
தீர்க்கத் தரிசிகள் செப்பிய மருந்து. - ஒரு

3. தீராத குஷ்டத்தைத் தீர்த்த மருந்து,
செவிடு, குருடூமை தின்ற மருந்து,
மானா திருத்துவ மான மருந்து
மனுவாய் உலகினில் வந்த மருந்து. - ஒரு

அட்டவணை

4. செத்தோர் உயிர்த்தே எழுந்த மருந்து
ஜீவன் தவறா தருளும் மருந்து
பத்தரைச் சுத்திகரித்திடும் மருந்து
பரம வாழ்வினில் சேர்க்கும் மருந்து. - ஒரு

*-யோ. யாக்கோபு*

**614** Thine For Ever God of Love **பா.299**

A.M.280 II *Newington* 7,7,7,7

1. **உந்தன் சொந்தமாக்கினீர்,**
அடியேனை நோக்குவீர்
பாதுகாரும், இயேசுவே
என்றும் தீங்கில்லாமலே.

2. நான் உம் சொந்தம் லோகத்தில்
மோட்ச யாத்திரை செய்கையில்
ஜீவன், சத்தியம், வழியும்,
நீரே ரட்சித்தாண்டிடும்.

3. நான் உம் சொந்தம் ரட்சியும்
மட்டில்லாத பாக்கியமும்
அருள் நாதா, நல்கினீர்;
இன்னமும் காப்பாற்றுவீர்.

4. நான் உம் சொந்தம் நித்தமாய்
தாசனை நீர் சுகமாய்த்
தங்கச் செய்து மேய்ப்பரே
காத்தும் மேய்த்தும் வாருமே.

5. நான் உம் சொந்தம் தேவரீர்
வழி காட்டிப் போஷிப்பீர்;
பாவம் நீங்கக் கழுவும்,
ஆயுள் முற்றும் நடத்தும்.

அட்டவணை

**615** *Stuttgart* **பா.383**
A.M.76 8,7,8,7

1. **தெய்வ கிருபையைத் தேட**
நீ போராடிக்கொண்டிரு;
ஆவி பாரமின்றி ஏற
நன்றாய் ஜாக்கிரதைப் படு.

2. வாசல் மிகவும் இடுக்கம்,
தாழ்மையாகி உட்படு;
ஜீவ வழியோ நெருக்கம்
லோக நேசத்தை விடு.

3. சேவகத்தில் பின் வாங்காமல்
ராஜ்ஜியத்துக்குட்படு;
பேய் எதிர்த்தால், தளராமல்
நின்று ஏகிக்கொண்டிரு.

4. வேண்டுதலினால் போராடி
ஆண்டவரின் தயவு
காணுமட்டுக்கும் மன்றாடி
கூப்பிட்டுக் கொண்டேயிரு.

5. கர்த்தர் உன்னைத் தயவோடே
ஏற்றுக் கொண்ட பிறகு
பாவம் உன்னிலே வேரோடே
செத்ததென்றெண்ணாதிரு.

6. ஜீவனுள்ள நாள் மட்டாக
மோசங்கள் இருக்குமே;
திகிலும் பயமுமாக
உன் ரட்சிப்பைக் காப்பாயே.

அட்டவணை

7. நீ முடியைப் பெற்றிருந்தால்
கெட்டியாய்ப் பிடித்திரு;
பின்னடைந்து போய் விழுந்தால்
மோசம் மா பெரியது.

8. மாய்கையை நோக்காதே விட்டு
ஞான ஆயுதங்களை
ராவும் பகலும் பிடித்து,
நிர்விசாரத்தைப் பகை.

**616** **கி.கீ.189**

*சாவேரி* *சாபுதாளம்*

### *பல்லவி*

**ஆரிடத்தில் ஏகுவோம்? எம் ஆண்டவனே**
ஆரிடத்தில் ஏகுவோம்?

### *அனுபல்லவி*

ஆரிடத்தில் ஏகுவோம்? சோரா நித்திய ஜீவ
நேரார் வசனங்கள் உம்சாரில் இருக்க, இனி – ஆரி

### *சரணங்கள்*

1. பாவிகளாம் எங்களுக்கு – உமையல்லாது
தாபரமில்லை; நீரே
ஜீவன் தனையுடைய தேவ குமாரனாக
மேவு கிறிஸ்தென்றுமையே–ஆவலுடன் நம்பினோம். –ஆரி

2. போனவர் போல நாங்களும் – உமை நெகிழ்ந்து
போவதில்லை, பரமனே
ஞானோபதேச குருவான உம்மை அண்டின
ஈனர் இனிதுற்ற உமது – தானமதைப் பிரிந்து. –ஆரி

3. உற்றார் சிநேகர் யாரையும் – எம் வீடுவாசல்
உள்ள பொருளனைத்தையும்
முற்றாய் வெறுத்தும்மையே பற்றியிருக்க நாங்கள்
தெற்றாய்? இனியும்மை நன்றியற்றோர் போலே நெகிழ்ந்து –ஆரி

அட்டவணை

4. பொன் னுலகத் திருந்தெம்மைப் – புரக்க வந்த
புண்ய நாதன் நீரல்லவோ?
பின்ன பேதகமற்ற மன்னவனே, உமது
நன்னய முகப்பிர – சன்ன மதனை விட்டு. –ஆரி

*–யோ. பால்மர்*

**617** **கி.கீ.190**

*காம்போதி* *சாபுதாளம்*

***பல்லவி***

**நின் பாதம் துணை அல்லால், வேறொரு துணை இல்லை**
நித்ய பரம போதா

***அனுபல்லவி***

என் பாவம் போக்கியே கிருபை புரியும், சுவாமி,
ஏக வஸ்துவான ஏசுக் கிறிஸ்து நாதா! – நின்

1. ஆதி மனிதருக்கன் றோதியபடி மனு அவதாரமாய்ப் பிறந்தீர்
ஜாதி அனைத்தும் உய்ய, நீதிக் கென்று தலை
சாய்த்துக் குருசில் இறந்தீர்;
வேதம் முழுதும் நிறைவேற்றிக் கடைசியிலே
வெற்றி முடியும் சிறந்தீர்
ஏதும் இல்லாத அ னாதி திருமகனே
எங்கும் நிறைந்திலங்கும் ஏசு கிறிஸ்தென் தேவா! – நின்

2. தேவரீ ருக் கேற்காத குற்றம் செய்திருந்தாலும்,
சித்தம் இரங்கி வாரும்
மேவி எனது வினை யாவும் அகல இந்த வேளை
எனையும் காரும்
பாவிக்குதவியாக மனுவேலே, நீர்பட்ட
பாடனைத்தையும் பாரும்
ஆவலாக உனை அடைந்து சரண் புகுந்தேன்
ஆபத்தை நீக்கும் ஐயா, இப்போ மெய்யாய்! – நின்

*–வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

**618** **கி.கீ.215**

*நாதநாமக்கிரியை* *சாபுதாளம்*

***பல்லவி***

**இயேசு நான் நிற்கும் கன்மலையே - மற்ற**
எந்த ஆதாரமும் வெறும் மணல் தரையே.

***சரணங்கள்***

1. இயேசுவின் நாமத்தின் மேலே - என்றன்
எல்லா நம்பிக்கையும் வைத்தேன் அன்பாலே;
நேசனையுங்கூட நம்பேன் - நான்
இயேசுநாமத்தின் மேல் முழுதுமே சார்வேன். -இயேசு

2. இருள் அவர் அருள் முகம் மறைக்க, நான்
உறுதியாய் அவர் மாறாக் கிருபையில் நிலைப்பேன்
உரமாகக் கடும்புயல் வீச - சற்றும்
உலையாத எனது நங்கூரமாம் அவரே. -இயேசு

3. பெரு வெள்ளம், பிரவாகம் வரினும் - அவர்
பிரிதிக்னை, ஆணை இரத்தம் என் காவல்,
இருதயத்தின் நிலை அசைய - அப்போ
இயேசுவே என் முழு நம்பிக்கையாமே. -இயேசு

4. சோதியாய் அவர் வரும்போது - நான்
சுத்தனாய்த் தரிசித்தே அவரைப் போலாவேன்
நீதியாம் ஆடை தரிப்பேன் - சதா
நித்திய காலமாய் ஆளுகை செய்வேன். -இயேசு

*-வே. சந்தியாகு*

அட்டவணை

**619** Safe in the Arms of Jesus **பா.353**

S.S.57 7,6,7,6 D

1. **இயேசுவின் கைகள் காக்க,**
மார்பினில் சாருவேன்
பேரன்பின் நிழல் சூழ
அமர்ந்து சுகிப்பேன்
பளிங்குக் கடல் மீதும்
மாட்சி நகர் நின்றும்
தூதரின் இன்ப கீதம்
பூரிப்புண்டாக்கிவிடும்.

*இயேசுவின் கைகள் காக்க*
*மார்பினில் சாருவேன்*
*பேரன்பின் நிழல் சூழ*
*அமர்ந்து சுகிப்பேன்.*

2. இயேசுவின் கைகள் காக்க
பாழ் லோகின் கவலை
சோதனை பாவக் கேடும்
தாக்காது உள்ளத்தை
கஷ்டம் துக்கம் கண்ணீரும்
காணாமல் நீங்குமே;
வதைக்கும் துன்பம் நோவும்
விரைவில் தீருமே.

3. இயேசு என் இன்பக் கோட்டை
எனக்காய் மாண்டோரை
சார்ந்தென்றும் நிற்பேன் நீரே
நித்திய கன்மலை.
காத்திருப்பேன் அமர்ந்து
ராக்காலம் நீங்கிட
பேரின்ப கரை சேர
மா ஜோதி தோன்றிட.

அட்டவணை

**620** **கி.கீ.240**

*கமாஸ்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**ஜெபம் மறவாதே நேசனே – எக்காலமும் நீ!**

***சரணங்கள்***

1. ஜெபம் பரமனுடன் பேச்சு,
தேவை யெல்லாம் அத்தா லாச்சு,
தப விசுவாசி மூச்சு,
தகாதெலாம் அத்தால் போச்சு. – ஜெப

2. அம்பரன் கற்பனை நோக்கு
அவரதருமை வாக்கு
நம்பிச் சந்தேகம் போக்கு
நலம் வரத் தீமை நீக்கு. – ஜெப

3. பேயை ஜெபத்தோடு வென்ற
பிரிய நாமமுங் கொண்ட
நேய சுதன்தனைத் தந்த,
நின் மலனுக்கே யுகந்த. – ஜெப

4. விசுவாச நேசத்தோடு
மிகும் பக்தியோடு நாடு,
நிச்சயமாய் பரனைத் தேடு,
நேர்மையுடனே ஓடு. – ஜெப

5. பகலுடன் இரவிலும்
பணிவுடன் குறைவிலும்
திகிலிலும் மகிழ்விலும்
செல்வம் வறுமையிலும். – ஜெப

6. தேவ அரசாட்சிக்காக
ஜெபி, உன்றன் குறைபோக
ஆவலுடன் பிறர்க்காக
அன்புடன் ஜெபிப்பாயாக. – ஜெப

*–ஞா. சாமுவேல்*

அட்டவணை

**621** Dear Lord and Father of Mankind **பா.20**

G.B.402 8,6,8,8,6

1. **கர்த்தாவே மாந்தர் தந்தையே,**
பேதையோர் பொறுப்பீர்,
சுத்தாங்கம் தாரும் நெஞ்சத்தே,
பக்தோராய்ச் சேவை செய்துமே
பணிந்து போற்றிட.

2. நன்னாதர் அன்பின் அழைப்பை
தட்டாமல் நம்பியே,
பன்னிரு சீஷர்தாம் உம்மை
பின்சென்ற வண்ணம் நாங்களும்
பின் செல்லச் செய்வீரே.

3. மா கலிலேயா ஓய்வினில்
அமைதி குன்றின்மேல்,
ஓயாதமைதி ஸ்தலத்தில்
ஆ இயேசு நாதா, ஜெபத்தில்
அன்பாக அமர்ந்தீர்.

4. உம் சாந்த ஆவி ஊற்றிடும்
எம் உள்ள கோஷ்டத்தில்
உளம் வருத்தும் தொல்லையே
ஒழிந்திட உம் சாந்தியே
உள் வாழ்க்கை ஊன்றிட.

5. அலைக்கழிக்கும் ஆசையை
அடக்கும் ஆவியால்,
மா காற்று கம்பம் அக்கினியில்
ஆ ஆற்றும் மென்மைச் சத்தமே
அடியார் கேட்கட்டும்.

அட்டவணை

O worship the Lord in the beauty of Holiness

**622** **பா.23**

G.B.37 12,10,12,10

1. **தொழுவோம்பரனை தூயச் சிறப்புடன்,**
விழுவோம் அவர் முன் மாட்சி போற்றி
பொன்னாம் வணக்கமும் தூபமாம் தாழ்மையும்
மன்னர்முன் வைத்துப் பணிவோம் ஏற்றி.

2. வைப்போம் அவர் பாதம் கவலை பாரத்தை
எப்பாரம் தாங்கும் திரு உள்ளமே
ஈவார் நம் வேண்டலை ஆற்றுவார் துக்கத்தை
ஜீவ பாதை காப்பார் உத்தமமாய்.

3. படைக்கும் காணிக்கை மா அற்பமாயினும்
அடையோமே பயம் ஆராதிக்க;
சத்தியம் அன்பு மேலாம் காணிக்கையாகும்
அத்தனைப் பக்தியாய் பூஜித்திட.

4. பயம் நடுக்கத்துடன் படைத்திடினும்
தயவாய் ஏற்பார் நம் காணிக்கையே
மாலையின் கண்ணீர்தான் காலையில் களிப்பாம்
மலைவுபோம், நிற்கும் நம்பிக்கையே.

5. தொழுவோம் பரனை தூயச் சிறப்புடன்
விழுவோம் அவர்முன் மாட்சி போற்றி
பொன்னாம் வணக்கமும் தூபமாம் தாழ்மையும்
மன்னர்முன் வைத்துப் பணிவோம் ஏற்றி.

அட்டவணை

God That Madest Earth And Heaven

**623** *Nutfield* **பா.37**

A.M.26 8,4,8,4,8,8,8,4

1. **ஞான நாதா, வானம் பூமி,**
நீர் படைத்தீர்,
ராவு பகல் ஓய்வு வேலை
நீர் அமைத்தீர்,
வான தூதர் காக்க எம்மை
ஊனமின்றி நாங்கள் தூங்க
ஞான எண்ணம் தூய கனா
நீர் அருள்வீர்.

2. பாவ பாரம் கோப மூர்க்கம்
நீர் தீர்த்திடும்
சாவின் பயம் ராவின் அச்சம்
நீர் நீக்கிடும்
காவலராய்க் காதலராய்
கூடத் தங்கி தூய்மையாக்கும்
ராவின் தூக்கம் நாளின் ஊக்கம்
நீர் ஆக்கிடும்.

3. நாளில் காரும் ராவில் காரும்
ஆயுள் எல்லாம்;
வாழும் காலம் மா கரத்தால்
அமைதியாம்;
சாகும் நேரம் மோட்சம் சேர்ந்து
ஆகிடவே தூதர் போன்று
ஆண்டிடவே மாட்சியோடு
உம்மோடென்றும்.

அட்டவணை

The Royal Banners Forward go

**624** **பா.93**

A.M.96 L.M.

1. **சிலுவைக் கொடி முன்செல்ல**
செல்வார் நம் வேந்தர் போர் செய்ய
நம் ஜீவன் ஆனோர் மாண்டனர்
தம் சாவால் ஜீவன் தந்தனர்.

2. மெய்ச் சத்தியம் நாட்டப் பாடுற்றார்,
நல் வாலிபத்தில் மரித்தார்
நம் மீட்பர் ரத்தம் பீறிற்றே
நம் நெஞ்சம் தூய்மை ஆயிற்றே.

3. முன்னுரை நிறைவேறிற்றே
மன்னர் தம் கொடி ஏற்றுமே
பலக்கும் அன்பின் வல்லமை
சிலுவை வேந்தர் ஆளுகை.

4. வென்றிடும் அன்பின் மரமே!
வெல் வேந்தர் செங்கோல் சின்னமே!
உன் நிந்தை மாட்சி ஆயிற்றே
மன்னர் உம்மீது ஆண்டாரே.

5. உன்னில் ஓர் நாளில் ஆண்டவர்
மன்னுயிர் சாபம் போக்கினர்
ஒப்பற்ற செல்வம் தம்மையே
ஒப்பித்து மீட்டார் எம்மையே.

அட்டவணை

**625** Built on the Rock the Church doth Stand **பா.171**

8,8,8,8,8,8,8

1. **சபை எக்காலும் நிற்குமே**
கன்மலை கிறிஸ்துமேல் நின்றும்,
ஆலயம் வீழ்ந்து போயுமே
அர்ச்சனை நிலைக்கும் என்றும்
இளைஞர் மூப்பர் ஓய்ந்துமே
துன்புற்ற மாந்தர் ஏங்கியே
அன்புடன் அர்ச்சிப்பார் ஈண்டே.

2. கைவேலையான கோவிலில்
தங்கிடார் உன்னத ராஜர்
சபையாம் ஆலயத்தினில்
தங்குவார் உன்னத நாதர்
வானமும் கொள்ள ஸ்வாமியே
பூமியில் வாழ்ந்தார் நம்மோடே
மானிடர் உள்ளமே வீடாம்.

3. சபையே ஸ்வாமி ஆலயம்
ஜீவனுள் கற்களாம் நாமும்;
மெய் ஞானஸ்நான பாக்கியம்
பெற்றோமே ரட்சிப்பாம் ஈவும்
மா சொற்பப் பேரும் பாதத்தில்
பணிந்து வேண்டல் செய்கையில்
அருளும் தயவும் ஈவார்.

4. தாழ்வான ஸ்தானம் யாதிலும்
ராஜாதி ராஜரைக் காண்போம்
அவர் மா மேலாம் ஈவையும்
ஏற்றியே போற்றியே தாழ்வோம்
அருள்வார் வாக்கு தயவாம்
அதே நம் ஜீவன் ஆவியும்
அவர் மா சத்தியம் கேட்போம்.

அட்டவணை

5. பார் எங்குமே எம்மாந்தரும்
ஆலயம் பக்தியாய் நாட
உம்மில் விஸ்வாசம் ஊன்றியும்
உம் திரு வார்த்தையைக் கேட்க
உம் அடியார் உம் சீஷரே
நீரே எம் நாதர் யாவுமே
அருள்வீர் உந்தனின் சாந்தி.

**626** Thou to whom the sick and dying **பா.224**

A.M.368 II *Requiem* 8,7,8,7,7,7

1. **நாதா, ஜீவன் சுகம் தந்தீர்**
நாடி வந்த மாந்தர்க்கு
இன்றும் ஜீவன் சுகம் ஈவீர்
நோயால் வாடுவோருக்கு
நாதா, உம்மைப் பணிவோம்
பாதம் வீழ்ந்து கெஞ்சுவோம்.

2. ஆவலாய் சிகிச்சை நாடி
சாவோர் பிணியாளிகள்
வைத்தியர் சகாயர் தேடி
வருவாரே ஏழைகள்
நாதா, சுகம் அருள்வீர்
பாதம் வீழ்ந்தோர் ரட்சிப்பீர்.

3. ஐயா! தொண்டர் ஆணும் பெண்ணும்
கையால் உள்ளத்தாலுமே
பாசம் அநுதாபத்தோடும்
பாரம் நீக்கச் செய்யுமே
நாதா ஜெபம் படைப்போம்
பாதம் வீழ்ந்து கெஞ்சுவோம்.

அட்டவணை

4. பாவம் நோயும் சாவும் நீங்கும்
யாவும் செய் உம் தயவால்
பாடுற்றோராம் மாந்தர் யாரும்
பக்த கோடி ஆவதால்
நாதர் ஆசனம் முன்னாய்
பாதம் வீழ்வார் பக்தியாய்.

Home sweet Home

**627** **பா.242**

S.A.339, A.M.219 7,6,7,6 D

1. **நான் தூதனாக வேண்டும்**
விண் தூதரோடேயும்,
பொற் கிரீடம் தலை மேலும்
நல் வீணை கையிலும்
நான் வைத்துப் பேரானந்தம்
அடைந்து வாழுவேன்
என் மீட்பரின் சமுகம்
நான் கண்டு களிப்பேன்.

2. அப்போது சோர்வதில்லை,
கண்ணீரும் சொரியேன்,
நோய், துக்கம், பாவம், தொல்லை
பயமும் அறியேன்,
மாசற்ற சுத்தத்தோடும்
விண் வீட்டில் தங்குவேன்,
துதிக்கும் தூதரோடும்
நான் என்றும் பாடுவேன்.

அட்டவணை

3. பிரகாசமுள்ள தூதர்
நான் சாகும் நேரத்தில்
என்னைச் சுமந்து போவார்
என் இயேசுவண்டையில்
நான் பாவியாயிருந்தும்
என் மீட்பர் மன்னித்தார்
எண்ணில்லாச் சிறியோரும்
என்னோடு வாழுவார்.

4. மேலான தூதரோடும்
நான் தூதன் ஆகுவேன்
பொற் கிரீடம் தலைமேலும்
தரித்து வாழுவேன்
என் மீட்பர்முன் ஆனந்தம்
நான் பெற்று வாழ்வதே
வாக்குக் கெட்டாத இன்பம்
அநந்த பாக்கியமே.

**628** O Son of Man our Hero **பா.269**

A.M.12 11,10,11,10, D

1. **மனு சுதா, எம் வீரா, வல்ல அன்பா!**
உம் தொண்டரே இப்பாரில் தீரராம்,
எம் இன்பம் துன்பம் சகிக்கும் மா நண்பா!
உமக்கு நாங்கள் ஜீவ பலியாம்.

2. மா கஷ்ட பாதை சென்றீர் தேவரீரே,
சத்திய வார்த்தை நீர் அருளினீர்,
அன்போடு காட்டுப் புஷ்பம் வியந்தீரே,
வாலிபர் வீரம் கண்டே மகிழ்ந்தீர்.

3. பாலியர் போதகா, இளைஞர் நேசா!
மாந்தரின் வேந்தர் ஊழியனும் நீர்,
நம்பிக்கை ஆறுதல் இன்பத்தின் நாதா!
எம் நோக்கம் இன்பம் பயம் ஆளுவீர்.

4. ஆறுதல் ஈயும் அன்பரை அண்டுவோம்,
எம்மோடிரும் எம் தோல்வி துன்பிலும்
செல்வர் விருந்தா! இன்பத்தில் வேண்டுவோம்!
இல்லார் நல் தோழா, தாழ்வில் தங்கிடும்.

**629** I lay my sins on Jesus **பா.307**

S.S.870, A.M.769 *St. Georges, Gibbons* 7,6,7,6 D

1. **நல் மீட்பரே, உம்மேலே**
என் பாவம் வைக்கிறேன்,
அன்புள்ள கையினாலே
என் பாரம் நீக்குமேன்,
நல் மீட்பரே, உம்மேலே
என் குற்றம் வைக்க நீர்
உம் தூய ரத்தத்தாலே
விமோசனம் செய்வீர்.

2. நல் மீட்பரே, உம்மேலே
என் துக்கம் வைக்கிறேன்,
இப்போதிம்மானுவேலே,
எப்பாடும் நீக்குமேன்
நல் மீட்பரே, உம்மேலே
என் தீனம் வைக்க நீர்
உம் ஞானம் செல்வத்தாலே
பூரணமாக்குவீர்.

3. நல் மீட்பரே, உம்பேரில்
என் ஆத்மா சார நீர்
சேர்ந்து உம் திவ்விய மார்பில்
சோர்பெல்லாம் நீக்குவீர்.
நேசா இம்மானுவேலே!
இயேசென்னும் நாமமும்
உகந்த தைலம்போலே
சுகந்தம் வீசிடும்.

4. நல் மீட்பரே, பாங்காக
அன்போடு, சாந்தமும்
நீர் தந்தும் சாயலாக
சீராக்கி மாற்றிடும்
நல் மீட்பரே, உம்மோடு
பின் விண்ணில் வாழுவேன்
நீடூழி தூதர் பாட
பாடின்றிப் பூரிப்பேன்.

**630** Jesus Saviour Pilot Me **பா.316**

S.S.556 7,7,7,7,7,7

1. **இயேசு நாதா! காக்கிறீர்,**
இளைப்பாறச் செய்கிறீர்,
மோசம் நேரிடாமலும்
பாதம் இடறாமலும்
என்னைத் தாங்கி நிற்கிறீர்
நேச நாதா! காக்கிறீர்.

2. வாரி போன்ற லோகத்தில்
யாத்திரை செய்து போகையில்,
சூறைக் காற்று மோதினும்
ஆழி கோஷ்டமாயினும்
அமைதல் உண்டாக்குவீர்;
நேச நாதா! காக்கிறீர்!

3. சற்றுத் தூரம் செல்லவே
மோட்ச கரை தோன்றுமே!
துன்பம் நீங்கி வாழுவேன்
இன்பம் பெற்று போற்றுவேன்
அது மட்டும் தாங்குவீர்;
நேச நாதா! காக்கிறீர்.

அட்டவணை

**631** **பா.334**

A.M.427 8,7,8,7,7,7

1. **இயேசுவே, நீர் என்னை விட்டால்**
கெட்டழிந்து போவேனே
பாவச் சோதனைக்குட்பட்டால்
மோசத்திற்குள்ளாவேனே
இயேசுவே, நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

2. நேசரால் கைவிடப்பட்டு
நொந்து போய்த் தவிக்கையில்
ஆபத்தால் நெருக்கப்பட்டு
ஏங்கி அங்கலாய்க்கையில்
இயேசுவே, நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

3. பாதை எங்கும் அந்தகாரம்
சூழ்ந்து நிற்கும் வேளையில்
கொடிதாம் என் பாவப் பாரம்
வேதனை கொடுக்கையில்
இயேசுவே நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

4. தந்தை தாயும் மக்கள் நண்பர்
யாருமின்றி ஏங்கினால்,
துன்புறுத்தும் தீய வம்பர்
கைகள் என் மேல் ஓங்கினால்
இயேசுவே, நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

5. பெலன் என்னிலே ஒடுங்கி
சாகும் நேரம் கிட்டுகில்,
சாத்தான் என்னண்டை நெருங்கி
மோசம் போகப் பார்க்கையில்
இயேசுவே, நீர் என்றைக்கும்
தஞ்சம் தந்து ரட்சியும்.

அட்டவணை

**632** Like a river glorious **பா.357**

S.S.652 6,5,6,5 D

1. **தெய்வ சமாதான**
இன்ப நதியே
மா பிரவாகமான
வெள்ளம் போலவே
நிறைவாகப் பாயும்
ஓய்வில்லாமலும்
ஓட ஆழமாயும்
நித்தம் பெருகும்.

*அருள்நாதர் மீதில்*
*சார்ந்து சுகிப்பேன்*
*நித்தம் இளைப்பாறல்*
*பெற்று வாழுவேன்.*

2. கையின் நிழலாலே
என்னை மறைத்தார்
சத்துரு பயத்தாலே
கலங்க விடார்.
சஞ்சலம் வராமல்
அங்கே காக்கிறார்
ஏங்கித் தியங்காமல்
தங்கச் செய்கிறார்.

3. சூரிய ஜோதியாலே
நிழல் சாயையும்
காணப்பட்டாற்போலே
துன்பம் துக்கமும்
ஒப்பில்லா பேரன்பாம்
சூரிய சாயையே
அதால் வாழ்நாள் எல்லாம்
சோரமாட்டேனே.

அட்டவணை

| **633** | Fill Thou my life, O Lord | **பா.374** |
| --- | --- | --- |
| A.M.705 | *Richmond* | C.M. |

1. **நிரப்பும் என்னைத் துதியால்**
முற்றாகக் கர்த்தரே,
என் தேகம் மனம் ஆன்மாவும்
உம்மையே கூறவே.

2. துதிக்கும் நாவும் உள்ளமும்
போதாதென்ஸ்வாமியே
என் வாழ்க்கை முற்றும் யாவுமாய்
துதியதாகவே.

3. சாமானிய சம்பவங்களும்
என் போக்கும் வரத்தும்
மா அற்ப செய்கை வேலையும்
துதியதாகவும்.

4. நிரப்பும் என்னை முற்றுமாய்
சமூலம் போற்றவும்
உம்மை உம் அன்பை ஏழையேன்
துதித்திடச் செய்யும்.

5. பெறுவீரே நீர் மகிமை
என்னாலும், என்னிலும்
இம்மையிலே துடங்குவேன்
சதா விண் பாடலும்.

6. கவலை கோபம் பயமும்
கீதமாய் மாறிடும்
என் ஜீவ பாதை யாவிலும்
கீதம் தொனித்திடும்.

7. இராப் பகல் விநாடியும்
விளங்கும் தூய்மையாய்
என் வாழ்க்கை முற்றும் சேர்ந்திடும்
உம்மோடு ஐக்கியமாய்.

அட்டவணை

**634** **சு.வி.134**

1. **நான் பிரமித்து நின்று பேரன்பின்**
பிரவாகத்தை நோக்கிப் பார்த்தேன்
என் உள்ளத்தில் மெய்ச் சமாதானம்
சம்பூரணமாய் அடைந்தேன்

***பல்லவி***

*மா தூய உதிரத்தால்*
*என் பாவம் நீங்கக் கண்டேன்*
*இயேசையரின் இரட்சிப்பினால்*
*நான் ஆறுதல் கண்டடைந்தேன்*

2. முன்னாளில் இவ்வாறுதல் காண
ஓயாமல் பிரயாசப்பட்டேன்
வீண் முயற்சி நீங்கின போதோ
என் மீட்பரால் அருள் பெற்றேன் - மா தூய

3. தம் கரத்தை என் மீதில் வைத்து
நீ சொஸ்தமாவாய் என்றனர்
நான் அவரின் வஸ்திரம் தொட
ஆரோக்கியம் அருளினார் - மா தூய

4. எந்நேரமும் புண்ணிய நாதர்
என் பக்கத்தில் விளங்குவார்
தம் முகத்தின் அருள் பிரகாசம்
என் பேரிலே வீசச் செய்வார் - மா தூய

**635** *Rochkingham*

A.M.108 L.M.

1. **என் ஆண்டவா, இப்போரில் நான்**
விழாது உம் பிரசன்னத்தால்
நெருங்கி என்னைத் தாங்கிடும்
நேராய் நடத்தும் உம் அன்பால்.

அட்டவணை

2. என் ஆவல் என்றும் உம்மிலே
என்றாலும் என்னைச் சூழ்ந்திடும்
பிசாசு மாம்சம் லோகத்தால்
மாளாது பெலன் தந்திடும்.

3. ஐயோ, நான் பலவீனனே!
ஓயாது வீழ்ந்து சாகின்றேன்
என் இயேசுவே, என் ஜீவனே!
உம் பாதம் தஞ்சம் அண்டினேன்.

4. நற் போராட்டம் போராடிட,
ஓட்டத்தை உம்மில் முடிக்க
விண் கிரீடம் பெற்றுப் பாடிட
விடாது தாங்கி நடத்தும்.

**636** Lord of glory who hast bought us **பா.390**

A.M.367 *Hyfridol* 8,7,8,7 D

1. **லோகநாதா, மண்ணோர் மீள**
உந்தன் ரத்தம் சிந்தினீர்;
கெட்டுப்போனோர் என்றும் வாழ
உம்மைப் பலியாக்கினீர்.
நன்றி கெட்ட மாந்தர்க்கென்றும்
தயவாகத் தேவரீர்
எண்ணிறந்த நன்மை சற்றும்
கைமாறின்றி ஈகிறீர்.

2. உந்தன் நேசக் காந்தியாலும்
எங்கள் நெஞ்சுருகியே
அன்பில்லாத தன்மை யாவும்
நீங்கச் செய்யும், இயேசுவே
அதால் நாங்கள் ஏற்பதிலும்
ஈதல் நன்றென்றுணர்வோம்
நீரே தந்த ஆஸ்தியிலும்
தான தர்மம் செய்குவோம்.

அட்டவணை

3. சிறியோர்க்குச் செய்த நன்மை
உமக்கிட்ட தர்மமே
என்றந்நாள் நீர் சொல்லும் வாக்கை
கேட்பதின்ப பாக்கியமே
சொத்து செல்வம் ஏதும் அற்ற
எளியோரால் தேவரீர்
தான தர்மம் கேட்பதாக
இதினாலே போதித்தீர்.

4. லோக நாதா மண்ணோர் மீள
உந்தன் ரத்தம் சிந்தினீர்
கெட்டுப் போனோர் என்றும் வாழ
உம்மைப் பலியாக்கினீர்
உம்மை அண்டிப் பற்றிக்கொள்ள
நம்பிக்கை விஸ்வாசமும்
மா சிறந்த மேன்மையுள்ள
திவ்விய அன்பும் ஈந்திடும்.

**637** Hail to Lord's Anointed **பா.84**
A.M.219 *Cruger* 7,6,7,6 D

**1. ஆ! மேசியாவே வாரும்,**
தாவீதின் மா மைந்தா!
பார் ஆள ஏற்ற காலம்
நீர் வந்தீர் மா கர்த்தா,
சிறைகளையே மீட்டு
கொடுங்கோல் முறிப்பீர்,
சிறப்பாய் நீதி செய்து
பாவமும் போக்குவீர்.

அட்டவணை

2. நிஷ்டூரம் யாவும் நீக்கி
சகாயம் நல்குவீர்,
கஷ்டத்தில் ஏழை தேற்றி,
நல் பலம் ஈகுவீர்,
மாய்வோர் திரளை மீட்டு
களிப்பால் நிரப்பி,
உய்விப்பீர் ஒளி ஈந்து
இருளை அகற்றி.

3. நல் மாரிபோல் நீர் வாரும்
இப்பூமி செழிக்க,
நம்பிக்கை மகிழ்வன்பும்
எங்கெங்கும் மலர,
நாதர் முன் தூதனாக
நற் சமாதானமும்
நீதியும் நதியாக
எங்கெங்கும் பாய்ந்திடும்.

4. விழுவார் தாழ்ந்து வேந்தர்
பொன் போளம் படைத்தே;
தொழுவாரே, பார் மாந்தர்
துதித்துப் பாடியே
ஓயா மன்றாட்டு ஸ்தோத்திரம்
சமூகம் ஏறிடும்
ஒழியாதோங்கும் ராஜ்யம்
என்றும் நிலைத்திடும்.

5. மாற்றார் எல்லாரும் மாய
மாண்பாக ஆளுவீர்,
பேற்றின் மேல் பேறுண்டாக
ஆண்டாண்டும் ஆளுவீர்
நிற்கும் ஓயாத காலம்
உமது ஆணையே
அன்பாம் உமது நாமம்
ஆம் சதாகாலமே.

அட்டவணை

**638** *Hubert* **பா.257**

A.M.669 II 5,5,8,8,5,5

**1. இயேசு கிறிஸ்துவே,**
உலகத்திலே
கெட்டுப்போனவருக்கான
ஒளியும் உயிருமான
ரட்சகர் நீரே
இயேசு கிறிஸ்துவே.

2. என்னை மீட்க நீர்
ஜீவனை விட்டீர்
குற்றத்தை எல்லாம் குலைக்க,
என்னைத் தீமைக்கு மறைக்க
எனக்காக நீர்
ஜீவனை விட்டீர்.

3. எங்கள் மீட்புக்கு
லோகத் தோற்றத்து
நாளின் முன்னே வார்த்தை தந்தீர்;
காலமாகையில் பிறந்தீர்;
பாவிகளுக்கு
மீட்புண்டாயிற்று.

4. வெற்றி வேந்தரே,
பாவம் சாபம் பேய்
நரகத்தையும் ஜெயித்தீர்;
நாங்கள் வாழ நீர் மரித்தீர்;
உம்மால் துஷ்டப் பேய்
வெல்லப்பட்டதே.

5. மா இராஜாவே
பணிவுடனே
தேவரீருக்குக் கீழ்ப்பட்டு,
உமது மொழியைக் கற்று,
அதை நெஞ்சிலே
வைப்பேன், இயேசுவே.

அட்டவணை

**639** | Arise, arise my soul | **பா.29**

A.M.394 | *Melcombe* | L.M.

1. **இராப் பகலும் ஆள்வோராம்**
பராபரனைப் போற்றிடு;
முன் செல்வாய் இந்த நாளினில்,
உன் மாட்சி கர்த்தர் தொழுவாய்.

2. இராவின் இன்பம் அவரே
பகலில் இன்பம் சேவையே;
திருவடியில் மகிழ்வும்
திருப்தியும் ராப்பகலும்.

3. நடப்பது யாதெனினும்
படைப்பாய் அவர் பாதத்தில்
அவரைப் பற்றி பக்தியாய்
ஆன்மமே முழு மனதாய்.

4. பூலோகம் எங்கும் காண்பாயோ
மேலான நண்பர் இவர்போல்?
கருத்துடன் நடத்திடும்
பரன் இவரைப் பின் செல்வாய்.

5. ரட்சிப்பார் சேர்ந்து தாங்குவார்
பட்சமாய்ப் போதம் ஊட்டுவார்
சஞ்சலம் சோர்வு நீக்குவார்
தஞ்சம் தந்துன்னைத் தேற்றுவார்.

6. கருவி நீ கரம் அவர்,
சருவம் அவர் திட்டமே;
உன் சுய சித்தம் ஓய்த்திடு
முன்செல் இந்நாள் அவரோடு.

அட்டவணை

**640** Ellacombe **பா.47**

A.M.341 7,6,7,6 D

**1. உலகின் வாஞ்சையான**
என் ஸ்வாமி இயேசுவே
நான் உம்மை ஏற்றதான
வணக்கத்துடனே
சந்திக்கச் செய்வதென்ன?
நான் தேவரீருக்கு
செலுத்த உமக்கென்ன
பிரியமானது?

2. நீர் சேர்கையில் களிக்கும்
சீயோன், கிளைகளை
வழியிலே தெளிக்கும்
நான் உமதுண்மையை
சங்கீதத்தால் துதிப்பேன்
மகிழ்ச்சியுடனே
நான் உம்மைத் தோத்திரிப்பேன்
மா வல்ல கர்த்தரே.

3. நான் நன்மையான ஏதும்
இல்லாத தீயோனாய்
நிர்ப்பந்தம், பயம், நோவும்
நிறைந்தவனுமாய்
இருந்தபோதன்பாக
நீர் என்னை நோக்கினீர்
உம்மை என் மீட்புக்காக
வெளிப்படுத்தினீர்.

அட்டவணை

4. கட்டுண்டு நான் கிடந்தேன்
என் கட்டை அவிழ்த்தீர்
மா சாபத்தைச் சுமந்தேன்,
நீர் அதை நீக்கினீர்
நீர் என்னை மேன்மையாக்கி
என் ஆத்துமத்திலே
இன்ப நிறைவுண்டாக்கி
ரட்சிக்க வந்தீரே.

5. வியாகுலம் அடைந்த
நரரின் கூட்டமே
இக்கட்டினால் நிறைந்த
நிர்ப்பந்த மாந்தரே
இதோ! சகாயர் வந்தார்
கர்த்தர் கெட்டோருக்கு
இரட்சகரைத் தந்தார்
அதால், மகிழ்ந்திரு.

6. நெஞ்சே துன்மார்க்கருக்கும்
பகைஞர் உனக்கு
உண்டாக்கும் துன்பத்துக்கும்
பயப்படாதிரு,
உன் மீட்பர் ராஜாவாக
வருகிறாரல்லோ,
அவருக்கு முன்பாக
பேய்க் கூட்டம் நிற்குமோ?

7. பொல்லாதவர்களுக்கு
அநந்த துக்கமும்,
நல்லோரின் கூட்டத்துக்கு
அநந்த பூரிப்பும்
முடிவிலே உண்டாக
அந்நாள் வருவாரே,
ஆம், எங்கள் மீட்புக்காக,
நீர் வாரும் இயேசுவே.

அட்டவணை

**641** Canon **பா.251**

A.M.3 II L.M.

1. **உன்னதமான ஸ்தலத்தில்**
மா ஆழமுள்ள இடத்தில்
கர்த்தாவே நீர் இருக்கிறீர்,
எல்லாவற்றையும் பார்க்கிறீர்.

2. என் அந்தரங்க எண்ணமும்
உமக்கு நன்றாய்த் தெரியும்
என் சுக துக்கம் முன்னமே
நீர் அறிவீர் என் கர்த்தரே.

3. வானத்துக்கேறிப் போயினும்
பாதாளத்தில் இறங்கினும்
அங்கெல்லாம் நீர் இருக்கிறீர்
தப்பாமல் கண்டுபிடிப்பீர்.

4. காரிருளில் ஒளிக்கினும்
கடலைத் தாண்டிப் போயினும்
எங்கே போனாலும் தேவரீர்
அங்கென்னைச் சூழ்ந்திருக்கிறீர்.

5. ஆராய்ந்து என்னைச் சோதியும்
சீர்கேட்டை நீக்கி இரட்சியும்
நல்வழி தவறாமலே
நடத்தும் எந்தன் கர்த்தரே.

**642** **பா.141**

A.M.52 8,7,8,7,8,8,7

1. **தெய்வன்புக்காக உன்னத**
கர்த்தாவுக்குப் புகழ்ச்சி;
என் பாவக்கேட்டை நீக்கின
அருள் மகா திரட்சி;
மெய்ச் சமாதானம், என்றைக்கும்
மானிடர்மேல் பிரியமும்
உண்டாம் இரக்கம் பெற்றோம்.

அட்டவணை

2. மாறாமல் ஆண்டிருக்கிற
மகத்துவப் பிதாவே,
துதியோடும்மைக் கும்பிடப்
பணிகிறோம் கர்த்தாவே,
அளவில்லாப் பலமாய் நீர்
நினைத்த யாவும் செய்கிறீர்
மா பாக்கியர் அடியார்.

3. ஆ, இயேசு தெய்வ மைந்தனே;
கடன்களைச் செலுத்தி
கெட்டோரை மீட்ட மீட்பரே,
மாசற்ற ஆட்டுக்குட்டி
மா கர்த்தரே, தயாபரா,
அடியார் சத்தம் கேட்டெல்லா
சபைக்கும் நீர் இரங்கும்.

4. மெய்யாகத் தேற்றும் உன்னத
தெய்வாவீ நீர் அன்பாக
இறங்கி, கிறிஸ்து தம்முட
சாவால் பிரியமாக
மீட்டோரைச் சாத்தான் கண்ணியில்
விழாதே காத்து, துன்பத்தில்
ஜெயிக்கப்பண்ணும், ஆமேன்.

**643** **2ஆம் பாகம்** **பா.266**

A.M.(Revised) 423

1. **நீர் ஜீவ அப்பம்; பஞ்சத்தில்**
உம்மால் என் பசி ஆறும்
நான் போம் வனாந்தரங்களில்
என் உள்ளம் உம்மை நாடும்
பிதாவின் ஈவாம் மன்னாவே,
நீர் என்னைப் பாவ இச்சைக்கே
விலக்கிக் காத்துக்கொள்ளும்.

அட்டவணை

2. நீர் ஜீவ ஊற்று; உம்மாலே
என் ஆத்ம தாகம் தீரும்;
நீர் தரும் ஈவு நித்தமே
சுரக்கும் தண்ணீராகும்;
நீரூற்றாய் என்னில் ஊறுமேன்
நிறைவாய் நித்தம் தாருமேன்
ஆரோக்கியமும் சீரும்.

3. நீர் என்னை ஜோடிக்கும் உடை,
நீர் என் அலங்கரிப்பு;
நாம் உம்முடைய நீதியை
அணிவதென் விருப்பு;
பூலோகத்தின் சிங்காரமாம்
விநோத சம்பிரமம் எல்லாம்
என் ஆவிக்கு வெறுப்பு.

4. நீர் நான் சுகித்துத் தங்கிடும்
அரண்மனையும் வீடும்;
புசல் அடித்தும் விருதா
பேய் வீணாய் என்னைச் சீறும்;
நான் உம்மில் நிற்பேன், ஆகையால்
கெடேன்; பொல்லார் எழும்பினால்
நீர் என் வழக்கைத் தீரும்.

5. என் மேய்ப்பராய் இருக்கிறீர்
என் மேய்ச்சலும் நீர்தாமே
காணாமல் போன என்னை நீர்
அன்பாக மீட்போராமே;
இவ்வேழை ஆட்டை என்றைக்கும்
நீர் விலக விடாதேயும்
நான் உம்முடையோனாமே.

அட்டவணை

6. நீரே நான் என்றும் வாஞ்சிக்கும்
மா நேசமுள்ள நாதர்;
நீரே என் ஆசாரியரும்
பலியுமான கர்த்தர்;
நீர் என்னை ஆளும் ராஜாவும்,
உம்மோடே எந்தப் போரிலும்
ஜெயிப்பேன், மா சமர்த்தர்.

**644** My God My Father make me strong **பா.377**

A.M.365 *Almsgiving* 8,8,8,4

1. **பிதாவே பலம் ஈந்திடும்;**
என் வாழ்க்கை கஷ்டமாயினும்
மெய் ஊற்றத்தோடு பாடவும்;
உம் சித்தமே.

2. என் கோழை நெஞ்சைத் தேற்றிடும்;
எச்சக்தி சார்பு சாயினும்,
உம் அன்பு வன்மை மேற்கொள்ளும்;
உம் சித்தமே.

3. பணிவாய் உம்மைப் பற்றுவேன்,
சுதாவாய் சேவை ஆற்றுவேன்
எவ்வேலை தன்னில் சாற்றுவேன்;
உம் சித்தமே.

4. நீர் ஏவி பாதுகாத்திட
உம் ஞானம் பாதை காட்டிட
கூடும் எச்செய்கை ஆற்றிட
உம் சித்தமே.

5. நான் அல்ல, நீர்தாம் என்றுமே;
உம் சர்வ சக்தி என்னிலே;
உம் ஆணை ஆஞ்ஞை எனக்கே;
உம் சித்தமே.

அட்டவணை

6. என் ஆயுள் மகிழ் பொங்கிடும்
சா, நோவு பாவம் ஓய்ந்திடும்,
விஸ்வாசம் அன்பு வென்றிடும்,
உம் சித்தமே.

**645** **பா.365**

S.S.539 8,8,8,4

1. **லௌகீக இன்பம் மேன்மையும்**
இப்பரதேசிக்கு வேண்டாம்;
பரம நன்மை செல்வமும்
இங்கில்லை, யாவும் மாயையாம்;
பொருளல்லாததை நாடேன்;
நான் இயேசுவை சிநேகிப்பேன்.

2. லௌகீக வாழ்வு ஒழியும்;
சரீரம் அழகற்றுப் போம்;
நரர் கைவேலை அழியும்;
இவ்வுலகமும் வெந்துபோம்;
பொருளல்லாததை நாடேன்;
நான் இயேசுவை சிநேகிப்பேன்.

3. ஆனாலும் இயேசு ராஜியம்
அழிந்து போகமாட்டாதே;
மா நீதியாம் சிங்காசனம்
விழாமல் என்றும் நிற்குமே;
பொருளல்லாததை நாடேன்;
நான் இயேசுவை சிநேகிப்பேன்.

4. நான் இங்கே தங்கும் நாள் எல்லாம்
என் துன்பம் நீங்க மாட்டாதே;
பரத்தில் சேர்ந்தபின் உண்டாம்
மெய்வாழ்வு மேன்மை பூரிப்பே;
பொருளல்லாததை நாடேன்;
நான் இயேசுவை சிநேகிப்பேன்.

அட்டவணை

**646** *petra* **பா.114**

A.M.184 7,7,7,7,7,7

1. **வாதையுற்ற மீட்பரே,**
என் அடைக்கலம் நீரே;
நான் என் பாவப் பாரத்தால்
தொய்ந்துபோய்க் கலங்கினால்,
என் அடைக்கலம் நீரே,
வாதையுற்ற மீட்பரே.

2. நியாயத் தீர்ப்பில் என் எல்லா
புண்ணியமும் விருதா;
தளரா முயற்சியால்,
மனஸ்தாபக் கண்ணீரால்
குற்றம் நீங்காதென்றைக்கும்
கிருபைதான் ரட்சிக்கும்.

3. உள்ளவண்ணம் அண்டினேன்,
அன்பாய் என்னை நோக்குமேன்
திக்கற்றோன் நான், ரட்சியும்;
அசுத்தன் நான், கழுவும்
மூடும் என் நிர்வாணத்தை;
எழைக்கீயும் செல்வத்தை.

4. வாதையுற்ற மீட்பரே,
என் அடைக்கலம் நீரே;
என் இக்கட்டனைத்திலும்
சாகும் தருணத்திலும்
என் அடைக்கலம் நீரே;
வாதையுற்ற மீட்பரே.

அட்டவணை

**647** **கி.கீ.197**

சங்கராபரணம் ஆதிதாளம்

### *பல்லவி*

**அடைக்கலம் அடைக்கலமே, இயேசுநாதா, உன்**
அடைக்கலம் அடைக்கலமே!

### *அனுபல்லவி*

திடனற்றுப் பெலனற்றுன் அடியுற்றமும் ஏழைக்கு – அடை

### *சரணங்கள்*

1. ஆசையோடு பாவமதில் அலைந்து திரிந்தேனே,
அன்புள்ள பிதா உனை விட்டகன்று பிரிந்தேனே;
மோசமதை யேயலால் மற்றொன்றையும் காணாமலே
தோஷமொடு சேர்ந்தனன் துரத்திடாது சேர்த்தருள்! – அடை

2. கட்டுப்படாக் காயமதின் கெட்ட ரணம் போலவே
மட்டுப்படாப் பாவமதில் மயங்கி உறங்கினேன்;
கெட்டவனே போவெனக் கிளத்தினும் நியாயமே,
கிட்டிவந்தலறும் ஏழைக் கெஞ்சுதல் கேளய்யனே! – அடை

3. சிந்திய உதிரமதும் ஐந்து திருக்காயமும்
நொந்துரு கெனதுமனச் சஞ்சல மகற்றிடும்;
பந்தமிகும்பாவி என்றன் கெஞ்சிடுங் கரத்தினை
எந்த விதமுந் தள்ளாமல் இரங்கிடு மையனே! – அடை

4. என்னிடத்தில் வருவோரை எந்தவிதமும் தள்ளேன்
என்று சொன்ன வாக்கதினில் எனக்கும் பங்கில்லையோ?
அன்றுனது பக்கமதில் ஆயிருந்த கள்ளனுக்கு
இன்றுபர தீசிலிருப்பா யென்றுரைத்தா யல்லவோ? – அடை

*–தேவசகாயம் உபாத்தியாயர்*

அட்டவணை

**648** **கி.கீ.3**

சங்கராபரணம் ஆதிதாளம்

## *திருப்புகழ்*

**1. ஆகமங்கள் புகழ் வேதா, நமோ நமோ!**
வாகு தங்கு குருநாதா, நமோ நமோ!
ஆயர் வந்தனைசெய் பாதா, நமோ நமோ,- அரூபா,
மாகமண்டல விலாசா, நமோ நமோ!
மேகபந்தியி னுலாசா, நமோ நமோ!
வான சங்கம விஸ்வாசா, நமோ நமோ, - மனுவேலா,
நாகவிம்பம் உயர் கோலா, நமோ நமோ!
காகமும் பணிசெய் சீலா, நமோ நமோ!
நாடும் அன்பர் அனுகூலா, நமோ நமோ, - நரதேவா,
ஏக மந்த்ரமுறு பூமா, நமோ நமோ!
யூக தந்த்ரவதி சீமா, நமோ நமோ!
ஏசு வென்ற திருநாமா, நமோ நமோ,- இறையோனே!

2. அறிவி னுருவாகிய மூலா, நமோ நமோ!
மறையவர்கள் தேடிய நூலா, நமோ நமோ!
அதிசய பராபர சீலா, நமோ நமோ, - அருளாளா,
பொறிவினை யுறாத சரீரா, நமோ நமோ!
குறையணுவிலாத குமாரா, நமோ நமோ!
புவன முழுதாள் அதிகாரா, நமோ நமோ, - புதுவேதா,
நிறைவழியின் மேவிய கோனே, நமோ நமோ!
முறைகள் தவறாத விணோனே, நமோ நமோ!
நிதிபெருகு மாரச தேனே! நமோ நமோ, - நெறிநீதா,
இறை தவிது பாடிய கீதா, நமோ நமோ!
பறைகள்பல கூடிய போதா, நமோ நமோ!
எருசலை யினீடிய நாதா, நமோ நமோ,-இறையோனே

*-வேதநாயகம் சாசுதிரியார்*

**649** **கி.கீ.210**

சஹானா ஆதிதாளம்

***பல்லவி***

**ஆதாரம் நீ தான் ஐயா, என்துரையே**
ஆதாரம் நீ தான் ஐயா.

***அனுபல்லவி***

சூதாம் உலகில் நான் தீதால் மயங்கையில் – ஆதாரம்

***சரணங்கள்***

1. மாதா பிதாவெனைத் தீதாய் மதிக்கையில்
மற்றோர்க்குப் பற்றேதையா, எளியன்மேல்
மற்றோர்க்குப் பற்றேதையா, எளியனுக்கு –ஆதாரம்

2. நாம், நாம் துணையென நயந்துரை சொன்னவர்
நட்டாற்றில் விட்டாரையா; தனியனை
நட்டாற்றில் விட்டாரையா; தனியனுக்கு –ஆதாரம்

3. கற்றோர் பெருமையே, மற்றோர் அருமையே
வற்றாக்ய கிருபை நதியே, என்பதியே
வற்றாக் கிருபை நதியே, என்பதியே –ஆதாரம்

4. சோதனை யடர்ந்து வேதனை தொடர்ந்து
துக்கம் மிகுவேளையில் என் சுகிர்தமே
துக்கம் மிகுவேளையில், உன் தாசனுக்கு –ஆதாரம்

*–ஆ. தேவதாசன்*

**650** **கி.கீ.178**

முகாரி ஆதிதாளம்

***பல்லவி***

**என் ஐயா, தினம் உனை நம்பி நான்**
இருப்ப தறியாயோ? – மன
தேங்கும் என் கலி நீங்கும் படி நல்
பாங்கு புரியாயோ?

அட்டவணை

## *அனுபல்லவி*

அன்னை யிடத்தில் என்னை உருவதாய்
வகுத்தவா, கிறிஸ்தையா எனதையா
அருள் செய்யாதது மெய்யா இது? – என்

## *சரணங்கள்*

1. குற்றத்தால் உனைக்கிட்ட என் மனம்
கூசி நாணுதே; – என்தன்
கோதும் நான் செய்த தீதும் மனதில்
கூடத் தோணுதே
சுற்றும் உலகச் சத்துருப் பகை
சூழக் காணுதே
சுருதி மொழி உறுதி தனைக்
கருதி வந்தேன்; பொறுதி அருள்! – என்

2. உன்னை அல்லாமல் பின்னை வேறெனக்
குதவி இல்லையே; – என
துற்ற ஜனமும் சுற்றத் தோர்களும்
உரிமை இல்லையே;
பின் எவரிடம் போவேன், சொல்? அது
பெரிய தொல்லையே
பேசும் விசு வாசம் வளர்
நேசக் கதிர் வீச அருள்! – என்

3. அத்தனே, உன்றன் ரத்தத்தால் எனை
ஆற்றித் தேற்றையா – தேவ
ஆவியாகிய ஈவெனும் உன
தருளை ஊற்றையா,
நித்தனே, என்றன் குற்றத்தை எல்லாம்
நீக்கி ஆற்றையா,
நேசா, பவ நாசா, மறை
வாசா, ஏசு, ராசா அருள்! – என்

*–மரியான் உபதேசியார்*

அட்டவணை

**651** **கி.கீ.338**

*காம்போதி* *சாபுதாளம்*

### *பல்லவி*

**கருணாகர தேவா, இரங்கி இந்தக்**
கங்குலில் எனைக் கா வா.

### *அனுபல்லவி*

இருளேதும் அணுகாமல் இரவிலும் பகல்போல
என்றும் ப்ரகாசமாக இலங்கும் மா திரியேக. – கரு

### *சரணங்கள்*

1. சென்ற பகலில் காத்துச் சேர் விபத்துகள் நீத்துச்
சேர்த்தையே வழி பார்த்துத் திகில் தீர்த்து;
நன்றி யதற்குத் துதி நவில்வன், நீ என் கதி
நாடும் என் அதிபதி; நமஸ்காரம் உனக்கதி. –கரு

2. நித்திரையில் உட்புகுந்து, சத்துருப் பசாசு வந்து
நெருங்காமல் நீ எழுந்து நிலை புரிந்து
சுத்தநெஞ்சோ டமைந்து தூங்க நல் துயில் தந்து
தூதர் காவல் நிறைந்து, துணையாய் என்னோடிருந்து. –கரு

3. தாதா, அண்டினேன் உன்னைத் தஞ்சம் நீயே, என்னைத்
தாங்குவதார் பின்னை, சார்வன் நின்னை
வேதா, நான் உன் தொண்டு வினைஞன் என் நிலை கண்டு
மீண்டுன் செட்டைகள் விண்டு விலகா தணைத்துக்
கொண்டு. – கரு

4. தீய எண்ணங்கள் பாற, திகில் கனவுகள் மாறத்
திவ்ய சிந்தை உள் ஊற, ஸ்திரம் ஏறக்
காயம் உயிரும் கூடக் கருத்துன்னோ டுறவாடக்
காலை நல்லறம் நாடக், கரிசித்துன் துதி பாட. – கரு

*–யோ. பால்மர்*

அட்டவணை

**652** **கி.கீ.372**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**கெம்பீரமாகவே, சங்கீதம் பாடுவோம்.**

***அனுபல்லவி***

நம்பாரமே எந்நாளும் நீக்குவோனை நாடுவோம் – கெம்

***சரணங்கள்***

1. மங்காத தீபமாய் விளங்கும் மா வசனமே,
சிங்காரமா யித்தீபம் நாடிச் சேர்ந்ததினமே – கெம்

2. படாமுடிக் கொடூரனைப் பதைக்கவே கொல,
குடாரமாக வெய்ததேவ வேதமே வெல – கெம்

3. எக்காளமே தொனித்திடப் பொல்லாப் புரிவிழ,
முக்காலமும் திரியேகரை முதன்மையாய்த் தொழ – கெம்

4. ஜீவாதிபற் கெலா மகத்வமே சிறந்திடத்
தேவாதி தேவன் யேசுவென் றெலாமறிந்திட – கெம்

5. அகோரப்பேய் நடுங்கியோட யாமகிழ்ந்திட
மகாமகத்வன் யேசுவென் றெலாம் புகழ்ந்திட. – கெம்

*–ஞா. சாமுவேல்*

**653** **கி.கீ.147**

*கமாஸ்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**சீர் அடை தருணம் ஈதறி வாயே;**
சிதைவு படும் முனமே
சீர் அடை; தருணம் இதறி, மனமே.

***அனுபல்லவி***

பார் உடலொடு வலுபோர் இடும் அலகையும் – (ரீ)
ஆரவாரம் எடுத் தழிக்கும் உனை க்ஷணத்தில்; –சீர்

அட்டவணை

*சரணங்கள்*

1. நொடியதில் அழிவடை புடவியில் நணுகுதல் நலமோ, –பேதாய்?
நோய் துயர் உறும்இது மேலுல கிற்கிணை பங்கோ?
கடினப்படுத்து வலு மறம் அது நிலை அற – (ரீ)
காதலோடு நல் வேத நெறி தொடர்ந்து. – சீர்

2. பொருள் அதில் உறு விருப்பதி சிதைவுளதென அறியாய்?–ஓகோ
போர் இடு பல பல தீதுகளுக் கது வேரே;
மருளைத் தவிர்க்கும் இறை அருளைக் கருதி நனி – (ரீ)
மாசிலாத தெய்வீகன் அடி பணிந்து. – சீர்

*–யோ. யாக்கோபு*

**654** **கி.கீ.261**

*கமாஸ்* *ஆதிதாளம்*

*பல்லவி*

**செய்ய வேண்டியதைச் சீக்கிரம்**
செய், செய், செய், செய், செய்.

*சரணங்கள்*

1. வையகமும் அதன் வாழ்வுகளும் மிக
மகிமை பெருமை பொருளானதுவும்
வெய்யவன் கண்ட பனிபோலாம்; இது
மெய், மெய், மெய், மெய், மெய். – செய்

2. ஆவியும் கூடுவிட் டேகாமுன்
ஆபத்து நாட்கள் வந்துணுகாமுன்,
தேவ சுதன் ஜெக ரட்சகரண்டை
சேர், சேர், சேர், சேர், சேர். – செய்

3. அவ்வியம் பெருமை அகந்தையும் அசுத்தமும்
அகற்றி நீ அனுதினமும்
திவ்விய வேதத் தீவர்த்தி ஒளியினில்
செல், செல், செல், செல், செல். – செய்

அட்டவணை

4. துர்ச்சன ரோடுற வாகாமல், ஐயன்
துய்ய விதி பத்து மீறாமல்
உச்சிதப் பதமருள் யேசுவைப் பணிந்து
உய், உய், உய், உய், உய். - செய்

*-ஈ.சா. பாக்கியநாதன்*

**655** **கி.கீ.156**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தயைகூர் ஐயா; என் ஸ்வாமி, பாவி நான்,**
தயைகூர் ஐயா; நின்தாசன், ஏசையா;
தயைகூர் ஐயா.

***சரணங்கள்***

1. ஜெய மனுவேலன், நய அனுகூலன்
சீரா, தீரா, அதிகாரா, திருக்குமார,
சேயர்கள் பணிவிடை மேவிய நேச வி
லாச க்ருபாசன யேசு நரேந்திரா! - தயை

2. வானத்திலிருந்து வந்து, ஞானத் துரு உவந்து
வளமை கொண்டு, கிருபை விண்டு, குடில் கண்டு
மாடடை வீடதி னூடு புல் மேடையில்
நீடின போதினி மோடியதாமோ? - தயை

3. தந்தை பிதாவின் மைந்தன் மைந்தர் வடிவமாகி
தராதலமேவி வா பாவி எனக் கூவி,
சாங்கமதாய் அருள் ஓங்கி, மகா பெரு
ஈங்கிசையாய் உயிர் நீங்கினதாலே நீ. - தயை

4. தேவ ரட்சிப்பனைத்தும் பாவிகட்காய் விளைத்தும்
சிலுவையில் மாண்டும், துயர்பூண்டும், சிறை மீண்டும்
ஜீவனோடதிபதி பராபரனார் வல
பாரிசமே அரசாளும் இந்நேரம் நீ - தயை

*-வேதநாயகம் சாசுதிரியார்*

அட்டவணை

**656** **கி.கீ.182**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**தேவா, திருக்கடைக்கண் பார், ஐயா!**
வினைதீர் ஐயா, வினைதீர், ஐயா!

***அனுபல்லவி***

கோவாய் உலகில் வந்த யோவா, சச்சிதானந்தா! –தேவா

1. மேவிய தயை நிரம்பி, ஆவலுடனே விரும்பி,
பாவி எனையே திரும்பிப் பார் ஐயா, ஸ்வாமி! – தேவா

2. பொல்லா உலகம் பகை, எல்லாச் செல்வமும் புகை;
வல்லா, உனின் கிருபை கூர் ஐயா, ஸ்வாமி – தேவா

3. அந்தி சந்தியும் விடாமல், தந்திரப் பசாசடாமல்,
எந்த விதமும் கெடாமல் ஆளுமே, ஸ்வாமி! – தேவா

4. சர்ப்பனையதாய் உலகம் இப்படித் துரோகம் செய்தால்,
எப்படி அடிமை கரை யேறுவேன், ஸ்வாமி! – தேவா

5. எத்தனை துயர் அடைந்தேன்! மெத்தவும் மனதுடைந்தேன்;
சித்தம் இரங்காய், என் மணவாளனே, ஸ்வாமி! –தேவா

6. இந்தத் தினத்தில் எனக்குத் தந்த சுகத்துக்குனக்கு,
வந்தனம்! அனந்தனந்தம் ஸ்தோத்திரமே, ஸ்வாமி! –தேவா

*–வேதநாயகம் சாஸ்திரியார்*

**657** **கி.கீ.362**

*செஞ்சுருட்டி* *ஆதிதாளம்*

***பல்லவி***

**நித்தம் அருள்செய் தயாளனே! – எங்கள்**
நேசா யேசு மணாளனே! – ஸ்வாமி – நித்தம்.

அட்டவணை

### அனுபல்லவி

உத்தம சற்குண தேவ குமாரா!
உம்பர்கள் சந்ததம் போற்றும் சிங்காரா!
சத்திய வேதவி னோதலங்காரா!
சதிசெய்யும் பேய் தலை சிதைத்த சிங்காரா! –நித்தம்

### சரணங்கள்

1. பட்சப் பரம குமாரனே, எங்கள் பாவந்தீரும்
மாவீரனே ஸ்வாமி!
அட்சய சவுந்தர ஆத்துமநாதா, அடியவர் துதிசெய்யும்
ஆரணபோதா,
ரட்சண்யச் சுப சுவி சேடப்பிரஸ்தாபா, ராசகெம்பீர,
சங்கீத பொற்பாதா. – நித்தம்

2. சென்றாண்டெமை முகம் பார்த்தவா, ஒரு சேதம்
விக்கின மறக் காத்தவா, – ஸ்வாமி
இன்றோர் புதுவரு டாரம்பங் கண்டோம், ஏக
சந்தோஷ மாய்ச் சந்தித்துக் கொண்டோம்
குன்றா உமதுநல் லாவியை ஈந்து கூடவே இருந்தடியார்
ஜெபங்கேட்டு. – நித்தம்

*–ஆ.ஜ. பிச்சைமுத்து*

**658** **கி.கீ.232**

*புன்னாகவராளி* *ஆதிதாளம்*

### பல்லவி

**நெஞ்சே நீ கலங்காதே; சீயோன் மலையின்**
இரட்சகனை மறவாதே; நான் என் செய்வேனென்று. –நெஞ்சே

### அனுபல்லவி

வஞ்சர் பகை செய்தாலும், வாரா வினை பெய்தாலும் – நெஞ்சே

அட்டவணை

***சரணங்கள்***

1. வினைமேல் வினை வந்தாலும். பெண்சாதி பிள்ளை
மித்ரு சத்ருவானாலும்
மனையொடு கொள்ளை போனாலும்
வானம் இடிந்து வீழ்ந்தாலும் –நெஞ்சே

2. பட்டயம், பஞ்சம் வந்தாலும் – அதிகமான
பாடு நோவு மிகுந்தாலும்
மட்டிலா வறுமைப் பட்டாலும்
மனுஷர் எல்லாம் கைவிட்டாலும் –நெஞ்சே

3. சின்னத்தனம் எண்ணினாலும் – நீ நன்மை செய்யத்
தீமை பிறர் பண்ணினாலும்
பின்ன பேதகம் சொன்னாலும்
பிசாசு வந்தணாப்பினாலும் –நெஞ்சே

4. கள்ளன் என்று பிடித்தாலும் – விலங்கு போட்டுக்
காவலில் வைத் தடித்தாலும்
வெள்ளம் புரண்டு தலை மீதில்
அலை மோதினாலும் –நெஞ்சே

*–வேதநாயகம் சாசுதிரியார்*

**659** **கி.கீ.325**

*சங்கராபரணம்* *திஸ்ர ஏகதாளம்*

***பல்லவி***

**ராசாதி ராசன் யேசு, யேசு மகா ராசன்! – அவர்**
ராஜ்யம் புவியெங்கு மகா மாட்சியாய் விளங்க
அவர் திருநாமமே விளங்க, – அவர் திருநாமமே விளங்க,

அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலுயாவே!
அல்பா, ஒமேகா, அவர்க்கே அல்லேலுயாவே!

***சரணங்கள்***

1. உன்னதத்தின் தூதர்களே ஒன்றாகக் கூடுங்கள்
மன்னன் யேசுநாதருக்கே வான்முடி சூட்டுங்கள்!

அட்டவணை

2. நாலாதேசத் திலுள்ளோரே நடந்து வாருங்கள்!
மேலோனேசு நாதருக்கே மெய்முடி சூட்டுங்கள்!

3. நல்மனதோடு சொல்கிறேன், நாட்டார்களே, நீங்கள்
புன்னகையொடு நிற்பானேன்? பூ முடி சூட்டுங்கள்!

4. இந்த நல் தேசத்தார்களே, ஏகமாய்க் கூடுங்கள்,
சிந்தனையை வைத்துக்கொண்ட செம்முடி சூட்டுங்கள்!

5. சின்ன நாடுகளை விட்டுச் சீக்கிரம் ஏகுங்கள்;
பொன்னகராம் சாலேமுக்குப் போய் முடி சூட்டுங்கள்!

6. குற்றமில்லாப் பாலகரே கூடிப் குலாவுங்கள்,
வெற்றி வேந்த ரேசுவுக்கே வெண்முடி சூட்டுங்கள்!

7. யேசுவென்ற நாமத்தையே எல்லாரும் பாடுங்கள்,
ராசாதிராசன் தலைக்கு நன்முடி சூட்டுங்கள்!

8. சகல கூட்டத்தார்களே, சாஷ்டாங்கம் செய்யுங்கள்,
மகத்வ ராசரிவரே, மாமுடி சூட்டுங்கள்!

*–ஆ.ஐ. பிச்சைமுத்து*

**660** **கி.கீ.75**

*சௌராஷ்டிரம்* *ஆதிதாளம்*

***பல்லவி***

**வருவார் விழித்திருங்கள்; – இயேசு நாதர்**
**வருவார் விழித்திருங்கள்.**

***அனுபல்லவி***

பெரியவர், சிறியவர், பேதையர், மேதையர்
சருவர்க்கும் நடுத்தீர்த்துத் தகு பலன் அளித்திட – வரு

***சரணங்கள்***

1. பேரிகையால் அண்டபித்திகளும் குலுங்க,
பேர் எக்காளத் தொனியால் பேய்க் கணங்கள் கலங்க,
தாரணியோர் மலங்க, தமைப் பற்றினோர்களும்
சீர்நிறை தூதரும் சேர்ந்து சூழ்ந்திலங்க – வரு

அட்டவணை

2. வானம் மடமடென்க, வையம் கிடுகிடென்க,
ஈனப் பேயைச் சேர்ந்த எவரும் நடுநடுங்க,
மானம் இன்றி வாழ்ந்த மா பாதகர் அடங்க,
ஞான கானம் பாட நல்லோர் சபை தொடங்க. – வரு

3. விசுவாசிகள் தமை மெச்சிப் புகழுதற்கும்
மேலா மோட்ச தலத்தோர் சால மகிழுதற்கும்
விசுவாச ஈனரை வியவா திகழுதற்கும்
விண்ணோர் குழாங்கள் சூழ, அண்ணல் கிறிஸ்தரசர் –வரு

*–தேவவரம் முன்ஷி*

**661** **கி.கீ.389**

*சங்கராபரணம்* *ஆதிதாளம்*

1. **வாரும் பெத்லகேம் வாரும் – வாரும்**
வரிசையுடனே வாரும்;
வாரும், எல்லோரும் போய் வாழ்த்துவோம் யேசுவை
வாரும், விரைந்து வாரும்.

2. எட்டி நடந்து வாரும் – அதோ
ஏறிட்டு நீர் பாரும்;
பட்டணம்போல் சிறு பெத்லகேம் தெரியுது
பாரும் மகிழ்ந்து பாரும்.

3. ஆதியிலதமேவை – அந்நாள்
அருந்திய பாவவினை;
ஆ! திரித்துவ தேவன் மனிதத்துவ
மாயினர், இது புதுமை!

4. விண்ணுலகாதிபதி – தீர்க்கர்
விளம்பின சொற்படிக்கு;
மண்ணுலகில் மரிகன்னி வயிற்றினில்
மானிடனா யுதித்தார்.

அட்டவணை

5. சொல்லுதற் கரிதாமே – ஜோதி
சுந்தர சோபனமே;
புல்லணையிற் பசுமுன்னணையிற்பதி
பூபதிதான் பிறந்தார்.

6. மந்தை மாடடையில் – மாது
மரியவள் மடியதனில்;
கந்தைத் துணியதை விந்தைத் திருமகன்
காரணமாய் அணிந்தார்.

7. தூதர் பறந்துவந்து – தேவ
துந்துமி மகிழ்பாட;
மாதவ ஞானிகள் ஆயர்கள் பணிந்து
மங்களமொடு நாட

*–ஐ.த. எலியேசர்*

**662** **கன்.561**

**அழகாய் நிற்கும் யார் இவர்கள்**
திரளாய் நிற்கும் யார் இவர்கள்?
சேனை தலைவராம் இயேசுவின் பொற்றளத்தில்
அழகாய் நிற்கும் யார் இவர்கள்?

***சரணங்கள்***

1. ஒரு தாலந்தோ இரண்டு தாலந்தோ
ஐந்து தாலந்தோ உபயோகித்தோர்
சிறிதானதோ, பெரிதானதோ பெற்ற பணி
செய்து முடித்தோர் –அழகாய்

2. காடு மேடு கடந்து சென்று
கர்த்தர் அன்பைப் பகர்ந்தவர்கள்
உயர்வினிலும் தாழ்வினிலும்
ஊக்கமாக ஜெபித்தவர்கள் –அழகாய்

அட்டவணை

3. தனிமையிலும் வறுமையிலும்
லாசரு போன்று நின்றவர்கள்
யாசித்தாலும், போஷித்தாலும்
விசுவாசத்தைக் காத்தவர்கள் -அழகாய்

4. எல்லா ஜாதியார் எல்லாக் கோத்திரம்
எல்லா மொழியும் பேசும் மக்களாம்
சிலுவையின் கீழ் இயேசு இரத்தத்தால்
சீர் போராட்டம் செய்து முடித்தோர் -அழகாய்

5. வெள்ளை அங்கியைத் தரித்துக் கொண்டு
வெள்ளை குருத்தாம்ஓலை பிடித்து
ஆர்ப்பரிப்பார் சிங்காசனம் முன்
ஆட்டுக்குட்டிக்கே மகிமையென்று -அழகாய்

6. இனி இவர்கள் பசி அடையார்
இனி இவர்கள் தாகமடையார்
வெயிலாகிலும், அனலாகிலும்
வேதனையை அளிப்பதில்லை. -அழகாய்

7. ஆட்டுக்குட்டி தான் இவர் கண்ணீரை
அற அகற்றித் துடைத்திடுவார்
அழைத்துச் செல்வார் இன்ப ஊற்றுக்கே
அள்ளிப் பருக இயேசு தாமே -அழகாய்

8. ஒன்றே ஒன்று என் வாஞ்சையாம்
அழகாய் நிற்போர் வரிசையில் நான்
ஓர் நாளினில் நின்றிடவும்
இயேசு தேவா வழிநடத்தும் -அழகாய்

*-எமில் ஜெபசிங்*

அட்டவணை

**663** **கர்த்தரின் நாள்**

*ஆனந்தபைரவி* *ஆதிதாளம்*

*பல்லவி*

**ஓய்வு நாளதை ஸ்தாபித் தருளிய**
உன்னதா, உமக்கே ஸ்தோத்திரம்!

*அனுபல்லவி*

மாய்விலா மறையை யாம் மனதில் உட்கொண்டு,
வாழ்த்தி, உம்மைப் புகழ்ந்து போற்ற வாய் விண்டு – ஓய்வு

*சரணங்கள்*

1. தேகக் கவலை, தொழில், யாவையும் ஒழிக்கத்,
திவ்ய சிந்தையால் எங்கள் இதயமே செழிக்க,
ஏகன் நின் அருள் பெற்றிங் கிகல் அறத் தழைக்க,
எவரும் திருநாளாய்க் கொண்டாடி எக்களிக்க. – ஓய்வு

2. விண்ணோ ருடன் யாவரும் ஆவியில் கூட,
வேதா, உம்மைப் புகழ்ந்து மங்களம் பாட,
மண் உலகில் போராட்டச் சாலையில் ஓட,
வரம் அளித்திட உம்மைக் கெஞ்சி மன்றாட, – ஓய்வு

3. முத்தி வழி விலக்கும் துர்க் குணம் மாற்றி,
முன் நின் றெம்மை நடத்தியே கரை ஏற்றி,
எத்தேசத்தாரும் உம்மை ஏகமாய்ப் போற்றி
இறைஞ்ச அருளும் உமதாவியை ஊற்றி. – ஓய்வு

**664** **மாட்சிமை**

*பியாகு* *ஆதிதாளம்*

*பல்லவி*

**இவரே பெருமான், மற்றப்**
பேர் அலவே பூமான், – இவரே பெருமான்

*சரணங்கள்*

1. கவலைக் கிடங்கொடுத் தறியார் – வேறு
பவவினை யாதுமே தெரியார் – இப்
புவன மீது நமக்குரியார் – இவரே

அட்டவணை

2. குருடர்களுக் குதவும் விழியாம், – பவக்
கரும இருளை நீக்கும் ஒளியாம், – தெய்வம்
இருக்குந் தலஞ்சல் வாசல் வழியாம் –இவரே

3. பலபிணி தீர்க்கும் பரிகாரி, – சொல்லும்
வலமையில் மிக்க விபகாரி, – எக்
குலத்துக்கும் நல்ல உபகாரி –இவரே

4. அறஞ் செய்வதினில் ஒரு சித்தன், – கொடு
மறம்விடு பவர்க்கருள் முத்தன், – இங்கே
இறந்தோர்க் குயிரீயும் கர்த்தன் –இவரே

5. அலகைதனை ஜெயித்த வீரன், – பவ
உலகை ரட்சித்த எழிற்பேரன், – விண்
ணுலகு வாழ் தேவ குமாரன் –இவரே

6. பொன்னுலகத் தனில் வாழ் யோகன், – அருள்
துன்ன உலகில் நன்மைத் தேகன், நம்பால்
தன்னை யளித்த ஓர் தியாகன். –இவரே

*–த.ஜ.*

**665**

*சுக்ரவாகம்* *ஏகதாளம்*

***பல்லவி***

**கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன் – எங்கள்**
குருவேசுநாதர் பதங் கும்பிடுகிறேன்

***சரணங்கள்***

1. அம்புவி படைத்தவனைக் கும்பிடுகிறேன்; – எனை
ஆண்டவனை, மீண்டவனைக் கும்பிடுகிறேன்;
நம்புமடி யார்க்கருளைக் கும்பிடுகிறேன்; – பவ
நாசனைக் க்ருபாசனைக் கும்பிடுகிறேன்;
தம்பமெனக் கானவனைக் கும்பிடுகிறேன்; – நித்திய
சருவ தயாபரனைக் கும்பிடுகிறேன்;
உம்பர் தொழும் வஸ்துவையே கும்பிடுகிறேன்; – தொனித்
தோசன்னா வோசன்னாவென்று கும்பிடுகிறேன் – கும்பிடு

அட்டவணை

2. ஒரு சருவேசுரனைக் கும்பிடுகிறேன் – ஒன்றும்
ஒப்பதில்லா மெய்ப்பொருளைக் கும்பிடுகிறேன்
திருவுருவானவனைக் கும்பிடுகிறேன்; – தவிது
சிம்மாசனாதிபனைக் கும்பிடுகிறேன்;
குருவென வந்தவனைக் கும்பிடுகிறேன்; – யூதர்
குருகுல தேவதையைக் கும்பிடுகிறேன்;
அருமை ரட்சகனைக் கும்பிடுகிறேன்; – என
தாத்துமாவின் நேசர்தனைக் கும்பிடுகிறேன் – கும்பிடு

*–வே.சா*

**666 திருமணம்**

*சங்கராபரணம் (என்னவென் ஆனந்தம் ராகம்) ஏகதாளம்*

**கண்ணிகள்**

1. **ஆதியில் ஏதேனில் ஆதாமுக் கேவாளை
அருளிச் செய்தீரே,**
அவ்விதமாகவே இவ்விருபேரையும்
இணைத்தருள்வீரே.

2. மங்களமாய் திருமறையைத் தொடங்கி
மங்களமாய் முடித்தீர்.
மங்கள மா மணவாளனாய் மைந்தனை
மாநிலத்தில் விடுத்தீர்.

3. ஆபிரகாம் எலியேசர் தம் மன்றாட்டுக்
கருள் புரிந்தீரே
அங்ஙனமே இந்த மங்களம் செழிக்க
ஆசியருள்வீரே.

4. கானாவூர் கல்யாணம் கண்டு களித்தளம்
கர்த்தரே வந்திடுவீர்;
காசினி மீதிவர் நேசமாய் வாழ்ந்திடக்
கருணை செய்திடுவீர்.

அட்டவணை

5. இன்பத்தும் துன்பத்தும் இம்மணமக்கள் தாம்
இசைந்து வாழ்ந்திடவே
அன்பர் உம் பாதமே ஆதாரம் என்றும்மை
அணுகச் செய்திடுவீர்.

## 667 ஆ நல்ல சோபனம்

1. **ஆ நல்ல சோபனம்**
அன்பாக இயேசுவும்
ஆசீர்வதித்து மகிழும்
கானாக் கலியாணம்

2. நேசர் தாமே பக்கம்
நின்றாசீர்வதிக்கும்
மணவாளன் மணமகள்
மா பாக்கியராவார்

3. அன்றுமைக் காணவும்
ஆறு ஜாடித் தண்ணீர்
அற்புத ரசமாகவும்
ஆண்டவா நீர் செய்தீர்

4. நீரே எங்கள் நேசம்
நித்திய ஜீவன் தாரும்
என்றும் தங்கும் மெய் பாக்கியம்
இன்றே ஈய வாரும்

5. ஏதேன் மணமக்கள்
ஏற்ற ஆசீர்வாதம்
இயேசு இவர் பக்கம் நின்று
ஊற்றும் இவர் மீது

6. என்றும் காத்தருளும்
ஒன்றாய் இணைத்தோனே
என்றும் சிலுவையாசனம்
முன் கெஞ்சி நிற்கிறோம்

## கிறிஸ்தவ வாழ்க்கை

**668** Blessed assurance S.S.873

1. **இயேசுவை நம்பிப் பற்றிக் கொண்டேன்**
மாட்சிமையான மீட்பைப் பெற்றேன்
தேவகுமாரன் ரட்சை செய்தார்
பாவியாம் என்னை ஏற்றுக் கொண்டார்.

இயேசுவைப் பாடிப் போற்றுகிறேன்
நேசரைப் பார்த்துப் பூரிக்கிறேன்
மீட்பரை நம்பி நேசிக்கிறேன்
நீடூழி காலம் ஸ்தோத்தரிப்பேன்.

2. அன்பு பாராட்டிக் காப்பவராம்
எந்தனைத் தாங்கிப் பூரணமாய்
இன்பமும் நித்தம் ஊட்டுகிறார்
இன்னும் நீங்காமல் பாதுகாப்பார்.

3. மெய்ச் சமாதானம் ரம்மியமும்
தூய தேவாவி வல்லமையும்
புண்ணிய நாதர் தந்து விட்டார்
விண்ணிலும் சேர்த்து வாழச் செய்வார்.

**669** I am thine O Lord S.S.607

1. **தேவா உன் அன்பின் சத்தத்தைக் கேட்டு**
மீட்பைப் பெற்றுக் கொண்ட நான்,
ஆவலா யிதோ நம்பிக்கையோடே
கிட்டிச் சேர நான் வாறேன்.

அட்டவணை

எனது ......ள்ளம் உள்ளத்தை இழும்
நீர் மாண்ட குரு சண்டை
எனதுள்ளம் உள்ளம் உள்ளத்தை இழும்
நீர் மாண்ட குரு ............. சண்டை.

2. தேவாசனமுன் னேழை நான் நின்று
பிரார்த்திக்கும் பேரின்பத்தை
இங்கே ருசிக்க ஆவியாலிப்போ
உயிர்ப்பியும் என் உள்ளத்தை.

3. மாண்டுயிர்த்தவா மானிட நாளில்
நீர் ஜெபித்த ஆவியெனில்
பாவிகட்காக ஜெபப் போராட
முற்றா யாளும் உள்ளத்தில்.

4. தேவா உம் ஈவின் ஆழம் நீளமும்
என்று மெட்டாதா மல்லோ
என்றாலும் சுவாமி விஸ்வாசப் போரில்
வெற்றியும் கீர்த்தியாமல்லோ.

5. சுத்த ஆவியால் என்னி தயத்தை
முற்றும் அறக் கழுவி
முற்று முடிய உம்மைச் சேவிக்க
என்னிச்சையை நீர் மாற்றும்.

**670** When peace like a river S.S.601

1. **துன்பங்கள் என்னை நெருங்கி வந்தாலும்**
யேசுவில் நிம்மதி பெற்றேன்.
என்ன நேர்ந்தாலும், அவர் வாக்குப்படி
நன்மைக்கெ, எல்லாமே நன்மைக்கே!

நன்மைக்கே எல்லாமே
நன்மைக்கே எல்லாமே நன்மைக்கே

அட்டவணை

2. சாத்தான் என்னைச் சோதிக்க வந்த போதும்
உம் வார்த்தையால் வென்றிடுவேன்.
யேசு எனக்காய் சிந்திய ரத்தத்தால்
எனக்கு வெற்றியே வெற்றியே

3. என் பாவங்கள் சிவேரென்றி ருந்தாலும்
யேசுவின் திரு ரத்தத்தால்
பஞ்சைப் போல் மிக வெண்மை யாகிடுமே
தோத்திரம், தோத்திரம் யேசுவே.

4. மேகங்கள் சால்வை போல் உருண்டோடிடும்
எக்காளம் தொனித்திடவே
மீட்பர் என்னை அழைக்க வந்திடுவார்
நன்மைக்கே எல்லாமே நன்மைக்கே.

**671** Jesus – My Shepherd

**என் மேய்ப்பராய் இயேசு இருக்கின்றபோது**
என் வாழ்விலே குறைகள் என்பது ஏன்?

1. என்னை அவர் பசும்புல் பூமியிலே
எந்நேரமும் நடத்திடும் போதினிலே
என்றும் இன்பம் ஆஹா என்றும் இன்பம்
ஆஹா என்றென்றும் இன்பமல்லவா – என்

2. தம் பாதையில் என்னை நடத்திடவே
என் கரத்தை பிடித்தே முன் நடப்பார்
அஞ்சிடனே நான் அஞ்சிடனே
நான் ஒன்றுக்கும் அஞ்சிடனே – என்

3. என்னோடவர் நடந்திடும் போதினிலே
எங்கே இருள் சூழ்ந்திடும் பாதையிலே
எங்கும் ஒளி ஆஹா எங்கும் ஒளி
ஆஹா எங்கெங்கும் ஒளியல்லவா – என்

அட்டவணை

4. என்னை அவர் அன்பால் நிரப்பியதால்
எல்லோருக்கும் நண்பராய் ஆகியதால்
என்னுள்ளமே ஆஹா என் தேவனே ஆஹா
எந்நாளும் புகழ்ந்திடுவேன். - என்

5. என் வாழ்க்கையை தூய்மையாய் காத்துக்கொள்ள
என்னை என்றும் போதித்து நடத்துகின்றார்
என் கிரீடத்தை நான் பெற்றுக்கொள்ள
என் ஓட்டத்தை தொடர்ந்திடுவேன் - என்

6. விண்மீதினில் வேகம் தம் வருகைக்காய்
என்னையவர் ஆயத்தமாக்கினார்
என்னானந்தம் ஆஹா என்னானந்தம்
எனக்கென்றும் பேரானந்தம். - என்

**672 என் உயிரான இயேசு**

**என் உயிரான இயேசு என் உயிரோடு கலந்து**
என் உயிரே நான் உம்மைத் துதிப்பேன்-2
என் உயிரான உயிரான உயிரான இயேசு - 2

1. உலகமெல்லாம் மறக்குதையா
உணர்வு எல்லாம் இனிக்குதையா -2
உம் நாமம் துதிக்கையிலே இயேசையா
உம் அன்பை ருசிக்கையிலே -என் உயிரான

2. உம் வசனம் எனக்கு உணவாகும்
உடலுக்கெல்லாம் மருந்தாகும் - 2
இரவும் பகலுமெல்லாம் ஐயா
உம் வசனம் தியானிக்கிறேன் -என் உயிரான

3. உம் திரு நாமம் உலகத்திலே
உயர்ந்த அடைக்கல அரண்தானே - 2
நீதிமான் உமக்குள்ளே ஓடி
சுகமாய் இருப்பார்கள் -என் உயிரான

## 673 பாவங்கள் போக்கவே

**பாவங்கள் போக்கவே**
சாபங்கள் நீக்கவே
பூலோகம் வந்தாரைய்யா
மனிதனை மீட்கவே
பரலோகம் திறக்கவே
சிலுவையை சுமந்தாரைய்யா } 2

கண்ணீரை துடைத்தாரைய்யா
சந்தோஷம் தந்தாரைய்யா –2

எந்தன் இயேசுவே –4

தங்கத்தை கேட்கவில்லை வைரத்தை கேட்கவில்லை
உள்ளத்தை கேட்டாரைய்யா
ஆஸ்தியை கேட்கவில்லை அந்தஸ்தை கேட்கவில்லை
உள்ளத்தை கேட்டாரைய்யா } 2

நான் தேடி போகவில்லை
என்னைத் தேடி வந்தாரைய்யா –2

எந்தன் இயேசுவே – 4

தாய் உன்னை மறந்தாலும் தந்தை உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார்
நண்பர் உன்னை மறந்தாலும் உற்றார் உன்னை மறந்தாலும்
அவர் உன்னை மறக்கமாட்டார் } 2

கரம் பிடித்து நடத்திடுவார்
கன்மலை மேல் நிறுத்திடுவார் – 2

எந்தன் இயேசுவே – 4

## 674 பாவ அறிக்கை

*முசாரி* *ஆதிதாளம்*

### *பல்லவி*

**உன்னையன்றி வேறே கெதி**
ஒருவரில்லையெ ஸ்வாமீ!
தன்னையே பலியாய் ஈந்த
மண்ணுயிர் ரட்சகனே

### *அனுபல்லவி*

அன்னை தந்தை உற்றார் கற்றார் – ஆருமுதவுவரோ?
அதிசய மனுவேலா! ஆசை என் யேசு ஸ்வாமீ! – உன்

### *சரணங்கள்*

1. பண்ணின துரோகமெல்லாம் – எண்ணினா லெத்தனைகோடி
பாதகத்துக் குண்டோ எல்லை, – பரிதவித்தேனே தேடி,
கண்ணினாலுன் திருவடிக்–காண நான் தகுமோதான்?
கடையனுக்கருள்புரி – மடியுமுன் யேசு ஸ்வாமீ! – உன்

2. அஞ்சியஞ்சித் தூர நின்றென – சஞ்சலங்களை நான் சொல்லி,
அலைகடல் துரும்புபோல் – மலைவு கொண்டே னானையோ!
கெஞ்சிக் கெஞ்சிக் கூவுமிந்த–வஞ்சகன் முகம்பாராய்க்
கிட்டி என்னிடம் சேர்ந்து–க்ருபைவை யேசு ஸ்வாமீ! – உன்

3. எத்தனை கற்றாலும் தேவ–பக்தியேது மற்ற பாவி;
எவ்வளவு புத்திகேட்டும்–அவ்வளவுக்கதி தோஷி;
பித்தனைப் போல பிதற்றிக்–கத்தியே புலம்புமேழைப்
பேதையைக் கடைத்தேற்றிப்–பிழைக்கவை யேசு ஸ்வாமீ –உன்

4. கள்ளனாம் கபடனென்னைத்–தள்ளிவிட்டா லாவதென்ன,
கல்லைப்போல் கடினங்கொண்ட–கர்ம சண்டாளன் பாழும்
உள்ளமுங்கரைந்தே உன்னறன்–உயர் சிலுவையினன்பால்
உலையிலிட்ட மெழுகாய்–உருகவை யேசு ஸ்வாமீ! – உன்

*–வே.ஜ.பெ*

**675** Pass me not o gentle saviour S.S.488

1. **இயேசு ஸ்வாமி அருள் நாதா!**
கெஞ்சிக் கேட்கிறேன்
பாவியேனைக் கைவிடாமல்
சேர்த்துக் கொள்ளுமேன்.

இயேசு ஸ்வாமி
கெஞ்சிக் கேட்கிறேன்
பாவியேனைக் கைவிடாமல்
சேர்த்துக் கொள்ளுமேன்.

2. கெஞ்சினோர் அநேகர் பேரில்
தயை காட்டினீர்
எந்த நீசர் அண்டினாலும்
தள்ளவே மாட்டீர்.

3. தீய குணம் கிரியை யாவும்
முற்றும் வெறுத்தேன்
நீரே தஞ்சமென்று நம்பி
வந்து நிற்கிறேன்.

4. தூய இரத்ததாலே என்னைச்
சுத்தமாக்குவீர்
வல்ல ஆவியால் எந்நாளும்
காத்து ஆளுவீர்

**கிறிஸ்துவைப் பின்பற்றுதல்**

**676** A Wonderful Saviour S.S.540

1. **ஆ அற்புத ஏசு எனது கர்த்தர்**
அவரே என் மீட்பரானார்
என் ஆன்மாவை அவர் உயிர்ப்பித்ததால்

நான் அவரில் களிகூருவேன்.

அவர் என்னை உயர் மறைவில் வைத்து
தம் கரத்தால் பாதுகாப்பார்
என் ஆன்மாவை அவர் அருளினால்
தம் கரத்தால் பாதுகாப்பார். (2)

2. ஆ அற்புத இயேசு எனது கர்த்தர்
என் பாரம் எல்லாம் நீக்குவார்
என்னைத் தம் கரத்தால் தாங்குகிறார்
நான் அசைக்கப் படுவதில்லை.

3. எண்ணில்லா ஆசிகள் பொழிந்திட்டார்
நன்மையினால் நிரப்பினார்
அவர் என்னை மீட்டு இரட்சித்ததால்
நான் அவரின் புகழ் பாடுவேன்.

4. மகிமைக்குள்ளாகி பறந்து செல்லுவேன்
என் மீட்பரைக் கண்டடைவேன்
அவர் அன்பின் பூரண இரட்சிப்பினால்
விண் கூட்டத்தில் சேர்ந்திடுவேன்.

**677** Thou my everlasting portion S.S.574

1. **இயேசுவே நீர்தான் என் வாஞ்சை**
உமக்கு யார் தான் இணை
எந்தன் ஜீவிய காலமெல்லாம்
இயேசுவே நடத்துமே
உம் அருகில் உம் அருகில் (2) – எந்தன் ஜீவிய...

2. நாடேன் லோக இன்பம் எல்லாம்
அதின் மேன்மை யாவுமே
உமக்காய் நான் என்றும் வாழ
இயேசுவே நடத்துமே
உம் அருகில் உம் அருகில் (2) – உமக்காய்...

அட்டவணை

3. மரணவேளை வரும்போது
இயேசுவே நீர் தாங்கிடும்
பின்பு மோட்ச வாழ்வைக் காண
இயேசுவே நடத்துமே
உம் அருகில் உம் அருகில் (2) – பின்பு மோட்ச…

**678** Down in the valley – S.S.529

**1. பூவின் நற்கந்தம் வீசும் சோலையாயினும்**
நல்ல தண்ணீர் ஓடும் பள்ளத்தாக்கிலேயும்
யேசுநாதர் பின்சென்றேகி மோட்சம் நாடுவேன்
விண்ணில் சூடும் க்ரீடம் நோக்கி ஓடுவேன்.

*பின் செல்வேனே! மீட்பர் பின்செல்வேனே!*
*எங்கேயும் எப்போதும் பின்னே செல்லுவேன்.*
*பின் செல்வேனே! மீட்பர் பின் செல்வேனே*
*யேசு காட்டும் பாதையெல்லாம் செல்லுவேன்.*

2. கார்மேகம் மேலேழும்பும் பள்ளமென்கிலும்
காற்றகோரமாக மோதும் ஸ்தானத்திலும்
யேசு பாதை காட்டச் சற்றும் அஞ்சவே மாட்டேன்
ரட்சகர் கை தாங்கத் தைரியம் கொள்ளுவேன். –பின்

3. நாள்தோறும் யேசுநாதர் கிட்டிச் சேருவேன்
மேடானாலும் காடானாலும் பின் செல்லுவேன்
மீட்பர் என்னை மோசமின்றிச் சுகமே காப்பார்
விண்ணில் தாசரோடு சேர்ந்து வாழ்விப்பார். –பின்

**679** I need thee every hour– S.S.577

**1. எக்காலும் இயேசுவே! சகாயராயிரும்**
அன்பான சத்தத்தால், என் ஏக்கம் நீங்கிடும்.

எந்நாளும் நீரே வேண்டும், இந்த நாளும் வேண்டும்;
நீர் என்னை நோக்கிப் பாரும், பேரன்பரே!

அட்டவணை

2. எப்போதும் இயேசுவே! இப்பாவியோடிரும்;
தீயோனின் சோதனை, ஓயாமல் விலக்கும்.

3. எக்காலும் இயேசுவே, இக்கட்டு வாழ்விலும்;
அன்பாகத் தங்குவீர், என் நீச நெஞ்சிலும்.

4. எப்போதும் இயேசுவே! இப்பேதைக் கிரங்கும்;
மெய்ஞானம் சத்தியம், செய்நன்றி போதியும்.

5. எக்காலும் இயேசுவே! எக்கேடும் நீக்குமேன்;
காருண்ய நாயகா! நீர் என்னை ஆளுமேன்.

**680**

*பல்லவி*

**அன்பே! அன்பே! அன்பே!**
ஆருயிர் உறவே
ஆனந்தம்! ஆனந்தமே!

*சரணங்கள்*

1. ஒருநாள் உம் தயை கண்டேனையா
அந்நாளென்னை வெறுத்தேனையா
உம்தயை பெரிதையா – என் மேல்
உம் தயை பெரிதையா.

2. பரலோகத்தின் அருமைப் பொருளே,
நரலோகரி லன்பேனையா ?
ஆழம் அறிவேனோ – அன்பின்
ஆழம் அறிவேனோ?

3. அலைந்தேன் பலநாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே – எனையும்
அணைத்தீர் அன்பாலே

4. பூலோகத்தின் பொருளில் மகிமை
அழியும் புல்லின் பூவைப் போல
வாடாதே ஐயா – அன்பு
வாடாதே ஐயா

5. இப்பாரினில் உம் அன்பின் இனிமை
இயம்பற் கியலாதாகில் யான்
இசைக்கவும் எளிதாமோ – பரத்தில்
இசைக்கவும் எளிதாமொ

**விசுவாசம்**

**681** Fear not I am with thee G.B.381

1. **கலங்காதே உன்னோடு நானிருப்பேன்**
கைவிடவே மாட்டேன்
ஜீவனுள்ள நாள்மட்டும்
உன்னோடு நானிருப்பேன்
ஆதரவின்றி நீயும்
அழுது நிற்கும்போது
அந்நேரம் உன்னோடு நானிருப்பேன்
கைவிடவே மாட்டேன்.

விலகவே மாட்டேன்
கைவிடவே மாட்டேன்
ஜீவனுள்ள நாள் மட்டும்
உன்னோடு நானிருப்பேன்.

2. பாவச் சேற்றினில்
பாதம் மூழ்கும்போது
மனது சஞ்சலத்தால்
மருகி நிற்கும்போது
கண்ணீரைத் தண்ணீராக
நீயும் பருகும்போது
அந்நேரம் உன்னோடு நானிருப்பேன்
கைவிடவே மாட்டேன். – விலகவே

3. வாழ்வில் நம்பிக்கை
வதங்கிப் போனதோ
பாவப் பழக்கத்தில்
திரும்ப விழுந்தாயோ

அட்டவணை

தாங்க ஆளில்லையென்று
தேம்பி நிற்கும்போது
அந்நேரம் உன்னோடு நானிருப்பேன்
கைவிடவே மாட்டேன். – விலகவே

**682** And can it be G.B.705

1. **யேசுவின் ரத்தத்தில் நானும்**
நம்பிக்கை வைக்கக் கூடுமோ?
எனக்காய் மரித்தவர்க்கு
என்னிமித்தமே பாடுகள்
அற்புத அன்பு ஆச்சரியம்
என் தேவன் எனக்காய் மாண்டார்.

2. கல்வாரியின் சிலுவையில்
மரித்தாரே என் ஆண்டவர்;
இவ்வன்பின் ரகசியத்தை
யார் கண்டு உணரக்கூடும்?
காருண்யரை துதித்திடுவோம்
இவ்வன்பரை நாம் போற்றுவோம்.

3. விண் சிங்காசனத்தை விட்டு
ஆதாமின் வீழ்ந்த மாந்தர்க்காய்;
தம்மையே வெறுமையாக்கி,
இரத்தம் சிந்தினார் யேசு.
தாராளமான அன்பினால்
இப்பாவி என்னையும் கண்டார்.

4. பாவத்தில் கட்டப்பட்டோனாய்
இருளில் மூழ்கியிருந்தேன்
உம் முகத்தின் பிரகாசத்தால்
மெய் அறிவை கண்டடைந்தேன்
என் கட்டுகள் விழுந்திட,
எழுந்து உம்மைப் பின் சென்றேன்.

5. ஆக்கினைத் தீர்ப் பெனக்கில்லை;
என் யேசு எனக்குச் சொந்தம்.
அவராலே பிழைத்திட்டேன்;
நீதியின் ஆடை தரித்தேன்,
தைர்யமாய் அவர் முன் நிற்பேன்;
வாடாத க்ரீடம் பெறுவேன்.

**683** When the trumpet of the Lord S.S. 983

1. **இந்தக் கடைசி காலத்திலே எக்காளம் தொனிக்கையில்**
இயேசு விண்ணகத்தில் தோன்றிடுவார்
ஒளிமயமான அந்த மோட்சத்தின் கரையண்டை
மீட்கப்பட்ட தாசர் வந்து சேருவார்.

தாசர் விண்ணில் ஒன்று கூடி (3)
நிற்கும் போது, நானும் கூடவே நிற்பேன்.

2. கிறிஸ்துவுக்குள் மரித்தோர் யாவரும் உயிர்த்தெழுந்து
மேக மண்டலத்தைத் தாண்டிச் செல்லுவர்
தங்களுக்காயத்தம் செய்யப்பட்ட அந்த நகர்க்கே
மிக ஆனந்தமாய் வந்து சேருவர்.

3. முழு மனதாய் நான் கிறிஸ்துவுக்கு அர்ப்பணம் செய்து
அவர் அன்பின் செயலை அறிவிப்பேன்
பணியை இப்பூதலத்தில் நிறைவேற்றி முடித்து
நானும் மீட்பரண்டை வந்து சேருவேன்.

**684** Here is love vast as the ocean

1. **யேசுவே உம் அன்பின் ஆழம்**
அளவிடக் கூடுமோ?
நீரே எங்கள் மீட்புக்காக
உம் இரத்தம் சிந்தினீர்.
உம் அன்பை நான் மறப்பேனோ?

அட்டவணை

உம்மைப் புகழேனோ நான்?
உம்மை என்றும் மறக்காமல்
வாழ்நாள் எல்லாம் ஜீவிப்பேன்.

2. சிலுவை மரத்தினின்று
உம் அருள் பாய்தோடிற்று
தேவ நேசம் அதினாலே
மானிடர்க்கு தோன்றிற்று
தெய்வ நீதி நிறைவேறி
அன்பின் வெள்ள மாயிற்று
அதால் மாந்தர் மீட்படைந்து
விண்ணின் மாட்சி பெற்றனர்.

**685**

1. **அர்ப்பணித்தேன் என்னை முற்றிலுமாய்**
அற்புத நாதா உம் கரத்தில்
அனைத்தும் உமக்கே சொந்தம் என்று
அன்பரே என்னையே தத்தம் செய்தேன்

***பல்லவி***

அனைத்தும் கிறிஸ்துவுக்கே – எந்தன்
அனைத்தும் அர்ப்பணமே
என் முழு தன்மைகள் ஆவல்களும்
அனைத்தும் கிறிஸ்துவுக்கே

2. என் எண்ணம் போல நான் அலைந்தேனே
என்னைத் தடுத்திட்ட தாருமில்லை
உம் சிலுவை அன்பை சந்தித்தேனே
நொறுங்கி வீழ்ந்தேனே உம் பாதத்தில்

3. ஐம்புலன்கள் யாவும் அடங்கிட
ஐம்பெருங் காயங்கள் ஏற்ற நாதா
வான் புவி கிரகங்கள் ஆள்பவரே
என்னையும் ஆண்டிட நீரே வல்லோர்

அட்டவணை

4. என் வாழ்வில் இழந்த நன்மைக்கீடாய்
எஞ்சிய நாட்களில் உழைப்பேனே
நீர் தந்த ஈவு வரங்கள் யாவும்
உம் பணி சிறந்திட முற்றும் தந்தேன்

**686**

**அற்புதர் அற்புதர் அற்புதர் அற்புதர்**
இயேசு அற்புதர்
அண்டினோர் வாழ்வை இன்பமாய் மாற்றும்
இயேசு அற்புதர்

எல்லோரும் பாடுங்கள்
கைத்தாளம் போடுங்கள்
சந்தோஷத்துடன் சங்கீதம் பாடுங்கள்

1. எத்தனை துன்பங்கள் நம்மில் வந்தபோது
மீட்ட இயேசு அற்புதர்
என்னென்ன தொல்லைகள் நம்மைச் சூழ்ந்த போது
காத்த இயேசு அற்புதர் (2)
உலகத்திலிருப்போரிலும் எங்கள்
இயேசு பெரியவர் அற்புதரே
உண்மையாய் அவரை தேடும் யாவருக்கும்
இயேசு அற்புதர் -எல்லோரும்

2. அலைகடல் மேலே நடந்தவர்
எங்கள் இயேசு அற்புதர்
அகோரக் காற்றையும் அமைதிப்படுத்திய
இயேசு அற்புதர் (2)
அறைந்தனர் சிலுவையிலே
ஆண்டவர் மரித்தார் அந்நாளினிலே
ஆயினும் மூன்றாம் நாள் உயிருடன்
எழுந்த இயேசு அற்புதரே -எல்லோரும்

## 687 கர்த்தருடைய ஜெபம்

**வாகனம் வாழ்ந்திடும் எங்கள் தந்தாய்**
வாழ்க உம் திருநாமம்
வருக உம் அரசு பெருக உம் விருப்பம்
வாழ்க உம் திருநாமம்

வானகம் போல வையகம் தனிலும்
வாழ்க உம் திருநாமம்
தினமெங்கள் உணவை தயவுடன் தாரும்
வாழ்க உம் திருநாமம்

பாவங்கள் யாவும் பொறுத்தெமை ஆளும்
வாழ்க உம் திருநாமம்
பிறர் பிழை நாங்கள் பொறுப்பது போல
வாழ்க உம் திருநாமம்

சோதனை நின்றெமை விலக்கியே காரும்
வாழ்க உம் திருநாமம்
தீவினையிருந்தே மீட்டிட வாரும்
வாழ்க உம் திருநாமம்

ஆட்சியும் ஆற்றலும் அனைத்துள மாண்பும்
வாழ்க உம் திருநாமம்
இன்றுபோல் என்றும் இறைவனே உமதே
வாழ்க உம் திருநாமம்

ஆமென் ஆமென் அநாதியாய் ஆமென்
வாழ்க உம் திருநாமம்
ஆமென் ஆமென் அநாதியாய் ஆமென்
வாழக் உம் திருநாமம்

## 688 விசுவாச பிரமாணம்

**வானும் புவியும் வையகமும்**
வனைந்த வல்ல பரனான
வானகத் தந்தையே நம்புகிறேன்

அட்டவணை

அவரொரே திருமகன் கன்னியிடம்
அனைவரின் நாதர் கிறிஸ்துவாய்
அவதரித்ததையும் நம்புகிறேன்

பிலாத்துவின் கீழவர் நிலுவையதில்
பெரும் பாடுகளுடன் இறந்தடங்கி
பெருங்குழி புகுந்ததை நம்புகிறேன்

உயிரோடெழுந்தார் மூன்றாம் நாள்
உயிரே எழுந்து பரன்வலமே
உடனிருப்பதையும் நம்புகிறேன்

உயிருள்ளோரும் இறந்தோரும்
உண்மையாம் தீர்ப்பை அடைந்திடவே
உறுதியாய் வருவார் நம்புகிறேன்

தூய ஆவி தூயோர் சபை உறவு
பாவமன்னிப்பு உடல் உயிர்ப்பு
மெய்நிலை வாழ்வையும் நம்புகிறேன்

**மரணம்**

**689** There's a land that is fairer

1. **ஜோதி தோன்றும் ஒரு தேசம் உண்டு**
விசுவாசக் கண்ணால் காண்கிறோம்
நம் பிதா அழைக்கும் பொழுது
நாம் அங்கே வசிக்கச் செல்லுவோம்

இன்பராய் ஈற்றிலே
மோட்சக் கரையில் நாம் சந்திப்போம்

2. அந்த வான் கரையில் நாம் நின்று
விண்ணோர் கீதங்களைப் பாடுவோம்
துக்கம் யாவும் அற்று மகிழ்ந்து
சுத்தரில் ஆறுதல் அடைவோம்.

அட்டவணை

3. நம் பிதாவின் அன்பை நினைத்து
அவரில் மகிழ்ந்து பூரிப்போம்
மீட்பின் நன்மைகளை உணர்ந்து
அவரை வணங்கித் துதிப்போம்.

4. அந்த மோட்ச கரை அடைந்து
வான் சேனையுடன் நாம் களிப்போம்,
நம் தொல்லை யாத்திரை முடித்து
விண் கிரீடத்தை நாம் தரிசிப்போம்.

5. சாவற்றோர் பூரிக்கும் தேசத்தில்
சந்திப்போம், பாடுவோம், ஆளுவோம்,
துக்கம் நோவிழந்த ஸ்தலத்தில்
சேமமமாய் நாம் இளைப்பாறுவோம்.

6. அங்கே நம் இரட்சகர் என்றென்றும்
ஆளுகை செய்து வீற்றிருப்பார்
துக்கம் நோய் சாவுகள் நீங்கிடும்,
தேவன் நம் கண்ணீரைத் துடைப்பார்.

7. தூதர் சூழ்ந்து நின்று பாடுவார்.
கேட்டு நாம் யாவரும் மகிழ்வோம்
பக்தர் அங்கே முடிசூடுவார்,
ஓர் முடி அங்குண்டு எனக்கும்.

அட்டவணை

**690** **முடிவு கவிகள்**

***பல்லவி***

**மங்களம் சதா – ஜெய – மங்களம் வேதா!**
**எங்கள் துங்கமங்களர்க்கு – மங்களம் சதா,**

***சரணங்கள்***

1. அணைத்துக்காத்தவா,–உல–கனைத்தும் படைத்தவா;
இணையில்லா பிதாவுமக்கு மங்களம் சதா, –மங்களம்

2. யேசுநாயகா, – எம் – நேசநாயகா!
மாசில்லாத சுதனுமக்கு மங்களம் சதா, –மங்களம்

3. ஞானவாரியே, – திரு – வானமாரியே!
ஆனந்தசுத்தாவியுமக்கு மங்களம் சதா, –மங்களம்

# ஆராதனை முறைமைகள்

அட்டவணை

காலை ஆராதனை ............................ 1

மாலை ஆராதனை ............................ 16

தூயர் அதநாஷியஸ் விசுவாசப் பிரமாணம் 27

லித்தானியா ஆராதனை ..................... 31

ஈஸ்தர் பண்டிகைக் கீதம் .................... 41

பரிசுத்த நற்கருணை ஆராதனை .......... 43

- ஆதித் திருச்சபை ஆராதனை முறை

பரிசுத்த திருவிருந்து ஆராதனை ......... 67

- தென்னிந்திய திருச்சபை முறை

சங்கீதம் –95 .................................... 5

தேவனே, உம்மைத் துதிக்கிறோம் .......... 6

Benedictus பரி. லூக்கா 1:68–79 ............... 8

சங்கீதம் –100 .................................. 10

*அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணம் 10*

பரமண்டலங்களிலிருக்கிற ............... 11

அட்டவணை

இரண்டாம் சுருக்க ஜெபம் ................. 12

மூன்றாம் சுருக்க ஜெபம் .................... 13

பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம் 13

பொதுவான ஸ்தோத்திரம் ................... 15

சங்கீதம் –98 ....................................... 21

சங்கீதம் –67 ....................................... 22

வானத்தையும் பூமியையும் ......................... 45

*கிறிஸ்து சபை அனைத்துக்காகவும் ஜெபம் ...* 47

கிறிஸ்து சபை அனைத்துக்கும் .................... 49

கிறிஸ்து பிறந்த பண்டிகைக்கும், பின்வரும்

ஏழு நாட்களுக்கும் உரிய முகவுரை............... 53

பிரசன்னத் திருநாளுக்கும், அதன் பின்வரும்

ஏழு திருநாட்களுக்கும் உரிய முகவுரை ........ 53

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும்

வியாழக்கிழமைக்குரிய முகவுரை ............... 54

அட்டவணை

கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கும்,

அதன் பின்வரும் 7நாட்களுக்கும் உரிய முகவுரை 54

கிறிஸ்து பரமண்டலத்துக்கேறின திருநாளுக்கும்

அதன் பின்வரும் 7 நாட்களுக்கும் உரிய முகவுரை 55

பரிசுத்த ஆவியின் திருநாளுக்கும்,அதன் பின்

வரும் 6 நாட்களுக்கும் உரிய முகவுரை ............. 55

கர்த்தர் மறுரூபமான திருநாளுக்குரிய முகவுரை.. 56

சகல பரிசுத்தவான்களின் திருநாள், யோவான்

ஸ்நானகன், அப்போஸ்தலர், சுவிசேஷகர்

முதலியவர்களின் திருநாட்களுக்குரிய முகவுரை 56

திரித்துவத் திருநாளுக்கு உரிய முகவுரை.......... 56

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக்**

**கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும் .......... 67**

கர்த்தாவே எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்........ 74

அட்டவணை

# காலை ஆராதனை

காலை ஜெபம் தொடங்கும்போது, ஆராதனை நடத்துகிறவர் பின்வரும் வேத வாக்கியங்களில் இரண்டொரு வாக்கியத்தை உரத்த சத்தமாய் வாசித்து, அவ்வாக்கியங்களுக்குப் பின் எழுதியிருக்கிறதைச் சொல்லக்கடவர்.

**துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப் பண்ணுவான். எசே.**18:27

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. சங்.51:3

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். சங்.51:9.

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும், நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சங்.51:17.

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். யோவே.2:13

நம்முடைய தேவனாகிய ஆண்டவருக்கு விரோதமாக நாம் கலகம் பண்ணி, அவர் நமக்கு முன்பாக வைத்த நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாம் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற் போனோம்; ஆனாலும் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. தானி.9:9-10

கர்த்தாவே, என்னைத் தண்டியும்; ஆனாலும் நான் அவமாய்ப் போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும். ஏரே.10:24, சங்.6:1

மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது. பரி.மத்.3:2

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய், தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்;

இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல என்பேன். பரி. லூக்.15:18,19.

கர்த்தாவே, ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். சங்.143:2.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்குக் கர்த்தர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவா.1:8,9.

பிரியமான சகோதர, சகோதரிகளே நம்முடைய பரம பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள தேவனுடைய அளவில்லாத தயவினாலும், இரக்கத்தினாலும் பாவமன்னிப்பைப் பெறுவதற்காக; நாம் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அவர் சந்நிதியில் மாயமாய் மறைத்துக் கொள்ளாமல், பணிவும், தாழ்மையும், துக்கமும், கீழ்ப்படிதலுமுள்ள இருதயத்தோட அறிக்கையிட, வேதவசனம் பற்பல வாக்கியங்களில் நம்மை ஏவுகிறது. நாம் எக்காலத்திலும் தேவனுக்கு முன்பாக நம்முடைய பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிட வேண்டுவதுமன்றி, அவருடைய திருக்கரங்களினாலே நாம் பெற்றுக் கொண்ட மேன்மையான உபகாரங்களுக்காக ஸ்தோத்திரஞ் செலுத்தவும், மிகவும் சிறந்த அவருடைய புகழைப் பிரஸ்தாபம் பண்ணவும், அவருடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும், நம்முடைய சரீரத்துக்கும், ஆத்துமாவுக்கும் தேவையானவைகளுக்காக வேண்டிக்கொள்ளவும், நாம் கூடி வந்திருக்கிற தருணத்தில் பாவங்களை அறிக்கையிடுவது நமது விசேஷித்த கடமையாயிருக்கிறது. ஆகையால் இங்கே இருக்கிற நீங்கள் யாவரும் சுத்த இருதயத்தோடும், தாழ்ந்த சத்தத்தோடும் பரம கிருபாசனத்தண்டையில் என்னுடனே கூடச் சேர்ந்து, நான் சொல்லுகிற பிரகாரம் சொல்ல உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

***எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க ஆராதனை நடத்துகிறவர் சொல்லுகிற பிரகாரம் சபையாரெல்லாரும் சொல்ல வேண்டிய பொதுவான பாவ அறிக்கை.***

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே தப்பிப்போன ஆடுகளைப்போல நாங்கள் உம்முடைய வழிகளைவிட்டு வழுவி அலைந்துபோனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும், விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். செய்யத்தக்க வைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து வந்தோம்; எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள் மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி நாங்கள் இனி தேவபக்தியும், நீதியும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்துவர, இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

*ஜனங்கள் இன்னும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் மாத்திரம் எழுந்து நின்று கூறவேண்டிய பாவ விமோசனம்.*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாயிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவன், பாவியின் மரணத்தை விரும்பாமல், அவன் தன் பாவத்தை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்பி, பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற தமது ஜனத்துக்குப் பாவ விமோசனத்தையும், மன்னிப்பையும் கூறி அறிவிக்க, தம்முடைய பணிவிடைக்காரருக்கு அதிகாரத்தையும், கட்டளையையும் அருளிச் செய்திருக்கிறார். மெய்யாய் மனந்திரும்பி, தமது பரிசுத்த சுவிசேஷத்தை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் பாவங்களை மன்னித்து விமோசனஞ் செய்கிறார். ஆகையால் கடைசியிலே அவருடைய நித்திய ஆனந்தத்தில் சேரத்தக்கதாய், இத்தருணத்தில் நாம் செய்கிறது அவருக்குப் பிரியமாயிருக்கவும், இனி உயிரோடிருக்கும் நாளெல்லாம் மாசில்லாமல் பரிசுத்த முள்ளவர்களாய் நடக்கவும், அவர் நமக்கு மெய்யான மனந்திரும்புதலையும், தம்முடைய பரிசுத்த ஆவியையும் அருளிச் செய்ய வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அவரை வேண்டிக்கொள்ளக்கடவோம். ஆமென்.

ஆராதனை முறைமை

***இப்பொழுது ஆராதனை நடத்துகிறவர் முழங்கால்படியிட்டுக் கர்த்தருடைய ஜெபத்தை ஜனங்கள் கேட்கத்தக்கதாய்ச் சொல்ல வேண்டும். முழங்கால்படியிட்டிருக்கிற ஜனங்களும் இப்பொழுதும் தேவாராதனையில் இந்த ஜெபம் வழங்குகிற எப்பொழுதும் அவரோடேகூட இதைச் சொல்ல வேண்டும்.***

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

***பின்னும் அவர் சொல்லவேண்டியது***

குரு : ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

**மறுமொழி : அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.**

குரு : தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்

**மறுமொழி : ஆண்டவரே, எங்களுக்குச் சகாயம் பண்ணத் தீவிரியும்**

***எல்லோரும் எழுந்து நிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.***

குரு : பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

**மறுமொழி : ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான, சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.**

குரு : கர்த்தரைத் துதியுங்கள்

**மறுமொழி : கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.**

*இப்பொழுது பின்வரும் சங்கீதத்தைச் சொல்ல அல்லது பாட வேண்டும். ஆனாலும், ஈஸ்டர் என்னும் உயிர்த்தெழுந்த திருநாளுக்கு விசேஷித்த கீர்த்தனம் நியமிக்கப்பட்டிருக்கிறதினால், அந்நாளில் இதை வாசிக்கலாகாது. அன்றியும் மாதந்தோறும் 19ஆம் தேதியில் இந்தச் சங்கீதத்தை இங்கே வாசியாமல், சங்கீதங்களை வாசிக்கும் முறையிலே வாசிக்க வேண்டும்.*

## Venite, Exultemus Domino

## சங்கீதம் 95

கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.

துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.

கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார்.

பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது; பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள்.

சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்; வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம் வாருங்கள்.

அவர் நம்முடைய தேவன்; நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

இன்று அவருடைய சத்தத்தைக்கேட்பீர்களாகில், வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்.

அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள்.

நாற்பதுவருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து, அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி,

என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று, என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.

***பின்பு குறிக்கப்பட்ட சங்கீதங்கள் முறையே வரும். அன்றியும் வருஷமுழுவதும் வாசிக்கப்படுகிற ஒவ்வொரு சங்கீதத்தின் முடிவிலும், மூன்று வாலிபர் கீதம், சகரியாவின் கீதம், கன்னிமரியாளின் கீதம், சிமியோனின் கீதம் (Benedicite, Benedictus, Magnificat, Nunc Dimittis) என்னும் கீதங்களின் முடிவிலும் சொல்லவேண்டியதாவது:***

**பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.**

**மறுமொழி** : **ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான;**
**சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.**

***பழைய ஏற்பாட்டிலிருந்து முதலாம் பாடம் வாசிக்கப்பட வேண்டும். அதற்குபின், "தேவனே உம்மைத் துதிக்கிறோம்" என்னும் கீதத்தை வாசிக்க அல்லது பாட வேண்டும்.***

## தேவனே, உம்மைத் துதிக்கிறோம் – Te Deum Laudamus

**தேவனே, உம்மைத் துதிக்கிறோம்;** உம்மைக் கர்த்தரென்று பிரஸ்தாபப்படுத்துகிறோம்.

நித்திய பிதாவாகிய உம்மை; பூமண்டலமெல்லாம் வணங்கும்.

தேவதூதர் அனைவோரும்; பரமண்டலங்களும், அவைகளிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும்;

கேரூபீன்களும், சேராபின்களும்; தேவரீரை ஓயாமல் புகழ்ந்து போற்றி,

சேனைகளின் தேவனாகிய கர்த்தரே; நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்.

வானமும் பூமியும் உமது மகிமையுள்ள மகத்துவத்தால்; நிறைந்தன என்று முழங்குகிறார்கள்.

அப்போஸ்தலராகிய மாட்சிமை பொருந்திய கூட்டம்; உம்மைப் போற்றும்.

தீர்க்கத்தரிசிகளாகிய சிறப்புள்ள சங்கம்; உம்மைப் போற்றும்.

இரத்தச் சாட்சிகளாகிய தைரிய சேனை; உம்மைப் போற்றும்.

அளவில்லாத மகத்துவமுள்ள; பிதாவாகிய தேவரீரையும்

வணங்கப்படத்தக்க மெய்யான; உம்முடைய ஒரே குமாரனையும்

தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியையும்,

உலகமெங்குமுள்ள பரிசுத்த சபை; பிரஸ்தாபப்படுத்தும்.

கிறிஸ்துவே, தேவரீர் மகிமையின் ராஜா

நீரே பிதாவினுடைய; நித்திய சுதன்

நீர் மனிதரை இரட்சிக்க ஏற்பட்டபொழுது; கன்னியாஸ்திரீயின் கர்ப்பத்தை அருவருக்கவில்லை.

நீர் மரணத்தின் கொடுமையை வென்று; விசுவாசிகள் எல்லாருக்கும் மோட்ச ராஜ்யத்தைத் திறந்தீர்.

நீர் பிதாவின் மகிமையிலே; தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறீர்.

நீர் எங்களுக்கு நியாயாதிபதியாக; வருவீரென்று விசுவாசிக்கிறோம்.

உமது விலையுயர்ந்த இரத்தத்தால் மீட்டுக்கொண்ட; உமது அடியாருக்கு சகாயஞ்செய்ய உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஆராதனை முறைமை

எங்களை நித்திய மகிமையிலே; உம்முடைய பரிசுத்தவான்களோடே சேர்த்துக்கொள்ளும்.

கர்த்தாவே, உமது ஜனத்தை இரட்சித்து; உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

அவர்களை ஆண்டுகொண்டு; என்றென்றைக்கும் உயர்த்தியருளும்.

தினம் தினம்; உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்.

எப்பொழுதும் சதா காலங்களிலும், உமது நாமத்தை காத்தருளும்.

ஆண்டவரே, இந்நாளில் பாவஞ்செய்யாதபடி; எங்களைக் காத்தருளும்.

கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்; எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறதால்; உமது கிருபை எங்கள் மேல் இருப்பதாக.

கர்த்தாவே, உம்மையே நம்பியிருக்கிறேன்; நான் ஒருக்காலும் கலங்காதபடி செய்யும்.

## Benedictus பரி. லூக்கா 1:68-79

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

அவர் நம்முடைய பிதாக்களுக்கு வாக்குத்தத்தம்பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்;

தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை நினைத்தருளி:

உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல்

எனக்கு முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று,

அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்;

ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால் தாம் சொன்னபடியே

தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு, நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும், நம்மை இரட்சிக்கும்படிக்கு,

தம்முடைய தாசனாகிய தாவீதின்வம்சத்திலே நமக்கு இரட்சணியக்கொம்பை ஏற்படுத்தினார்.

நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்; நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும்,

நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும், அவருக்கு முன்னாக நடந்துபோவாய்.

அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்,

நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும், அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது என்றான்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

*அல்லது இந்தச் சங்கீதத்தைச் சொல்லலாம்.*

**Jubiliate Dev. சங்கீதம்: 100**

**பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.**

**மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆனந்தசத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.**

**கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.**

**அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து, அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.**

**கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும், அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.**

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

***இப்பொழுது அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்தைச் சொல்ல வேண்டும்.***

**வானத்தையும் பூமியையும் படைத்த, சர்வ வல்லமைய்ுள்ள பிதாவாகிய தேவ விசுவாசிக்கிறேன்.**

**அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார். பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.**

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன், பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

**கர்த்தர் உங்களோடிருப்பாராக**

மறுமொழி : **அவர் உமது ஆவியோடும் இருப்பாராக**

ஆராதனை நடத்துகிறவர் : ஜெபம் பண்ணக்கடவோம்

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

**கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்**

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

***இப்பொழுது ஆராதனை நடத்துகிறவரும் பணிவிடைக்காரரும் ஜனங்களும் உரத்த சத்தமாய்க் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்ல வேண்டும்.***

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக, அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ஆமென்.

***இப்பொழுது குருவானவர் எழுந்து நின்று சொல்ல வேண்டியது.***

குரு : கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

மறுமொழி : **உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்**

குரு : உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்

மறுமொழி : **நீர்தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்**

குரு : கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்

மறுமொழி : **உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.**

குரு : கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்

மறுமொழி : **தேவரீரேயல்லாமல் எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவருமில்லை.**

குரு : பராபரனே, எங்கள் இருதயத்தைச் சுத்திகரியும்

மறுமொழி : **உம்முடைய பரிசுத்த ஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும்.**

***இப்பொழுது மூன்று சுருக்கஜெபங்கள் வரும். அவைகளில் முதலாவது, அந்தந்த நாளுக்குரிய சுருக்க ஜெபம். இது நற்கருணை முறையிலும் வாசிக்க நியமிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது, சமாதானத்துக்காகச் சொல்லுகிற ஜெபம். மூன்றாவது, சன்மார்க்கமாய் நடக்கிறதற்கு வேண்டி கிருபைக்காகச் சொல்லுகிற ஜெபம். எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, இரண்டாம், மூன்றாம் சுருக்க ஜெபங்களை வருஷமுழுவதும் நாள்தோறும் மாறாமல் காலை ஜெபத்தில் பின்வருகிறபடி சொல்லவேண்டும்.***

***இரண்டாம் சுருக்க ஜெபம்***

## சமாதானத்துக்காகச் சொல்லியது

சமாதானத்துக்குக் காரணரும், ஏக சிந்தையை விரும்புகிறவருமாகிய தேவனே, உம்மை அறிவதே நித்திய ஜீவன், உம்மைச் சேவிப்பதே மெய்ச்சுயாதீனம். தேவரீரைத் தஞ்சமாகக் கொண்டிருக்கிற உமது அடியாராகிய நாங்கள், எந்த சத்துருக்கள் செய்கிற எல்லாப் பிரயத்தனங்களிலும் நின்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையினால் எங்களைக் காப்பாற்றியருளும். ஆமென்.

*மூன்றாவது சுருக்க ஜெபம்*

## தேவகிருபைக்காகச் சொல்லியது

சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, இந்நாள் வரையும் எங்களைச் சுகமாய் நடத்தி வந்த எங்கள் பரம பிதாவாகிய கர்த்தாவே, இந்நாளிலும் உமது மிகுந்த வல்லமையால் எங்களைக் காப்பாற்றி, நாங்கள் யாதொரு பாவத்துக்கு உட்படாமலும், எவ்விதமான மோசத்திலும் அகப்படாமலும், உமது பார்வைக்கு நீதியாயிருக்கிறதை எப்பொழுதும் செய்கிறதற்கு, நாங்கள் செய்கிற எல்லாவற்றையும் உம்முடைய ஆளுகையினாலே நடத்தியருள வேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

*கீதஸ்தானங்களிலும், பாடும் மற்ற இடங்களிலும், ஒரு கீர்த்தனம் இங்கே வரும்.*

## குருமாருக்காகவும், சபையாருக்காகவும் சொல்லிய ஜெபம்

மகா அதிசயங்களைச் செய்கிற சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, எங்கள் பேராயர்கள் மேலும், ஆயர்கள் மேலும், சபை ஊழியர்கள் மேலும் அவர்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லாச் சபைகள் மேலும் ஆரோக்கியம் தருகிற உம்முடைய கிருபையுள்ள ஆவியை அனுப்பி, அவர்கள் உமக்கு உத்தம பிரியமானவர்களாய் நடக்கும்படி, உமது ஆசீர்வாதமாகிய பனி அவர்கள் மேல் ஓயாமல் பெய்யச் செய்தருளும். கர்த்தாவே, எங்கள் காரியகர்த்தரும் மத்தியஸ்தருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமையுண்டாக இதைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

## பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம்

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வ வல்லமையுள்ள தேவனே, இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே கூடிவரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேன் என்று வாக்கருளியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய

எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும், வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி, இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

## 2 கொரி. 13:14

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடும்கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமென்.

# பொதுவான ஸ்தோத்திரம்

சர்வ வல்லமையுள்ள தேவனே, சர்வ ஜீவதயாபர பிதாவே, அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கும் மற்றெல்லா மனிதருக்கும், தேவரீர் அருளிச் செய்த பற்பல கிருபைக்காகவும், அன்புள்ள தயவுக்காகவும், நாங்கள் மிகுந்த தாழ்மையோடும், முழு இருதயத்தோடும், உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். தேவரீர் எங்களைச் சிருஷ்டித்ததற்காகவும், காப்பாற்றுகிறதற்காகவும், இம்மைக்குரிய எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும், உம்மைத் துதிக்கிறோம். விசேஷமாய் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே, உலகத்தை மீட்டுக் கொண்ட விலைமதியாத உமது அன்புக்காகவும், கிருபையின் யத்தனங்களுக்காகவும், மகிமையடைவோம் என்கிற நம்பிக்கைக்காகவும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் உண்மையாய் நன்றியறிந்த இருதயமுள்ளவர்களாய் இருக்கவும், எங்களை உமது ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து, எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கு முன்பாகப் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களாய் நடக்கவும், எங்கள் வாக்கினாலே மாத்திரமல்ல, எங்கள் நடக்கையினாலேயும் உம்முடைய புகழைப் பிரஸ்தாபப்படுத்தவும், தேவரீர் செய்த உபகாரங்களெல்லாவற்றையும் உணர்ந்துகொள்ளும் உணர்வை எங்களுக்கு அருளிச் செய்ய வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்கிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும், எல்லா மேன்மையும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

# மாலை ஆராதனை

*மாலை ஜெபம் தொடங்கும்போது, ஆராதனை நடத்துகிறவர் பின்வரும் வேதவாக்கியங்களில் இரண்டொரு வாக்கியத்தை உரத்த சத்தமாய் வாசித்து, அவ்வாக்கியங்களுக்குப் பின் எழுதியிருக்கிறதைச் சொல்லக்கடவர்.*

**துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தைவிட்டு விலகி நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப் பண்ணுவான். எசே.18:27**

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. சங்.51:3

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். சங்.51:9.

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும், நறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சங்.51:17.

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். யோவே.2:13

நம்முடைய தேவனாகிய ஆண்டவருக்கு விரோதமாக நாம் கலகம் பண்ணி, அவர் நமக்கு முன்பாக வைத்த நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாம் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற் போனோம்; ஆனாலும் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. தானி.9:9-10

கர்த்தாவே, என்னைத் தண்டியும்; ஆனாலும் நான் அவமாய்ப் போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும். ஏரே.10:24, சங்.6:1

மனந்திரும்புங்கள், பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது. பரி.மத்.3:2

ஆராதனை முறைமை

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய், தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ் செய்தேன்; இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல என்பேன். பரி. லூக்.15:18,19.

கர்த்தாவே, ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். சங்.143:2.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்குக் கர்த்தர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவா.1:8,9.

பிரியமான சகோதர, சகோதரிகளே நம்முடைய பரம பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள தேவனுடைய அளவில்லாத தயவினாலும், இரக்கத்தினாலும் பாவமன்னிப்பைப் பெறுவதற்காக; நாம் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அவர் சந்நிதியில் மாயமாய் மறைத்துக் கொள்ளாமல், பணிவும், தாழ்மையும், துக்கமும், கீழ்ப்படிதலுமுள்ள இருதயத்தோட அறிக்கையிட, வேதவசனம் பற்பல வாக்கியங்களில் நம்மை ஏவுகிறது. நாம் எக்காலத்திலும் தேவனுக்கு முன்பாக நம்முடைய பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிட வேண்டுவதுமன்றி, அவருடைய திருக்கரங்களினாலே நாம் பெற்றுக் கொண்ட மேன்மையான உபகாரங்களுக்காக ஸ்தோத்திரஞ் செலுத்தவும், மிகவும் சிறந்த அவருடைய புகழைப் பிரஸ்தாபம் பண்ணவும், அவருடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும், நம்முடைய சரீரத்துக்கும், ஆத்துமாவுக்கும் தேவையானவைகளுக்காக வேண்டிக்கொள்ளவும், நாம் கூடி வந்திருக்கிற தருணத்தில் பாவங்களை அறிக்கையிடுவது நமது விசேஷித்த கடமையாயிருக்கிறது. ஆகையால் இங்கே இருக்கிற நீங்கள் யாவரும் சுத்த இருதயத்தோடும், தாழ்ந்த சத்தத்தோடும் பரம கிருபாசனத்தண்டையில் என்னுடனே கூடச் சேர்ந்து, நான் சொல்லுகிற பிரகாரம் சொல்ல உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

*எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க ஆராதனை நடத்துகிறவர் சொல்லுகிற பிரகாரம் சபையாரெல்லாரும் சொல்ல வேண்டிய பொதுவான பாவ அறிக்கை.*

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே தப்பிப்போன ஆடுகளைப்போல நாங்கள் உம்முடைய வழிகளைவிட்டு வழுவி அலைந்துபோனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும், விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். செய்யத்தக்க வைகளைச் செய்யாமல், செய்யத் தகாதவைகளைச் செய்து வந்தோம்; எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச் செய்த வாக்குத்தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள் மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி நாங்கள் இனி தேவபக்தியும், நீதியும் தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்துவர, இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

*ஜனங்கள் இன்னும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் மாத்திரம் எழுந்து நின்று கூறவேண்டிய பாவ விமோசனம்.*

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாயிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவன், பாவியின் மரணத்தை விரும்பாமல், அவன் தன் பாவத்தை விட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்பி, பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற தமது ஜனத்துக்குப் பாவ விமோசனத்தையும், மன்னிப்பையும் கூறி அறிவிக்க, தம்முடைய பணிவிடைக்காரருக்கு அதிகாரத்தையும், கட்டளையையும் அருளிச் செய்திருக்கிறார். மெய்யாய் மனந்திரும்பி, தமது பரிசுத்த சுவிசேஷத்தை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் பாவங்களை மன்னித்து விமோசனஞ் செய்கிறார். ஆகையால் கடைசியிலே அவருடைய நித்திய ஆனந்தத்தில் சேரத்தக்கதாய், இத்தருணத்தில் நாம் செய்கிறது அவருக்குப் பிரியமாயிருக்கவும், இனி உயிரோடிருக்கும் நாளெல்லாம் மாசில்லாமல் பரிசுத்த முள்ளவர்களாய் நடக்கவும், அவர் நமக்கு மெய்யான மனந்திரும்புதலையும், தம்முடைய

பரிசுத்த ஆவியையும் அருளிச் செய்ய வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் அவரை வேண்டிக்கொள்ளக்கடவோம். ஆமென்.

*இப்பொழுது ஆராதனை நடத்துகிறவர் முழங்கால்படியிட்டுக் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்ல வேண்டும். முழங்கால்படியிட்டிருக்கிற ஜனங்களும் அவரோடேகூட இதைச் சொல்ல வேண்டும்.*

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

*பின்னும் அவர் சொல்லவேண்டியது*

குரு : ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

மறுமொழி : **அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.**

குரு : தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்

மறுமொழி : **ஆண்டவரே, எங்களுக்குச் சகாயம் பண்ணத் தீவிரியும்**

*எல்லோரும் எழுந்து நிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.*

குரு : பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

மறுமொழி : **ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.**

குரு : கர்த்தரைத் துதியுங்கள்

மறுமொழி : **கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.**

*பின்பு குறிக்கப்பட்ட சங்கீதங்களை ஒழுங்கின்படி சொல்ல அல்லது பாடவேண்டும். பின்பு நியமித்திருக்கிறபடி பழைய ஏற்பாட்டிலுள்ள பாடம் வரும். அதற்குப்பின் (Magnificat) பாக்கியவதியான கன்னிமரியாளுடைய கீதம் வரும்.*

## Magnificat பரி. லூக்கா 1:46−55

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது.

அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப்பார்த்தார்;

இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும் என்னைப் பாக்கியவதி என்பார்கள்.

வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்; அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்குத் தலைமுறை தலைமுறைக்குமுள்ளது.

தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்; இருதய சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.

பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி, தாழ்மையானவர்களை உயர்த்தினார்.

பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி, ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.

நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ்செய்ய நினைத்து, தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார் என்றாள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

## Cantate Domino சங்கீதம் 98

**கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்; அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார்; அவருடைய வலது கரமும், அவருடைய பரிசுத்த புயமும், இரட்சிப்பை உண்டாக்கினது.**

**கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி, தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார்.**

**அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மையையும் நினைவுகூர்ந்தார்; பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது.**

**பூமியின் குடிகளே, நீங்களெல்லாரும் கர்த்தரை நோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்; முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.**

**சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள், சுரமண்டலத்தாலும் கீதசத்தத்தாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்.**

**கர்த்தராகிய ராஜாவின் சமுகத்தில் பூரிகைகளாலும் எக்காள சத்தத்தாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்.**

**சமுத்திரமும் அதின் நிறைவும், பூச்சக்கரமும் அதின் குடிகளும் முழங்குவதாக.**

**கர்த்தருக்கு முன்பாக ஆறுகள் கைகொட்டி, பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது.**

**அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்; பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்.**

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

*பின்பு நியமித்திருக்கிறபடி புதிய ஏற்பாட்டிலுள்ள பாடம் வரும். அதற்குப்பின் (*Nunc Dimittis*) சிமியோனுடைய கீதம் வரும்.*

### Nunc Dimittis பரி. லூக்கா 2:29-32

ஆண்டவரே, உமது வார்த்தையின்படி; உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்.

புறஜாதிகளுக்கு; பிரகாசிக்கிற ஒளியாகவும்;

உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு; மகிமையாகவும்,

தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக; ஆயத்தம்பண்ணின.

உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

### Deus Misereature சங்கீதம் 67

தேவனே, பூமியில் உம்முடைய வழியும், எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்,

தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து, உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்; ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக; சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

பூமி தன் பலனைத் தரும், தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்.

தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்; பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான; சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

*இப்பொழுது ஆராதனை நடத்துகிறவரும், ஜனங்களும் நின்று அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தைச் சொல்ல அல்லது பாடவேண்டும்.*

வானத்தையும் பூமியையும் படைத்த, சர்வ வல்லமைய்ுள்ள பிதாவாகிய தேவ விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம் பண்ணைப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார். பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன், பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும்; சரிரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

**கர்த்தர் உங்களோடிருப்பாராக**

மறுமொழி : **அவர் உமது ஆவியோடும் இருப்பாராக**

ஆராதனை நடத்துகிறவர் : ஜெபம் பண்ணக்கடவோம்

ஆராதனை முறைமை

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

**கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்**

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

***இப்பொழுது ஆராதனை நடத்துகிறவரும் பணிவிடைக்காரரும் ஜனங்களும் உரத்த சத்தமாய்க் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்ல வேண்டும்.***

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக, அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ஆமென்.

***இப்பொழுது குருவானவர் எழுந்து நின்று சொல்ல வேண்டியது.***

குரு : கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

மறுமொழி : **உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்**

குரு : உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்

மறுமொழி : **நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்**

குரு : கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்

மறுமொழி : **உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.**

குரு : கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்

மறுமொழி : **தேவரீரேயல்லாமல் எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவருமில்லை.**

குரு : பராபரனே, எங்கள் இருதயத்தைச் சுத்திகரியும்

மறுமொழி : **உம்முடைய பரிசுத்த ஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும்.**

*இப்பொழுது மூன்று சுருக்கஜெபங்கள் வரும். அவைகளில் முதலாவது, அந்தந்த நாளுக்குரிய சுருக்க ஜெபம். இரண்டாவது, சமாதானத்துக்காகச் சொல்லுகிற ஜெபம். மூன்றாவது, சன்மார்க்கமாய் நடக்கிறதற்கு வேண்டி கிருபைக்காகச் சொல்லுகிற ஜெபம். எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, இரண்டாம், மூன்றாம் சுருக்க ஜெபங்களை வருஷமுழுவதும் நாள்தோறும் மாறாமல் காலை ஜெபத்தில் பின்வருகிறபடி சொல்லவேண்டும்.*

### *மாலை ஜெபத்தில் சொல்லிய இரண்டாம் சுருக்க ஜெபம்*

சகல பரிசுத்த விருப்பங்களுக்கும், சகல நல்லாலோசனைகளுக்கும், சகல நீதியான கிரியைகளுக்கும் காரணராகிய கடவுளே, உலகம் தரக்கூடாத சமாதானத்தை உமது அடியாராகிய எங்களுக்குத் தந்தருளும். நாங்கள் உமது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மன உற்சாகமுள்ளவர்களாயிருந்து, சத்துரு பயமில்லாமல் உம்மாலே காக்கப்பட்டு, ஆறுதலோடும் அமைதலோடும் எங்கள் ஜீவகாலத்தைப் போக்குவதற்கு, எங்கள் இரட்சகராயி இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

## *மூன்றாம் சுருக்க ஜெபம்*

### *சகல மோசங்களுக்கும் நம்மை விலக்கிக் காப்பதற்காகச் சொல்லியது*

கர்த்தாவே, எங்கள் அந்தகாரம் நீங்க வெளிச்சம் தந்து; இந்த இராத்திரியில் நேரிடும் சகல மோசங்களுக்கும், விக்கினங்களுக்கும் உமது மிகுந்த இரக்கத்தினால் எங்களை விலக்கிக் காக்க வேண்டுமென்று, உம்முடைய ஒரே குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் அன்பினிமித்தம் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

*கீதஸ்தானங்களிலும், பாடும் மற்ற இடங்களிலும், ஒரு கீர்த்தனம் இங்கே வரும்.*

## குருமாருக்காகவும், சபையாருக்காகவும் சொல்லிய ஜெபம்

மகா அதிசயங்களைச் செய்கிற சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, எங்கள் பேராயர்கள் மேலும், ஆயர்கள் மேலும், சபை ஊழியர்கள் மேலும், அவர்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லாச் சபைகள் மேலும் ஆரோக்கியம் தருகிற உம்முடைய கிருபையுள்ள ஆவியை அனுப்பி; அவர்கள் உமக்கு

உத்தமப் பிரியமானவர்களாய் நடக்கும்படி, உமது ஆசீர்வாதமாகிய பனி அவர்கள்மேல் ஓயாமல் பெய்யச் செய்தருளும். கர்த்தாவே, எங்கள் காரியக் கர்த்தரும் மத்தியஸ்தருமாகிய இயேசு கிறிஸ்துவுக்கு மகிமையுண்டாக இதைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

## பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம்

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வ வல்லமையுள்ள தேவனே, இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே கூடி வரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச் செய்வேன் என்று வாக்கருளியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும், வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி, இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

## 2 கொரிந்தியர் 13:14

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமென்.

# தூயர் அதநிஷியாஸ் விசுவாசப் பிரமாணம்

## THE ATHANASIAN CREED

### காலை ஜெபத்தில் சொல்ல வேண்டியது

*கிறிஸ்துவின் ஜனனநாள் – பிரசன்னத் திருநாள் – பரி. மத்தியாவின் திருநாள் – உயிர்த்தெழுந்த திருநாள் – பரத்துக்கேறின திருநாள் – பரிசுத்த ஆவியின் திருநாள் – பரி. யோவான் ஸ்நானகன் – பரி. யாக்கோபு – பரி. பர்த்தொலோமேயு – பரி. மத்தேயு – பரி. சீமோன், யூதா – பரி. அந்திரேயா – இவர்கள் திருநாட்கள் – திரித்துவ ஞாயிறு ஆகிய இந்த நாட்களில் காலை ஜெபம் செய்யும்போது, அப்போஸ்தலருடைய விசுவாசப் பிரமாணத்துக்குப் பதிலாக, பரி.அதநாஷியஸ் விசுவாச பிரமாணமென்று வழங்குகிற கிறிஸ்துமார்க்க விசுவாச அறிக்கையை ஆராதனை நடத்துகிறவரும் ஜனங்களும் நின்று பாட அல்லது சொல்ல வேண்டும்.*

### Quicunque vult

இரட்சிப்படைய விரும்புகிறவன் எவனோ; அவன் திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசத்தை எல்லாவற்றிலும் முதன்மையாய் பற்றிக் கொள்ள வேண்டும்.

**அந்த விசுவாசத்தைப் பழுதின்றி முழுமையும் அனுசரியாதவன்; என்றைக்கும் கெட்டுப் போவான் என்பதில் சந்தேகமில்லை.**

திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசமாவது; தேவத்துவமுள்ளவர்களை கலவாமலும், தேவத்துவத்தைப் பிரியாமலும்,

**ஏக தேவனை திரித்துவமாகவும்: திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்கவேண்டுமென்பதே.**

பிதாவானவர் ஒருவர், குமாரனானவர் ஒருவர், பரிசுத்த ஆவியானவர் ஒருவர்.

**ஆனாலும் பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் ஓரே தேவத்தன்மையும் சம மகிமையும் சம நித்திய மகத்துவமும் உண்டு.**

பிதா எப்படிப்பட்டவரோ, குமாரனும் அப்படிப்பட்டவர், பரிசுத்த ஆவியும் அப்படிப்பட்டவர்.

**பிதா சிருஷ்டிக்கப்படாதவர், குமாரனும் சிருஷ்டிக்கப்படாதவர், பரிசுத்த ஆவியும் சிருஷ்டிக்கப்படாதவர்.**

பிதா அளவிடப்படாதவர், குமாரனும் அளவிடப்படாதவர், பரிசுத்த ஆவியும் அளவிடப்படாதவர்.

**பிதா நித்தியர், குமாரனும் நித்தியர், பரிசுத்த ஆவியும் நித்தியர்.**

ஆகிலும் மூன்றி நித்திய வஸ்துக்களில்லை. நித்திய வஸ்து ஒன்றே.

**அப்படியே மூன்று அளவிடப்படாத வஸ்துக்களில்லை, மூன்று சிருஷ்டிக்கப்படாத வஸ்துக்களில்லை; சிருஸ்டிக்கப்படாத வஸ்து ஒன்றே, அளவிடப்படாத வஸ்து ஒன்றே.**

அப்படியே பிதா சர்வ வல்லவர், குமாரனும் சர்வ வல்லவர், பரிசுத்த ஆவியும் சர்வ வல்லவர்.

**ஆகிலும் மூன்றி சர்வவல்ல வஸ்துக்களில்லை. சர்வ வல்ல வஸ்து ஒன்றே.**

அப்படியே பிதா தேவன், குமாரனும் தேவன், பரிசுத்த ஆவியும் தேவன்.

**ஆகிலும் மூன்று தேவர்களில்லை, தேவன் ஒருவரே.**

அப்படியே பிதா கர்த்தர், குமாரனும் கர்த்தர், பரிசுத்த ஆவியும் கர்த்தர்.

**ஆகிலும் மூன்று கர்த்தர்களில்லை, கர்த்தர் ஒருவரே.**

அம்மூவரில் ஒவ்வொருவரும் தனித்தனியாக தேவனென்றும் கர்த்தரென்றும் அறிக்கையிடவேண்டுமென்று; கிறிஸ்துமார்க்க சத்தியம் கட்டளையிட்டிருக்கிறது போல;

**மூன்று தேவர்கள் உண்டென்றும், மூன்று கர்த்தர்கள் உண்டென்றும் சொல்லக் கூடாதென்று, திருச்சபைக்குரிய பொதுவான சித்தாந்தம் கட்டளையிட்டிருக்கிறது.**

பிதா ஒருவராலும் உண்டாக்கப்பட்டவருமல்ல, சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவருமல்ல.

**குமாரன் பிதாவினாலேயே இருக்கிறவர், உண்டாக்கப்பட்டவருமல்ல, சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவரே.**

பரிசுத்த ஆவி பிதாவினாலும் குமாரனாலும் இருக்கிறவர், உண்டாக்கப்பட்டவருமல்லர், சிருஷ்டிக்கப்பட்டவருமல்லர், ஜெனிப்பிக்கப்பட்டவருமல்லர் புறப்படுகிறவரே.

**ஆகையால் மூன்று பிதாக்களில்லை, ஒரே பிதாவும், மூன்று குமாரரில்லை, ஒரே குமாரனும், மூன்று பரிசுத்த ஆவிகளில்லை, ஒரே பரிசுத்தஆவியும் உண்டு.**

அன்றியும் இந்த திரித்துவத்தில் ஒருவரும் முந்தினவருமல்லர், பிந்தினவருமல்லர், ஒருவரில் ஒருவர் பெரியவருமல்லர், சிறியவருமல்லர்.

**மூவரும் சம நித்தியரும், சரிசமானருமாம்.**

ஆதலால் மேற்சொல்லியபடி, எல்லாவற்றிலும் ஏகத்துவத்தை திரித்துவமாகவும், திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்க வேண்டும்.

**ஆனபடியால், இரட்சிப்படைய விரும்புகிறவன், திரித்துவத்தைக் குறித்து இப்படி நினைக்க வேண்டும்.**

மேலும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மனுஷாவதாரத்தைக் குறித்து சரியானபடி விசுவாசிப்பதும், நித்திய இரட்சிப்படைவதற்கு அவசியமாயிருக்கிறது.

**நாம் விசுவாசித்து அறிக்கையிடுகிற சரியான விசுவாசமானது, தேவ குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்து தேவனும் மனுஷனுமாய் இருக்கிறார்.**

உலகங்கள் உண்டாவதற்கு முன்னே அவர் ஜெநிப்பிக்கப்பட்டு, பிதாவின் தன்மையுடைய தேவனாகவும், உலகத்தில் பிறந்த தம்முடைய தாயின் தன்மையுடைய மனுஷனாகவும் இருக்கிறார்.

**குறைவற்ற தேவனாயும், பகுத்தறிவுடைய ஆத்துமாவும், நரதேகமும் பொருந்திய குறைவற்ற மனுஷனாயும் இருக்கிறார்.**

தேவத்தன்மையின்படி பிதாவுக்குச் சரியானவர், மனுஷ்த் தன்மையின் படி பிதாவுக்குத் தாழ்ந்தவர்.

**அவர் தேவனும் மனுஷனுமாயிருந்து, இருவராயிராமல், கிறிஸ்து என்னும் ஒருவராகவேயிருக்கிறார்.**

தேவத்தன்மை மனுஷத்தன்மையாய் மாறினதினாலேயல்ல, தெய்வத்தில் மனுஷத்தன்மையைச் சேர்த்துக்கொண்டதினாலேயே ஒருவராயிருக்கிறார்.

**இரண்டு தன்மையும் கலந்ததினாலேயல்ல, ஒருவராகப் பொருந்தினதினாலே, முற்றும் ஒருவராயிருக்கிறார்.**

பகுத்தறிவுடைய ஆத்துமாவும் சரீரமும் பொருந்தி, ஒரே மனுஷனாயிருப்பது போல, தேவனும் மனுஷனும் பொருந்தி ஒரே கிறிஸ்துவாயிருக்கிறார்.

**அவர் நமக்கு இரட்சிப்புண்டாக பாடுபட்டு, பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்.**

அவர் பரமண்டலத்துக்கேறி, சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும், மரித்தோரையும் நியாயந்தீர்க்க திரும்ப வருவார்.

**அவர் வரும்பொழுது, சகல மனுஷரும் தங்கள் சரீரங்களோடு எழுந்து, தங்கள் கிரியைகளைக் குறித்து கணக்கு ஒப்புவிப்பார்கள்.**

நன்மை செய்தவர்கள் நித்திய ஜீவனையும், தீமை செய்தவர்கள் நித்திய அக்கினியையும் அடைவார்கள்.

**திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசம் இதுவே. இதை ஒருவன் உண்மையாக விசுவாசியாவிட்டால் இரட்சிப்படையான்.**

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமையுண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமையுண்டாவதாக. ஆமென்.

# லித்தானியா

என்னும்

# பொதுவான பிரார்த்தனை

# THE LITANY

*இது ஞாயிறு – புதன் – வெள்ளிக் கிழமைகளிலும், பேராயர் கட்டளையிடும் மற்ற நாட்களிலும், காலை ஜெபத்திற்குப் பின்பு பாட அல்லது சொல் வேண்டும்.*

தேவனாகிய பரம பிதாவே, ஏழைப் பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

**தேவனாகிய பரம பிதாவே, ஏழைப் பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.**

லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே, ஏழைப் பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

**லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே, ஏழைப் பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.**

பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்த ஆவியே, ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

**பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்த ஆவியே, ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.**

பரிசுத்தமும் ஆனந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏகதேவனே, ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

**பரிசுத்தமும் ஆனந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏகதேவனே, ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.**

கர்த்தாவே, எங்கள் குற்றங்களையும், எங்கள் முன்னோர் குற்றங்களையும் நினையாதேயும். எங்கள் பாவங்களுக்குத்தக்க தண்டனை செய்யாதேயும். தயவுள்ள கர்த்தாவே. எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும். மகா விலையுயர்ந்த உமது

இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உம்முடைய ஜனமாகிய எங்கள்மேல் என்றைக்கும் கோபமாயிராமல் இரங்கிப் பொறுத்தருளும்.

**எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும், தயவுள்ள கர்த்தாவே.**

சகல தீமையிலும் ஆபத்திலும் நின்றும், பாவத்திலும் பிசாசின் தந்திரங்களிலும் விரோதங்களிலும் நின்றும், உம்முடைய கோபத்திலும் நித்திய ஆக்கினையிலும் நின்றும்.

**எங்களுக்கு இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.**

இருதயக் குருட்டாட்டத்தில் நின்றும், அகந்தையிலும், வீண் பெருமையிலும் மாயத்திலும் நின்றும் பொறாமையிலும், பகையிலும் வர்மத்திலும், சகலவித அன்புத்தாழ்ச்சியிலும் நின்றும்

**எங்களுக்கு இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.**

விபச்சாரத்திலும் மரணத்துக்கேதுவான மற்றெல்லாப் பாவத்திலும் நின்றும், உலகத்தினாலும், மாமிசத்தினாலும் பிசாசினாலும் வருகிற சகல வஞ்சகங்களிலும் நின்றும்

**எங்களுக்கு இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.**

இடியிலும் பெருங்காற்றிலும் நின்றும், பெருவாரி விஷ வியாதிகளிலும் பஞ்சத்திலும் நின்றும், யுத்தத்திலும் கொலையிலும் சடிதியில் வரும் மரணத்திலும் நின்றும்

**எங்களுக்கு இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.**

சகலவித கலகத்திலும், அதிகாரிகளுக்கு விரோதமான கட்டுப்பாட்டிலும், தாய் நாட்டுத் துரோகத்திலும் நின்றும், சகலவித பொய்ப்போதகத்திலும், வேதப்புரட்டிலும், சபைப் பிரிவினையிலும் நின்றும், இருதயக் கடினத்திலும், உமது வசனத்தையும் கற்பனையையும் அசட்டைப்பண்ணும் துணிவிலும் நின்றும்.

**எங்களுக்கு இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.**

தேவரீருடைய பரிசுத்த மனுடாவதார இரகசியத்தினிமித்தமும், உமது பரிசுத்த பிறப்பு விருத்தசேதனத்தினிமித்தமும் உமது ஞானஸ்நானம், உபவாசம், சோதனையினிமித்தமும்

**எங்களுக்கு இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.**

தேவரீருடைய மனவேதனை இரத்தவேர்வையினிமித்தமும், உமது சிலுவைப் பாடுகளினிமித்தமும், உமது அருமையான மரணத்தினி மித்தமும், நீர் அடக்கம் பண்ணப்பட்டதினிமித்தமும், மகிமையோடே உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறினதினிமித்தமும், பரிசுத்த ஆவி வந்ததினிமித்தமும்.

**எங்களுக்கு இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.**

துக்கப்படுங்காலத்திலும், சுகப்படுங்காலத்திலும், மரண வேளையிலும், நியாயத்தீர்ப்பு நாளிலும்

**எங்களுக்கு இரட்சித்தருளும் தயவுள்ள கர்த்தாவே.**

கர்த்தராகிய தேவனே, பாவிகளாகிய எங்களுக்குச் செவிகொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். எங்குமுள்ள உமது பரிசுத்த சபையைச் சத்தியமார்க்கத்தில் நடத்தி ஆளவேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

எங்கள் குடியரசுத் தலைவரையும், மாநில ஆளுநர்களையும், நாடாள்வோரையும் ஆசீர்வதித்து, அவர்களை உமது பரம ஞானத்தால் நடத்தியருள வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

சிறந்த உறுதியான அஸ்திபாரங்களின்மேல் அமையும் முயற்சிகளால் எல்லாக் காரியங்களும் ஒழுங்காய் வகுக்கப்பட்டு நிலை பெற்றோங்கும்படி பாராளுமன்றத்தையும் சட்ட சபைகளின் வேலைகளையும் நீர் ஆண்டு நடத்தி ஆசீர்வதித்தருள வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

நீதிபதிகளையும், அலுவலர்களையும் வழிநடத்தி அவர்கள் நீதியை நடப்பிக்கவும், சத்தியத்தைப் பரிபாலனம் பண்ணவும் கிருபையருள வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

அலுவலர்கள் எல்லாருக்கும் ஞானத்தையும் தெளிந்த அறிவையும் ஏகசிந்தையையும் அருளிச் செய்யவேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

எங்கள் நாட்டை எல்லா மோகங்களிலும், விக்கினங்களிலும் தற்காத்து நிலத்திலும், நீரிலும், ஆகாயத்திலும் தற்பாதுகாப்புக்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் படைகளைப் பாதுகாத்தருள வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

பேராயர்கள், ஆயர்கள், உதவி ஆயர்கள் யாவருக்கும் உமது வசனத்தைப் பற்றிய மெய்யறிவாகிய பிரகாசத்தை அளித்து, அவர்கள் பிரசங்கத்தினாலும், நடக்கையினாலும் அவ்வசனத்தைத் தகுதியாய்ப் பிரசித்தஞ் செய்து காண்பிக்கும்படி கிருபை செய்ய வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

*இக்காலத்தில் (இப்பொழுது) உதவி ஆயர்களாகவும், ஆயர்களாகவும் அருட்பொழிவு பெறப்போகிற உமது ஊழியக்காரரை ஆசீர்வதித்து, அவர்கள் உமது சபையின் பக்திவிருத்திக்காகவும், உம்முடைய பரிசுத்த நாம மகிமைக்காகவும், தங்கள் திருப்பணி விடையை ஏற்றவிதமாய் நடப்பிக்கும்படி, உமது கிருபையை அவர்கள் மேல் பொழிந்தருள வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

உம்முடைய ஜனங்கள் எல்லாரையும் ஆசீர்வதித்துக் காப்பாற்ற வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

எல்லா நாடுகளுக்கும் ஒருமையையும், சமாதானத்தையும் ஒரே சிந்தையையும் அருளிச்செய்ய வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

நாங்கள் உம்மில் அன்புகூர்ந்து, உமக்குப் பயந்து, உமது கற்பனைகளின்படி ஜாக்கிரதையாய் நடக்க எங்களுக்கு நல் மனதைக் கொடுக்க வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

உம்முடைய ஜனங்களெல்லாரும் உமது வசனத்தைச் சாந்தமாய்க் கேட்டு, அன்புடனே உட்கொண்டு, ஆவியின் கனிகளைக் கொடுக்கும் படி, கிருபையை அதிகமதிகமாய்த் தந்தருளவேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

***எம்பர் வாரங்களிலும், ஆயர் அருட்பொழிவு கொடுக்கும் நாளிலும் சொல்ல வேண்டியது.***

வழி தப்பி மோசம்போன யாவரையும் சத்திய வழியில் திருப்ப வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

நிற்கிறவர்களைப் பலப்படுத்தி, மன ஊக்கமில்லாதவர்களைத் தேற்றி ஆதரித்து, விழுந்தவர்களைக் கைதூக்கி, கடைசியில் சாத்தானை எங்கள் கால்களின் கீழே நசுக்கிப் போடவேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

மோசத்திலும் வறுமையிலும் துன்பத்திலும் அகப்பட்ட யாவருக்கும் சகாயத்தையும், ஆறுதலையும் செய்ய வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

நிலத்திலும், நீரிலும், ஆகாயத்திலும் பயணம் செய்கிற யாவரையும், பிரசவ வேதனைப்படுகிற பெண்களெல்லாரையும், சகல வியாதிக்காரரையும், குழந்தைகளையும் காப்பாற்றி, காவலில் அடைபட்டவர்கள், சிறைப்பட்டவர்கள் யாவருக்கும் இரக்கஞ்செய்ய வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

தாய் தந்தையில்லாப் பிள்ளைகளையும், கைம்பெண்களையும், திக்கற்றவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரையும், காத்துப் பராமரிக்க வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

எல்லா மனுஷருக்கும் இரக்கஞ் செய்ய வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

எங்களைப் பகைக்கிறவர்களுக்கும், துன்பப்படுத்துகிறவர் களுக்கும், அவதூறுபண்ணுகிறவர்களுக்கும் மன்னித்து, அவர்கள் இருதயத்தைத் திருப்ப வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

பூமியின் நற்பலன்களை அதனதன் காலத்தில் நாங்கள் அநுபவிக்கும்படி, அவைகளை எங்கள் உபயோகத்துக்காகத் தந்து காப்பாற்ற வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

எங்களுக்கு மெய்யான மனந்திரும்புதலைத் தந்து எல்லாப் பாவங்களையும், அஜாக்கிரதையையும், அறியாமையையும் மன்னித்து, உமது பரிசுத்த வசனத்தின்படி எங்கள் நடக்கையைச் சீர்ப்படுத்துகிறதற்கு உமது பரிசுத்த ஆவியின் கிருபையை அருளிச் செய்ய வேண்டுமென்று

**நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும் தயவுள்ள கர்த்தாவே.**

தேவனுடைய குமாரனே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

**தேவனுடைய குமாரனே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.**

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே

உமது சமாதானத்தை எங்களுக்கு அருளிச் செய்யும்

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே

எங்களுக்கு இரங்கும்

கிறிஸ்துவே கேட்டருளும்

**கிறிஸ்துவே கேட்டருளும்**

கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்

**கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்**

கிறிஸ்துவே எங்களுக்கு இரங்கும்

**கிறிஸ்துவே எங்களுக்கு இரங்கும்**

கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்

**கர்த்தாவே எங்களுக்கு இரங்கும்**

***இப்பொழுது குருவானவரும் அவரோடுகூட ஜனங்களும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்ல வேண்டும்***

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

குரு : கர்த்தாவே, எங்கள் பாவங்களுக்குத் தக்கதாக எங்களைத் தண்யாதேயும்.

மறுமொழி: **எங்கள் அக்கிரமங்களுக்குத் தக்கதாக எங்களுக்குச் சரிக்கட்டாதேயும்.**

## ஜெபம் பண்ணக்கடவோம்

நொறுங்குண்ட இருதயத்தின் பெருமூச்சையும், துயரப்படுகிறவர்களின் விருப்பத்தையும் புறக்கணியாத தேவனே, இரக்கமுள்ள பிதாவே துன்பங்களும், இடுக்கண்களும் எங்களை வருத்தும் போதெல்லாம், நாங்கள் உம்மை நோக்கிச் செய்யும் ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளும். உமது அடியாராகிய நாங்கள் எந்த உபத்திரவங்களினாலும் சேதப்படாமல், உமது பரிசுத்த சபையில் எப்பொழுதும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படியாக, பிசாசும் மனிதரும் எங்களுக்கு விரோதமாக நடப்பிக்கும் உபாய தந்திரங்கள் யாவும் தேவரீருடைய தயவுள்ள விசாரணையினாலே அவமாய்ப் போகும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

ஜனங்கள் : **கர்த்தாவே உமது நாமத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ் செய்து எங்களை இரட்சியும்.**

குரு : பராபரனே, எங்கள் பிதாக்கள் காலத்திலும், அவர்களுக்கு முந்தின பூர்வ காலத்திலும், தேவரீர் செய்த மகத்தான கிரியைகளை எங்கள் பிதாக்கள் அறிவிக்க எங்கள் காதுகளால் கேட்டோம்.

ஜனங்கள் : **கர்த்தாவே, உமது மகிமைப் பிரதாபத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ்செய்து, எங்களை இரட்சியும்.**

குரு : பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக

ஜனங்கள் : **ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக ஆமென்.**

குரு : கிறிஸ்துவே, எங்கள் சத்துருக்களை விலக்கி எங்களை இரட்சியும்.

ஜனங்கள் : **கிருபையாய் எங்கள் உபத்திரவங்களைக் கண்ணோக்கும்**

குரு : உருக்கமாய் எங்கள் மனவிசாரங்களைப் பாரும்

ஜனங்கள் : **இரக்கமாய் உமது ஜனத்தின் பாவங்களை மன்னியும்**

குரு : தயவாய் இரக்கத்துடன் எங்கள் ஜெபங்களைக் கேளும்

ஜனங்கள் : **தாவீதின் மைந்தனே எங்களுக்கு இரங்கும்**

குரு : கிறிஸ்துவே இப்பொழுதும் எப்பொழுதும் செவிகொடுத்தருளும்

ஜனங்கள் : **கிறிஸ்துவே கிருபையாய்க் கேளும், கிறிஸ்து நாதரே கிருபையாய்க் கேளும்**

குரு : கர்த்தாவே உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

ஜனங்கள் : **நாங்கள் உம்மிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறோம்.**

# ஜெபம் பண்ணக்கடவோம்

பிதாவே, எங்கள் பலவீனங்களை இரக்கமாய் நோக்கிப் பார்த்து, நியாயமாய் எங்களுக்கு வரவேண்டிய தீங்குகளெல்லாவற்றையும் உமது நாமத்துக்கு மகிமையுண்டாக விலக்கி, எங்களுக்கு நேரிடும் எல்லாத் துன்பங்களிலும் நாங்கள் உமது இரக்கத்தைப் பூரணமாய் நம்பிப் பற்றிக்கொள்ளவும், உமக்குக் கனமும் மகிமையுமுண்டாக எப்பொழுதும் மாசில்லாத பரிசுத்த நடக்கையுள்ளவர்களாய் உம்மைச் சேவிக்கவும் கிருபை செய்ய வேண்டுமென்று, எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரிய கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துநாதர் மூலமாய் மனத்தாழ்மையோடே வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

### பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம்

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வ வல்லமையுள்ள தேவனே, இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே கூடிவரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேன் என்று வாக்கருளியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும், வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி, இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

### 2 கொரிந்தியர் 13:14

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடும்கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமென்.

# கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளாகிய
# ஈஸ்தர் பண்டிகைக் கீதம்

***‘காலை ஜெப ஒழுங்கில் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி’ என்னும் சங்கீதத்துக்குப் பதிலாக இதனடியில் வருகிற கீதங்களை ஈஸ்தர் பண்டிகையிலும் அதன் பின்னர் வரும் ஏழு நாட்களிலும் பாட அல்லது சொல்ல வேண்டும்.***

நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து; நமக்காக அடிக்கப்பட்டிருக்கிறாரே.

ஆதலால் பழைய புளித்தமாவோடே அல்ல, துர்க்குணம், பொல்லாப்பு என்னும் புளித்த மாவோடும் அல்ல; துப்புரவு, உண்மை என்னும் புளிப்பில்லாத அப்பத்தோடே பண்டிகையை ஆசரிக்கக் கடவோம். 1 கொரி 5:7

மரித்தோரிலிருந்து எழுந்த கிறிஸ்து இனி மரிப்பதில்லை; மரணம் இனி அவரை ஆண்டுகொள்வதில்லை.

அவர் மரித்து, பாவத்திற்கென்று ஒரே தரம் மரித்தார்; அவர் பிழைத்திருக்கிறது, தேவனுக்கென்று பிழைத்திருக்கிறார். அப்படியே நீங்களும் உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். ரோமர் 6:9

கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார்.

மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று.

ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். 1 கொரி. 15:20

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்; மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

# ஆதித்திருச்சபை ஆராதனை முறை கர்த்தருடைய இராப்போஜனமாகிய பரிசுத்த நற்கருணை ஆராதனை

*ஜனங்கள் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் மேஜைக்கு வடபக்கத்தினின்று கர்த்தருடைய ஜெபத்தையும் அதற்கு பின்வரும் சுருக்க ஜெபத்தையும் சொல்ல வேண்டும்.*

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ஆமென்.

## சுருக்க ஜெபம்

எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீடத்தில் பரிபூரணமாய் அன்புகூறவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகைளச் சுத்தம் பண்ணியருளும். ஆமென்.

**ஆராதனை நடத்துகிறவர்** : தேவன் திருவுளம்பற்றிச் சொல்லிய வார்த்தைகளாவன: உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

**மறுமொழி** : **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

**ஆரா.** : மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு

விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம். நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராகிய நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்து, பிதாக்களுடைய பாவங்களைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம், நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவனுக்கோ ஆயிரம் தலைமுறை மட்டும் இரக்கஞ் செய்கிறவராயிருக்கிறேன்.

**மறுமொழி** : **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

**ஆரா.** : உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக. கர்த்தர் தமது நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

**மறுமொழி** : **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

**ஆரா.** : ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருக ஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்ய வேண்டாம். கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஆகையால் கர்த்தர் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

| | | |
|---|---|---|
| **மறுமொழி** | : | **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.** |
| **ஆரா.** | : | உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக. |
| **மறுமொழி** | : | **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.** |
| **ஆரா.** | : | கொலை செய்யாதிருப்பாயாக. |
| **மறுமொழி** | : | **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.** |
| **ஆரா.** | : | விபச்சாரம் செய்யாதிருப்பாயாக. |
| **மறுமொழி** | : | **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.** |
| **ஆரா.** | : | களவு செய்யாதிருப்பாயாக. |
| **மறுமொழி** | : | **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.** |
| **ஆரா.** | : | பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக. |
| **மறுமொழி** | : | **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.** |
| **ஆரா.** | : | பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக. |
| **மறுமொழி** | : | **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணங்கள் எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறோம்.** |

### *அல்லது*

### பரி. மாற்கு 12:29-31

**ஆராதனை நடத்துகிறவர்** : நமது இரட்சகராகிய கிறிஸ்து திருவுளம்பற்றிச் சொல்லிய வார்த்தைகளாவன: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர். உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்புகூறுவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவது போல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்.

**மறுமொழி** : **கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.**

*பின்பு அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபத்தைச் சொல்ல வேண்டும். அது முடிந்தவுடனே, குருவானவர் வாசிக்க வேண்டிய நிருப வாக்கியம். (அல்லது நிருப வாக்கியத்துக்குப் பதிலாக நியமித்திருக்கிற வேத வாக்கியம்) இன்ன ஆகமம், இன்ன அதிகாரம், இன்ன வாக்கியம் முதல் அடங்கியிருக்கிறதென்று சொல்லி, நிருப வாக்கியத்தை வாசிக்க வேண்டும். வாசித்த பின்பு, நிருப வாக்கியம் வாசித்து முடிந்ததென்று சொல்ல வேண்டும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் எழுந்து நிற்க, அவர் பரிசுத்த சுவிசேஷ வாக்கியம், இன்ன ஆகமம், இன்ன அதிகாரம், இன்ன வாக்கியமுதல் அடங்கியிருக்கிறதென்று சொல்லி சுவிசேஷ வாக்கியத்தையும் வாசிக்க வேண்டும். வாசித்த பின்பு, ஜனங்கள் இன்னும் நின்று கொண்டிருக்க, பின் வருகிற விசுவாசப் பிரமாணத்தைப் பாட அல்லது சொல்ல வேண்டும்.*

**வானத்தையும் பூமியையும், காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லவற்றையும் படைத்திருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஓரே தேவனை விசுவாசிக்கிறேன்.**

**ஓரே கர்த்தருமாய், தேவனுடைய ஓரே பேரான குமாரனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே தமது பிதாவினாலே ஜெநிப்பிக்கப்பட்டவர், தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய் தேவனில் மெய் தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெநிப்பிக்கப்பட்டவர். பிதாவோடே ஓரே தன்மையுடையவர், சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் அவதரித்து மனுஷனானார்; நமக்காக பொந்தியுபிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம்பண்ணப்பட்டார்; வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்;**

பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார். அவருடைய ராஜியத்துக்கு முடிவில்லை.

கர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் கூடத் தொழுது ஸ்தோத்தரிக்கப்படுகிறவருமாய், தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமென்

***பின்பு, குருவானவர் கர்த்தருடைய மேசையினிடத்திற்குப் போய், காணிக்கை வாசகம் என்னும் பின்வரும் வாக்கியங்களில் தமக்குத் தகுதியென்று தோன்றுகிற ஒன்றையாவது சிலவற்றையாவது வாசிக்க வேண்டும்.***

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. பரி. மத்தேயு 5:16

பூமியிலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம். இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்; பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது, துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. பரி. மத்தேயு 6:19,20

மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள். இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம். பரி. மத்தேயு 7:12

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. பரி. மத்தேயு 7:21

சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயும் அல்ல, கட்டாயமாயும் அல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொரிந்தியர் 9:6,7

நன்மை செய்யவும், தானதர்மம் பண்ணவும் மறவாதிருங்கள். இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். எபிரேயர் 13:16.

உன் திராணிக்குத் தக்கதாய் தர்ம சிந்தையுள்ளவனாயிரு, உனக்கு மிகுதியாயிருந்தால் மிகுதியாய்க் கொடு. உனக்கு கொஞ்சமிருந்தால் அந்தக் கொஞ்சத்தில் சந்தோஷமாய்க் கொடுக்க ஜாக்கிரதையாயிரு. இப்படிச் செய்வதினாலே அவசியம் வருங்காலத்துக்கு நற்பலனைக் கூட்டிச் சேர்க்கிறாய். தோபித்து 4:8

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். நீதி. 19:17

சிறுமைப்பட்டவன் மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். சங்கீதம் 41:1

குரு : தேசத்தில் அதிகாரம் வகிப்பவர்களுக்காக, விசேஷமாய் இந்திய குடியரசுத் தலைவராகிய........................ க்காகவும், மாநில ஆளுநராகிய .................................. க்காகவும் ஜெபிக்கக்கடவோம்.

குரு : கர்த்தாவே எங்கள் ஜெபத்தைக் கேளும்

மறுமொழி : **எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக**

### *கிறிஸ்து சபை அனைத்துக்காகவும் ஜெபம் பண்ணக்கடவோம்*

எல்லா மனிதருக்காகவும் ஜெபங்களையும், விண்ணப்பங்களையும் செய்து தோத்திரங்களைச் செலுத்த வேண்டுமென்று உமது பரிசுத்த அப்போஸ்தலனைக் கொண்டு கற்பித்தருளின சர்வ வல்லமையும் நித்திய ஜீவனுமுள்ள தேவனே மகத்துவம் பொருந்திய தேவரீருடைய சந்நிதியில் (*நாங்கள் செலுத்துகிற தர்மங்களையும், காணிக்கைகளையும் இரக்கமாய் ஏற்றுக்கொண்டு) நாங்கள் செய்கிற ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருள வேண்டுமென்று மனத்தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறோம். எங்குமுள்ள திருச்சபைக்குத்

தேவரீர் உண்மையும் ஐக்கியமும் ஏக சிந்தையுமுள்ள மனதை இடைவிடாமல் அருளிச் செய்து உம்முடைய திருநாமத்தை அறிக்கையிடுகிற யாவரும் உமது பரிசுத்த வசனத்தின் சத்தியத்தைக் குறித்து இசைந்த மனதுள்ளவர்களாயிருந்து ஐக்கியத்திலும் தேவ பக்தியுள்ள அன்பிலும் நிலைத்து வாழ்ந்திருக்கும்படி அனுக்கிரகஞ் செய்யும்.

சகல தேசத்தாரையும் நீதியின் பாதையிலும், சமாதான வழியிலும் நடத்தியருள வேண்டுமென்றும், பிரதமர், அதிகாரிகள் எல்லாரும் தங்கள் அதிகாரத்திற்குட்பட்ட உம்முடைய ஜனங்களைத் தேவ பக்தியோடும் சாந்தத்தோடும் ஆளும்படி அவர்களுக்குக் கட்டளையிட வேண்டுமென்றும் உம்மைப் பிரார்த்திக்கிறோம். எங்கள் நாடு உண்மையிலும் நீதியிலும் உறுதிப்பட்டு, சுயாதீனத்திலும் ஒழுங்கிலும் நிலைபெற்று, ஐக்கியத்திலும், சமாதானத்திலும் காக்கப்படும்படி இந்நாட்டு அதிகாரிகள் யாவருக்கும் ஞானமும், நீதியும் இரக்கமுமுள்ள ஆவியை அருளிச் செய்ய உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.

பரம பிதாவே, உமது திருச்சபையின் பணிவிடைக்காரர் யாவருக்கும் விசேஷமாய் உமது அடியாராகிய கிறிஸ்துதாஸ் எனும் எங்கள் பேராயரும், ...................... என்னும் பிரதமப் பேராயரும், தென் இந்திய திருச்சபையில் பணிவிடை செய்ய அழைக்கப்பட்டிருக்கும் பேராயர்கள், ஆயர்கள், உதவி ஆயர்கள் எல்லாருக்கும் உமது கிருபையை அருளிச் செய்யும். அவர்கள் அனைவரும் தங்கள் நடத்தையினாலும், போதகத்தினாலும் சத்தியமும் ஜீவனுமுள்ள உமது வசனத்தைப் பிரசித்தப்படுத்தி உமது பரிசுத்த சாக்கிரமெந்துகளை ஒழுங்காயும், செம்மையாயும் கொடுக்க அவர்களுக்குக் கிருபை அளியும்.

எல்லா நாடுகளிலும் உமது நற்செய்தி பரவும்படி உழைத்து வரும் உம்முடைய ஊழியரை வழிநடத்தி ஆசீர்வதித்தருளும். எல்லாக் கல்வி நிறுவனங்களையும் உமது ஆவியானவரின் ஒளியினால் பிரகாசிப்பித்து பூமி முழுவதும் உமது சத்தியத்தை அறிகிற அறிவினால் நிரம்பும்படி அருள்புரியும்.

உம்முடைய ஜனங்கள் எல்லாரும், சிறப்பாக இவ்விடத்தில் கூடி வந்திருக்கிற இந்தச் சபையாரும். சாந்த இருதயத்தோடும், தகுந்த வணக்கத்தோடும், உமது பரிசுத்த வசனத்தைக் கேட்டு உட்கொண்டு, தங்கள் வாழ்நாளெல்லாம் பரிசுத்தமும் நீதியும் உள்ளவர்களாய் உமக்கு ஊழியம் செய்ய, அவர்களுக்கு உமது பரம கிருபையைக் கொடுத்தருளும். நிலையில்லாத இந்த ஜீவ காலத்தில் துன்பம், துக்கம், வறுமை,

வியாதி முதலான உபத்திரவங்களால் வருத்தப்படுகிற யாவரையும் உமது தயவினாலே தேற்றி ஆதரிக்க வேண்டுமென்று பணிவாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம்.

உம்மிடத்தில் விசுவாசமும், பயபக்தியும் உள்ளவர்களாய் ஜீவித்துப்போன உமது அடியார் எல்லாரையும், கர்த்தாவே, உமது கிருபையுள்ள பராமரிப்புக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவர்களுக்குத் தேவரீர் நித்திய வெளிச்சமும் சமாதானமும் கட்டளையிட்டருளும்.

தங்கள் தங்கள் காலங்களில் உமது கிருபா பாத்திரங்களாக தேவரீரால் தெரிந்துகொள்ளப்பட்ட சகல பரிசுத்தவான்களுக்காகவும் நாங்கள் இப்பொழுது உம்மை ஸ்தோத்தரித்து, உமக்கு முழு இருதயத்தோடு நன்றி செலுத்துகிறோம். நாங்கள் அவர்களின் ஐக்கியத்தில் களிகூர்ந்து, அவர்கள் காட்டிய நல்ல மாதிரியைப் பின்பற்றி, அவர்களுடன் நாங்களும் உமது பரம ராஜ்யத்தில் பங்குபெறும்படி எங்களுக்குக் கிருபை செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

பிதாவே, உம்மோடு பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக சதா காலங்களிலும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் ஒரே மத்தியஸ்தரும், காரிய கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இந்த நன்மைகளுக்காக உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

***அல்லது***

## இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்து சபை அனைத்துக்கும் சீருண்டாக ஜெபம் பண்ணக்கடவோம்

எல்லா மனிதருக்காகவும் ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் செய்து, ஸ்தோத்திரங்களைச் செலுத்த வேண்டுமென்று, உமது பரிசுத்த அப்போஸ்தலனைக் கொண்டு கற்பித்தருளின சர்வ வல்லமையும் நித்திய ஜீவனுமுள்ள தேவனே, மகத்துவம் பொருந்திய தேவரீருடைய சந்நிதியில் (*நாங்கள் செலுத்துகிற தர்மங்களையும் காணிக்கைகளையும் இரக்கமாய் ஏற்றுக்கொண்டு) நாங்கள் செய்கிற ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருள வேண்டுமென்று மனத்தாழ்மையாய் வேண்டிக் கொள்ளுகிறோம். எங்குமுள்ள திருச்சபைக்குத்

***(*தர்மங்களும் காணிக்கைகளும் இராவிட்டால், நாங்கள் செலுத்தியிருக்கிற தர்மங்களையும் காணிக்கைகளையும் இரக்கமாய் ஏற்றுக்கொண்டு என்கிற வார்த்தைகளை வாசியாமல் விடவேண்டும்.)***

தேவரீர் உண்மையும் ஐக்கியமும் ஏகசிந்தையுமுள்ள மனதை இடைவிடாமல் அருளிச் செய்து; உம்முடைய திருநாமத்தை அறிக்கையிடுகிற யாவரும் உமது பரிசுத்த வசனத்தின் சத்தியத்தைக் குறித்து இசைந்த மனதுள்ளவர்களாயிருந்து, ஐக்கியத்திலும் தேவ பக்தியுள்ள அன்பிலும் நிலைத்து வாழ்ந்திருக்கும்படி அனுக்கிரகஞ் செய்யும். கிறிஸ்தவர்களான ஆளுகிறவர்கள், அதிகாரிகள் எல்லாரையும் இரட்சித்துக் காப்பாற்ற வேண்டுமென்றும்; சகல நாட்டாரையும் நீதியும் சமாதானமுமான வழியில் நடத்தவும், பட்சபாதமில்லாமல் உண்மையாய் நீதியைச் செலுத்தி, துன்மார்க்கத்தைத் தண்டனையினாலே அடக்கி, உமது சத்திய வேதத்தையும் சன்மார்க்கத்தையும் நிலைப்படுத்தி வரும்படி, சகல கிறிஸ்தவ அதிகாரிகளின் இருதயங்களையும் ஆண்டு நடத்தியருள வேண்டுமென்று தேவரீரை வேண்டிக் கொள்ளுகிறோம். பரம பிதாவே, பேராயர்கள், ஆயர்கள் எல்லாரும் தங்கள் நடக்கையினாலும் போதகத்தினாலும் சத்தியமும் ஜீவனுமுள்ள உமது வசனத்தைப் பிரசித்தப்படுத்தி, உமது பரிசுத்த சாக்கிரமெந்துகளை ஒழுங்காயும், செம்மையாயும் கொடுக்க அவர்களுக்குக் கிருபை அளியும். உம்முடைய ஜனங்கள் எல்லாரும், விசேஷமாய் இவ்விடத்தில் கூடி வந்திருக்கிற இந்தச் சபையாரும் சாந்த இருதயத்தோடும் தகுந்த வணக்கத்தோடும், உமது பரிசுத்த வசனத்தைக் கேட்டு உட்கொண்டு, தங்கள் வாழ்நாளெல்லாம் பரிசுத்தமும், நீதியும் உள்ளவர்களாய் உமக்கு ஊழியம் செய்ய அவர்களுக்கு உமது பரம கிருபையைக் கொடுத்தருளும். நிலையில்லாத இந்த ஜீவ காலத்தில் துன்பம், துக்கம், வறுமை, வியாதி முதலான உபத்திரவங்களால் வருத்தப்படுகிற யாவரையும் உமது தயவினாலே தேற்றி ஆதரிக்க வேண்டுமென்று பணிவாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். உம்மிடத்தில் விசுவாசமும், பயபக்தியும் உள்ளவர்களாய் ஜீவித்துப்போன உமது அடியார் எல்லாருக்காகவும் நாங்கள் உம்முடைய பரிசுத்த நாமத்தைத் துதித்து; அவர்களோடே நாங்களும் உமது பரம ராஜ்யத்தில் பங்கு பெறும்படி, அவர்கள் காட்டிய நல் மாதிரியைப் பின்பற்ற எங்களுக்குக் கிருபை செய்தருள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். பிதாவே, எங்கள் ஒரே மத்தியஸ்தரும், காரிய கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இந்த நன்மைகளுக்காக உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

*குருவானவர் பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேருகிறவர்களுக்குச் சொல்ல வேண்டியதாவது:*

உங்கள் பாவங்களினிமித்தம், முழு இருதயத்தோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து, இனி தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு புதிதாக்கப்பட்டவர்களாய் அவருடைய பரிசுத்த மார்க்கத்தில் நடப்போம் என்று தீர்மானித்திருக்கிற நீங்கள் விசுவாசத்தோடு சேர்ந்து, உங்களுக்கு ஆறுதல் உண்டாக இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கிக் கொள்ளுங்கள். அதற்காகப் பணிவாய் முழங்கால்படியிட்டுச் சர்வ வல்லமையுள்ள தேவனை நோக்கி உங்கள் பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடுங்கள்.

சர்வ வல்லமைய்ுள்ள தேவனே, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவே, சகலத்தையும் சிருஷ்டித்தவரே, சகல மனிதருக்கும் நியாயாதிபதியே, தேவரீருடைய நீதியுள்ள உக்கிர கோபாக்கினை எங்கள் மேல் வரத்தக்கதாக, நாங்கள் அடிக்கடி நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியையினாலும், உம்முடைய திவ்விய மகத்துவத்துக்கு விரோதமாய் அகங்கரித்துச் செய்த பலவிதமான பாவங்களையும், அக்கிரமங்களையும் அறிக்கையிட்டுப் புலம்புகிறோம். இந்தக் குற்றங்களைக் குறித்து நாங்கள் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, முழுமனதோடு துக்கப்படுகிறோம். அவைகளை நினைத்து வேதனைப் படுகிறோம். அவைகள் எங்களாலே சுமக்கப்படாத பாரம், எங்களுக்கு இரங்கும். மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, எங்களுக்கு இரங்கும். நாங்கள் செய்த யாவையும், உமது குமாரனும், எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்களுக்கு மன்னியும். உமது நாமத்துக்குக் கனமும் மகிமையும் உண்டாக, நாங்கள் புதிதாக்கப்பட்டவர்களாய் நடந்து வரும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்க் கட்டளையிட்டருளும். ஆமென்.

*அப்பொழுது குருவானவர் (பேராயர் இருந்தால், அவர்) எழுந்து நின்று, ஜனங்கள் முகமாய்த் திரும்பி, பின்வரும் பாவ விமோசனத்தைக் கூறவேண்டும்.*

உத்தம மனஸ்தாபத்தோடும், உண்மையான விசுவாசத்தோடும், தம்மிடத்திற்கு மனந்திரும்புகிற யாவருக்கும் பாவமன்னிப்பை அருளிச் செய்வோம் என்று மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தம் செய்திருக்கிற நம்முடைய பரமபிதாவாகிய சர்வ வல்லமையுள்ள தேவன், நம்முடைய கர்த்தராகிய இயேசு

கிறிஸ்துவினிமித்தம் உங்களுக்கு இரங்கி, உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து அவைகளினின்று உங்களை விடுதலையாக்கி, சகல நன்மையிலும் உங்களை உறுதிப்படுத்தி நிலைநிறுத்தி, உங்களை நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. ஆமென்.

***பின்பு குருவானவர் சொல்வது:***

தம்மிடத்தில் உண்மையாய் மனந்திரும்புகிற யாவருக்கும் நமது இரட்சகராயிக கிறிஸ்து திருவுளம் பற்றுகிற ஆறுதலான வார்த்தைகளைக் கேளுங்கள்.

வருத்தப்பட்டு பாரஞ் சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். பரி. மத்தேயு11:28.

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். பரி.யோவோன் 3:16

பரிசுத்த பவுல் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்:

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது. 1 தீமோ. 1:15

பரிசுத்த யோவான் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்:

ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே. 1 யோவான் 2:1

***பின்னும் குருவானவர் சொல்வதாவது :***

குரு : உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்

மறுமொழி: **எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.**

குரு : நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

ஜனங்கள் : **அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.**

***அப்பொழுது குருவானவர் கர்த்தருடைய மேசையிடமாய்த் திரும்பிச் சொல்வது:***

கர்த்தாவே * பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் தேவரீருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறது எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

ஆதலால் தூதரோடும், பிரதான தூதரோடும் பரம சபை அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து, மேன்மைப்படுத்தி, சேனைகளின் கர்த்தராகிய தேவனே நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர். வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். ஆமென்.

# பரிசுத்த நற்கருணை விசேஷித்த முகவுரைகள்

## கிறிஸ்து பிறந்த பண்டிகைக்கும், பின்வரும் ஏழு நாட்களுக்கும் உரிய முகவுரை

சகல பாவமும் அற எங்களைச் சுத்திகரிப்பதற்கு, இதைப் போலொத்த ஒரு காலத்தில் ஆவியின் செயலினாலே பாவக்கறையில்லாமல் தம்முடைய தாயாராகிய கன்னிமரியாளுடைய தன்மையில் மெய் மனுஷனாகப் பிறக்கும்படி, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைக் தந்தருளினதற்காக விசேஷமாய் ஸ்தோத்திரஞ் செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும்....

## பிரசன்னத் திருநாளுக்கும், அதன் பின்வரும் ஏழு திருநாட்களுக்கும் உரிய முகவுரை

விசேஷமாக மனுஷரெல்லாரையும் அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான வெளிச்சத்தினிடத்திற்குக் கொண்டு வரும்படி தாம் தெரிந்து கொண்ட அழிவுக்குரிய மாம்ச தன்மையில் தமது மகிமையைப் பிரசன்னமாக்கச் சித்தங்கொண்ட எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும்....

**** அந்த நாளுக்கு விசேஷித்த முகவுரை இருக்குமாகில், அதை வாசிக்க வேண்டும். இல்லாவிட்டால், பின்வருவதை இவ்விடத்தில் சொல்ல வேண்டும்.***

## உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் வியாழக்கிழமைக்குரிய முகவுரை

விசேஷமாக, இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புகூர்ந்தபடியே முடிவு பரியந்தம் அவர்களிடத்தில் அன்பு கூர்ந்து, தம்முடைய மரணத்தினால் மீட்கப்பட்டுத் தம்முடைய உயிர்த்தெழுதலினால் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிற நாங்கள் தம்முடைய தெய்வீக சுபாவத்தில் பங்குபெறும் பொருட்டுத் தாம் பாடுபடுகிறதற்கு முந்தின இராத்திரியிலே தம் சீஷரோடு பந்தியிலிருக்கும்போது இந்தப் பரிசுத்த இரகசியங்களை ஏற்படுத்தின எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மைத் துதிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும்...

## பரி. கன்னிமரியாள் சுத்திகரிப்புத் திருநாள், மங்களவாக்குத் திருநாட்களுக்குரிய முகவுரை

எங்களுக்கு இரட்சிப்பு உண்டாகச் சகல பாவமும்அற எங்களைச் சுத்திகரிப்பதற்குப் பரிசுத்த ஆவியின் செயலினாலே பாவக்கறையில்லாமல் தம்முடைய தாயாராகிய கன்னிமரியாளுடைய தன்மையில் மெய் மனுஷனாகப் பிறக்கும்படி உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைத் தந்தருளினதற்காக ஸ்தோத்திரஞ் செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும்...

## கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கும், அதன் பின்வரும் ஏழுநாட்களுக்கும் உரிய முகவுரை

விசேஷமாக, உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மகிமையோடே உயிர்த்தெழுந்ததினிமித்தம் உம்மைத் துதிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். எங்களுக்காகப் பலியிடப்பட்டு உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்த்த மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டி அவரே. தம்முடைய மரணத்தினாலே மரணத்தை கழித்து தம்முடைய உயிர்த்தெழுதலினாலே நித்திய ஜீவனைத் திரும்பவும் தந்தருளினார். ஆதலால் தூதரோடும்...

## கிறிஸ்து பரமண்டலத்துக்கேறின திருநாளுக்கும் அதன் பின்வரும் ஏழு நாட்களுக்கும் உரிய முகவுரை

சிறந்த மகிமையோடே உயிர்த்தெழுந்து தமது அப்போஸ்தலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாகத் தரிசனமாகி, அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பரமண்டலத்துக்கேறி, தாம் இருக்கிற இடத்திலே நாங்களும் ஏறிப்போய்ச் சேரவும் தம்மோடேகூட மகிமையிலே ஆளுகை செய்யவும், எங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணப் போயிருக்கிற உம்முடைய மிகவும் பிரியமான குமாரனாகிய எங்கள் கர்த்தர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தக் கடமைய்ளள வர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும்...

## பரிசுத்த ஆவியின் திருநாளுக்கும், அதன் பின்வரும் ஆறு நாட்களுக்கும் உரிய முகவுரை

எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து திருவாய் மலர்ந்தருளிய வாக்குத்தத்தத்தின்படியே, பரிசுத்த ஆவியானவர் இதைப்போலொத்த ஒரு காலத்தில், பலத்த காற்றைப்போல வானத்திலிருந்து சடிதியாய் வரும் பெரிய சத்தத்தோடு அக்கினிமயமான நாவுகள் போன்ற ரூபமாய் இறங்கி, அப்போஸ்தலர்மேல் தங்கி, அவர்களுக்குப் போதித்து, அவர்களைச் சகல சத்தியத்திலும் நடத்தி, அவர்களுக்குப் பற்பல மொழிகளைப் பேசும் வரத்தையும், எல்லா நாட்டாருக்கும் சுவிசேஷத்தை விடாமுயற்சியாய்ப் பிரசங்கிக்கதக்கதாக தைரியத்தையும் பக்தி வைராக்கியத்தையும் அநுக்கிரகித்தும் அல்லாமல்; அதினாலே நாங்கள் இருளுக்கும் மருளுக்கும் விலகி, உம்மையும் உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறிகிற மெய்ஞ்ஞான வெளிச்சத்தில் சேரும்படி கிருபை செய்ததினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மைத் துதிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும்...

***அல்லது***

எல்லா வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு எழுந்தருளி உமது மகிமையுள்ள வலது பாரிசத்தில் வீற்றிருக்கிற எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மைத் துதிக்கக் கடமையுள்ளவர் களாயிருக்கிறோம். அவர் உமது ஆவியின் மகிமையான வல்லமையினால் நித்தியமுள்ள

சுவிசேஷ சந்தோஷம் உலகமெங்கும் பிரசித்தமாகும்படி இதை போலொத்த ஒரு காலத்தில் பரிசுத்தமும் உயிர்ப்பிக்கிறதுமான ஆவியைச் சபையின் மேல் பொழிந்தருளினார். அதினாலே நாங்கள் இருளுக்கும் மருளுக்கும் விலகி உம்மையும் உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவையும் அறிகிற மெய்ஞ்ஞான வெளிச்சத்தில் சேரும்படி கிருபை செய்தருளியிருக்கிறீர். ஆதலால் தூதரோடும்…

## கர்த்தர் மறுரூபமான திருநாளுக்கு உரிய முகவுரை

மாம்சத்தில் தோன்றிய வார்த்தையின் மகத்துவத்துக்குச் சாட்சிகளாகத் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் கண்களுக்கு முன்பாகப் பரிசுத்த பர்வதத்திலே அவருடைய தெய்வீக மகிமை பிரகாசித்ததுமன்றி இவரே என்னுடைய நேசகுமாரனெனப் பரத்திலிருந்து திருவாய் மொழிந்தருளினார். ஆதலால் தூதரோடும்…

## சகல பரிசுத்தவான்களின் திருநாள், பரி. யோவான் ஸ்நானகன் திருநாள், அப்போஸ்தலர், சுவிசேஷகர் முதலியவர்களின் திருநாட்களுக்குரிய முகவுரை

மேகம் போன்ற திரளான சாட்சிகளால் சூழப்பட்டிருக்கிற நாங்கள் எங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடி அவர்களோடுகூட மகிமையின் வாடாத கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளும்படி, உம்முடைய பரிசுத்தவான்களின் நீதியில் எங்களுக்குத் தேவ பக்தியுள்ள நடக்கைக்கு முன் மாதிரியையும் அவர்கள் பெற்றிருக்கும் மோட்சானந்த பாக்கியத்தில் எங்கள் அழைப்பின் நம்பிக்கைக்கு மகிமையான அத்தாட்சியையும் அருளியிருக்கிறீர். ஆதலால் தூதரோடும்…

## திரித்துவத் திருநாளுக்கு மாத்திரம் உரிய முகவுரை

தேவரீர் ஒரே தேவனும் ஒரே கர்த்தருமாயிருக்கிறீர்; ஒருவராய் மாத்திரம் இராமல் ஒரே தத்துவமுடைய மூவருமாயிருக்கிறீர். பிதாவினுடைய மகிமை எத்தன்மையதென்று நாங்கள் விசுவாசிக்கிறோமோ, குமாரனுடைய மகிமையும் பரிசுத்த ஆவியினுடைய மகிமையும்

யாதாரு வித்தியாசமும் குறைவுமின்றி அத்தன்மையதென்றே விசுவாசிக்கிறோம். ஆதலால் தூதரோடும்...

*மேற் சொல்லிய முகவுரைகளில் ஒன்றை வாசித்தவுடனே பாட அல்லது சொல்லவேண்டியதாவது.*

ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடும் பரம சபை அனைத்தோடும், நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி, சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமையுண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மை ஸ்தோத்தரிக்கிறோம். ஆமென்.

*அப்பொழுது குருவானவர் மேசையருகே முழங்கால்படியிட்டு நற்கருணை வாங்கப் போகிற எல்லாருடைய நாமத்தினாலும் சொல்லவேண்டிய ஜெபமாவது:*

இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல் தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேஜையின் கீழ் விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல; ஆனாலும் தேவரீர் எப்பொழுதும் இரக்கஞ்செய்கிற இலட்சணமுடைய மாறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதியாத சரீரத்தாலும், இரத்தத்தாலும், எங்கள் பாவமுள்ள சரீரமும், ஆத்துமாவும் சுத்தமாகி எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும், அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கு ஏற்றவிதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ண எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

*குருவானவர் மேசைக்கு முன்பாக நின்று தடையில்லாமல் விநயமாய் ஜனங்களுக்கு முன்பாக அப்பத்தைப் பிட்கவும், கையிலே பாத்திரத்தை எடுத்துக் கொள்ளவும் தக்கதாக, அப்பத்தையும், திராட்சரசத்தையும் ஒழுங்காய் வைத்து, பின்வரும் பிரதிஷ்டை ஜெபத்தைச் சொல்ல வேண்டும்.*

சர்வ வல்லமையுள்ள தேவனே, எங்கள் பரமவிதாவே, தேவரீர் எங்களுக்கு உருக்கமாய் இரங்கி, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து எங்களை மீட்டுக் கொள்ளும்படி அவரைத் தந்தருளினீரே. அவர் சிலுவையிலே ஒரே தரம் தம்மைத் தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்கு நிறைவும், பூரணமும், போந்ததுமான பலியையும் காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தினதுமல்லாமல்; தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமளவும் நாங்கள் அதை அநுசரித்து வரும்படி தமது சுவிசேஷத்தில் கட்டளையிட்டிருக்கிறாரே. இரக்கமுள்ள கர்த்தாவே எங்கள் ஜெபத்தைக் கேட்டருளி, உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த நியமத்தின்படி, நாங்கள் அவருடைய பாடுகளையும், மரணத்தையும், நினைவுகூர்ந்து, உமது சிருஷ்டி பதார்த்தங்களாகிய இந்த அப்பத்தையும், திராட்சரசத்தையும் பெற்றுக்கொள்ளும்பொது, அவருடைய பரிசுத்தமுள்ள சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் பங்குள்ளவர்களாகும்படி கிருபை செய்தருள வேண்டுமென்று மிகுந்த தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து ஸ்தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு, சீஷர்களுக்கு கொடுத்து, நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். அப்படியே இராப்போஜனம் பண்ணினபின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து, நீங்கள் எல்லோரும் இதிலே பானம்பண்ணுங்கள்; இது பாவமன்னிப்புண்டாகும்படி, உங்களுக்காகவும், அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது; இதைப் பானம் பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார். ஆமென்.

***அப்பத்தைக் கொடுக்கும்போது குருவானவர் சொல்ல வேண்டியதாவது:***

உனக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம். உன் சரீரத்தையும் ஆத்துமாவையும் நித்திய ஜீவனுக்கென்று காக்கக்கடவது. கிறிஸ்து உனக்காக மரணமடைந்தார் என்று நினைவு கூறும்படி, நீ இதை வாங்கிப் புசித்து விசுவாசத்தினால் உன் இருதயத்தில் நன்றியறியதலோடே அவரை உனக்கு ஆகாரமாய் உட்கொள்ளுவாயாக.

***பாத்திரத்தைக் கொடுக்கும்போது சொல்ல வேண்டியதாவது:***

உனக்காகச் சிந்தப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம். உன் சரீரத்தையும், ஆத்துமாவையும் நித்திய ஜீவனுக்கென்று காக்கக்கடவது. கிறிஸ்துவின் இரத்தம் உனக்காகச் சிந்தப்பட்டதென்று நினைவுகூரும்படி, இதைப் பானம்பண்ணி, நன்றியறிந்தவனாய்(ளாய்) இருப்பாயாக.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

***பின்பு சொல்ல வேண்டியதாவது.***

பரம பிதாவாகிய கர்த்தாவே, உமது அடியாராகிய நாங்கள் இப்பொழுது செலுத்தியிருக்கிற துதி தோத்திர பலியை இரக்கமாய் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று, தயவுள்ள பிதாவாகிய உம்மை முழுமனதோடே வேண்டிக் கொள்ளுகிறோம். உம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியத்தினாலும் மரணத்தினாலும், அவர்

திரு இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய், நாங்களும் மற்றுமுள்ள உம்முடைய சபை அனைத்தும் பாவ மன்னிப்பையும், அவர் பாடுகளினால் உண்டான மற்றெல்லா நன்மைகளையும், பெற்றுக்கொள்ளும்படி, தேவரீர் கிருபை செய்ய வேண்டுமென்ற தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறோம். கர்த்தாவே, சரீரமும், ஆத்துமாவுமாகிய எங்களை முழுவதும் தேவரீருக்குப் புத்தியும், பரிசுத்தமும், ஜீவனுமுள்ள பலியாக ஒப்புக்கொடுக்கிறோம். இப்பொழுது பரிசுத்த நற்கருணையில் பங்கு பெற்றிருக்கிற எங்கள் எல்லாரையும் தேவரீர் உமது கிருபையினாலும் பரம ஆசீர்வாதத்தினாலும் நிரப்பியருள வேண்டுமென்று பணிவாய் வேண்டிக் கொள்ளுகிறோம். அநேகவிதமாய் இருக்கிற எங்கள் பாவங்களினாலே தேவரீருக்கு எந்தப் பலியும் செலுத்துவதற்கு நாங்கள் அபாத்திரராயிருந்தும், எங்கள் பாத்திராபாத்திரத்தைத் தேவரீர் கவனியாமல், எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தம் எங்கள் குற்றங்களை மன்னித்து, எங்கள் கடமையின்படி நாங்கள் செலுத்தியிருக்கிற பணிவிடையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். அவரோடும் பரிசுத்த ஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற தேவரீருக்கு, அவர் மூலமாய்ச் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமென்.

***அல்லது***

நித்திய ஜீவியாயிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, இந்தப் பரிசுத்த இரகசியங்களை ஏற்றவிதமாய் வாங்கியிருக்கிற எங்களை, தேவரீர் உம்முடைய குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதியாத திருச்சரீரமும், இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தினால் போஷித்ததற்காக உம்மைத் துதிக்கிறோம். தேவரீர் எங்கள் மேல் தயைகூர்ந்து கிருபாகடாட்சம் வைத்திருக்கிறதையும், உத்தம விசுவாசிகளின் கூட்டமும் உமது நேச குமாரனுடைய ஞான சரீரமுமாகிய சபையில் நாங்கள் அவயங்களாய் இணைக்கப்பட்டிருக்கிறதையும், அவருடைய அருமையான பாடுகளினாலும், மரணத்தினாலும், உண்டான புண்ணியத்தினாலே, உமது நித்திய ராஜ்யத்துக்கு நாங்கள் சுதந்தராயிருக்கிறதையும், இந்த நற்கருணையினாலே, எங்களுக்கு நிச்சயப்படுத்தினதற்காக முழு இருதயத்தோடே

உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். பரம பிதாவே, நாங்கள் இந்தப் பரிசுத்த ஐக்கியத்தில் நிலைத்திருந்து நாங்கள் செய்யும்படி தேவரீர் நியமித்திருக்கிற நற்கிரியைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற, உமது கிருபையையும் தந்தருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை முன்னிட்டு மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும் சகல கனமும், மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமென்.

*பின்பு சொல்ல அல்லது பாட வேண்டியதாவது:*

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே, பரம ராஜாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழுகிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம். உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.

கர்த்தராகிய ஒரேபேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்கள் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும். தேவனாகிய பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவரே, எங்களுக்கு இரங்கும். நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர், கிறிஸ்துவே தேவரீர் ஒருவரே பரிசுத்தர் ஆவியோடே தேவனாகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவராயிருக்கிறீர். ஆமென்.

*அப்பொழுது ஆயர், (பேராயர் இருந்தால் அவர்) பின்வரும் ஆசீர்வாதத்தைச் சொல்லி, ஜனங்களை அனுப்புவிக்க வேண்டும்.*

எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும், அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும், அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயத்தையும், சிந்தையையும் காக்கக்கடவது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியுமாகிய, சர்வ வல்லமை பொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமென்.

*நற்கருணை பரிமாறாமலிருக்கும் நாட்களில், 'காணிக்கை வாசகம்' என்னும் வாக்கியங்களுக்குப் பின்பு வாசிக்க வேண்டிய சுருக்க ஜெபங்கள், அந்நாட்களில் இரண்டொரு ஜெபங்களை வாசிக்கவும். அல்லாமலும், அவசியமிருக்குமாகில் இவைகளை காலை மாலை ஜெப ஒழுங்கில் வருகிற சுருக்க ஜெபங்களுக்குப் பின்பும், நற்கருணை ஒழுங்குக்கும் லித்தானியாவுக்குப் பின்பும் ஆராதனை நடத்துகிறவருக்கு இஷ்டமானபடி வாசிக்க வேண்டும்.*

கர்த்தாவே, சாவுக்கினமான இந்த ஜீவ காலத்தில் மாறி மாறி வருகிற சுகதுக்கங்களிலெல்லாம் உமது அடியாராகிய நாங்கள் உமது சம்பூரண கிருபையினாலும், சகாயத்தினாலும் எப்பொழுதும் காக்கப்படும்படி, இப்பொழுது நாங்கள் செய்கிற விண்ணப்பங்களையும். ஜெபங்களையும் இரக்கமாய்க் கேட்டு, நாங்கள் நித்திய இரட்சிப்பைப் பெறத்தக்கதாக, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் எங்களை ஏவி நடத்தியருளும். ஆமென்.

சர்வ வல்லமையுள்ள ஆண்டவரே, நித்திய தேவனே, நாங்கள் சரீரப்பிரகாரமாகவும், ஆத்துமப் பிரகாரமாகவும், உமது மிகுந்த வல்லமையினால் இப்பொழுதும் எப்பொழுதும் காக்கப்படும்படி, உமது நியாயப்பிரமாணங்களின் வழியிலே நடந்து, உமது கற்பனைகளுக்கேற்ற கிரியைகளைச் செய்துவர, எங்கள் இருதயத்தையும் சரீரத்தையும் பரிசுத்தப்படுத்தி, ஆண்டு நடத்த வேண்டுமென்று எங்கள் கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, இன்று நாங்கள் காதாலே கேட்ட வாக்கியங்கள் பலனற்றதாய்ப் போகாமல், உம்முடைய

நாமத்துக்குக் கனமும், புகழும் உண்டாவதற்கு ஏதுவாக நன்னடக்கையாகிய கனியைக் கொடுக்கும்படி, உம்முடைய கிருபையால் அந்த வாக்கியங்களை எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஆண்டவரே, நாங்கள் என்ன கிரியைகளைச் செய்தாலும் உமக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும், கடைசியாய் உமது இரக்கத்தினாலே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ளவும் நாங்கள் செய்வதெல்லாவற்றிலும் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உமது கிருபாகடாட்சத்தோடே எங்களுக்கு முந்திக்கொண்டு இடைவிடாத உமது சகாயத்தினாலே எங்களை நடத்தியருளும். ஆமென்.

சர்வ வல்லமையுள்ள தேவனே, சகல ஞானத்திற்கும் காரணரே, நாங்கள் வேண்டிக்கொள்வதற்கு முன் எங்கள் அவசரங்களையும், வேண்டிக்கொள்ளுகையில் எங்கள் அறியாமையையும் நீர் அறிந்திருக்கிறீர். தேவரீர் எங்கள் பலவீனங்களைப் பார்த்து இரங்கி, அபாத்திரராகிய நாங்கள் துணிந்து கேட்கக்கூடாதவைகளையும், குருட்டாட்டமுள்ளவர்களாகிய நாங்கள் கேட்கத் தெரியாதவைகளையும், உம்முடைய குமாரனும், எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியத்தினிமித்தம் அநுக்கிரகித்தருளும். ஆமென்.

உம்முடைய குமாரனின் நாமத்தினாலே வேண்டிக் கொள்ளுகிறவர்களுடைய விண்ணப்பங்களைக் கேட்போம் என்று வாக்கருளியிருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, இப்பொழுது உம்மை நோக்கி ஜெபங்களையும், வேண்டுதல்களையும் செய்திருக்கிற எங்களுக்கு இரக்கமாய்ச்

செவிகொடுத்து, நாங்கள் உமது சித்தத்துக்கு ஏற்றபடி விசுவாசமாய்க் கேட்கிறவைகள் சம்பூரணமாய்க் கிடைப்பதினால் எங்கள் அவசரம் தீரவும், உம்முடைய மகிமை விளங்கவும் அவைகளைத் தந்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். ஆமென்.

# பரிசுத்த திருவிருந்து ஆராதனை

*ஒரு கீதம் அல்லது சங்கீதம் பாடலாம் அல்லது சொல்லலாம். பணிவிடைக்காரர் கர்த்தருடைய மேசையண்டை வரும்போது சபையார் நிற்க வேண்டும். ஆராதனையில் உபயோகிக்கப்படும் திருமறையைக் குருவாகிலும் அவருடன் இருப்பவரில் ஒருவராகிலும் தன் இருகைகளிலும் கொண்டு வந்து திருமேஜையிலாவது வாசிப்புப் பீடத்திலாவது வைக்க வேண்டும். குரு ஜனங்கள் முகமாய்த் திருமேஜைக்குப் பின் நிற்கலாம்.*

***சபையார் நின்றுகொண்டிருக்க குரு செல்வது :***

## பிரார்த்தனை செய்வோமாக

எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வ வல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், உமது பரிசுத்த ஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம் பண்ணியருள எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். ஆமென்.

*பின் எல்லாரும் சேர்ந்து பாட அல்லது சொல்ல வேண்டியது.*

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும் பூமியிலே சமாதானமும் மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே, பரம ராஜாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறோம்; உம்மைப் புகழுகிறோம்; உம்மைத் வணங்குகிறோம்; உம்மை மகிமைப் படுத்துகிறோம்; உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்குத் தோத்திரம் செலுத்துகிறோம்.

கர்த்தராயிருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.

உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்கள் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும். தேவனாகிய பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறவரே எங்களுக்கு இரங்கும்.

நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர், இயேசு கிறிஸ்துவே தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே, தேவனாகிய பிதாவின் மகிமையிலே, உன்னதமானவராயிருக்கிறீர். ஆமென்.

***அல்லது பின்வரும் புராதனப் பாட்டை மூன்றுதரம் பாடலாம் அல்லது சொல்லலாம்.***

**பரிசுத்த தேவனே,**
**பரிசுத்தமும் வல்லமையுமானவரே,**
**பரிசுத்தமும் நித்தியமுமானவரே,**
**எங்களுக்கு இரங்கும்**

**நாட்டை இராகம்** **ஏகதாளம்**

**பரிசுத்த தேவனே நித்தியமானவா**
**பரிபூரணனே வல்லமை நிறைந்தவா**
**பரிவுடன் இரங்குவீர் பரனே சரணம்**

**(3 தடவை)**

***அல்லது குரு பின்வரும் லித்தானியா ஜெபத்தைச் சொல்ல உதவிகுரு மறுமொழியை முன்சொல்ல சபையார் சேர்ந்து சொல்வார்கள்.***

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பலத்தையும், கனத்தையும், மகிமையையும், தோத்திரத்தையும் பெற்றுக் கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்.

**ஆட்டுக்குட்டியானவருக்கு மகிமையுண்டாவதாக.**

சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவருக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும், தோத்திரமும், கனமும், மகிமையும், அதிகாரமும், சதாகாலங்களிலும் உண்டாவதாக.

**ஆட்டுக்குட்டியானவருக்கு மகிமையுண்டாவதாக.**

தேவரீர் பாத்திரராயிருக்கிறீர்; ஏனெனில், நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும், மொழிக்காரரிலும், ஜனங்களிலும், ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டீர்.

**ஆட்டுக்குட்டியானவருக்கு மகிமை உண்டாவதாக. இரட்சிப்பின் மகிமை, சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும், ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக. எங்கள் தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், தோத்திரமும், கனமும், வல்லமையும், பெலனும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.**

***நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொன்னதாவது:***

நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர், உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பெலத்தோடும், அன்புகூறுவாயாக என்பதே பிரதான கற்பனை. இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்புகூறுவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே. இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை. இவ்விரண்டு கற்பனைகளிலும் நியாயப்பிரமாணம் முழுமையும் தீர்க்கதரிசனங்களும் அடங்கியிருக்கிறது என்பதே.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

*நாத நாமக்கிரியை இராகம்* *ஆதிதாளம்*

**கர்த்தாவே எங்களுக்கு இரங்கி,**
**கருத்துடன் இந்தப் பிரமாணத்தைக்**
**கைக்கொள்ள இதயத்தை ஏவியருளும்**

* அல்லது

**பத்துக் கற்பனைகள்**

தேவன் திருவுளம் பற்றிச் சொல்லிய வார்த்தைகளாவன: உன் தேவனாகிய கர்த்தர் நானே, என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

உன் தகப்பனையும், உன் தாயையும் கனம் பண்ணுவாயாக.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

கொலை செய்யாதிருப்பாயாக.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

களவு செய்யாதிருப்பாயாக.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.**

இச்சியாதிருப்பாயாக.

**கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் எங்கள் இருதயத்தில் பதித்தருள வேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.**

***பின் குரு சொல்வது:***

பிரியமானவர்களே, நாம் இப்பொழுது தேவனுடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும், ஆண்டவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும், பெற்றுக் கொள்ளவும் இங்கே கூடி வந்திருக்கிறோம். உத்தம மனஸ்தாபத்தோடும், உண்மையான விசுவாசத்தோடும் அவரிடத்தில் கிட்டிச் சேருவதற்காக தேவனுடைய கிருபையைத் தேடி முழங்காற்படியிட்டு, மௌனமாக நம்மை நாமே சோதித்து அறிவோமாக.

*எல்லோரும் முழங்கால்படியிட்டு சற்றுநேரம் அமைதியாயிருக்கவும்.*

***குரு சொல்வது:***

உங்கள் பாவங்களினிமித்தம் முழு இருதயத்தோடே உண்மை யாய் மனஸ்தாபப்பட்டு, பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து, இனி, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு, புதியதாக்கப் பட்டவர்களாய், அவருடைய பரிசுத்த மார்க்கத்தில் நடப்போம் என்று தீர்மானித்திருக்கிற நீங்கள், நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் சர்வ வல்லமையுள்ள கடவுளோடு ஒப்புரவாகும்படி உங்கள் பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடுங்கள்.

**டீக்கன் முன் சொல்ல எல்லோரும் சேர்ந்து சொல்வது:**

மனதுருக்கத்தின் ஆண்டவரே, உமக்கு விரோதமாகவும், எங்கள் சகோதர, சகோதரிகளுக்கு விரோதமாகவும் பாவம் செய்துள்ளோம் என்று அறிக்கையிடுகிறோம். கிறிஸ்துவின் நாமத்தைச் சொல்லியும் தீமையைவிட்டு விலகவில்லை. இயேசு கிறிஸ்து காட்டிய நீதி வழியில் உம்மை நாங்கள் உண்மையாகப் பின்பற்றவில்லை. உம்முடைய விடுதலை அருட்பணியில் இவ்வுலகில் உம்மோடு நாங்கள் சேர்ந்து செயலாற்றவில்லை என்றும் அறிக்கையிடுகிறோம். கிருபை நிறைந்த ஆண்டவரே உம்முடைய மிகுந்த இரக்கத்தினால் பாவமற எங்களைச் சுத்திகரியும். உம்முடைய பரிசுத்த ஆவியினால் விடுதலை பெறவும், புது ஜீவன் உள்ளவர்களாய் வாழவும், உம்மோடு, சக மனிதரோடும் சமாதானத்தோடு வாழவும் அருள்புரிந்தருளும்.
**ஆமென்.**

***குரு எழுந்து நின்று சொல்வது:***

இயேசு கிறிஸ்துவின் மூலமாக கடவுளிடம் உண்மையாய் மனந்திரும்புகிற யாவருக்கும் அருளப்படுகிற கிருபை நிறைந்த தேவ வசனங்களைக் கேளுங்கள்.

உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவைகள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும். (ஏசாயா 1:18).

நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன். (ஏரேமியா 31:34).

மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். (சங்.103:12)

வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

தேவன் தம்முடைய ஒரே பெறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை, உண்மையும், எல்லா அங்கீகரிப்புக்கும் பாத்திரமுமானது.

**கீழ்க்கண்ட வசனங்களில் சிலவற்றையும் பயன்படுத்தலாம்.**

(ஏசாயா 43:25, ஏசாயா 44:22, மீகா 7:19, எசே.34:11, 1 யோவான் 2:1, லூக்கா 15:7பி)

***சற்று நேரம் அமைதியாய் இருந்தபின் குரு சொல்வது:***

நம்முடைய பரம பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள கடவுள், உத்தம மனஸ்தாபத்தோடும், உண்மையான விசுவாசத்தோடும், தம்மிடத்திற்கு மனந்திரும்பி, தங்கள் சகோதரர் சகோதரிகளின் குற்றங்களை மன்னிக்கிற யாவருக்கும் பாவமன்னிப்பை அருளிச் செய்வோம் என்று மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நிமித்தம் உங்களுக்கு இரங்கி, உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து அவைகளினின்று உங்களை விடுதலையாக்கி, சகல நன்மையிலும் உங்களை உறுதிப்படுத்தி, நிலை நிறுத்தி, உங்களை நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக.

**ஆமென் தேவரீருக்கே தோத்திரமுண்டாவதாக.**

*சங்கராபரண இராகம்* *ஏகதாளம்*

**ஆமென், தேவரீருக்கே தோத்திரமுண்டாவதாக.**

தேவ வசனப் போதனை

கர்த்தர் உங்களோடிருப்பாராக.

அவர் உம்மோடும் இருப்பாராக.

*சாரங்கா இராகம்* *ஏகதாளம்*

குரு : கர்த்தர் உங்களோடிருப்பாராக

மறுமொழி : **கர்த்தருமதாவியோடுமிருப்பாராக.**

**ஜெபம் பண்ணக்கடவோம்**

***அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபம்***

*அதைத் தொடர்ந்து பழைய ஏற்பாட்டு பாடமும், நிருப வாக்கியமும் வாசிக்கப்படும். பாடங்களின் முடிவில் பாடம் வாசிப்பவர்* **இது ஆண்டவரின் திருவார்த்தை** *என்று சொல்ல வேண்டும். சபையார் அதற்கு மறுமொழியாகக் கீழ்க்கண்ட வாசகம் அல்லது பாடலைப் பயன்படுத்தலாம்.*

**தேவனே உமக்குத் தோத்திரமுண்டாவதாக**

*வசந்தா இராகம்* *ஏகதாளம்*

**தோத்திரம் உண்டாவதாக – தேவரீருக்கே**
**தோத்திரம் உண்டாவதாக.**

*நிருப வாக்கியம் வாசித்து முடிந்தவுடன் அந்த நாளுக்கென்று குறிக்கப்பட்ட சங்கீதம் சபையார் யாவரும் எழுந்து நிற்க முறைமுறையாக வாசிக்கப்படும்.*

சுவிசேஷ வாக்கியம் வாசிக்கப்படும்.

........... நற்செய்தி நூல் ...................... அதிகாரம் ............................ வசனமுதல் அடங்கிய தேவனுடைய வார்த்தையைக் கேளுங்கள்.

பாட முடிவில் **இது கிறிஸ்துவின் நற்செய்தி** என்று சொல்லவும்.

**கிறிஸ்துவே உமக்கு மகிமை உண்டாவதாக.**

***வசந்தா இராகம்*** ***ஏகதாளம்***

**மகிமையே உண்டாவதாக – கிறிஸ்துவுக்கே**
**மகிமையே உண்டாவதாக.**

***பின் சபையார் உட்கார்ந்திருக்கப் பிரசங்கம் செய்ய வேண்டும்.***

***பின் எல்லோரும் எழுந்து நின்று நிசேயா விசுவாசப் பிரமாணத்தைச் சொல்ல அல்லது பாட வேண்டும்.***

வானத்தையும் பூமியையும், காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லவற்றையும் படைத்திருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய ஓரே தேவனை விசுவாசிக்கிறேன்.

ஓரே கர்த்தருமாய், தேவனுடைய ஓரே பேரான குமாரனுமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்கு முன்னே தமது பிதாவினாலே ஜெநிப்பிக்கப்பட்டவர், தெய்வத்தில் தெய்வமானவர், ஜோதியில் ஜோதியானவர், மெய் தேவனில் மெய் தேவனானவர், உண்டாக்கப்படாமல் ஜெநிப்பிக்கப்பட்டவர். பிதாவோடே ஓரே தன்மையுடையவர், சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு இரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் அவதரித்து மனுஷனானார்; நமக்காக பொந்தியுபிலாத்துவின் காலத்தில் சிலுவையில் அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம்பண்ணப்பட்டார்; வேதவாக்கியங்களின்படி மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார். அவருடைய ராஜியத்துக்கு முடிவில்லை.

கர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் கூடத் தொழுது ஸ்தோத்தரிக்கப்படுகிறவருமாய், தீர்க்கதரிசிகள் மூலமாக

உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமென்

*விளம்பரங்கள் அறிவிக்கப்பட்டு காணிக்கை சேகரிக்கப்படலாம். அது பரிசுத்தப் பொருட்களுடன் பின்னால் படைக்கப்படும். ஒரு கீதமும் பாடலாம்.*

*சமயத்துக்கேற்ற விண்ணப்பங்களைச் செய்ய குரு சபையாரை அழைக்கலாம்.*

*பின்வரும் லித்தானியாவை டீக்கன் நடத்துவார். அது சொல்ல அல்லது பாடப்படலாம்.*

***அல்லது***

**திருச்சபைக்காகவும் உலகத்துக்காகவும் குரு தமது சொந்த வார்த்தைகளில் மன்றாட்டு ஏறெடுக்கலாம்.**

## ஜெபம் பண்ணக்கடவோம்

**முதலாவது மன்றாட்டு ஜெபம்**

**எங்கள் ஆறுதலின் ஆண்டவரே!**

வறுமையில் வாடுவோர்! உறைவிடமற்றோர், விதவைகள், பிறர் நலத்திற்காகப் பயன்படுத்தப்படும் பெண்கள், ஊட்டச்சத்துக் குறைவுள்ள சிறுவர், போரினாலும், பயங்கரவாதத்தினாலும், நிறம், இனம், வகுப்பு, ஜாதி, சமயம், பாரம்பரியம் ஆகிய வேற்றுமைகளின் விளைவாகப் பாதிக்கப்பட்டோருக்காவும், மன்றாடுகின்றோம்.

**கர்த்தாவே எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்**
**நீதியின் நாயகரே!**

கல்லாதோர், கல்விக்கான வாய்ப்பு மறுக்கப்பட்டோர், பிறர் நலத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு அதை எதிர்த்துக் குரல்

கொடுக்க வழியில்லாதோ, ஏன்? எப்படி? என்று கேட்கும் உரிமை மறுக்கப்பட்டோர், துன்புறுத்தப்படுவோர், உடல் மற்றும் உள்ள நலம் குன்றியோர் ஆகியோருக்காகவும் மன்றாடுகின்றோம்.

**கர்த்தாவே எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.**

**எங்கள் தேற்றரவாளரே!**

செய்யும் பணிக்கு ஏற்ற ஊதியம் பெறாதோர், நிலமற்ற தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள், கொத்தடிமைத் தொழிலாளர்கள் உடமைகள் பறிக்கப்பட்டோர், தவறான குற்றச் சாட்டுகளுக்கு உட்பட்டோர், அநியாயமாக நடத்தப்படுவோர் ஆகியோருக்காகவும் மன்றாடுகின்றோம்.

**கர்த்தாவே எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.**

**அனைத்து அதிகாரமுடைய எங்கள் ஆண்டவரே!**

எங்கள் தலைவர்கள் சிறப்பாக, குடியரசுத் தலைவர், பிரதம அமைச்சர், மாநில ஆளுநர், மாநில முதலமைச்சர் ஆகியோரின் சமத்துவமும் நீதியும் உள்ள சமுதாயத்தை உருவாக்கும் முயற்சியில் உமது கிருபை அவர்களைத் தாங்கவும் மன்றாடுகின்றோம்.

**கர்த்தாவே எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.**

**திருச்சபையின் தலைவரே!**

எங்கள் தலைமைப் பேராயர்.................... எங்கள் பேராயர் ......................., வட இந்தியத் திருச்சபையின் தலைமைப் பேராயர், மார்தோமா திருச்சபையின் தலைமை பேராயர் ஆகியோருக்காக வேண்டுகிறோம். திருச்சபை, இவ்வுலகில் நடைபெறவிருக்கும் உமது ஆட்சிக்கு அடையாளமாக விளங்கும்படி உம்மை மன்றாடுகின்றோம்.

**கர்த்தாவே எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.**

**மனதுருக்கத்தின் ஆண்டவரே!**

சுகவீனமாயிருப்போர், மரணத்தருவாயில் இருப்போர், உற்றோரை இழக்கக் கொடுத்தோர், கடன் தொல்லையினால்

வாடுவோர், விவாகரத்தினால் அமைதியிழந்தோர் ஆகியோருக்காக மன்றாடுகின்றோம்.

**கர்த்தாவே எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.**

## இரண்டாவது மன்றாட்டு ஜெபம்!

பரத்திலிருந்து வரும் சமாதானத்திற்காகவும், நம்முடைய ஆத்துமாக்களின் இரட்சிப்புக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே கிருபையாயிரும்**

***மோகன இராகம்*** ***ஏகதாளம்***

**கர்த்தாவே கிருபையாயிரும்**

அகில உலக சமாதானத்திற்காகவும், கடவுளுடைய பரிசுத்த சபைகளின் நல் வாழ்வுக்காகவும், அவைகளின் ஒருமைப்பாட்டுக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே கிருபையாயிரும்**

நம்முடைய பேராயர்களும், மற்றெல்லா பணிவிடைக்காரர்களும் விசேஷமாய் ............ என்னும் நமது பிரதம பேராயரும், .................................... என்னும் நமது பேராயரும், நல்ல இருதயத்தோடும், சுத்த மனச்சாட்சியோடும், தங்கள் பணிவிடையை நிறைவேற்றக் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே கிருபையாயிரும்**

நமது தேசத்தின் அதிபதிகளுக்காகவும், அதிகாரம் வகிப்பவர் எல்லாருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே கிருபையாயிரும்**

நோயுற்றிருப்போர், உபத்திரவப்படுவோர், துக்கப்படுவோர், மரணத்தருவாயிலிருப்போர் அனைவருக்காகவும் கர்த்தரைநோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே கிருபையாயிரும்**

ஏழைகள், பட்டினியாயிருப்போர், அனாதைகள், விதவைகள் அனைவருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே கிருபையாயிரும்**

அந்தகாரத்தினின்று நம்மைத் தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய மகத்துவங்களைக் காண்பிக்கும் பொருட்டாக, நமக்காகவும் கிறிஸ்துவின் நாமத்தை அறிக்கைப்பண்ணும் யாவருக்காகவும் கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே கிருபையாயிரும்**

இவ்வுலகத்தில் அவரைச் சேவித்து இப்போது ஓய்வு பெற்றிருக்கும் அவரது அடியார் அனைவரோடுங்கூட நாம் அவரது முடிவற்ற மகிழ்ச்சியின் நிறைவில் பங்குபெற கர்த்தரை நோக்கி ஜெபிப்போமாக.

**கர்த்தாவே கிருபையாயிரும்**

*லித்தானியாவிற்குப் பின் குரு சொல்வது*

**ஜெபம் பண்ணக்கடவோம்**

சர்வ வல்லமையுள்ள தேவனே, சகல ஞானத்திற்கும் காரணரே, நாங்கள் வேண்டிக்கொள்வதற்கு முன் எங்கள் அவசரங்களையும், வேண்டிக்கொள்ளுகையில் எங்கள் அறியாமையையும் நீர் அறிந்திருக்கிறீர். தேவரீர் எங்கள் பலவீனங்களைப் பார்த்து இரங்கி, அபாத்திரராகிய நாங்கள் துணிந்து கேட்கக்கூடாதவைகளையும், குருட்டாட்டமுள்ளவர்களாகிய நாங்கள் கேட்கத் தெரியாதவைகளையும், உம்முடைய குமாரனும், எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துவின் புண்ணியத்தினிமித்தம் அனுக்கிரகித்தருளும். ஆமென்.

நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும் உங்கள் அனைவரோடுங்கூட எப்பொழுதும் இருப்பதாக. ஆமென்.

***ஆராதனை முடியுமுன் வெளியேறுபவர்கள் இவ்வேளையில் வெளியேறவும்.***

## அப்பம் பிட்குதல்

*எல்லோரும் எழுந்து நிற்க குரு சொல்வது :*

இதோ, சகோதரர் ஒருமித்து வாசம்பண்ணுகிறது எவ்வளவு நன்மையும் எவ்வளவு இன்பமுமானது.

அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்கு பெறுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும், ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.

நான் அவருடைய கூடாரத்திலே ஆனந்த பலிகளையிட்டு கர்த்தரைப் பாடி அவரைக் கீர்த்தனம் பண்ணுவேன்.

*சுத்த சாவேரி இராகம்* *ஆதிதாளம்*

**ஆண்டவரின் கூடாரத்தில் ஆனந்த பலியிட்டு**
**ஆவலாய்க் கீர்த்தனம் பாடிடுவோம்.**

*சமாதானம் இங்கே கொடுக்கலாம்.*

*ஒரு கீதம் பாடப்படும் அப்போது சபையாருடைய காணிக்கைகளும், பரிசுத்த திருவிருந்துக்கு வேண்டிய அப்பமும் திராட்சரசமும் முன்னால் கொண்டுவரப்பட்டு திருமேசையில் வைக்கப்படும். கொண்டு வருபவர்கள் பின்வரும் ஜெபம் சொல்லப்படுகையில் திருமேஜையின் முன் நிற்பார்கள்.*

*எல்லோரும் இன்னும் நின்றுக்கொண்டிருக்க குரு சொல்வது :*

பரிசுத்த பிதாவே, உமது கிருபாசனத்தண்டையில் பிரவேசிப்பதற்குப் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை உமது அருமையான குமாரனின் இரத்தத்தினால் எங்களுக்கு உண்டுபண்ணினீரே; நாங்கள் அபாத்திரராயினும் அவர் மூலமாக உம்மண்டை வருகிறோம். எங்களையும் இந்தக் காணிக்கைகளையும், உம்முடைய நாம மகிமைக்காக அங்கீகரித்து உபயோகிக்கும்படியாகத் தாழ்மையோடு வேண்டிக் கொள்கிறோம். வானத்திலும் பூமியிலும் உள்ளவைகளெல்லாம் உம்முடையவைகள், உமது கரத்திலே வாங்கி உமக்குக் கொடுக்கிறோம். ஆமென்.

*காணிக்கைகளைக் கொண்டு வந்தவர்கள் இப்பொழுது தங்கள் இடங்களுக்குத் திரும்புவார்கள்.*

குரு : ஜெபம் பண்ணக்கடவோம்.

**குருவும் ஜனங்களும் முழங்காற்படியிட்டுச் சேர்ந்து சொல்வது :**

இயேசுவே, உத்தமப் பிரதான ஆசாரியரே, நீர் உமது சீஷர்கள் மத்தியில் பிரசன்னமாயிருந்தது போலவே எங்கள் மத்தியில் பிரசன்னமாகி அப்பத்தைப் பிட்கையில் எங்களுக்கு உம்மை வெளிப்படுத்தியருளும். நீரே பிதாவோடும் பரிசுத்த ஆவியோடும் சதாகாலமும் ஒரே தேவனாக ஜீவித்து அரசாளுகிறீர். **ஆமென்.**

***மோகன இராகம் ரூபகதாளம்***

**பிரதான குருநாதா பிரசன்னம் அருள்வீரே**
**பிரிய சீடர் நடுவிலே பிரசன்னமானவரே**
**பிதாவோடும் ஆவியோடும் பிணைந்தொரே தேவனாய்**
**பிசகாதே அரசாளும் பெருந்தகையே அப்பமதைப்**
**பிட்கையிலே வெளிப்படுத்தும் ஆமென்.**

*குரு இப்போது எழுந்து நிற்பார்*

கர்த்தர் உங்களோடு இருப்பாராக

**அவர் உம்மோடும் இருப்பாராக**

உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்

**எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்**

நம்முடைய கர்த்தராகிய தேவனுக்குத் தோத்திரம் செலுத்தக்கடவோம்

**அப்படி செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.**

***சாரங்கா இராகம் ஏகதாளம்***

குரு : கர்த்தர் உங்களோடிருப்பாராக.
மறுமொழி : **கர்த்தருமதாவியோடும் இருப்பாராக**

குரு : உங்கள் இருதயத்தை உயர்த்திடுங்கள்
மறுமொழி : **உயர்த்துவோம் இதயத்தைக் கர்த்தரிடமே**

குரு : தோத்திரம் செலுத்துவோம் தேவனுக்கே
மறுமொழி : **தகுதியும் நீதியும் அதுவேயாகும்**

கர்த்தாவே, பரிசுத்த பிதாவே, சர்வ வல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் உமக்குத் தோத்திரம் செலுத்துகிறது தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

* உமது குமாரனும் எங்கள் ஆண்டவருமாகயி இயேசு கிறிஸ்துவின் மூலமாக நீர் வானங்களையும் பூமியையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்தீர். மனுக்குலத்தை உமது சாயலாக உண்டாக்கினீர். நாங்கள் பாவத்தில் விழுந்தபோது புது சிருஷ்டியின் முதற்பலனாக நீர் எங்களை மீட்டுக் கொண்டீர்.

**ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடும் பரம சபை அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து மேன்மைப்படுத்தி சேனைகளின் கர்த்தராகிய தேவனே நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன. உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று இடைவிடாமல் உம்மைத் தோத்தரிக்கின்றோம். ஆமென்.**

கர்த்தரின் நாமத்தினாலே வந்தவரும் வருகிறவருமானவர் தோத்தரிக்கப்பட்டவர். உன்னதத்திலே ஓசன்னா

*காம்போதி இராகம்* *ஆதிதாளம்*

**தோத்தரிக்கின்றோம் தூயா நின் நாமம்**

**தூதர் குழாத்தோடும் துதித்துப் புகழுந்து**

**துதி மிகுந்தேறிட மேன்மைப்படுத்தி**

**தூய சேனைகளின் கர்த்தராம் தேவரீர்**

**தூயவர் தூயவர் தூயவரெனவே**

**துதி மிகுந்தேறிட மேன்மைப்படுத்தித் தோத்தரிக்கின்றோம்.**

---

** அந்த நாளுக்குரிய சிறப்பான முகவுரை உண்டானால் இந்தப் பகுதியை விட்டுவிட்டு இதற்குப் பதிலாக அதை வாசிக்கலாம்.*

**நின் மகிமையினால் நிறைந்தன விண்மண்**
**நித்திய மகிமை நிமலனே உமக்கே**
**துத்தியம் செய்து மகிமைப்படுத்தித்**
**தூய சேனைகளின் கர்த்தராம் தேவரீர்**
**தூயவர் தூயவர் தூயவரெனவே**
**துத்தியம் செய்து மகிமைப்படுத்தி தோத்தரிக்கின்றோம்**

***சங்கராபரண இராகம்*** ***திஸ்ர ஏகதாளம்***

**கர்த்தரின் நாமத்தில் வந்தவராம்**
**கருணையாய் இங்கு வருபவராம்**
**உத்தமர் தோத்திரம் ஏற்பவராம்**
**உன்னதத்திலென்றும் ஓசன்னா**

ஆம்! பிதாவே, நீர் பரிசுத்தர், நீர் தோத்தரிக்கப்பட்டவர், தேவரீர் மனிதரில் உருக்கமாய் அன்புகூர்ந்து, உமது ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து எங்கள் தன்மையைத் தரித்துக் கொள்ளவும் சிலுவையில் மரித்து எங்களை மீட்டுக் கொள்ளவும் அவரைத் தந்தருளினீரே; அவர் சிலுவையில் ஒரே தரம் தம்மைத் தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவிர்த்தி செய்வதற்கு நிறைவும், பூரணமும், போந்ததுமான பலியையும், காணிக்கையையும், பரிகாரத்தையும் என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்பவருமளவும், நாங்கள் அதை அனுசரித்து வரும்படி, தமது பரிசுத்த சுவிசேஷத்தில் கட்டளையிட்டருளினாரே; அவர் தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே, அப்பத்தை எடுத்து, *தோத்திரம் பண்ணி, அதைப்பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து நீங்கள் வாங்கிப் புசியுங்கள். இது உங்களுக்காக கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரம்; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.

---

***இப்பொழுது குரு அப்பம் வைத்திருக்கிற தட்டைக் கையில் எடுப்பார்**

அப்படியே போஜனம் பண்ணின பின்பு, அவர் பாத்திரத்தையும் எடுத்து ~. தோத்திரம் பண்ணி அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள்; இது பாவ மன்னிப்பு உண்டாகும்படி உங்களுக்காகவும், அனேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தம்; இதைப் பானம் பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைவுகூறும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார். **ஆமென்.**

**கர்த்தாவே, உமது மரணத்தை நினைவுகூருகிறோம்; உமது உயிர்த்தெழுதலை அறிக்கையிடுகிறோம், நீர் திரும்பி வரக்காத்திருக்கிறோம். கிறிஸ்துவே உமக்கே தோத்திரம் உண்டாவதாக.**

***ஹிந்தோள இராகம்*** ***ஆதிதாளம்***

**கர்த்தா உம் மரணத்தை நினைவு கூர்ந்து**
**களிப்புடன் உயிர்த்ததை அறிக்கை செய்து**
**காத்திருப்போம் உம் வருகைக்காக**
**காசினியில் உம்மைத் தோத்தரிப்போம்**

ஆதலால், பிதாவே, உமது குமாரனாகிய எங்கள் ஆண்டவரின் அருமையான பாடுகளையும், மரணத்தையும், மகிமையான உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் நினைவுகூர்ந்து, உமது அடியார்களாகிய நாங்கள் அவருடைய கட்டளையின்படியே அவர் வருகையை எதிர்நோக்கினவர்களாக இதைச் செய்கிறோம். அவரில் நீர் எங்களுக்காக நிறைவேற்றின பூரண மீட்புக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

**கர்த்தாவே, எங்கள் தேவனே உம்மைத் துதிக்கிறோம் உமமைப் புகழுகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம்.**

---

*~ இப்பொழுது பாத்திரத்தைக் கையில் எடுப்பார்*

*நவரோஜா இராகம்* *ஆதிதாளம்*

**கர்த்தாவே எங்கள் தேவனே**
**கருத்துடன் உம்மைத் துதிக்கின்றோம்**
**காருணயரே உம்மைப் புகழுகின்றோம்**
**கனிவுடன் மகிமைப் படுத்துகின்றோம்**

இரக்கமுள்ள பிதாவே, நாங்கள் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயும், நாங்கள் ஆசீர்வதிக்கிற பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கும்படி எங்களையும் நீரே தந்த இந்த அப்பத்தையும் திராட்சரசத்தையும் உமது பரிசுத்த ஆவியினால் பரிசுத்தப்படுத்த வேண்டுமென்று மிகுந்த தாழ்மையோடு பிரார்த்திக்கிறோம். நாங்கள் எல்லாரும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்துவில் கூட்டி இணைக்கப்பட்டவர்களாகி, விசுவாசத்தில் ஒருமைப்படவும், தலையாகிய அவருக்குள் எல்லாவற்றிலேயும் வளரவும் கிருபை செய்யும். அவரோடும் பரிசுத்த ஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய உமக்கு, அவர் மூலமாய் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. **ஆமென்.**

*குரு முழங்காற்படியிடலாம்*

**நமது இரட்சகராகிய கிறிஸ்து கற்பித்தபடி அவரில் நமக்கு அருளப்பட்ட தைரியத்தோடே சொல்வோமாக.**

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும். ராஜ்யமும், வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. **ஆமென்.**

*எல்லாரும் முழங்காலில் சற்று நேரம் அமைதியாய் இருக்கவும்.*

இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல் தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேஜையின் கீழ் விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல; ஆனாலும் தேவரீர் எப்பொழுதும் இரக்கஞ்செய்கிற இலட்சணமுடைய மாறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதியாத சரீரத்தாலும், இரத்தத்தாலும், எங்கள் பாவமுள்ள சரீரமும், ஆத்துமாவும் சுத்தமாகி எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும், அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கு ஏற்றவிதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம் பண்ண எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

*குரு எழுந்து நின்று அப்பத்தைப் பிட்டுச் சொல்வது*

நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாய் இருக்கிறதல்லவா?

**அல்லது**

*அவர் மெதுவாக அப்பத்தைப் பிட்கலாம். பணிவிடைக்காரரும் சபையாரும் இப்போது நற்கருணை பெறுவார்கள். நற்கருணை கொடுக்கும்போது சொல்லவேண்டிய வார்த்தைகளாவன :*

ஜீவ அப்பமாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சரீரம்.

மெய்யான திராட்சையாகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம்.

* அல்லது

*வேறு வார்த்தைகளை உபயோகிக்கலாம்.*

*இச்சமயத்தில் கீழ்க்கண்ட கீதம் சொல்ல அல்லது பாடலாம்.*

லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.

லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும்.

லோகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற
தேவ ஆட்டுக்குட்டியே, உமது சமாதானத்தைத் தாரும்

*மல்கஹரி இராகம்* *ரூபகதாளம்*

**ஜெகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற**
**தேவாட்டுக்குட்டியே எங்களுக்கிரங்கும்**
**தேவா சமாதானம் தாரும்**
**தேவாட்டுக்குட்டியே எங்களுக்கிரங்கும்**
**தேவா சமாதானம் தாரும்**

**அல்லது வேறு ஒரு கீதம் பாடலாம்**

*எல்லாரும் திருவிருந்தில் பங்கு பெற்றபின் சபையார் முழங்காலில் நிற்க குரு சொல்வது.*

கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தை விசுவாசத்தினால் பெற்றுக் கொண்டவர்களாகிய நாம், அவருக்குத் தோத்திரம் செலுத்துவோமாக.

*இந்த ஜெபத்தைக் குருவானவர் தனியாகவோ அல்லது எல்லோரும் சேர்ந்தோ சொல்லலாம் அல்லது சொந்த வார்த்தைகளில் ஜெபம் ஏறெடுக்கலாம்.*

சர்வ வல்லமையுள்ள கடவுளே, பரம பிதாவே, உமது நேசக்குமாரனும், எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவுக்குள், எங்களை உமது பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டு, அவருடைய விலைமதியாத திருச்சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தால் எங்களைத் திருப்தியாக்கியிருக்கிறீர். எங்கள் பாவங்களை மன்னித்து, என்றுமுள்ள வாழ்வை எங்களுக்கு வாக்குப்பண்ணியிருக்கிறீர்.

அளவிடப்படாத இந்த நன்மைகளுக்காக உம்மைத் தோத்தரிக்கின்றோம். சரீரமும் ஆத்துமாவுமாகிய எங்களைத் தூய உயிருள்ள பலியாக உமக்குப் படைக்கிறோம். இதுவே நாங்கள் செய்யும் உள்ளார்ந்த வழிபாடு. நாங்கள் இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாமல் கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்தெடுக்க எங்கள் உள்ளம் புதுப்பிக்கப்பெற்று மாற்றமடைய அருள்புரிவீராக. கடைசியில் நாங்கள் உமது இறைமக்கள் அனைவரோடும் உமது என்றுமுள்ள அரசின் மகிழ்ச்சியைப் பெறத்தக்கதாக இவ்வுலகில் உமக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்கு அருள்புரியும். உம்மோடு தூய ஆவியானவரோடும் ஒரே கடவுளாய் என்றென்றும் வீற்றிருந்து ஆளுகை செய்யும் எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்கிறோம். **ஆமென்.**

எங்கள் தேவனுக்குத் துதியும், மகிமையும், ஞானமும், தோத்திரமும், கனமும், வல்லமையும், பெலமும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. **ஆமென்.**

***சுத்த சாவேரி இராகம்*** ***திரிபுடை தாளம்***

**ஜெயமும் மகிமையும் சேர்துதி கனமும்**
**செப்பரும் ஞானமும் பெலமும் வல்லமையும்**
**தேவரீர்க்கென்றும் உண்டாவதாக ஆமென்.**

***அல்லது***

**ஆமென் எங்கள் தேவனுக்குத் துதி மகிமை ஞானமுடன்**
**தேமதுர தோத்திரமும் கனம் மகிமை புகழோடு**
**தாமிருக்கும் காலமெல்லாம் நித்தியமும் உண்டாக**
**ஆமென் என துதியெடுப்போம்**
**அன்பர் குழாமொடு சேர்ந்து**

*பின் குரு கடைசி ஆசீர்வாதம் கூறுவார்.*

எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும், அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும், அன்பிலும் நிலைத்திருக்கும்படி உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா, குமாரன், பரிசுத்த ஆவியுமாகிய சர்வ வல்லமை பொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமென்.

# கவிஞர் அகராதி

அண்ணாவியார், யே., கும்பகோணம் (யே,அண்.) 46, 143, 145, 152
அருமைநாயகம், ச., நாகர்கோவில் (ச.அ.) 39, 48
அருமைநாயகம் சட்டம்பிள்ளை, ஆ.நா., பிரகாசபுரம் 561
அருளப்பன், யோ.ச., திருநெல்வேலி (யோ.அ.) 440
அருளானந்தம், தா., யாழ்பாணம் (தா.அ.) 224, 500
அருளானந்தம் பிரசங்கியார், திருநெல்வேலி(அ.பி)84, 226, 309, 117, 584
அல்லின், ஆ., திண்டுக்கல் (ஆ.அ.) 195
ஆபிரகாம் பண்டிதர், மு., தஞ்சை (மு.ஆ.ப.) 110, 117
இராபர்ட் கால்டுவெல் 160
எரேமியா, சு.ச., யாழ்ப்பாணம் (சு.ச.எ.) 232
எலியேசர், ஜ.த., சென்னை (ஜ.த.எ.) 53, 661
ஏசுதாசன், மா.சா., பசுவந்தனை (ஏ.உ.) 402
ஏசுவடியான், சு.ச., திருநெல்வேலி (சு.ச.ஏ.) 155, 184
ஏசுதாசன், சவரிராயன், டாக்டர், திருப்பத்தூர்(ச.ஏ) 16, 207, 355, 513, 565
ஐயாத்துரை பாகவதர், த., கயத்தாறு (த.ஐ.) 22
காபிரியேல் உபதேசியார், பார்வதியாபுரம் (கா.உப) 17, 111, 297
கிருட்டிணன், ஹெ.ஆ., பாளையங்கோட்டை (ஹெ.ஆ.கி.) 10, 127, 512
கிறிஸ்டோபர், ஜெ. பாளையங்கோட்டை 398
கிறிஸ்மஸ், சா.ஈ., சேலம் (சா.ஈ.கி.) 212
குளோரியா, எ.ஐ., திருச்சி (எ.ஐ.கு.)
சத்தியநாதன் த., தஞ்சை (ச.பி.) 11, 190, 196, 216
ச.ஐ., பாளையங்கோட்டை (ச.ஐ.) 432
சத்தியவாசகம் பண்டிதர், பாளையங்கோட்டை (ச.ப.) 125
சந்தியாகு, வே., மதுரை (வே.ச.) 255, 258, 268, 274, 311, 354, 493, 506, 508, 563, 618
சவரிமுத்து உபாத்தியாயர், பன்றிகுளம் (சவ.உபா) 202, 306, 582
சவரிமுத்து போதகர், அ., திண்டுக்கல் (ச.போ.) 150, 422
சவரிராயன், ஏசு., பாளையங்கோட்டை (ஏ.ச.) 137
சாமுவேல், ஞா., தரங்கம்பாடி (ஞா.சா.) 12, 15, 44, 51, 189, 219, 221, 231, 254, 357, 434, 501, 536, 620, 652

அட்டவணை

சாமுவேல், ஐ., புதுச்சேரி (ஐ.சா.) 52
சாமுவேல், ஐ.ஏ., ஆறுமுகநேரி (ஐ.ஏ.சா.) 154
சாமுவேல், ஐ.த., மெய்ஞ்ஞானபுரம் (ஐ.த.சா.) 437
சாமுவேல், மு., நாகர்கோவில் (மு.சா.) 225
சாமுவேல் பாக்கியநாதன் நாடார், மருதகுளம் (ஜா.ச.சா.) 286
சிங்க், ச.ஜெ. நெய்யூர் (ச.ஜெ.சி.) 35, 295, 611
சீமோன், சா., மதுரை (சா.சீ.) 109, 272, 507, 583
சுந்தரம் வீ.ப.கா., பசுமலை 278
ஸ்தேவான், ல.ஈ., ஈரோடு (ல.ஈ.ஸ்.) 34, 356
ஞானமணி, ச.த., (ச.த.ஞா.) 116, 217, 218
ஞானமணி, ச.வே., (ச.வே.ஞா.) 42, 201, 237, 558
ஞானமணி, யே., அருப்புக்கோட்டை (யே.ஞா.) 269, 528, 562
ஜெயராஜ், வீ., தேவாரம் (வீ.ஜெ.) 279
தயானந்தன் பிரான்சிஸ், தி.வேலூர் 25
தாவீது, பா., டோனாவூர் (பா.தா.) 208, 230, 283, 313
தாவீது, சத்., சிவகாசி (ச.தா.) 293
தாமஸ் தங்கராஜ், மெ., பாளையங்கோட்டை (யே.சா.தே.) 290, 399
தேவசகாயம் உபாத்தியாயர், சாட்சியாபுரம் (தே.உபா.) 433, 438, 647
தேவசகாயம், வே., தரங்கம்பாடி (வே.தே.) 239
தேவசகாயம் ரைட்டர், தஞ்சை (தே.ரை.) 148
தேவசிகாமணி சாஸ்திரியார், தஞ்சை (தே.சா.) 462
தேவதாசன், ஆ., (ஆ.தே.) 80, 375, 649
தேவவரம் முன்ஷி, திருவனந்தபுரம் (தே.மு.) 77, 197, 503, 660
தைரியம் ரைட்டர் (தை.ரை.) 148, 191
நல்லையா, சா.ஜா., கொம்பை (சா.ஜா.ந.) 571
பலவேந்திரம், த., வத்தலக்குண்டு (த.ப.) 163
பரமானந்தம், சா. (சா.ப.) 47, 115, 178, 253, 382, 394, 424, 447
பாக்கியநாதன், ஈசா., மதுரை (ஈ.பா.) 426, 441, 654
பால்மர், யோ., நாகர்கோவில் (யோ.பா.) 21, 106, 135, 179, 215, 220, 281, 431, 435, 439, 448, 450, 453, 457, 458, 466, 470, 531, 534, 535, 617, 651

அட்டவணை

பாளையங்கோட்டைப் பாடல் (பா.) 43, 63, 68, 86, 423, 529
பிச்சைமுத்து, ஆ.ஜ., தஞ்சை (ஆ.ஜ.பி.) 657, 659
பிரெக்கன்ரிஜ், ர., யாழ்ப்பாணம் (ர.பி.) 505
பொன்னுசுவாமி, ல., மதுரை (ல.பொ.) 198, 370, 388, 567
மதுரநாயகம் உபதேசியார், திருநெல்வேலி (மது.உப.) 463
மரியான் உபதேசியார், திருநெல்வேலி(மரி.உப.) 203, 251, 511, 560, 580, 650
மாசிலாமணி ஆசிரியர், சா., சாத்தான்குடி (சா.மா.) 367
மாசிலாமணி, வே., திருவண்ணாமலை (வே.மா.) 14, 18, 213, 252, 270, 308, 393, 427, 442,
முத்துசாமி உபாத்தியாயர், ச., கரம்பக்குடி (ச.மு.உபா.) 602
யாக்கோபு யோ., கருவூர் (யோ.யா.) 108, 613, 653
யாழ்ப்பாணப் பாடல் (யாழ்.) 497
ஜோசப் ஜெயக்குமார் தா., பாளையங்கோட்டை 400
யோசேப்பு ச. நாகர்கோவில் (ச.யோ.) 82, 307, 366, 373, 374, 436, 502
யோசேப்பு த., நெய்யூர் (த.யோ.) 45, 432, 504, 530, 559
யோவான் ப.ஈ., நெய்யூர் (ப.ஈ.யோ.) 49
வின்பிரட் போதகர், சென்னை (வி.போ.) 312
வெப். ஏ. (ஏ.வெ.) 490
வேதக்கண், அ., உபாத்தியாயர், நாகர்கோவில் (வே.உபா.) 456, 491
வேதமாணிக்கம் ம., நெய்யூர் (ம.வே.) 13, 585
வேதநாயகம், ஜி.சே., சென்னை (ஜி.சே.வே.) 20, 214, 271, 301, 365, 429, 499, 579
வேதநாயகம் பாகவதர், சென்னை (வே.பா.) 153
வேதநாயகம் சாஸ்திரியார், தஞ்சை (வே.சா.) 19, 23, 24, 55, 76, 78, 79, 83, 85, 114, 146, 147, 149, 151, 177, 192, 193, 194, 199, 200, 204, 205, 206, 280, 282, 305, 322, 395, 428, 449, 451, 454, 455, 459, 460, 461, 468, 492, 494, 495, 496, 498, 533, 557, 617, 655, 656, 658

தொகுப்பு : S.K. இராசன், டக்கரம்மாள்புரம்.

அட்டவணை